SL

தொகுப்பு

சுகனும் ஷோபாசக்தியும்

கறுப்பு

எதிர்க்கதையாடல்கள்

அறிமுகப்பு

சுகனும் ஷோபாசக்தியும் தொகுத்துள்ள இந்தக் 'கறுப்பு' எமது வெளியீடாக அமைவதில் மகிழ்ச்சியடைகிறோம். இது இவர்களின் மூன்றாம் தொகுப்பு. விலக்கப்பட்ட பிரதிகள் சுதந்திரமாக அலையும் தளமாக வலம் வந்த முன்னிரு தொகுதிகளும் தமிழ்ச் சூழலில் பெரும் அதிர்ச்சிகளை ஏற்படுத்தின. புலம் பெயர்ந்த சூழலிலுந்தான். இந்த மூன்றாம் தொகுப்பு இந்த விளைவை மேலும் தீவிரப்படுத்தும் என்றே நம்புகிறோம். ஈழத்தில் போர் நிறுத்தம், அமைதி திரும்புவதற்கான வாய்ப்பு (?) ஆகியவை உருவாகியுள்ள சூழலில் இத்தொகுப்பு வெளிவருகிறது. இனப் போராட்டங்களினூடாக தமிழக மக்களிடையே, குறிப்பாக யாழ்ப்பகுதியிலுள்ள சாதியம் பற்றி, தீண்டாமை பற்றித் தீவிரமாகக் குரல் எழுப்பி வந்த சுகனும் ஷோபாசக்தியும் இதர தோழர்களுடன் இணைந்து தொகுத்துள்ள இந்நூலை, ஒடுக்கப்பட்டவர்களின் கலகப் பிரதிகளின் தொகுப்பை வெளியிடுவதில் எமக்குள்ள மகிழ்ச்சியை மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கறுப்பு

தொகுப்பு

சுகனும் ஷோபாசக்தியும்

அகரம்

KARUPPU (Tamil)
Literary Souvenir

First Published December 2002
by Adaiyalam

1208 Second Floor, Karupur Salai, Puthanatham 621 310
Tel: 04332 273444 email: admin@adaiyalam.com
www.adaiyalam.com

©2002 Selection and Editorial matter,
Sugan and Shobasakthi.
Individual Chapters, the contributors.

Typeset in adaiyalam
Printed and bound in India
By Graphic Park Offset, Chennai.

ISBN 81 7720 014 3

Price
Institutions and Officers IN Rs. 250.00
Dalits, Women, Muslims and Unemployed IN Rs. 100.00
In Sri Lanka SL Rs. 300.00
In Europe and America $ 15

Sole Distributors to Europe
SUGAN KANAGASABAI
3 EME DT, 1, RUE HONORE DE BALZAC
95140 GARGES LES GONESSE, FRANCE.
email: shobasakthi@hotmail.com

ஈழத்தின் கன்பொல்லை கிராமத்தில், சாதி ஒழிப்புப் போரில்
முன்னின்று போராடி வெடிகுண்டுகளைத் தயாரித்தபோது
ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த தலித் போராளிகள்
கி. வேலும் மயிலும்
மா. சீவரட்ணம்
க. செல்வராசா
ஆகிய தோழர்களின் நினைவுகளுக்கு...

தொகுப்புரை / 9

கட்டுரை

எச்சரிக்கை: குஜராத் ஒரு தொடக்கம் மட்டுமே
ரோஸா வஸந்த் / 15

யாழ்ப்பாணத்துச் சாதியம்: காலனித்துவ சமரசம்
மு. நித்தியானந்தன் / 40

புகலிடத்தில் சாதியம் இந்துமதம்
சி. புஸ்பராஜா / 48

ஒரு தேவதூதனின் வருகைக்காகக் காத்திருப்பதுபோல
நீதிக்காகவும் சனநாயகத்திற்காகவும் காத்திருப்போம்
அ. மார்க்ஸ் / 58

ஜெர்ஸி கோமாதாக்களும் தெருப்பொறுக்கும் நாட்டு மாடுகளும்:
அடையாள அழிப்பு அரசியல் சில குறிப்புகள்
குமரன்தாஸ் / 69

தலித் கலை, கலாச்சாரங்களில் எதிர்ப்புக் கூறுகள்
முனைவர். கே.ஏ. குணசேகரன் / 85

மாற்று அறிவியல்
ஆலன். டி. சோகல் / 98

பெண்மை உருவாக்க மொழிதலும்
மொழிதல் உருவாக்க வழிபாடும்
அறிவழகன் / 110

முஸ்லிம்கள் தம் தற்காப்புக்கு என்ன செய்வது?
ஒரு மில்லியன் டாலர் கேள்வியும் குறிப்புகளும்
ஷாஜஹான் / 125

இன அடையாளம், கலாச்சாரம், தேசியம்
பற்றிய பிரச்சினைகள்: ஒரு தலித்திய வெளிப்பாடு
ஆர்.ஆர். சிவலிங்கம் / 131

வியாகுல சங்கீதம்
சாரு நிவேதிதா / 139

நேர்காணல்

அறியாமையிலிருந்து பெறும் விடுதலைதான்
அருந்ததியர் பெறும் விடுதலை
புத்தமித்திரன் / 163

நூல் விமர்சனம்

இதுவரை எழுத்தில் இடம்பெறாத பழங்(
அ. மார்க்ஸ் / 187

சிறுகதை

செருக்கவரவுக்காரனின் சூரி
பாப்லோ அறிவுக்குயில் / 211

பைத்தியம் செய்த சூனியம்
சேனன் / 226

சூரியனிலிருந்து வந்தவர்கள்
காருண்யன் கொன்பூசியஸ் / 239

பகுத்தறிவு பெற்ற நாள்
அந்தோனி / 271

திலகா என்னும் மனுஷியைத் தேடி
சி. புஸ்பராஜா / 279

கண்ணி
அ. தேவதாசன் / 288

தேசத்துரோகி
ஷோபாசக்தி / 296

ஆற்றுகை

பணிப்பெண்கள்
ஜேன் ஜெனே / 309

கவிதை

என்.ஆர்.ரமணன் / 359
மிரோஸ்லாவ் ஹொலுப் / 360
என்.டி.ராஜ்குமார் / 361
த.மலர்ச்செல்வன் / 362
கற்சுறா / 364
ஜெபா / 366
மதிவண்ணன் / 368
மேகவண்ணன் / 369
சுகுணா திவாகர் / 370
தய்.கந்தசாமி / 373
சு.ம.காட்டேரி / 375

மறுத்தலின் சக்தியாய் மாறுவோம்

இருள்வெளி, சனதருமபோதினி ஆகியவற்றைத் தொடர்ந்து இது எங்களின் மூன்றாவது தொகுப்பு நூல்.

புகலிடத் தேசங்களின் ஏறக்குறைய எல்லாத் தமிழ் ஊடகங்களுமே பெருங்குரலெடுத்து நமது மொழி, நமது கலாச்சாரம், நமது பண்பாடு, நமது இலக்கியம் என்று கூக்குரலிடுகையில் நாம் இக்கதையாடல்களை முற்றாக மறுத்து வித்தியாசங்களை முன் நிறுத்திப் பேசுகிறோம். நமது சமூகம் சாதிய, ஆண் முதன்மைச் சமூகம். ஆதலால் சமூக விரோதப் பிரதிகளைத் தொகுக்கவே முயன்றுள்ளோம்.

நம் கடவுள்-சாதி காப்பாற்றும் கடவுள்
நம் மதம்-சாதி காப்பாற்றும் மதம்
நம் அரசாங்கம்-சாதி காப்பாற்றும் அரசாங்கம்
நம் இலக்கியம்-சாதி காப்பாற்றும் இலக்கியம்
நம் மொழி-சாதி காப்பாற்றும் மொழி

நிறுவப்பட்ட எல்லாவற்றையும், எல்லாவற்றையுமே தலைகீழாகக் கவிழ்ப்பதைத் தவிர நமக்கு வேறென்ன வழியும் வேலையும் உள்ளது?

இந்த மறுப்புகளாலும் எதிர்ப்புகளாலும் கொஞ்சம் நொந்து போயிருக்கும் புகலிட சநாதனிகள், அறியப்பட்ட மார்க்ஸியத்தின் பெயராலும் தேசியத்தின் பெயராலும் தமிழின் பெயராலும் ஈழப்-புகலிடப் பண்பாட்டுப் புலங்களில் ஆழ வேரோடிக் கிடக்கும் சைவ துர்சிந்தனைகளைப் பாதுகாக்கும் பொருட்டு எதைச் செய்யவும் சித்தமாகவும் எவரைப் பலியிடவும் ஆயத்தமாகவும் உள்ளனர். புகலிடத் தேசங்களிலும் சைவத்தையும் சாதியத்தையும் தூக்கி நிறுத்த மாணிக்க விநாயகர் தேரில் வலம் வரும் வீதியெல்லாம் எதிர்ப்புச் சுவரொட்டிகளை ஒட்டும்போதே ஒரு கும்பல் மிரட்டிப் பார்க்கிறது. சாதிப் பண்பாட்டை அடித்து நொறுக்கிப் பேசும் தோழர்களை பாரிஸ்-ஈழநாடு சாதி சொல்லிப் பரிகசிக்கின்றது. தமிழ் வானொலிகளும் தொலைக்காட்சியும் இடையறாது இந்துத்துவத்தைத் திணிக்கின்றன. பொதுப்புத்தி மட்டம் இப்படி மூர்க்கமாக மோதினால் புத்திஜீவி மட்டமோ நைசாக அலுவலைக் கொடுக்கிறது. சைவ வேளாளக் கருத்தியலை நிலை நிறுத்தும் திருப்பணிக்கு க.வாசுதேவன் என்ற வெள்ளாம் இலக்கியவாதி லேட்டா வந்தாலும் லேட்டஸ்டாய் வந்துள்ளார். தனது இணையத் தளத்தில்

(எக்ஸ்லீவ்ர்) எழுந்து வரும் விளிம்பு நிலைக் கலகக் குரல்களைச் சமாளிக்க இந்து மதத்தைப் பொலிஷ் செய்து புனரமைப்பதா அன்றேல் அழிய விடுவதோ? என்றொரு கருத்துக் கணிப்பை 'சைவப் பெருங்குடி'களிடையே நடாத்தி புனரமைக்க வேண்டும் என்பதே அறுதிப் பெரும்பான்மையோரின் விருப்பம் என்பதாக முடிவுகளை அறிவித்திருக்கின்றார். ஆத்தை நோவென்றழக் குத்தியன் பாலுக் கழுதானாம். வாசுதேவனைச் செருப்பால் அடிக்கலாமா அன்றேல் விளக்குமாறால் அடிக்கலாமா? என்று நாங்கள் நடாத்திய கருத்துக் கணிப்பில் எதைக் கொண்டு அடித்தாலும் தகும் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை என்பதாகவே முடிவுகள் வாய்க்கப் பெற்றுள்ளன.

இருபது வருடங்களுக்கு மேலாக ஈழத்தில் நடந்து வந்த போர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த அர்த்தமற்ற கொடிய போர் நிறுத்தப்பட வேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம்.

தாய்லாந்தில் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகி நடந்து கொண் டிருக்கின்றன. பேச்சு வார்த்தையின் மைய இழையாய் இருப்பது அதிகாரங்களை சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் என்ன விகிதத்தில் பாகம் பிரிப்பது என்ற கணக்கே. ஈழத்தில் புலிகளின் ஆட்சி நடந்தாலும் சரி, சிறிலங்கா அரசின் ஆட்சி நடந்தாலும் சரி அல்லது இரு தரப்பும் பங்கு போட்டு கூட்டுக் கொள்ளையாட்சி நடத்தினாலும் சரி, இந்த ஆட்சிகளுக்குக் கூட்டணியும் ரெலோவும் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியும் விளக்குப் பிடித்தாலும் சரி, இந்த ஏகாதிபத்திய தாசர்களும் முதலாளிய நேசர்களும் ஆதிக்கச் சக்திகளின் கூலிப்படையாய் இருந்து ஒடுக்கப்பட்ட சாதியையும் ஒடுக்கப்பட்ட பாலையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தையும் மேலும் ஒடுக்குவார்கள். இது அரசு தர்மம். இந்த தர்மத்தை பொய்ப்பிப்பதற்கான எந்தத் தடயங்களையும் புலிகள் தமது நீண்ட வரலாற்றில் எமக்கு விட்டு வைத்திருக்கவில்லை. ஈழத்தில் இதுவரை கிளம்பிய ஒடுக்கப்பட்டோரின் கலகக் குரல்கள் விடுதலைப் போராட்டத்தைக் குழப்புவதாகக் கூறி நெரிக்கப்பட்டன. இனி அக்குரல்கள் சமாதானத்தைக் குழப்புவதாகக் கூறி அறுக்கப்படலாம்.

யுத்தம், பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தம், தீர்வு, அதிகாரம் இவற்றுக்கிடையே ஈழத்தில் ஆயுத முனையில் தலித் அரசியலும் எழுச்சியும் அடக்கப்பட்டிருக்கிறது. சைவ வேளாள அரசியல் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. கள்ளிறக்குவதையும் பறை ஒலிப்பதையும் துணி வெளுப்பதையும் அனைத்து சாதியினரும் செய்யத் தயாரா? இல்லையெனில் ஈழத்தில் சாதியம் ஒழிந்து விட்டது என்ற வெற்றுக் கூச்சல்கள் எதற்கு? சாதிய உற்பத்தி முறைமையும் சாதியக் கலாச்சாரமும் இனியும் தொடர்வதா? அல்லது நாம் இந்துத்துவா புலிகள் இயக்கத்தை நம்பி அழிவதா?

தற்போதைய யாழ் நகர் மேயர் ஒரு தலித். சில தினங்களுக்கு முன்னால் மேயர் செல்லன் கந்தையன் அவரது கட்சியைச் சேர்ந்த சாதி வெறியர் களாலேயே சாதியைச் சொல்லி பரிகசிக்கப்பட்டு அறையொன்றினுள் அடைத்து வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டார் என்ற அவலச் செய்தியை அண்மையில் யாழ்ப்பாணம் சென்று வந்த சுசீந்திரன் (பெர்லின்) கொண்டு வந்தார். ஆயுத நிழலில் நீறுபூத்த நெருப்பாய் சாதியம் மறைக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பதால் ஆகப்போவது எதுவும் இல்லை. காலாதி காலமாய் ஒடுக்கப்பட்ட தலித்துகளின் விடுதலையைப் பேச, தலித்துகளின் தனித்துவமான பிரச்சினைகளை ஒலிக்க, உரிமைகளை வென்றெடுக்க தலித் தலைமையும் தனியான அமைப்பும் உடனடியாகத் தேவை.

ஆதிக்கச் சாதி அறிவுஜீவிகள் ஈழத்து சாதிய அமைப்புக்கும் இந்தியச் சாதி அமைப்புக்கும் வித்தியாசங்கள் கற்பித்துக் கொண்டு சாதிய முரணை வர்க்க முரணாய்த் திரித்துப் பேசுவதின் பின்னால் அவர்களின் ஆதிக்கச் சாதி நலன்களே ஒளிந்துள்ளன. இவர்கள் சாதியத்துக்குத் தத்துவார்த்த முட்டுக் கொடுக்கும் இந்துப் பண்பாட்டைக் கேள்வி கேட்டது கிடையாது. நிலவும் சமூக அமைப்புக்குள் தலித்துகளுக்கான கல்வி, வேலை, இட ஒதுக்கீடு போன்ற அடிப்படை உரிமைகளைப் பற்றிப் பேசியதும் கிடையாது. செய்வதெல்லாம் தமக்குள் ஸ்டாலினிஸம், ட்ரொஸ்கியம், மாவோ யிஸம் எனக் குத்துப்பழி கொலைப்பழியாய்க் கிடந்தாலும் தலித் அரசியல் என வரும்போது அய்க்கிய முன்னணி அமைத்துக் கொண்டு தலித்தியம் ஏகாதிபத்திய விதி, இந்திய இறக்குமதி எனக் கொக்கரிப்பது மட்டுமே. இவர்கள் கிடக்கட்டும், நாங்கள் தேச எல்லைகளை உடைத்துக் கொண்டு எங்கள் தோழர்களோடு இணைவோம். அண்ணல் அம்பேத்கரையும் பெரியாரையும் அயோத்திதாசரையும் ஜோதிபா புலேயையும் கற்போம்... செயற்படுவோம்!

கடந்த காலங்களைப் போல எதிர்க் குரல்களை - ஒடுக்கப்பட்டோரின் பிரதிகளை - மறுத்தோடிக் குரல்களை அவ்வளவு சுலபமாக அழித்துவிட முடியாது என்பதை இத்தொகுப்பும் நிரூபிக்கட்டும்.

எங்களின் நூல்கள் வெளியிடுவதற்கும் கருத்தரங்குகளிற்கும் நகர்விற்கும் பின்னால் இயங்குபவர்கள் பலர். இந்தத் தோழர்களும் தோழியரும் எங்களோடு தொடர்ச்சியாக வித்தியாசம் வித்தியாசமான உரையாடல்களை நிகழ்த்தியும் எம்மோடு பல்வேறு சுமைகளைப் பகிர்ந்து கொண்டு தோள் கொடுத்தும் வருகிறார்கள்.

தேவதாஸ், நாதன், புஸ்பராஜா, விஜி, 'அம்மா' மனோ, ஜெபா, அந்தோனிப்பிள்ளை, அருந்ததி, எம்.ஆர்.ஸ்டாலின், சின்னண்ணே, தங்கம், கற்சுறா, உமாகாந்தன், சுவிஸ் தேவா, சேனன், முத்து, தேவா ஜெர்மனி, 'காலம்' செல்வம், மைக்கல், 'அடையாளம்' சாதிக், அனீஸ் சுயமரியாதை இயக்கத் தோழர்கள், வளர்மதி, கே.ஏ.குணசேகரன்,

புதியதடம் தோழர்கள், சிவகாமி, பீர்முகமது, மதிவண்ணன், மேட்டூர் சுரேஷ், வீ.அரசு, லெனா குமார், அறிவழகன், சாருநிவேதிதா, சஃபி, செந்தில், ரஜினி, பழனிச்சாமி, பதிவுகள் இணையத்தளம் மற்றும் தன் மாற்றுச் சிந்தனைகளால் எம்மில் இடையறாது ஊடாடுபவரும் எங்களின் ஒவ்வொரு எத்தனங்களையும் சாத்தியங்களாய் நிகழ்த்துபவருமான அ.மார்க்ஸ் எல்லோரையும் இத்தருணத்தில் நன்றிகளோடு ஆரத் தழுவிக் கொள்கிறோம்.

சுகன்
ஷோபாசக்தி

25 டிசம்பர் 2002
ப்ரான்ஸ்

SUGAN KANAGASABAI
3 EME DT
1, RUE HONORE DE BALZAC
95140 GARGES LES GONESSE
FRANCE.
email: shobasakthi@hotmail.com

எச்சரிக்கை: குஜராத் ஒரு தொடக்கம் மட்டுமே

ரோஸா வஸந்த்

முன் குறிப்பு: எதை எழுதுவது, எதை விடுப்பது என்ற முடிவுக்கு எளிதில் வர இயலாத வண்ணம் செய்திகளும், ஆதாரங்களும் குஜராத் இன அழிப்பு தொடர்பாக ஊடகங்களிற் குவிந்து கிடக்கிறது. ஆதாரம் கேட்டு முரண்டு பிடிப்பவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் என்னை (rosavasanth@yahoo.comஇல் அல்லது ஷோபாசக்தி மூலமாக) தொடர்பு கொள்ளலாம். பல கட்டுரைகளிலிருந்து கருத்துக்கள் எடுத்தாளப் பட்டிருக்கின்றன; மாற்றிக் கையாளப்பட்டிருக்கின்றன. சாரு நிவேதிதா, விகடன் கோணல் பக்கங்களில் எழுதியது மற்றும் திண்ணை இணைய இதழில் நிரம்பி வழியும் இந்துத்துவச் சார்புக் கட்டுரைகள் தவிர, தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் கட்டுரைகள் எனக்குக் கிடைக்கப் பெறவில்லை. இது நிகழ்ந்திருந்தால் கட்டுரை வேறு மாதிரி எழுதப்பட்டிருக்கக் கூடும். எழுதத் தூண்டிய ஷோபாசக்தி, சுகன் மற்றும் எழுத உதவிய வசுமதிக்கும் நன்றி.

அமெரிக்காவின் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' தொடங்கப்பட்ட பிறகு நோபல் பரிசு அளிக்கப்பட்ட வி.எஸ்.நைபால், இந்தியாவின் மொத்த முஸ்லிம் மக்களின் இருப்பையும் அடையாளத்தையும் தனித் துவத்தையும் 'இந்தியா தனது ஆன்மாவை இழந்து நிற்பதன்' குறியீடாய் வர்ணித்து, இந்துத்துவச் சக்திகளின் தேசியவாதத்தைப் புகழ்ந்து விட்டுச் சென்ற அடுத்த வாரம் குஜராத் இன அழிப்பு தொடங்கியது. இதுவரை அணிந்து வந்த முகமூடிகளை எல்லாம் கழற்றிவிட்டு வெளிப்படையாய் அறிவித்து, உலகப் பார்வையாளர்கள் முன்னிலையில் நான்கு மாதங்களாய் நடத்தி வந்த இன அழிப்பில் இதுவரை 2000 வரையிலான முஸ்லிம்கள்-அதிகம் உயிருடன் எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் வீடுகள் நாசமாக்கப்பட்டு அகதி முகாம்களுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 2000 கோடி ரூபாய் வரையிலான முஸ்லிம்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன அல்லது கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் பெண்கள் பொதுக் களத்தில் நிர்வாணமாக்கப்பட்டுப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். பெற்றோர்கள் முன்னிலையில் குழந்தைகள் கொளுத்தப் பட்டுள்ளனர். பல சந்தர்ப்பங்களில் கர்ப்பத்திலிருந்து சிசுவை வெளியே யெடுத்து எரித்துள்ளனர். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மசூதிகளும் தர்காக்களும் தகர்க்கப்பட்டு பல இந்துக் கோவில்களாகவும்

மாற்றப்பட்டுள்ளன. இறந்த அனைவரின் நெற்றியிலும் 'ஓம்' என்று பொறித்து (உயிருடன் எரிக்கப்படாதவர்கள்) இந்து முறைப்படி எரிக்கப்பட்டுள்ளனர். இதை எல்லாம் விட உச்சக்கட்டமாகப் புதைக்கப்பட்ட முஸ்லிம் உடல்கள் சில இடங்களில் தோண்டி எடுக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன.

குஜராத் இந்துத்துவச் சக்திகளின் 'சோதனைக் கூடம்' என்று சொல்வார்கள். குஜராத்தில் சோதனை செய்து வெற்றி பெற்ற செயல்முறைகளை இந்தியாவின் மற்ற மாநிலங்களில் நிகழ்வேற்றுவது இவர்கள் வழக்கம்.*

'குருஜி' என்று மரியாதையாய் அழைக்கப்படும் இந்துத்துவக் கருத்துருவத்தின் தந்தை கோல்வால்கர் தனது 'We and Our Nationhood defined' என்ற புத்தகத்தில் தெளிவாக ஹிட்லரையும் ஹிட்லரின் இன அழிப்பையும் கொண்டாடி, அதிலிருந்து 'ஹிந்துஸ்தானியர்கள்' கற்றுப் பயன்பெற வேண்டிய பாடங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இன்னும் அனைத்து இந்துத்துவ அபிமானிகளும் ஹிட்லரை ஏதோ ஒருவிதத்தில் போற்றுபவர்களாகவும் அதே நேரத்தில் (முரண்பாடு இல்லாமல்) இஸ்ரேல் ஆதரவாளர்களாகவும் உள்ளார்கள். இந்தியப் பிரதமர் வாஜ்பேயியும் தற்போதைய உதவி மற்றும் எதிர்காலப் பிரதமர் அத்வானியும் கோல்வால்கரின் காலடியில் வளர்ந்து, இளம் வயதில் ஞானம் பெற்றவர்கள். இன்றும் பா.ஜ.கவின் கட்சி மற்றும் அரசு அலுவலக அறைகளில் கோல்வால்கரின் உருவப்படம் காட்சியளிக்கும். பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ், மற்ற இந்துத்துவப் பரிவாரங்கள் அனைத்தும் இன்றுவரை கோல்வால்கரை நிராகரித்துப் பேசியதில்லை. ஆனால் 60 வருடங்கள் கழித்து இப்போது திடீரென்று வாஜ்பேய் கோல்வால்கருக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்றும், 'அது அவர் சொந்தக் கருத்து, நாங்கள் கோல்வால்கரின் பாதையில் செல்லவில்லை' என்றும் கூறுகிறார். அங்கதான் நிக்கறார் அடல் பிஹாரி.

கோல்வால்கர் தனது புத்தகத்தில் ஹிட்லரின் கடைசித் தீர்வைப் போல், ஹிந்து ராஷ்டிரத்தில் ஆரியரில்லாத மற்ற இனங்களுக்கான தனது தீர்வைத் தெளிவாகக் கூறுகிறார். 'தேசிய இனம் அனுமதிக்கும் வரையில் அவர்களின் தயவில் வாழலாம். தேசிய இனம் விரும்பும் பட்சத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இது மட்டுமே ஒரே தர்க்க பூர்வமான, சரியான தீர்வாக இருக்க முடியும்.' இதையே ஆர்.எஸ்.எஸ் சமீபத்தில் பெங்களூரில் நடத்திய கூட்டத்தில் 'சிறுபான்மையினரின் பாதுகாப்பு பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தில் உள்ளது என்பதை முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும். நல்லெண்ணத்தைப் பெறுவதென்பது பெரும்பான்மையினரை மதிப்பது, சகித்துக் கொள்வது,

தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் இதனை இந்துத்துவத் தலைவர்கள் வெளிப்படையாகவே கூறியுள்ளனர் (தொகுப்பாளர்கள்).

அவர்களுடன் ஒத்துழைப்பது' என்று அறிவிக்கிறது. இந்த 'நல்லெண்ணத்தை'ப் பெறாவிட்டால் என்ன விலை கொடுக்க வேண்டி வரும் என்பதை குஜராத் இன அழிப்புச் சம்பவங்கள் முன்மாதிரியாய் எடுத்துரைக்கிறது.

குஜராத்தில் முஸ்லிம்களை Concentration Camp போன்ற நிலைமைக்குத் துரத்தியாகி விட்டது. இதற்கு அவர்களுக்குக் கிடைத்த ஒரு வாய்ப்புதான் 'கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம்'. இப்படி ஒரு சம்பவத்திற்காகவே காத்திருந்தது போல் தாக்குதல்களுக்கான எல்லா ஏற்பாடுகளுடன் இருந்தனர். பல மாதங்கள் முன்பே வெடிகுண்டுகள் உட்பட்ட ஆயுதங்களுடனும் முஸ்லிம்கள் வசிக்கும், வியாபாரம் செய்யும் இடங்கள் பற்றிய கணினிமயப்படுத்தப்பட்ட துல்லியமான விவரங்களுடனும் தயாராய் இருந்ததே இதைப் புலப்படுத்தும்.

கோத்ரா சம்பவத்திற்குத் தூண்டுதலாய் அயோத்தியில் கரசேவகர்களைக் குவித்த வண்ணம் இருந்தனர். முஸ்லிம்களின் உணர்ச்சிகளைப் பல வகைகளில் தூண்டி விட்டனர். 'நாயகன் ராமனின் ராஜ்ஜியத்தை அமைப்போம், இந்தத் தேசத்துரோகிகளைத் திரும்ப வர இயலாத இடத்துக்கு அனுப்புவோம்' என்று பாடல்களை ஒலிபரப்பினர். அரசாங்கம் ஒரு பக்கம் சமரசம் என்றும் 'சட்டப்படி நடவடிக்கை எடுப்போம், கரசேவகர்களைத் தடுப்போம்' என்றும் வாக்குறுதி அளித்தபடி கோர்ட்டில் அவர்களுக்காக வாதாடியது. கரசேவகர்கள் அயோத்தி செல்ல வசதியாக சிறப்புக் கூடுதல் கோச்சுகளை ரயில் வண்டிகளில் இணைத்தது. அந்த வண்டிகளில் சென்ற ராமபக்தர்கள் எல்லா ரயில் நிலையங்களிலும் வழக்கமாக ரவுடித்தனம் செய்தனர். பார்ப்பவர்களை எல்லாம் (முக்கியமாக முஸ்லிம்களை) 'ஜெய் ஸ்ரீராம்' என்று கத்தச் சொல்லி மிரட்டினர். கோத்ரா நிகழ்ச்சிக்கு முன்பே இதைப் பற்றி இந்தி, ஆங்கிலப் பத்திரிகைகள் பதிவு செய்திருக்கின்றன. அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த நாளும் வந்தது.

❍

அயோத்தியிலிருந்து திரும்பும் கரசேவகர்கள் அடங்கிய சபர்மதி எக்ஸ்பிரஸ் கோத்ராவில் நின்றபோது, முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த சிலரும் பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டுகளுடன் ரயிலேறுகின்றனர். அவர்களின் இருக்கைகள் மறுக்கப்பட்டு மிரட்டப்படுகின்றனர். ரயில் நிலையத்தில் முஸ்லிம் டீ விற்பவரிடம் காசு கொடுக்காமல் டீ குடித்தும் தின்பண்டங்களை எடுத்தும் கோப்பைகளை உடைத்தும் தகராறு செய்கின்றனர். சுற்றியிருந்த முஸ்லிம் பெண்கள், குழந்தைகளை 'ஜெய் ஸ்ரீராம்' என்று கத்தும்படி வற்புறுத்தினர். இவை எல்லாம் ராமபக்தர்களின் வழக்கமான லீலைகள் என்பதால் மக்கள் வாளாவிருந்தனர். காவி தலைப்பாகை அணிந்த பஜ்ரங் தள் உறுப்பினர் ஸித்திக் என்ற டீ விற்கும் கிழவரின் தாடியைப் பிடித்திழுத்ததும் தொப்பியைப் பறித்து நிலத்தில்

எறிந்ததும் பிறகு எழுப்பப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான கோஷங்களும் கோபத்தைக் கிளப்பியிருக்க வேண்டும். 17 வயதுப் பெண்ணான ஸோஃபியா கானை ரயிலை நோக்கி இழுக்க முற்பட்டதாகவும் அவர் கதறியதாகவும் சொல்லப்படுகிறது. மேற்கண்டவற்றை ரயில்வே ஊழியர்களும் நேரில் பார்த்தவர்களும் உறுதிப்படுத்துகிறார்கள்.

முஸ்லிம் கிழவரின் இளம் வயதுப் பெண்ணைக் கிளம்பிய ரயிலில் இழுத்துக் கொண்டு சென்றதாகவும், அதன் காரணமாகவே பிரச்சினை முற்றி ரயில் எரிப்பில் முடிந்ததாகவும் ஒரு செய்தி உள்ளது. சுவாமி அக்னிவேஷ் மற்றும் நிர்மலா தேஷ்பாண்டே 'The Pioneer' இதழில் முதலில் இதைக் குறிப்பிட்டு எழுதுகிறார்கள். இப்படி நடந்திருந்தால் அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை என்றாலும் இதை உறுதிப்படுத்த முடிய வில்லை. இது இஸ்லாமியர்களால் உருவாக்கப்பட்ட கட்டுக்கதை என்று சில இந்துத்துவச் சார்புக் கட்டுரையாளர்கள் கூறுகிறார்கள். (இது தொடர்பாக சுற்றியிருந்த இஸ்லாமியர்களால் அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் விவரமான மின் அஞ்சல் ஒன்று நண்பர்கள் மூலம் எனக்குக் கிடைத்தது.)

நிகழ்ச்சி பற்றி அறிக்கை அளித்த சி.பி.ஐ.(எம்) கட்சிக்குழு எரிந்த பெட்டி யினுள் அடுப்பு, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டியும் இன்னும் சில காரணங்களைக் கொண்டும் ரயில் பெட்டி உள்ளிருந்து தீப்பற்றியிருக்க வாய்ப்பு இருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளது. இதை எழுதிக் கொண்டிருக்கும்போது அகமதா பாத்தைச் சேர்ந்த (அரசாங்க) Forensic Science Laboratory (FSL) - இதுவரை போலீஸ் அளித்து வந்த செய்திகளை மறுத்து - ரயில் பெட்டி உள்ளிருந்து தீப்பிடித்து எரிந்ததாக அறிவிக்கிறது. இது, 2000 பேர்கள் கொண்ட கும்பல் ரயிலை நிறுத்தி, பெட்ரோல் போன்றவற்றை வெளியிலிருந்து ஊற்றிக் கொளுத்தியதாக போலீஸ் மற்றும் அரசாங்கம் அளித்து வரும் செய்தி களைப் பொய் என்று உரைக்கிறது. ரயில் பாதையிலிருந்த தடயங்கள், பெட்டி எரிந்திருந்த விதம் போன்றவற்றை ஆதாரமாக வைத்தும் எரிந்த நிகழ்ச்சியை (பெட்ரோ லுக்குப் பதில் தண்ணீர் கொண்டு) Simulation (மீண்டும் நிகழ்த்தி) செய்ததன் மூலம் இந்த முடிவிற்கு வந்திருக்கிறது.

குழந்தைகள், பெண்கள் உட்பட 59 பேர் தீயில் எரித்துக் கொல்லப்பட்ட கொடூரமான சம்பவத்தை நியாயப்படுத்தவோ குறைந்தபட்சம் புரிந்து கொள்ளவோ இதை எழுதவில்லை. எந்த வகையில் நிகழ்ந்திருந்தாலும் அதற்கு என்ன தூண்டுதல் இருந்திருந்தாலும் வேறு என்ன சமூகக் காரணங்கள் இருந்தாலும் அது ஒரு கொடூரமான சம்பவம் என்பதில் எந்த ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. இந்திய அரசாங்கம் தனது சட்டங்களின்படி (நியாயமான விசாரணை செய்து) நடவடிக்கை எடுக்க வேண்டிய கிரிமினல் குற்றம் மற்றும் மனிதாபிமானம் உள்ள அனைவரும் கண்டிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சி. பிரச்சினை என்னவென்றால் ஏதோ

சாதுவாய், தேமேவென்று, ராமநாமம் ஜெபித்தபடிச் சென்று கொண்டிருந்த ராமபக்தர்களை இஸ்லாமிய வன்முறைக்கும்பல் திட்டமிட்டு எரித்துக் கொன்றதாகவும் இதை முன்வைத்து ஒட்டுமொத்த இஸ்லாமியர்களின் சகிப்பின்மை பற்றியும் அரசாங்கமும் பல கட்டுரையாளர்களும் இன்னும் உலக மக்களும் கூறி வருவதுதான். (உதாரணத்திற்குப் பார்க்கவும் - www.rediff.comஇல் நிரம்பி வழியும் கட்டுரைகள் மற்றும் திண்ணை இணைய இதழில் (www.thinnai.com) மஞ்சுளா மாமியின் கட்டுரைகள்).

அடுத்த நாளே கோத்ரா சம்பவத்தைப் 'போலி மதச் சார்பின்மை' பேசுபவர்கள் கண்டிக்காததையும், முஸ்லிம்களின் இனவெறி, சகிப்பின்மை பற்றியும் வரிசையாய்க் கட்டுரைகள் வந்தன. (எல்லாப் பத்திரிகைகளும் கோத்ரா நிகழ்ச்சியைக் கண்டித்துள்ளன. தீப்பொறி அயோத்தியிலிருந்து வந்ததைக் குறிப்பிட்டதுதான் பிரச்சினை.) ஜார்ஜ் புஷ் கூட ஜாக்கிரதையாய் பேட்டி குடுக்கும்போது, இந்திய 'மதச்சார்பற்ற' அரசின் பிரதமர் வாஜ்பேய், 'முஸ்லிம்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் மற்றவர்களுடன் அமைதியாக வாழ விரும்பவில்லை' என்று கோவா கூட்டத்தில் பேசியதை மேற்கோள் காட்டிச் சாதனை படைத்தார்.

இந்தக் காரணங்களால் கோத்ரா நிகழ்ச்சிக்கும் அதற்குப் பின் நடந்த இன அழிப்புக்குமான வித்தியாசங்களைப் பார்க்க வேண்டியுள்ளது. இன்றுவரை கோத்ரா கொடூரத்தைச் செய்த குற்றவாளிகள் பற்றிய எந்தத் தெளிவான ஆதாரத்தையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை. முழுக்க முழுக்க நேரத்திற்கு ஏற்ப மாறும் முரண்பட்ட செய்திகளையே அரசாங்கம் கொடுத்து வருகிறது. 'ஐ.எஸ்.ஐ சதி' என்று எந்த ஆதாரத்தையும் இன்று வரை முன்வைக்காமல் கூறுகிறது. இன்னும் குஜராத் பூகம்பம், ஒரிசா புயல் ஆகியவற்றுக்கும் வாஜ்பேய் விஸ்கி அதிகம் குடித்து உளருவதற்கும் ஐ.எஸ்.ஐ மீது பழி சுமத்த வேண்டியதுதான் மீதமிருக்கிறது. அப்படியே ஐ.எஸ்.ஐ சதியாக இருந்தாலும் அதுவும் வழக்குப் பதிவு செய்து துப்பறிய வேண்டிய விஷயமே.

ஆனால் அதற்குப் பிறகு நடந்த முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் அரசாங்கம், இந்துத்துவ அமைப்புகள், பொதுமக்கள் இணைந்து நடத்திய பயங்கரவாதம். மந்திரிகளும் போலீசும் தாக்குதல் நடத்துபவர்களைப் பாதுகாத்தும் ஊக்குவித்தும் உதவியும் சில இடங்களில் தலைமை தாங்கி நடத்தியதற்கும் தேவைக்கு அதிகமான ஆதாரங்கள் உள்ளன.

ஒரு ஈ கூட நுழைய முடியாத அளவு பாதுகாப்புச் சோதனைகள் உள்ள இடத்தில் அமைந்திருந்த வக்ஃப் போர்டு அலுவலகம் எரித்துச் சாம்பலாக்கப்பட்டுள்ளது. போலீஸ் கமிஷனர் அலுவலகம் முன்னால் அமைந்திருந்த, நவீன உருதுக் கவிதையின் முன்னோடி வாலி குஜராத்தி யின் சமாதி, இசைக் கலைஞர் உஸ்தாத் ஃபையஸ் அலிகானின் சமாதி இருந்ததற்கான அடையாளம் ஏதுமின்றி உருத்தெரியாமல் அழிக்கப்

பட்டுள்ளன. பல சமாதிகளும் தர்காக்களும் ட்ரக் முதலியவற்றின் உதவி கொண்டும் சில இடங்களில் புல்டோசர் கொண்டும் அழிக்கப் பட்டுள்ளன. பல இடங்களில் காவிக்கொடி பறக்க விடப்பட்டு, ஹனுமான் படத்துடன் பூ, பழங்களுடன் பூஜைகூட நடத்தப்படுகிறதாம்.

மிகத் துல்லியமாக முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் தொழிற்சாலைகள், மில்கள், ஹோட்டல்கள் அடையாளம் காணப்பட்டு, எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. வி.இ.ப, பஜ்ரங் தள் ஆசாமிகளுடன் போலீஸ், குஜராத் உள்துறை அமைச்சர், அவர் தம்பி ஆகியோர் பல இடங்களில் தலைமை தாங்கி நேரடியாக ஈடுபட்டதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இந்துப் பெயர்களுடன் Pure vegetarian போர்டு மாட்டப்பட்ட முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஹோட்டல்கள் கூட அழிக்கப்பட்டுள்ளன.

எஹ்சன் ஜாஃப்ரி என்ற காங்கிரஸ் எம்.பி. தாக்கப்படப் போவதை அறிந்து உள்ளூர் போலீஸ் கமிஷ்னர், உள்துறைச் செயலாளர் முதல் வாஜ்பேய் வரை முறையிட்டும் அவர் வீட்டு வாசலில் சுற்றிக் கொண் டிருந்த மொபைல் போலீஸ்கூட உதவிக்கு வரவில்லை. தலை துண்டிக்கப் பட்டு அவரும் அவருடனிருந்த மற்றவர்களும் எரிக்கப்பட்டுள்ளனர். ஒரு வி.ஐ.பியின் கதி இது என்றால் சாதாரண முஸ்லிம்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பாதுகாப்பைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும். ஊரடங்கு உத்தரவு என்ற பெயரில் முஸ்லிம்களை (கூண்டோடு எரிக்க வசதியாக) வீட்டில் பூட்டி வைத்து, இந்துக்களுக்குக் கொள்ளையடிக்கவும் தாக்கு தலில் ஈடுபடவும் அனுமதி தந்தது போலீஸ்.

இன்னமும் கோத்ரா நிகழ்ச்சி நடந்த விதம் பற்றித் தெளிவாக எதுவும் தெரியவில்லை. 'திட்டமிட்ட செயல்' என்று அரசாங்கமும் இந்துத்துவச் சார்புக் கட்டுரையாளர்களும் கூறினாலும் அதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. ஆனால் அதே அரசாங்கமும் கட்டுரையாளர்களும் பிறகு நடந்த முஸ்லிம்கள் மீதான தாக்குதலை 'உடனடி எதிர்வினை' (spontaneour reaction) என்கிறது. 'குஜராத் கலவரத்தில்' பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதி திரட்டும் காலச்சுவடு கூட spontaneour reaction என்று (திண்ணை இணைய இதழில்) எழுதியுள்ளது.

பல மாதங்கள் முன்பே வெடிகுண்டுகள், (ஒரு சம்பவத்தில் வரிசை யான முஸ்லிம் வீடுகள் வெடிகுண்டுகள் கொண்டு தகர்க்கப்பட்டுள்ளன. 'பந்த்' காரணமாய் சகலமும் மூடிக்கிடக்க இரண்டு நாட்களில் இவர்கள் இந்தத் தயாரிப்பு நிலைக்கு வரச் சாத்தியமே இல்லை.) கேஸ் சிலிண் டர்கள், கணினி மயப்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் பற்றிய விவரங்களுடன் தயாராக இருந்ததை எந்த விதத்திலும் உடனடி எதிர்வினை என்று சொல்ல முடியாது. நடந்தது ஆட்சியில் உள்ளவர்கள், போலீஸ், தீயணைக்கும் படையினர், இந்துத்துவக் குண்டர்கள், உயர், நடுத்தர மற்றும் ஏழைப் பொதுமக்கள் இணைந்து திட்டமிட்டு நடத்திய இன அழிப்பு.

அடுத்து கோத்ரா சம்பவம் பற்றி செய்தவர்களைப் பாராட்டியோ பெருமையடித்தோ நியாயப்படுத்தியோ எந்த முஸ்லிம் தலைவரும் இன்றுவரை அறிக்கை விடவில்லை. காஷ்மீரிலோ பாகிஸ்தானிலோ அரேபிய உலகத்திலோ கூட யாரும் செய்யவில்லை. மாறாக எல்லா முஸ்லிம் தலைவர்களும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். அத்தோடு கோத்ராவின் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடந்த அமைதிக் கூட்டத்தில், கோத்ரா நிகழ்ச்சிக்குத் தங்கள் சமூகத்தின் பகிரங்க மன்னிப்புக் கோரலை முஸ்லிம் தலைவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். (இது பயத்தினால் கூட இருக்கலாம் என்பது வேறு விஷயம்.)

ஆனால் விசுவ இந்து பரிசத்தினர் மட்டுமில்லாது, முதலமைச்சரி லிருந்து பிரதமர் வரை மற்றும் பல கட்டுரையாளர்களும் நடந்த இன அழிப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். முதல்வர் நரேந்திர சிங் மோடி நியூட்டனின் மூன்றாவது விதியை மேற்கோள் காட்டித் தாக்குதலை 'இயற்கையான எதிர்வினை' என்று நியாயப்படுத்தினார். (இதைச் சில கட்டுரையாளர்கள் மறுத்து எழுதினாலும் மோடி இன்றுவரை மறுக்கவில்லை.) மேலும் 'போலீசில் உள்ளவர்களும் மனிதர்களே; அவர்களுக்கும் உணச்சிகள் உண்டு' என்றார்.

96 வயதான பேராசிரியர் காசிராம் சாஸ்திரி குஜராத்தின் வி.இ.ப செயலாளர். குஜராத்தில் மிகவும் மதிக்கப்படும் இலக்கியவாதி.(நமது சிறுபத்திரிகைக் கவிஞர்கள் எல்லாம் ஒருமுறை குஜராத் சென்று, அங்கு இலக்கியத்திற்குத் தரப்படும் மரியாதை பற்றி வியந்து விட்டு வந்தனர்.) இவர் இணைய தளத்திற்கு (rediff.com) அளித்த பதிவு செய்யப்பட்ட பேட்டியில் பிப்ரவரி 28 காலையில் உட்கார்ந்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான இடங்கள் பற்றிய தகவல்களைத் தயாரித்ததை (தாக்குதலை முன்பே திட்டமிடவில்லை என்பதற்கு விளக்கமாய்) கூறி, அப்பாவிகளை உயிருடன் எரித்தது முதலான அனைத்தையும் ஒப்புக் கொண்டு நியாயப்படுத்தியுள்ளார். இவர் மீது எந்தச் சட்டமும் பாயவில்லை.

பல பா.ஜ.க தலைவர்கள் வெளிப்படையாக பேட்டிகளில் தாக்குதலை நியாயப்படுத்தி 'இது தேசத்துரோகிகளுக்குக் கிடைத்த சரியான பாடம்' என்றனர். 'அசோக் சிங்கல், பால் தாக்கரே இவர்களுக்குப் பிறகு மோடிதான் எங்கள் ஹீரோ' என்கிறார் பிரவீண் தொகாடியா என்ற வி.இ.ப தலைவர். ஒரு வகையில் குஜராத்தில் மக்களின் கருத்தும் இதுதான்.

இது இந்துத்துவவாதிகளின் மிக வெளிப்படையான நியாயப்படுத்துதல் என்றால், இன்னொரு வகை வேறு மாதிரியானது. இதை பாராளு மன்றத்தில் ஜார்ஜ் ஃபெர்னான்டஸ் செய்தார்.

'ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்? ஏதோ இப்போதுதான் முதல் முறையாக ஒரு பெண் நடு ரோட்டில் கற்பழிக்கப்படுவது போலவும் இப்போதுதான் ஒரு பெண்ணின் வயிற்றிலிருந்து சிசு வெளியே

எடுக்கப்பட்டுக் கொல்லப்படுவது போலவும். இதெல்லாம் 1984இல் நடக்கவில்லையா?' என்று வினவினார் ஜார்ஜ் பெர்னான்டஸ்.

இந்துத்துவத்தை முழுவதும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் பா.ஜ.க பற்றிய வேறு நல்ல அபிப்பிராயம் கொண்ட 'நடுநிலையாளர்கள்' மனதில் குஜராத் சம்பவங்கள் சற்றுச் சலனத்தை ஏற்படுத்தியுள்ளன. இன்றும் பா.ஜ.க பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறும் நிலையை எட்டாத காரணத்தால், காங்கிரஸின் 40 வருட ஆட்சியில் அலுத்துப் போய் அதற்கு ஒரு நல்ல மாற்றாக பா.ஜ.கவைக் கருதும் இந்த நடுநிலையாளர்களின் ஆதரவைத் தக்க வைப்பது முக்கியமாகும். அதனால் காங்கிரஸ் ஆட்சியில் நடந்த கலவரங்களை வரிசைப்படுத்தி, விவரித்து 'குஜராத்தில் நடப்பது புதிய விஷயமல்ல' என்ற தோற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு இருக்கிறது. இல்லை என்றால் இந்திரா கொல்லப்பட்ட பின்பு சீக்கியர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை பற்றி விரிவாய் எழுத, பேச பல கட்டுரையாளர்களுக்கு இப்போது திடீரென்று என்ன அவசியம் வந்தது? (இந்த வகையான ஒரு கட்டுரை திண்ணையில் சின்னக் கருப்பன் எழுதியது.)

இந்த வகை வாதத்தில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. இதற்கு முன் இந்தியாவில் நடந்த எத்தனையோ கலவரங்களுக்கு காங்கிரஸ் காரணமா யிருந்திருக்கிறது; தூண்டி விட்டிருக்கிறது; தலைமை தாங்கியிருக்கிறது. 1984இல் நடந்த சீக்கியர்கள் மீதான தாக்குதலையும் இன்றைய மோடி போல் அன்றைய ராஜீவ் காந்தி நியாயப்படுத்தினார். ஒரு வகையில் பா.ஜ.க இயங்கி வளர்வதற்காகத் தனக்கெதிரான அரசியல் வெற்றிடத்தை வழங்கியதோடு, இன்று பா.ஜ.க அறுவடை செய்து வரும் பயன்களுக்கு அன்று காங்கிரஸ் விதை விதைத்திருந்தது.

இதெல்லாம் உண்மை என்றாலும் சில வித்தியாசங்களை இவர்கள் திறமையாய் மறைத்து விடுகிறார்கள். காங்கிரஸ் சீக்கியர்களுக்கோ அல்லது வேறு எந்த இனத்திற்கும் எதிரான பிரசாரத்தினாலோ அல்லது வெறுப்பின் அடிப்படையிலோ வளரவில்லை. அப்படி ஓர் உணர்வைத் தொடர்ந்து தக்க வைத்திருந்ததும் இல்லை. அரசியல் சுய நலத்திற்காகவும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்திற்காகவும் உருவாக்கிய தந்திரங்கள் அவை. மாறாக, பா.ஜ.கவிற்கும் அதன் சகோதர அமைப்புகளுக்கும் இஸ்லாமிய வெறுப்புச் சித்தாந்தம் என்பது அதன் அடிப்படை அஸ்தி வாரம்; அதன் ஒவ்வொரு உறுப்பினரும் சுவாசிக்கும் உயிர் மூச்சு. மேலும் காங்கிரஸ் ஆட்சியில் நடந்த பல கலவரங்களுக்குப் பின் அன்றைய ஜனசங், ஆர்.எஸ்.எஸ் போன்றவை இருந்துள்ளன.

இந்த வித்தியாசத்தை அருந்ததி ராய், 'காங்கிரஸ் இரவில் செய்ததை பா.ஜ.க பகலில் செய்கிறது. காங்கிரஸ் கோழைத்தனத்துடன், திருட்டுத் தனமாய், போலித்தனமாய், வெட்கத்துடன் செய்ததை பா.ஜ.க பெருமை யுடன் செய்கிறது' என்றார்.

இது எல்லாவற்றையும் விட மிக மோசமான நியாயப்படுத்துதல் என்ன வென்றால் அது உம்பர்டோ ஈகோ சொன்னதைப் போன்றது. ஜெர்மனியில் ஹிட்லர் நிகழ்த்திய இன அழிப்பில் 60 லட்சம் யூதர்கள் கொல்லப் பட்டதாக ஒரு கணக்குச் சொல்லப்பட்டால், ஒருவர் 'ஆராய்ச்சி செய்து' பல தர்க்கங்களைப் பயன்படுத்தி 'வெறும் 40 லட்சம் யூதர்கள்தான் இறந் துள்ளனர்' என்று 'நிறுவி' ஹிட்லர் மீது 'அபாண்டமாய் பழி சுமத்து பவர்களின்' நோக்கத்தைப் பற்றிய வினா எழுப்பும் வகையைச் சார்ந்தது அது. (உதாரணம்: நீலகண்டன் அரவிந்தன் 'திண்ணை'யில் எழுதிய கட்டுரை)

தொடக்கத்தில் கூறியது போல் குஜராத் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் மலை போல் குவிந்துள்ளன. இவற்றில் சில தவறுதலாகவும் வதந்திகளின் அடிப்படையிலான கற்பனையாகவும் இருக்க வாய்ப்புள்ளது. இந்த வகையிலான செய்திகள் சிலவற்றை முன்வைத்து குஜராத் பற்றிப் பேசும் எல்லோரின் தார்மீக நோக்கத்தைப் பற்றி அவதூறு செய்வதென்பது கயமைத்தனத்தின் உச்சக்கட்டம்.

உதாரணமாக எஹ்சன் ஜாஃப்ரியின் மகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு எரிக்கப்பட்டதாக ஒரு செய்தி வருகிறது. இது உண்மை யல்ல என்று பின்னால் தெரிய வருகிறது. (அருந்ததி ராய் தனது கட்டுரை யில் இதைக் குறிப்பிட்டு பின்பு மன்னிப்புக் கேட்டு மறுப்புத் தெரிவிக் கிறார்.) இதற்காக, எஹ்சன் ஜாஃப்ரியும் அவருடன் பலரும் நாடறிய கொல்லப்பட்டதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்

இந்தக் கட்டத்தில் ஓர் உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும். கோத்ரா நிகழ்ச்சிக்குத் தூண்டுதலாக நான் முதலில் எழுதியுள்ள அனைத்து விஷயங்களும் உண்மையெனப் பரிசோதிக்கப்பட்டவை அல்ல. ஆனால் பல வகைகளில் கரசேவகர்கள் முஸ்லிம்களை வன்முறைக்கான தூண்டுதலுக்கு உட்படுத்தியது தெளிவான விஷயம். நிச்சயமாக அரசாங்க, இந்துத்துவப் பிரச்சாரமாகிய 'திட்டமிட்ட சதி', 'ஐ.எஸ்.ஐ வேலை' போன்றவற்றிற்கான எந்தத் தடயமோ ஆதாரமோ இல்லை.

கோத்ரா நிகழ்ச்சி என்பது குஜராத்தில் பலகாலமாக நிகழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கு எதிரான உளவியல் மாற்றத்தின் பக்க விளைவு (பைப்ராடக்ட்) ஆகும். சமூக ரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் வேலையிலும் குடியிருப்பதிலும் எதிர்கொள்ளும் பாகுபாடு காரணமாக, சேரிகளில் சேரி சார்ந்த தொழில்களான சாராயம் காய்ச்சுதல், கஞ்சா விற்றல் போன்ற இன்ன பிற 'சிறு குற்றங்களில்' தேர்ச்சி பெற்றவர்களான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அகமதாபாத் டெக்ஸ்டைல் தொழில் களின் நசிவுக்குப் பின் இந்த நிலை இன்னும் மோசமானது. (இதே காரணத்தால் பாதிக்கப்பட்ட தலித்துகளை தங்கள் அடியாட்களாக, முஸ்லிம்களுக்கு எதிராக இந்துத்துவச் சக்திகள் முன்னிறுத்துகின்றன.) முரட்டுச் சுபாவம் தேவைப்படும் இந்த தொழில்களைச் செய்யும்

முஸ்லிம்கள் எந்தத் தெருச்சண்டைக்கும் தயாரானவர்கள் என்பதை விளக்கத் தேவையில்லை.

ஒரு வகையில் கரசேவகர்களின் திட்டமிட்ட வன்முறைக்கான தூண்டுதலுக்குக் கோபமான, நிராதரவான சிறு குற்றங்களில் தேர்ந்த இந்த முஸ்லிம் இளைஞர்களின் எதிர்வினையாக கோத்ரா சம்பவத்தைக் காண முடியும். இதற்காகக் காத்திருக்கும் இந்துத்துவப் பரிவாரங்கள் இதை மொத்த இஸ்லாமிய மக்கள் மீதான திட்டமிட்ட பெரும் தாக்குதலுடன் தொடர்கின்றன.

இதை நியாயப்படுத்தவும் பாதுகாப்புத் தரவும் பாரபட்சமான டவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் இந்துத்துவச் சக்திகளின் பக்கம் இருக்கிறது. கோத்ரா சம்பவங்களை 'நிகழ்த்திய குற்றவாளிகளை' பொடா சட்டத்தில் கைது செய்திருப்பதாக மோடியே கூறினார். (பின்னர் அதைவிடக் கொடூரமான குற்றங்கள் பற்றிய கேள்விகள் வந்தவுடன் பொடா பின் வாங்கப்பட்டது.) மிகத் தெளிவான ஆதாரங்கள் இருந்தும் (இந்திய வரலாற்றில் முதன் முறையாக காமெரா முன்னால் நடந்த 'கலவரமாய்' இதைச் சொல்லலாம்.) அரசாங்கத்தின் பாதுகாப்பு இருப்பதால் இன்றுவரை குஜராத் இன அழிப்பைச் செய்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. உள்துறை அமைச்சர் பார்வையிட வேண்டிய 'கலவரப் பகுதிகளை'த் தொடர்பில்லாமல் பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் வந்து பார்க்கிறார். நஷ்ட ஈடு என்ற நாடகத்திலும் தெளிவான பாரபட்சம். கோத்ரா சம்பவத்தை விசாரித்து 'உண்மை' அறிய, வெளிப்படையான இந்துத்துவச் சார்புள்ளவரும் தனது பாரபட்சமான தீர்ப்பிற்காக உச்ச நீதி மன்றத்தினால் கண்டிக்கப்பட்டவருமான கே.ஜி.ஷா என்ற ஓய்வு பெற்ற நீதிபதியிடம் விசாரணையை ஒப்படைக்கிறது அரசாங்கம்.

இன அழிப்பிற்குத் தலைமை தாங்கியவனும், நடந்தவற்றை வக்கிர மான முறையில் வெளிப்படையாய் நியாயப்படுத்தியவனும், புரட்சி நடந்தால் மக்கள் மன்றத்தில் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டியவனும், குறைந்த பட்சம் இந்திய கிரிமினல் சட்டங்களின்படி வழக்குத் தொடுக் கப்பட வேண்டியவனுமான குஜராத் முதலமைச்சர் நரேந்திர சிங் மோடியை, காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சிகளும் மற்ற இயக்கங்களும் தலைகீழாய் நின்று போராடியும் பா.ஜ.க பதவி இறக்கம் கூடச் செய்ய வில்லை. அது மட்டுமில்லாது இன்னும் பதவியிலிருக்கும் இன அழிப்பின் கதாநாயகன் மோடி, நடைபெறவிருக்கும் தேர்தலில் பா.ஜ.க வென்றால் முதலமைச்சராய் தொடரப்போகும் நபர். இந்த நிலையில் எந்த விதத்தில் முஸ்லிம்கள் தங்களுக்கான நியாயத்தையோ சிவில் உரிமைகளையோ குறைந்தபட்சம் நடந்த மிகக் கொடூரமான சம்பவங்கள் மீண்டும் நடைபெறுவது தவிர்க்கப்படுவதையோ எதிர்பார்க்க முடியும்.

இந்த நிலையில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் தங்களுக்கு அளிக்கப்படும் இரண்டாம் நிலை அந்தஸ்தை ஒப்புக் கொண்டு

தொடர்ச்சியான பயத்தில் தங்களுக்குச் சாதாரண குடிமக்களுக்கு உரிய உரிமைகள், நீதிகள் கிடைக்காது என்பதை ஜீரணித்தபடி வாழத் தயாராகலாம். ஆனால் தாங்க முடியாத கோபம் உள்ள சில இளைஞர்கள் ஓர் உள்நாட்டுப் போருக்குத் தயாராகலாம்.இந்தியாவில் குழப்பம் விளைவிக்க எத்தனையோ நாடுகளுக்கு, அதன் உளவு நிறுவனங்களுக்கு (பாகிஸ்தான் உட்பட) அக்கறை இருக்கலாம். பழி வாங்கலுக்குத் தயாரான இந்த இளைஞர்கள் அவர்களுக்குத் தீனியாகலாம். இந்த வகையில் இந்துத்துவச் சக்திகளுடன் குஜராத்தில் ஒத்துழைத்த பாவத்திற்கு குஜராத்தின் அனைத்து மக்களும் தரப்போகும் விலை சாதாரணமானதல்ல.

தாக்குதல்களின் வேகம் சற்றுத் தணிந்திருந்தபோது நடத்தப்பட்ட வி.இ.ப பொதுக்கூட்டத்தில் 'முஸ்லிம்களை அகதி முகாம்களிலிருந்து திரும்ப விடமாட்டோம்' என்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அரசாங்கம் இத்தனைக்குப் பிறகும் அதே பாரபட்சத்துடன் செயலாற்றி வருகிறது. நிவாரண முகாம்களை மூடுவது, தாக்குதலின்போது நேர்மையாய் செயலாற்ற முனைந்த அல்லது தாக்குதலுக்கு ஒத்துழைக்க மறுத்த அதிகாரிகளை மாற்றுவது, முஸ்லிம் மாணவர்களைத் தேர்வு எழுத விடாமல் தடுப்பது என்ற வகையில் செயல்பட்டு வருகிறது. அமைதி ஊர்வலம் என்று ஒன்று ஜார்ஜ் ஃபெர்னான்டஸ் தலைமையில் அறிவிக்கப்படுகிறது. எப்படியாவது அமைதி திரும்பினால் போதும் என்று எந்தச் சமரசத்திற்கும் தயாரான முஸ்லிம் இயக்கங்களைப் பங்கு பெற வைத்து, இன அழிப்பின் கதாநாயகனான மோடி பங்கு பெறுவது கடைசி வரை ரகசியமாய் வைத்து, ஊர்வல இறுதியில் அவனைப் பேச வைக்கிறது. இது போன்ற தந்திரங்கள் இஸ்ரேலின் ஏரியல் ஷாரோனுக்குக் கூடத் தெரியாதவை.

ஜெர்மனியின் ஹிட்லரும் பிரான்சின் லூ பென்னும் ஒரு விதத்தில் முகமூடிகள் எதுவும் இல்லாமல் தமது பாசிசக் கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள். இது பாசிச எதிர்ப்புச் சக்திகளுக்கு ஒரு வகையில் செயல்படுவதற்கு வசதியாய் இருக்கிறது. நமது இந்துத்துவப் பரிவாரங்கள் பற்றி அருந்ததி ராய் எழுதியுள்ளதைக் கீழே தருவது பொருத்தமாக இருக்கும்.

ஒரே நேரத்தில் பல முரண்பட்ட விஷயங்களை இவர்களால் சொல்ல முடியும். ஒரு பக்கம் வி.இ.ப கடைசித் தீர்விற்கு தனது தொண்டர்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கும்போது, பிரதம மந்திரி மதப் பாகுபாடின்றி எல்லா மக்களும் சமமாக நடத்தப்படுவரென்று நாட்டிற்கு உத்தரவாதம் தருவார். 'இந்தியக் கலாச்சாரத்தை' இழிவு செய்யும் புத்தகங்களைத் தடை செய்தும் எரித்துக் கொண்டும் இருக்கும்போது, நாட்டின் கிராமப்புற மேம்பாட்டுக்கான பட்ஜெட்டின் 60 விழுக்காட்டை லாபமாக என்ரானிற்குத் தாரை வார்ப்பார்கள். இதனுள்ளேயே எல்லா வகையான அரசியல் சிந்தனைகளும் அடங்கியிருக்கும். இதனால் எதிரெதிர் அரசியல்

கட்சிகளுக்கிடையில் நடைபெற வேண்டிய போராட்டம் ஒரு குடும்பச் சண்டை என்ற அளவில் குறுகி யாருக்கும் பிரச்சினையில்லாமல் தீர்க்கப்படும். பார்வையாளர்களான மக்களுக்கு ஆக்ரோஷம், ஆக்ஷன், பழிவாங்கல், சோகம், கவிதை, பயங்கரம் என்று எல்லாவகை உணர்வுகளும் கிடைக்கும். ஆட்டம் முடிந்து, திரை விழுந்து, மக்கள் அமைதியுடன் உறங்கப் போனபின், இந்தக் கவர்ச்சி, சப்தங்களின் பின், ஒரு மனம் தனது எதிர்கால காவிக் கனவிற்கு ஓவர்டைம் வேலை செய்தபடி இருக்கும்.

இங்கேதான் உலகின் மற்ற பாசிச இயக்கங்களிடமிருந்து இந்துப் பாசிசம் வேறுபடுகிறது. அவர்களிடையே எல்லா வகை கருத்துக்களைக் கூறவும் எல்லாத் தருணங்களுக்கு ஏற்பவும் ஓர் அணி இருக்கும். சுதேசி பற்றி ஓர் அணி பேசிக் கொண்டிருக்கையில் அரசாங்கம் தாராள மயமாக்கலில் ஈடுபட்டிருக்கும். 'தவறான கட்சியிலிருக்கும் சரியான நபர்' கவிஞர் வாஜ்பேய் மேடைக்கேற்ப தனது நிறத்தை மாற்றிக் கொண்டே இருப்பார். ரதயாத்திரை செல்ல இறுக்கமான மனமுடைய அத்வானி (ரதத்தை ஓட்ட ஒரு முஸ்லிம்), வரலாற்றை மாற்றி அமைக்கும் தீவிர இந்துத் துவவாதி ஜோஷி, அரசியல் நெருக்கடிகள் மற்றும் பாதிரியார் கொலை போன்றவற்றைச் சமாளிக்க ஜார்ஜ், 'ஒழுக்கத்திற்கு' ஆர்.எஸ்.எஸ், கொலை செய்யவும் கொள்ளையடிக்கவும் பஜ்ரங் தள், வி.இ.ப மற்றும் மோடி, தமிழகத்திற்கு என்று இந்து முன்னணி. ஆர்.எஸ்.எஸ்சினால் 'இந்து' என்று சான்றிதழ் தரப்பட்ட முஸ்லிமான கலாமை ஜனாதிபதி யாக்குவார்கள்.இது 'முஸ்லிம்கள் மீதான உலகத்தின் எதிர்ப்புணர்வைத் தணிக்கச் செய்யும் நடவடிக்கை' என எழுத கட்டுரையாளர்கள் இருப் பார்கள். தேர்தல் ஜனநாயகம், அதற்கெதிரான குறுக்கு வழிகள் எல்லாம் கலந்து ஆட்சியைப் பிடித்த நாஜிக்களிடம் கூட இத்தனைத் தந்திரங்கள் கிடையாது.

○

இன்று வெறுப்பின் புலமாக இருக்கும் குஜராத்தின் மனநோய் மற்ற மாநிலங்களுக்குப் பரவுவதைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் முதலில் குஜராத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். குஜராத்தை இந்தியாவின் அதிவலதுசாரி மாநிலம் என்று கூறலாம். எந்தவித இடதுசாரி அரசியலின் பாதிப்புகள் அற்ற, தமிழகத்தைப் போன்று பெரியார் இயக்கமோ மஹாராஷ்டிராவைப் போன்று அம்பேத்கர், பூலே போன்றவர்களின் தலித் இயக்கப் பாதிப்போ இல்லாமல், காந்தி பிறந்ததும், காந்தியத்தின் பாதிப்புகள் தவிர முழுக்க ஒரு தீவிர வலதுசாரி மனநிலை கொண்ட மக்களை உடைய மாநிலம் குஜராத். பா.ஜ.க தொடர்ந்து பதவியிலிருக்கும் மாநிலமும் அதுதான். குஜராத்தில் அதிகார வர்க்கத்தின் எல்லாத் துறைகளிலும் ஆர்.எஸ்.எஸ், வி.இ.ப போன்றவற்றின் ஆதிக்கம் ஊடுருவிப் பல காலம் ஆகிவிட்டது. 'உயர்' ஜாதியினரின் சதவிகிதமும் மற்ற மாநிலங்களை விட அதிகமாகக் கொண்டது. அதிக அளவு

ஜாதிகளும், உட்பிரிவுகளும் - கிட்டத்தட்ட 80 பார்ப்பன ஜாதிகளும் 40 பனியா ஜாதிகளும் - கொண்ட மாநிலம்.

ஒரு பக்கம் வறட்சி, பூகம்பம், முதலாளித்துவம் என்று பல காரணங்களினால் வறுமையின் அதல பாதாளத்திற்கு ஒருபக்க மக்கள் சென்று கொண்டிருக்க, இன்னொருபக்க மக்களிடம் வியாபாரத்தாலும் வெளிநாட்டுப் பணவரவாலும் செல்வம் சேர்ந்து கொண்டிருக்கும் குஜராத்தில், பழைய ஜன சங்கமும் நமது குலக்கல்வி தந்த ராஜாஜியின் ஸ்வதந்திராக் கட்சியும் கூட்டு வைத்து முன்பு பெருவெற்றி பெற்றதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

காந்தி, இந்து - முஸ்லிம் ஒற்றுமை பேசி அதன் காரணமாகவே கொல்லப்பட்டாலும் அவருடைய சித்தாந்தமே ஒரு வகையில் இந்துத்துவத்திற்குத் தாவுவதற்கான முந்தைய படிக்கட்டாய் இருந்தது. வடஇந்தியா முழுவதுமே, பொதுவாக நடுத்தர வர்க்கத்தினரிடம் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு மிகப் பெரிய முன்தீர்மானம் இருப்பதைக் காண முடியும். நான் வடஇந்தியாவில் தங்கியிருந்த சில காலத்தில் ஓரளவு இந்துத்துவ அரசியலை நிராகரிப்பவர்கள் கூட 'ஆனாலும்...' என்று இழுத்து ஆர்.எஸ்.எஸ் சொல்வதையே வேறு வார்த்தைகளில் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

குஜராத்தைச் சரியாய்ப் புரிந்து கொள்ள அதன் இன்றைய முதல்வர் மோடி, சாதாரண ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகராக இருந்து உயர்ந்த கதையைத் தெரிந்து கொண்டால் போதும். இவரைப் பல வருடங்கள் முன்பு பேட்டி எடுத்த அஷிஸ் நந்தி முழுவதும் அதிர்ந்து போய் வெளிவந்து தனது நண்பரிடம் 'ஒரு பாசிசத்தின் புத்தகத்தை, எதிர்கால பெருங்கொலை காரனைச் சந்தித்தேன்' என்று சொன்னதாகக் கூறுகிறார். (I had met a text book fascist, and prospective killer, perhaps a future mass murderer)

குஜராத் தற்போதைய நிலமைக்குப் பல காலமாய், நீண்ட பல கலவரங்கள் மூலம் தன்னை தயார்ப்படுத்தி வந்திருக்கின்றது. இந்தியா விலேயே முதன் முதலாக இடஒதுக்கீட்டுக்கு எதிரான கலவரத்தைத் தொடங்கிய மாநிலம் அது. எண்பதுகளில் காங்கிரஸ், சத்திரியர்கள், தலித்துகள், ஆதிவாசிகள், முஸ்லிம்கள் ஒற்றுமை அரசியலை முன்வைத்து இதன் மூலம் பார்ப்பன, பனியா, பாடிதார் இனத்தவர்களின் பங்கைக் கட்சியிலும் ஆட்சியிலும், கிட்டத்தட்ட முழுவதும் துடைத்தெறிந்தது. கடந்த 15 வருட இந்துத்துவ அரசியல், இவர்கள் மீண்டும் தலையெடுத்து இன்று ஆட்சியிலும் அதிகார வர்க்கத்திலும் பெரும் ஆக்கிரமிப்பை மேற்கொள்ள வழி வகுத்திருக்கிறது. 1981இல் நடந்த இடஒதுக்கீட்டு எதிர்ப்புக் கலவரத்தில் தலித்துகள் தாக்கப்பட்டபோது பல இடங்களில் முஸ்லிம்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தனர். பிறகு 1985இல் நடந்த இடஒதுக்கீட்டுக்கு எதிரான கலவரத்திலும் தலித்துகளே அதிகம் தாக்கப்பட்டனர். இன்று தலித்துகளும் முஸ்லிம்களும் இடைவெளிப்

படுத்தப்பட்டதுடன், தாக்கிக் கொள்ளும் முரண்பட்ட நிலைக்குச் செலுத்தப்பட்டுள்ளனர். ஒரு காலம் வரை இட ஒதுக்கீட்டுக்கு எதிரான நிலையை வெளிப்படையாக எடுத்து வந்த பா.ஜ.க, சமீப காலங்களில் அதை அடக்கி வாசித்துத் தனது இஸ்லாமிய எதிர்ப்பிற்கான ஆதரவைப் பெருக்கியுள்ளது.

குஜராத் பத்திரிகைகள் இந்துத்துவம் பெருத்து வளர பல காலமாய் தீனி போட்டு வருகின்றன. வதந்திகளைச் செய்தியாகத் தருவதென்பது அங்கு பத்திரிகை தர்மம் ஆகிவிட்ட விஷயம். கோத்ரா நிகழ்ச்சிக்குப் பிறகும் ஓர் இந்துப் பெண் முலைகள் வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டதாகக் கிளப்பப்பட்ட வதந்தியை ஒரு பத்திரிகை செய்தியாக்கியது. கலவரம் நடந்து பலர் இறந்த நான்கு நாட்களுக்குப் பிறகு அதே பத்திரிகை எந்த மன்னிப்பும் கேட்காமல் மறுப்பு வெளியிடுகிறது.

பல முஸ்லிம்கள் தொழில்களிலும் வியாபாரத்திலும் வெற்றி பெற்றதின் மீதான காழ்ப்பும் வியாபாரப் போட்டியும் இந்தத் தாக்குதல்களின் ஒரு பின்னணியாகும். முஸ்லிம்களின் பொருளாதார முதுகெலும்பை உடைப்பதே இந்தக் கலவரங்களின் முதன்மையான நோக்கமாக இருந்திருக்கிறது. கோயம்புத்தூரில் முஸ்லிம்கள் மீது நடந்த தாக்குதல்களிலும் இப்படி ஓர் அடிப்படை உண்டு. ஈழத்திலும் இப்படி ஒரு பரிமாணம் இருக்கலாம்.

முகலாயர் காலத்திலிருந்தே இந்து - முஸ்லிம் கலவரங்கள் குஜராத்தில் ஒரு வழக்கமான விஷயமாக இருந்தாலும் 1969 கலவரங்களிலும் முஸ்லிம்கள் மீது பயங்கரமான தாக்குதல் இருந்தாலும் அத்வானியின் ரதயாத்திரையே முதலில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு வெகுஜன உணர்வைத் தோற்றுவித்தது. சென்ற இடமெல்லாம் கலவரங்களையும் பிணங்களையும் விட்டுச் சென்ற அத்வானியின் ரதயாத்திரை எந்தப் பாப்புலர் இயக்கத்தாலும் தடுக்கப்படவில்லை. ஒரு வர்க்கப் போராட்டத்தில் குண்டுகளை எதிர்நோக்கி உயிர்த் தியாகத்திற்குத் தயாரான உறுப்பினர்களைக் கொண்ட எந்த மார்க்சிஸ்ட், லெனினிஸ்ட், மாவோயிஸ்ட் இயக்கத்தாலும் தடுக்கப்படவில்லை. லல்லு பிரசாத் யாதவின் அரசாங்கம்தான் அத்வானியைக் கைது செய்து ரதயாத்திரையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

முதலாளித்துவத்தின், உலகமயமாதலின் தாக்கம் நேரடியாக அதிகம் உள்ள குஜராத்தில் இதன் காரணமாய் வேலையிழந்த, ஓரங்கட்டப்பட்ட தலித்துகளை இந்துத்துவச் சக்திகள் தங்களின் அடிமட்டத் தொண்டர்களாக ஆக்குவதில் பெருவெற்றி பெற்றுள்ளனர். இது எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய இரட்டைப் பலன்களைத் தருகிறது. ஒருபக்கம் முதலாளித்துவத்தின் குரூர பாதிப்பை திசை திருப்புவதுடன் மறுபக்கம் காலம் காலமாக சாதிய அமைப்பில் செய்து வருவது போல், ஒடுக்கப்படும் தலித்துகளைத் தங்களால் உருவாக்கப்பட்ட எதிரிக்கு

(ஒடுக்கப்படுபவர்களில் அடிமட்டத்தில் உள்ள தலித்துகளுக்குச் சற்று மேல் நிலையில் உள்ள முஸ்லிம்களுக்கு) எதிரான ஆயுதமாக மாற்றவும் முடிகிறது. தலித், முஸ்லிம் முரண்பாட்டைப் பெரிதுபடுத்தி அவர்களைச் சண்டையிடும் இரு இனங்களாக மாற்றிக் காட்டுவது பல காலமாய் கணித்து நடத்தப்படும் விளையாட்டு. இடதுசாரி, தலித் இயக்கங்கள் அறவே இல்லாத குஜராத்தில் இது மிக எளிதில் சாத்தியமாகி உள்ளது.

❍

குஜராத் சம்பவங்கள் தொடர்பாக எழுதப்பட்ட, பேசப்பட்ட விஷயங்களில் ஒன்று குறிப்பிடத்தக்கது. யாரும் 'பெரும்பான்மையான இந்துக்களும் முஸ்லிம்களும் அமைதியுடனும் சகோதரத்துவத்துடனுமே வாழ விரும்புகிறார்கள்' என்ற பழைய 'கிளிஷேயை' முன்வைத்து (எனக்குத் தெரிந்தவரை) கட்டுரை எழுதவில்லை. அந்த அளவிற்கு வெறுப்பின் களமாக குஜராத் இன்று இருக்கிறது.

இதுவரை வெறும் பார்வையாளர்களாகவும் ஊக்குவிப்பவர்களாகவும் நடந்தவைகளைத் தர்க்கப்படுத்தி (Rationalise) நியாயம் கற்பிப்பவர்களாகவும் மட்டுமே இருந்த நடுத்தர, உயர்தர படித்த வர்க்கத்தினர் இந்த முறை நேரடியாகவே தாக்குதலிலும், கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். செல் ஃபோன்களுடன், உல்லாசக் கார்களில் வந்து, தம்பதி சகிதமாய் முஸ்லிம் கடைகளிலிருந்து பொருட்களை அள்ளிச் சென்ற செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் சொத்துகளைக் கொள்ளையடிப்பதும் முஸ்லிம்களைத் தாக்குவதும் அங்கீகாரம் பெற்றதற்கான (legitimised) அத்தாட்சி இது.

நடந்த இன அழிப்பை தலித்துகளும் ஆதிவாசிகளும் முஸ்லிம்கள் மீது நிகழ்த்திய கோபமாக இந்துத்துவச் சார்புக் கட்டுரையாளர்கள் சித்தரித்து வருகின்றனர். இங்கே நாம் (அதாவது ஸெகுலரிஸம், இந்துத்துவ எதிர்ப்பு என்றெல்லாம் பேசும்) திணறக்கூடிய ஓர் உண்மை இருக்கிறது. மிகப் பெரும் அளவில் தலித்துகளும் ஆதிவாசிகளும் இந்துத்துவக் குண்டர்களுடன் சேர்ந்து முஸ்லிம்களைத் தாக்கியதிலும் முஸ்லிம் சொத்துகளைக் கொள்ளையடித்ததிலும் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. இதை எப்படிப் புரிந்து கொள்வது?

ஆதிவாசிகளுடன் வேலை செய்வதற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட, நர்மதா அணை எதிர்ப்புப் புகழ் மேதா பட்கர் (சபர்மதி ஆசிரமத்தில் தாக்கப்பட்ட பின்) முஸ்லிம்களில் இருக்கும் வட்டித் தொழிலாளர்கள் மேலுள்ள வெறுப்பை இந்துத்துவவாதிகள் பயன்படுத்திக் கொண்டதாகவும் பல இடங்களில் மோசமான பின் விளைவுகளைக் காட்டி மிரட்டி ஆதிவாசிகளைத் தாக்குதலில் ஈடுபடுத்தியதாகவும் கூறுகிறார்.

இதைக் கோயம்புத்தூரில் ஏற்கனவே செய்து காட்டியிருக்கிறார்கள். ஒரு வகையில் கோயம்புத்தூரில் தலித்துகள் நேரடியான தாக்குதலில்

ஈடுபடவில்லை. ஏழ்மையில் வாழும் அருந்ததியினருக்குக் கொள்ளை யடிப்பதற்கான உந்துதலும் அனுமதியும் கொள்ளையடித்தால் எந்த நடவடிக்கையும் இருக்காதென்ற உறுதி மொழியும் அளிக்கப்பட்டது. கோயம்புத்தூரில் அருந்ததியினரின் வறுமை இந்துத்துவ நோக்கத்திற்கு பயன்பட்டது.

குஜராத்தில் தலித்துகளும் ஆதிவாசிகளும் வெறும் கொள்ளை யடிப்பில் மட்டுமே ஈடுபட்டனர் என்றும் கொலைகளிலும் பாலியல் வன்முறைகளிலும் ஈடுபடவில்லை என்றும் சிலர் கூறி வருகின்றனர். அப்படி நிச்சயமாகக் கூற முடியும் என்று தோன்றவில்லை. இது போன்று தமது அரசியலுக்குச் சமாதானம் சொல்லி ஏமாற்றிக் கொள்வது எந்த விதத்திலும் பயன்படப் போவதில்லை. காலம் காலமாக வஞ்சிக்கப் பட்டும் நசுக்கப்பட்டும் சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கும் இனம், தனக்கு அடுத்த நிலையில் இருக்கும் இனத்தை, தனது உண்மையான ஆதிக்கச் சக்திகளுடன் சேர்ந்து தாக்குவதை நாம் புரிந்து கொண்டே ஆக வேண்டும்.

அடித்தட்டு மக்களுக்கான அரசியல் பேசி வரும் பல இயக்கங்களை விட இந்துத்துவச் சக்திகள் அதிகமாகவும் மிக எளிதில் ஈர்க்கும் விதத் திலும் ஆதிவாசிகள் மத்தியில் வேலை செய்து வருவது உண்மை. ஆர்.எஸ்.எஸ்சின் 'வனவாசி கல்யாண் சமிதி' பல ஆண்டுகாலமாக ஆதிவாசிகள் நடுவில் வேலை செய்து வருகிறது. ஆர்.எஸ்.எஸ் முறையில் கல்வியறிவு அளிக்கப்பட்ட ஆதிவாசிகள் தங்களுக்கான புதிய அடையாளத்தைத் தேடுகிறார்கள். இந்துத்துவம் அவர்களுக்கு அந்தப் புதிய அடையாளத்தை அளிக்கிறது. புதிதாய் மதம் மாறியவர் மற்றவர்களை விட கூடுதலான மத வெறியுடன் இருக்கும் உளவியல் இவர்களின் திட்டங் களுக்கு வசதியாக இருக்கிறது. இதன் மற்றோர் அம்சம் பற்றி விவரிக்கத் தேவையில்லை. முஸ்லிம்கள் திருப்பித் தாக்கியதில் பாதிக்கப்பட்டவர்கள் தலித் மக்களே. முஸ்லிம்கள் இல்லாத ஓரிரண்டு நிவாரண முகாம்கள் தலித்துகளாலேயே நிரம்பி வழிகின்றன. இந்த வகையில் தனது இன அழிப்புத் திட்டங்களை தலித் - முஸ்லிம் மோதலாக மாற்றுவதில் ஏற்கனவே பல இடங்களில் இந்துத்துவச் சக்திகள் வெற்றி பெற்றுள்ளன.

ஒரு விஷயத்தை உன்னதமான விஷயமாக மாற்ற முதலில் அதற்கு ஒரு பெயர் கொடுக்கப்பட வேண்டும். உயர், நடுத்தர மக்கள் நேரடியாக தாக்குதலில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் பல இருந்தும் வி.இ.பவும் இந்துத்துவச் சார்புக் கட்டுரையாளர்களும் குஜராத்தில் நடந்ததை தலித்துகளும் ஆதிவாசிகளும் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்திய 'வர்க்கப் போராட்டமாக' சித்தரித்து வருகின்றனர். (திண்ணை இணைய இதழில் நீலகண்டன் அரவிந்தன்.) கடந்த பத்தாண்டுகளில் பல முன்னாள் இடது சாரிகள் வேறு வி.இ.பவில் இணைந்துள்ளனர். நடந்த இன அழிப்பை 'வர்க்கப் போராட்டம்' என்று தர்க்கப்படுத்த சொல்லியா தர வேண்டும்?

ஆர்.எஸ்.எஸ் இந்தத் திட்டத்திற்குப் பல காலமாக, பலவிதங்களில் மக்களைக் தயார்படுத்தி வருகிறது. ஏழ்மையின் அடியாழத்தில் இருக்கும் குடும்பங்களில் இருந்தும் நாட்டின் வடகிழக்கு மற்றும் ஆதிவாசிகள் வாழும் இடங்களில் இருந்தும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து தனது ஸேவாதம் பள்ளிகளில் பயிற்சி அளிக்கிறது. நவீன கல்வி, நவீன வசதிகள் பற்றி எண்ணிப் பார்க்கவே முடியாத குடும்பத்திலிருந்து வரும் இந்த மாணவர்கள் ஆர்.எஸ்.எஸ்சிற்கு முழு நம்பகமாக, நன்றியுள்ளவர்களாக அங்கே வளர்கிறார்கள். இவர்கள் தங்களது மாமிச உணவுப் பழக்கத்தை விட்டு வெஜிடேரியனாக, சமஸ்கிருத மந்திரங்களை உச்சரிப்பவர் களாக வளர்க்கப்படுகின்றனர். கோல்வால்கர், ஹெட்கேவர் போன்ற ஆர்.எஸ்.எஸ் பிதாமகர்களை 'குருஜி' என்று இவர்களும் மரியாதையாய் அழைக்கிறார்கள். இவ்வாறாக தங்களது பல நூற்றாண்டுக்கான திட்டங்களுக்கு ஆர்.எஸ்.எஸ் இவர்களைப் பழக்கப்படுத்தி வருகின்றனர். இதற்கு வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களிடமிருந்து பணம் வந்து குவிகிறது.

இவ்வாறாக தலித், ஆதிவாசி மக்களைத் தங்கள் ஆயுதமாக, கவசமாகப் பயன்படுத்தும் உத்தி ஒரு நீண்ட கால சதியாக இருந்தாலும், இதில் நாம் எதிர்கொள்ள, ஜீரணிக்கச் சில விஷயங்கள் உள்ளன.

குஜராத்தில் முஸ்லிம்கள் (பிற்படுத்தப்பட்ட சாதியினர் போல்) ஆதிவாசிகளின், தலித்துகளின் உடனடி மேற்தட்டினராக, ஒரு வர்க்கப் போராட்டத்திற்குரிய முரண்பட்ட உறவு முறையைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பது யதார்த்தம். இந்த விஷயத்தை (மற்ற இந்து ஆதிக்க சாதியினருக்கும் அத்தகைய உறவு இருந்தாலும்) இந்துத்துவச் சக்திகள் திறமையாய்ப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதை 'வர்க்கப் போராட்டம்' என்று அழைக்கவும் வசதியாய் இருக்கிறது.

முஸ்லிம்கள் இத்தகைய ஒரு தாக்குதலை தலித் - ஆதிவாசி மக்களிட மிருந்து எதிர்பார்க்கவில்லை என்றே தோன்றுகிறது. அகதி முகாம்களில் வசிக்கும் பல முஸ்லிம்களும் இந்த விஷயத்தில் தலித் - ஆதிவாசி மக்கள் மீது விமர்சனம் வைப்பதில் காட்டும் தயக்கத்திலிருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும். 'இவர்கள் வி.இ.ப, பஜ்ரங் தள் ஆசாமிகளால் தவறாக வழி நடத்தப்பட்டவர்கள்' என்றே கூறுகிறார்கள். 'எதையும் கொள்ளை யடிக்கலாம்' என்று TVயைக் காண்பித்து, கொள்ளையடிக்க அரசாங்க உத்தரவு இருப்பதாகச் சொல்லி ஈடுபடுத்தியதாகக் கூறுகிறார்கள்.

எப்படி இருந்தாலும் அ. மார்க்ஸ் போன்று பலர் பேசி வரும் முஸ்லிம், தலித், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒற்றுமைக்கான சாத்தியங்கள் பற்றிப் பல ஐயங்கள் எழுகின்றன. இந்துத்துவச் சக்திகள் செய்து வரும் மொள்ளமாறித் தனங்களை விட பகுஜன் சமாஜ் கட்சி குஜராத் நிகழ்ச்சிகளின் உச்சக் கட்டத்தின்போது பேசி அமைத்துக் கொண்ட பா.ஜ.கவுடனான கூட்டணி ஆட்சி தலித் - முஸ்லிம் ஒற்றுமையை மேலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இந்த விஷயத்தில் முஸ்லிம் அறிவு ஜீவிகள் பற்றிக் குற்றம் சொல்லப் பல விஷயங்கள் உள்ளன. தொடக்கத்தில் இருந்தே தலித் இயக்கங்கள் முஸ்லிம்களிடத்தில் காட்டி வரும் பரிவுக்கு முஸ்லிம் இயக்கங்களிடமிருந்து உரிய முறையில் எதிர்க்கரம் நீளவில்லை. எந்த முஸ்லிம் இயக்கங்களும் தலித்துகளுடன், ஆதிவாசிகளுடன் வேலை செய்த வரலாறு கிடையாது. வரலாற்றிலும் கூட முஸ்லிம் ஆட்சியாளர்களும் அறிவு ஜீவிகளும் சாதி பற்றிய தங்கள் அக்கறைகளை வெளிப்படுத்தாமல் (சூஃபி இஸ்லாத்தைத் தவிர) அதை ஓர் இந்து மதத்தின் தன்மையாக நினைத்துக் கவலையற்று இருந்தனர். அம்பேத்கரின் போராட்டத்திற்கும் முஸ்லிம்களிடையே பெரிய ஆதரவு இருந்ததில்லை. மண்டல் கமிஷன் பிரச்சினை பெரிதாகி நாடே இரண்டாகப் பிளவுபட்டபோதும் முஸ்லிம் அறிவு ஜீவிகள் இந்த விஷயத்தில் தெளிவான நிலையை எடுக்கவில்லை என்பதே உண்மை. தீண்டாமை பற்றி, சாதி பற்றி இஸ்லாமியப் புரிதலை அவர்கள் வெளிப்படுத்தவில்லை.

தலித்துகளிடம் வேலை செய்த கிறிஸ்தவ சபைகளிடமும் பாதிரிமார்களிடமும் முஸ்லிம் இயக்கங்கள், அறிவு ஜீவிகள் கற்றுக் கொள்ள நிறைய விஷயமிருக்கின்றன. குஜராத்தில் பழைய பா.ஜ.க ஆட்சியில் கிறிஸ்தவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் தலித் - ஆதிவாசிகளின் பங்கு இல்லாததற்கான காரணங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வகையில் தலித், ஆதிவாசி, பிற்படுத்தப்பட்ட மக்களைத் தங்களுக்கு ஆதரவாக இழுக்கும் பொறுப்பு முஸ்லிம் இயக்கங்களிடமும் அறிவு ஜீவிகளிடமும் இருக்கிறது. இதைச் செய்யாத வரையில் இந்துத்துவச் சக்திகளின் திசை திருப்பும் விருப்பக் கனவான தலித்×முஸ்லிம் முரண்பட்ட நிலையே தொடரும்.

○

குஜராத் தாக்குதல்கள் தொடங்கிய பிறகு உலக நாடுகளிலிருந்து எதிர்ப்போ கண்டனமோ தோன்ற வெகுநாட்கள் பிடித்தன. அமெரிக்காவின் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' தொடங்கிய பின்பு முஸ்லிம்கள் மீது வெறுப்பு பாராட்டுவது என்பது 'லெஜிடிமைஸ்' செய்யப்பட்ட விஷயமாக மாறியதே இதற்கு முக்கியக் காரணம். இன்றைய அமெரிக்கத் தாக்குதல் தெளிவான இஸ்லாமிய எதிர்ப்பை உள்ளடக்கியது. உலகின் அதிஜனநாயக நாடென்று பீற்றிக் கொள்ளும் அமெரிக்கா, தனது (எண்ணெய் முதலியவற்றை முன்னிட்ட) சுயநலக் காரணங்களினால் மிகவும் திட்டமிட்ட முறையில் பல நாடுகளில் தனக்கு ஆதரவான சர்வாதிகார அரசாங்கங்களைக் கொண்டு அங்கே தோன்றக் கூடிய எல்லா வகை ஜனநாயக இயக்கங்களையும் அடக்கி, அழித்துவரும் அணுகுமுறையைப் பல காலமாய்க் கையாண்டு வருகிறது. அமெரிக்காவின் விசுவாச அரசாங்கங்களைக் கொண்டநாடுகளான இஸ்ரேல், எகிப்து, சவுதி அரேபியா, பாகிஸ்தான் போன்றவை தங்கள் நாடுகளில் தோன்றக்கூடிய

அனைத்து ஏகாதிபத்திய உணர்வுகளையும் கொன்றொழித்து வருகின்றன. மதச்சார்பற்ற, ஜனநாயகத்திற்கு ஆதரவான, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெகுமக்கள் எதிர்ப்பு தோன்றி வளர இடமில்லாத இந்த வகைச் சமூக அரசியல் அமைப்பில், இஸ்லாமிய அடிப்படைவாதிகளிடமிருந்தே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கான எதிர்ப்பு தோன்றுகிறது. இந்த நிலையில் அமெரிக்கா தனது பிரம்மாண்ட ஊடகங்கள் மூலம் உருவாக்கியுள்ள, இஸ்லாத்தை பயங்கரவாதத்துடன் அடையாளம் காணும் கோட்பாடு இன்றைய சூழலில் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இந்தச் சாதகமான விஷயம் இந்துத்துவச் சக்திகளுக்கு முஸ்லிம்கள் மீதான தாக்குதலை நியாயப்படுத்திக் கொள்ளும் அங்கீகாரத்தைக் கொடுத்துள்ளது. பாலஸ்தீனத்தில் எந்த வகையான கொடூரத் தாக்குதல்களை நடத்தவும் உரிமை உள்ளதாக இஸ்ரேல் மக்கள் அங்கீகாரம் பெற்றுள்ளது போல், இந்திய பா.ஜ.க அரசு 'பொடா' போன்ற பயங்கரவாதச் சட்டங்களையும் இஸ்லாமிய இயக்கங்களைத் தடை செய்வதையும் வெகுஜன அங்கீகாரத்துடன் செய்து வருகிறது.

'அடிப்படைவாதமும் மத வலதுசாரிவாதமும் உலகமயமாதலுடன், தனியார்மயமாதலுடன் நேரடித் தொடர்புடையன' என்கிறார் ராய். இந்தியா தனது எல்லாத் துறைகளிலும் முன் எப்போதும் இல்லாத அளவு வெளிநாட்டு முதலீட்டை அனுமதிக்கும்போதும் அரசியல் சூழ்நிலை சூடாகும் போதும் ராமர் கோவில் பிரச்சினையும் சூடுபிடிப்பதைக் கவனிக்க வேண்டும்.

பா.ஜ.க பற்றிய ஊழலற்ற பிம்பம் என்றோ கலைந்தாகிவிட்டது. பா.ஜ.கவின் மாநில அரசுகள் அனைத்தும் ஊழலில் ஊறிப்போனவை. மத்திய வாஜ்பேய் தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி அரசு பற்றி நம்பிக்கை ஊட்டி வந்தார்கள். அடுக்கடுக்கான ஊழல் குற்றச்சாட்டினால் அந்த நம்பிக்கையும் பறிபோய்விட்டது. காங்கிரசிலிருந்து ஊழல் விஷயத்தில் வேறுபடுத்திக் காட்ட முடியாத கட்சியாக பா.ஜ.க பற்றிய பிம்பம் மாறிவிட்டது. இந்நிலையில் அது தேசிய வெறியை முன்வைத்து மக்களாதரவைப் பெறும் எண்ணத்தில் உள்ளது. இதை எந்தத் தூண்டுதலும் இல்லாத நிலையில், அணுகுண்டு வெடித்துத் தொடங்கி வைத்தது. வரிசையாக ஒவ்வொரு தேர்தலிலும் பா.ஜ.க தோல்வியுற்றாலும், 'பாகிஸ்தானுடனான போர்' பற்றிய சொல்லாடல்களை முன் வைத்து வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளும் நம்பிக்கையில் உள்ளது. அப்துல் கலாம் ஜனாதிபதியாவதற்கு இருந்த எல்லாக் கட்சிகளின் பேராதரவைப் பார்க்கையில் பா.ஜ.கவின் கனவு நிறைவேறும் போலத்தான் தெரிகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை இன்னும் 50 வருடங்களில்கூட குஜராத் போன்ற நிலைமையை இந்துத்துவச் சக்திகளால் தோற்றுவிக்க முடியாது என்று தைரியமாய்ச் சொல்லலாம். இதற்கு வேறு பல. காரணங்கள்

இருந்தாலும், முதன்மையான காரணம் பெரியார் இயக்கத்தின் பாதிப்பு. காந்தி பிறந்து, காந்தியத்தின் பாதிப்பு அதிகமுள்ள மாநிலமான குஜராத் இன்று மிக எளிதாக காந்தியத்திலிருந்து, காந்தியைக் கொன்றவர்களின் கருத்துருவத்திற்குச் சென்று விட்டது. எத்தனையோ திரித்தல்கள், அவதூறுகள் பெரியார் இயக்கத்தைப் பற்றி நடந்திருந்தாலும், இருக்கும் எல்லா வழிகளிலும் பல காலமாய் இந்துத்துவச் சக்திகள் முயன்று வந்தும் தமிழகத்தில்தான் இந்துத்துவத்தின் பலம் குறைவாக உள்ளது. கேரளத்திலும் மேற்கு வங்காளத்திலும் கூட குறிப்பிடத்தகுந்த அரசியல் வெளியைக் கைப்பற்றியுள்ளனர். தமிழகத்தில்தான் இவர்களின் கனவு இன்னும் நிறைவேறவில்லை.

பெரியார் இயக்கத்தால் தலித் மலம் தின்ன வைக்கப்படுவதைத் தடுக்க முடியவில்லை, நடக்கும் 'சாதி மோதல்களை'த் தவிர்க்க முடியவில்லை, என்றாலும் இந்த விஷயம் மொத்த திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் சாதனை.

ஆனால் இதில் உண்மையில் தமிழகத்திற்கு எந்தப் பெருமையும் இல்லை. குஜராத் போன்று மாறவில்லை என்று கோயம்புத்தூர் நிகழ்ச்சிகள் பற்றிப் பெருமை கொள்ள முடியுமா?

இந்தியாவின் மற்ற மாநிலங்களைப் போலவே தமிழகத்தில் முஸ்லிம்களை மற்றதாய் பார்க்கும் பார்வை உண்டு. இருந்தாலும் திராவிட இயக்கங்களின் நீண்டகால பாதிப்பால் முஸ்லிம்களின் தனித்துவத்தை ஒப்புக்கொள்ளும் மனப்பான்மை தமிழகத்தில் இருந்து வந்தது. பல கிராமங்களில் இஸ்லாம் ஒரு சாதி போலவே கருதப்பட்டு வந்திருக்கிறது. (அதாவது ஒரு சாதி, சமநிலையில் உள்ள மற்றொரு சாதியைச் சகித்துக் கொள்வது போல்.) தொண்ணூறுகளில் இந்துத்துவச் சக்திகள் பலம் பெறத் தொடங்கிய பின் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு இஸ்லாத்தை எதிரான உணர்வுடன் மற்றதாகப் பார்க்கும் தன்மை பரவியுள்ளது.

'இது பெரியாரின் பூமி, இங்கு குஜராத் போன்று எதுவும் நிகழாது' என்ற அசட்டு நம்பிக்கை பலரிடம் உள்ளது. இந்துப் பாசிசம் இன்னும் தமிழ் மக்களின் உணர்வுகளை ஆட்டிப் படைக்காததற்கு பெரியார் மற்றும் மொத்த திராவிட இயக்கத்தின் பாதிப்பு ஒரு முக்கிய காரணமாகும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனாலும் கோயம்புத்தூர் வெடிகுண்டு நிகழ்ச்சிக்குப் பிறகு இந்துத்துவத்திற்கு சார்பான ஒரு மனமாற்றம் வெகுஜன தளத்தில் ஏற்பட்டுள்ளது. இந்துத்துவத்தின் அழைப்பிற்கு இன்று தமிழ் வெகுஜன உணர்வு செவி சாய்க்கத் தொடங்கியுள்ளது.

பா.ஜ.கவிற்கு இன்று தமிழக அரசியலில் ஒரு மறுக்க முடியாத இடம் உள்ளது. தமிழகத்தில் மட்டுமே மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத ஓர் அவல நிலையைக் காண முடியும். இருக்கும் எல்லாக் கட்சிகளும் பா.ஜ.க தன்னை வளர்த்துக் கொள்ளவும் பிரச்சினைகளின்போது காத்துக் கொள்ளவும் உதவி செய்து வருகின்றன.

எல்லாத் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கும் தங்கள் அதிகார அரசியல் நலத்தை விட முக்கியமான விஷயம் என்ற ஒன்று இல்லையென்றாலும், குஜராத்தில் நடந்த பயங்கரத்தின் அளவு இவர்களின் நிலையில் சிறு மாற்றத்தைக்கூட ஏற்படுத்தாத விஷயம், இந்தத் தேர்தல் ஜனநாயகத்தில் சாத்தியமாகக் கூடியவை பற்றிய சின்னச் சின்ன நம்பிக்கைகளையும் அழித்து விட்டிருக்கிறது. தேர்தல் ஜனநாயகத்தில் தவறான காரணங்களினால் சில நல்ல விஷயங்கள் நடப்பதுண்டு. இடஒதுக்கீட்டை அந்த வகையில் சேர்க்கலாம்.

பா.ஜ.கவுடன் வைத்துக் கொண்ட கூட்டணிக்கு எல்லாக் கட்சிகளுக்கும் அரசியல் காரணங்கள் இருக்கலாம். பகுஜன் சமாஜ் கட்சி கடந்த காலங் களில் வைத்துக்கொண்ட கூட்டணிக்கு எத்தனையோ சமாதானங்கள் சொல்ல முடியும். ஒரு வகையில் தேர்தல் அரசியலுக்குத் தேவையான சந்தர்ப்பவாதத்தைத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டது. இந்த முறை பா.ஜ.கவுடன் ஆட்சி அமைத்த முறை, அதற்குக் கொடுத்த விலை, இருந்த கொஞ்ச நம்பிக்கைகளையும் கொன்றொழித்து விட்டது. அம்பேத்கர் வாதிகள் வெகுகாலத்திற்கு, குஜராத் இன அழிப்பு பற்றிய மௌனத்திற்குப் பரிசாகக் கிடைத்த தலித் ஆட்சி பற்றி நெளிந்து கொண்டிருக்க வேண்டும்.

அதைவிட மோசமான மனநிலைக்குப் பெரியார்வாதிகள் என்றோ சென்றாகி விட்டது. பெரியாரை 'ட்ரேட் மார்க்'காகக் கொண்ட அனைத்து திராவிடக் கட்சிகளின் பஜனைச் சத்தத்தில் அவர்கள் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருக்கின்றனர். பா.ஜ.க எதிர்ப்புத் தெரிவிக்காத ஒரே காரணத்தினாலேயே தி.மு.க இன்னும் பெரியார் படத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. தான் எழுதிய வசனங்களையும் முழங்கிய மேடைப் பேச்சுகளையும் மறந்த கருணாநிதி இது 'வேறு மாநிலத்துப் பிரச்சினை' என்று நழுவுகிறார். சந்திரபாபு நாயுடுவும் மமதா பானர்ஜியும் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் சுயநலத்திற்காக எழுப்பும் எதிர்ப்பைக்கூட தி.மு.க செய்வதில்லை.

பல வருடங்களாய் முயன்று பார்த்தும் தங்களது இருப்பைக்கூட உணர்த்த முடியாத நிலையில் இருந்த இந்துத்துவச் சக்திகளுக்கு 1992இல் தொடங்கிய ஜெயலலிதாவின் ஆட்சி பெருவாய்ப்பாக அமைந்தது. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஆட்சி, அரசாங்க நிறுவனங்கள் ஜெயலலிதாவின் ஆட்சியில் சமஸ்கிருதமயமாக்கப்பட்டன. 'என்ன சொன்னாலும் நடப்பது நமது ஆட்சி' என்று பிராமண சங்கம் வெளிப்படையாய் அறிவித்தது. ஒருபக்கம் வீரமணியின் ஆதரவு, இன்னொரு பக்கம் ராமகோபாலனின் ஆதரவு என்றிருந்த ஆட்சியில்

முன்னெப்போதும் இல்லாத அளவில் இந்துத்துவச் சக்திகள் பலம் பெற்றன. இதன் எதிர்வினையாகத் தோன்றிய இஸ்லாமிய இயக்கங்கள், ஆர்.எஸ்.எஸ் அலுவலக வெடிகுண்டு நிகழ்ச்சி போன்றவற்றை முன்வைத்து முஸ்லிம்கள் மீதான அடக்குமுறையும் (செக் போஸ்ட் வைத்துக் கண்காணிப்பது போன்ற) தனிமைப்படுத்துதலும் கடந்த அ.தி.மு.க ஆட்சியில் நடந்தன.

ஏற்கனவே இந்துத்துவப்படுத்தப்பட்டிருந்த காவல்துறை, இந்துக் கட்சி ரவுடிகளுடன் இணைந்து முஸ்லிம்கள் மீது கோயம்புத்தூரில் தாக்குதல் நடத்தியது. குஜராத்தில் நடந்தது போன்றே ஒரு குறிப்பிட்ட எதேச்சையான சம்பவமான ஒரு கான்ஸ்டபிள் கொலையைச் சாக்காக வைத்து அந்த வெறியாட்டம் நடத்தப்பட்டது. குஜராத் போன்றே வறுமையில் உள்ள அருந்ததியினரை முஸ்லிம் சொத்துக்களைக் கொள்ளையடிக்கத் தூண்டி விட்டது. இதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக நிகழ்த்தப்பட்ட கோயம் புத்தூர் வெடிகுண்டு நிகழ்ச்சியே முதன்முறையாக தமிழகத்தின் வெகுஜன உணர்வை இந்துத்துவத்தின் பக்கம் முழுவதும் திருப்பியது. தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளவும், வெகுஜன உணர்விற்குச் செவி சாய்த்தும் தி.மு.க அரசு முஸ்லிம்கள் மீது அடக்குமுறையைத் தொடர்ந்தது.

இந்துத்துவம் இன்று தமிழகத்தில் அடைந்திருக்கும் வளர்ச்சிக்குப் புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற தலித் கட்சிகள் தவிர்த்து, அனைத்துக் கட்சிகளுக்கும் வீரமணி போன்ற பெரியார் சீடர்களுக்கும் பங்கு உண்டு. எனினும் ஜெயலலிதாவின் பங்கு வேறுபட்டது. தி.மு.க தனது அரசியல் லாபங்களுக்காகவும் கருணாநிதியின் குடும்ப நலனை முன்னிட்டும் பா.ஜ.கவுடனான எல்லா வகை சமரசங்களுக்கும் தயாராக உள்ளது. இருந்தாலும் அதன் அடிப்படை நோக்கம் இந்துத்துவம் அல்ல. வெட்கத்துடன் நெளிந்தபடி, சமாதானம் கூறியபடியும் இதைச் செய்கிறது. ஜெயலலிதாவிற்கு இந்தப் பிரச்சினை இல்லை. அடிப்படையிலேயே இந்துத் துவத்திற்கு ஆதரவானவர் அவர். கடந்த தேர்தலில் இந்து முன்னணியும் பிராமண சங்கமும் அ.தி.மு.கவிற்கு ஆதரவாகச் சுற்றறிக்கைகள் அனுப்பியது. அசோக் சிங்கலைச் சந்திக்க வெட்கப்பட்டு கருணாநிதி தவிர்க்க, ஜெயலலிதா பெருமையுடன் சந்தித்து உறவாடினார். அசோக் சிங்கலும் (ராமர் கோவில் உட்பட) தங்களுக்கான ஜெயலலிதாவின் ஆதரவை வெளிப்படையாய் அறிவித்தார். தி.மு.கவிற்கும், அ.தி.மு.க விற்கும் உள்ள இந்த அடிப்படை வேறுபாட்டைக் கணக்கில் கொள்ளாமல் இருக்க முடியாது. இது புரியாமல் 'பெண்ணியம்' என்று ஏதோ காரணம் சொல்லித் தலித்தியம், பின்நவீனத்துவம் என்றெல்லாம் பேசும் சிலர் ஜெயலலிதாவிற்கு ஆதரவாகப் பேசுவது வினோதமானது.

இன்று இந்துத்துவச் சக்திகள் தமிழகத்தின் எல்லாவகை அரசியலிலும் ஊடகத்திலும் தக்க வைத்திருக்கும் இடம் மறுக்க முடியாதது. இதற்கு ஒரு

விதத்தில் இந்துத்துவத்திற்கு எதிரானவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அனைவரும் (முஸ்லிம் இயக்கங்கள் உட்பட) காரணம். கோயம்புத்தூர் வெடிகுண்டு நிகழ்ச்சி ஒரு தேர்தல் முடிவு மற்றும் தமிழக மக்களின் உணர்வைத் தலைதிருப்பிப் போட்டது. மற்ற மதச்சார்பின்மை பேசுபவர் களின் செயலின்மை இந்துத்துவம் வளர வழி வகுத்திருக்கிறது. இவர் களுக்கு இத்தகைய இடமளித்ததற்காக மதச்சார்பின்மை, ஜனநாயகம் இன்ன பிற விஷயங்கள் பேசும் அனைவரும் தமது அணுகுமுறைகளைப் பற்றி முழுவதும் பரிசீலிக்க வேண்டிய அவசியமுள்ளது.

தமிழகத்தில் ஒரு பாப்புலர் கலாச்சாரம் இருப்பதால் பாசிசம் வெற்றி பெற முடியாது என்ற கருத்து சிலரிடம் உள்ளது. இதில் ஓரளவு உண்மை இருப்பதாகவே நானும் நினைக்கிறேன். தமிழகத்தில் மட்டுமில்லாது இந்தியாவில் கூட ஆர்.எஸ்.எஸ்சின் இலட்சியக் கனவான (நாஜிக்கள் நடத்தியது போன்ற) ஒற்றை ஆட்சிமுறை சாத்தியமற்ற ஒன்றாகவே தெரிகிறது. இதற்காக 'ஜனநாயகத்தை' வளைத்து, நெளித்து, உருக்கி குஜராத் போன்றும் கோயம்புத்தூர் போன்றும் நடப்பதில் என்ன சமாதானம் அடைய முடியும்?

இன்றைய வெகுஜன உணர்வை பாசிசத்திற்கு இட்டுச் செல்வது மிகவும் கடினமான விஷயம் இல்லை. ஏனென்றால் இந்துப் பாசிசம் வெறும் இனவெறியோடு மட்டும் தொடர்புடைய விஷயமில்லை. இது மதத்துடன் மதத்தின் கொலைகாரக் கடவுளுடன் தொடர்புடைய விஷயம்.

ஒரு பாப்புலர் தலைவராக கடைசிவரை வாழ்ந்த பெரியார் நடத்தியது போன்ற கடவுள் மறுப்பு இயக்கத்திற்கு இன்று எந்த வெகுஜனக் கவர்ச்சியும் இருக்க வாய்ப்பில்லை. இன்று ரஜினியின் 'ஆத்திகத்திற்கே' அதிகக் கவர்ச்சியுள்ளது. இதைப் பாசிசம் என்று அழைக்க முடியா தென்றாலும், இதை இந்துப் பாசிசம் பயன்படுத்திக் கொள்வது கடினமான காரியம் இல்லை. அதனால்தான் பா.ஜ.கவை மகிழ்விக்கும் ஜெயலலிதா எடுக்கும் (கோவில்களில் அன்னதானம், உபன்யாசம் போன்ற) நடவடிக்கை களுக்கான எதிர்ப்பிற்கு எந்த வெகுஜன ஆதரவும் இல்லை.

இந்தக் காலகட்டத்தில் மதச்சார்பின்மை, இந்துத்துவ எதிர்ப்பு பேசும் அனைவரும் செய்யக் கூடிய ஒரே காரியம் எல்லாத் தளங்களிலும் களங்களிலும் எல்லா வகை இந்துத்துவ அரசியலிற்கும் இடைவிடாத எதிர்வினை செய்து கொண்டிருப்பதே. அவர்கள் உருவாக்கும் தர்க்கங்களை அவர்கள் பாணியில் மறுப்பதே இப்போதைக்குச் செய்யக் கூடிய விஷயம்.

ஒரு விதத்தில் 11, செப்டம்பர் 2001க்குப் பிறகு உலகம் முன்பு போல் இல்லைதான். இஸ்லாத்தை வெறுப்பது என்பது இன்று ஒரு நாகரீகமாக மாறிவிட்டது. இந்திய நடுத்தர வர்க்கத்திடம் (ஒடுக்கப்பட்ட வர்க்கத் தினரிடமும் வளர்க்கப்பட்டு வரும்) இஸ்லாத்திற்கு எதிரான அசாதாரண

வெறுப்புணர்வுக்கு ஒரு காரணம்தான் உள்ளது. அது பின் லேடன் காரணமாகவோ பாகிஸ்தான் காரணமாகவோ இஸ்லாத்தில் இருக்கும் அடிப்படைவாதம் காரணமாகவோ இஸ்லாம் பெண்களை நடத்தும் முறை காரணமாகவோ அல்லது முஸ்லிம்களிடையே இருக்கும் கையளவு கிராக்குகளினாலேயோ எழுந்தது இல்லை. அதற்கான காரணம் முஸ்லிம்கள் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வித்தியாசமானவர்களாக இருப்பதுவும் தாங்கள் வித்தியாசமாய் இருப்பதில் முஸ்லிம்கள் பிடிவாதமாய் இருப்பதுவும், தேசியம் போன்று மற்றவர்கள் கட்டமைக்கும் கருத்துருவங்களுக்குள் தங்கள் வித்தியாசத்தை ஐக்கியமாக்கிக் கொள்ள மறுப்பதுவும் மட்டுமே. இதன் காரணமாகவே இந்து மதத்தின் மிகப்பெரிய சகிப்புத் தன்மை பற்றிப் பேசுபவர்கள் இஸ்லாமிய எதிர்ப்பிற்கு ஆதரவாக எழுதியும் நியாயப்படுத்தியும் வருகின்றனர். இல்லையென்றால் குஜராத்தில் நிவாரண முகாம்களிலிருந்து முஸ்லிம்கள் திரும்பி வருவதற்கு தாடி, குல்லா போன்ற அடையாளங்களைத் துறக்க வேண்டும் என்று சாதாரண குடிமக்கள் ஏன் நிபந்தனை விதிக்க வேண்டும்?

ஸெகுலரிஸம் பேசுபவர்கள் செய்து வரும் ஒரே பாவம் இவ்வாறு வித்தியாசமாய் இருப்பதற்கு முஸ்லிம்களுக்குள்ள உரிமையை வலியுறுத்துவது மட்டுமே. இந்த ஒரே காரணத்திற்காகவே இவர்கள் 'போலி மதச்சார்பின்மை பேசுபவர்களாகவும் பாகிஸ்தான் ஏஜெண்டுகளாகவும் அழைக்கப்படுகின்றனர்.'

பின்குறிப்புகளாக

1. குஜராத் இன அழிப்பின்போது விஸ்வ இந்து பரிஷத் அதிகாரபூர்வமாய் வெளியிட்டு விநியோகித்த அறிக்கையிலிருந்து...

'சத்யம், சிவம், சுந்தரம்! ஜெய் ஸ்ரீராம்! விழித்தெழுங்கள்! எண்ணிச் செயல்படுங்கள்! நம் தேசத்தையும் மதத்தையும் காப்பாற்றுங்கள்!

பொருளாதார ரீதியான பகிஷ்கரிப்பே சரியான விடை. ஹிந்துக்களிடமிருந்து சம்பாதித்த பணத்தைக் கொண்டே தேசத்துரோகிகள் நம்மை அழிக்கிறார்கள்; ஆயுதம் வாங்குகிறார்கள். நமது சகோதரிகளையும் புத்ரிகளையும் களங்கப்படுத்துகிறார்கள். இவர்களின் முதுகெலும்பை முறிக்க ஒரே வழி பொருளாதாரப் பகிஷ்கரிப்பு. நாம் முடிவெடுப்போம்.

இன்றிலிருந்து முஸ்லிம் கடைகளில் எதுவும் வாங்க மாட்டேன். எதையும் அவர்களுக்கு விற்கவும் மாட்டேன். இவர்களின் ஹோட்டல்களில் போஜனம் செய்ய மாட்டேன். ஊசியிலிருந்து தங்கம் வரை முஸ்லிமால் விற்கப்படும் எதையும் நான் வாங்க மாட்டேன். முஸ்லிம் கதாநாயக, கதாநாயகிகள் நடித்த படங்களைப் பார்க்க மாட்டேன்; தேசத்துரோகிகள் இயக்கிய படங்களைப் பகிஷ்கரிப்பேன். அவர்களிடம் வேலை பார்க்க மாட்டேன்; அவர்களை வேலைக்கு

அமர்த்தவும் மாட்டேன். எங்கள் காலனியில், தெருவில், சமூகத்தில் அவர்களைக் குடியிருக்க அனுமதிக்க மாட்டோம். ஹிந்து நாட்டைக் காப்பவனுக்காக நாம் ஓட்டளிப்போம். நமது சகோதரிகளும் புத்ரிகளும் இவர்களின் காதல் வலையில் விழாத வண்ணம் கவனமாய்க் கண் காணிப்போம்.

இந்தப் பகிஷ்கரிப்பு இந்தச் சக்திகளின் குரல்வளையை நெரிக்கும். முதுகெலும்பை உடைக்கும். இந்த நாட்டின் எந்த மூலையிலும் அவர்களாலே ஜீவனம் செய்ய இயலாதுபோகும். படித்து விட்டீர்களா? உடனே 10 காப்பி எடுங்கள். நமது மற்ற சகோதரர்களுக்கு விநியோகியுங்கள். இதைச் செய்யாதவன் ஹனுமன்ஜீயின் கோபத்துக்கு உள்ளாகட்டும். ஸ்ரீராமச்சந்ரஜீயின் சாபத்துக்கு ஆளாகட்டும். ஜெய் ஸ்ரீராம்!'

2. ஷா ஆலம் அகதி முகாமிற்கு நிர்வாணமாய் ஓடி வந்த நஜ்மா அயூப் குரோஷி என்ற பெண் கூறுகையில் 'என் மீது ஆசிட் ஊற்றப்பட்டது. என் உடல் எரிந்து கொண்டிருக்கையில் ஒருவன் என் வாயில் மூத்திரம் பெய்தான். என் உடைகள் சதையுடன் ஒட்டிக் கொண்டிருந்தது. தாங்க முடியாத எரியும் உணர்வால் உடைகளைக் கிழித்து எறிந்தேன். சதைகளும் கூட வந்தது. என் குழந்தைகளை என் கண் எதிரிலேயே எரித்துக் கொன்றார்கள்.'

யாழ்ப்பாணத்துச் சாதியம்: காலனித்துவ சமரசம்

——————————————————மு. நித்தியானந்தன்

'மப்பின்றி காலமழை
காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய்
முளையாது;
ஏர் ஏறாது; காளை இழுக்காது;
எனினுமந்தப்
பாறை பிளந்து
பயன் விளைப்போன் என்னூரான்'

என்று மஹாகவி பாறை பிளந்து பயன் விளைவிக்கும் யாழ்ப்பாணத்து விவசாயியை வியந்து கவிதை வடித்தது உண்மைதான். ஆனால் கடும் பாறையைவிட யாழ் மண்ணில் இறுகி வேரோடிப்போன சாதிய உணர்வினை, பல நூற்றாண்டுகளாகத் தொடர்ச்சியாக ஆட்சி நடத்திய ஐரோப்பிய அரசுகளாலும்கூட அசைக்க முடியவில்லை. மாறாக யாழ்ப்பாணச் சமூகத்தில் மேலாண்மை செலுத்திய சாதியினர் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியைப் பயன்படுத்தி மேலும் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதைச் சரித்திரம் சொல்கிறது.

பிரித்தானியப் பேரரசின் இலங்கையின் முதல் ஆளுநராகப் பதவியேற்ற பிரெடரிக் நோர்த், யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிய அமைப்பினைத் தங்களின் நிர்வாகத்திற்கு வசதியானதெனக் கருதி சாதிய அமைப்பினை அனுசரித்துச் செல்லும் போக்கினைக் காண்கிறோம். யாழ்ப்பாணத்தின் கிராமியமட்ட சமூகத் தலைமைத்துவம் சாதி வெள்ளாளரின் கைகளி லேயே இருந்தது. யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய சாதி அமைப்பினை ஆதார மாகக் கொண்டுதான் இப்பிரதேசத்தின் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளும் சமூக உற்பத்தி உறவுகளும் அமைந்தன. சாதி, சமூக அமைப்பின் மேற்கட்டுமானமாக அல்ல, அதுவே அடித்தளமாகவும் செயற்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தின் பொருளாதார சமூகத்தளம் சாதியினால் வடிவமைக்கப்பட்டு, வெள்ளாள மேலாண்மையால் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கிறது. உயர்குடிப் பிறப்பும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் இழிவுபடுத்தப்படுதலும் யாழ் மண்ணில் தோய்ந்து போனவை. யாழ்ப்பாணத்தின் அரும்பெரும் சுதந்திர வீரனாக போற்றப்படும் சங்கிலி தனக்கேற்பட்ட 'வைப்பாட்டி மகன்' என்ற இழிவினை நீக்க, தன் மூத்த சகோதரர்களை அழித்துத்தான் அரச கட்டிலேறுகிறான். இந்தச் சாதியப் பெருமைகளும் இழிவுகளும் பிரித்தானியராட்சியிலும் தொடர்ந்தன.

1806ஆம் ஆண்டு அரசு நிறைவேற்றிய 10வது இலக்க கட்டளைச் சட்டம் உயர்சாதியினருக்கு வழங்கப்பட வேண்டிய மரியாதைகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்பதைச் சட்டபூர்வமாக அறிக்கையிட்டது. பிரிட்டிஷ் ஆட்சி அதன் ஆரம்பக் கட்டத்திலேயே சாதி அமைப்புப் பாரம்பரியத்தை வலியுறுத்திப் பேண முயன்றிருப்பதை இது குறித்து நிற்கிறது.

அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடந்த நாடுகளிடையே அறிவியக்க ஒளி பாய்ச்ச வந்ததாகக் கூறும் ஆங்கிலேய அரசு வலியுறுத்திய சமூக ஒழுங்கு, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு மற்றும் நீதி போன்ற அம்சங்களும் யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிய அமைப்பு, பழமையான சமூக ஒழுங்கு முறைமை, சமூகத்தின் மீதான அதிகாரக் கட்டமைப்பு, சமூக ஸ்திரப்பாடு என்பனவற்றுக்கும் இடையில் முரண்பாடுகள் எழுந்த போது இவர்களால் சமூக நீதியின்பேரில் தீர்க்கமான நிலைப்பாட்டினை எடுத்துக் கொள்ள முடியவில்லை.

யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பின் தளத்திலிருந்து சிக்கல்கள் தோன்றியபோதெல்லாம் சமூகநீதியின் அடிப்படையில் அல்லாமல் சமூகத்தில் நிலவும் 'அமைதிக்கு'க் குந்தகம் ஏற்படாத வகையில் யாழ்ப்பாணத்தில் வேரூன்றி நின்ற பழைய அதிகாரப்படி முறையைத் தக்க வைத்துக் கொள்ளுதலே உகந்தது என்ற ரீதியிலேயே ஆங்கிலேயரின் கொள்கை உருவாக்கம் அமைந்தது.

குடியேற்ற நாட்டுச் செயலாளரும் வரலாற்றாசிரியருமான எமர்சன் டெனன்ட் (Emerson Tennent) யாழ்ப்பாணச் சாதியமைப்பின் கொடூரத்தைப் பார்த்துத் திகைத்துப் போனார் என்றாலும் அரசின் கடந்தகால அநுபவங்களைக் கொண்டு பார்க்கின்றபொழுது சாதியமைப்பின் மீது நேரடியாகத் தலையிடுவதைத் தவிர்த்துக் கொள்வதே உசிதமானது என்று கருதினார். ஆங்கிலேய அரசு கைக்கொண்ட தலையிடாக் கொள்கையை யாழ்ப்பாணத்தின் சாதியமைப்பைப் பொறுத்தும் உறுதியாகக் கடைப்பிடிப்பது அவர்களுக்கு வசதியாயிற்று. இந்தச் சாதியமைப்பின் கோரத் தாண்டவத்தைக் காலம்தான் மாற்றியமைக்கும் என்றும் பகுத்தறிவு படிப்படியாக வளரும்போது இது தணிந்து போகும் என்றும் டெனன்ட் எழுதினார்.

நிலமானிய அமைப்பில் போல அரசுக்கு நேரடியாக சரீர ஊழியம் போன்ற கடமைப்பாடுகளை தாழ்த்தப்பட்ட சாதியினர் செலுத்தத் தேவையில்லை என்று 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய அரசு கொணர்ந்த சட்டம் குறிப்பிடத்தக்கது. எனினும் சாதியமைப்பின் வேரோட்டத்தை அதனால் எதுவும் செய்ய முடியவில்லை. யாழ்ப்பாணத்தின் முதல் ஆங்கிலேய கலெக்டராகவும் பின் அரசாங்க அதிபராகவும் கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் வடமாகாணத்தில் பணிபுரிந்த பெர்சிவல் டைக் (Percival Dyke) வகுத்ததுதான் யாழ்ப்பாணத்தில் சட்டமாய் இருந்தது.

யாழ்ப்பாணத்தின் தனிக்காட்டு ராஜாவாக டைக் திகழ்ந்தார். கொழும்பி லிருந்து பிரிட்டிஷ் நிர்வாகத்தின் தொலைதூர எல்லையில் தனது ராஜாங்கத்தை எந்தத் தடையுமின்றி நடத்தி வந்தார். கடுமையான கண்டிப்பு மிக்க பெர்சிவல் டைக், தன் காலத்திலும் யாழ் சாதியமைப்பிலிருந்து எழுந்த பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

1830இல் நளவர் சமூகத்தைச் சேர்ந்த இளம் பெண் காதிலே தோடு அணிந்ததை வெள்ளாளர்கள் எதிர்த்தனர். கிராமியத் தலைமைப்பீடம் வெள்ளாளர் கைகளிலே இருந்ததால் இம்மாதிரி நகை அணிகளை இனிமேல் நளவர்கள் யாரும் அணியக்கூடாதென்று அறிவுறுத்தப் பட்டதோடு, பாரம்பரிய பழக்கவழக்கத்தை மீறியதற்குத் தண்டமும் விதித்தார்கள். சமத்துவத்தைப் போதிக்கும் அரசு, சாதிரீதியான இந்தப் பாரபட்சத்தையும் கொடுமையையும் அனுமதிப்பது சாத்தியமாயிருந்தது. அதே சமயத்தில் இத்தகைய சாதியமைப்பு சார்ந்த நடவடிக்கைகளுக்கு முடிவு காணவும் முயலவில்லை. காதில் காதணிகளை அணிந்த பெண்ணுக்கு வழங்கப்பட்ட தண்டனையை டைக் நீக்கினார். பாரம்பரிய மரபுகளில் தலையிடுவதில் அவதானமாக இருக்க வேண்டும் என்ற ஆட்சி நடத்தும் ஜாக்கிரதை உணர்வில் இது போன்ற பிரச்சினைகளை இனிமேல் ஏற்படுத்த வேண்டாம் என்று தனது கீழ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் கூறியதோடு அமைந்து விட்டார்.

மீண்டும் ஒருமுறை சாதி அடிப்படையிலான பிரச்சினையை டைக் எதிர்கொள்ள நேர்ந்தது. யானை ஏற்றுமதி செய்வதற்கான துறை மேடையை அமைப்பதற்காக பனைமரத்தைக் காவிச் செல்லுமாறு திமிலர் இனத்தவர்களைக் கிராம மணியகாரர் பணித்திருக்கிறார். திமிலர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மணியகாரரின் கட்டளைக்குப் பணிய மறுத்திருக்கிறார்கள். இத்தகைய பொதுப்பணிகளின்போது இவ்வாறு தாழ்த்தப்பட்ட சமூகத்திடமிருந்து சேவைகளைப் பெறுவது பாரம் பரியமாக நடந்து வருவதுதான் என்று மணியகாரர் தெளிவித்தார். திமிலர் இனத்தவர்களின் முறைப்பாடு தம்முன் வந்தபோது அதனைப் பரிசீலனை செய்த டைக், மணியகாரரின் நடவடிக்கை அரசாங்கத்தின் கட்டளையை மீறும் செயலே என்று கருதி பனைமரம் காவிச் சென்றதற்கான கூலியை அவர்களுக்கு மணியகாரர் தனது சொந்தப் பணத்தில் இருந்தே செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டார். யாழ்ப்பாணத்தில் கடமைக்காகத் தான் வெளியிடங்களுக்குப் போகும்போது சாதி அடிப்படையில் தாழ்த்தப் பட்டவர்களின் ஊழியத்தை இலவசமாகப் பெற்றுத் தங்குமிடங்கள் அமைத்தல் மற்றும் ஏனைய பணிகளைச் செய்யும் நடவடிக்கைகளுக்கு டைக் முற்றுப் புள்ளி வைத்தார்.

ஆனால் யாழ்ப்பாணச் சமூகத்தில் வேரோடிப்போன சாதியமைப்பின் அகங்காரம் அவ்வளவு லேசாக அடங்கி விடுவதில்லை. 1831இல் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கு பரம்பரை பரம்பரையாக வழங்கி வந்த

மரியாதைகளையும் கௌரவங்களையும் வழங்குகிறார்களில்லையென்று அப்போது கலெக்டராக இருந்த டைக்கிற்கு பெட்டிசன் அனுப்பி யிருந்தார்கள். சாதி அடிப்படையிலான இந்தக் கோரிக்கையை பெர்சிவல் டைக் கோட்பாட்டளவில் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் அந்த முறைப்பாட்டை அவர் பூரணமாக நிராகரித்து விடவில்லை. நிர்வாகத்தைக் கொண்டுநடத்த சாதி வெள்ளாளர்களின் மணியகாரர் தலைமைத்துவம் அரசுக்கு அவசியமாயிருந்தது. எனவே டைக் இந்த வெள்ளாளத் தலைமை யினரின் முறைப்பாட்டை நேரே கவர்னருக்குத் தெரிவிக்குமாறு உத்தரவிட்டார்.

ஆட்சி நிர்வாகத்தில் தங்களுக்குத் துணையாயிருக்கும் கிராமிய - வெள்ளாளத் தலைமைத்துவம் உரிய மரியாதையோடும் தனித்துவத் தோடும் பேணப்பட வேண்டும் என்பதில் அரசு அக்கறை காட்டி யிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பக்கட்டத்தில் யாழ்ப்பாணத்துக் கச்சேரிகளின் வராந்தாவில் வெள்ளாள மணியகாரர்கள் தரையில்தான் உட்கார்ந்திருக்க வேண்டியதாயிற்று. இது ஏனைய தாழ்த்தப்பட்ட மக்களின் முன் தங்களுக்கு அவமரியாதையானது என்று சாதி வெள்ளாளர்கள் முன் வைத்த கோரிக்கையினை டைக் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு இருக்கைகள் வழங்க அனுமதித்திருக்கிறார்.

பொதுக்கிணறுகளில் எல்லாச் சாதியினரும் தண்ணீர் அள்ளுவதால் கிணறு 'தீட்டுப்பட்டு'த் தாங்கள் அத்தண்ணீரைக் குடிக்க முடியாது என்று வெள்ளாளர்கள் கோரியதை ஏற்று அவர்களது அந்தஸ்தை நிலைநிறுத்த அவர்களுக்கென்று தனியே கிணறு வெட்டிக் கொடுக்கவும் டைக் ஏற்பாடு செய்தார். அரசாங்க ஊழியர்களின் சுய கௌரவத்தை உயர்த்துவது அரசின் தொடர்ந்த ஆசை என்று கூறிய டைக், அவர்கள் விசேஷமாகவும் தனி மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும் என்று கோருவது நியாயம் என்று கருதினார்.

1849 மார்ச் மாதம் பருத்தித் துறையில் புலோலியில் தட்டார் சமூகத்தவர்கள் சாதி வெள்ளாளருக்கு எதிரான முறைப்பாட்டை அரசிடம் கையளித்த போது கவர்னர் இப்பிரச்சினையை விசாரித்து அதனைத் தீர்த்து வைக்குமாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபரான டைக்கைக் கேட்டிருந்த போது அவர் அந்த விசாரணையைச் சாதுரியமாகத் தவிர்த்துக் கொள்ளவே விரும்பினார். சாதியைப் பகிரங்கமாக அங்கீகரிக்கும் நிலையைக் கவனமாகத் தவிர்க்குமாறு விதிக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக் கமைய இந்த முறைப்பாடும் சாதி அடிப்படையில் எழுந்திருந்தால் இதனை விசாரிக்க முற்படுவது அவசியம்தானா என்ற பாணியில் டைக்கின் பதில் அமைந்தது. தட்டார் சமூகத்தவர்கள் தங்களின் மணியகாரரான வெள்ளாளர் தமக்கு அநீதியாக நடப்பதால் தமது சொந்த சாதியிலிருந்தே கிராமத் தலைமைக்காரரைத் தெரிவு செய்யுமாறு கோரியிருந்தனர்.

வண்ணார் மற்றும் முடிதிருத்துவோரிடமிருந்தும் வெள்ளாளருக்கெதிரான முறைப்பாடுகள் அரசாங்க அதிபரிடம் வந்தவண்ணம் இருந்தன.

யாழ்ப்பாணத்தில் சாதிச் சண்டைகள் தொடர்ச்சியாக சகல இடங்களிலும் நடந்து கொண்டிருந்தன. இத்தகைய சந்தர்ப்பங்களில் சமூகநீதி காக்க வேண்டிய நிர்வாகம் சாதுரியமாக ஒதுங்கிக் கொண்டது. சாதிப் பிரச்சினைகள் வன்முறையில் முடிந்தபோது அவை குற்றவியல் பிரச்சினைகளாகி நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டன. ஊர்க்காவற்றுறையில் ஒரு பிணத்தைப் புதைப்பது தொடர்பாக கத்தோலிக்கர்களின் மத்தியில் சாதி சார்ந்து பிரச்சினை எழுந்தபோது உள் ஊர்வாசிகளின் சடங்காசாரங்களில் அரசு தலையிட விரும்பவில்லை என்று அரசு பிரச்சினையைக் கை கழுவி விட்டது. நீதிமன்றத்தில்தான் நியாயம் கோரவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தச்சுத் தொழிலாளி ஒருவர் தனது மகளுடைய திருமணத்திற்குப் பந்தல் போட்ட வெள்ளைத் துணியால் அலங்காரம் செய்திருந்தார். வெள்ளாளர்கள் அதை எதிர்த்துப் பந்தலைக் கலைத்துத் திருமணத்தைக் குழப்ப முயன்றனர். அரசிற்கு இது முறைப்பாடு செய்யப்பட்ட போது அரசின் உதவி அதிகாரி திருமணத்திற்கு நேரே சென்று அங்கு குழப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

கொள்கை ரீதியாக அரசாங்கம் சாதிப்பாகுபாட்டை அங்கீகரிக்கவில்லை என்றாலும் அதனை உறுதியாக நடைமுறையில் எதிர்க்கவில்லை; சாதிய ஒடுக்குமுறையோடு அது சமரசம் செய்து கொண்டது. பிரஸ்தாப இந்த நிகழ்ச்சியிலும் இதற்குப் பின் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் பந்தல்களில் வெள்ளைத் துணியால் அலங்காரம் செய்ய விசேஷப் பத்திரங்களில் வெள்ளாளத் தலைமைக்காரர்களிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டியிருந்தது. வெள்ளாளர்கள் அனுமதி பெற வேண்டாத அவர்களுக்கே உரித்தான விசேஷ உரிமையாக அது அமைந்தது.

1864இல் நல்லூரில் நொத்தாரிசாக தட்டார் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்தபோதும் வெள்ளாளர்களிடமிருந்து பெரும் எதிர்ப்பு உருவானது.

அரசாங்க அதிபர் பெர்சிவல் டைக் தன் ஆட்சிக் காலத்தில் தனது அதிகாரத்திற்கு சிறிய அச்சுறத்தலாக எது வந்தாலும் அதனை நிர்த்தாட்சண்யமாக எதிர்த்து வந்திருக்கிறார். 'பிரம்மச்சாரியாக' அவர் கூறப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் ஒரு பெண்ணுடன் அவருக்குத் 'தொடுப்பு' இருந்திருக்கிறது. கோப்பாயில் மரணமான டைக் யாழ்ப்பாணத்தை விரும்பி அங்கு பதவி வகித்து வந்திருக்கிறார் என்பதைக் குறிப்பிடவே வேண்டும்.

கிறிஸ்தவ மிஷனரிகள் கல்வி போதனைகளில் ஈடுபடுவதையும் யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி அமைப்புகளைத் தகர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் டைக் விரும்பவில்லை. இந்த மிஷனரிகளை தனது

அதிகாரத்திற்குச் சவாலாக டைக் கருதினார். அரசின் நிர்வாக நடவடிக்கைகளில் அநாவசியத் தலையீடு மேற்கொள்பவர்களாக அவர்களை நினைத்தார். சென். ஜோன்ஸ் கல்லூரியினைக் கூட அவர் ஓர் இடையூறாகவே கருதினார். சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபரை அவர் பலமுறை சந்திக்க மறுத்திருக்கிறார். வேலை காலி இடங்களுக்குத் தங்கள் கல்லூரி மாணவர்களை சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் டைக்குக்கு சிபார்சு செய்த போது அவர் அதனை ஒருபோதுமே கருத்தில் கொண்டதில்லை.

19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய கிறிஸ்தவ மிஷனரிகளும் அங்கு ஆழ வேரோடியிருந்த சாதி அமைப்பினை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் வெஸ்லியன் மெதடிஸ்ற் கல்லூரியில் வண்ணார் இனத்தைச் சேர்ந்த பையனை அனுமதித்ததற்காக வெள்ளாளர்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அப்பையனை பாடசாலையிலிருந்து வெளியேற்ற வேண்டியதாயிற்று. மீண்டும் 1847இல் இப்பாடசாலையில் நளவர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பையன் அனுமதிக்கப்பட்டபோது வெள்ளாளர்கள் எதிர்த்தபோது பள்ளி நிர்வாகம் அதற்கு இணங்கவில்லை. இதனைச் சகிக்க முடியாத வெள்ளாளப் பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து நீக்கிக் கொண்டனர்.

இந்தப் பாடசாலை அனுமதிப் பிரச்சினைகள் பற்றி ஆறுமுக நாவலர் பின்வருமாறு எழுதுகிறார்: வண்ணார் பண்ணையிலுள்ள வெஸ்லியன் மிஷன் இங்கிலிசுப் பள்ளிக் கூடத்தில் ஒரு வண்ணாரப்பையன் மூன்று நான்கு வருஷம் படித்தவன். இவ்வருஷத்திலே மற்றப் பிள்ளைகள் 'இவ்வண்ணானை எங்களோடிருத்திப் படிப்பிக்கின் நாங்கள் இப்பள்ளிக் கூடத்தை விட்டு விடுவோம்' என்றார்கள். அது பற்றி முதலுபாத்தியார் தாங் கிறிஸ்தவராயிருந்தும், வண்ணானைத் தள்ளி விட்டார். வண்ணான் பறங்கித் தெருவில் இருக்கிற வெஸ்லியன் பாதிரியாரிடத்தே போய், தனக்குக் கிறிஸ்து மதமே சம்மதமென்றும், தனக்கு ஞான ஸ்நானம் செய்து தன்னை அங்குள்ள வெஸ்லியன் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டான். பாதிரியார் தாம் அதற்கு உடன்பட்டும், அவனைச் சேர்த்துக் கொள்ளும்படி தமக்கு கவர்மெண்டு ஏசண்டு எழுதிய கடிதம் பெற்றும், அப்பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளும் சுதேச குருமாரும் உபாத்தியார்களும் உடன்படாமையால், வண்ணானைச் சிலகாலம் அடிக்கடி அலைத்துப் பின் ஓட்டி விட்டார். அவன் இப்போது நெடுந்தூரத்திலுள்ள கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்திலே படிக்கிறான்.

'அப்பள்ளிக் கூடத்திற்றானே 1847ஆம் வருடம் ஒரு நளப்பையன் படித்தலைக் கண்டு ஏறக்குறைய ஐம்பது பிள்ளைகள் ஓட்டமெடுக்கவும் அந்நளப்பையனைத் தள்ளாத பாதிரியாரைப் பித்தரென்று நினைத்தரோ!

நளவனிலும் தாழ்ந்த சாதி வண்ணானென்று கொண்டாரோ! சாதி வேற்றுமை பாராட்டுதல் கிறிஸ்து நாதருக்குஞ் சம்மதமென்று விவிலிய நூலில் எங்கேயாயினும் இப்போது கண்டாரோ? வண்ணானுடைய ஆன்மா பரமண்டலத்தில் இடம் பெறாதென்று தேவதூதன் சொப்பனத்தில் வந்து சொல்லக் கேட்டாரோ! தேவவாக்கினும் பெரிது மனித வாக்கென்றும், மனித வாக்குள்ளுங் கவர்ன்மெண்டு ஏசண்டு வாக்கினும் பெரிது தம்மைச் சேவிக்குஞ்சு தேச குருமார், உபாத்தியாயர்கள் வாக்கென்று தெளிந்தாரோ! வண்ணானைப் பற்றி மற்ற பிள்ளைகளெல்லாம் ஓடிவிட்டால், அவர்கள் இருக்குஞ் சம்பளத்தினாலும் அவர்கள் பொருட்டுக் கவர்ன்மெண்டார் உதவும் பணத்தினாலும் தமது பை நிரம்பாதேயென்று பயந்து விட்டாரோ! யாழ்ப்பாணத்திலே சாதி வேற்றுமை அறுத்துக் கிறிஸ்து மதத்தை நாட்ட வல்லவர்கள் பொருள் வாஞ்சைப் பிசாசா வேசிகளாகிய இந்தப் பாதிரிமாரும் சுதேச குருமாருந்தானோ! சபாசு! சபாசு!'

ஆறுமுக நாவலரின் இந்த நீண்ட குறிப்பு யாழ்ப்பாணத்தில் அன்று ஆழ்ந்து வேரூன்றி நின்ற சாதிவெறித் தனத்திற்கு அச்சொட்டான சாட்சியாக அமைகிறது. இவ்வளவு அழுத்தந் திருத்தமான - இறுகிப்போன சாதி அமைப்பின் பின்னணியிலே கிறிஸ்தவ மிஷனரிகள் இயங்க நேர்ந்தன. இருப்பினும் மிஷனரிமாரின் கல்வித் திட்டம் யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதியமைப்பின் கோட்டைகளில் பெரும் துளைகளை ஏற்படுத்தவே செய்தது. சாதியமைப்பினால் வட்டுக் கொட்டை செமினரியில் ஆரம்பக்காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றி டெனன்ட் தனது Christianity in Ceylon என்ற நூலிலே குறிப்பிடுகிறார்.

மிஷனரிமார் தமது மதப்பரம்பலுக்குத் தடையாக சாதியமைப்பு நிலவுவதாகவே அதனை நோக்கினர். இக்காலகட்டத்தில் இலங்கையில் பணிபுரிந்த மிஷனரிமாரின் கடிதங்களிலும் அவர்கள் வெளியிட்ட சஞ்சிகைகளிலும் சாதி பற்றிய குறிப்புகள் வரும்போதெல்லாம் அது மத மாற்றத்திற்கு எவ்வாறு தடையாக அமைகிறது என்ற நோக்கத்தில் மட்டுமே பார்க்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சாதியமைப்பிற்கு எதிராக சமயப்பரம்பலில் ஈடுபட்ட கிறிஸ்தவ சமயமும் யாழ்ப்பாணத்தின் சாதியக் கொடூரத்தின் முன் சரணாகதியடைய நேர்ந்தது இந்தச் சோகநாடகத்தின் மற்றுமொரு விரிவான கதை.

1871இல் மிஷனரிமாரின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஆறுமுகநாவலர் சைவ பரிபாலன சபையை நிறுவினார். அவர் நிறுவிய பாடசாலையிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அனுமதிக்கப்படவே யில்லை. சைவ பரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டில்தான் - 1871இல் மாவிட்ட புரத்தில் சாதிக்கலவரங்கள் வெடித்தன. வெள்ளாளர் வண்ணார், அம்பட்டர் ஆகியோருக்கிடையில் சாதி மோதல்கள் எழுந்தன அம்பட்டர்களின் உடுப்புகளைத் தோய்க்க முடியாது என்று வண்ணார்கள் மறுத்ததன் பின்னணியில் வெள்ளாளர்களே இருந்திருக்கிறார்கள்.

இந்தச் சாதிக் கிளர்ச்சிகள் டைக்கிற்குப் பின் பதவியேற்ற அரசாங்க அதிபர் டுவைநாம் காலத்திலும் தொடரவே செய்தன. இவர்களுக் கெல்லாம் பின்னால் 'Village in the jungle' என்ற அற்புதமான ஆங்கில நாவலை எழுதிய சிறந்த எழுத்தாளரான லெனார்ட் வூல்ப் (Leonard Woolf) யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகப் பணியாற்றினாரெனினும் அவர் யாழ்ப்பாண வெள்ளாள எதிர்ப்பின்பேரில் வெளியேறவே நேர்ந்தது. யாழ்ப்பாணக் கச்சேரியில் லெனார்ட் வூல்ப் பணியாற்றியபோது ஒரு பிராமண வகுப்பைச் சேர்ந்த கிளாக்கர் தரையில் எச்சில் துப்பி அசுத்தப்படுத்திவிட்டதைப் பார்த்ததும் அவரையே தரையைச் சுத்தப் படுத்துமாறு பணித்து விட்டார். தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் அவரே தரையைக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டிய நிலை அவருக்குப் பெரிய அவமானத்தை ஏற்படுத்தி விட்டதாகக் கூறப்படுகிறது. வூல்ப்பின் இத்தகைய கண்டிப்பான நடவடிக்கைகளால் அவர் யாழ்ப்பாணத்தில் நிலைக்க முடியவில்லை. அவர் யாழ்ப்பாணத்தவர்களைப் பற்றி நல்லபடியாய் ஒன்றும் தனது குறிப்புகளில் எழுதவில்லை.

யாழ்குடா நாட்டில் வேரூன்றி நின்ற சாதியபிமானம் யாழ்ப்பாணத் தவர்கள் 19ஆம் நூற்றாண்டில் மலாயாவை நோக்கிக் குடிபெயர்ந்த போது அதுவும் அவர்களோடு சேர்ந்து வெளிநாடுகளிலும் செழித்தது. 1861இல் கோலாலம்பூரில் ஸ்ரீ பரஞ்சோதி விநாயகர் ஆலயத்தைக் கட்ட முன் நின்ற ஊரெழுவைச் சேர்ந்த டாக்டர் ஆறுமுகம் விஸ்வலிங்கம் தான் உயர் வெள்ளாளப் பழங்குடியில் வந்தவராகக் கல்வெட்டிலே பொறித்துச் சென்றிருக்கிறார்.

இந்தச் சாதிவெளி இருபதாம் நூற்றாண்டிலும் இன்னும் கோரமாக தலைவிரித்தாடியது. 1907இல் பொன். அருணாசலம் கூட சாதி யமைப்பு அவசியமானது, நலம் பயப்பது என்று எழுதினார். 1921இல் யாழ்ப்பாணத்தில் 'தமிழர் நாகரிகம்' பற்றி உரையாற்றிய மறைமலை அடிகள் தமதுரையில் வெள்ளாளரின் நாகரிகம் குறித்தே பேசினார்.

1930இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முதல் முறை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட போது அவர்களுடன் வெள்ளாள மாணவர்களுக்கும் சமபோசனம் வழங்குவதை எதிர்த்து சேர். பொன். இராமநாதன் கவர்னரிடம் முறையிட்டார்.

1929ஆம் ஆண்டு பாடசாலைகளில் இன, மத, சாதி, தேசிய வேறுபாடு காட்டாமல் எல்லாப் பிள்ளைகளுக்கும் சரியாசனம் கொடுக்க வேண்டு மென அரசு அறிவித்தபோது வெகுண்டெழுந்த வெள்ளாளர்கள் பதினைந்து பாடசாலைகளைத் தீக்கிரையாக்கினார்கள். தம் சொந்தச் சகோதரர்களையே அடக்கியும் ஒடுக்கியும் இழிவுபடுத்திய யாழ்ப்பாணச் சமூகத்தின் கொடூ ரத்தின் கதை அவலம் நிறைந்த, கறை படிந்த கதையாகும்.

புகலிடத்தில் - சாதியம் - இந்து மதம்

சி. புஸ்பராஜா

சிறியதொரு கள ஆய்வு

'இன்று சாதியமும் தீண்டாமையும் தமிழர் சமுதாயத்தில் அற்றுப் போய்விட்டது என்று எந்த ஒரு யதார்த்தப் புரட்டுவாதியாலும் நிறுவிக்க முடியாது. ...எனவே சாதியத்தை எதிர்த்த போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படல் வேண்டும். ...சாதியத்துக்கெதிரான போராட்டம் குறுகிய வெறித்தனம் கொண்ட சாதிய மார்க்கத்தில் செல்ல முடியாது...' (வெகுஜனன், இராவணா - சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்)

இலங்கையில் தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட சிங்களப் பேரினவாத அரசுகளின் அடக்குமுறையிலிருந்து விடுதலை பெற நடந்த போராட்டங்களில் அரச படைகளினால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் தமது மண்ணை விட்டு வெளியேறிய ஈழத்தமிழர்கள் இன்று உலகப்பந்தின் அனைத்து மூலை முடுக்குகளிலும் சிதறி எறியப்பட்டுள்ளனர். இவர்கள் மீது உலகத்தின் மனிதாபிமானமுள்ளவர்கள் அனைவரும் காட்டும் அரவணைப்பு மிகக் கணிசமானதாக இருக்கும் அதே வேளையில் இவர்கள் தமது தாய் நிலத்திலிருந்து தம்முடன் சுமந்து வந்த தமக்கே உரித்தான பண்புகளால் பயமும் பெரும் கேள்வியும் அதன் மீதான தேடலும் இன்று மிக அவசியமானதாகிறது.

எந்த மனிதநேயமிக்க மனிதனும் இன்று வெளிநாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களின் வாழ்வு முறையைப் பார்த்து பயப்பிடாமல் இருக்க முடியாது. குறிப்பாக யாழ்ப்பாணம் போல் இங்கும் இவர்கள் கட்டமைக்க முயலும் சாதியம் மிகவும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் சாதி இல்லை என்று சொல்லிக் கொண்டே, ஒன்று, சாதி வெறியர்கள் சாதிய மேலாண்மை ஆதிக்கத்தை இங்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு, இப்படிச் சொல்வதன் மூலம் இங்கு சாதியின் உருவத்தை மறைத்து அடக்கப்படும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படாது பாதுகாத்துக் கொண்டு, மெதுவாக இலைமறை காயாக மிகவும் கச்சிதமாக சாதியமும் சாதியப் பண்பாடுகளும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

உலகிலேயே இன வெறியை விடக் கொடுமையானது சாதி வெறி என்பது தென்னாப்பிரிக்க டேர்பன் நகரில் நடைபெற்ற இன வெறிக்கு எதிரான மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட எத்தனை பேருக்குத் தெரியுமோ தெரியவில்லை சாதிய விடயத்தில் யாழ்ப்பாணத்தான் எவ்வளவு கொடுமையானவன் என்று! இன்று அந்நிய தேசங்களில் வாழும் ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையாகவும் ஆதிக்க சக்தியாகவும் விளங்குவது யாழ்ப்பாணத்தவர்கள் என்றால், பின்பு சாதியத்தைப் பற்றி கதைக்கவா வேண்டும்? இதைப் புரிந்து கொள்ளாமல் சும்மா வெளிநாடுகளில் சாதி இல்லை எனக் கூறும் நாய்கள் கொஞ்சம் சமுதாய அக்கறையுடன் இங்கு என்ன நடக்கிறது என்று மேலோட்டமாகப் பார்க்காமல் - சற்றுக் கூர்ந்து கவனித்தாலே போதும்.

உயர்குல சாதிக்காரன் சாதி இல்லை என்று சொல்லுவது அவன் நடத்திக் கொண்டிருக்கும் நாடகத்துக்கு அவன் போடும் வேசம். அவன் சாதி இல்லை என்றுதான் சொல்லுவான். ஓமோம் சாதியிருக்கு, நாங்கள் சாதி பாக்கறோம், சாதியை வளர்க்கிறோம் என்று நோட்டீஸ் அடித்தா விடப் போகிறான்? சாதி வெறியர்களால் தீண்டத்தகாதவர்கள் என்று அடையாளம் காட்டப்படும் பகுதியினரும் என்ன மசிரைத் தெரிந்து கொண்டு வெளி நாடுகளில் சாதியில்லை என்று சொல்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை.

வெளிநாடுகளில் உள்ள தேனீர்ச்சாலைகளில் உட்காரலாம், மூக்குப் பேணியில்லை, கோவில்களுக்குள் போய் வரலாம் என்றவுடன் சாதியில்லை என்று முடிவுகட்டி விடுவதா என்ன?

யாழ்ப்பாணத்தில் பல கடுமையான போராட்டங்களின் விளைவாக சில கோவில்களும், தேனீர்க்கடைகளும் பொதுவாகத் திறந்து விடப்பட்டதுதான். அத்துடன் அங்கு சாதியம் ஒழிந்து விட்டது என்று அர்த்தங்கொள்ள முடியுமா? இத்தனைக்கு மத்தியிலும் இன்றும் அங்கு தொடர்ந்து கொண்டிருக்கும் சாதி ஒடுக்குமுறைகள் பற்றி நாம் கேள்விப்பட்டுக் கொண்டுதானே இருக்கிறோம். யாழ்ப்பாணத்தின் மிக நாகரீகம் அடைந்த நகரங்களில் ஒன்றான காங்கேசன் துறையில் யாழ் தியேட்டருக்கு முன்னால் இருந்த நடராசாவின் தேனீர்க்கடையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கறள் பிடித்த மூக்குப் பேணியில் தேனீர் கொடுக்கும் நிலையும், வெளியில் நின்று கையிலேந்தி சாப்பிட சாப்பாடு கொடுக்கும் நிலையும்தானே இங்கு இலங்கை இராணுவம் ஊரைக் காலி செய்யும் வரையும் இருந்தது. இதே தேனீர்க்கடையில் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒரு நகர சுத்திகரிப்புத் தொழிலாளியின் மகன் விடயம் தெரியாமல் உள்ளே போய் உட்கார்ந்திருந்து சாப்பிட, இதைப் பார்த்த வேறு ஒரு சுன்னாகத்துச் சாதி வெறியன் கடைக்காறருக்கு விடயத்தைத் தெரிவிக்க நடராசாவின் தம்பி கனகசபை திருகு பலகையால் அந்தப் பையனின் முதுகில் மிருகத்தனமாக அடித்து விரட்டியதை எமது சமுதாயம்

வேடிக்கைதானே பார்த்து நின்றது. ஆகவே இவைகள் எவற்றை உணர்த்தி நிற்கின்றன. சட்டத்துக்குப் பயந்தும், போராட்டங்களுக்குப் பயந்தும் சில நடவடிக்கைகள் இருந்தாலும் அடி மனதில் நன்றாகக் கட்டியெழுப்பப் பட்ட அல்லது இரத்தத்துடன் ஊறி விட்ட சாதிய ஆதிக்க மனோபாவம் சாதாரணமாக அழிக்கக் கூடியதொன்றல்ல.

வெளிநாடுகளில் தேனீர்ச்சாலைகள் மற்றும் கோவில்கள், பொது இடங்கள் என்று பாராமல் மிகவும் ஆழமாகப் பார்த்தால் இந்தச் சாதி வெறியர்களின் நடவடிக்கைகள் விளங்கும். உயர்சாதி எனக் கருதப்படும் இலங்கை வெள்ளாளனின் சடங்குகள் அனைத்தும் அவனது குடிமைகளாலேயே செய்யப்படுவது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இவையனைத்தும் இன்று வெளிநாடுகளில் நடைமுறையில் இல்லை என்று யாராவது சொல்வார்களா?

பிரான்சில் அவர் சிறந்த ஒரு வானொலி அறிவிப்பாளர், சிறந்த நாடகக் கலைஞன், தமிழ்ச் சைவப்பழம். அவரின் வீட்டில் பேரப்பிள்ளைக்கு முடியெடுக்கும் சடங்கு. அதற்கு சாதீய முறைப்படி முடிவெட்டும் தொழிலாளி வீட்டுக்கு அழைக்கப்பட்டு குழந்தைக்கு மொட்டை போடப்பட்டது. அட, அவன்தான் கூப்பிட்டான் என்றால் இந்தக் கழுதைக்கு குடிமை (அடிமை) குணம் வரலாமோ? 'அண்ணே, சலூனுக்குக் கொண்டு வாருங்கோ' என்று சொல்லித் தனது தொழிலுக் குரிய மரியாதையைக் காப்பாற்றியிருக்க வேண்டாம்?

ஒரு 15 வயதுப் பையன் வந்து தனது தந்தையிடம், 'அப்பா, நாங்கள் என்ன சாதியப்பா?'

'ஏண்டா?'

'சுரேஸ் வீட்ட போனனான். அவங்கடை அப்பா கேட்டவர் நீங்கள் என்ன சாதியெண்டு.'

குழந்தைகள் உள்ளத்திலேயே சாதிப் பேயை வளர்க்கும் இந்த அசிங்கம் இங்குதான் நடந்தது.

அந்தப் பையனுக்கும் பெண்ணுக்கும் பருவ ஆசை. காதலித்தார்கள். இரண்டு பேருக்கும் ஒரு 17 அல்லது 18 வயசிருக்கும். இதையறிந்த பெண்ணின் பெற்றோர் பொடியனின் பூராயத்தை ஆராய்ந்தனர். 'எடியே, வேணுமெண்டால் எந்த அடையானையோ - கறுவலையோ கூட்டி வா. ஆனால் அந்த எளிய சாதி வேண்டாம்.' பாருங்கள் வெள்ளாளத்திமிரை. இவர்களுக்கு அடையாரும், கறுவலும் கேவலமானவன். தான் மட்டும் உயர்ந்தவன் என்னும் வெறி.

மரணச் சடங்குகளில் Professionale ஆகப் பாடும் ஒரு கூட்டம் இங்கு உள்ளது. சில மரணச் சடங்குகளில் துயரத்தைப் பகிர்ந்து கொள்ள, அல்லது வேறு காரணங்களுக்காகப் பாடுகிறார்கள். ஆனால் தொழிலாக, ஊரில்

எந்த குடிமை (சாதி) இதைச் செய்ததோ அதே சாதியினர் இங்கு செய்வது சாதிய முறையா இல்லையா?

அடுத்தது மரணச் சடங்குகளில் பிராமணனை அழைத்துச் செய்யப்படும் சடங்குகள் அனைத்தும் தவறாமல் இங்கு செய்யப்படுகிறது. இங்கு ஒரு முதலாளியின் தகப்பனார் மரணச் சடங்கில், இறந்தவரின் ஆண் பிள்ளைகள் அனைவரும் முடி வெட்டும் தொழிலாளியை இடுகாட்டுக்கு அழைத்து மொட்டை போட்டுக் கொள்கிறார்கள். கனடா முதல் அய்ரோப்பிய நாடுகளிலிருந்து பிராமணர்கள் அழைக்கப்பட்டு எவ்வித சாதியக் குறைவுமில்லாமல் மரணச் சடங்கு நடத்தப்பட்டது.

வெளிநாடுகளில், மரணமடைந்தவருக்கு அடிக்கப்படும் கல்வெட்டு என்னும் அஞ்சலிப் புத்தகத்திலும் கூட வெள்ளாளன் தன் சாதித் திமிரைக் காட்டத் தவறுவதில்லை. இங்கே உதாரணத்துக்கு ஒரு கல்வெட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஊரில் எந்தச் சாதியினர் மாலை கட்டினார்களோ அவர்கள்தான் இங்கும் மாலை கட்டுகிறார்கள். ஊரில் எந்தச் சாதியினர் மகிழ்வு சடங்குகளில் தாள வாத்தியம் (நட்டுவ மேளம் - நாதஸ்வரம்) இசைத்தார்களோ அவர்களே இங்கும் அதைச் செய்கிறார்கள். இப்படிப் பலர் தம் சாதியத் தொழிலை வெளிநாடுகளிலும் செய்யப் பின் நிற்கவில்லை.

யாழ்ப்பாணத்தின் சாதியின் அனைத்து எச்சங்களும் இங்கு வந்து விட்டது. இந்த வெள்ளாளனின் குடிமை முறையில் சலவைத் தொழிலாளர்கள் மட்டும் இன்னும் sceneக்கு வரவில்லை. அதுவும் எத்தனை நாளுக்கோ. அதே போல் நல்ல காலமாக இங்கு பனை மரங்களும் தென்னை மரங்களும் இல்லாமல் போனது.

பத்திரிகைகளில் - குறிப்பாக வீரகேசரி, தினக்குரல் - மணமகள் வேண்டும், மணமகன் வேண்டும் என வரும் வெளிநாட்டவரின் விளம்பரங்களைப் பாருங்கள். பச்சை பச்சையாக சாதி சொல்லித்தானே மணமக்கள் கேட்கிறார்கள். நம்மவர்களால் லண்டனிலிருந்து வெளியிடப்படும் 'நம்நாடு' பத்திரிகையில் சுயம்வரம் பகுதியில் சாதி அறைகூவலுடன் வெளிவரும் திருமண விளம்பரங்கள் மனிதநேயம் உள்ளவனைப் பயமுறுத்துகிறதென்றால் மிகையில்லை. வெளிநாடுகளில் சாதியக் கருத்தியலும், சாதி பேணலும், சாதியக் கூட்டு வாழ்வும் இல்லை என்றால் சாதியின் பெயரால் ஏன் மணமக்கள் கேட்கிறார்கள்.

பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் நாடுகளில் உள்ள திருமணத் தரகர்களிடம் கேட்டுப்பாருங்கள். மணமக்கள் கேட்டு வருபவர்கள் சாதியின் பெயர் சொல்லித்தான் கேட்கிறார்கள். மனித அக்கறையுள்ள வெளிநாட்டவர் இந்தக் கொடுமையைக் கேட்டால் தலையில் அடித்துக் கொள்வார்களா இல்லையா?

லண்டனில் வாழும் பஞ்சமர் இனத்தில் ஒரு பிரிவைச் சேர்ந்த நண்பர் ஒருவர் தனது தம்பியின் திருமணத்தைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். அவன் நல்ல இடத்திலை கலியாணம் செய்திருக்கிறான் என பெருமை அடித்துக் கொள்கிறார். ஏதோ கோடீஸ்வரர் வீட்டிலோ அல்லது விடுதலைப் போராட்டத் தியாகிகள் வீட்டிலோ பெண் எடுத்துப் பெருமையடிக்கிறார் என்று நினைத்து விடாதீர்கள். அதுதான் இல்லை. அவர் மிகவும் பதுமையாக, மெதுவாகச் சொல்லுகிறார், ' பெட்டை, வெள்ளாம் பெட்டை.' எப்படியுள்ளது இந்த வெள்ளாள மேலாதிக்க சாதி வெறியின் பாதிப்பு.

இந்த வெள்ளைக்காரன், வெள்ளாளன் பற்றிய எமது பிரமிப்பு முதலில் அழிக்கப்பட வேண்டும். இங்கு நடக்கும் திருமணங்கள் மற்றும் வைபவங்களில் யாராவது ஒன்றாக வேலை செய்கிற அல்லது ஒன்றாகப் படிக்கிற வெள்ளைகள் வந்து விட்டால் எங்கடை சனம் படும்பாட்டைப் பார்க்க வேண்டும். 'வெள்ளைச் சனங்களும் வந்ததப்பா' என்று வேறு பெருமை அடித்துக் கொள்வார்கள்.

புகலிடத்தில் ஒரு வெள்ளாளன் கூறுகின்றார், 'நான் சாதி பார்ப்பதில்லை. நான் எல்லா வீடுகளிலும் குடிப்பேன்; சாப்பிடுவேன்' என்று. பாருங்கள் திமிரை. இவர் பெரிய ஒரு ஆள். இவர் தனக்குக் கீழ் உள்ளவர்களைச் சமமாக நடாத்துகிறாராம். இன்னொரு நண்பர் எழுதுகிறார், 'நான் சாதி கடந்துதான் திருமணம் செய்தவன் (இவர் தன் திருமணத்தையே சாதி வெறியுடன் பார்க்கிறார் என்பது ஒருபுறமிருக்க, இவர் ஒன்றும் பஞ்சமர் சாதியில் திருமணம் செய்யவில்லை. மாறாக, யாழ்ப்பாணத்தில் இன்றைக்கு நடைமுறையிலிருக்கும் சாதியமைப்பில் வெள்ளாளனுக்கு அடுத்தபடியில் இருக்கும் சாதியில்தான் திருமணம் செய்து கொண்டார் என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.) ...எனது சொந்த ஊர் பள்ளர், பள்ளிகளை கோவிலுக்குள் நுழைய வைத்தவன்...' என்று. அவரது பேனா பள்ளர், பள்ளி என்கிறது. குறைந்த பட்சம் பள்ளர் என்னும் இனத்தைச் சேர்ந்த பெண்களையும், ஆண்களையும் என்று எழுத அவரது பேனாவுக்கு முடியாமற்தானே போனது. இவர் ஒரு முற்போக்காளராக பாரிஸில் திரிகிறார். இவரிடம் இவர் அறிந்தோ அறியாமலோ ஊறியிருக்கும் தான் வெள்ளாளன் என்னும் இறுமாப்பின் விளைவுதானே இந்த எழுத்துக்கள், இந்தப் புலம்பல்கள்.

வீடு சென்று முடி திருத்துதல், மரண வீடுகளில் தொழிலாகப் பாடும் பழக்கம், பிராமணர்களை வைத்துச் சடங்குகள் செய்யும் பழக்கம், மாலை மணவறை, நட்டுவ மேளம், நாதஸ்வரம் எனச் சாதியின் அனைத்து வடிவங்களும் புகலிடங்களில் வந்து விட்டது. இவைகள் எல்லா வற்றையும் விட ஆபத்தானது இங்கு பெருகி வரும் இந்துக் கோவில்கள். இக்கோவில்கள் சாதி அமைப்பு மேலும் இங்கு கட்டமைக்கப் பெரும் உதவியாக இருக்கப்போகிறது என்பதே உண்மை. வர்ணாசிரம

தர்மத்தையும் மனுநீதி தர்மத்தையும் பிரதான வழிமுறைகளாகக் கொண்ட இந்து மதத்தின் இக்கோவில்கள் புகலிடங்களில் புரட்சியையா செய்து விடப் போகின்றன?

திருலோக சீதாராம் என்பவரால் தமிழாக்கம் செய்யப்பட்ட மனுதர்ம சாஸ்திரத்தின் இரண்டொரு சூத்திரங்களைப் பார்ப்போம்: 'இழி பிறப்பாளன் பெருகி வரும் நாடு விரைவில் குடிமக்களுடன் அழியும்' 176ஆம் பக்கம்.

'அறிவின்மையால் சண்டாளி முதலிய ஈனஜாதிப் பெண்களுடன் அந்தணன் கூடினால் அல்லது அவர்களிடம் வாங்கியுண்டால் அல்லது தானம் பெற்றால் பாவியாகின்றான்...' - 196ஆம் பக்கம்.

இதே மனுதர்ம சாஸ்திரம் பெண்ணடிமைத்தனத்தை மரத்தில் அறைந்த ஆணியாகச் சொல்கிறது.

'கைம்மையில் காய், கனி, கிழங்கு இவற்றால் சிற்றுணவு கொண்டு காலத்தைத் தள்ளலும், மற்றொருவன் பெயரை நாவால் கூற விரும்பாமையும் வேண்டும்' - 82ஆம் பக்கம்.

'கைம்மையினள் தன் காலமுள்ளளவும் பொறுமை, தூய்மை, உடற்கலப்பின்மை, புலால் கொள்ளாமை, மேன்மையான கற்பிலக்கணம் இவை பொருந்தக் கடவள்' - 82ஆம் பக்கம்.

பல இடங்களில் பெண்கள் பலவீனமானவர்கள். நிறை பிறழ்தலும் - நிலையில்லா மனமும் - நட்பின்மையும் மாதர் இயல்பென்றும், அழகு செய்தல், காமம், சினம், பொய், துரோகம் மாதரின் பொருட்டு என்றும் 141ஆம் பக்கத்திலிருந்து 142ஆம் பக்கம் வரை பெண்களைக் கேவலமாக இழிவுபடுத்தி சித்தரிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கலாம்.

'இழிநடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றை உடையவனாயினும் கற்பினளான பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக.' - 81ம் பக்கம்.

'மனைவியிழந்தவன் விதிப்படியே மறுமணம் செய்துகொண்டு அன்றாடம் அய்ம்பெரும் வேள்வி முயன்று தன் வாழ்வின் இரண்டாம் பகுதியை இல்லறத்தாக்கிக் கழிக்க வேண்டும்.' - 82ம் பக்கம்.

எப்படியிருக்கிறது இந்துப் பார்ப்பனிய, சாதிய, ஆணாதிக்கச் சூத்திரங்கள். வேறு எந்தச் சமய நூல்களாவது இழி சாதியினராக மனிதனைப் பிரித்து அவனது நாக்கில் சூடு வை, பிட்டத்தில் (குண்டி) சூடு வை, விரலை வெட்டு, கையை வெட்டு, காலை வெட்டு, பிறப்புறுப்பை வெட்டு என்று கூறுகிறதா? கணவனை இழந்த எல்லாப் பெண்களும் மொட்டையடி, உடன்கட்டையேறு, பெண்கள் வயதுக்கு வந்தவுடன் தீட்டு என்று கூறி வீட்டுக்குள் அடை என்று இப்படி மனித நேயமேயில்லாத பழக்க வழக்கங்கள் வேறு எந்த மதத்தில் இருக்கிறது. இதுபோன்ற அநியாயம் எல்லாம் நடக்கும் ஒரே மதம் இந்து மதம்தானே.

'என்னை இவர் கொல்லினும், மூவுலகாளவேணும் இவரை நான் கொல்வேன்...' என்றும் 'மேன்மைக் குரவரைக் கொல்வதிலும் பிச்சையேந்துண்ணல் இவ்வுலகில் சிறந்தது' என்றும் குருசேத்திரப் போர்க்களத்தில் மனிதநேயத்துடன் மனம் கலங்கிப் போர் வேண்டாம் எனப் பின்வாங்கிய அர்ச்சுணனை, 'ஆன்மன் கொல்பவன் என்பானும் கொல்லப்படுபவன் எனக்கொள்வானும் அறிவிலார். ஆன்மா கொல்வதும் இல்லை கொல்லப்படுவதுமில்லை' என்றும், 'எவர் உடலிலும் உடலோன் கொல்லப்பட்டான். எனவே நீ எவ்வுயிர் பொருட்டும் துயருறல் தகாது.' அதாவது ஆன்மா அழிவதில்லை, நீ வெறும் உடலை மட்டுமே அழிக்கிறாய், ஆகவே கவலைப்படாதே என்று கிருஷ்ணன் பல பெருங்கதையாடல்களை விட்டு அர்ச்சுணனைக் கொலைகாரன் ஆக்கியதுதானே பகவத்கீதையின் சாராம்சம்.

புகலிடத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் சாதியக் கட்டமைப்புக்கு உதவக்கூடிய அனைத்து அம்சங்களும் அழிக்கப்பட வேண்டும். முக்கியமாக இந்து மதம் அழிக்கப்படாமல் சாதியை அழிக்க முடியாது. இந்து மதத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் கட்டமைக்கப்பட்டிருப்பது சாதியமே. சாதியமைப்பின் மிகப்பெரிய கொடுமை சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களிடை மேலும் தாழ்த்தப்பட்ட சாதிகளை உருவாக்கி அவர்களிடையே வேற்றுமையை வளர்த்தது. இந்த அமைப்பு முறையைப் பற்றி கி.பி.1030வாக்கில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட அல்பெருணி(Alberuni)யின் குறிப்பில் கீழ்க்கண்டவாறுள்ளதை அவதானிக்கலாம். 'சூத்திரர்களை அடுத்து வருபவர்கள் அன்ட்யாஜா Antyaja என அழைக்கப்படுபவர்கள்... இந்த எட்டுப்பிரிவுகளான துணி துவைப்பவர்கள் (வண்ணார்), செருப்புத் தைப்பவர்கள் (சக்கிலியர்), மாலுமிகள், மீனவர்கள், கொடிய மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடும் வேட்டைக்காரர்கள், கண்கட்டு வித்தைக்காரர்கள், கூடைக் கவசம் செய்வோர், நெசவாளிகள் ஆகியோர் ஆவர்.' - (41ஆம் பக்கம், இந்து நாகரிகமா நயவஞ்சகமா? - அம்பேத்கர்).

மனிதநேயத்தைவிட மதங்கள் ஒன்றும் பெரிதானதல்ல. எல்லா மதங்களும் மனிதனைப் பேயனாக்கும் மதங்களே. இவற்றுள் மிகக் கொடுமையானது இந்து மதம் என்பதால், இவற்றால் நாம் பாதிக்கப் பட்டுள்ளதால் இம்மதத்தின் மீதான எமது கோபம் அர்த்தமுள்ளதாகிறது.

'இந்து மதம் என்பதற்கு இஸ்லாம் மதத்தைவிட, கிறிஸ்தவ மதத்தை விட வேறு மாறுதல் என்ன என்று பார்த்தால் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன், சண்டாளன் என்கின்ற பஞ்சவர்ண பேதம் அல்லாமல் வேறு என்ன வித்தியாசம் இருப்பதாகச் சொல்லக்கூடும்? கிறிஸ்தவ மதத்தில் சூத்திரன் இல்லை, இஸ்லாம் மதத்திலும் சூத்திரன் இல்லை. சூத்திரன் இருக்கும் மதத்தை எடுத்து நம் மீது போட்டுக் கொண்ட பிறகு சூத்திரப்பட்டம் தாங்க நாம் பயந்தால், வெட்கப்பட்டால் முடியுமா?... ' - தந்தை பெரியார், குடியரசு (பத்திரிகை) 13-11-1943.

இந்து மதத்தை ஒழிப்பதற்கும் அதன் மூலம் சாதியத்தை அழிக்கவும் மதமாற்றத்தைப் பரிந்துரைக்கிறார் அண்ணல் அம்பேத்கர். இந்தியாவுக்கு வேண்டுமானால் இந்தப் பரிவுரை சிலவேளை பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால் யாழ் உயர்குடி வெள்ளாளரின் சாதி வெறிக்கு முன்னால் மத மாற்றமும் மண்ணாங்கட்டியும். கிறிஸ்தவ வேளாளன் முன்னால் கிருஷ்ணன், கிறித்தோப்பராக மாறினாலும் அவன் தாழ்த்தப்பட்டவன் தான். யாழ்ப்பாணத்தில் பல கிறிஸ்தவ தேவாலயங்களின் கிணற்றில் தண்ணியள்ள சிறுபான்மையின மக்கள் எத்தனை பல போராட்டங்களை நடாத்த வேண்டியிருந்தது.

இந்துக்கள் சுவாமியை வைத்துத் தேர் இழுப்பதுபோல், கிறிஸ்தவர்கள் திருவுருவச் சிலையை வைத்துக் கூடு தூக்குவார்கள். கிறிஸ்தவ உயர்குலத்தவர்களின் தேவாலயங்களில், தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ மக்கள் கூடு தூக்க முடியாது; கூடாது. யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் சமவழிபாட்டுக்கு ஆலயப்பிரவேசப் போராட்டம் நடத்த தாழ்த்தப்பட்ட மக்கள் முயன்றபோது கோவில் இழுத்து மூடப்பட்டது. தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டத்தில் கண்டதேவி கோவிலில் 300 ஆண்டுகாலமாக மறுக்கப்பட்டு வந்த தேர் இழுக்கும் உரிமையைத் தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்டபொழுது தேர் இழுப்பு நிறுத்தப்பட்டது. அதேபோல் யாழ்ப்பாணம் இளவாலையில் (இரண்டாவது ,மறை மாவட்டம்) அன்னம்மாள் மாதா தேவாலயத்தில் கூடு தூக்கும் போராட்டத்தில் சம உரிமை மறுக்கப்பட்டுப் பல ஆண்டுகளாக தேவாலயம் இழுத்து மூடப்பட்டது. கிறிஸ்தவ தேவாலயங்களின் உள்ளே நடுக்கூடத்தில் உயர்ந்த சாதியினரும் மற்றைய இரண்டு கரைப்பகுதிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களும் இருந்து இறைவழிபாடு செய்யும் முறையானது வெளிப்படையாகச் சொல்லப்படாத நடைமுறை யாகும். மீறினால் என்னாகும்... பல ஆண்டுகளுக்கு முன் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தலையில் துப்பட்டி போட்டு ஆலயத்தின் நடுக்கூடத்தில் வழிபடச் சென்றபொழுது பெரும்பான்மை இனப் பெண்கள் அவரை அடித்து மேல் சட்டையைக் கிழித்து அவமானப்படுத்திய சம்பவம் மேலே குறிப்பிடப்பட்ட அன்னம்மாள் மாதா தேவாலயத்தில்தான் நடந்தது. இன்றும் கூட பல கிறிஸ்தவ தேவாலயங்களில் தாழ்த்தப்பட்டவர்களின் திருமண நிகழ்வில் முட்டுக் கொடுக்கும் பழக்கம் இருப்பதில்லை. யாழ்ப்பாணம் பெரிய கோவிலில் கூட சமனாக எல்லோரும் இருந்து வழிபாடு செய்வதில்லையே.

'... தமிழர் சமுதாயத்தின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் உயர் சாதியினருடன் சமத்துவமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது திருமணச் சடங்குகளையோ அன்றி மரணச் சடங்குகளையோ நடத்த முடியாத நடைமுறை இன்றும் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் இருந்து வருகின்றன. அதேபோல் கிறிஸ்தவ மதத்தின்

அதி உயர் குருப்பட்டத்தைப் பெறும் தகுதி இன்றுவரை உயர்குடி வேளாளக் குலத்தவர்கட்கு மட்டுமே இருந்து வருவதையும் காணலாம்...' - வெகுஜனன், இராவணன் (சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - 45ஆம் பக்கம்).

தாழ்த்தப்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்திலோ புத்த மதத்திலோ மதம் மாறினாலும் இந்தச் சமுதாயத்தில்தான் வாழ வேண்டும். வேறு ஓர் உலகம் கிடைக்கப்போவதில்லை. எந்த மதத்தில் மாறினாலும் வெள்ளாளன் தாழ்த்தப்பட்டவனுக்கு எப்பவும் மூக்குப் பேணியைத்தான் வைத்திருப்பான்.

இன்று வெளிநாடுகளில் சிலர் மதம் மாறுகிறார்கள். இதைப்பார்த்து உயர்குடி வேளாளர் குதிக்கிறார்கள்; கோபப்படுகிறார்கள். கலை, பண்பாடு, கலாச்சாரம் என ஓலம் வைக்கிறார்கள். இது தமது சாதி அமைப்பைக் கட்டிக் காக்க உதவும் இந்து மதத்தின்பாலுள்ள பாசமேயன்றி வேறொன்றுமில்லை. இல்லையெனில் என்ன மண்ணாங்கட்டி கலையும் கலாச்சாரமும்? தமிழனின் உண்மையான கலை, கலாச்சாரம் என்றால் என்ன... பார்ப்பனனை வைத்துத் தாலி கட்டுவதா? அம்மி மிதித்து, அருந்ததி காட்டித் திருமணப் பெண்ணை அவமதிப்பதா? நீ பள்ளன், நீ அம்பட்டன், நீ நளவன், நீ வண்ணான், நீ பறையன், நீ கரையான், நான் வெள்ளாளன் எனக் கொண்டாடுவதா? தமிழனுக்கு எதிரான தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதா? தமிழர் தெய்வ வழிபாட்டில் இல்லாத கணபதியை (பிள்ளையார்) கொண்டுவந்து கோவில் கட்டி வழிபடுவதா? புரட்டாசிச் சனி, ஆடி அமாவாசை, சித்திரைப் பௌர்ணமி என நெறிகளைக் கடைப்பிடித்துப் பார்ப்பனனால் படைக்கப்பட்ட மனுசாஸ்திரத்தையும் பகவத் கீதையையும் தலையில் வைத்து ஆடுவதா? பரதநாட்டியம் தமிழர் கலையா? ரையும் கோட்டும் போட்டுக் கொண்டு திரிவது தமிழர் கலாச்சாரமா? யாரை ஏமாத்துகிறீர்கள். பார்ப்பனர் தமிழர் தலையில் சுமத்திய சடங்குகளும் ஆங்கிலேயன் விட்டுச் சென்ற கலாச்சாரமும் மலையாளியிடமிருந்து பெற்றுக் கொண்ட சில நடைமுறைகளும்தான் இன்றைய எமது வாழ்வு என்பதுதானே உண்மை. இந்தப் பாதிப்புக்கு நாங்கள் எல்லோரும் பலியாகித்தானே இருக்கிறோம்.

காதல் செய்தல் - மடலேறுதல் - வீரம் புரிதல் - வணிகம் செய்தல் - வேட்டையாடுதல் - கள் உண்ணுதல், நன்கு புசித்தல் - கும்மியடித்தல் என்றும் - உடை, ஆபரணங்கள் என்றும் தமிழனுடைய வேறுபட்ட கலாச்சாரம் பற்றி நல்ல தமிழ்ப் பண்டிதர்களிடம் கேட்டறிதலை விடுத்துச் சும்மா இந்து சமயம்தான் தமிழன் கலையென்றும் சாதிதான் தமிழன் கலாச்சாரம் என்றும் உழறாதீர்கள்.

மதம் மாறுவதன் மூலம் ஊரிலும் சரி வெளிநாடுகளிலும் சரி சாதி ஒழியப்போவதில்லை. கொதிக்கும் சட்டியிலிருந்து நெருப்புக்குள் பாய்ந்த

கதையாகத்தான் இருக்கும். புகலிடத்தில் வளர்ந்துவரும் சாதியத்தை இல்லாதொழிக்க வேண்டுமானால், சாதியத்தின் அடையாளங்களான அனைத்து நடவடிக்கைகளும் தடுக்கப்பட வேண்டும். இந்து மதத்திற்கெதிரான, அதை அழிக்கக்கூடிய பிரச்சாரங்களைச் செய்ய வேண்டும். தொழில் கருதிச் செய்யப்படும் அனைத்துக் குடிமை (அடிமை) காரியங்களும் சாதியத்தின் அடையாளமேயென உணர்ந்து கைவிடப்பட வேண்டும். மனிதநேயமும் சமுதாய அக்கறையும் கொண்ட அனைவரும் சாதியத்துக்கு எதிராகவும் சாதியத்தின் அடையாள நடவடிக்கைகளுக்கு எதிராகவும் பிரச்சாரங்கள், மென்மையான போராட்டங்கள் நடத்த முன்வர வேண்டும்.

எமது வீட்டுக்குள் பாம்பு படமெடுத்தால் அடுத்தவன் வீட்டிலா குடியிருக்க முடியும்? ஆகவே மதமாற்றம் தீர்வல்ல என்பதை உணர்ந்து பாம்பாகிய சாதியத்தையும் அதன் குடியிருப்பான புற்றாகிய இந்து மதத்தையும் அழித்து நாம் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

அந்நியத் தெருக்களில் எம்மிடையே சாதியில்லை எனச் சொல் பவனைச் சந்தேகியுங்கள். சாதியில்லை என்று சொல்கிற ஒவ்வொரு நிமிடமும் எமது சமுதாயத்துக்கு இவர்கள் துரோகம் செய்கிறார்கள். சமுதாய அக்கறையுள்ளவன் தனது சமுதாயத்தில் உள்ள பலவீனங்களை அழிக்கவல்லவா போராட வேண்டும். அதை விடுத்து ஊரோடு ஒத்தோட முடியுமா?

மனிதநேயமுள்ள அனைத்துத் தமிழர்களும் புகலிடத்திலாவது சாதியை ஒழித்து முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். எமது அடுத்த தலைமுறைக்கு நாமாவது சாதியை விட்டுச் செல்லாதிருப்போமாக.

பின்நவீன நிலைச் சிந்தனைகள்

ஒரு தேவதூதனின் வருகைக்காகக் காத்திருப்பது போல நீதிக்காகவும் சனநாயகத்திற்காகவும் காத்திருப்போம்*

அ.மார்க்ஸ்

1. பின்நவீன நிலைச் சிந்தனைகளை அறிமுகம் செய்வது என்கிற பெயரில் இதுபோன்ற கலந்துரையாடல்களை மேற்கொள்வதில் இரு சிக்கல்கள் உள்ளன. ஒன்று: அறிமுகம் என்கிற பெயரில் ஏற்கனவே பேசியுள்ள செய்திகளையே மீண்டும் பேச நேர்வது. இரண்டு: பெருங்கதையாடல்கள் தகர்ந்து போன ஒரு வரலாற்று/கலாச்சார நிலையைக் குறிக்கிற பின்நவீன நிலைச் சிந்தனைகள் 'முன் நிற்றலின் இயங்காவியல்'/'பேச்சொலி மய்யவாதம்' என்பதிலிருந்து தொடங்கிப் பல்வேறு விசயங்களைப் பேசுகின்றன. அதன் விமர்சனம் மொழி பற்றிய நமது கருத்துகளிலிருந்து தொடங்குகிறது. மொழி மூலம் எதையும் உறுதியாகச் சொல்லிவிட இயலாது என்கிற விசயத்தைச் சொல்வதற்கு நாம் மொழியையே பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே முன்நிற்றலின் இயங்காவியலிலிருந்து தப்பித்து நின்று பேச வேண்டுமெனில் வேண்டுமென்றே ஒரு 'புரியாத மொழியை'-acommunicative strategyயைப் பின்நவீன நிலைச் சிந்தனையாளர்கள் கைக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இத்தகைய அறிமுக உரைகளில் இதற்கு நேர்மாறாகப் 'புரிகிற' மாதிரிப் பேச நேர்வது இரண்டாவது சிக்கல்.

2. மார்க்சியரான நீங்கள் எங்ஙனம் பின்நவீன நிலைச் சிந்தனைகளில் ஈடுபாடு கொள்ள நேர்ந்தது என்பது என்னிடம் அடிக்கடி கேட்கப்படுகிற ஒரு கேள்வி. நான் ஒரு விஞ்ஞான ஆசிரியன். முப்பதாண்டுகளுக்கும் மேலாக அரசுக் கல்லூரிகளில் இயற்பியல் சொல்லிக் கொண்டிருப்பவன். இயற்பியலில் எனக்குப் பிடித்த பாடம் 'மாடர்ன் பிசிக்ஸ்'. பெயர்தான் நவீன இயற்பியல் என்றபோதிலும் அது பேசுகிற பல விசயங்கள் நவீனத்தைத் தாண்டியவை. ஒரு சிலவற்றைச் சொல்கிறேன். முதலில் அய்ன்ஸ்டினின் சார்பியல் கோட்பாடு: எதுவும் முற்றுண்மையானதல்ல, எல்லாம் சார்பானதே என்கிறது இது. உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான எல்லைக் கோடு துல்லியமானதல்ல; எல்லாவற்றுக்கும் அடிப்படை ஆதாரமாக உள்ள பொதுச் சட்டகம் ஒன்று கிடையாது; காலம் - வெளி ஆகியவற்றுக்கிடையேயான பிரிகோடும் கூடத் துல்லியமானதல்ல எனப் பல செய்திகளை இது முன்வைக்கிறது. அடுத்து குவாண்டம் இயற்பியல்: இயற்கையின் இருமைத் தன்மையை duality/ambiguity இது சுட்டிக் காட்டுகிறது. பொருட்களுக்குச் சாராம்சமான பண்புகள் சாத்தியமில்லை. 'சாரம்' என்கிற கருத்தாக்கமே இங்கு கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. 'சாரம்' கிடையாது என்கிற போது 'ஒற்றை அடையாளம்' என்பதும் பிரச்சினைக்குள்ளாகிறது. மூன்றாவது, எய்சன்பர்கின் உறுதியின்மைக் கோட்பாடு: நமது அறிவுத் தொகுப்புகளின் எதையும் உறுதியாகச் சொல்லிவிடக் கூடிய தன்மையை இது கேலி செய்கிறது. 'உறுதிப்பாடு' - certainity - தகர்கிறது. நான்காவது: நேரற்ற இயற்பியல் Non-linear Physics. நமது அறிவுத் தொகுப்புகள் இதுகாறும் இகழ்ந்து வந்த 'குழப்பம் - chaos' என்கிற கருத்தாக்கத்தை இது தனக்குள் ஏற்றுக் கொள்கிறது. இயல் உறவுகளுக்கிடையேயான நேர் தன்மையை இது கேள்விக்குள்ளாக்குகிறது. ஒற்றைத் தீர்வை முன்வைக்கும் நேரியல் சமன்பாடுகளையும் இது போதாது என்கிறது. கடைசியாக Fuzzy Logic என்கிற கணிதக் கருத்தாக்கம் 0×1 என்கிற இருமை எதிர்மைகளின் அடிப்படையிலான தர்க்க அறிவை இது பிரச்சினைப்படுத்துகிறது. இறுக்கமான எல்லைக் கோட்பாடுகளுக்கு இடையிலான சாத்தியப் பாடுகளின் மீது இது கவனம் குவிக்கிறது. 0 மற்றும் 1 ஆகியவற்றுக் கிடையேயான மட்டங்களை - levels - இது ஏற்றுக் கொள்கிறது, பாராட்டுகிறது. இந்தக் கோட்பாடுகள் அனைத்தும் உறுதிப்பாடு, மனிதப் பகுத்தறிவு, புறவயப் பார்வை, எதார்த்தம், உண்மை, தொடக்கப்புள்ளி (origin) இயற்கை, சாராம்சம், ஒற்றை அடையாளம், ஒருங்கிணைந்த தன்னிலை ஆகியவற்றின் அடிப்படையிலான நவீனத்துவப் பார்வைகள் - நவீனத்துவ அரசியல் - நவீனத்துவ இலக்கியம் ஆகியவற்றைப் பற்றிய புதிய கேள்விகளை உருவாக்குகின்றன. விஞ்ஞானம் எளிதில் ஏற்றுக் கொண்ட இந்த உறுதியின்மை, நிகழ்வுகளின் ஒற்றைத் தன்மை, இயற்கையின் பன்மைத் தன்மை, புறவயப் பார்வையின் சாத்தியமின்மை, ஒருங்கிணைந்த தன்னிலையின் சாத்தியமின்மை ஆகியவற்றை நமது அரசியலுக்குள்ளும் இலக்கியத்திற்குள்ளும் அறிதல் முறைக்குள்ளும் கொண்டுவர முயலும்போது தவிர்க்க இயலாமல் நாம் பின்நவீன நிலைச் சிந்தனைகளின்பால் ஈர்க்கப்படுகிறோம். இதன் விளைவாக அறிதல்/அரசியல்/படைப்பு முதலான நமது பழைய கருத்தாக்கங்களெல்லாம் ஆட்டம் காண்கின்றன.

3. நமது சமகால அரசியல் சூழலை இந்தப் புரிதலின் அடிப்படையில் எதிர்கொள்ளுதல் அவசியமாகிறது. ஒருபுறம் சோசலிசம், மனிதாயம், மானுட விடுதலை முதலிய பெருங்கதையாடல்களின் தகர்வு. இன்னொருபுறம் உலகமயம் என்கிற பெருங்கதையாடல், தேசிய

*சூலை 21, 2002 அன்று சென்னையில் 'கலை' இதழ் நடத்திய கருத்தரங்கொன்றில் பகிர்ந்து கொண்ட குறிப்புகள் - சிலவற்றைச் சுருக்கியும் சிலவற்றை விரித்தும்.

இறையாண்மைகளைக் கடந்த ஒற்றை அதிகார மய்யத்தின் உருவாக்கம். ஒருபக்கம் இதுகாறும் சிதறுண்டிருந்த குரல்கள் தம்மை உறுதி செய்து கொள்ளும் தகைமை, தமது தனித்துவ அடையாளங்களை வலியுறுத்தும் தன்மை. மறுபுறம் ஒற்றைக் கலாச்சார மாதிரியைக் கட்டமைக்கும், பன்மைத் தன்மையைச் சகித்துக் கொள்ளவியலாத பாசிச சக்திகளின் எழுச்சி. சமூகத்தைப் பாசிசமயமாக்குவதில் கதையாடல்கள், மொழியின் பங்கு. தொழில்நுட்ப அறிவியல் - Techno Science - என்பது மனித வாழ்வின், சமூக வாழ்வின் பிரிக்கவியலாத தன்மையாக மட்டுமல்ல மனித/சமூக வாழ்வின் மீது மேலாதிக்கம் செய்வதாகவும் பரிணாமம் கொண்டுள்ளது. 'மொபைல் ஃபோன்' என்பது இன்று மனித உடலின் ஓரங்கமாக மட்டுமின்றி மனித வாழ்க்கை, குடும்பம், வீடு, அலுவலகம், பணி, நெருக்கம், காதல் ஆகியவற்றிற்குப் புதிய விளக்கத்தையும் மதிப்பீடு களையும் அளிக்கும் ஒரு கருத்தாக - idea - ஆக மாறியுள்ளது. communication என்பதன் பொருள் இன்று கொண்டுள்ள பரிணாமம் வியக்கத்தக்கது. எதார்த்தத்தின் இடத்தில் Hyper Reality, Illusion, Virtual Reality, கிராஃபிக்ஸ். மொழி ஒரு பொருளைச் சுட்டுவதாக அமையும் தன்மையையே இவை அனைத்தும் பிரச்சினைக்குள்ளாக்குகின்றன (crisis of referent). பொருளாதார நடவடிக்கைகளும் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளன. பழைய நோக்கில் பார்க்கும்போது அபத்தம் என்கிற நிலையை இன்றைய பொருளாதாரம் எட்டியுள்ளது. மூலதன இயக்கத்தில் நேரடியான பொருள் வணிகத்தின் பங்கு குறைகிறது. பங்குச்சந்தை இன்டர்நெட் வணிகம் - e commerce - ஆகியவற்றின் பங்கு அதிகரித்திருக்கிறது. பங்குச்சந்தை மதிப்பீடுகளைப் பாதிக்கும் காரணிகளில் பொருளியல் தொடர்பான உண்மை நிகழ்வுகளின் பங்கு குறைந்து வருகிறது. மொத்தத்தில் 'பொய் எதார்த்தம்' - Virtual Reality (அதாவது எதார்த்தத்தில் இல்லாது ஆனால் நடைமுறையில் செயல்படுகிற எ.டு: - Virtual University) என்பது மேலும் மேலும் உண்மையாகவும் அதே நேரத்தில் உண்மையான எதார்த்தம் மேலும் மேலும் உண்மையற்றதாகவும் மாறுகின்ற காலத்தில் நாம் வாழ்கிறோம். குளோனிங், ஜீன் பொறியியல், பொய் எதார்த்தம், ப்ளாஸ்டிக் சர்ஜரி, நரைநீக்கும் மை, செல்ஃபோன், செயற்கைப் புத்தி (AI-Artificial Intelligence), செயற்கை உயிர் (AL-Artificial Life), ஆர்டிலெக்ட், சைபோர்க் - இதுவே நம்மைச் சுற்றியுள்ள, வேகமாய் வளர்ந்து வரும் தொழில்நுட்ப - அறிவியல் சூழல்.

4. எனினும் நமது அரசியல் என்பது இன்றும் நவீனத்துவ அரசியலாகவே இருக்கிறது. பழைய மொழியிலேயே சிக்குண்டு கிடக்கிறது. உறுதியான மையமுள்ள ஒரு மனிதன், வர்க்கம், சாதி, தேசம், சமூகம் ஆகியவற்றை விளிப்பதாகவே நமது அரசியல் மொழி உள்ளது. இவை ஒவ்வொன்றையும் வேறுபாடற்ற, வித்தியாசங்களில்லாத இயற்கை களாகவே நமது அரசியல் அணுகுகிறது. அடையாளம் மற்றும் சகோதரத்

துவம்/தோழமை ஆகியவற்றை வித்தியாசங்களற்ற பொதுமைகளின் அடியாகவே நமது அரசியல் வரையறுக்கிறது. இந்த அடிப்படையிலேயே அது தனது மற்றமையை/எதிரியைக் கட்டமைக்கிறது. 'பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள், பாரில் கடையரே எழுமின் வீறு கொண்டே தோழர்காள்!' என்கிற சர்வதேச கீதத்தைக் கேட்டால் இன்றும் தன் நெஞ்சு அடைப்பதாகச் சொல்லுகிற ழாக் தெரிதா தனது சமீபத்திய எழுத்துகளில் இந்தப் பிரச்சினையை முன்வைக்கிறார். 'ஓ! என் நண்பர்களே, ஒரு நண்பன் கூட இல்லையே' என்கிற மான்டேய்னின் மேற்கோளை எடுத்துக்கொண்டு இன்றைய அரசியலைக் கட்டவிழ்க்கிறார் தெரிதா. மேற்குறித்த அடிப்படையிலான நண்பர்கள் × எதிரிகள் என்கிற (வித்தியாசங்களற்ற தொகுதிகளாக உள்ள) இருமைகளுக்கிடையேயான பகையாகவே நமது அரசியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. எனினும் நண்பர்கள், தேசம், குடும்பங்கள், வர்க்கம், சாதி எதுவுமே வித்தியாசங் களற்ற ஒருபடித்தான சமூகங்களல்ல. இயற்கையான சகோதரத்துவம்/ சகோதரித்துவம் என்பதொன்றுமில்லை. இவற்றின் அடிப்படையிலான நல்ல குடியரசு, பூரண சனநாயகம் எல்லா முந்தான். அனைத்தும் கட்டமைக்கப்பட்டவையே. மொழியின் வீழ்படிவுகளே. இவை அனைத்துமே வித்தியாசங்களை மூடி மறைக்கின்றன. உலகப் பிரச்சினைகள் அனைத்திற்குமான விளக்கச் சட்டகங்களைக் கொண் டுள்ளதாக உரிமை கோருகின்றன. உறுதிபடப் பேசுகின்றன. பெருங்கதை யாடல்களை முன்வைக்கின்றன. பல்வேறு சாத்தியங்களுடன் தொடர்பு படுத்தி உறவுகளை (network) ஏற்படுத்த இயலாத ஒற்றைத் தீர்வுகளைச் சொல்கின்றன. இவை பெரும்பாலும் பாசிசமாக முடிகின்றன. அல்லது எதேச்சாதிகாரமாக நிலைகொள்கின்றன. கருத்தியல் மீது மார்க்ஸ் வைத்த விமர்சனங்களை மார்க்சியத்தின் மீது ஏற்றிப் பார்க்காததாலேயே மார்க்சியத்தில் எதேச்சாதிகாரம் உருப்பெற்றது. மனிதகுலத்தின் இறுதி விடுதலையை ஈட்டித் தருவதாக அது பெருங்கதையாடியது. ஒன்றை நினைவிற் கொள்ளுதல் அவசியம்: கொடுங்கோன்மையின் மூலாதாரங்கள் கொடுங்கோலர்களோ துப்பாக்கிகளோ கொடிய நிறுவனங்களோ அல்ல. கொடுங்கோன்மை என்பது கொடுங்கோன்மையின் மொழியிலிருந்தே தொடங்குகிறது. எ.டு: ப்ரவீண் டொகாடியா, நரேந்திர மோடி, அத்வானி, வாஜ்பேயி முதலியோரின் பேச்சுக்கள்.

5. இப்படி தேசம், நாடு, குடிமக்கள், புரட்சி எல்லாவற்றையுமே அர்த்தமற்றவையாகவும் மொழிக்கட்டமைப்பாகவும் சொல்வதாலேயே பின்நவீன நிலைச் சிந்தனைகளை 'பொறுப்பற்ற தத்துவம்' (irresponsible philosophy) என அதன் விமர்சகர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இது மட்டுமன்று, ஒன்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தகுதி (propriety), நோக்கம் (intentionality), விருப்புறுதி, சுதந்திரம் (liberty), மனச்சாட்சி, பிரக்ஞை, சுயம், தன்னிலை, தனிமனிதன், சமூகம் முதலான அனைத்துத் தத்துவ-அரசியல்

வகையினங்களையும் பின்நவீன நிலைச் சிந்தனைகள் கட்டவிழ்க்கிற நிலையில் அரசியல் பிரச்சினைகளில் முடிவுகள் எடுப்பது, தீர்வுகள் மேற்கொள்வது இனி முடியுமா? சனநாயகம், நீதி ஆகியவை இனியும் சாத்தியமா? அவற்றிற்கான அரசியல் நடவடிக்கைகள் யாவை? சரி/தவறுகளை, நீதி/அநீதி ஆகியவற்றை இனி நாம் துல்லியப்படுத்திப் பிரித்துப் பார்க்க இயலாதா? மனித உரிமைகள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பவற்றையெல்லாம் இனி கண்டுகொள்ளாமல் விட்டுவிட வேண்டியதுதானா?

6. 'சட்டம்' என்பது கட்டவிழ்ப்பிற்கு அப்பாற்பட்ட ஒன்று அல்ல. ஓர் அதிகாரத்தின் (authority) பெயராலேயே சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. எனவே எல்லாச் சட்டங்களும் வன்முறையையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. தேச வழமைகளின் அடிப்படையில் சட்டங்கள் உருவாக்கப்பட்டன என்றால் இந்தச் சட்டங்களை எல்லாம் மதிப்பீடு செய்கிற உயர் சட்டம் ஏதும் உண்டா? இந்தச் சட்டங்கள் எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டன?

இயற்கை?

பகுத்தறிவு?

இல்லை ஏதேனும் ஓர் அருள் வெளிப்பாடாக, திருவெளிப்பாட்டுச் செய்தியாக (Revealation) அது வெளிப்போந்ததா? பின்நவீனச் சிந்தனைகளைப் பொருத்தமட்டில் எதையும் இயற்கை/இயல்பானவை என அவை ஏற்றுக் கொள்வதில்லை. பகுத்தறிவையும்கூட அவை வன்முறை எனக் கட்டவிழ்க்கும். எனவே பகுத்தறிவு, இயற்கை என்பன எதையும் அளவிடும் தரங்களாக இருக்க முடியாது. இரண்டுமே மொழியின் கட்டுமானங்களில் சிக்கியவை, கட்டவிழ்க்கப்பட வேண்டியவை. நீதி என்பது சட்டத்திற்கு அப்பால், வெளியே நின்று கொண்டிருக்கிறது. சட்டத்தின் அடிப்படை என்பதாகப் பகுத்தறிவோ, இயற்கையோ இருக்க இயலாது எனில் பின் அதை ஓர் அருள்வெளிப்பாடு என்று ஏற்றுக் கொள்வதா? தெரிதாவைப் பொருத்தமட்டில் 'நீதி என்கிற கருத்து' (idea of justice) எல்லா அனுபவங்களுக்கும் அப்பாற்பட்ட ஓர் அனுபவமாக - 'சாத்திமின்மையின் அனுபவமாக' உள்ளது. வேறு எதனுடனும் இணைத்து (articulate) அதைச் செயல்படுத்த முடியாது. எனவே அதைக் கட்டவிழ்க்கவும் முடியாது. அதை ஓர் அருளுணர்வுத் தன்மையுடனேயே (mystical way) புரிந்து கொள்ள வேண்டும். 'நீதி என்கிற கருத்து' என்றென்றைக்கும் சுருக்கிப் பார்த்துவிட இயலாததாக (irreducible) உள்ளது. மற்றமை என்கிற தனித்துவத்தின் ஒற்றைத் தன்மை என்றென்றைக்கும் வேறுபட்டதாக உள்ளதன் விளைவாகவே நீதி இந்தத் தன்மையைப் பெறுகிறது. மற்றமையை அதற்குரிய அளவுகோலால் மட்டுமே அளக்க முடியும். வாதியின் அளவுகோலோ பொது அளவுகோலோ அதற்குப் பயன்படாது. எனவே நீதி என்பது கையகப்படக் கூடியதாக உலகத்தில் எங்கும் இருந்து கொண்டிருக்கவில்லை. 'நீதி குறித்த ஒரு முடிவற்ற

கருத்து' மட்டுமே இங்கு உள்ளது. தெரிதா சொல்கிறார்: நீதி எங்குமே இல்லை என்பதால் நீதியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கும் கடமை உனக்கில்லை எனப் பொருளல்ல. 'நகரத்தின் ஏதோ ஒரு தோரணவாயில் வழியாக ஒரு தேவதூதனைப் போல அது எந்தக் கணத்திலும் உள்ளே நுழையலாம்.' எனவே நாம் காத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நீதி பெற்றுத் திருப்தி அடையும் வேட்கையை நாம் ஒத்திப் போட்டாக வேண்டும். பின்நவீன நிலைச் சிந்தனைகளின் மொழியில் ஒத்திப் போடுதல் (deferral) என்பதும் கட்டவிழ்ப்பதும் ஒன்றுதான். இது நம்மை ஒரு வியக்கத்தக்க முடிவுக்கு இட்டுச் செல்கிறது: 'கட்டவிழ்ப்புதான் நீதி'. எந்த ஒரு சட்டமோ நிறுவனமோ தான் முற்றுண்மையான நீதியைக் கொண்டிருப்பதாக உரிமை கொண்டாடும் போது கட்டவிழ்ப்பு அதை ஏற்றுக் கொள்ளாது. இந்த மறுப்பை அது நீதியின் அடிப்படையிலேயே மேற்கொள்கிறது என்பது முக்கியம். சாக்ரடீஸ் நீதியைத் தத்துவத்துடன் ஒப்பிட்டார். பின்நவீனச் சிந்தனை அதைக் கட்டவிழ்ப்புடன் ஒப்பிடுகின்றன. நீதி குறித்த பகுத்தறிவுச் சொல்லாடல்களை உரித்து எறிவது என்கிற அடிப்படையிலேயே நீதியும் கட்டவிழ்ப்பும் இங்கே சமனப்படுத்தப்படுகின்றன. ஒரு தேவதூதனைப் போல நீதி வந்து இறங்குவது அப்போதுதான் சாத்தியம்.

7. நீதிக்குச் சொன்னது ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் சனநாயத்திற்கும் பொருந்தும். சனநாயகமும் கையகப்படும்படி வந்து முடிந்துவிடுவதில்லை. அது எப்போதுமே, எங்குமே முழுமையற்றதாகவும் போதுமற்றதாகவுமே இருக்கிறது. எதிர்காலத் தன்மையுடையதாகவே உள்ளது. வரையறுக்கவோ விவரிக்கவோ இயலாததாகவும் அது உள்ளது. அதற்காகவும் நாம் காத்திருக்கவே வேண்டியுள்ளது. திருப்தி கொள்வது சாத்தியமில்லை.

8. ஆனால் அரசியல் என்பது வெறும் காத்திருப்பு அல்ல. கட்டவிழ்ப்பு என்பது ஏதோ ஒரு வகையில் இடதுசாரி அரசியலுக்குப் பயன்பட வேண்டும் என்கிறார் தெரிதா. தனது கட்டவிழ்ப்பு மார்க்சியப் பாரம்பரியத்திற்குப் புறநடை அல்ல எனவும் அவர் கருதுகிறார். மேற்குறித்த புரிதல்களின் அடிப்படையில் நீதிக்காகவும் சனநாயகத்திற்காகவும் எடுக்கப்படுகிற முடிவே (decision) நமது அரசியலை ஆற்றுப்படுத்த வேண்டும். இங்கு நீதியில்லை, சனநாயகம் இல்லை என்கிற புரிதலே, புரிதலின் அடிப்படையிலான நமது இருப்பே, செயல்களே, நீதி, சனநாயகம் ஆகியவற்றிற்கான காத்திருப்பு ஆகும். பழைய மொழியின் கட்டமைப்பில் சிக்கி அரசியல் இழந்து கிடக்கும் நமது இடதுசாரி அரசியலை (நமது சூழலில் இது தலித் அரசியல் போன்றவற்றையும் உள்ளடக்கும்) மறு அரசியலாக்கம் செய்வதே (Repoliticisation) கட்டவிழ்ப்பின் இன்றைய பணியாக இருக்கும். அதுவே இன்றைய அரசியலைச் செயலுக்கு உந்தும். எனவே சனநாயகம்/நீதி குறித்த இன்றைய மொழியை நாம் அழிக்க

வேண்டும். எல்லா அரசியலையும் மீள் அரசியலாக்கம் செய்ய வேண்டும். எல்லா மதிப்பீடுகளையும் மறு மதிப்பீட்டுக்குள்ளாக்க வேண்டும்.

9. இன்றைய அரசியல் சூழலை எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய ஆபத்து பாசிசம். இது வித்தியாசங்களை மறுக்கிறது. ஒருவகையான மொழியையும் ஒரு குறிப்பிட்ட வகையிலான சிந்தனை முறையையும் மட்டுமே நிறுவனப்படுத்துவதில் அது வெற்றி கண்டு வருகிறது. புதிய புதிய பெருங்கதையாடல்களைக் கட்டமைக்கிறது. தனது பேச்சு முறையை, சொல்லாடல்களை மட்டுமே அதிகாரபூர்வமானதாகவும் முழுமையான மேலாதிக்கம் செய்யத்தக்கதாகவும் அது நிறுவி விடுகிறது. இதன் மூலம் வித்தியாசத்தை வலியுறுத்தும் மற்றமையை அது வெளியேற்றுகிறது. அழித்தொழிக்கிறது. நாசிகளின் பாசிசம் முதலில் யூதர்களின் மொழியை ஒழித்தது. பாசிசம் மேற்கொள்ளும் இந்த மொழிச் செயற்பாடுகளை இடதுசாரி அரசியல் எதிர்கொள்ளத் திராணியற்றுக் கிடக்கிறது. பன்மைத் துவங்களை, அவற்றின் சிறுகதையாடல்களை, அவற்றின் மொழிகளை முதன்மைப்படுத்த, முன்னிலைப்படுத்தத் தவறி நிற்கிறது. பாசிச மொழியைக் கட்டவிழ்த்து அதன் கொடூரங்களை வெளிப்படுத்துகிற பணியின் முக்கியத்துவத்தை உணராமல் இருக்கிறது.

10. பெருங்கதையாடலின் சிதைவைப் பின்நவீனச் சிந்தனைகள் பறையறிவித்தபோது பெரிதும் மகிழ்ந்து களி கொண்டிருக்க வேண்டியவர்கள் எழுத்தாளர்களே. ஆனால் தமிழ்ச் சூழலில் அவ்வாறு நடைபெற இயலாமற் போனது துரதிர்ஷ்டமே. பெருங்கதையாடல்களின் சிதைவு என்பது ஆக்க இலக்கியக்காரருக்கு மிகப் பெரிய சுதந்திரத்தை/ விடுதலையை அளிக்கிறது. அவரை அது எல்லா வகையான தளைகளிலிருந்தும் விதிகளிலிருந்தும் விடுதலை செய்கிறது. தமிழ் எழுத்தாளர்களைப் பொருத்தமட்டில் இரண்டு பிரச்சினைகள். பலதரப்பட்ட விசயங்களையும் அவர்கள் படிப்பதில்லை. தவிரவும் பாவ்லோ ஃப்ரெய்ரே சொல்வதுபோல அவர்களைப் பிடித்தாட்டுகிறது 'விடுதலை குறித்த அச்சம்', சுதந்திரம் குறித்த பீதி. விதிகளற்ற சுதந்திரம் மேலும் அதிகம் கவனத்தையும் உழைப்பையும் ஆக்கத் திறனையும் கோருகிறது. அதைக் காட்டிலும் பழைய தடத்தில் உருண்டு செல்வது போதும் என்று பெரும்பாலோர் நினைக்கின்றனர். இது ஆக்க இலக்கியத் துறையில் ஒரு தேக்கத்திற்கே வழி வகுக்கும். 'Everything is in dispute' என்கிறது பின்நவீனச் சிந்தனை முறை. 'படைப்பு' என்பது வாசகனுக்குப் பதில்களைத் தந்து விடுகிறது. மாறாக வாசகனை நோக்கிக் கேள்விகளை எழுப்பும்போது அது 'பிரதி'யாக நிற்கிறது. மேலும் மேலும் கேள்விகளுக்காகத் திறந்து கிடப்பதாகவே அது அமையும். எல்லாவற்றையும் அது கேள்விக்குள்ளாக்கும். It is always in dispute. அதன் மொழி தீர்ப்பையும் நீதியையும் வழங்கிவிட்டாததாக, நெகிழ்ச்சியடைந்ததாக, பல்வேறு வடிவங்கள் எடுக்கக் கூடியதாக, பல்வேறு வடிவங்களுடனும் வலைப்பின்னல்களுடனும்

பொருந்தக் கூடியதாக, பல விடைகளையும் தீர்வுகளையும் சுட்டிக் காட்டக் கூடியதாக அமையும். இலக்கிய ஆக்கம் என்பது தன்னைத் தானே நியாயப்படுத்திக் கொள்ளத்தக்கதாக இருக்கும். தனது நியாயப்பாட்டிற்கு அது வேறு ஏதும் தத்துவத்தையோ விதியையோ அழகியல் கோட்பாட்டையோ நம்பியிராது.

11. நவீனத்துவத்துடன் உயர்த்திப் பிடிக்கப்பட்ட விசயங்களில் முதன்மையானது Humanism - மனிதாயம். மனித அறிவை, அறியும் தன்னிலையாக மனிதனை முதன்மைப்படுத்திய அறிவொளிக்காலச் செயற்திட்டங்களில் (project) ஒன்றாக மனிதாயமும் இருந்தது எனப் பின்னாளில் பின்நவீனச் சிந்தனையாளர்கள் ஒதுக்கிய கதை நமக்குத் தெரியும். முதலாளியம், அரசியல் ஒடுக்குமுறை, இயற்கை வளங்களின் அழிவு, மார்க்சியம்/தாராள சனநாயகம் முதலான பெருங்கதையாடல்கள் ஆகியவற்றுக்கு இணையாக மனிதாயம் குறித்த கருத்தாக்கமும் விளங்கியது என்பதை அவர்கள் வெளிப்படுத்தினர். எத்தகைய மன நிலை மனிதாயத்தைக் கட்டமைத்ததோ அதுதான் யூதப் படுகொலைகளையும் பாசிசக் கொடூரங்களையும் கூடக் கட்டமைத்தது என அவர்கள் நிறுவினர். மனிதனை, மனித அறிவை, மனிதாயத்தை உன்னதப்படுத்தி நின்ற சூழலில் அதற்கு முதல் அடி மார்டின் ஹெய்டெகரிடமிருந்து வந்தது. 'இருப்பு' (Being) மனிதரூபப்படுத்துவதை (anthropologination) அவர் கண்டித்தார். இதை 'அழிக்க' வேண்டும் என்றார். கலாச்சாரங்களுக்கு இடையேயான வேறுபாடுகளையும் தனித்துவங்களையும் சுட்டிக் காட்டிய லெவிஸ்ட்ராஸ் சமூகத்தை வெறும் மனிதத் தொகுதியாகவன்றி அமைப்பியல் உறவுகளால் அது கட்டப்பட்டிருப்பதை விவரித்தார். பல்வேறு சமூக, கலாச்சார, பொருளாதார, உளவியல், மொழியியல் கூறுகளும் ஒன்றுக்கொன்று சந்திக்கும் புள்ளியாக மனிதன் அமைகிறானே யொழிய அதற்கப்பால் அவனுக்கு வேறு முக்கியத்துவமில்லை என்பது கண்டறியப்பட்டது. மொத்தத்தில் 'மனிதாயம்' - Humanism என்பது இனியும் தூக்கிப் பிடிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்பது உறுதி செய்யப்பட்டது. 'பின்நவீன நிலை' என்றும் புகழ்பெற்ற நூலை எழுதியபோது (1979) 'பெருங்கதையாடல்களின் தகர்வை' ல்யோதார்த் முதன்மைப் படுத்தினார். சிறுகதையாடல்கள் அதிகார மய்யங்களை அச்சுறுத்தக் கூடிய நிலையும் சுட்டிக்காட்டப்பட்டது. கருத்தியல் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும் நிலை சற்றே உற்சாகத்துடன் கொண்டாடவும் பட்டது. 1988ல் வெளிவந்த அவரது 'Inhuman' நூலில் அந்தக் கொண்டாட்ட உணர்வு சற்றே தளர்ந்தது. மனிதன் மீது தொழில்நுட்ப அறிவியல் மேலாதிக்கம் செலுத்துகிற இன்றைய காலக்கட்டத்தை அவர் கொஞ்சம் உற்சாகக் குறைவோடு அணுகுவது இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழலை அவர் 'Inhuman' என்று குறிப்பிட்டார். 'மனிதமற்ற' நிலை என நாம் வைத்துக் கொள்வோம்.

மேலும் மேலும் மனிதன் தொழில்நுட்பத்துடன் பிரிக்க இயலாத அங்கமாகி விடுகிறான். மனித உடல் கருவிகளை நம்பியிருக்க வேண்டிய நிலை மருத்துவ சிகிச்சையில் அதிகரிப்பது ஒருபுறம். செயற்கைப் புத்தி, செயற்கை உயிர் (Artificial Intelligence/Artificial Life) முதலிய தொழில்நுட்பங்கள் இன்னொருபுறம். மனித உள்ளீடுகள், மனித ஆணைகள் ஏதும் தேவையின்றி தானே இயங்கக் கூடியதாகவும் பிரச்சினைகளைச் சமாளிக்கக் கூடியதாகவும் சமயங்களில் தன்னைத்தானே புனரமைத்துக் கொள்ளக் கூடியதாகவும் இன்னும் சில போதுகளில் புதிய உயிர்களை (Reproduction) உருவாக்கக் கூடியதாகவும் (எ.டு: கம்ப்யூட்டர் வைரஸ்கள்) கூட அவை அமைகின்றன. மனிதமற்ற சூழலில் வாழ்வது என்கிற நிலையையும் தாண்டி மனிதமற்ற சூழலுக்கு நாம் அடிமையாக நேர்ந்துள்ள சூழலை அவர் சற்றுக் கவலையோடு நோக்குகிறார். ல்யோதார்த் இடதுசாரிப் பாரம்பரியம் உள்ளவர் என்பதும் முதலாளியம், முதலாளிய வளர்ச்சி ஆகியவற்றைக் கடுமையாக வெறுப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மனிதமற்ற நிலையின் இரு வடிவங்களாக அவர் (முதலாளிய) வளர்ச்சியையும் செயற்கைப் புத்தி/உயிர் ஆகியவற்றையும் குறிப்பிடு கிறார். மனிதன் மேலும் மேலும் இவற்றிற்கு ஆட்படுவதன் விளைவாக ஏற்படக் கூடிய நெருக்கடிகளின்பாலும் நமது கவனத்தை அவர் ஈர்க்கிறார் (எ.டு: இரண்டாண்டுகட்கு முன்பு எதிர்கொண்ட Y2K பிரச்சினை). தொழில்நுட்பம் மேலும் நுட்பமாக நுட்பமாக நாம் அதற்கு அடிமை யாகும் நிலையும் அதிகமாகிறது. தொழில்நுட்பம் மேலும் நுட்பமாகும் போது அதன் உறுதிப்பாடும் துல்லியத்தன்மையும் அதிகமாகும் என்கிற அதன் பெருமிதம் கூடக் கேள்விக்குறிதான். மீண்டும் Y2K இதற்கு ஓர் எதிர்உதாரணமாக அமைகிறது. புதிய தொழில்நுட்பங்களின் இந்த உடலில்லாத சிந்தனைகளின் (Thought without Body) தன்மையைப் பற்றிப் பாரதூரமாக யோசிக்க வேண்டியுள்ளது.

மனிதச் சிந்தனைகளுக்கும் தொழில்நுட்ப அறிவியல் தர்க்கங்களுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. கணினியில் 'சிந்தனை' என்பது முற்றிலும் தர்க்க வகைப்பட்டது. 1×0 என்கிற இருமைச் சமிக்ஞைகளுக்கு எந்திர கதியில் அது எதிர்வினையாற்றுகிறது. மனிதச் சிந்தனையோ தர்க்கத்திற்குப் பதிலாக ஒப்புமை (analogy), உள்ளுணர்வு (intution) ஆகியவற்றை அதிகம் சார்ந்துள்ளது. தகவல் துணுக்குகளை உள்ளீடாகக் கொண்டு அவற்றைப் பகுத்து வடிவமைப்பது மட்டுமின்றி புதிய எடுகோள்களையும் பிரமாணங்களையும் முன்வைத்துச் செயல்படக்கூடிய சாத்தியம் மனிதச் சிந்தனைக்குண்டு. முன் தீர்மானிக்கப்பட்ட சமிக்ஞைகள், சமிக்ஞை நீக்க முறைகள் இவற்றைத் தாண்டி துல்லியமற்ற, அய்யத்திற்குரிய தகவல் களையும் கூட ஏற்றுப் பகுப்பாய்வு செய்யும் பக்குவம் மனிதச் சிந்தனைக்கு உண்டு.

இந்த இடத்தில் 'துல்லியம்' பற்றிக் கொஞ்சம் சிந்தித்தல் தகும். துல்லியம் என்பது ஒரு தொழில்நுட்ப வகைப்பட்ட பண்பு. இது அதிகார மமதையின் (arrogance) வெளிப்பாடாக அமைவதோடன்றி தூய்மை/ ஒழுக்கம் ஆகிய கருத்தாக்கங்களுக்கு இணையாகப் பாசிசத் தன்மையையும் பெற்றுள்ளது. மனிதனின் மிகச் சிலப் பெருமைகளில் ஒன்று அவன் துல்லியமற்றவனாகவும் தவறுகள் இழைக்கக் கூடியவனாகவும் உள்ளதே. எந்திரம் மிகவும் ஒழுங்குக்குட்பட்டது. மனிதன் ஒழுங்கவிழ்ப்பு அம்சங்கள் (anarchic) நிறைந்தவன். தவறிழைக்காத நிலையும் ஒழுங்குமுறை பிறழாத செயற்பாடுகளும் எப்போதும் பெருமைக் குரியவைகளாக இருப்பதில்லை. எல்லோரும் சுட்டிக்காட்டக் கூடிய ஓர் எடுத்துக்காட்டு: முகவரியில் சில தவறுகள் இருந்தபோதும் நமது ஊர்த் தபால்காரர் நமக்கு வந்த கடிதங்களைச் சரியாகச் சேர்ப்பித்து விடுகிறார். ஆனால் 'ஈ மெய்ல்' முகவரியில் ஓர் எழுத்துப் பிழை இருந்தாலும் தவறு எனச் சுட்டிக்காட்டி (delivery failed) கடிதம் திருப்பப்படுவதை நாம் அறிவோம். துல்லியமும் திருப்தி அடைதலும் மனித சிந்தனையில் கிடையாது.

கணினி வகைப்பட்ட சிந்தனை ஒரு குறிப்பான பணியை நோக்கி, திசையை நோக்கிச் செயல்படுவது (directed). ஆனால் மனிதச் சிந்தனை திசை நோக்கி இயக்கப்படுவது அல்ல, அது படைப்புத் திறன் மிக்கது. மனிதச் சிந்தனையை மேகத்திற்கு ஒப்பிடுவார் ல்யோதார்த். ஓரிடத்தில் நிலை கொள்ளாமல் தத்தித் தத்திச் செல்வது அது. தொடர்ந்து தன்னை உருமாற்றிக் கொண்டே இருப்பது. கணினி வகைப்பட்ட சிந்தனை வெறுக்கும் ஓரம்சம் வித்தியாசம். வித்தியாசங்களை அது ஒதுக்குகிறது. அதன் கரிசனமெல்லாம் ஒன்றே போலத் தரப்படுவதே. தனது செயல்திறனுக்குத் தடையாக உள்ள எதையும் அது ஏற்பதில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக வலி/வேட்கை (Suffering/Desire) என்பது தொழில்நுட்ப அறிவியல் உலகில் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. அது பொறுப்புகளற்றதாகவும் உள்ளது.

முன் தீர்மானிக்கப்பட்ட எதிர்காலம் என்பதற்கு மனிதச் சிந்தனையில் இடமில்லை. சொல்லப்போனால் சிந்தனைக்கான நிபந்தனையாகவே இது விளங்குகிறது. எதிர்கால நிகழ்வுகள் முன் தீர்மானிக்கப்படும்போது சிந்தனைக்கு இடமின்றிப் போய்விடுகிறது.

இத்தகைய Inhuman சூழலை எதிர்த்து நிற்றலைத் தவிர வேறென்ன இன்றைய அரசியலாக இருக்க முடியும் என வினவுகிறார் ல்யோதார்த். ஆனால் இந்த Inhumanismத்தை - மனிதாயமற்ற தன்மையை எதிர்ப்பது என்பது மீண்டும் மனிதாயத்தை நோக்கிச் செல்வதோ இல்லை எந்திரங்கள் இல்லாத எளிமையான வாழ்க்கைக்குத் திரும்புவதோ அல்ல. லெவிஸ்ட்ராஸ் காலத்திலேயே நாம் ஒரு பின் மனிதாயச் சூழலுக்கு (Post Humanism) வந்து விட்டோம். மனிதாயத்தின் மீதான அத்தனை

விமர்சனங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு 'எதிர் - மனிதாயமற்ற நிலை' ஒன்றை - (Anti Inhumanism) - நாம் இன்று கட்டமைப்பது அவசியமாகிறது. கணினி வகைப்பட்ட சிந்தனைகளான துல்லியம்/ ஒழுங்கு, originality (சந்தையின் தத்துவார்த்த நியாயப்பாடே தரமும் originalityயும்தான்) ஆகியவற்றை நமது சிந்தனை முறையிலிருந்து விலக்கிக் கொள்வது ஒருபுறம். சாதீயம்/தீண்டாமை/பாசிசம் உள்ளிட்ட கொடுமைகள் நிறைந்த நம்முடையதைப் போன்ற நாடுகளில் மனித உரிமைகள் குறித்த சொல்லாடல்களின் முக்கியத்துவம் இன்னொருபுறம்.

12. இரண்டு மாற்றுக் கருத்துக்களோடு முடிக்க விரும்புகிறேன்.

அ. டோனா ஹாரவே என்கிற பெண்ணியச் சிந்தனையாளருடையது. மனிதனும் தொழில்நுட்பமும் இணைந்த 'சைபோர்க்' எனப்படும் இருப்பு வடிவை இவர் சிலாகிக்கிறார். பாலியல் வேறுபாடுகளையும் அதன் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளையும் வெல்வதற்கான சிறந்த வழி இது என்று கூறும் ஹாரவே, ஏற்கனவே இந்நிலை தொடங்கிவிட்டது என மகிழ்ச்சி கொள்கிறார்.

ஆ. கணினி வகைப்பட்ட சிந்தனையைக் காட்டிலும் மனித சிந்தனையின் உயர்வு என்பதை நிபந்தனையற்றதாகவோ பெருங்கதையாடலாகவோ மாற்றுவது மிகவும் ஆபத்தானது. பகுத்தறிவு கொண்ட மனித உயிரி மற்ற உயிரிகளைக் காட்டிலும் எப்படிச் சிறந்தது எனப் பரிகாசம் செய்யும் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களின் கருத்து ஒருபுறம். மனித சிந்தனையின் உயர்வு, சிந்தனையாளர்களின் பெருமை ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி அதிகாரம் சேர்க்கும், மூலதனம் குவிக்கும் (சிந்தனையாளர்களின் நூல்களின் விற்பனை மற்றும் படங்கள்/அவர் எழுதிய பேனா, பயன்படுத்திய கண்ணாடி இவற்றை ஏலம் விடுதல்... இப்படியாக) ஒரு முதலாளிய நடைமுறை என மனிதச் சிந்தனையை விமர்சிக்கும் ஒழுங்கவிழ்ப்பாளர்களின் கருத்து இன்னொருபுறம். 'சிந்தனைக்கு ஒரு முடிவு கட்டுவோம்', 'முட்டாள்தனத்தைக் கொண்டாடுவோம்' என்பன இவர்களின் முழக்கங்கள்.

ஜெர்ஸி கோமாதாக்களும் தெருப்பொறுக்கும் நாட்டு மாடுகளும்: அடையாள அழிப்பு அரசியல் சில குறிப்புகள்

குமரன்தாஸ்

பரந்து மேய்ந்து தெருவோரம் பேண்டு வைத்த
காய்ந்த ரொட்டியைத் தின்று
குப்பைத் தொட்டியில் கிடக்கும் விலை உயர்ந்த
தூமைத் துணியை மென்று அசைபோட்டு
குண்டி கழுவிப் போட்ட
தேங்கிக் கிடக்கும் நீர் குடித்துச் சென்றது கோமாதா

-என்.டி. ராஜ்குமார்

எனக்குத் தெரிந்த, பி.காம் படித்துக் கொண்டிருக்கும் மாணவிக்கு ஒரு கனவு. அக்கனவில் எருமை வந்ததாம். அது குறித்து அம்மாணவி தனது தாயாரிடம் சொல்ல, 'அய்யோ! எருமை எமனின் வாகனமாயிற்றே! கனவில் வரக்கூடாதே' என்றிருக்கிறார். அது கேட்ட அம்மாணவி பரீட்சை எழுதப் போகாமலும் சாப்பிடாமலும் ஒரே அழுகையாம்.

எருமை முட்டி எங்காவது யாராவது இறந்து போனதாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வலிமையான அந்தப் பிராணி உண்மையில் எவ்வளவு அமைதியானது; அழகானது. அத்தகைய எருமை மாட்டைப் பற்றி ஏன் இத்தனை மோசமான கற்பிதம்? ஆனால் இதற்கு மாறாக பசு மாட்டை மட்டும் தெய்வீகமானதாகவும் அதன் சிறுநீர் முதல் சாணம் வரை புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கற்பித்தும், மனிதர்களுடன் ஒப்பிட்டு 'அவர் பசு மாதிரி சாது' என்று கூறுமளவிற்கு பசு மாடு உயர்வானதாகக் கருதப்படுகிதே அது ஏன்?

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் எனது சிறுவயதில் எங்கள் தெருவில் இரண்டு வீடுகளில் எருமைகள் வளர்த்தார்கள். எங்கள் வீட்டில் எருமைகள் இல்லை. பசுமாடுகளும் ஆடுகளும் வளர்த்தோம். மேலும் கோழிகள், நாய், பூனையும் உண்டு. நாயும் பூனையும் ஒன்றாகச் சாப்பிடும். எங்களது நாய் வளர்ப்புப் பற்றியும் அதனால் ஏற்பட்ட பிர்ச்சினைகள் பற்றியும் நிறையச் சொல்லலாம். இடை இடையே கிளியும் குயிலும்கூட வளர்த்திருக்கிறோம். ஆனால் அவை பெரும்பாலும் நிலைத்திருப்பதில்லை.

இந்தப் பிராணி வளர்ப்பு எல்லாமே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு படிப்படியாக நின்று போனது. காரணம் நாங்கள் வளர்ந்து பெரியவர்களாக ஆகிப்போனோம் என்பது மாத்திரமல்ல, எங்களது பகுதிச் சூழல் ஏன் தமிழகம் முழுவதும் என்று கூடச் சொல்லலாம், ஏற்பட்டு வரும் மாறுதல் காரணமாக வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளில் மிகுந்த மாறுபாடு வந்து விட்டது.

இன்று எங்கள் வீட்டில் ஆடு, மாடு, கோழி, நாய், பூனை என எதுவும் இல்லை. சிலர் வீட்டில் ஆடு வளர்க்கிறார்கள்; அதுவும் வீட்டுக்கு ஒன்று, இரண்டு என வளர்க்கிறார்கள். அவை குப்பைக் கூழம், பேப்பர் என தெருப் பொறுக்குகின்றன. பக்கத்து வீடுகளில் ஆக்கி வைத்திருக்கும் சோற்றைத் தின்று விடுகின்றன. அல்லது அரிசியைத் தின்று வயிறு ஊதிச் சாகின்றன. இதனால் பக்கத்து வீட்டுப் பெண்களுக்கிடையே சண்டை வேறு.

மாடுகள் நிலைமை இதைவிட மோசம். அவற்றின் பசிக்கு ஒரே ஆதாரமாக இருப்பவை சினிமா போஸ்டர்கள்தான். மற்றபடி தெருவில் கிடக்கும் பேப்பர்கள் கழிவுத்துணிகள் போன்றவற்றைத் தின்று உயிர் வாழ்கின்றன. முன்பெல்லாம் வீடுகளில் வளர்க்கப்படும் ஆடுகளும் மாடுகளும் பகலில் தோப்புகளுக்குச் சென்று மேய்ந்துவிட்டு மாலையில் திரும்பிவிடும். மாடு வளர்ப்பவர்கள் பல வீடுகளில் இருந்து சேகரித்து வைத்திருக்கும் சோறு வடித்த தண்ணீரை மாலையில் தாகத்துடன் வரும் மாடுகளுக்கு வைத்து, பாலைப் பீய்ச்சிக் கொண்டு பட்டியில் அடைப்பார்கள்.

வீட்டுத் தேவைக்குப்போக மீதம் உள்ள பாலை நாலைந்து வீடுகளுக்கு விற்பார்கள். மாடுகளும் அதிகம் கறப்பதில்லை. காலையில் இரண்டு லிட்டரும் மாலையில் ஒரு லிட்டரும் கறக்கும். ஆனால் நிலமை இப்போது அப்படி இல்லை. மாடுகள் தோப்புகளுக்குச் செல்வதில்லை. கடைத்தெரு, மார்க்கெட் போன்ற இடங்களில் பிறமாடுகளுடனும் மனிதர்களுடனும் நாய்களுடனும் போட்டி போட்டு வாழ்கின்றன. டீக்கடைக்காரர்கள் அயரும் சமயங்களில் காக்கைகள் போல் சட்டென இரண்டு போண்டாக்களைக் கவ்விக் கொண்டோடுகின்றன. தெருவோர இட்லிக் கடை மாஸ்டர்கள் திரும்பும்போது மாவுச்சட்டியில் வாய் வைத்து கிடைக்கும் மாவை நக்கிச் செல்கின்றன.

இந்தத் திருட்டுக் 'கோமாதாக்களை' முதுகில் அறைவதற்கென்றே ஒவ்வொரு கடைக்காரனும் வசமான கம்புகளை வைத்திருக்கிறான். இதைவிடக் காய்கறி மார்க்கெட்டுக்குச் சென்று பார்த்தால் தெரியும்; காய்கறி விற்கும் பெண்கள் இந்த மாடுகளுடன் அன்றாடம் நடத்தும் போராட்டம் எப்படிப்பட்டதென்று. ஏன் இந்த நிலை? இந்த மக்கள் தங்களது மாடுகளையெல்லாம் தெருவுக்கு விரட்டிய காரணம் என்ன?

நான் திருவாரூர் மாவட்டத்திலுள்ள என் தோழரின் கிராமத்திற்குச் செல்லும்பொழுதெல்லாம் அங்குள்ள மாடுகளைக் கண்டு ஆச்சர்யப் பட்டுப் போயிருக்கிறேன். அங்கு காளைகள் மட்டுமே நாட்டு மாடுகளாக இருக்கும். பசுக்கள் எல்லாமே அந்நிய இனங்களான ஜெர்ஸி, முர்ரா போன்றவையோ அல்லது கலப்பின வகை மாடுகளோதான். ஒரு வீட்டில் கூட நாட்டுப் பசுவைக் காண முடிவதில்லை. நாட்டுக்காளைகளும் பார வண்டிகளில் பொருத்தப்படுவதற்கென்று (காயடிக்கப்பட்டு) மிகக் குறைவாகவே இருக்கின்றன. அந்தக் காளைகளுக்கும் அழகான பெரிய கொம்புகளைக் கருக்கி மூழியாக்கி வைத்திருப்பது தனிக்கதை.

காலப்போக்கில் வண்டி மாடுகளும் அழிந்து போவதற்கான வாய்ப்பிருக்கிறது. முன்பு உழவுக்கும் நெல்லடிப்பிற்கும் காளைகள் பயன்பட்டதற்கு மாறாக இன்று எந்திரம் பயன்படுவதைப் போல் நாளை லாரி மற்றும் சாலைப் பெருக்கத்தால் இன்று காணப்படும் ஒன்றிரண்டு பார வண்டிகள் ஒழிவதுடன் நாட்டுக் காளைகளும் ஒழிந்து போகும். தமிழனது மாட்டை மியூசித்தில் பார்த்துக் கொள்ளலாம்.

❍

நாட்டுப் பசுக்கள் அதிகமாகக் கறப்பதில்லை. நமது தட்பவெப்ப நிலைக்கு ஏற்பவும் நமது தேவைக்கு ஏற்பவும் நமது மாடுகள் இருந்தன. சீமை (வெளிநாட்டு) பசுக்கள் லாப நோக்கில் கறவைக்காகவே உருவாக்கப் பட்டவை. அதற்கெனத் தீவனங்களும் கடைகளில் கிடைக்கின்றன. துவக்கத்தில் நேரிடையான சீமைப் பசுக்கள் இங்குள்ள தட்பவெப்ப நிலையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இறந்து விட்டன. மேலும் விலையும் அதிகமாக இருந்தது. பிறகு சீமைக்காளைக்கும் நாட்டுப் பசுக்களுக்கும் இனச்சேர்க்கை மூலம் பிறந்த இன்று பெரும்பான்மையாக காணப்படுகின்ற கலப்பின மாடுகள் இங்குள்ள புவிச்சூழலைத் தாங்கிக் கொண்டன. அரசும் மாடு வாங்கக் கடன் வழங்கி அந்நிய நாட்டு மாட்டினம் இங்கு பெருகத் திட்டம் வகுத்துச் செயற்படுத்துகிறது. இந்த அந்நிய மாடுகள் நாட்டு மாடுகளை விட நீளமானவையாகவும் குட்டை யாகவும் சிறிய கொம்புகளுடனும் பெரிய மடுவுடனும் ஏறக்குறைய ஒரே நிறத்திலும் காணப்படுகின்றன.

1960களில் காமராஜ் ஆட்சியில் அந்நிய நாட்டில் இருந்து கொண்டு வந்து தூவப்பட்ட சீமைக்கருவை இன்று தமிழ்நாட்டு நிலத்தை தனது விசத் தன்மையால் விழுங்கி விட்டாலும் அந்தக் கருவையை வெட்டியும் கரிமூட்டம் போட்டும் பல்லாயிரம் குடும்பங்கள் வாழ்வதைப் போலவும், தமிழ்நாட்டைச் சீரழித்து வரும் லாட்டரிச் சீட்டை விற்றே தம் வயிற்றைக் கழுவ வேண்டிய நிலைக்குப் பல்லாயிரம் தமிழர்கள் தள்ளப்பட்டிருப் பதைப் போன்றே இன்று இந்த சீமைப் பசுவை வளர்த்தும் பால் கறந்து விற்றும் தம் குடும்பத்தை நடத்த வேண்டிய இழி நிலைக்கும் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

❍

ஜெயா டி.வியில் ஃபாரின் நாய் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு பற்றி கால்நடை மருத்துவரின் அறிவுரையை ஒலி - ஒளி பரப்புச் செய்கிறார்கள். அதில் பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு நாய்களைப் பற்றியும் அவற்றின் உணவுப்பழக்கம், குளிப்பாட்டும் முறை பற்றியும் விளக்கமளிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நாயை வெஜிடேரியனாக (?!) வளர்க்க என்ன செய்ய வேண்டும், அதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய மாத்திரைகள் பற்றியும் சொல்லப்படுகிறது.

நாம் குடியிருக்கும் தெருக்களில் அன்றாடம் நூற்றுக்கணக்கான நாய்களைப் பார்க்கிறோம். அதில் பல யாருடைய வீட்டு நாய் என்று சொல்ல முடியாதவையாகத் தெரு நாய் என்ற பெயருடன் வலம் வருகின்றன. சொறி பிடித்தும் எலும்பும் தோலுமாகத் திரிகின்றன. குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை அரசு முனிசிபாலிடி மூலமாக நாய் அடிப்பும் (கொலை) செய்விக்கிறது.

எங்களது சிறுவயதில் தொடர்ந்து நாய் வளர்த்து வந்துள்ளோம். தினம் ஆட்டுப் பாலைப் பீச்சிப் பீச்சி வைத்து நாய்க்குட்டியைப் பராமரிப்போம். ஒவ்வொரு நாயின் இறப்பும் வயதாகி இயற்கையாக நிகழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். ஒரு நாய் வயதாகித் தளர்ந்து போகும்போது எப்படியோ புதிய குட்டி வந்து சேர்ந்துவிடும். நாய் அடிப்பவர்கள் வந்து விட்டால் நாயைப் பிடித்துக் கொல்லையில் கட்டிப் போட்டு விடுவோம். அன்று முழுதும் ஒரே பதட்டமாக இருக்கும். என்றைக்குமில்லாமல் திடீரென்று கட்டிப்போட்டதால் நாய் குரைத்துக் கொண்டேயிருக்கும். இதுபோல் தெருவில் நான்கைந்து வீடுகளில் நாய் வளர்த்தார்கள். இப்பொழுது அதெல்லாம் கிடையாது. ஆனாலும் நாய்கள் தெருக்களில் திரிகின்றன. தற்போது வீட்டுப்பிராணி என்ற நிலைமாறி தெருப்பிராணியாகத் திரிகின்றன. தற்போது புதிதாகத் தோன்றியுள்ள பணக்காரர்கள் மற்றும் பரம்பரைப் பணக்காரர்கள், அரசியல் ரவுடிகள் போன்றோர் வெளிநாட்டு நாய்களை தங்களது பைக்குகளின் முன் தூக்கி வைத்துக் கொண்டு வலம் வருகிறார்கள்.

○

மன்னார்குடியில் எனது தோழர் வீட்டில் இரண்டு அருமையான நாய்கள் நிற்கின்றன. பள பளவென நாட்டு நாய்கள். சோறு ஆக்கும்போதே நாய்களுக்கும் சேர்த்து அரிசி போட்டுவிடுகிறார்கள். நானும் தோழரும் அவர் வீட்டிலிருந்து புறப்பட்டுப் பிற்பட்டோர் சாதித் தெரு வழியாக டவுனுக்கு வரும்போது பி.சி தெரு நாய்களையெல்லாம் உறுமிச் சமாளித்துக் கொண்டு எங்களுக்கு முன் டீக்கடைக்கு வந்து விடுகிறது.

இருபது வருடங்களுக்கு முன் நாய் முன்னே செல்ல ஆடு பத்திக் கொண்டு தோப்புக்குப் போன ஞாபகம். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் முற்றிலுமாக நாங்கள் இழந்து விட்டவை இன்னும்

தோழர் வீட்டில் எஞ்சி நிற்கிறது. இங்கு மாறுதல் என்பது மேலிருந்து கீழ் நோக்கி நிகழ்த்தப்படுகிறது. நமது பூர்வீகப் பண்பாடும் பழக்க வழக்கங்களும் அடித்தட்டு உழைக்கும் தலித் மக்களிடம் எஞ்சி நிற்கிறது. தோழர் மாறுதலை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார். அவர் வளர்க்கும் இரண்டு அல்லது மூன்று ஆடுகள் போடும் குட்டிகள் திடீர் திடீரென இறந்து விடுகின்றன. மாடுகளுக்கும் அடிக்கடி நோய் வந்து விடுகிறது. ஆடு அல்லது நாய்களை ஒட்டிப் பக்கத்து வீட்டாருடன் சண்டை வந்து விடுகிறது.

மாடுகளை மேய்த்து வரும் தோழரது அப்பாவும் மிகவும் தளர்ந்து விட்டார். நாங்கள் ஆடு, மாடு, நாய் ஆகியவற்றை இனி வளர்ப்பதில்லை என்ற முடிவுக்கு வந்த இறுதிக்கட்டம் (சூழல்) அப்படியே தோழர் வீட்டில் இன்று காணப்படுகிறது.

○

நாங்கள் வளர்த்த ஆடுகள் நல்ல பாரம்பரியம் கொண்டவை. ஒவ்வொன்றும் இரட்டைக் குட்டிகளாகவே போடும். சில சமயம் மூன்று குட்டிகளும் போட்டு விடுவதுண்டு. இரண்டு மூன்று என ஈனும்போது மகிழ்ச்சியாக இருந்தாலும் பராமரிப்பது மிகச்சிரமம். இவ்வாறு ஈனும் இரண்டில் ஒன்று, மூன்றில் ஒன்று நிச்சயமாக பேத்தைக் குட்டியாகப் போய்விடும். ஒன்று சுதாரித்து விடும். சுதாரிப்பான குட்டி முட்டி முட்டிப் பாலைக் குடித்துவிடும். சோனிக்குட்டிக்கு பாலைப் பீச்சி பாட்டிலில் அடைத்து ரப்பர் மாட்டி பருக்கி விடுவோம்.

சிறிது காலத்தில் இரட்டைக் குட்டிகளில் ஒன்று மூன்று குட்டிகளில் இரண்டு பிறந்து ஓரிரு மாதம் கழிந்த பிறகு, அதாவது நாங்கள் மிகச்சிரமப்பட்டு பால் பருக்கி வளர்த்தும் பலனின்றி வயிறு ஊதி கழிச்சல் வந்து ஒருவார காலத்திற்குள் இறந்து விடும். இறந்த குட்டியை எங்கள் தாயார் கூடையைப் போட்டு மூடி வைத்திருப்பார்கள். பள்ளிக்கூடம் விட்டு வந்து அதனைப் புதைக்கின்ற வேலையையும் சோகத்துடன் நாங்களே செய்து விடுவோம்.

இதைவிட மோசமான நிலை மாடு வளர்ப்பதில் ஏற்பட்டது. மாடுகள் தோப்புக்கே செல்ல மாட்டேன் என அடம்பிடிக்க ஆரம்பித்து விட்டன. கயிறு கட்டி இழுத்துச் சென்று அடைத்து விட்டு வந்தாலும் வேலியை முறித்துக் கொண்டு காலை பதினொரு மணிக்குள்ளாக கத்திக் கொண்டு வாசலில் வந்து நிற்கும். தோப்பில் அது மேய்வதற்கு பதவல்/புற்கள் போதுமானதாக இல்லை. விவசாயம் இல்லாத எங்கள் ஊரில் அதிகவிலை கொடுத்து வைக்கோல் வாங்கிப் போட்டு வளர்க்க வேண்டியிருந்தது. தினம் இரவு எங்கள் தகப்பனார் புண்ணாக்கு வாங்கி வந்து ஊறப் போட்டு ஒவ்வொரு ஆட்டுக்கும் மாட்டுக்கும் பார்த்துப் பார்த்து வைப்பார். ஆனால் என்ன வைத்தாலும் மாடுகள் 1/2 லிட்டருக்கு மேல் கறப்பதில்லை.

மேலும் தோப்பில் இருந்து பதினொரு மணிக்கே ஓடிவந்து விடும் மாடு புண்ணாக்குத் தண்ணீரையும் வைக்கோலையும் அதிகமாகச் சாரத்துவங்கின. மாலையில் திரும்ப வேண்டிய மாடு காலை அல்லது மதியமே திரும்பும்போது கொல்லைக் கதவு திறந்து விடத் தாமதம் ஆகிற சூழலில் பக்கத்து வீடுகளில் நுழைந்து கிடைத்ததை தின்னத்துவங்கின. பிரச்சினை ஆரம்பித்தது. பக்கத்து வீட்டுப் பெண்களுடன் சண்டை, கண்டதைத் தின்றதால் மாடு வயிறு ஊதிக் கழிய ஆரம்பித்து விடும். வீட்டுக் கொடியில் காயப் போட்டிருக்கும் துணிகளைச் சவைந்து விடும். தோப்பில் இருந்து முன்னதாகத் திரும்பிய மாடுகள் காலப்போக்கில் அப்படியே டவுனுக்குள் நுழைந்து ஏற்கனவே தெரு மாடுகளாகத் திரிபவற்றுடன் கலந்து பேப்பர் பொறுக்கவும் கடைகளில் விழும் வாழைப்பழத்தோல் தின்கவும் போஸ்டர் உரித்துத் தின்னவும் கற்றுக் கொண்டன. துவக்கத்தில் எங்கு திரிந்தாலும் மாலையில் வீடு வந்து புண்ணாக்குத் தண்ணீர் பருகிவிட்டு கொல்லை(பட்டி)யில் வந்தடைந்த மாடுகள் பிறகு வாசலுடன் நின்று தண்ணீர் பருகி விட்டு அதே இடத்திலேயே படுத்து அதிகாலையிலேயே டவுனுக்குள் செல்லத் துவங்கிவிட்டன.

அதேபோல் முன்பு சினைமுற்றி ஈனுகின்ற சமயத்தில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவை மாறாக டவுனுக்குள் எங்கேயாவது அதுவாகவே ஈன்று கன்றுக்குட்டியையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தது. உடனே மாட்டையும் கன்றையும் கட்டிப்போட்டு ஒரு மாத காலம் பராமரிப்போம். தினமும் 1/2 லிட்டரோ 1 லிட்டரோ கறக்கும். இந்நிலை எங்களிடம் ஒருவகையான சுரண்டல் புத்தியை வளர்த்தது. எந்தச் சிரமமும் படாமல் பலன் அனுபவிக்கும் போக்கு வளர்ந்தது.

மறுபடியும் மாடு தன் கன்றையும் அழைத்துக் கொண்டு டவுனுக்குள் சென்றுவிடும். இப்போது பிரச்சினை புதிய வடிவில் வந்தது. மாடு தரும் தொந்தரவை தாங்க முடியாமல் கடைக்காரர்கள் பலமான ஆயுதங் களைக் கொண்டு காலில் வெட்டி விடுவார்கள் அல்லது காலில் அடித்து ஒடித்து விடுவார்கள். மேலும் ஊருக்குள் புதிதாக டவுன்பஸ் விட்ட நேரமாகையால் பஸ் இடித்து மாடு ரோட்டில் விழுந்து கிடக்கும். யாராவது வந்து செய்தி சொல்வார்கள் சென்று பார்த்தால் ரோட்டோரத்தில் மாடு சாணியைக் கழிந்து கொண்டு வீழ்ந்து கிடக்கும். பார்க்கவே பரிதாபமாக இருக்கும். எங்களுக்கு எமது பெற்றோர் மீது கோபம் கோபமாக வரும். மாட்டை வண்டியில் தூக்கி வந்து கொல்லையில் போட்டு நாட்டு வைத்தியம் செய்வார்கள்.

இந்த ஆடு மாடுகளால் நான் மனதளவில் பட்ட துன்பம் நிறைய. முன்பு தோப்புகளில் மேய்ந்து வரும் நாட்களில் மாடுகள் மினுமினுவென்று இருக்கும். பின்நாட்களில் மாடுகள் எலும்பும் தோலுமாக பின்னங்கால்கள் தட்ட சாணியைக் கழிந்து கொண்டு நடக்கும்போது காணச் சகிக்கவில்லை. எப்போதடா இவைகளை விற்றுத் தொலைப்பார்கள் என்றிருந்தது.

நானறிந்தவரை எங்களூர் பார்ப்பனர் வீட்டில் எந்தப் பிராணியும் வளர்ப்பதில்லை. ஒரு சிலர் வீடுகளில் பசுக்கள் மாத்திரம் வளர்த்தனர். அதற்கென்று வேலைக்கு ஆள் வைத்துப் பால் கறக்க, சாணி அள்ளச் செய்தனர். இந்த வேலைகளுக்குப் பிற்பட்ட வகுப்பில் பிறந்த ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் வைத்துக் கொண்டனர்.

பார்ப்பனர்களைப் பொறுத்தவரை நாய், கோழி, ஆடு, எருமை ஆகியவை எல்லாம் தீண்டத்தகாதனதான். ஆனால் இன்று நகர்ப்புற பார்ப்பனர் இறக்குமதி நாய்களை (டாபர்மேன், ஜெர்மன் செப்பர்டு - அல்சேசன், பாக்ஸர்...) வளர்க்கிறார்கள் (எழுத்தாளர் சிவசங்கரி தனது நாயுடன் வார இதழ் ஒன்றில் காட்சியளித்த ஞாபகம். ஜெயா டி.வியில் நாய்களைச் சைவமாக வளர்ப்பதற்கு விளக்கமளித்தனரே அது ஏனென்று இப்போது தெரிகிறது.) அந்நிய நாட்டு நாய்களை வளர்ப்பது தங்களது கௌரவத்தை வெளிக்காட்டும் அடையாளமாக உள்ளதால் பார்ப்பனர் நாய் வளர்க்கிறார்கள். மற்றபடி நாட்டு நாய்க்கும் அவர்களுக்கும் என்றுமே தீராப்பகைதான்.

அதென்ன நாட்டு நாய் மீது வெறுப்பு, சீமை நாய் மட்டும் உசத்தி என்று தோன்றலாம். அது அப்படித்தான். பார்ப்பனருடைய இந்தப் போக்கிற்கு நிறைய உதாரணம் காட்டலாம். ஆங்கிலேயர் வந்து இந்தியத் துணைக்கண்டத்தைக் கைப்பற்றுவதற்கு முன் தாங்கள் கடைப்பிடித்து வந்த எத்தனையோ பழக்க வழக்கங்களைப் பின்பு தேவையை ஒட்டி பார்ப்பனர் மாற்றிக் கொள்ளவில்லையா, அதுபோலத்தான்.

தங்களது பொருளாதார, அரசியல் அதிகார முன்னேற்றத்திற்காக தங்களது பழக்க வழக்கங்களை மிக எளிதாக மாற்றிக் கொள்வதுடன் அதற்குப் பரிகாரங்களையும் கற்பித்து அதனைச் செய்து தங்களது 'ஸ்தானத்தை' நவீன சமூகத்திலும் தக்க வைத்துக் கொண்டார்கள். இன்று ஏற்பட்டுள்ள மாறுதலான சூழலுக்கு ஏற்ப பார்ப்பனர் பலரும் நாட்டுப்பசுக்களை ஓட்டி விட்டு ஜெர்ஸி போன்ற சீமைப்பசுக்களை வாங்கி வீட்டில் கட்டி லிட்டர் கணக்கில் பால் கறந்து கொண்டிருக்கிறார்கள்.

மேலும் தங்களது பாபங்களுக்குப் பரிகாரம் வேண்டியும், நல்ல கதி வேண்டியும் வரும் சூத்திரர்களுக்கு 'கோதானம்' செய் எனச் சொல்லும் பார்ப்பனர் மாடுகளைத் தானமாய்ப் பெற்று வளர்க்கத் தாயராய் இல்லை. ரோடுகளில் திரியும் மாடுகளைப் பிடித்துக் கட்டிப் போட்டு பூசை செய்து ஆயிரக்கணக்கில் பணம் பார்த்துவிட்டு மாடுகளை விரட்டிவிடுகிறார்கள். அம்மாடுகள் தின்னக் கிடைத்த வாழைப்பழத்தையும் தங்களது கழுத்தில் விழுந்த மாலைகளையும் நினைத்துக் கொண்டு மீண்டும் தெருப்பொறுக்க ஆரம்பித்துவிடுகின்றன.

*தினசரிகளில், தொலைக்காட்சியில் 'பெரியவா' பசுப்பாதுகாப்பு பற்றி வாய் கிழிய அருளுரைக்கிறார். ஆனால் அவரது வாரிசுகள் இங்கு பசுக்களை வைத்து மோசடி செய்கின்றனர். இசுலாமியர் மாட்டிறைச்சிக் கடை வைத்துள்ளதெல்லாம் கண்களுக்குத் தெரியும் பெரியவர்களுக்கு தன் சிஷ்ய கோடிகள் கோமாதாக்களை தூமைத்துணி தின்ன விட்டிருப்பது தெரியாது போலும்.

○

உலகில் பல்வேறு பாகங்களிலும் தோன்றிய மனிதர்களும் சரி, பிற உயிரினங்களும் சரி தங்களது சூழலுக்கு ஏற்ப உருவ அமைப்பிலும் நிறத்திலும் வேறுபாடுகளைக் கொண்டிருந்தன. இது நாமறிந்ததே. ஆப்பிரிக்க யானையும் தமிழக யானையும் அதுபோல் குரங்கு, நாய், மாடு, மரம், செடி கொடி என எல்லா உயிரினங்களும் நிறத்திலும் உருவ அமைப்பிலும் வேறுபட்டுள்ளதை நாம் பார்த்துள்ளோம். உலகின் ஒரு பகுதியின் குறிப்பான சூழலில் தோன்றிய சில உயிரிகள் பிற பகுதியில் தோன்றவே முடியாமல் போயும் உள்ளன.

துருவ(பனி) பிரதேசத்தில் வாழும் எஸ்கிமோக்களுக்கும் நமக்குமான வேறுபாடு எவ்வளவு ஆச்சரியப்படத்தக்கது. அதேபோல் ஆரிய இனம் ஒருவிதமாகவும் மங்கோலிய இனம் இன்னொரு விதமாகவும் கறுப்பினம் பிரிதொரு விதமாகவும் இருப்பதை நாம் பார்க்கிறோம். உருவ நிற வேறுபாட்டைப் போலவே உணவு மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளும் புவிச்சூழல் மற்றும் வரலாற்று ரீதியில் அமைந்தவையே. இன்றைக்கும் நாகரீக (?!) உலகின் சட்ட திட்டங்களுக்கும் பண்பாட்டிற்கும் ஒத்துப்போகாத தனித்தன்மையான வாழ்க்கைப் போக்குடன் பழங்குடி மக்கள் இருப்பதையும் காண்கிறோம்.

இத்தகைய பல்வேறு இனத்தனித்துவங்களையெல்லாம் தொழிற் புரட்சியால் கிடைத்த வளர்ச்சியின் துணைகொண்டு ஐரோப்பிய வெள்ளை இனம் ஊடுருவி சிதைத்ததுடன் தனக்கான விதத்தில் மறு வார்ப்பும் செய்தது. இத்தகைய குலைப்பு மற்றும் மறுவார்ப்பு வேலை இன்றும் தொடர்கிறது.

சமீபத்தில் தினசரி ஒன்றில் வெளியான செய்தி 'ஆப்கனில் பிடிபட்ட தீவிரவாதிகளின் தாடியை அமெரிக்கப் போலீசார் மழித்து விட்டனர்' சொல்லப்பட்ட காரணம் பேன் தொந்தரவு. அமெரிக்கர்களுக்குத்தான் தங்களது எதிரிகள் உடல் நலனிலும் எவ்வளவு அக்கறை. இச்செய்தியுடன் நாம் (அமெரிக்க) CIA ஃபிடல் காஸ்ட்ரோவின் தாடியைப் பொசுக்கி விடுவதற்குச் செய்த முயற்சியையும் இணைத்துப் பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். 'தாடி'யைக் கண்டாலே அமெரிக்க ஆட்சியாளர்களுக்குப்

*தினமணி (பிப். 18) செய்தி: பசுப்பாதுகாப்பும், ராமர் கோயில் கட்டுவதும் இன்றைய முக்கிய அரசியல் பிரச்சினை - ஜயேந்திரர்

பிடிப்பதில்லை என்பதுதான் அது. இந்த வெறுப்பு இப்போது (செப்.11க்குப் பிறகு) அமெரிக்காவின் பொது உளவியலாகக்கூட மாறிப்போயிருக்கலாம். அந்த வகையில் தாடி வளர்ப்பது என்பதைத் தங்களது மதக் கோட்பாட்டுக் கடமைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கும் ஆப்கானியரது தாடியை மழித்து விடுவதில் உள்ள அடையாளச் சிதைப்பு வெறியை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது (தாடி வைத்த அமெரிக்கப் பிரபலம் யாராவது உண்டா?)

எப்போதுமே பிறரை ஆதிக்கம் செய்ய, சுரண்ட, அடிமையாக நடத்த முற்படும் எவருமே அந்தப் பிறரது பலவீனம், முட்டாள்தனம் பற்றி பிரச்சாரம் செய்வதும், நிறம், உணவு, உடை, முடி, வளர்ப்புப் பிராணிகள் போன்றவற்றையெல்லம் இழிவுபடுத்தி எனவே தங்களுக்கு அவர்களை 'நாகரீக'ப்படுத்துவதற்கு 'இயற்கை' யாகவே உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குள்ள நியாயத்தையும் கற்பித்தும் கட்டமைத்தும் கொள்வதுடன் அதனைத் தங்களுக்குள்ளும் அந்தப் பிறருக்குள்ளும் சமூக உளவிய லாகவும் மாற்றிவிடுகின்றனர்.

அய்ரோப்பியர்கள் ஆசிய ஆப்பிரிக்க நாடுகள், மக்கள் பற்றி உருவாக்கிய கற்பிதங்களும், அவ்வளவு ஏன் இங்குப் பார்ப்பனியம் நம்மைப்பற்றி உருவாக்கியுள்ள கற்பிதங்களும் இவ்வாறானதே. நாம் இழிவானவர்கள் என்றும் நம்மைப் பாவங்களில் இருந்து காப்பதும் அதற்காக நாம் அவர்களுக்கு (தட்சணை) உழைத்துக் கொடுப்பது நமது கடமையென்பதும் பார்ப்பனரது உளவியலாகவே மாற்றப்பட்டுள்ளதும் நாமறிந்ததே.

இதுபோலவே ஆணாதிக்கமும் தனக்கான கற்பிதங்களை உருவாக்கி அதைச் சமூகமயமாக்கியுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு அதிகாரமும் தனக்கான கருத்தியல் நியாயங்களை உருவாக்கி அதைச் சமூக மயமாக்குவதில்தான் அவ்வதிகாரம் தொடர்ந்து நிலவுவதற்கான சாத்தியப்பாடு உள்ளது.

நமது தமிழ்ச்சூழலில் இந்நிலப்பகுதிக்கான மக்களின் நிறம், உணவு, உடை மற்றும் வளர்ப்புப் பிராணிகள், தானிய வகைகள், பழக்க வழக்கங்கள் போன்றவை முதன் முதலில் பார்ப்பனியத்தால்தான் இழிவானதாகக் கற்பிக்கப்பட்டது. இந்து மதம் மனிதர் துவங்கி பிற உயிரினங்கள் வரை யாரையும் எதையும் விட்டு வைக்கவில்லை. எல்லா வற்றையும் நல்லவை × கெட்டவை, புனிதம் × தீட்டு, உயர்வு × தாழ்வு, தொடக்கூடியவை × தொடக்கூடாதவை எனத் தரம் பிரித்துள்ளது.

காளை மாட்டை சிவனின் வாகனமாக்கியது. பசுமாட்டை கோமாதா, காமதேனு என்று சொன்ன பார்ப்பனியம் எருமை மாட்டை எமனின் வாகனமாக்கி எருமை மீது பயங்கரத்தையும் வெறுப்பையும் ஏற்றியது. இன்றும் பிற்பட்ட சாதியினர் வீடுகளில் குழந்தைப் பிறப்பு முதல் இறப்பு வரையிலான நிகழ்வுகளில் பார்ப்பனரைக் கொண்டு தீட்டுக்கழித்தல் (புண்ணியாதானங்கள்) செய்விக்கும்போது பசுமாட்டு மூத்திரத்தை (கோமியம்) பாலில் கலந்து தீர்த்தம் என்ற பெயரில் எல்லோருக்கும் பார்ப்பனர் குடிக்கக் கொடுப்பதைப் பார்க்கலாம். பசு மூத்திரத்திற்கு இவர்கள் கொடுக்கும் மரியாதையைக் கூட எருமைப் பாலிற்கு கொடுப்பதில்லை.

இந்து மதத்திற்கும் பார்ப்பனியத்திற்கும் எப்போதுமே பசு மீது கரிசனம் இருப்பதாகக் காட்டப்படுகிறது. பசு மூத்திரம், சாணி, பால், உடல் என அனைத்தையுமே புனிதமாகக் கற்பித்து வந்துள்ளனர். சங்கராச்சாரியும் அடிக்கடி பசு வதைத்தடுப்புப் பற்றியும் பசுப் பாதுகாப்பு இயக்கம் பற்றியும் அறிக்கை விடுகிறார்.

சங்கராச்சாரியைப் பொறுத்தவரை பசுப்பாதுகாப்பு என்பதே தலித்துகள், இசுலாமியர் மாட்டிறைச்சியை உணவாக உட்கொள்வதைத் தடுப்பது என்பதாக இருக்கிறதேயொழிய உண்மையில் ஓர் உயிரினம் அழிந்து விடாமல் காக்கும் நல்லெண்ணத்தினால் அல்ல. மேலும் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். உணவாக ஒரு பொருள் பரவலாகப் பயன்படுமேயானால் மக்கள் அப்பொருள் அழிந்து விடாமல் தொடர்ந்து காத்தே வருவர்.

ஆனால் இங்கு நமது வளர்ப்புப் பிராணிகளுக்கு ஏற்பட்டுள்ள அழிவு நாம் உணவாகப் பயன்படுத்துவதால் ஏற்பட்டதல்ல. மாறாக, அந்நிய நாட்டு இனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு நமது உயிரினங்களது இடத்தை வன்முறையாக அபகரித்துக் கொண்டதாலேயே இந்நிலை ஏற்பட்டது. இது கம்பு, சோளம், கேப்பை, நெல் போன்ற பயிர் வகைக்கும் கூடப் பொருந்தும்.

பசுப்பாதுகாப்பு பற்றியும் சுதேசியம் பற்றியும் யார் வாய்கிழியப் பேசுகிறார்களோ அதே இந்துத்துவவாதிகள்தான் ஏகாதிபத்தியங்களுடன் கைகோர்த்துக் கொண்டு நெல் முதல் மாடுவரை இறக்குமதி செய்ய வழியமைத்துக் கொடுத்தனர். தங்களது சிந்தனையிலும் மதத்திலும் 'கோமாதா'வுக்கு வழங்கியுள்ள இடத்தில் நாட்டு மாடுகளை எடுத்து விட்டு ஜெர்ஸியையும், முர்ராவையும் வைத்து விட்டனர்.

ஆவின், கோமாதா பால் பாக்கெட்டுகளில் வெளிநாட்டுப் பசுக்கள் காட்சியளிக்கின்றன. இனி காமதேனுவாக ஜெர்ஸியையும், கோகுலத்தில் கண்ணன் சீமைப்பசுக்களை மேய்ந்து கொண்டிருப்பதாகக் காட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்து மதவாதிகளும் இதனை மகிழ்ச்சியாக

ஏற்றுக் கொள்வர். ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தில் இணையும் அமெரிக்கர்கள் (ஐரோப்பியர் - ஆரியர்) தலையை மழித்துக் குடுமி வைத்துக் கொண்டும் பூணூல் போட்டுக் கொண்டும் இந்தியும் சமஸ்கிருதமும் கற்றுக் கொண்டு பார்ப்பனரை ஒத்த உருவ அமைப்புடன் ஆடிப்பாடுவதைப் பாருங்கள்.

○

எருமை மாட்டுக்கும் நாட்டு நாய்க்கும் இங்கு என்ன நிலையோ அதே நிலைதான் நமக்கும். ஆனால் ஜெர்ஸிப் பசுவைப் போலவே ஓர் அமெரிக்கன் சாதிப்படிநிலையில் பார்ப்பானுடன் இரண்டறக் கலந்து சமூக அதிகாரத்தைப் பெற முடிகிறது. இப்போது யோசித்துப் பாருங்கள், உலகமயமாக்கம் இங்கு திணிக்கப்படுவதற்கும் நமது பூர்வீக அடையாளங்கள் அழிக்கப்படுவதற்கும் அடித்தளமாக இங்கு எது இருக்கிறது அல்லது யார் இருக்கிறார்கள் என்பது புரியும்.

இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களுடைய அடையாளங்களையும் அழித்து அடையாளமற்றவர்களாகச் செய்து அய்ரோப்பிய ஆரிய இன அடையாளத்தை இந்து ஆரிய இன அடையாளத்துடன் கலந்து புதிய பார்ப்பனியத்தைப் புகுத்தும் வேலையை இந்துத்துவம் மேற்கொண்டு வருகிறது. இதனை முன்னின்று நடத்துபவர்கள் பார்ப்பனர்களே. ஏனென்றால் பார்ப்பனர்கள் துணைக்கண்டத்திலுள்ள எந்தத் தேசிய இனத்தையும் சேர்ந்தவர்கள் அல்ல. உதாரணமாக தமிழ்நாட்டில் பிறந்திருந்தாலும் தங்களைத் தமிழன் என்று உணராதவர்கள். தங்களுக்கென்று ஒரு மொழி (தேவ பாஷை சமஸ்கிருதம்), உடை, இருப்பிடம், உணவு முறை, கடவுள், பண்பாடு, தொழில் எனத் தனித்து வாழ்பவர்கள். எங்கு பிறந்திருந்தாலும் எங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் தங்களைப் 'பார்ப்பனர்' என்ற ஒரே அடையாளத்திற்குள் அடைத்துக் கொள்பவர்கள். எந்த ஒரு தேசிய இனமாகவும் உணராதவர்கள்.

அதன் காரணமாகவே தேசிய இன, மொழி அடையாளங்களுக்கான போராட்டங்களைக் கண்டு கொதிப்பவர்கள், தங்களுடையதல்லாத மாற்றுப் பண்பாட்டை, கடவுள்களை, உணவு, உடை, பழக்க வழக்கங்களைப் பழிப்பவர்கள். இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் ஒருலகமாக்கி பார்ப்பனியமயமாக்கிவிடத் துடிப்பவர்கள். இந்த இந்துமயமான அகண்ட பாரதம் அமெரிக்காவின் அடிமையாய் இருப்பதில் இவர்களுக்கேதும் ஆட்சேபணை இல்லை. ஏனென்றால் உற்பத்தியுடன் எவ்விதத் தொடர்பின்றியும் உடல் உழைப்பில் ஈடுபடாமலும் மக்களிடம் இருந்தும் மண்ணிலிருந்தும் அந்நியப்பட்டும் மரம், செடி கொடி பிற உயிரினங்கள் மீது எவ்வித அக்கறையும் இன்றிப் பலனை மட்டும் அனுபவித்துக் கொண்டும் எப்போதும் அதிகார மையங்களுடன் மிக நெருக்கமாக ஒட்டிக் கொண்டும் வாழ்ந்தவர்கள். அதனால் தங்களுக்கு

மேலான அதிகாரங்களுடன் கைகோர்த்துக் கொண்டு தரகர்களாகச் செயல்படுவதும் தேசிய இனங்களுக்குத் துரோகம் செய்வதும் பார்ப்பனரது இயல்பாகவே ஆகிவிட்டது.

பிரிட்டிஷார் இங்கு வந்தபோது அவர்களுக்குத் தரகர்களாகச் செயல்பட்டவர்களும், வேக வேகமாக ஆங்கிலம் கற்றுக் கொண்டு அதிகார வர்க்கத்தினராக மாறிப் போய்த் துணைக்கண்ட உழைக்கும் மக்களையும் விவசாயிகளையும், சுரண்டவும் ஒடுக்கவும் துணை புரிந்தவர்கள் இவர்களன்றி வேறு யார்?

இங்கு பிறந்த தாழ்த்தப்பட்ட மக்களும் மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களும் இந்து மதச் சாதியக் கொடூரங்களில் இருந்து தப்பிப்பதற்காக கிறிஸ்தவ மதத்திற்கு மாறியபோதும், இந்துப் பார்ப்பனியத்தை விடச் சனநாயகவாதிகளாக நடந்து கொண்ட பிரிட்டிஷாரால் கல்வியும் வேலையும் கிடைக்கப் பெற்ற தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூக விழிப்புணர்வும், விடுதலையும் பெற முனைந்தது கண்டு பொறுக்க முடியாத பார்ப்பனர் இந்துச் சனாதனத்தைச் சிதைவின்றி கட்டிக்காக்க வேண்டும் என்ற ஆதிக்க வெறியை இந்தியத் தேச விடுதலைப் போர் என்ற போர்வையுள் மறைத்துக் கொண்டு எல்லோருக்குமான சுதந்திரம் பற்றி வாய் கிழியப் பேசினர்.

ஆனால் மறுபுறம் இவர்களே ஆங்கிலேயருடன் சுமூக உறவு கொண்ட முதல் விசுவாசிகளாகவும் தரகர்களாகவும், முதன் முதலில் ஆங்கிலத்தைக் கற்றவர்களாகவும் உடைகளை அணிந்தவர்களாகவும் விளங்கினர். இவர்களது இந்திய விடுதலைப் போர் என்பதன் பொருள் இந்துப் பண்பாட்டைக் காப்பது என்பதே. ஏனெனில் இவர்கள் கற்பித்த இந்தியா ஓர் இன வகைப்பட்ட தேசமே அல்ல.

பார்ப்பனருடைய 'தேச பக்திக்கு' ஓர் உதாரணம்: இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லர் கை ஓங்கிய ஒரு சூழலில் இங்கிருந்த பார்ப்பனரில் பெரும்பாலோர் ஜெர்மன் மொழி கற்றுக் கொண்டனராம். ஹிட்லர் இந்தியத் துணைக்கண்டத்தை ஒருவேளைக் கைப்பற்றினால் அவனுக்குக் கீழே அதிகார வர்க்கமாகச் செயல்படுவதற்காக. ஆகா! என்னவொரு தேச பக்தி.

பார்ப்பனரது அதிகார வெறி இன்றுவரை மாறவில்லை. அதிகாரங்களை நோக்கி இடம் பெயர்வதில் அவர்களுக்கிணையாக வேறுயாரையும் கூறிவிட முடியாது. இன்றைய நிலையில் சமூகத்தில் எது மிகுந்த அதிகாரம் படைத்ததோ பொருளாதாரம், சுகபோகம் அளிக்கக் கூடியதோ அதை நோக்கி நகர்வதில் பார்ப்பனர் என்றுமே சளைத்ததில்லை.

இன்றைக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களில் அவர்களது மொத்த சனத் தொகையுடன் ஒப்பிட்டால் பார்ப்பனரே அதிகமானவர் என்பது தெரியவரும். இந்தப் பார்ப்பனர்கள் இங்கு வாழ வழியில்லாமல்

வெளிநாடுகளுக்குச் செல்லும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதி உழைக்கும் மக்களைப் போன்று பிழைக்கச் சென்றவரில்லை. மேலும் வசதி தேடி, சுகம் தேடி, அதிகாரம் தேடிப் புறப்பட்டவர்கள். தாங்கள் ஏற்கனவே அதிகாரம் செய்து வந்த கிராமங்களையும் நிலபுலன்களையும், சிறிய ஊர்களையும் கோயில்களையும் பெரிய வீடுகளையும் விட்டு விட்டு இன்றைக்குப் பெரிய நகரங்களில் குடியேறி பெரிய அதிகாரிகளாகவும் இன்னும் பிற வழிகளில் பெரிய மனிதர்களாகவும் மாறிப்போயுள்ளனர். எங்கு சென்றாலும் அவர்களுக்கென்று தனிக் குடியிருப்புகள், கோவில்கள், விழாக்கள், பழக்க வழக்கங்கள் என்று தனி ராசாங்கங்களை நடத்துகின்றனர். அமெரிக்காவிலும் வருடம்தோறும் தியாகையர் உற்சவம் நடத்துகின்றார்களாம்.

ஆனால் உழைக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதி மக்களுக்கோ சொந்த நிலமே இல்லாவிட்டாலும் கூட தாம் உழைத்த நிலம், தங்களது வளர்ப்புப் பிராணிகள், செடி கொடி மரம் என்பனவற்றையெல்லாம் விட்டு வெளியேறுவது என்பது மிகத் துயரமானதாக இருக்கிறது. புறச் சக்திகளது வன்முறையான தாக்குதல்கள் சாதிக் கொடுமைகள் உயிர் வாழவே முடியாத நெருக்கடி போன்ற காரணங்களால் மட்டுமே இன்று பிற நாடுகளிலும் நகர்ப்புறத்து ஓரங்களுக்கும் அகதிகளாகக் குடியேறியுள்ளனர். மற்றபடி விரும்பி வெளியேறுவதில்லை.

○

இன்று உலகமயமாக்கம் என்பது நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், எதிர்த்துப் போராடினாலும் போராடாவிட்டாலும் ஏகாதி பத்தியங்களாலும் அவர்களது எடுபிடிகளான ஒடுக்கப்படும் நாட்டு அரசுகளாலும் வன்மையாகத் திணிக்கப்படுகிறது. இந்த உலகமயமாக்கம் என்பது இன்றைக்குத் தோற்றுவிக்கப்பட்டதல்ல; ஏகாதிபத்தியம் தோன்றியதிலிருந்து துவக்கப்பட்டதானாலும் இன்று அதன் வளர்ச்சிப் போக்கில் தீவிரமடைந்து உலகின் அனைத்துத் தேச அரசுகளையும் தகர்த்து ஏகாதிபத்தியம் தன்னைப் போன்ற மாதிரிகளை (model) உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

தன்னைப் போன்ற மாதிரிகள் எனும்போது தன்னுடன் போட்டி போடுகின்ற ஏகபோகங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதல்ல. மாறாக, தனது உற்பத்திப் பொருட்களை வாங்கி நுகர்கிற சந்தைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. தனது உற்பத்திப் பொருட்களை, தன்னை, தனது பண்பாட்டை, ஆடை அணிகளை எல்லாம் உயர்வானதாக எண்ணி மயங்குகின்ற உளவியலை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்குத் தடையாக இருக்கின்ற தேசியத் தனித்தன்மைகளை, பெருமைகளை, அடையாளங்களை எல்லாம் சிதைக்கின்றது. இதற்கு ஏற்ப தேசங்களின் சுய உற்பத்திகளை, தொழில்களை, தொழில் நுட்ப அறிவை

அழித்தொழிக்கின்றது. இந்த ஏகாதிபத்தியச் செயல்பாட்டிற்கு ஒவ்வொரு தேசத்திலும் உள்ள ஏகாதிபத்தியதாசர்களை சிறு கும்பல், அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களது இன, தேச நலன்களுக்குத் துரோகம் செய்து தரகர்களாகச் செயல்படுகின்றனர்.

உள்நாட்டுத் தரகு அரசால் புறக்கணிக்கப்படுபவர்களும், ஏகாதிபத்தியத்தால் நெருக்கடிக்குள்ளாக்கப்படும் உள்நாட்டுச் சிறு முதலாளிகளும் சிறு விவசாயிகளும் தொழிலாளர்களும் மற்றும் உள்ள சனநாயகவாதிகளும் இன்று ஏகாதிபத்தியங்களையும் உள்நாட்டுத் தரகர்களையும் எதிர்த்துப் போராடுகின்றனர். இவ்வாறு போராடுபவர்கள் தங்களது வரலாற்றுப் பாரம்பரியத்திலிருந்து தங்களுக்கான தேசியத்தைக் கட்டமைத்துக் கொண்டு அதனை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முன்னிறுத்துகிறார்கள். ஒரு தேச விடுதலைக்கு இந்தத் தேசியக் கட்டமைத்தல் முன்நிபந்தனையாக உள்ளது. ஏனெனில் ஏகாதிபத்தியங்களுடைய சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் இன்று சாதகமாக இருப்பதே பிறதேசங்களது பொது உளவியல் மீது ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து நடத்தி வரும் யுத்தமே.

ஆக, ஏகாதிபத்தியச் சுரண்டலில் சிக்கிக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் நமக்கும் அதிலிருந்து விடுதலை பெறுவதற்கு முதலில் ஒரு தேசிய உணர்வு தேவைப்படுகிறது. உடனடியாக ஒரு தேசியம் கட்டமைக்கப்பட்டு அது சமூக உளவியலாக மாற்றப்படுவதும் அத்தேசியம் தனது எதிரிகளைத் தீர்மானிப்பதும் இன்றைய அவசியமாக உள்ளது.

சிலர் ஏகாதிபத்திய உலகமயமாக்கலை சாதகமானதாகப் பார்க்கும் நிலையில் உள்ளனர். ஏகாதிபத்தியம் உலகம் முழுவதும் உள்ள பின் தங்கிய உற்பத்தியை அழித்து முதலாளியமயமாக்கிக் கொண்டிருப்பது பாட்டாளிய சர்வ தேசியத்துக்குச் சாதகமானதாகக் காணுகின்றனர். மேலும் இன்றைய காலகட்டம் உலக முதலாளியக் காலகட்டம், தேச எல்லைகள் தகர்ந்து விட்டன, உலக முதலாளிகள் ஒன்று கூடிவிட்டனர் என்று கூறுகின்றனர்.

*இன்று தேச எல்லைகள் தகர்க்கப்படுகின்றன. தேசங்களின் இறையாண்மை, தற்சார்பு போன்றவை ஏகாதிபத்தியங்களால், பன்னாட்டுக் கம்பெனிகளால் வன்முறையாகத் தகர்க்கப்படுகின்றன என்பதே உண்மையாக இருக்கிறது. மேலும் மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்குமான உறவில் தீர்மானிக்கும் அதிகாரம், வர்த்தகத்தில், ஏற்றுமதி, இறக்குமதியில் பலன் பெறுவதில் நிலவும் பெரிய அளவிலான வேறுபாடு, மக்களது வாழ்க்கைத்தரம், யார் யாருடைய நிலத்தில் அணுக்கழிவுகளைக் கொண்டு வந்து புதைக்கின்றனர், யார் யாருடைய

*மார்ச் 1, தினமணி செய்தி

நாட்டில் (போபால்) விஷவாயுவால் பல்லாயிரம் பேரைக் கொலை செய்ததுடன் நஷ்டஈடு கூட தராமல் ஏமாற்றியது, யாருடைய இன அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன என்பவற்றையெல்லாம் உலகமய ஆதரவாளர்கள் மூடி மறைக்கின்றனர். இது என்னவகையான உலகமயம்? இது எப்படிச் சமத்துவத்திற்குச் சாதகமாகும்? இந்த உலகமயம் என்பது உண்மையில் இன அழிப்பு யுத்தமல்லவா? விடுதலை பெற்ற சுதந்திரமான சமத்துவ தேசங்களது அரசுகள் வரலாற்று வளர்ச்சியில் இற்று உதிர்ந்து எல்லைகள் அழிந்து யாரும் யார் மீதும் ஆதிக்கம் செலுத்த வாய்ப்பற்ற சூழலில் இயல்பாகக் கலந்து போவதுதான் நாம் விரும்பும் உலகமயமாக இருக்க முடியுமே ஒழிய இன்று உலகின் பிற தேசிய இனங்களை எல்லாம் ஒடுக்கி, சுரண்டி அவர்களது அடையாளங்களை, வளர்ப்புப் பிராணிகளை எல்லாம் கொன்றொழித்து உலகம் முழுவதும் 'வெள்ளை - ஆரிய' இனமயமாக்குவது நாம் ஆதரிக்க முடியாத 'வெள்ளைப் பயங்கரம் - பாசிசம்' ஆகும்.

இந்த வெள்ளைப் பயங்கர(பாசிச)த்திற்கெதிராக இன்று உலகம் முழுதும் போராட்டங்கள் வெடிக்கின்றன. போராடும் சக்திகள்/தேசங்கள்/தேசிய இனங்கள் தங்களுக்கான அடையாளமாகத் தேசிய இன உணர்வை, மதத்தை, நிறத்தை, மொழியை என ஏதோவொன்றை முன்னிறுத்திப் போராடுகின்றன. இங்கு நமது தமிழ்ச்சூழலில் நாமும் நமக்கான அடையாளத்தை - தேசியத்தைக் கட்டமைக்க வேண்டியவர்களாக உள்ளோம். அதற்கு நாம் எதனை முன்னிறுத்துவது?

இன்று உலகம் முழுதுமே பாசிசம் வெகுவேகமாக வளர்ந்து வருகிறது. அந்தந்தப் பகுதிகளின் வரலாற்றுச் சூழலுக்கு ஏற்ப பாசிசம் தனக்கான அடையாளத்தை எடுத்துக் கொள்கிறது. இந்தப் பாசிசத்திற்கு எதிராகப் போராடுவதாக வருகின்ற சக்திகளும் தங்களுக்குள் ஒருவகையான பாசிசக் கூறுகளைக் கொண்டிருப்பதற்கான சாத்தியப்பாடுகளையும் நாம் பார்த்துவிட்டோம்.

நாம் அமெரிக்க/அய்ரோப்பிய பாசித்தையும் இந்(து)தியப் பாசிசத்தையும் ஒருசேர எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த இரு பாசிசங்களும் கைகோர்த்துக் கொண்டு தமிழினத்தின் மீது இன அழிப்பு யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்த இன அழிப்பு யுத்தத்திற்கு ஆதாரமாகப் பார்ப்பனியம் விளங்குகிறது.

இத்தகைய சூழலில் இந்தப் பாசிச அபாயத்திற்கு எதிரான அணிதிரட்டலுக்கான அரசியலாக நாம் எதை முன்வைப்பது? அவ்வாறு முன்வைக்கப்படும் அரசியல் தன்னளவில் பாசிசக் கூறுகளைக் கொண்டிராததாக இருக்க வேண்டும்.

தமிழ்ச் சமூகம் சாதியச் சமூகம். தமிழ் மக்கள் சாதிகளாகக் கூறுபடுத்தப்பட்டிருக்கின்றனர். இன்றைக்கு பார்ப்பனர்களும் வெள்ளாளரும் நவீன அதிகாரங்களை நோக்கி இடம் பெயர்ந்ததால் காலியான உள்ளூர்

அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டு விட்ட பிற்பட்ட, மிகப்பிற்பட்ட சாதியினர் பார்ப்பனியத்தையும் உள்வாங்கிக் கொண்டு சாதியத்தைக் கட்டிக் காக்க ஆயுத பாணியாகியுள்ள மோசமான சூழலில் நாம் வாழுகின்றோம்.

இன்று நகர்மயம் என்பதே ஒரு வகையில் பார்ப்பனியமயம் என்பதாக உள்ளது. பார்ப்பனியத் தாக்கம் என்பது வெள்ளாளர் துவங்கி சாதிவாரியாகப் படிநிலையில் குறைந்து கொண்டே வந்து விளிம்பில் உள்ள தலித் மக்களிடம் குறைந்து காணப்படுகிறது. இன்று தலித்துகள் மையங்களை நோக்கி நகரும்போது அது பார்ப்பனியத்தை நோக்கி நகருவதாகவும் உள்ளது.

ஏற்கனவே நகர்மயத்திற்கும் அதிகாரமயத்திற்கும் ஆட்பட்டுப் பலன் அனுபவித்துக் கொண்டிருக்கும் பிற்பட்ட சாதியினர் இன்று சாதியத்தைக் கட்டிக் காப்பதிலும் ஆணாதிக்கத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்களாகவும் இந்துத்துவாவிற்கு அடித்தளமாகச் செயல்பட்டு இசுலாமியருக்கு எதிராகத் தாக்குதல் தொடுப்பவர்களாகவும் உள்ளனர். இவர்களே இன்று தலித்துகளை ஒடுக்குவதிலும் சுரண்டுவதிலும் தாக்குவதிலும் முன்னிற்கின்றனர்.

இவ்வாறு அதிகாரத்தைச் சுவைப்பவர்களும், தொழில்துறை, நிலம் போன்றவற்றையெல்லாம் கையகப்படுத்திக் கொண்டவர்களும் பொருளாதார நலனை நீண்டகாலமாக அனுபவித்துக் கொண்டு வந்து விட்டவர்களுமான பிற்பட்ட சாதிச் சூத்திரர்கள் பார்ப்பனிய தாக்கத்திலிருந்து எளிதாக விடுபட்டுவிட முடியாது.

இச்சூழலில் மொழி வழியிலான 'தமிழன்' என்ற அடையாளம் மொன்னையானதாக, கொடும் முரண்களையெல்லாம் மூடி மறைக்கும் தந்திரச் சொல்லாக இருக்கிறது. எனவே இன்றும் உழைக்கும் சூத்திர, தலித் மக்களிடம் காணப்படுகின்ற பூர்வீகப்பண்புகளை(ஆதிப் பொதுவுடமைப் பண்புகளை)யெல்லாம் திரட்டி அதில் காலத்தில் பார்ப்பனியத்தால் ஊடுருவிச் சிதைக்கப்பட்டவற்றைக் களைந்து எஞ்சுகின்றவற்றையே தமிழினத்தினுடைய அடையாளமாகக் கொள்ள வேண்டும். இந்த அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் தேசியத்திற்கான அரசியல் கட்டமைக்கப்படும்போது மட்டுமே அது பார்ப்பனியம், (உலக)முதலாளியம் ஆகியவற்றிடம் இருந்து தமிழ்த் தேசத்தை விடுவிப்பதற்கானதாக அமையும்.

தலித் கலை கலாச்சாரங்களில் எதிர்ப்புக் கூறுகள்

முனைவர். கே. ஏ. குணசேகரன்

தலித் கலைகள், கலாச்சாரங்கள் முதலாளிகளுக்கோ அரசாங்கத்திற்கோ சேவை செய்யமாட்டாதவை. பட்டங்களுக்காகவும் பரிசுகளுக்காகவும் பணத்திற்காகவும் தலித் கலைஞர்கள் அலையமாட்டார்கள். தலித் கலைகள், வணிகச் சந்தையிலோ வெகுசன ஊடகங்களிலோ வணிகப் பொருளாக அமைய இடம் கொடுக்க மறுப்பவை. தலித் மக்களின் வாழ்வின் ஓட்டத்துடன் இயைந்து செல்லத்தக்கவை. எப்போதும் தலித் கலைகள் எதிர்ப்பு என்பதை ஒரு சமூகவியல் வகைமையாய் (sociological category) ஒவ்வொரு வடிவங்களையும் கூறுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும்.

கரகாட்டம், தப்பாட்டம், இராஜா ராணி ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம், மாடுபிடி நடனம் போன்றவை இன்றும் தலித் மக்களால் ஆடப்பட்டு வருகின்றன. பள்ளுக்கூத்து, பறைக்கூத்து போன்ற பல தலித் மக்களின் கலை வடிவங்கள் இன்று வழக்கிழந்து போய் உள்ளன. எனினும் வழக்கிழந்துபோன தலித் கலைகள் வாழும் தலித் மக்களிடம் வேர்கள் கொண்டு இயங்கி வருகின்றன. வட்டாரத்திற்கு வட்டாரம் தலித் கலைகள் அந்தந்த மக்கள் கொண்டுள்ள வாழ்வியல் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன.

செவ்வியல் கலைகள் என்று குறிப்பிடுவது பொருந்தாது. மாறாக உயர்சாதி மக்கள் கலைகள் எனலாம். இவை ரசிப்பதற்கே உகந்தவை. மேலும் பக்தியை ஏதோ ஒரு வகையில் பாராட்டிக் கூறுவதாக அமையும். பொழுது போக்கிற்காக இக்கலைகள் கவனத்தோடு படைக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரச்சினைகளையோ வாழும் சமூகத்தின் அரசியல், பொருளாதாரம் முதலிய சிக்கல்களையோ கூறுவது இவ்வகைக் கலைகளின் நோக்கமும் அல்ல. நுட்பமான கலைத்திறன் கைவரப் பெற சிறுவயது முதல் வாழ்வின் பல்வேறு கூறுகளை இவர்கள் புறக்கணித்துவிட்டு வேறு ஒரு தனி உலகத்தைச் சிருஷ்டித்துக் கொண்டு தனிமை பெறுகின்றனர். பரத நாட்டியம், குச்சுபுடி, கதக்களி ஆட்டம் போன்ற நாட்டியங்களிலும் இதனையொத்த பிற சாஸ்திரிய கலை வடிவங்களிலும் ரசனை முறை தனித்து அமைந்திருப்பதை நாம் அவதானிக்க முடியும். தலித் கலைகள், கலாச்சாரங்கள் எப்போதும் தாம் வாழும் சமூகத்தைப் பிரதிபலிப்பதோடு ஆதிக்கம் செய்யும் அனைத்தையும் நையாண்டி செய்யும் எதிர்ப்புக் கூறுகளைக் கொண்டுள்ளன. ஆதிக்கச் சக்திகள் போதிக்கும் ஒழுங்கு

முறைகளை இவை கேள்விக்குள்ளாக்கி கலைத்துப்போடும். பல வேளைகளில் எதிர்த்து நிற்கவும் தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றன. தலித் கலைகள் வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாதவையாய் பிரச்சினைகளை யோசித்து விளக்கக் கூடியவையாய் அமைகின்றன. தலித் மக்களது கலைவடிவங்கள் ஆட்டங்கள், பாடல்கள், கூத்துகள், ஓவியங்கள், கைவினைகள் எனப் பலவகையாய் உள்ளன. இவற்றில் எதிர்ப்பு என்பது ஓர் உயிருள்ள மரபாக விளங்குவதை அவதானிக்க முடியும். தலித் கலை வடிவங்கள் எப்போதும் சமரசம் செய்து கொள்ள இடம் அளிக்காதவை. அரசு குறிப்பிட்டுள்ள அட்டவணைச் சாதிகள் தமிழகத்தில் மட்டும் 78 வகையாய் (Sub Caste) உள்ளன எனக் குறிப்பிடக் காண்கிறோம். அத்தனை சாதிக்கும் கலை வடிவங்கள் உண்டு. அவையாவும் மதம், இனம், சாதி, அரசியல், மொழி, பண்பாடு எனத் தன்னகத்தே கொண்டு தமக்கே உரிய பாணியுடன் வெளிப்படுகின்றன.

தலித் கலை வடிவங்களில் வெளிப்படும் எதிர்ப்புக் கூறுகளை நாம் கீழ்வரும் வழிகளில் நின்று விளக்கலாம்.

கதையாடல்
குறியீடு (Representation)
சடங்கு
நடப்பியல் (Reality)

கலாச்சாரம் குறித்துப் பொதுவாக அறிந்து கொண்டால் மேற்கூறிய வழிவகைகள் விளக்கப்படும்போதே கலையும் கலாச்சாரமும் இயைந்து நின்று வெளிப்படுவதை எளிதில் விளங்கிக் கொள்ள முடியும்.

வெகுசனக் கலாச்சாரம்
உயர் கலாச்சாரம்
கலவைக் கலாச்சாரம்
நாட்டுப்புறக் கலாச்சாரம்
தலித் கலாச்சாரம்

எனப் பலவகைகளில் கலாச்சாரங்களைப் பகுத்தறிய இயலும். வெகுசனக் கலாச்சாரம் என்பது ஊடகங்களில் செல்லுபடியாகத் தக்க தன்மைகள் கொண்டவை, வணிகத் தன்மை கொண்டவை. அனைத்து மக்களுக்கும் பொதுவானவை எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டாலும் நாட்டுப்புற மக்களுக்கும் தலித் மக்களுக்கும் இது எந்த வகையில் பொருத்தமுடையது என்பது கேள்விக்குரியதாகும். வரலாறு முழுவதிலும் கலாச்சாரம் என்பது பல படிநிலைகளைக் கொண்டுள்ளது என்பது உணரத்தக்கது.

வெகுமக்களிடமிருந்து மேட்டிமைச் சக்திகளையும் சாதாரணமானவற்றிலிருந்து சிறந்தவற்றையும் அது பிரித்து வைக்கிறது* எனும் கூற்று வெகுமக்கள் கலாச்சாரத்தில் உணரக்கிடைக்கிறது.

*எட்வர்ட் சயீத் கூற்று. அ.மார்க்ஸ் 'கலாச்சாரத்தின் வன்முறை நூலில் எடுத்தாண்டுள்ளார். ப.61

உயர் கலாச்சாரம் என்பது குறிப்பிட்ட உயர்சாதி மக்கள் சொந்தம் கொண்டாடத்தக்கது. அதீத கலைத்தன்மை கொண்டது. சமூகத்தின் மையநீரோட்டத்தைக் கட்டமைக்க இத்தகைய உயர் கலாச்சாரம் உதவுகிறது. அதிகாரத்தை நினைவுபடுத்துவதும் தேசியத்தைக் கற்பிப்பதும் ஒழுங்கு மீறலாகாது என்பதைப் பறைசாற்றுவதும் தேசிய மரபைப் போற்றுவதும் இதன் தன்மையாகும். சமயம் குறித்து இடைவிடாது பேசுவது உயர் கலாச்சாரத்தின் பணிகளில் ஒன்றாகும். குறிப்பிட்ட இலக்கண மரபுகளைக் கொண்டு இது இடைவிடாது இயங்கும். பொது மொழியைச் சொல்லாடலாகக் கொண்டு விளங்கும். புராண இதிகாசங்களை உறவு கொண்டாடும்.

கலவைக் கலாச்சாரம் என்பது மேற்சொன்ன இருவித கலாச்சாரத் தன்மைகளையும் இணைத்துக் கொண்டு விளங்குவதாகும். வெகுசனக் கலாச்சாரம் உயர் கலாச்சாரத்தை அழிக்க முடியாது. வெகுசனக் கலாச்சாரத்திற்கும் உயர் கலாச்சாரத்திற்கும் உடன்படாத மரபுகளையும் வேறுபாடுகளையும் கொண்டு தனித் தன்மையோடு செயல்படுவதாகக் கலவைக் கலாச்சாரம் விளங்கும். வைதீக மரபிற்கு உட்பட்டும் சில வேளைகளில் விலகியும் அமைவதாக இது அறிவித்துக் கொள்ளும். சுருங்கச் சொன்னால் நகரம், கிராமம் இரண்டும் கலந்த தன்மையோடு இது செயல்படும். நவீனத்துவம் கொண்டதாக இது அறிவித்துக் கொண்டாலும் பழம் மரபுகளை மறைமுகமாகக் கடைப்பிடிக்கக் கூடிய தன்மையோடு இது செயல்படும்.

நாட்டுப்புறக் கலாச்சாரம் வைதீக மரபிற்கு எதிரானது. சாமி, சாதி இவ்விரண்டும் பிரிக்க முடியாத கூறுகளாகக் கொண்டு விளங்கும். கிராம மக்களின் கூட்டு மன வெளிப்பாடு கொண்டதாக இது அமையும். எனினும் குறிப்பிட்ட சாதிகளை இணக்கமாகக் கொண்டு ஒரு புள்ளியில் இயங்குவதாக இதனை உணர முடியும். நாட்டுப்புறக் காலாச்சாரத்தில் ஆன்மீகம் உண்டு. ஆயினும் அது அனைவருக்கும் (குறிப்பிட்ட சாதிகள்) பொதுவாக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புறக் கலாச்சாரத்தில் அடிப்படைகளைக் காக்கும் மீறல்கள் உண்டு. உயர்சாமி மற்றும் சடங்குகளைக் கேலி செய்வதோடு தனக்கென தனித்த தன்மையில் சாமியையும் சடங்கையும் ஒருங்கிணைத்துச் சாதிகளுக்கேற்ப கட்டமைத்துக் கொள்ளும்.

தலித் கலாச்சாரம் ஒடுக்கப்பட்ட சாதிகளால் கட்டமைக்கப்படுவதாகும். புனிதங்களைக் கட்டுடைக்கும். இந்துத்துவத்தையும் அதனோடு தொடர்புடைய ஆதிக்கத் தன்மைகளையும் எதிர்ப்பதாகும். தனக்கென தனித்த அரசியலைக் கொண்டிருக்கும். இது பிரச்சினைகளின் அடிப்படையிலும் வழ்வியல் மற்றும் வட்டாரத் தன்மைகள் அடிப்படையிலும் அரசியல் வேறுபடுவதற்கு வாய்ப்பமைத்துக் கொடுக்கும். ஓரியல்புத் தன்மை (Uniformity) என்பது தலித் கலாச்சாரத்தில் இருப்பது அரிது. வாழ்க்கைப் பிரச்சினைகளை அடியொற்றியே கலாச்சார வெளிப்பாடுகள் அமையும். தலித் கலாச்சாரத்தில் தெய்வ நம்பிக்கை என்பது உற்பத்தி முறைகளோடு உறவு கொண்டதாக அமைகின்றது.

கதையாடல்

மொழி வழி வெளிப்பாடான கதையாடலில் கதை, பாடல் மற்றும் கதைப்பாடல் எனும் வுகைகளில் அமைகிறது. கதையாடல் (Narrative) என்பது தொன்மங்களில், கதைகளில், காவியங்களில், காப்பியங்களில், வரலாறுகளில், ஓவியங்களில், சினிமாக்களில், செய்திகளில், கறையேறப் பட்ட ஜன்னல் கண்ணாடிகளில் கூட உள்ளது. இவற்றினூடே செல்கிறது என்கிறார் பார்த்.* தலித் மக்களின் கதைகள், பாடல்கள், கதைப்பாடல்கள், நாட்டுப்புற ஆராய்ச்சியாளர்களால் இன்னும் தனித்துத் தொகுக்கப்பட வில்லை. எனினும் இக்கட்டுரையாளரின் களப்பணியில் கிடைத்த தலித் மக்களின் பாடல்களிலிருந்து வெளிப்படும் எதிர்ப்புக் கூறுகள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. எதிர்ப்புக் கூறுகளைக் கீழ்வரும் வகைகளினின்று விளக்க முற்படலாம்.

நேரடி எதிர்ப்பு
மறைமுக எதிர்ப்பு
எதிர்மறை எதிர்ப்பு
குழுவுக்குறி எதிர்ப்பு

தலித் பாடல்களில் வெளிப்படும் எதிர்ப்புக் கூறுகள்

தலித் பாடல்கள் தொழிற்களங்களில் பெரும்பாலும் தலித் மக்களிடையே பகிர்ந்து கொள்ளும் விதங்களிலேயே எதிர்ப்புக் கூறுகள் கொண்ட பாடல்கள் பாடப்படுகின்றன. கதைகளும் கதைப் பாடல்களும் கூட குறிப்பிட்ட தலித் சாதி மக்களிடையே மட்டும் நையாண்டித் தன்தையோடு வெளிப்படக் காண முடிகின்றது. பிற சாதிக்காரர்கள் இடம்பெறும் பட்சத்தில் நாம் ஏற்கனவே கூறியவாறு மறைமுகமாகவும் எதிர்மறையாகவும் குழுவுக்குறி தன்மையிலும் வெளிப்படுவதை அறிய முடிகின்றது.

நேரடி எதிர்ப்பு

பிரச்சினைகளை முன்வைத்து நியாயம் கேட்கும் முறையில் நேரடி எதிர்ப்புப் பாடல்களில் மற்றும் தலித் கலை வடிவங்களில் வெளிப்படும். நேரடி எதிர்ப்புக் கூறுகள் பெரும்பாலும் வரலாறு, பண்பாடு இவற்றை விரிவாகக் கூறிச் சிந்திக்க வைப்பதாகவும் நியாயம் கேட்கும் விதத்திலும் கேள்விகளை எழுப்புவதாகவும் அமைவது இயல்பு.

தீண்டக் கூடாதோ - ஆண்டையைத்
தீண்டக் கூடாதோ - எங்களைத்
தொட்டுக் கொண்டாலும் சைவம்
கெட்டுப் போயிடுமோ (தீண்ட)

பறையன் பறையனென்று
பரிகாசம் பேசுறிக

*Roland Bathes Image - Music text, (Flaminglo 1982) கட்டுரை 'Introduction to the structural analysis of narratives'

பறையன் பிறந்த கதையைப்
பாடிவாறேன் கேளு ஆண்டே (தீண்ட)

ஆதிசிவக் கோயிலிலே
அடிக்கிறது எங்கமேளம்
அடிக்க மேளம் கொடுத்து
அதுக்கு வாரை நாங்க கொடுத்தோம். (தீண்ட)

நாலுகால் உருளை வண்டி
நாங்க ஏறும் கூட்டு வண்டி
கூட்டுவண்டி மேலேறி
ஓட்டுறதும் பறையன்தானே (தீண்ட)

தவளைதின்னும் பறையன் இன்னு
தாறுமாறா பேசுறீக
தவள கெடக்கும் தண்ணிய
தாகத்துக்கு உண்ணலையா (தீண்ட)

தஞ்சைப் பகுதியில் ஆண்டைகளை எதிர்த்த பல பாடல்கள் கும்மிப்பாடல்களிலும் நடுகைப் பாடல்களிலும் உண்டு. இப்பாடல் கலைவளம் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் பரவலாகத் தொழில் முறைக் கலைஞர்களால் பாடப்படுகிறது.

முன்பாட்டு மொதலாளி பண்ணையிலே
பின்பாட்டு தன்னன்னே னானே
முன்பாட்டு முன்னூறு ஏக்கர்களாம்
பின்பாட்டு தன்னன்னே னானே
முன்னே நின்று கணக்கெடுக்கும்
தன்னன்னே னானே
மூத்தமயன் பாண்டித்துரை
தன்னன்னே னானே
பத்து மா நெலத்திலேயும்
பயிர் நடச் சொன்னாக
பயிர் நட்டு முடிஞ்சதுமே
பஞ்சாயத்துக்கு வரச் சொன்னாக (மொத)

சிவகங்கைப் பகுதி மன்னர் சேது பரம்பரையோடு தொடர்புடையது. நிலங்கள் பரம்பரையாக மன்னர் மற்றும் மன்னர் சார்ந்தோருக்கே பெரும்பாலும் உடைமையாகியிருந்த காலம். இங்கே பறையர்கள் கூலி குறைவாகக் கொடுத்தமைக்காகத் தொழிலுக்குச் செல்லாமல் போராட்டம் நடத்திய வரலாறு உண்டு. இங்கு கிடைத்த பாடலில் உள்ள கூட்டுக் குரல்கள் நேரடி எதிர்ப்பினைக் கொண்டதாக அமைகின்றன.

இப்பாடலில் இடம்பெறும் 'தன்னன்னே னானே' எனும் இசைக் குறிப்பு முன்பாட்டுப் பாடியவரின் கருத்தை வழி மொழிவதாகவும் அதே

வேளையில் நையாண்டி செய்வதாகவும் பின் பாட்டாளர்கள் கூட்டுக் குரலில் இசைத்து பண்ணையாரின் போக்கை விமர்சிப்பதாக எதிர்ப்புக் குரல்கள் அமைகின்றன. நிலங்கள் யாவும் ஆதிக்கச் சாதியினரால் கைக் கொள்ளப்பட்டுள்ள பரம்பரைத் தன்மையைச் சுட்டுவதோடு கூலியை உரிமையாகக் கேட்க முடியாத நிலை பாடும் பாடல் வழியே எதிர்ப்புக் குரலாக அமைவதில் உள்ள எதார்த்தம் இங்கு எண்ணுதற்குரியது.

'பத்தாடு வெள்ளாடு
பக்கத்திலே பயிர்க்காடு
படிக்க வக்கு இல்லாம
பண்ணையாருக்கு ஒப்படைச்சேன்
எட்டாடு வெள்ளாடு
எதிரே ஒரு வயக்காடு
எழுதும் தம்பி இல்லாம
எதிராளிக்கு ஒப்படைச்சேன்.'

எழுதப்படிக்க அனுமதி மறுக்கப்பட்ட சாதியினர் தங்கள் உரிமைகள் பறிக்கப்பட்டதோடு தங்கள் தலைமுறையை அடமானம் வைக்க வேண்டியிருந்த ஆதிக்கச் சாதியின் சுரண்டலைப் பளிச்சென வெளிப்படையாகச் சொல்லக் கூடிய தன்மையைக் காண முடிகின்றது. உண்மையைச் சொல்வதும் பிரச்சினைகளை முன்வைத்துக் கேள்விகளை எழுப்பிச் சிந்திக்க வைப்பதும் தலித் மக்களின் பாடல்களில் இயல்பாக அமையக்காண முடிகின்றது. எதிர்ப்புக் கூறுகள் கொண்ட பாடல்கள் பெரும்பாலும் கூட்டுக் குரல்களாக அமைவன என்பதும் இசைப்பு முறையில் உள்ள இசை மொழி வெளிப்படுத்தும் உணர்வு என்பதும் இங்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மறைமுக எதிர்ப்பு

'அடுப்பு நக்கி துடுப்பு நக்கி
சாம்பாரு கொழம்பு நக்கி
தொடர்ந்து வாடா
நடந்து பார்ப்போம்.'

சைவ உணவு (சாம்பாரு) உண்ணும் பழக்கமுடைய மேல்ச்சாதிக் காரர்களை மறைமுகமாய்க் கிண்டல் செய்வது இப்பாடலடியில் காணக்கிடக்கிறது. தலித் மக்கள் மாட்டுக்கறி உண்ணும் அசைவ உணவுக்காரர்கள்.

சாம்பார் கொழம்பு - சைவ உணவுக்காரர்கள்
மாட்டுக்கறி கொழம்பு - அசைவ உணவுக்காரர்கள்.

சாம்பாரு உணவு உண்ணும் நீ என்னுடன் நடந்து பார்க்க வருகிறாயா என்பதாகக் கூறுவது எங்கள் பலத்துடன் உங்கள் பலம் மோதி வெல்ல இயலாது என்னும் பொருளில் அமைகிறது.

'மன்னன் மணிக்குறவன்
மாண்ட கதையைச் சொல்லி வாறேன்
மக்களைப் போல நெனச்சு - நீங்க
மன்னிக்கணும் பிழை பொறுத்து'

என்பதான தலித் மக்கள் பாடலில் மணிக்குறவன் தன் சாதித் தலைவன். மன்னன் எனும் அடைமொழி கூறுவது மறைமுகமான ஓர் எதிர்ப்பு ஆகும்.

சாதியிலே குறக்கொலமாம்
சண்டியர் என்ற விளம்பரமாம்
ஆதியிலே அவரைப் போல
அட்டகாசம் செய்தவரில்லே

என்று கூறும் பாடல் வரிகள் 'மன்னன்' மணிக்குறவன் எனத் தொடங்குவதோடு பொருத்திப் பார்த்துப் பொருள் கொள்ளும்போது உள்ள எதிர்ப்புக் குரலினை அவதானிக்க முடியும்.

எதிர்மறை எதிர்ப்பு

பொட்டலிலே வீடுகட்டி
பொழுதிருக்கத் தாலி கட்டி
போறாராம் அவ புருசன்
பொட்டக் கோழிக்கு
மயிர் புடுங்க

கிராமத்துத் தென்புறங்கள் அல்லது கிழக்குத் திசைகள் பார்த்தவாறே சேரிகள் அமைக்கப்படுவது மரபு. சேரிகளில் குடிசைகள் கட்டி வாழ்வோர் தலித் மக்கள். பொட்டல், மந்தை, திடல் போன்ற கிராமத்து இடங்கள் யாவும் பொது இடங்களாகவும் குறிப்பிட்ட சாதிக்குச் சொந்த இடங்களாகவும் அமைவது இயல்பு. பொது இடம் என்பது தலித் மக்களுக்குப் பங்கில்லாத இடம் என்பது குறிப்பிட அவசியமில்லை. பொது இடம், பொதுச் சொத்து என்பவை உயர் சாதிக்காரர்களுக்கானதே என்று தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ளமை இங்கு தலித்தியப் பார்வையில் பொருள் கொள்ளப்பட வேண்டியதாகும். ஆக, பொட்டலில் வீடு கட்டித் தாலி கட்டி முறையான சடங்குகளுடன் திருமணம் செய்துள்ள மேல்ச்சாதிக்காரனைத் தலித் ஒருத்தியோ ஒருவனோ நையாண்டி செய்வதாகப் பொருள் கொண்ட பாடல் எதிர்மறை எதிர்ப்புக்கூறு கொண்ட பாடல் ஆகும்.

'கள்ளனை விட்டுப் பள்ளனை அடி
பள்ளனை விட்டுக் கள்ளனை அடி'

என்பதான முதுமொழி 1957 முதுகுளத்தார் கலவரத்தை ஒட்டியும் 1989 போடி கலவரத்தை ஒட்டியும் எழுந்துள்ளது என்பதனை தலித் வரலாறு அறிந்தவர் அறிய முடியும். ஆதிக்கச் சாதிகள் உள்ள இடங்களில் ஒடுக்கப் பட்ட சாதி மக்கள் தம் எதிர்ப்புகளை மறைமுகமாகவே வெளிப்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

காத்தவராயன் கதைப்பாடல்கள் மற்றும் மதுரை வீரன் கதைப் பாடல்களில் காத்தனையும் மதுரை வீரனையும் பற்றி புகழ் உரைக்கும் போது ஆதிக்கச் சாதியினரின் இயலாத தன்மைகள் எதிர்மறையாக விளக்கப்படுவதைக் கவனிக்க முடியும்.

குழுவுக்குறி எதிர்ப்பு

'எத்துக்கரவன் வாறான்'

என்று தலித் மக்கள் தஞ்சைப் பகுதிகளில் கூறுவர். எத்துக்கரவன் என்பது மேல்ச்சாதிக்காரர்கள் என்பதைக் குறிக்கும்.

எத்துக்கரவன் வாறான் - குடியானவன் வருகிறான் என்பதாகப் பொருள். அதுபோல 'மேப்படியான்' என்று குறிப்பதும் மேல்ச்சாதிக்காரர்களைக் குறிக்கும் சொல்லாகும். மேப்படியான் வாறான் - மேல்ச்சாதிக்காரன் வருகிறான் என்பதாகப் பொருள்.

'எத்துமசை வருது' என்பது மேல்ச்சாதிக்காரப் பெண் வருகிறாள் என்பது பொருள்.

பின்னையன்	- நாடார்
பொக்கு	- பறையன்
கீஞ்சி	- பள்ளன்
கட்டகுஞ்சி, அடுத்துக்குத்தி	- சக்கிலியர்
மத்தி	- சாதி
சூகை, எத்து, நாதம்	- ஊதியம், கூலி

இவ்வகையான குழுவுக்குறியீட்டுச் சொற்கள் யாவும் மறைமுக எதிர்ப்புக் கூறுகள் கொண்டவையாகும். சாதியச் சமூகத்தில் பிற சாதியினரைக் குறிப்பிட இவ்வாறு தலித் மக்கள் குழுவுக் குறியீட்டுச் சொற்களை அவர்களுக்குள் பேசிக் கொள்ளவும் ஒருவகையான எதிர்ப்புத் தன்மையை வெளிப்படுத்தவும் பயன்பாட்டில் கொண்டுள்ளனர்.

குறியீடு

ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு சில சொற்கள் அச்சமூகத்தின் குறியீடு களாக அமைவது இயல்பு. தலித் மக்களின் வாழ்விலும் குறியீடுகள் ஏராளமாக அமைகின்றன. சேரிகளில் ஒதுக்கப்பட்டு வாழும் இம்மக்களின் பார்வையில் கிராமம் என்பது அதிகாரத்தின் அச்சுறுத்தலாகவும் ஆளுமையின் அடையாளமாகவும் அமைகின்றது. இச்சூழலில் சுதந்திர மாகத் தங்கள் கருத்தை வெளிப்படுத்த முடியாத அடக்குமுறை உள்ளது. இத்தகைய நெருக்கடியில் அவர்களுக்குள் கொந்தளிக்கும் விடுதலை வேட்கை குறியீடுகளாக வெளிப்படுவது இயல்பு. இக்குறியீடுகள் வெளிப்படுத்தும் விதங்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

குரல் வழிக் குறியீடு
உடல் வழிக் குறியீடு (சைகைகள்)
காட்சி வழிக் குறியீடு

இங்கு குறிப்பிட்டுள்ள முதல் இரண்டு குறியீட்டு வகைகளும் முறையே சொல்லாலும் (நடிப்பு) உடல் மொழியாலும் வெளிப்படுபவை.

குரல் வழிக் குறியீடு

கதையாடல் எனும் தலைப்பில் மொழி வழி வெளிப்பாடு என நாம் முன்பே விளக்கியுள்ளோம். குறியீடாக அமையும் சிறப்பினை பாடல்கள் வழி நின்று இங்கு விளக்கலாம்.

'பாப்பார பஞ்சு போல
பருவமுள்ள வெள்ளையம்மா'

எனும் பாடலடிகளில் பார்ப்பனப் பெண்போல அழகானவள் என்றும் பெயரளவில் வெள்ளையம்மாள் எனும் பெயர் கொண்டவள் - கறுத்தவள் என்பது குரல்வழிக்குறியீடு ஆகும்.

விளைநிலம் தலித்தவனுக்குச் சொந்தமல்ல. விளைநிலங்கள் கழுதையால் மேய்ச்சலுக்கு உள்ளாகிறது. அதனால் தான் வளர்க்கும் கழுதைக்கு லாபமேயன்றி விளைநிலத்துக்காரனுக்கு நட்டமேயாகும்.

கத்தரித் தோட்டத்திலே - கண்ணம்மா
கழுத மேயுதடி
கழுத மேஞ்சா மயிரு போச்சு
கஞ்சியைக் கொண்டாடி

எனப்பாடும் இப்பாடல் குரல் வழியே வெளிப்படும் குறியீட்டு வழி எதிர்ப்புக் குரல் ஆகும். குழுவுக்குறிகள் சில வேளைகளில் நேரிடை யாகவும் ஆதிக்கச் சாதி நிறைந்து உள்ள பகுதிகளில் தலித்துகளின் குழுவுக் குறிகள் மறைமுகமாகவும் எதிர்ப்புக் கூறுகளைக் கொண்டு விளங்கும்.

பாப்பாரப் பஞ்சு, மயிரு பிடுங்க, மயிரு போச்சு என்பன போன்ற சொற்களைப் பாடலில் இசைக்கும்போது தரும் அழுத்தம் குறியீட்டுத் தன்மைக் கொண்டது. கூட்டுக் குரல்களில் இச்சொற்களைப் பின்பாட்டாக இசைப்பது என்பது குறியீட்டுத் தன்மை கொண்டதாகும். உரத்த குரலில் பாடுவதும் குரலில் கீச்சுத் தொண்டை, கரகரப்புத் தொண்டை வழியே சொற்களை அழுத்தப்படுத்திப் பாடுவது என்பதும் ஒருவகை எதிர்ப்புத் தன்மை வெளிப்படுத்தும் உத்திமுறையாகும்.

உடல் வழிக்குறியீடு

தலித் மக்களின் ஆட்டங்களில் எதிர்ப்புக் கூறுகள் உடல்மொழி வழியே (Body language) வெளிப்படும். ஆதிக்கச் சாதியினரின் ஆட்டங்களில் பார்வையாளர்கள் முன் ஆடுவோரின் பின்புறம் அதாவது குண்டி மற்றும் மார்பகங்கள் ஆண்குறி, பெண்குறி உள்ள பகுதிகள் துருத்தி அசைத்துக் காட்டுவது கூடாத மரபாகும். மாறாக தலித் மக்களின் ஆட்டங்களில் மேற்சொன்ன உறுப்புகளைப் பார்வையாளர் முன் துருத்தி அசைத்துக் காட்டுவது என்பது ஒருவித எதிர்ப்புக் கூறுகள் கொண்ட குறியீடுகளாகும். கால்களைப் பார்வையாளர்கள் முன்பாக உயர்த்தித் தூக்கி அசைப்பது

குறியீட்டு வழியே மரபை மீறி மரியாதைக் குறைவு செய்து உணர்த்திக் காட்டுவது உடல் வழிக் குறியீடு ஆகும். சைகைகள் வழியே பாலுறுப்பு களை நையாண்டி செய்வது போல அசைத்துக் காட்டுவதும் ஒரு வித எதிர்ப்புக் கூறு கொண்ட வெளிப்பாடு ஆகும்.

உட்காரும் முறைகளில் ஆண்கள், பெண்கள் இப்படித்தான் உட்கார வேண்டும் எனும் முறைமையுண்டு. மேல்ச்சாதிகளில் உள்ள இந்த வரைமுறைகள் தலித் மக்களிடையே இல்லை. மாறாக உட்காரும் விதங்களிலும், உண்ணும் விதங்களிலும் இயல்புத் தன்மை, சுதந்திரத் தன்மை கொண்டமையக் காணலாம். பெண்கள் சம்மணம் போட்டு உட்காரக் கூடாது, பெண்கள் மல்லாக்கப் படுத்துத் தூங்கக் கூடாது என்றெல்லாம் முறைமைகள் மேல்ச்சாதிகளிடம் உண்டு. இந்த முறைமைகள் தலித் மக்களிடம் இல்லை.

உடல்வழி வெளிப்படும் அசைவுகள் அவற்றின் வழி வெளிப்படுத்தும் கருத்துகள் மூலம் குறியீடுகள் எதிர்ப்புத் தன்மை கொண்டவை என்பதை நாம் அவதானிக்கலாம்.

காட்சி வழிக்குறியீடு

கிடைத்த அறுவடைப் பொருள்களைப் பாதுகாத்து வைத்துக் கொள்ள இடமில்லாத சூழலில் ஒற்றைப் பழைய செருப்பைக் கட்டித் தொங்க விடுவது சொந்தமான மரங்களில் விளைந்த அல்லது காடுகளில் விளைந்த பொருள் களைக் காக்க வேண்டிப் பழைய துடைப்பான்களை (வெளக்குமாறு) கட்டித் தொங்கவிடுவதும் ஆதிக்கச் சாதியிடமிருந்து தங்கள் உடைமை களைக் காத்துக் கொள்ள வேண்டி செய்து கொள்ளும் காட்சி வழிக்குறியீடுகளாகும். உழைப்புக் கருவிகளான மண்வெட்டி, களைக் கொட்டு, முறம், உலக்கை, கம்புகள், கோடரிகள் போன்றவற்றில் பாம்பு, தேள், கழுகு போன்ற சின்னங்களை வரைந்து வைத்துக் கொள்வதும் கூட தலித் மக்களின் எதிர்ப்புக் குணங்களை வெளிப்படுத்தும் காட்சி வழிக்குறியீடுகளாகும்.

குத்துக்கல் வழிபாடு

'திண்டு', 'திடல்' வீட்டு மூலை, கிணத்தடியான் சாமி எனச் சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் நாட்டுப்புற மக்களுக்கும் பொதுவாக இருப்பினும் தலித் மக்களின் பூர்வீகத் தன்மைகளின் தாக்கங்கள் அவை என உணர முடியும். தலித் அல்லாத பிற சாதி மக்கள் பெருந்தெய்வங்களோடு பழந் தெய்வ வழிபாட்டு முறைகளை இணைத்துக் கொள்வதில் அக்கறைப் பட்டு வருவது அறியத்தக்கது.

சடங்கு வழி எதிர்ப்பு முறை

பிறப்பு முதல் இறப்பு வரையிலான தலித் மக்களின் வாழ்க்கை முறையில் சடங்குகள் ஏராளமாக உள்ளன. பொதுவாக, தலித் மக்களின் சடங்கு முறைகள் வேத மறுப்புக் கொள்கை கொண்டவையாக அமையும்.

சடங்கு முறைகள் யாவும் வாழ்வியலோடு உறவுடையதாக அமையும். தீட்டு பற்றிய கோட்பாடுகள் தலித் மக்களின் சடங்கு முறைகளில் கடைப் பிடிக்கப்படுவதில்லை. தலித் மக்கள் மதமாற்றம் என்பதை ஆங்காங்கே கைக்கொண்டிருந்த முறைமையே இவர்தம் சடங்கு முறைகள் வாழ்வியல் தன்மைகளுக்கே அமைபவை என்பதை உறுதிப்படுத்தக் கூடியவையாகும்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பகுதிகளில் வாழும் பன்றி மேய்க்கும் தொழிலைக் கொண்டுள்ள பன்றிக்குறவர் சாதி மக்கள் தங்கள் இறப்புச் சடங்கில் சுடுகாடுவரை சென்று கொள்ளி வைப்பதில் பங்கேற் கின்றனர். பெண்கள் சுடுகாட்டுக்கும் இடுகாட்டுக்கும் செல்வதை மேல்ச் சாதிகளிடம் காண்பது அரிது. இடுகாட்டில் பிணத்தைக் குழியில் வைக்கும் போது குழிக்குள் இறங்கி பிணத்தைத் தாங்கி வைப்பதும் பிணத்துக்கான சில சடங்குகளை முன்னின்று செய்வதும் பறையர் சாதி மக்களிடம் இயல்பாகக் காண முடியும். ஆண்களுக்கான தொழில், பெண்களுக்கான பணி எனும் வேறுபாடுகளின்றிச் சடங்குகளில் பெண்கள் பங்கேற்பு என்பதெல்லாம் மேல்ச்சாதி மக்களின் சடங்குகளுக்கு மாறான செயற்பாடுகள். தலித்துகளால் செய்யப்படும் இம்முறைகள் மறைமுக மானதும் நேரிடையானதுமான எதிர்ப்புக் கூறுகளாகவே காணமுடியும்.

தலித் மக்கள் தெய்வ இருப்பிடத்தை மண்திட்டு, பிடிமண், கல், கூறை, ஆயுதம் என அமைத்து வழிபடுவர். ஆதிக்கச் சாதியினர் சாமிகோயிலை நிறுவும்போது குறிப்பிட்ட திசை, குறிப்பிட்ட பூசை செய்தெல்லாம் சடங்கு செய்வர். தலித் மக்கள் தங்கள் தெய்வ இருப்பிடத்தை திசை, கால, நேரம், பூசை என்றெல்லாம் பாராது நிறுவுவர். இவ்வித முறை தலித் மக்களின் எதிர்ப்பான, ஆதிக்கச் சாதியினருக்கு மாற்றானதாக அமைவதாக விளங்குவதை உணர முடிகிறது.

பறை இசைக் கருவி ஒன்றை பிறப்புக்கும் இறப்புக்கும் திருமணம் மற்றும் பிற நிகழ்ச்சிகளுக்கும் ஆக இசைத்து, வாசிப்புகளின் வேறுபாடு களுக்கேற்ப குறியீட்டு முறைகளில் வாசிப்பு நடைகள் அமையும். பறை வாசிப்பு நடைகளுக்கேற்ப இன்ன நிகழ்வு என உணர முடியும். ஆதிக்கச் சாதிகளின் வாழ்க்கை நிகழ்வுகளுக்கு இந்த எளிமைத் தன்மையும் குறியீட்டுத் தன்மைகளும் கிடையாது. தலித்துகளின் வாழ்க்கையில் நிகழ்வுகளுக்கென குறிப்பிட்ட பூசாரி, நபர் என எதிர்பார்த்துக் கிடந்து காரியம் நடத்த வேண்டிய நிலையை வைத்துக் கொள்வதில்லை. மாறாக, யாரையும் நம்பி குடும்பம் மற்றும் சாதியச் சடங்குகளை நடத்த வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தலித்துகள் ஆளாவதில்லை. நடப்பியலூடாக, தலித்துகள் ஆதிக்கச் சாதியினரின் வாழ்க்கை முறைகளின் சிரமங்களுக்கு எதிர்ப்பான முறைமைகளைக் கைக் கொண்டு வாழ்கின்றனர். நாம் முன்னரே கூறியதுபோல் சடங்குகள் தலித்துகளின் வாழ்வியலோடு பிரிக்க முடியாத உறவுடையதாக அமையும். சடங்குகள் வாழ்க்கையைத்

தீர்மானிப்பவையாக அமைவதில்லை. சடங்குகள் தடையாகவும் தலித்துகளுக்கு எப்போதும் இருப்பது கிடையாது.

நடப்பியல் எதிர்ப்புக் கூறுகள்

தலித் மக்களின் வாழ்க்கை எதார்த்தம் எனும் இயல்பு நிலைத்தன்மை கொண்டது. ஆதிக்கச் சாதிகளின் ஆதிக்கம் பொறுக்க முடியாத சூழலில் சேரிகளைக் காலி செய்து விட்டு ஒட்டு மொத்தமாக வேறு ஓர் இடம் பயணப்பட்டுப் போன வரலாறுகளை நாடெங்கும் காண முடியும். வாடிப்பட்டி தலித்துகள், கருமாத்தூர் அருகேயுள்ள திருமங்கலத்துக்கும் கண்ணூருக்கும் பயணப்பட்டு (migrate) குடியமர்ந்துள்ளனர். இதுபோல இராமநாதபுரத்திலிருந்து பயணப்பட்டு தலித்துகள் மதுரை மாவட்டம் பகுதிகளுக்கு வந்து குடியேறியுள்ளனர். திருச்சி மாவட்ட தலித் மக்கள் கோவை மாவட்டத்துக்குக் குடிபெயர்ந்துள்ளனர். இம்மாதிரியான குடிபெயர்வுகள் ஆதிக்கச் சாதிகளின் கிராமங்களுக்கும் கிராமவாசிகளுக்கும் அளிக்கும் தலித்துகளின் ஒருவிதமான எதிர்ப்பேயாகும் என்பது சேரியுடன் சேர்ந்து பொருள் கொண்டதாகும். திடீரென ஓர் இரவில் ஊரை விட்டு இன்னோர் ஊரில் சென்று குடியேறுவது என்பது ஊரைக் குலைத்துப் போட்டு அதாவது ஊர் (set up) எனும் கட்டமைப்பைக் கலைத்துப் போட்டு விட்டுக் காணாமல் வேறு ஓர் இடம் குடிபெயர்ந்ததன் வழி உணர்த்திய ஒருவித எதிர்ப்பேயாகும்.

தலித் மக்களின் வாழ்க்கை வெட்ட வெளிச்சமானது. பட்டவர்த்தனமாகப் பேசுவது, பாடுவது, செயல்படுவது ஆகியன இவர்தம் வாழ்வில் உள்ள நடையியல் (style) ஆகும்.

ஆதிக்கச் சாதி மக்களிடம் இல்லாத பல பழக்க வழக்கங்கள் தலித் மக்களிடம் காண முடியும். இவை ஆதிக்க மக்களுக்கு எதிராகக் கட்டமைக்கும் ஒருவித எதிர்ப்பு முறையே ஆகும். அறுத்துக் கட்டுவது என்பது மேல்சாதி மக்களிடம் இல்லாத ஒன்று. அதாவது திருமணமான பெண் தன் கணவனை வெறுத்து அல்லது கணவனால் வெறுக்கப்பட்டு வாழாமல் இருந்தால் வேறு ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்காமல் வாழாவெட்டியாக இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட சாதிகளில், குறிப்பாக கள்ளர் சாதிகளில் அறுத்துக் கட்டுவது உண்டு. தலித் மக்களிடம் அறுத்துக் கட்டுவதும் உண்டு. அன்பு காட்டுபவளிடம், அன்பு காட்டுபவனிடம் உடன்பட்டு வாழ்வதும் உண்டு. இதற்கெல்லாம் பெரிய சடங்குகளும் கிடையாது.

உயர்சாதி மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிகளில் தீட்டு பார்த்தல் உண்டு. பெண்கள் மாதவிடாய் காலங்களில் வீட்டின் சில பகுதிகளுக்கு வர இயலாது. சட்டிப்பானை பாத்திரங்களைத் தொடக்கூடாது. சமையல் செய்ய அனுமதிக்கக் கூடாது. மூன்று நாட்கள் பெண்கள் பூப்படைந்தால் குறிப்பிட்ட காலம் தீட்டு. குழந்தை பெற்றால் வீட்டில் தீட்டு. இறந்தோர்

வீட்டில் உண்பது தீட்டு என்றெல்லாம் தீட்டுகள் உயர்சாதி மக்களிடமும் பிற்படுத்தப்பட்ட சாதிகளிடமும் உண்டு. மாறாக, தீட்டு எனும் சொல் தலித் மக்களிடம் வாழ்க்கைக்குத் தடையாக இல்லை. தலித் மக்களின் இம்மாதிரியான வாழ்க்கை முறைகள் ஆதிக்கச் சாதி மக்களின் பார்வையில் எதிர்ப்பான கூறுகள் கொண்ட நடப்பியலைக் கொண்டதாகவே மனங்கொள்ள முடியும்.

இலை, தளை, மட்டை, மரப்பட்டை, போன்ற பொருள்கள் உயர்சாதி மக்களால் பயனற்றவை எனக் கருதப்பட்டு நறுக்கி வைக்கும் பட்சத்தில் தலித் மக்கள் அம்மாதிரியான நறுக்கிப் போடப்பட்ட பொருள்களைக் கொண்ட சித்திர வேலைப்பாடுடைய வாழ்வின் பயன்பாட்டுப் பொருள்களாகக் கைக்கொள்வது என்பதெல்லாம் தலித் மக்களின் ஒருவித மறைமுக எதிர்ப்பு முறையின் வெளிப்பாடாகவே உணர முடியும். இயற்கையை வீணடிக்காத வாழ்க்கை முறை தலித் மக்களிடம் உள்ள உயரிய வாழ்வியல் தன்மையாகும்.

1. குதிரைக்குப் புல் பறிக்கிற பறையனுக்கு எங்கள் பெண்டுகளைக் குடுத்தோமாகில்...

2. எங்கள் மினாட்டிமாரைச் சக்கிலியர்க்குக் கொடுத்துப் பார்த்திருப்போமாகவும்.

*3. எனக்குச் சரி இன்னாத சக்கிலியரின் செருப்பும் எடுத்துத் தாம்பலமும் தின்றேனாவேன்.**

சாதிகளின் கொடுமை, சாதிக்கேற்ப நீதிமுறைமை இருந்துள்ள சாதியச் சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுவனவாக இது போன்ற பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. சோழர் காலம் தொட்டுச் சாதி வேர் விடத் தொடங்கி நாயக்கர் காலத்தின் பாளையப்பட்டுக்கள் கைகளில் நாடு ஆட்சிக்குட்பட்ட போது சாதித்திமிர் அடையாளங்கள் கிளை விட்டு வளர்ந்திருந்தன. ஒடுக்கப்பட்ட காலங்களிலெல்லாம் தலித் கலை கலாச்சாரங்களில் எதிர்ப்புக் கூறுகள் உருப்பெறத் தொடங்கின.

---

*1, 2, 3 தென்னிந்தியக் கல்வெட்டு - 7 - 8, 8 - 86, 7 - 860

மாற்று அறிவியல்

ஆலன் டி சோகல்

தமிழில்: பிரவீண்

அமெரிக்காவின் நியூயார்க் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறைப் பேராசிரியர் ஆலன் டி சோகல். ஐரோப்பிய மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் (La sapienza, Universidad Nacional Nicaragua, Universitladi Roma முதலிய பல்கலைக் கழகங்கள் உட்பட) நிறைய விரிவான உரைகள் நிகழ்த்தியுள்ளார். தத்துவத்திலும் அறிவியலிலும் ஆழ்ந்த படிப்புள்ளவர். Roberto Fernandez, j'urg Fron'ich ஆசிரியரோடு சேர்ந்து Random Walks, Critical Phenomena, Triviality in Quantum field theory முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

இயற்பியலும் பின் நவீனத்துவமும்

எல்லைகளை மீறுதல்: (Transgressing the boundaries)

சமூக மற்றும் கலாச்சார விமர்சனம் தொடர்பான ஒழுங்குகள் தங்களுடைய ஆய்விற்குப் பங்களிக்க எதுவும் கொண்டிருக்க முடியும் என்பதனைத் தொடர்ந்து நிராகரிக்கக் கூடிய நிறைய இயற்கை அறிவியலாளர்கள், குறிப்பாக இயற்பியலாளர்கள் இருக்கின்றனர். தங்களுடைய உலகப் பார்வையானது அத்தகைய ஆய்வுகளின் வெளிச்சத்தில் திருத்தப்படவோ மறு ஆக்கம் செய்யப்படவோ கூடியன என்பதை இவர்கள் எந்நிலையிலும் ஒப்பத் தயாரில்லை. இன்னும் சொல்லப்போனால் பின் - அறிவொளிக் கால (Post enlightenment) மேலாதிக்கம் நிறைந்த மேற்கத்திய அறிவு ஜீவி வறட்டு வாதங்களைப் பற்றுபவர்களாக இருக்கின்றனர். அதனைக் கீழ்வரு மாறு தொகுக்கலாம்:

தனி மனித இருப்பிலிருந்தும் (ஒட்டு மொத்த மனித குல இருப்பி லிருந்துமே) விடுபட்டதொரு புற உலகொன்று இருக்கிறது; அதன் தன்மை களாவன: நிரந்தர இயற்பியல் விதிகளால் ஆளப்படுகின்றன. அவை நம்பத்தகுந்த (சோதனை நிலையிலிருப்பினும்) அறிவியல் ரீதியிலான, தற்சார்பற்ற முறைகளின் வழியும் கடின உழைப்பின் மூலமும் அறிய முடிந்ததே.

ஆனால் 20ஆம் நூற்றாண்டு அறிவியலுக்குள் நிகழ்ந்த ஆழமான தத்தியல் மாற்றங்கள் இத்தகைய கார்டீசிய நியூட்டானிய அறிதல் முறையை பலவீனப்படுத்தியுள்ளன. வரலாறு மற்றும் அறிவியற் தத்துவத்தில் நிகழ்ந்த மாற்று ஆய்வுகள் இதன் நம்பகத் தன்மையில் மேலும் சந்தேகத்தைக் கிளப்பி யுள்ளன. இன்னும் சமீபத்திய பெண்ணிய மற்றும் பின்-அமைப்பியல் ஆய்வுகள் ஐரோப்பிய மைய நீரோட்ட அறிவியலின் (Main Stream) மீதான மாயைகளைக் கட்டுடைத்துள்ளன; தற்சார்பின்மையின் பின்னாலிருந்த அதிகாரத்தையும் வெளிச்சமிட்டுள்ளன.

இவ்வகையில் பௌதிக எதார்த்தம் என்பதும் (சமூக எதார்த்தத்திற்குக் கொஞ்சமும் குறைந்து விடாது) அடிப்படையில் சமூக மற்றும் மொழி யியற் கட்டமைவே என்பதும் எந்நிலையிலும் 'அறிவியல் அறிவு' என்பது தற்சார்பற்றதல்ல என்பதும், மேலும் அது தான் உற்பத்தியாகிற கலாச் சாரத்தின் மையச் சொல்லாடல்களையும், அதிகார உறவுகளையும் பிரதி பலிக்கவே செய்கின்றது என்பதும் மிகத் தெளிவாகி விட்டன.

அறிவியலின் 'உண்மையின்' மீதான உரிமை என்பது கோட்பாட்டு ரீதியாக மட்டுமே உடன் பிறந்ததும் தனது வெளிக்குள் மட்டுமேயே சான்றுகள் கொண்டதும் ஆகும். விளைவாக, அறிவியற் சமூகத்தின் 'மதிப்புகள் நிறைந்த கருத்தாடல்களும்' அதன் அறிவுத் தோற்றவியல் அந்தஸ்தும் அதிருப்தியடைந்த விளிம்பு நிலைச் சமூகங்களிலிருந்து மேற்கிளம்புகிற எதிர்க்கதையாடல்களுக்கு முன் எந்நிலையிலும் வலியுறுத்த முடியாதவை.

மேற்கூறிய கருத்துக்களைக் குவாண்டம் இயங்கியலை (Quantum Mechanics) முன்னிறுத்தும் அரோனோவிட்சின் (Aronowitz) கலாச்சாரக் கட்டுமானத்தின் மீதான பகுப்பாய்வு, குவாண்டம் இயங்கியலுக்குப் பின்னான அறிவியலின் எதிரிடையான சொல்லாடல்கள் குறித்த ரோஸின் (Ross) விவாதம் மற்றும் இயற்கை அறிவியல்களுக்குப் பின்னியங்கும் பாலினக் கருத்தியல் மீதான ஹார்டிங்கின் (Harding) விரிவான விமர்சனம் முதலியவற்றின் மூலம் தெளிவாக்கலாம்.

ஹைசன் பர்கினுடைய குவாண்டம் இயங்கியலும் ஐன்ஸ்டைனுடைய பொதுச்சார்பியலும் (General Relativity) ஒரே நேரத்தில் தம்முன் ஒருங்கிணையவும்/விலக்கிக் கொள்ளவுஞ் செய்யும்; இயற்பியலின் புதிய கிளையான குவாண்டம் ஈர்மவியலில் (Quantum Gravity) நிகழ்ந்தேறிய சமீபத்திய மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு மேற்கூறிய ஆய்வுகளை மேலுமொரு படி எடுத்துச் செல்வதே எனது நோக்கமாகும்.

குவாண்டம் ஈர்மவியலில் வெளி-கால அமைப்பானது சார்பற்ற பௌதிக எதார்த்தமாக (Objective physical reality) நிலவுவதற்கான சாத்தியங்கள் முடிந்து விடுகின்றன. வடிவியல்/ஜியோமிதி (Geometry) என்பதும் கூட சார்புடையதாகவும் சூழல் சார்ந்ததாகவும் ஆகிவிடுகின்றது. இவ்வடிப்படைக் கருத்தியல் புரட்சி உள்ளார்ந்து ஓர் எதிர்கால பின்நவீனத்துவ மற்றும் தாராளவாத அறிவியலுக்கான உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதாக நான் விவாதிப்பேன்.

குவாண்டம் இயங்கியல் (Quantum Mechanics)

(உறுதியின்மை - முழுமையாக்கம் - தொடர்பின்மை - பரஸ்பர இணைவாக்கம்)

'நோக்கியறிதலின் (Observation) முறைமையின் விளைவுகளைத் தவிர்த்து விட்டு ஒரு துகளினுடைய (Particle) இயக்கம் குறித்து இனியும் நாம் பேச

முடியாது. இறுதி விளைவாக குவாண்டம் கோட்பாட்டில் கணித ரீதியாக முறைப்படுத்தப்பட்டுள்ள இயற்கை விதிகள் இனிமேலும் அடிப்படைத் துகள்களோடு (elementary particles) மட்டும் சம்பந்தப்பட்டதல்ல; அவை பற்றி நம் அறிதலோடும் சம்பந்தப்பட்டது.'

ஹைசன்பர்கின் புகழ் வாய்ந்த (uncertainity principle) உறுதியின்மைக் கொள்கையின் இம்முதன்மை அம்சத்தை குவாண்டம் இயங்கியலின் சமன்பாடுகளை நன்கு கற்றுத் தெளிந்த யாரும் ஒப்புக் கொள்வர்.

நாம் இயற்கையின் உருவம் குறித்துப் பேசும்போது புறநிலையில் உள்ள ஓர் இயற்கை குறித்துப் பேசுகிறோமேயொழிய, இயற்கைக்கும் நமக்குமான உறவில் வைத்துப் பேசுவதில்லை. ஆனால் அறிவியல், இயற்கையை ஓர் உணர்வற்ற கண்காணிப்பாளராக எதிர்கொள்வதில்லை; மாறாக, மனிதருக்கும் இயற்கைக்குமான தொடர் விளையாட்டில் தன்னை ஒரு பாத்திரமாக இருத்திக் கொள்கின்றது. அறிவியல் முறைகளான பகுத்தல், விளக்குதல், வகைப்படுத்தல் ஆகியவற்றின் எல்லைகள் தற்போது உணரப்பட்டுள்ளன. செயல்முறையும் செயப்படுபொருளும் எந்நிலையிலும் பிரித்துப் பார்க்க முடியாதவை என்பதும் தெளிவாகி விட்டது.

நீல்போர் (Neil Bohr) எழுதினார், 'நிகழ்வுகள் மற்றும் நோக்கியறிதல் (observation) ஆகிய இரண்டிற்குமே இயல்பான பௌதிக அர்த்தத்தில் ஒரு தன்னிச்சையான யதார்த்த நிலை (arbitrary reality) என்பது நிரூபிக்க முடியாதது.'

குவாண்டம் இயங்கியலின் அடுத்த முக்கியக் கூறாவது complementarity (முழுமையாக்கம்) ஆகும். 'ஒளி என்பது அலையா? துகளா? துகளும், அலைப்பண்பும் பரஸ்பரம் தனித்தன என்றாலும் எந்நிகழ்வினையும் முழுமையாக விளக்குவதற்கு இவ்விரண்டுமே தேவையானவை' என்ற புரிதலே அது.

இன்னும் பொதுவாக ஹைசன்பர்க் குறிப்பிடுகிறார்: அணு அமைப்புகளை விளக்குவதற்கு நாம் பயன்படுத்தும் பல்வேறு வரைவுகள் எடுத்துக் கொள்ளப்பட்ட சோதனைகளுக்கு முழுக்கப் போதுமானவையே. (அவை பரஸ்பரம் தனித்தவையாக இருந்தபோதிலும்) உதாரணத்திற்கு போரினுடைய (Bohr) அணுவை மிகச்சிறிய சூரியக் குடும்ப அமைப்பாக விளக்கலாம். (காரணம்: ஒரு மைய அணுக்கருவும் அதனைச் சுற்றி வரும் மின்மங்களும் (electron) கொண்டது போரின் (Bohr) அணு. மற்றைய பரிசோதனைகளுக்கு அலைகளால் சூழப்பட்ட அணுக்கருவினை கற்பனை செய்வது இன்னும் எளிதானது. இறுதியில் நாம் அணுவை வேதியியல் ரீதியாகவும் கருதலாம். சரியான இடத்தில் பயன்படுத்துமிடத்து ஒவ்வொரு வரைவும் சரியானது தான். ஆனால் வரைவுகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டன; முரணுவன. அதனால் நாம் அவற்றை ஒருங்கிணைத்துத் தொகுக்கின்றோம். இது அணு அமைப்பைப் பற்றி நம் புரிதலை இன்னும் ஆழமாக்குகின்றது.

மறுபடியும் போர் கூறுவதைப் பார்ப்போம்: ஒருபொருளை முழுமையாக விளக்குவதற்குப் பல்வேறுபட்ட நோக்கு நிலைகள் தேவைப்படலாம். உண்மையில், கண்டிப்பாகக் கூறுமிடத்து எந்தக் கருத்தைப் பற்றியுமான, பிரக்ஞை பூர்வமான ஆய்வு என்பது அதன் உடனடிப் பிரயோகத்தைத் தவிர்த்து விடுவதில்தான் இருக்கிறது. இந்த, பின்நவீனத்துவ அறிதல் முறைக்கான முன்னோட்டமானது எவ்வகையிலும் தற்செயலான உடனிகழ்வு அன்று.

முழுமையாக்கத்திற்கும் (complementarity) கட்டுடைப்பிற்கும் இடையிலான உள்ளார்ந்த தொடர்புறவுகள் சமீபத்தில் ஃபரோலா (Froula), ஹானர் (Honner) ஆகியோராலும் இன்னும் ஆழமாக பளோனிஸ்கி (Plotnitsky)யாலும் விளக்கப்பட்டிருக்கின்றன.

குவாண்டம் இயங்கியலின் மூன்றாவது கூறு: தொடர்பின்மை அல்லது உடைவு. குவாண்டம் இயங்கியலானது எந்த ஓர் அணு நிகழ்விலும் தொடர்பின்மை எனும் அடிப்படைக் குணாம்சத்தை வலியுறுத்துகின்றது. செவ்வியல் இயற்பியல் (classical physics) கோட்பாடுகளிலிருந்து முற்றிலும் விடுபட்ட தனித்தன்மையினையும் வழங்குகின்றது.

இறுதியாக, பெல்லின் (Bell) தேற்றமும் அதன் சமீபத்திய பொதுமைப் படுத்தல்களும் நோக்கியறியப்படும் பொருளை மட்டும் (observed object) பாதிக்கவில்லை; மாறாக, பிரபஞ்சத்தில் வெகுதூரத்தில் வேறெங்கோ இருக்கும் தன்னிச்சையான ஒரு பொருளையும் (எ.கா. அன்டோராமீடா திரள் (Andromeda galaxy) கூடப் பாதிக்கிறது எனக் காட்டுகின்றன. ஐன்ஸ்டைனால் 'பிசாசுத்தன்மை' எனச் சுட்டப்பட்ட இந்நிகழ்வுதான், வெளி, பொருள், காரண-காரியத் தொடர்புறவுகள் குறித்த மரபார்ந்த இயந்திர ரீதியான கருத்தியல்கள் மீது புரட்சிகரமான மறுமதிப்பீட்டை வற்புறுத்துகின்றது. மேலும் குவாண்டம் இயற்பியலிலிருந்து கிளம்பியுள்ள தற்கால விளக்கங்கள் மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றலாம்; ஆனால் இதன் முக்கியத்துவமானது இனியும் மறுக்க முடியாதது.

செவ்வியல் பொதுச்சார்பியலின் (classical general relativity) நியூட்டானிய இயந்திர கதியான உலகப் பார்வையில் காலமும் வெளியும் தனித்தன; அறுதியானவை. ஐன்ஸ்டைனின் சிறப்புச் சார்பியல் கோட்பாட்டில் (Special theory of relativity) காலத்திற்கும் வெளிக்கும் இடையிலான பிளவு முற்றிலும் மறைந்து விடுகின்றது. இங்கு நாற்பரிமாண வெளி - காலம் எனும் ஒரு புதிய ஒருங்கிணைவே சாத்தியம். மற்றும் நோக்கியறிபவளின் காலம் - வெளி மீதான நுகர்வு என்பது அவளுடைய அசைவியக்கத்தைச் சார்ந்தது.

ஹெர்மன் மின்கோவ்ஸ்கியின் (Herman Minkovski) புகழ் பூத்த வார்த்தைகளில் 'இனிமேல் காலம் தனக்குள்ளாகவும், வெளி தனக்குள்ளாகவும் வெறும் நிழல்களாகக் கரைந்து போக தண்டிக்கப்பட்டிருக்கின்றன. இனி இரண்டிற்கும் இடையிலான ஐக்கியமே, ஒருங்கிணைவே ஒரு தன்னிலை எதார்த்தத்தைக் காப்பாற்ற முடியும்.' ஆனாலும் மின்ஸ்கோவியின்

வெளி - காலத்திற்குப் பின்னியங்கும் ஜியோமிதி அறுதியாகவே இருக்கின்றது.

ஐன்ஸ்டைனுடைய பொதுச்சார்பியலில்தான் (1915) பெரும் கருத்தியல் உடைப்பு நிகழ்கிறது. இங்குதான் ஈர்மப்புலத்தை (Gravitational field) உள்ளடக்கிய வெளி - கால ஜியோமிதியில் எதேச்சைத் தன்மையும் பன்முக ஆற்றலும் நுழைகின்றது. ஐன்ஸ்டைன் யூக்ளிடிய (Euclidian) கணித மரபிலிருந்து துண்டித்துக் கொண்டு யூக்ளிடியமற்ற (Non-euclidian) ஜியோமிதியைக் கையாள்கிறார். ஐன்ஸ்டைனுடைய சமன்பாடுகள் மிகவும் நேரற்ற தன்மை (Non-linear) கொண்டவை. ஐன்ஸ்டைன், நியூட்டனுக்கு வெகு அப்பால் சென்று நட்சத்திர ஒளி சூரியனுக்கு அருகில் வளைதல், கருந்துளையாய் நட்சத்திரங்கள், தகர்வுறல் முதலிய கோணல் மாணல்களிலிருந்து எழுந்த, பெரும் கோட்பாட்டு மாற்றங்களுக்கான நிகழ்வுகளை ஊகித்தார்.

பொதுச்சார்பியல் மிகவும் அதிர்ஷ்டம் வாய்ந்தது. காரணம் தூய கணிதத்தின் வழியாகவும் முறையான நோக்கியறிதல்கள் வழியாகவும் ஊகிக்கப்பட்ட பொதுச்சார்பியலின் விளைவுகள் ஒரு விஞ்ஞானப் புனைவு போல் இருந்தன. கருந்துளைகள் பரவலாக அறியப்பட்டன. 'புழுத் துளைகள்' (wormholes) அதற்கடுத்தபடியான நிலையிலிருந்தன. கோடலின் (Gode) கட்டமைப்பாக மூடிய கால வளைவுகள் கொண்ட ஐன்ஸ்டைனின் பிரபஞ்சம் ஒருவேளை பரவலாகத் தெரியப்பட்டிருக்கவில்லை. அதாவது ஒருவர் தனது இறந்த காலத்திற்குள் பயணிப்பதற்கான சாத்தியங்கொண்ட பிரபஞ்சம்.

பொதுச்சார்பியலின் கருத்தியல் மாற்றங்கள் இயற்கை அறிவியல்கள் மீது மட்டுமல்ல, தத்துவம், இலக்கியத் திறனாய்வு, மனிதாய அறிவியல்கள் ஆகியவற்றிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

உதாரணத்திற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த புகழ்பெற்ற சர்ச்சையில் ('Les Langages Critiques et les Sciences de l' Homme') ஜீன் ஹிப்போலைட் (Jean Hypolite), ழாக் தெரிதாவின் விஞ்ஞானக் கருத்தாடலில் அமைப்பு மற்றும் குறி பற்றிய ஒரு கோட்பாடு குறித்து ஆழமான கேள்வியொன்றை எழுப்பினார்.

'சில அக்ஷர கணித (algebraic) கட்டுமானங்களின் அமைப்பை மொத்தமாய்க் கருதிப் பார்க்கும்போது மையம் எங்குள்ளது? அலகுகளுக்கு இடையிலான விளையாட்டை/உறவைப் புரிந்து கொள்ள உதவும் பொது விதிகள்தான் அந்த மையமா, அல்லது முழுத் தொகுதிக்குள் குறிப்பிட்ட சிறப்புரிமைகள் பெற்ற ஏதோ ஒரு கூறுதான் அந்த மையமா? உதாரணத்திற்கு ஐன்ஸ்டைனில் நாம் அனுபவவாதக் கூறுகளின் சிறப்புரிமை முடிந்து போவதைப் பார்க்கிறோம். மேலும் இந்த இணைவில் ஒரு மாறிலி (constant) தோன்றுவதையும் பார்க்கிறோம். இந்த மாறிலி கால - வெளி

இணைப்பு ஆகும். நேரடி அனுபவத்தை விரும்பும் எந்தப் பரிசோதனையாளரையும் இது மறுக்கிறது. ஆனால் இதுவே மையமாகவும் செயல் படுகின்றது. எனவே இந்த மாறிலியே மையமா?'

இதற்கு தெரிதா செவ்வியல் பொதுச்சார்பியலின் இதயத்திற்கே சென்று பதிலிறுத்தார். 'ஐன்ஸ்டைனின் மாறிலி (constant) உண்மையில் ஒரு மாறிலியே அல்ல; மையமுமல்ல. மாறாக, மாறுபடுந்தன்மைக்கே அதுதான் அடிப்படை. இறுதியாக அது மாபெரும் விளையாட்டைத் துவங்கி வைக்கின்றது. வேறு வார்த்தைகளில் புலத்தை (field), பார்வையாளர் (observer) ஆளுமை கொள்ளுதல் எனும் மையவியல் கருத்துக்கு எவ்விதத்திலும் அது தொடர்பற்றது.'

நேரற்றமையோடு (Non-linearity), ஐன்ஸ்டைனின் புலச்சமன்பாட்டின் (field equation) (G-Š= ∂β GT-Š) மாறுபடாத்தன்மையை தொடர்புபடுத்துகின்றது தெரிதாவினுடைய கணிப்பு. முன்பு மாறிலியாகவும் பிரபஞ்சப் பொதுமைகளாகவும் கருதப்பட்ட யூக்ளிடின் βயும், நியூட்டனின் Gயும் தற்போது அவற்றின் இயங்குநிலையில் வைத்து மதிப்பிடப் படுகின்றன. இனி, ஜியோமிதியால் மட்டுமே விளக்கிவிட முடியாத வெளி - காலப் புள்ளி மீதான அறிவு பீடத் தொடர்புகள் அறுந்து போய், கண்டறிவோர் (observe) மிகவும் மையமிழக்கப்பட்டுள்ளார்.

குவாண்டம் ஈர்மவியல்: (Quantum Gravity)

தந்தி/இழைப்பின்னல்/Morphogenetic புலம் (String/Weave/Morphogenetic field)

அடுத்து G-Sஐ ஒரு ஜியோமிதிக் இருப்பாகப் பார்க்கும் மரபார்ந்த விளக்கத்தை எப்படி உறுதி செய்ய முடியும்? தற்போது கண்டறிவோர் மட்டுமல்ல ஜியோமிதி எனும் அடிப்படைக் கருத்தியலே சார்புள்ளதாகவும் சூழல் சம்பந்தப்பட்டதாகவும் ஆகிவிட்டது.

கோட்பாட்டு இயற்பியலில், குவாண்டம் கோட்பாட்டையும் பொதுச் சார்பியலையும் ஒருங்கிணைத்தலே நீக்கப்படாத மையப் பிரச்சினையாக இருக்கிறது. இத்தகைய ஒருங்கிணைப்பிற்கான மொழி என்னவாக இருக்க முடியும் என தற்போதைக்கு யாராலும் கணிக்க முடியாது. இருப்பினும் கோட்பாட்டு இயற்பியலாளர்கள் குவாண்டம் ஈர்மவியலைப் புரிந்து கொள்ளப் பிரயோகித்த உருவகங்களையும் படிமங்களையும் வரலாற்றுப் பூர்வமாகப் பரீட்சித்துப் பார்ப்பது பயனுள்ளது.

மிக ஆரம்ப முயற்சிகள் 1960களில் தொடங்குகின்றன. பிளாச்சின் அளவுகோளில் (platchi scale) (சுமார் 10\காமா 33 சென்டி மீட்டர்) ஜியோமிதியைக் காட்சிப்படுத்த, சிக்கலான, மாறிக்கொண்டேயிருக்கிற உள்ளிணைவுகள் கொண்ட, வெளி - கால வளைவுக் குமிழிகள் கொண்ட 'வெளி - கால - நுரை' வர்ணிக்கப்பட்டது. ஆனால் இது மேலும் வளர்த்தெடுக்கப்பட முடியவில்லை.

1970களில் இன்னும் கூட திருப்திகரமான அணுகுமுறைகள் முயற்சிக்கப்பட்டன. ஐன்ஸ்டைனின் சமன்பாடுகளை முடிந்தளவிற்கு நேரான சமன்பாடுகளாகவே (linear equations) கருதிக் கொண்டு எளிமைப்படுத்திப்பார்ப்பது. பிறகு தற்போதைய குவாண்டம் புல (Quantum field theory) கோட்பாட்டின் முறைமைகளை இத்தகைய எளிமைப்படுத்தப்பட்ட சமன்பாடுகள் மேல் பிரயோகித்துப் பார்ப்பது. ஆனால் இதுவும் தோல்வியடைந்தது. மறுஎளிமைப்படுத்தலுக்கு உட்படாதபடி ஐன்ஸ்டைனின் சமன்பாடுகள் மிக நுட்பமான மொழியில் யாக்கப்பெற்றிருப்பது உணரப்பட்டது. அதாவது ஐன்ஸ்டைனின் நேரற்றமைகள் (Non-linearities) கோட்பாட்டின் இயல்பம்சமாக இருக்கிறது. அதனை வலுவற்றதாகக் கருதிப் பார்க்கும் எம்முயற்சியும் பொதுச்சார்பியலோடு முரணையே உண்டாக்கும்.

1990களில் தந்திக் கோட்பாடு (string theory) எனும் ஒரு வித்தியாசமான அணுகுமுறை பிரபலமடைந்தது. இங்கு பருப்பொருளின் அடிப்படை அலகானது புள்ளி போன்ற துகள்களல்ல; மாறாக, மூடிய/திறந்த மிகச் சிறிய (பிளாங்க் அளவுகோல்) தந்திகளே/இழைகளே இங்கு அடிப்படை அலகு. இக்கோட்பாட்டில் வெளி - காலப் பரப்பு என்பது சார்பற்ற பௌதிக எதார்த்தமாக நிலவுவதில்லை. மாறாக, அது நாமாகத் தருவிக்கிற/தோராயப்படுத்துகிற கருத்தியல் மட்டுமே. இத்தோராயப்படுத்தல் என்பது மிக நீண்ட அளவுகோல்களிலேயே (10\காமா 33 செ.மீக்கும் மிக அதிகமான) அர்த்தமுள்ளதாகும்.

இந்தத் தந்திக் கோட்பாட்டில் குதூகலித்த பலர் தாங்கள் எல்லாவற்றினுடையதாக (Theory of everything) கோட்பாட்டை நெருங்கிக் கொண்டிருப்பதாக நினைத்தார்கள். ஆனால் இக்கோட்பாட்டில் கணித வியல் சிக்கல்கள் தீர்க்க முடியாததாய் இருக்கின்றன.

நியூட்டானியத்தில் ஏற்பட்ட இத்தகைய உடைப்புகள் ஒரு புதிய விஞ்ஞானச் சாகசத்திற்கு வழி வகுத்துள்ளன. புலன்வாத அறிவு மதிப்பிழந்த அறுதியான பௌதிகப் பொருட்களின் ஆன்மா, உடல் இரண்டினுடைய முடிவிற்கும் இட்டுச் செல்லும் ஓர் உலகிற்கு வழி வகுத்துள்ளது.

தற்போது, ஐன்ஸ்டைனின் பொதுச்சார்பியலோடு அப்பே அஷ்டெகர் (Abhay Ashtekar) கண்டுபிடித்த ஒரு புதிய கணிதவியல் குறியீட்டியலைப் பயன்படுத்தி குவாண்டம் கோட்பாட்டைக் காட்சிப்படுத்தும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. இவர்களுக்குக் கிடைக்கும் காட்சியானது மேலும் குழப்பம் விளைவிக்கின்றது.

(தந்திக் கோட்பாட்டிலுள்ளது (string theory) போல, அதிக தொலைவுகளில் மட்டுமே அர்த்தமுள்ள தோராயப்படுத்தமே வெளி - காலப்பரப்பாகும். சிறிய தொலைவுகளிலோ (பிளாங்க் அளவு) வெளி - கால வடிவம் என்பது (மிகச் சிக்கலான உள்ளிணைவுகள் கொண்ட) இழைப்பின்னலாகும் (Weave).

முடிவாக, கணிதவியலாளர், இயற்பியலாளர், உயிரியலாளர் ஆகியோரின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் வழி உத்வேகமானதொரு திட்டம் கடந்த சில ஆண்டுகளில் உருப்பெற்று வருகிறது. அது Morphogenetic புலக் கோட்பாடாகும். இவ்வகைப் புலமானது (field) உண்மையில் குவாண்டம் ஈர்மப் புலத்தோடு நெருக்கமான தொடர்புடையது.

Morphogenetic புலம் என்பது,

அ. வெளி முழுக்க வியாபித்துள்ளது,

ஆ. அனைத்து ஆற்றல்/பருப்பொருட்களோடும் (மின்னூட்டம் பெற்றது/பெறாதது) அது தொடர்பாடுகின்றது.

இ. இது கணிதவியல் ரீதியாக - symmetric second rante tensor - என அழைக்கப்படுகின்றது.

இம்மூன்றுக்குமான ஆதாரம் உறுதியென்றால், Morphogenetic புலம் என்பது ஐன்ஸ்டைனுடைய ஈர்மப்புலத்தின் குவாண்டம் மறுபாதியே எனக் கருதலாம். சமீப காலம் வரை உயிரியலாளர்களிடம் எதிர் மனோபாவம் கொண்டவர்களால் தொடர்ந்து வெறுக்கப்பட்டு வருகின்றது இது. என்றாலும் தற்போது சில கோட்பாட்டு இயற்பியலாளர்கள் இக்கோட்பாட்டின் மீது கரிசனையுடையோராய் இருக்கின்றனர். வெகு விரைவில் நல்ல முன்னேற்றங்கள் சாத்தியப்படலாம்.

தந்திக் கோட்பாடு (string theory), இழைப்பின்னல் (Weave), புலங்கள் - இதில் எது உறுதி செய்யப்படும் எனக் கூறுவதற்கான காலம் கனிந்திடவில்லை. (இவற்றுக்கான சோதனைகள் நிகழ்த்தப் பெருமளவிற்கு எளிதல்ல). என்றாலும் இம்மூன்று கோட்பாடுகளுக்கும் இடையில் நேரற்றமை, சார்புள்ள வெளி - காலம், நெகிழ்வுத்தன்மை முதலிய ஒற்றுமைக் கூறுகள் இருப்பது கவனிக்கத்தக்கன.

வெளி - காலம் - பரப்பு:

(முழுமைகளும் எல்லைகளும் குறித்து)

லூசி இரிகாரே (Luce Irigaray) தன் புகழ் வாய்ந்த 'Is the subject of science sexed' எனும் கட்டுரையில், 'முழுமைகள் பற்றிய கோட்பாட்டில் கணித அறிவியல்கள், அவற்றை தம்முள் மூடிய/திறந்த வெளிகளாகவே பார்க்கின்றன. பகுதியளவு திறந்த/பகுதியளவு மூடிய முழுமைகள் பற்றிய கேள்வியை அவை கருதிப் பார்ப்பதில்லை' என்கிறார்.

கடந்த பத்தாண்டுகளில் சில கணிதவியலாளர்கள் எல்லையுள்ள பரப்பு/எல்லையற்ற பரப்பு (manifolds with boundary & without boundary) முதலிய கோட்பாடுகளின் பக்கம் திரும்பியுள்ளனர். இன்னொரு பக்கம் அதி தந்திக் கோட்பாடு (super string theory), குவாண்டம் ஈர்மவியல் முதலியவற்றால் வெளி - கால மாதிரிகள் முன்வைக்கப்படுகின்றன.

எல்லையுள்ள இரு பரிமாண பரப்பிலுள்ள ஒரு புலத்தின் மீது மூடிய/திறந்த தந்திகளின் தொடர்புறவுக்கான குவாண்டம் இயந்திர வீச்சானது ஒரு

இயங்கு பூரணத்தால் (functional integral) குறிக்கப்படுகின்றது. எல்லையுள்ள இரு பரிமாண பரப்பு (two dimensional manifold with boundary), பல்பரிமாணப் பரப்பால் இடமாற்றம் செய்யப்படும் என்பது தவிர்த்து, குவாண்டம் ஈர்மவியலிலும் இதுவே சாத்தியம் என நாம் எதிர்பார்க்கலாம். மரபு வழிப்பட்ட நேரான (linear) கணிதவியல் எண்ணத்திற்கு எதிராகச் செல்கின்றது பல்பரிமாணத்தன்மை.

இரிகேரே (Irigary) எதிர்பார்த்தது போல, இவ்வனைத்துக் கோட்பாடு களிலும் முக்கியமான கேள்வியாவது: 'எல்லை என்பது மீறக்கூடியதா? மீறக்கூடியதாயின், அதற்குப்பின் நிகழ்வது என்ன? இது தொழில்நுட்ப ரீதியாக 'எல்லை நிலைமைகள்' (boundary conditions) என்றழைக்கப் படுகின்றது.

ஒரு கணிதவியல் நிலையில், 'எல்லை நிலைமைகளின்' முனைப்பான அம்சமாவது சாத்தியங்களின் பெரும்பான்மையும் வித்தியாசங்களும்தான். சாத்தியமான 'எல்லை நிலைமைக'ளாவன:

1. சுதந்திர 'எ.நி' (கடந்து செல்ல தடைகளற்றது)
2. பிரதிபலிக்கும் 'எ.நி' (கண்ணாடியில் பிரதிபலிப்பது போல)
3. சீரான கால இடைவெளிகளில் நிகழும் 'எ.நி' (வெளி-காலப் பரப்பின் வேறொரு பகுதியில் மறுநுழைவு நிகழ்தல்)

(எ.நி - எல்லை நிலைமைகள்)

இப்போது கேள்வி என்னவெனில் இவ்வனைத்து 'எ.நி'களிலும் குவாண்டம் ஈர்மவியலைப் பிரதிபலிப்பது எது? முழுமையாக்கக் கொள்கை (complementarity principle) குறிப்பிடுவது போல, அனைத்து 'எ.நி'க்களும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றனவா?

எல்லைகள் மீறுதல்:
ஒரு தாராளவாத அறிவியலை நோக்கி

கடந்த இருபது வருடங்களாக நவீனத்துவ/பின் நவீனத்துவ கலாச்சாரங் களுக்கு இடையிலான இடைவெளிகள்/உறவுகள் குறித்து விரிவான விவாதங்கள் மேற்கிளம்பி வருகின்றன. தற்போது, இயற்கை அறிவியல்கள் எழுப்பியுள்ள சில குறிப்பான கேள்விகளை நோக்கி இவை திரும்பியுள்ளன.

மேட்சனும் மேட்சனும் (Madsen & Madsen) பின் நவீனத்துவ அறிவிய லுக்கான இரு நிலைகளைச் சுட்டுகின்றனர்.

ஒன்று, தற்சார்பற்ற 'உண்மை' எனும் கருத்திலிருந்து முழுமையாக விடுபடுதல். குவாண்டம் இயற்பியலின் complementarity (முழுமையாக்கம்/ ஒருங்கிணைவாக்கம்) விளக்கம் பின் நவீனத் தன்மையுடையதாய்ப் பார்க்கப்படுகின்றது. இந்நிலையில், குவாண்டம் ஈர்மவியலை (quantum growing) ஒரு முன்மாதிரி பின் நவீனத்துவ அறிவியல் எனலாம்.

மற்றொன்று essentiality (அவசியத்தன்மை) ஆகும். கோட்பாட்டின் உறுதிக்கும் பயன்பாட்டிற்கும் அவசியமான கூறுகளிலிருந்தே பின் நவீனத்துவ அறிவியற் கோட்பாடுகள் கட்டப்படுகின்றன. இவ்வழியில் வெளி - காலப் புள்ளிகள் (space - time points), துகளின் (particle), உறுதியான. நிலை முதலியன சேர்க்கப்பட முடியாதவை.

என்றாலும் மேற்குறித்தவை, எந்நிலையிலும் ஒரு தாராள பின் நவீனத்துவ அறிவியலுக்கு முழுக்கப் போதுமானவை அல்ல. அவை மனிதரை 'அறுதி உண்மை', 'தற்சார்பற்ற எதார்த்தம்' முதலிய கொடுங் கோன்மைகளிலிருந்து விடுத்திருப்பினும் இன்னும் சக மனிதர்களின் கொடுங்கோன்மையிலிருந்து போதுமான அளவிற்கு விடுவிக்கவில்லை.

ஆன்ட்ரூ ரோஸின் (Andrew Ross) வார்த்தைகளில், 'வெளிப்படையாக/ பகிரங்கமாக பதிலளிக்கக்கூடிய தொண்டுளங்கொண்ட ஓர் அறிவியல் நமக்குத் தேவைப்படுகின்றது. இதையொத்த கெல்லி ஒலிவர் (Kelly Oliver) இன் பெண்ணிய நோக்கு நிலையிலிருந்தான வாதம்: 'புரட்சிகரமாக இருப்பதற்கு பெண்ணியக் கோட்பாடுகள் இயல்பான உண்மை யினையோ/எது நிலவுகிறதோ- இருக்கிறதோ அதனை உரிமை கொண்டாட முடியாது. மாறாக, நாம் புதிய எதார்த்தத்தை உருவாக்கு கிறோம். எப்போதைக்குமான பொய்யான/உண்மையான கோட்பாடுகள் அல்ல நமது தேவை. சூழலை எதிர்கொள்ளக்கூடிய சந்தர்ப்பவாத தந்திரோபாயங்களே நமது தேவை'

இரு நிலைகளிலிருந்து பின் நவீனத்துவ அறிவியலை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். முதலில் பொதுவான சில நோக்கங்களையும் பின் அரசியல் நோக்கங்களையும்.

முன்னெழுந்து வரும் பின் நவீனத்துவ அறிவியலின் ஓர் அம்சமாவது, தொடர்பின்மைக்கும், நேரற்ற தன்மைக்கும் அது தரும் அழுத்தமாகும். இது ஆதாரபூர்வமானது (எ.கா: ஒழுங்கின்மை/குழப்பம் கோட்பாடு (chaos theory), நிலைமாற்றங்கள் (phase transitions), குவாண்டம் ஈர்மவியல் முதலியவை). அதே சமயம் பெண்ணியலாளர்கள் பாய் தன்மை மீது (fluidity), குறிப்பாக கட்டற்ற பாய் தன்மை மீது (Trubulant fluidity), அதிக அழுத்தந் தருகின்றனர். உடனடியாகத் தோன்றுவதுபோல், இவ்விரு கருத்துக்களும் முரண்படுபவை அல்ல. காரணம், வலுவான ஒழுங்கின்மை கட்டுக்கடங்காத் தன்மைக்கு ஒப்பானதே; அதே போல் நெகிழ் தன்மை, பாய் தன்மை ஆகியன சில நேரங்களில் தொடர்பின்மையோடு உறவுடையது. எனவே ஒருங்கிணைவிற்கான சாத்தியம் இருக்கவே செய்கின்றது.

அடுத்தது, காண்பவர் - காணப்படும் பொருள், தன்னிலை - புறநிலை, மனித இனம் - இயற்கை, என கார்டீசிய அறிதல் முறைகள் ஏற்படுத்தி யுள்ள பிளவுகளை அழிக்கின்றது பின் நவீனத்துவ அறிவியல். ஏற்கனவே

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் குவாண்டம் இயங்கியல், 'தற்சார்பற்ற பௌதிகப் பொருட்களாலான உலகின் மீதான' நியூட்டானிய நம்பிக்கை களைச் சிதைத்துள்ளது. ஹைசன்பர்க் கூறியது போல 'வெளி - காலத்தில் இனிமேலும் ஓர் அறுதித் துகள் (Absolute Particle) குறித்து பேசுவதற்கான வாய்ப்புகளில்லை.' ஆனாலும் ஹைசன்பர்கின் அணுகுமுறையில் ஒரு முன்தீர்மானிக்கப் பட்டுவிட்ட 'வெளி - காலத்தை' (pre-determined space time) காண்கிறோம். குவாண்டம் ஈர்மவியல் இங்குதான் விலகிச் செல்கின்றது. அதாவது கண்டறிதல் (observation) எனும் செயல்பாட்டின் வழியாகத்தான் ஒரு துகளுடைய நிலையும் திணிவு வேகமும் (Position & Momentum) உருவாகின்றன என்கிறது அது. எனவே குவாண்டம் ஈர்மவியலில் வெளியும் காலமுமே கண்டறிதல் எனும் செயல்பாட்டின் வழியாகத்தான் அர்த்தமுறுகின்றன.

அடுத்ததாக பின் நவீனத்துவ அறிவியல்கள், நவீனத்துவ அறிவியலின் படிநிலையான முறை வைப்புகளை கேள்விக்குள்ளாக்குகின்றன. பழைய அறிவியலின் மையப்படுத்துதல்களுக்கு எதிரான, பகுதிகளின் பெரும் வலைப்பின்னலாக முழுமையைக் காண்கின்றன பின் நவீனத்துவ அறிவியல்கள். நிலையான தன்னிறைவான இருப்புகளுக்கு (நியூட்டானிய இயற்பியல்) எதிராகத் தொடர்புறவுகளும் நெகிழ் தன்மையினையும் முன் வைக்கப்படுகின்றன. குவாண்டம் ஈர்மவியலிலிருந்து ஒழுங்கின்மை (chaos) கோட்பாடு வரை, பல துறைகளில் இத்தகைய பின் நவீன அம்சங்கள் மேலோங்கி வருகின்றன.

பின் நவீனத்துவ அறிவியல்களின் அடுத்த அம்சமாவது: குறியீட்டியலுக்கும் பதிலிகளுக்கும் அது கொடுக்கும் அழுத்தமாகும். ரொபர்ட் மார்க்லி (Robert Markley) சுட்டிக் காட்டியது போல, இவ்வகை அறிவியல்கள் ஒழுக்கவியல் எல்லைகளை வேகமாகக் கடந்து செல்கின்றன. இங்கு 'எதார்த்தம்' என்பது நேரான அளவு கோள்களில் விளக்க முடியாதது. நேரற்ற, தீர்வற்ற சமன்பாடுகளின் வழியாகவேதான் சிக்கலான, குழப்பமான, தீர்மானமற்ற எதார்த்தத்தை (complexy chaotic, non-deterministic) விளக்குவது சாத்தியம்.

எனவே துல்லியம், உண்மை முதலிய அதிகாரங்களுக்கு இங்கு இடமில்லை. பின் நவீனத்துவ அறிவியல்கள் எதார்த்தத்தைத் துல்லியமாக விளக்குவதைக் காட்டிலும் படிமப்படுத்தவே விரும்புகின்றன. இந்நிலையில் அழகியல் ரீதியான அறிதல் முறை முன்வைக்கப் படுகின்றது.

அரோனோவிட்ச் (Aronowitz) கருதுவது போல, 'இயற்கைப் பொருட்கள் என நாம் கருதுவனவும், சமூக மற்றும் மொழியியற் கட்டமைவே ஆகும். உயிர்கள் தோன்றுவதற்கு வெகு முன்பிருந்தே பூமி இருப்பது உண்மைதான். ஆனால் இயற்கை அறிவியல் அறிவு என்பது சமூகப் புலத்திற்கு வெளியிலிருக்கிறதா என்பதே கேள்வி. அது சாத்தியமெனில்,

அறிவையும் கலையையும் உருவாக்க நாம் பயன்படுத்தும் வழிமுறைகளில் ஏற்படும் விளைவுகளை அறிவியலும் கலையும் உருவாக்கும் வழிமுறை களின் விளைவுகள் சரி செய்யும் எனக்கருதலாம். குறிப்பாக நிகழ்த்து கலை இத்தகையதொரு முயற்சியாக இருக்கும்.'

முடிவாக, மரபார்ந்த அறிவியலின் உடன்பிறந்த அதிகாரத்தையும், மேட்டிமைத் தனத்தையும் பகுத்தறிவுத் தனத்தையும் முடிவுக்குக் கொணர் கிறது பின் நவீனத்துவ அறிவியல்.

இறுதியாக, எந்த அறிவியலும், அதன் உரையாடல்கள் எந்த மொழியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவோ அம்மொழிக்குக் கட்டுப்பட்ட தாகவே இருக்கும். ஐரோப்பிய மைய நீரோட்ட அறிவியலானது, கலீலியோ தொடங்கி முழுக்க முழுக்க கணித மொழியால் கட்டப்பட்டது. இக்கணித மொழி யாருடையது? இக்கேள்வி மிக அடிப்படையானது. அரோனோவிட்ச் கூறியது போல், 'தர்க்கமும் கணிதமும் கூட சமூகத்தின் கறை படிந்ததுதான்...' மற்றும் பெண்ணியலாளர்கள் மறுபடி மறுபடி கூறுவது போல், இக்கறையானது முதலாளியக் குணம் வாய்ந்தது. ஆண்மையானது ராணுவத்தன்மை மிகுந்தது. 'கணிதம் விஞ்ஞானத்தில் வேலைப் பெண்ணாக' வர்ணிக்கப்படுவது இங்கு சேர்த்து நோக்கத்தக்கது. கணித மொழியின் அதிகாரத்தின் மீதான மறு ஆய்வைத் தவிர்த்துவிட்டு ஒரு பின் நவீனத்துவ அறிவியல் சாத்தியமல்ல. இதுவரையில் இப்படியொரு தாராளக் கணிதவியல் இல்லை. ஆனால் இதற்கான சில கூறுகளை நாம் தெளிவின்மைக் கோட்பாட்டின் (fuzzy theory) பல்பரிமாணத் தன்மையிலும் நேரற்ற, அதர்க்கத்தன்மையிலும் காணலாம். (atastrophe (பேரழிவு) கோட்பாடும் அதன் நெகிழ் தன்மை, தொடர்பின்மை, உருமாற்றம், கணிக்க முடியாமை முதலிய தன்மைகளோடு ஓர் எதிர்காலக் கணிதவியலில் பெரும்பங்கு வகிக்கும். கடைசியாக ஒழுங்கின்மை/ குழப்பக் கோட்பாட்டின் (chaos theory) நேரற்ற தன்மை எதிர்காலக் கணிதவியலை வலுவாக உந்தும் எனலாம். எதிர்கால கணிதவியல்/ இயற்பியல் பற்றிய கனவுகள் ஒருபுறமிருப்பினும் பின் நவீன அறிவியலில் முளைத்து வரும் இவ்விளங்கிளைகள் தன் புதிய கிளை களைப் பெருக்கிக் கொண்டு தனி விருட்சங்களாகும்போது முற்றிலும் புதிய அணுகுமுறைகள் தேவையாயிருக்கும்/பிறந்திருக்கும்.

பெண்மை உருவாக்க மொழிதலும் மொழிதல் உருவாக்க வழிபாடும்

அறிவழகன்

1

பண்பாடு என்னும் சொல்லானது எளிமையற்றதாகவும் மிகவும் சிக்கலான நிலையிலும் (complex form) மனித சமூகக் குழுக்களிடம் புழங்கப்பட்டு வருகின்றது. இது அறிவு சார்ந்த நிலையிலேயே (intellectually inherited) கொண்டு செல்லப்படும். சமூகக் குழு ஒன்றில் முகிழ்க்கும் ஒருவர் தான் பிறந்தது முதல் இறக்கும் வரையில் அச்சமூகத்தின் பண்பாட்டினைப் பண்பாட்டு வயமாக்கம் (enculturation), சமுதாய வயமாக்கம் (socialization) மூலமாக உணர்ந்து கொள்கிறார். இதனைத் தொழிற்படுத்திட குடும்பம், சமயம், கல்வி... இப்படிப் பல்வேறு வகையான நிறுவனங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

பண்பாட்டு வெளிப்பாடுகள் பொதுவாக, சொல் சார்ந்த வடிவங்களிலும் உடலியக்க வடிவங்களிலும் பொருள்சார் வடிவங்களிலும் வெளிப்படுகின்றன. சில சமயங்களில் தமக்குள் ஊடாடியும் வெளிப்படுகின்றன. இப்படி வெளிப்படுகின்ற வடிவங்கள் இருக்கும் சமூக அமைப்பிற்கு இயைந்து செல்லும் மன நிலையை உருவாக்கக் கூடியதாகவோ மரபுசார் கல்வி கற்றுக் கொடுப்பதாகவோ சமூகக் கட்டுப்பாட்டினை - விதியினைத் தெரியப்படுத்தக் கூடியதாகவோ எதிர்ப் புணர்வைக் காட்டக் கூடியதாகவோ செயல்பாடுகளைக் கொண்டிருக்கலாம். இங்கு, பண்பாட்டு வகைமை (cultural category)யான பெண்மை (Feminine) உருவாக்கத்தில் பெண்களின் வழிபாட்டுச் சடங்காகிய 'ஔவை நோன்பு' எவ்வாறு வினையாற்றுகிறது என்பதைக் காணலாம்.

2

ஔவை நோன்பு பெண்கள் மட்டுமே பங்கேற்கும் வழிபாட்டுச் சடங்காகும். இது தமிழகத்தில் நெல்லை, குமரி, மதுரை மாவட்டங்களிலும் செட்டி நாட்டுப் பகுதியிலும் கும்பகோணம் பகுதியிலும் பரவலாகப் பெண்களால் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. இதனை ஔவையார் நோன்பு, ஔவையாரம்மன் நோன்பு, ஔவையார் விரதம், செவ்வாய்க்கிழமை விரதம் என அழைக்கின்றனர். கழுகுமலைப் பகுதியில் இதனை ஈஸ்வரியம்மன் விரதம் எனக் குறிப்பிடுவதாக நா. வா குறிப்பிட்டுள்ளார். மேலும் ஔவையார் சாமி நோன்பு, பிள்ளையார் நோன்பு எனவும் குறிப்பிடுவதாக ஆ. பாப்பா என்பவர் கூறுகின்றார்.

இவ்விரதம்/நோன்பு வருடத்தில் ஆடி, தை, மாசி மாதங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. இது குறித்த மரபுத் தொடர்,

'அயத்தா ஆடி
தப்புனா தை
மறந்தா மாசி'

என்பதாகும். இம்மரபுத் தொடர் மதுரை மாவட்டத்தில்,

'அயந்தா ஆடி
தழைக்கா தை
மறந்தா மாசி' (ஆ. பாப்பா: 1991) எனவும் குமரி மாவட்டத்தில்,

'தவழ்ந்தா தையிலும்
மறந்தா மாசியிலும்
அசந்தா ஆடியிலும்' (நடராசன் செந்தீ: 1981) என்றும் அழைக்கப்படுகிறது. முன்னர் குறிப்பிட்ட ஆடி, தை, மாசி மாதங்களில் செவ்வாய்க் கிழமை தோறும் இரவு பத்து மணிக்கு மேல் விடிவதற்கு முன்பாக இவ்விரதம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப் பெறும். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் நோன்பு மேற்கொள்ள முடியாதவர்கள் மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமையும் இறுதி செவ்வாய்க் கிழமையும் இந்நோன்பினைக் கடைப்பிடிக்கின்றனர்.

பெண்கள் இவ்வழிபாட்டினைக் கூட்டாக மேற்கொள்வர். இக்கூட்டு வழிபாட்டில் ஒரே சாதியைச் சார்ந்த பெண்களே பங்கு கொண்டாலும், சில இடங்களில் பழக்கத்தைப் பொறுத்து இடைநிலைச் சாதியினரில் சிலர் சேர்ந்தும் பங்கு பெறுவதாகத் தகவலாளி கூறினார். இவ்வழிபாட்டினை முன்னின்று நடத்தக் கூடியவர்களாக பெரும்பாலும் வயதில் மூத்த பெண்களாகவும், கணவர் இல்லாத பெண்களாகவும் மட்டுமே உள்ளனர். ஆனால் இவ்வழிபாட்டில் திருமணமான பெண்களும் வயதுக்கு வந்த பெண்களும் வயதுக்கு வராத சிறுமியரும் பங்கெடுக்கின்றனர்.

ஔவை நோன்பானது அதனுடைய கட்டமைப்பில் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. இக்கட்டமைப்பு வழிபாட்டிற்கான ஆயத்தம், கதையாடல், வழிபாடு என்பதாகும்.

முதலாவதாக நாம் வழிபாட்டிற்கான ஆயத்தம் என்ற பகுதியை இங்கு காணலாம். இதில் கொழுக்கட்டை அவித்தல், படையல் (படைப்பு) போடுவது போன்றவை முக்கிய நிகழ்வுகளாகும். இவ்வழிபாட்டினை யாருடைய வீட்டில் வைத்து நடத்த இருக்கின்றார்களோ அந்த வீட்டிற்கு பங்கேற்க உள்ள பெண்கள் அனைவரும் இரவில் வந்து சேர்ந்து விடுவர். அவர்கள் வருகின்றபோது தங்கள் வீட்டில் ஆண்கள் கண்படாமல் இடித்த பச்சரிசி மாவு கொண்டு வருவது வழக்கம். இதற்கு முன்பாகவே வழிபாடு நடத்தவுள்ள வீடு கழுவி சுத்தம் செய்யப்பட்டு விடும். அதன் பின்னர் இந்த வீட்டில் (வழிபாடு நடத்தவுள்ள அறையில்) ஆண்கள் நடமாட்டம் இல்லாதவாறு பார்த்துக் கொள்வதுண்டு.

கொழுக்கட்டை அவிப்பதற்குக் கொண்டுவரும் பச்சரிசி மாவை முன்பெல்லாம் ஆண்களின் வாடையோ ஆண்களின் பார்வையோ விழாதவாறு பார்த்துக் கொள்வதுண்டாம். அதாவது தாங்களே தங்கள் கைப்பட நெல்லைக் குற்றி, இடித்து மாவாக எடுத்துக் கொண்டு வருவர். இப்போது மாவு ஆலைகளில் இடித்துக் கொண்டு வருகின்றனர். மாவு இடிக்க நெல் எடுக்கும்போது வழிமுறை ஒன்றைப் பின்பற்றுகின்றனர். அதாவது, உள்ளங்கையால் மூன்று பிடியும் புறங்கையால் மூன்று முறையும் நுள்ளி (கிள்ளி) மூன்று முறையும் எடுப்பர். இதனைப் பின்வரும் மரபுத்தொடர்களினால் குறிப்பிடுகின்றனர்.

'அகங்கை கொண்டு மூணு(னு) சரங்கை (சிரங்கை)
புறங்கை கொண்டு மூணு சரங்கை
அள்ளி மூணு சரங்கை
நுள்ளி மூணு சரங்கை' (பாப்பா. ஆ: 1991)

இதனை செந்தீ. நடராசன் தன்னுடைய கட்டுரையில்,

'அகங்கை கொண்டு மூணு(னு) பிடி
புறங்கை கொண்டு மூணு பிடி'
எடுத்து
'ஏறு பொழுதிலே போட்டு
இறங்கு பொழுதிலே வாரி
எல்லாரும் உண்டு தின்னு
உறக்கமான பிறகு
குற்றித் திரிச்சி...'

எனக்குறிப்பிடுகிறார்.

தற்போது பச்சரிசியைக் கடையில் வாங்கி மாவு இடித்து கொள்கின்றனர். வழிபாடு செய்ய தேங்காய், மாவு, பழம், சூடம், பத்தி, சாம்பிராணி போன்றவைகளையும் கொண்டு செல்வர். கொழுக்கட்டை அவிக்க ஆரம்பிக்கும்போது முதலாவதாக கன்னிப்பெண் ஒருத்தி கொண்டு வருகின்ற மாவையே தண்ணீருடன் சேர்த்துக் கொழுக்கட்டை பிடித்து முதலில் அதனை அவித்து எடுப்பர். கொழுக்கட்டை அவிக்கும்போது மாவுடன் உப்பு சேர்க்காமல் அவிப்பார்கள். இப்படியாக, வழிபாட்டில் பங்குபெற வந்துள்ள அனைவரது பங்கிலும் கொழுக் கட்டைகள் அவித்து முடிந்த பின்னரே படையல் இடுவர். கொழுக்கட்டை அவிக்கும்போது பச்சை மாவில் ஏழு அண்ணன்மார்கள், விறகுக்கட்டு, விளக்கு, அம்மி, குழவி, சட்டி, பிள்ளையார், உரல், உலக்கை போன்ற உருவங்களைச் செய்து கொதிநீரில் இட்டு அவிப்பர். கொழுக்கட்டையில் பிடிக்கப்படும் உருவங்கள் இடத்திற்கு இடம், சொல்லப்படும் கதைகளுக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றன. செந்தீ.நடராசன் தன்னுடைய 'அவ்வை நோன்பு ஒரு சமூக - மானிடவியல் ஆராய்ச்சி' என்ற கட்டுரையில், 'குறிப்பாக கிழவி உருவம், கிழவன் உருவம், ஆண்குறி,

பெண்குறி, கை, கால், அம்மி, அகல் விளக்கு முதலிய' உருவங்கள் செய்யப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். 'உருவங்கள் என்பவை நெறிக்கும் கை, விறகுக்கட்டு, தீச்சட்டி, பாடை, கம்பு, கவைக்கம்பு, உருண்டை, அவரைக்காய், பொம்மை, அவ்வையார் சாமி, குடை பிடித்திருப்பது, விரல்கள் போன்ற உருவங்களே செய்யப்படுகின்றன. ஆனால் சிலர் அடுப்பு, பானை, சட்டி போன்ற உருவங்களே செய்வோம் என்று கூறுகின்றனர் (லலிதா, 18-04-91). மேலும் படி, சுத்தி, வெல்லம், அரிவாள் போன்ற உருவங்களும் செய்வதாகக் கூறுகின்றனர் (மணிமேகலை, 22-01-91).' கொழுக்கட்டை அவித்து எடுக்கும் வேலையை வழிபாடு நடத்தக் கூடியவரே செய்வார்.

கொழுக்கட்டையை அவித்து முடிந்த பின்னரே படையல் இடுவர். வழிபாட்டு அறையில் காமாட்சி விளக்கு (வெண்கலம்) ஏற்றி வைப்பார்கள். இதில் 'பூ' சுற்றப்பட்டிருக்கும். அருகில் செம்பிலோ அல்லது கலசத்திலோ நிறை தண்ணீர் வைத்திருப்பர். மேலும் பூசைக்கு வாழைப்பழம், பத்தி, சூடம், சாம்பிராணி, கொழுக்கட்டை, அவித்த நீர் (பால்) போன்றவற்றையும் வைத்திருப்பார்கள். அவித்த கொழுக் கட்டைகளை அவரவர்கள் கொண்டு வந்த பாத்திரத்தில் இட்டு அவர்கள் கொண்டு வந்த தேங்காயையும் உடைத்துச் சிறுசிறு துண்டுகளாக்கி பாத்திரத்தில் இடுவர். இதில் முதலாவதாகக் கன்னிப் பெண் கொண்டு வந்த தேங்காயை உடைப்பர். இந்தப் படையலுக்கு அருகில் புளி இலை அல்லது அரளி இலை, அரளிப்பூ போன்றவற்றையும் வைத்திருப்பார்கள். சிலர் கும்பத்தில் மஞ்சள் தடவிய தேங்காயைக் கவிழ்த்து வைப்பதும் உண்டு. மதுரைப்பகுதியில் படப்பு (படையல்) இடுவது பற்றி ஆ.பாப்பா பின்வருமாறு விளக்குகிறார். '...விளக்கினைச் சுற்றி உமியை வைத்துக் கோட்டை போடுகின்றனர். இதனை உமிக் கோட்டை என்கின்றனர். விளக்கு, கும்பம், கொழுக்கட்டை, தேங்காய், பழம் போன்ற அனைத்துச் சாமான்களும் இதனுள் அடங்கிவிடும். எதுவும் வெளியே விடப்படாது. கோட்டைக்கு வாசல் எல்லாம் வைத்துப் போடுவர். ஏனெனில் ராசாவை மணம் செய்யும் தங்கை கோட்டைக்குள் வாழ்ந்தாள். எனவே உமிக்குக் கோட்டை போடுவதாகக் காரணம் கூறுகின்றனர் (தேவி, 04-03-91). கும்பத்தையே அம்மன் தெய்வமாக நினைத்து வழிபடுகின்றனர்.' சொல்லப்படும் கதைகளின் திரிபு(version)களில் தங்கை ஒருத்தி அரசன் ஒருவனை மணந்தாள் என்பதாகவும் உள்ளன. அந்த அடிப்படையில் இங்கு படையல் (படப்பு) கதையின் கூறுகளாக போன்மை (imitate) செய்யப்படுகிறது.

3

ஔவை நோன்பின் கட்டமைப்பில் இரண்டாம் பகுதியாக இடம்பெறுவது கதையாடல் நிகழ்வாகும். கொழுக்கட்டை அவித்து வழிபாடு செய்ய அனைத்தும் தயார் நிலையில் வைத்த பின்னர் கதை

சொல்லல் (Narration) நடைபெறுகிறது. நோன்பை நடத்தக் கூடிய முதிய பெண்மணியே கதை சொல்லியாக (Narrator) இருப்பார். இக்கதையினைப் பங்கேற்பாளர்கள் அனைவரும் கேட்பார்கள். கதை ஆரம்பமாகும் முன்பு புளிய இலை அல்லது அரளி இலை, அரளிப்பூ போன்றவைகளைப் பங்கேற்பாளர்கள் கையில் கதைசொல்லி கொடுப்பார். அதனை வாங்கிக் கையில் மூடி வைத்தவாறு கதை கேட்பார்கள். பங்கேற்பாளர்கள் கதையைக் கேட்டுக் கொண்டே 'சொல்லம்மா சொல்லு', 'சொல்லம்மா சொல்லு' என்று கூறியவாறு கதைசொல்லலை உயிரோட்டமாக வைத்திருப்பார்கள். சில இடங்களில் 'ஆமா செல்லம்மா', 'ஆமா செல்லம்மா' என்று சொல்வார்கள். கதையில் நோன்பு இருந்த பெண்ணைச் செல்லம்மா என்று அழைத்ததால் அப்படிக் கூறுவதாகத் தெரிவித்தனர். இந்நிகழ்வில் கூறப்படும் கதையினை இனிக் காணலாம்.

'ஒரு ஊரிலே ஏழு அண்ணன் - தம்பிமார்களுக்கு ஒரு தங்கை. அண்ணன்கள் விறகு வெட்டி, பாடுபட்டு (ஒரு நாளைக்கு) குறுனி(ணி) நெல் கொண்டு வருவார்கள். தங்கை அதை வாங்கிக் குத்தக் குத்த (அது) உமியாகப் போய்விடும். கால்படி குறுநொய்தான் மிஞ்சும், அதை(யே) காய்ச்சி எல்(லே)லாரும் குடிப்பார்கள்.

ஒருநாள் ஒரு கிழவி பிச்சை கேட்டு வருகிறாள். அவளிடம் தங்கை,

'அள்ளிப்போட நுள்ளிப்போட ஒண்ணுமில்லையே
குத்தலும் குளியலுமா கிடக்கு போட முடியாது' என்றாள். அதற்கு அந்தக்கிழவி,

'உரக் களத்திலே உமி கெடக்கு
உமியைப் புடைச்சுப்பாரு
அதிலே கெடைக்கதே
எனக்குப்போடு'

என்கிறாள். அவள் சொன்ன(து) மாதிரி (போல) செய்ததிலே கொஞ்சம் அரிசி கிடைக்கிறது. (அவள்) அதை அவளு(கிழவி)க்குப் போடுகிறாள். அப்போது அந்தக் கிழவி, 'அவ்வையை நினைச்சு நோன்பு இரு. நெல்லு உமியா(ப்) போகாது' என்கிறாள். உடனே தங்கை, 'என்னிடம் சாமான்கள் ஒன்றும் இல்லையே' என்று கூற கிழவி, 'வாணியனைக் கூப்பிட்டு எண்ணெய் வாங்கு, பிறகு பணமில்லை என்று திருப்பிக் கொடுத்து விடு. கிண்ணத்தில் மீதியருக்கும் எண்ணெயை எடுத்து விரதம் இரு.' அதன்படி அவள் மஞ்சள் வெயில் வருவதற்கு முன்னரே, மத்தியானமே சாப்பிட்டு அதற்குப் பிறகு குளித்து சாந்தமாக,

'அகங்கை கொண்டு மூணு சரங்கை
புறங்கை கொண்டு மூணு சரங்கை
அள்ளி மூணு சரங்கை
நுள்ளி மூணு சரங்கை
நெல்லை எடுத்து

ஏறு பொழுதிலே போட்டு
இறங்கு பொழுதிலே வாரி
எல்லாரும் உண்டு தின்னு
உறக்கமான பிறகு
குத்தித் திரிச்சி'

விரதமிருக்கிறாள்.

இரவில் விரதத்திற்கு தீபம் எடுப்பதற்காக வெளியில் வந்து புங்க மரத்திலே ஒரு காலும் புளிய மரத்திலே ஒரு காலும் வைத்துப் பார்க்கிறாள். அப்போது தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிகிறது. அதை நோக்கிப் போகிறாள். அது ஒரு சுடுகாடு. அங்கே ஒரு பிரேதம் எரிந்து கொண்டிருக்கிறது. அப்போது பிரேதத்திலிருந்து பிரித்துப் போட்ட பாடை, கவைக்கம்பு, சட்டி முதலியன அவளைத் தடுக்கிறது. அவள், 'நான் விரதம் எடுக்கப் போறேன். அதுக்குத் தீபம் வேணும்' என்றதும், 'எங்களையும் விரதத்திலே சேர்த்துக்கோ' என்று சொல்கின்றன (அதனால்தான் கொழுக் கட்டை அவிக்கும்போது பாடை மாதிரி எல்லாம் செய்து போடுகிறோம்.)

திரும்பி வரும்போது அவள் ஏறி நின்ற புங்க இலை, புளிய இலை கிளைகள் முறிந்து விழுந்து, 'எங்களையும் நினைத்து நோன்பு எடு' என்கின்றன. அவள் சம்மதிக்கிறாள். பிறகு வீட்டில் வந்து விரதம் எடுக்கிறாள். (விரதத்தின் பயனாக) அதனால் அவர்களுக்கு (நிறையச்) செல்வமெல்லாம் கிடைக்கிறது.

ஒருநாள் தங்கை விரதமெடுத்துக் கொண்டிருக்கும்போது, அண்ணன்(மார்)க வந்து கதவைத் தட்டுகிறார்கள். 'தங்கச்சி, தங்கச்சி ஆராங்கு (மீன்) கொண்டு வந்திருக்கோம். கதவைத் திற...' என்றார்கள். அதற்கு அவள், 'நான் கதவைத் திறக்க முடியாத நிலையிலே இருக்கேன். கொண்டு வந்ததெ மதிலெட்டிப் போட்டு விட்டுப்போ' என்கிறாள். அவர்களும் அவ்வாறு செய்கிறார்கள். மறுநாள் பார்த்தால் மீனெல்லாம் தங்கமாக மாறியிருந்தது. அப்படி அவர்களுக்குச் செல்வம் வந்தது. அதை வைத்து அண்ணன்மார்களுக்கும் கல்யாணம் நடக்கிறது; தங்கைக்கும் கல்யாணம் நடக்கிறது.

தங்கைக்காரி கல்யாணம் ஆகிப்போகும்பொழுது (தன்) மதினிமார்களிடம் நோ(ன்)ம்பிருக்கச் சொல்லிவிட்டுப் போகிறாள். அவர்கள் வேலைக்காரியிடம் கொடுத்து விரதம் இருந்து கொழுக்கட்டைக் கொண்டு வரச் சொல்லுகிறார்கள். பிறகு அதைத் தின்று பார்த்துவிட்டு,

'கற்கண்டும் கற்பூரமும் திண்ண வாயாலே
உப்பில்லாத கொழுக்கட்டையைத் தின்பதா'

என்று சொல்லி, வண்ணாத்தி மாற்றில் சுற்றி கல்லுக்கடியில் வைத்து விடுகிறார்கள். வண்ணாத்தி மாற்று எடுத்துப் போகிறாள். அவளுக்குச் செல்வமெல்லாம் கிடைக்கிறது. இவர்கள் ஏழையாகி விடுகிறார்கள். அண்ணன்மார்கள் மீண்டும் காட்டுக்கு விறகு வெட்டப் போகிறார்கள்.

தங்கை மாடியில் நின்று தலை சிக்கு எடுத்துக் கொண்டு இருக்கும் போது, அண்ணன்மார்களைக் கண்டு கூப்பிட்டு விவரம் அறிகிறாள். பிறகு, மதினிமார்களிடம் விளக்கமாக நோன்பு எடுக்கும் முறையைச் சொல்லிக் கொடுக்கிறாள். அப்படி விரதம் எடுத்ததினால் போன செல்வம் மீளுகிறது.' (ஆ. பாப்பா, 1991)

மேற்கூறிய கதையைச் சொல்லி முடித்தவுடன் கதைகேட்டுக் கொண் டிருந்தவர் தங்களின் கைகளில் உள்ள புளிய இலை அல்லது அரளி இலை, அரளிப்பூ போன்றவைகளை கதைசொல்லியிடம் திரும்பக் கொடுத்து விடுவார்கள். அதனை அவர் வாங்கிக் கொண்டு ஓடும் நீரிலோ அல்லது கிணற்றிலோ போட்டு விடுவார். இக்கதையை விரதநாள் தவிர மற்ற நாட்களில் சொல்லக்கூடாது என்ற விதிமுறையும் உள்ளது.

4

கதை சொல்லல் முடிந்தவுடன் வழிபாடு ஆரம்பமாகின்றது. சூடம் காண்பித்து வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். அதன் பின்னர் அங்கிருந்து கொழுக்கட்டைகளைத் தின்ன ஆரம்பிப்பார்கள். அப்போது பிள்ளையார், விளக்கு முதலிய கொழுக்கட்டை உருவங்களை முதலில் தின்று விடுவர். இல்லையெனில், அதனை உடைத்துக் கொழுக்கட்டைச் சட்டியில் எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வருவார்கள். வீட்டில் பெண்களும் சிறுமியரும் மட்டுமே உண்ணுவார்கள். கொண்டு வரும் கொழுக் கட்டைகளை விடிவதற்குள் உண்ண வேண்டும் என்ற விதிமுறையுள்ளது. வீட்டிற்கு வரும்போது கொழுக்கட்டை அவித்த நீரையும் வாங்கிக் கொண்டு வருவார்கள். இதனைப் 'பால்' என்று அழைப்பர்.

5

பெண்கள் குழுவாகச் சேர்ந்து வழிபடும் இந்நோன்பினைக் குறித்துச் சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இதில், செந்தீ. நடராசனின் 'அவ்வை நோன்பு ஒரு சமூக மானிடவியல் ஆராய்ச்சி' என்ற கட்டுரையானது விரிவான கள ஆய்வுடன் ஔவை நோன்பு எவ்வாறு சமண சமயத்துடன் தொடர்புடைய வழிபாடாக விளங்குகிறது என்று பேசுகின்றது. மேலும் இனக்குழு வாழ்க்கையில் - பெண்களின் கட்டுப்பாட்டில் சமூகம் இருந்த போது உள்ள பண்பினைக் குறிக்கும் கூறுகள், வளமைச் சடங்கின் பண்புகள் போன்றன எவையெவை உள்ளன என்றும் இக்கட்டுரை குறிப்பிட்டுச் செல்கிறது. ஆ.பாப்பா, ஔவை நோன்பின்போது கூறப்படும் வெவ்வேறு கதைகளின் திரிபு(version)களைத் தொகுத்து அதன் அமைப்பு குறித்து ஆய்வு செய்துள்ளார். ஔவை நோன்பு குறித்து வந்துள்ள பிற கட்டுரைகள் தகவல்களாக மட்டுமேயுள்ளன. ஔவை நோன்பு முழுக்க முழுக்கப் பெண்கள் மட்டுமே சேர்ந்து வழிபடும் சடங்காக இருப்பதினால், இதில் தங்களின் தனித்தன்மைகளை வலியுறுத்தும் பண்புகள் ஏதேனும் உள்ளதா? ஆணாதிக்கப் பண்புகளை எதிர்க்கும் கூறுகள் ஏதேனும்

காணப்படுகின்றனவா? எனக் காண முற்படலாம். அதற்கு முன்னதாக, Ellen Koscoff என்ற பெண்ணியல்வாதி கூறியுள்ள கருத்துக்களை கவனத்திற்குட்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

Ellen Koscoff- இனக்குழு இசையில் (Ethno Musicology) -இல். பால்வேறுபாடுகள் குறித்து ஆய்வு செய்துள்ளார். இவர், இசைத்தலின் இயங்கு தளங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகின்றார். அவையாவன:

1. எந்த நிலையில் வாழ்ந்து வருகின்றோமோ அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளும் இசை வடிவங்களாய் உள்ளது.

2. இருக்கும் சமூக அமைப்பினைப் பாதுகாக்கும் பண்பினை அந்த இசைத்தல்கள் கொண்டுள்ளமை.

3. சமூக - பண்பாட்டு வளர்ச்சி ஒழுங்கினை/விரிவாக்க ஒழுங்கினை (establishment Order) எதிர்ப்பதாக உள்ளது.

4. இருக்கும் அமைப்பினை எதிர்க்கும் பண்புகளும் இசைத்தலில் உள்ளன.

மேற்கூறிய நான்கு வகைகளையும் கூறிவிட்டு, பெண்களின் இசைத்தலிலும் கூட முதலாவதாகக் கூறிய (எந்த நிலையில் வாழ்ந்து வருகின்றோமோ அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளும் இசை வடிவமாய் அமைவது) பண்பே அதிகமாகக் காணப்படுகிறது எனக் கூறியுள்ளார். இசைத்தலுக்குக் கூறப்பட்ட மேற்கூறிய கருத்துக்களை இயங்குதளம் என்ற அளவில் நாம் ஔவை நோன்பிற்கும் பொருத்திப் பார்க்கலாம். அதற்கு முன்பாக, பண்பாட்டில் உள்ள நிகழ்வுகளைப் பண்பாட்டின் நிறுவனங் களோடு தொடர்புபடுத்தி அதன் செயற்பாட்டினை அறிந்திட மாலினோவ்ஸ்கி என்ற மானிடவியலாளர் கூறிய கருத்தினை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

'ஒரு பண்பாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவர்களின் தேவையை ஈட்டும்போது அவர்கள் மேற்கொள்ளும் செயல்களும் நடத்தைமுறை களும் ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்பு ரீதியாக ஒன்றுபடும். இவ்வாறு தொடர்புடைய கூறுகள் ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்புகளாக அமை வதே அப்பண்பாட்டின் நிறுவனங்களாகின்றன. மாலினோவ்ஸ்கியின் திட்டத்தில் நிறுவனங்கள் என்பவை 'செயலளவில் தனித்து நிற்கும் கூறுகள்' (Functional Isolated) ஆகும். இவரது முறையில் திருமணம், சமயச் சடங்கு, சமுதாயக் குழுக்கள், குடும்பம், சமுதாயச் செயல்கள், மரபு வழியில் கற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை முறை, மொழி போன்ற செயலளவில் தனித்து நிற்கும் எந்த ஒரு கூறையும் நிறுவனம் எனக் குறிப்பிடுகிறார். பண்பாட்டிலுள்ள நிறுவனங்கள் அனைத்தும் பண்பாடு என்னும் முறைமைக்குள் எவ்வாறு இணக்கம் பெற்றுச் செயல்படுகின்றன என்று அறிவதற்கு அனைத்து நிறுவனங்களையும் முழுமையாக அறிய வேண்டுமென்பார் மாலினோவ்ஸ்கி. அதன் பின்னரே ஒரு நிறுவனத்தைப் பிற தொடர்புடைய நிறுவனங்களோடு பொருத்திப் பார்க்க வேண்டும்'

(பக்தவத்சல பாரதி, 1991). இதனடிப்படையில் பண்பாட்டில் உள்ள நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள அதன் செயல்பாட்டின் தன்மைகளை அறிய அதன் திட்டம் (charter), ஆட்கள் (personel), நெறிமுறைகள் (norms), கருவிகள் (apparatus), பணி (activity), செயல் (function) ஆகிய ஆறு பரிமாணங்களின் வழியே ஆராய்ந்திட வேண்டும் என்று மாலினோவ்ஸ்கி கூறியதை பக்தவத்சல பாரதி தன்னுடைய 'பண்பாட்டு மானிடவியல்' நூலில் கூறியுள்ளார். இதனை நாம் ஔவை நோன்பிற்குப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

பெண்கள் மட்டுமே பங்கு பெறுகின்ற ஔவை நோன்பின் வழிபாட்டு வடிவம் (form) குறிப்பிடத்தக்க ஒன்றாகும். எப்படியெனில், சொல்லப் படப்போகும் கதையானது வழிபாட்டில் போன்மை(imitate)யாக்கப் படுகிறது. அது மட்டுமின்றி கதையில் வரும் கதாபாத்திரங்கள், பொருட்கள் போன்றன கொழுக்கட்டையின் மூலம் வழிபாட்டுப் பொருளாகின்றன. நுட்பமாகச் சொல்வதானால் இங்கு கதையே சடங்காகவும் சடங்கே கதையாகவும் முன்வைக்கப்படுகிறது. மேலும் இது சொல்லின்றியும் (non-verbal) (உ.ம். வழிபாட்டுப் பொருட்கள்), சொல்லாகவும் (verbal) (உ.ம். கதை சொல்லல்) வெளிப்படுவதாக அமைந்துள்ளது. அதே போன்று கதை சொல்லல் நடைபெறுகின்றபோது பங்கேற்பாளர்கள் கையில் கொடுக்கப்படுகின்ற அரளி இலை, அரளிப்பூ போன்றன இங்கு முன்வைக்கப்படுகின்ற கதையாடலின் முக்கியத் துவத்தை வெளிப்படுத்துகின்றன. இதனைப் பின்வரும் மரபுத்தொடர் ஒன்றின் மூலமும் சிறுவர்களிடம் உள்ள நம்பிக்கைகளின் வழியேயும் இணைத்துப் பார்க்கலாம். 'பச்சமரத்துக்குக் கீழ நின்னுக்கிட்டு பொய் சொல்லாத...' என்ற மரபுத்தொடர் கிராம வாழ்வு சார்ந்த மக்களிடையே பெரு வழக்காக உள்ளது. பச்ச மரத்துக்குக் கீழே நின்று கொண்டு அபத்தமாகப் பொய் சொல்லக்கூடாது, உண்மையாக இருக்க வேண்டும் என்ற அறத்தினை வலியுறுத்துவதே இம்மரபுத் தொடரின் நோக்கமாகும். இதனை ஔவை நோன்பில் உள்ள கதை சொல்லல் நிகழ்வுடன் இணைத்துக் காணலாம். கதை சொல்லலின்போது கதை கேட்பவர்களுக்கு அளிக்கப்படும் அரளி இலை அல்லது புளிய இலை, அரளிப்பூ போன்ற பொருட்கள் கதை சொல்லியும் - கதை கேட்பவர்களும் கதை மொழி தலின்படி உண்மையாக நடந்திட வேண்டும் என்பதைப் பண்பாட்டு ரீதியாக வெளிப்படுத்தப்படுவதை மிகவும் நுட்பமாக கவனிக்கின்றபோது விளங்குகின்றது. மேற்கூறியதுடன் தொடர்புடைய, சிறுவர்களிடம் உள்ள நம்பிக்கை ஒன்றினைக் காணலாம். வானத்தில் உள்ள விண்மீன் (star) கீழே விழுவதினைப் பார்க்க நேர்ந்தால் உடனே பச்சை நிறத்தைப் பார்த்துவிட வேண்டும்; இல்லையெனில் நினைவில் உள்ளவை அழிந்து போகும் என்ற நம்பிக்கை உள்ளது. பச்சை நிறம் இங்கு அழியாமையுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இந்த இரண்டு பண்பாட்டுக் கூறுகளும்

உண்மையுடனும் அழியாமையுடனும் தொடர்புபடுத்தப்படுவதினைக் கணக்கில் கொண்டு பார்த்தால், ஔவை நோன்பில் கதை சொல்லலின்போது கொடுக்கப்படும் அரளி இலை அல்லது புளிய இலை, அரளிப்பூ போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர முடியும். அதாவது கதை சொல்லியால் சொல்லப்படும் கதையின் மொழிதல்கள் கவனப்படுத்தப்படுகின்றன. இதுவே இந்த வடிவத்தின் குறிப்பிடத் தகுந்த அமிசமாகவும் உள்ளது.

பங்கு கொள்ளும் நபர்கள் (personal) நெறிமுறைகள் (norms) என்றளவில் ஔவை நோன்பை அணுகும்போது ஆண்களைத் தங்கள் இயங்கு வெளியில் இருந்து முற்றாக நிராகரிக்கும் பண்பினைக் குறிப்பிடலாம். அதாவது ஆண்கள் இந்நோன்பில் கலந்து கொள்ள அனுமதியில்லை. அதுமட்டுமில்லாமல், இந்நோன்பில் வைத்து வழிபாடு செய்த பொருட் களை ஆண்கள் உண்ணக் கூடாது; பார்க்கக்கூடாது. சொல்லப்படும் கதையையும்கூட ஆண்களிடம் கூறக்கூடாது. மேலும் திருட்டுத்தனமாக இவ்வழிபாட்டினை ஆண்கள் பார்த்தால் அவர்கள் குருடாகிப் போவார்கள் எனவும் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாகப் புனைவுகளும் உள்ளன. ஒருமுறை தங்கை நோன்பில் இருக்கும்போது அண்ணன் எட்டிப் பார்த்து விட்டான். இதனால் அவனுடைய இரண்டு கண்களும் சாமி கும்பிடுவதற்கு போட்டு வைத்திருந்த படப்பில் (படையல்) வந்து ஒட்டிக் கொண்டது. உடனே அண்ணன்காரன் கூப்பாடு போட்டு அழுதான். அப்போது தங்கச்சி ஔவையிடம் வேண்டினாள். அதன்பின்னர் அவனுக்குப் பார்வை கிடைத்து விட்டது. எனவே நோன்பு இருக்கும் அறையில் கதவைப்பூட்டி வைத்துக் கொண்டே நோன்பிருப்பர். நோன்பில் ஈடுபடுவதற்கு முன்பு அந்த அறையைச் சுத்தமாகக் கழுவி விடுவது போன்றே, நோன்பு முடிந்த பின்னும் அறையைக் கழுவி விடுவார்கள். ஆண்களின் காலில் வழிபாட்டுப் பொருட்கள் மிதிபடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்கின்றனர். ஔவை நோன்பில் கலந்து கொள்ள வந்திருக்கும் பெண்கள் அனைவரும் வழிபாட்டு அறையில் தங்களுக்குள் அதிகம் பேசிக்கொள்ள மாட்டார்கள். அப்படியே பேசினாலும் மெதுவாகவோ சைகை மொழியுடனோ மட்டுமே பேசிக்கொள்வர். மேற்கூறிய விதிமுறைகளின் மூலம் இவ்வழிபாட்டினைப் பெண்கள் தங்களுக்கான வெளியாக மாற்றிக் கொள்கின்றனர்.

ஆண்கள் தங்களுக்கு மறுக்கப்பட்ட வெளியை (space) குறித்து எதிரான கருத்துக்களைக் கட்டமைத்துக் கொண்டுள்ளனர். அதாவது, 'இந்நோன்பில் ஈடுபடும் பெண்கள் வழிபாட்டின்போது நிர்வாணமாக இருந்து பூசையில் பங்கு பெறுவர்' எனக் கூறுகின்றனர். இதனால், ஒரு பெண்ணை அவரது கணவர் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை என்பதனையும் தகவலாளி கூறினார். இங்கு ஆணின் மனம் தனக்கு மறுக்கப்பட்ட வெளி குறித்து 'அசிங்கமானதாகவோ' இல்லாத ஒன்றினைக் கட்டமைத்து விடுவதாகவோ

உள்ளதை அவதானிக்கலாம். பெண்கள் இந்நோன்பில் நிர்வாணமாக இருப்பதில்லை. ஆனால் நோன்பை நடாத்தக் கூடியவர் ஈர உடையுடன் இருப்பார் எனக் கூறுகின்றனர்.

ஔவை நோன்பு பெண்களுக்கே உரிய தனி வெளியாக (private space) விளங்கினாலும் அதன் பங்கேற்பாளர்கள் பெண்களாக இருந்தாலும் அதன் வடிவம் (form) குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்தாலும் அதன் நோக்கமென்ன? திட்ட(charter)மென்ன? என்று கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

நோன்பில் ஈடுபடும் குழந்தை பெற்ற பெண்கள் வீட்டிலுள்ள துன்பங்கள், கஷ்டங்கள் நீங்கிடவும் செல்வம் பெருகிடவும் பங்கெடுக்கின்றனர். திருமணமான பெண்கள் குழந்தை வேண்டியும் மணமாகாத பெண்கள் திருமணம் வேண்டியும் இதில் ஈடுபடுகின்றனர். இந்த நோக்கங்களைக் கொழுக்கட்டைகள் அவித்து எடுக்கும்போது அவை சேர்ந்திருக்கும் தன்மையின் அடிப்படையிலும் சொல்லப்படும் விளக்கங்களின் வழியேயும் அறியலாம். கொழுக்கட்டை அவித்து எடுக்கும்போது உரல் - உலக்கை (கொழுக்கட்டையில் செய்த உருவங்கள்) இரண்டும் சேர்ந்திருந்தால் வீட்டில் நல்லது நடக்கும். அதாவது திருமணம், குழந்தைப் பிறப்பு போன்றன நடக்கும் என்ற நம்பிக்கையுள்ளது. அதனால் கொழுக்கட்டைகளில் உருவங்கள் செய்யும்போது சிலர் விளக்கு, பானை, சிறுசிறு உருண்டைகள் போன்றன செய்வர். இதனை அவித்து எடுக்கும்போது விளக்கில் அல்லது பானையில் எத்தனை உருண்டைகள் உள்ளனவோ அத்தனைக் குழந்தைகள் பிறக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது. அதே போன்று இவ்வழிபாட்டில் 'தாலி'க்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை ஆ. பாப்பாவின் ஆய்வேட்டினில் காணலாம். '...கும்பத்திற்குச் சூடன், சாம்பிராணி போன்றவை காண்பிக்கப்படுகின்றது. பின் அந்தக் கும்பத்து நீரில் சுமங்கலிகள் விளக்கைத் தூக்கிப் பிடித்துத் தங்களுடைய தாலியை அந்த விளக்கு ஒளியில் நீரினுள் பார்க்கின்றனர். பின்பு அனைவரும் விழுந்து கும்பிட்டு வணங்கி எழுகின்றனர். சில இடங்களில் விளக்கை நீரில் பிடித்து தாலியைக் காட்டி, 'அவ்வையாரைக் கண்டியா' என்று ஒருவர் கேட்க, மற்றவர்கள் 'கண்டேன், கண்டேன்' என்று கூறுகின்றனர்.' மேலும் வழிபாடு செய்ய வைக்கப்பட்டிருந்த கும்பம் அல்லது செம்பில் உள்ள நீரைக் குழந்தைப்பேறு இல்லாத பெண் வழிபாடு முடிந்தவுடன் முகம் கழுவினாலோ அந்த நீரைக் குடித்தாலோ அவர் 'சூலி' ஆவார் என்ற நம்பிக்கையுள்ளதினை ஆ.பாப்பா குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய விடயங்களை நாம் தொகுத்துக் கொண்டு பார்த்தால் அவை குடும்பம் என்ற நிறுவனத்தைத் தூக்கி நிறுத்துவதைக் காணலாம். குடும்பம் என்பது குறித்து, பெண்ணியவாதிகளில் தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism) பேசக் கூடியவர்களில் ஃபையர் ஸ்டோன் என்பரின் கூற்று

கவனிக்கத்தக்கது. 'வர்க்க வேறுபாட்டிற்கும் முந்தியது பாலியல் வேறுபாடு; இந்தப் பாலியல் வேறுபாடுதான் ஆதிக்க வடிவங்களின் ஒரு சின்ன அலகாக விளங்கும் 'குடும்பம்' என்ற நிறுவனம் தோன்றுவதற்கும் காரணமாக அமைந்தது.' (க. பஞ்சு, 1995, 'பெண்மணம்' நூலிற்கான முன்னுரையிலிருந்து). குடும்பம் என்ற இந்நிறுவனமானது மனித சமுதாயத்தில் உள்ள தொன்மையான ஒன்றாக மானிடவியலாளர்களால் கருதப்படுகிறது. இது உளவியல், வாழ்வியல், உயிரியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுவதாகக் கூறுகின்றனர். அதாவது, 'சமுதாயத்தின் நெறிமுறைகள், அன்றாட வாழ்வில் பின்பற்றப் பட வேண்டிய பழக்க வழக்கங்கள், பொருளாதாரச் செயல்முறைகள், சமுதாய, சமய வாழ்வில் ஆற்ற வேண்டிய கடமைகள் போன்ற எண்ணற்ற வகைகளில் குடும்பம் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கிறது' (பக்தவத்சல பாரதி, 1990: 357). இதனைச் சமுதாயவயமாக்கம் (socialization), பண்பாட்டு வயமாக்கம் (enculturation) என்றழைப்பர். இதில் குடும்பம் மட்டுமின்றி பிற நிறுவனங்களும் குழுக்களும் தொழிற்படும். இவைகளின் மூலமே 'ஆண்மை', 'பெண்மை' சார்ந்த கருத்தாக்கங்கள் முன்மொழியப்படுகின்றன.

ஔவை நோன்பில் பெண்ணுக்கான வெளியானது தனி வெளியாக (private space) இருந்தாலும் அது குடும்பம் (Domestic space) சார்ந்த வெளியாக மட்டுமே உள்ளது. இங்கு 'பெண்மை' (Feminine) என்ற கருத்தாக்கமே சடங்கின் வழியாகவும் கதையாடல் (Narrative) வழியாகவும் கையளிக்கப்படுகிறது. Ellen Koscoff கூறியது போன்று 'எந்த நிலையில் வாழ்கின்றோமோ அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளும் ஒரு வடிவமாகவே...' இந்த நோன்பும் உள்ளதினைக் காணமுடிகிறது. அது மட்டுமின்றி, கதையாடல் மூலம் முதியவள் சொல்லும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கின்ற தங்கை செல்வச் சிறப்புடையவளாக வாழ்கின்றாள். மேலும் வசதியான ஆடவனை மணக்கின்றாள் எனவும் எடுத்துரைக்கின்றது. விதிமுறைகளைச் சரிவரக் கடைப்பிடிக்காத அண்ணிமார்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். அதன் பின்னர் ஒழுங்காக விதிமுறைகள் கடைப்பிடிக்கின்ற வேளையில் மீண்டும் வசதி படைத்தவர்களாகின்றனர். அதாவது உப்புக் போட்டு சாப்பிட்டுப் பழகியவர்களுக்கு அது இல்லாமல் சாப்பிட வேண்டும் என்பதே விதிமுறை. இதனை அண்ணிமார்கள்,

'கற்கண்டும் கற்பூரமும் திண்ண வாயாலே
உப்பில்லாத கொழுக்கட்டையைத் தின்பதா'

என்று கூறி வண்ணாத்தி ஒருவரிடம் கொடுத்து விடுகிறார்கள். அவர் வசதி படைத்தவராகிறார். இவர்கள் ஏழ்மை நிலையை அடைகின்றனர். சொல்லப்படும் விதிகள் ஏற்புடையதாக இல்லையென்றாலும் அது மீறப்படும்போது கஷ்டப்படத்தான் நேரிடும் என்று மறைமுகமாக கதையாடலானது பெண்களின் மேல் விதிகளைச் சுமத்துகிறது. அதனையே அறமாகவும் முன்வைக்கிறது.

கதையில் விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடித்து வாழ்வதினால் தங்கை மகிழ்ச்சியானவளாக, சுதந்திரமானவளாக வாழ்கின்றாள் என்பது குறியீடாக முன்வைக்கப்படுகிறது. திருமணம் முடிந்து கணவன் வீட்டில் சந்தோசமாக வாழ்வது கதையில், '...ஒரு நாள் மாடியில் நின்று தலைமுடி காயப்போட்டு/சிக்கு எடுத்துக் கொண்டு இருக்கும்போது...' என்று வருகிறது. கதையில் இக்கதாபாத்திரம் நிற்கும் நிலையானது மிகவும் அமைதியுடன், எந்தப் பிரச்சினையுமின்றி இருப்பதினைக் குறியீடாக அடையாளப்படுத்துகிறது. இந்தக் குறியீடு, பொருளாக மட்டுமின்றி, உடை, ஒப்பனை, நடத்தைமுறை, வாய்மொழி வழக்காறு இப்படிப் பல வழிகளில் வெளிப்படலாம். தமிழ்ப்பண்பாட்டில் பெண்களின் தலைமுடியானது சூழலைப் பொறுத்து வெவ்வேறு பொருள் கொள்ளப்படுவதை அவதானிக்கலாம். பெண்கள் சாமியாடுகின்றபோதும் பேய் பிடித்து ஆடுகின்றபோதும் தலைமுடி அவிழ்ந்த நிலையிலேயே காணப்படும். தலைமுடி இங்கு குறிப்பிடும் பொருள் என்னவெனில் இயல்பு வாழ்க்கையில் இருந்து விடுபட்டு வேறொரு சூழலில் மன அழுத்தத்தில் இருந்து விடுபடுதலைக் குறிப்பிடுவதாக உள்ளது. இதே போன்று தமிழ்த் திரைப்படங்களில் மிகவும் துடுக்கான, செயலூக்கமான பாத்திரமாகத் தோன்றும் இளம் பெண்கள் தலைமுடியை விரித்துப் போட்டுக் கொண்டு இருப்பதாகக் காண்பிக்கப்படும். அவர்கள் திருமணம் ஆனவுடன் ஒழுங்காகத் தலைவாரி அடக்க ஒடுக்கமாக, கட்டுப்பட்டவர்களாகக் காண்பிக்கப் படுவதினை இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆகவே கதையில் வரும் தலைமுடி விரித்துப் போடுதலை ஒப்பீட்டளவில் சுதந்திரமாக, சந்தோசமாக வாழ்வதாக நாம் பொருள் கொள்ளலாம் என நினைக்கின்றேன். நோன்புக் கதையில் தங்கையின் தோற்றத்தை (தலை முடியை முன்வைத்து) மகிழ்ச்சியானவளாக, சுதந்திரமானவளாக, பொருளாதாரப் பிரச்சினையற்று வாழ்வதாக முன்மொழியப்படுகிறது.

கதையின் மற்றோர் இடத்தில் 'இயல்பான நடத்தை'யில் இருந்து மாறுபட்ட ஓர் உடல்மொழி (Body Language) தங்கையானவள் 'தீ'யைத் தேடி மரத்தில் பார்க்கும் கதைக்கூறினை (Motif) குறிப்பிடலாம். பொது வெளியில் (public space) பெண்ணுக்கு மறுக்கப்பட்ட ஓர் உடல்மொழியே கதையில், '...நோன்பு இருக்க தீ தேடி புங்க மரத்தில் ஒரு காலும் புளிய மரத்தில் ஒரு காலும் வைத்துக் கொண்டு கிழக்குத் திசையைப் பார்த்தாள்...' என வருகின்றது. மேற்கூறப்பட்ட கதைக்கூறின் பொருளைக் காண கி.ராஜநாராயணன், பாரத தேவி ஆகியோர் தொகுத்த 'பெண்மணம்' என்ற நூலில், கி.ரா குறிப்பிட்ட தென்னமெரிக்கப் பழங்குடிக் கதையினை அறிவது அவசியமாகும். 'பெண் தனக்குள் நெருப்பை ஒளித்து வைத்திருக்கிறாள் என்று சந்தேகப்பட்ட ஒரு போர்வீரன் அந்தக் கன்னிப் பெண்ணைக் கண்காணிக்கிறான். அவளுக்குத் தெரியாமல் அவளிலிருந்து எப்படியோ நெருப்பு வருகிறது; அதை இவனால் பார்க்க முடியவில்லை.

ஒருநாள் அவளை அவன் தனிமையில் மடக்கி, நெருப்பைக் காட்டு என்கிறான். இவனிடமிருந்து அவள் தப்பிச் செல்லும் முயற்சி பலிக்கவில்லை. உடம்பு பூராவையும் தேடியும் இவனால் அவளிடமிருந்து நெருப்பைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. வாளை உருவி அவளைக் கொல்லப் போகும்போது, உயிருக்குப் பயந்து 'சரி! நெருப்பைக் காட்டுகிறேன்' என்று ஒப்புக் கொண்டு, தனது இரு தொடைகளையும் அகட்டி தரையில் உட்கார்ந்து வயிற்றைப் பிடித்து உலுக்கியதும் அவளுடைய 'அறை' யிலிருந்து ஒளிரும் ஒரு நெருப்புத் துண்டம் விழுந்து பந்துபோல் உருண்டு ஓடியது.'

இக்கதை பெண்ணிடம் அதீத ஆற்றல் உள்ளதாகப் புனைவு வழியே கட்டமைக்கின்றது. இந்தப் பண்பே ஔவை நோன்பு கதையிலும் உள்ளது. அது நேரடியாகச் சொல்லப்படாமல் மற்றொன்றை (...புங்க மரத்திலே ஒரு காலும் புளிய மரத்திலே ஒரு காலும் வைத்துப் பார்க்கிறாள். அப்போது தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிகிறது. அதை நோக்கிப் போகிறாள். அது ஒரு சுடுகாடு. அங்கே ஒரு பிரேதம் எரிந்து கொண்டிருக்கிறது...') விவரித்துச் சொல்லுவதன் வாயிலாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. பெண் அதீத ஆற்றல் கொண்டவளாகப் பெண்களின் புனைவுரு வாக்கத்தில் இடம் பெற்றுள்ள இக்கதைக் கூறு (motif) குறிப்பிடத்தக்க அமிசமாகும்.

ஔவை நோன்பில் இதுவரையில் விவாதிக்கப்பட்ட விடயங்களை மிக நுட்பமாகப் பார்த்தோமானால், பெண்கள் மட்டுமே பங்கேற்கக் கூடிய இந்த வழிபாட்டு வடிவம் குறிப்பிடத்தக்க ஒன்று எனலாம். அது மட்டுமின்றிப் பெண் தன்னுடைய சடங்கு வெளியில் (Ritual space) இருந்து ஆண்களை முற்றாக நிராகரித்தலையும் கதையாடலில் வருகின்ற ஒரு சில கதைக்கூறு மறுக்கப்பட்ட உடல்மொழியினைக் கொண்டிருத்தலைக் குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். ஆனால், இங்கு இயங்கும் வெளி பெண்ணின் தனி வெளியாக இருந்தாலும் அது முழுக்க முழுக்க வீடு/குடும்பம் சார்ந்த வெளியாக மட்டுமே இருக்கின்றது என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது நோன்பின் அடிப்படையான நோக்கம் செல்வம் பெருகுவது என்பதாக இருந்தாலும் குழந்தைப்பேறு, திருமணம், நல்ல கணவன் போன்றன ஈடேறுவதற்கான நம்பிக்கையாகவும் இந்த வழிபாடு படர்கிறது. அத்துடன் முதியவர்களின் நெறிகள் அப்படியே பின்பற்ற வேண்டியதின் அவசியத்தையும் இக்கதைகள் மொழிகின்றன. மொத்தத்தில் ஔவை நோன்பின் மூலம் 'பெண்மை' உருவாக்கச் செயல்பாடே நடைபெறுகிறது. ஆக, பெண்களே பங்குபெறும் வழிபாடாக இருந்தாலும் அது அவர்களுக்கு எதிரான பண்பையே உருவாக்குகின்றது என தீவிரவாதப் பெண்ணியப் பார்வையின் அடிப்படையில் உணரலாம்.

தகவலாளிகள்

1. சரோஜா (60), தூத்துக்குடி,
2. சாந்தி (31), பாளையங்கோட்டை.
3. பார்வதி (78), திருநெல்வேலி நகரம்.

துணைநூற்பட்டியல்

1. பக்தவத்சல பாரதி, 1990: 'பண்பாட்டு மானிடவியல்', சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

2. பாப்பா. ஆ, 1991: 'அவ்வை நோன்புக் கதையின் வேறுபட்ட வடிவங்களும் அமைப்பியல் ஆய்வும்' (அச்சிடப்படாத எம். ஃபில். பட்ட ஆய்வேடு), மதுரை: மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

3. நடராசன். செந்தீ, 1981: 'அவ்வை நோன்பு ஒரு சமூக மானிடவியல் ஆராய்ச்சி' (பக்.197 - 214), லூர்து. தே & சிவசுப்பிரமணியம். ஆ: 'நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்' (தொகுதி-1), பாளையங்கோட்டை, பாரிவேள் பதிப்பகம்.

4. ராஜநாராயணன். கி. & பாரத தேவி (தொ.), 1995: 'பெண்மணம்', சிவகங்கை, அன்னம் (பி) லிட்.

5. லூர்து. தே, 1997: 'நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள்', பாளையங்கோட்டை, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம்.

முஸ்லிம்கள் தம் தற்காப்புக்கு என்ன செய்வது? ஒரு மில்லியன் டாலர் கேள்வியும் குறிப்புகளும்

ஷாஜஹான்

குஜராத் இனப்படுகொலை 2002க்குப் பிறகு எல்லாமே மாறிப்போனது; பாப்ரி மஸ்ஜித் இடிப்பு 1992 ஏற்படுத்திய தாக்கத்தைக் காட்டிலும் இதன் பாதிப்பு பன்மடங்காக இருப்பதை என் அருகிலேயே உணர முடிந்தது. குஜராத் முஸ்லிம் இனப்படுகொலையை ஒட்டி அபுதாபியில் வேலை செய்யும் தோழி ஒருத்தி ஈமெயில் அனுப்பியிருந்தாள். 'இனிமேல் முஸ்லிம் குழந்தைகளுக்குக் கட்டாய உடற்பயிற்சி அளிக்க வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் இந்து வெறியர்கள் பத்து பேரைச் சமாளிக்குமளவுக்குப் பலம் பெற வேண்டும்' என்று நீண்டது அந்த மின்னஞ்சல். சாத்வீக விரும்பி என்று அறியப்பட்ட ரொம்ப சாதுவான அந்த முஸ்லிம் தோழியின் அதிரடியான மனமாற்றத்தைக் கண்டு நிஜமாகவே பிரமித்துப் போனேன். பாப்ரி மஸ்ஜித் இடிப்புக்குப் பிறகு தமிழகத்தில் முஸ்லிம்களிடையே அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பது ஆறுதலளித்தாலும் அவர்கள் அரசியல்மயப்படுவது பரவலாகவில்லை என்கிற கவலையோடு இருந்த சமயம் அது. இப்போது முஸ்லிம்களை அரசியல்படுத்தும் (politicise) நீண்டகாலத் தேவையுடன் அவர்களது தற்காப்புச் சுதந்திரம் குறித்தும் கதைப்பது மிகவும் அவசியமாகிவிட்டது.

குஜராத் முஸ்லிம் இனப்படுகொலையைத் தொடர்ந்து சாதாரண முஸ்லிம்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் கற்பனைக்கு எட்டாதது. இஸ்லாமியப் பண்பாட்டுப் பரவலாக்கம் போன்ற முதல்நிலை இஸ்லாமிய அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுகிறவர்கள் இலக்குகளாக்கப்பட்டுக் குறிவைக்கப்படுவது நீண்ட காலமாக அரசு மற்றும் இந்து மதவெறி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் தந்திரம். இந்தியச் சமூகத்தின் சாதீயக் கட்டுமானத்திற்குச் சவால்விடும் இஸ்லாத்தின் தன்மையும் இஸ்லாத்தின் பிற புரட்சிகரக் கூறுகளும் பிரிட்டிஷாரிலிருந்து பிராமண ஆளும் வர்க்கம் வரையிலும் இஸ்லாம் குறித்த அச்சத்தை (Islamophobia)

ஏற்படுத்தி வந்திருக்கிறது. எனவே இஸ்லாமிய அறிவு ஜீவிகளின் 'கதையை முடிப்பது' என்பது ஜியோனிச (யூத பயங்கரவாத) செயல்திட்டம் மட்டுமல்ல; அது ஓர் இந்து செயல்திட்டமும் கூட. ஆனால் இன்றைக்கு அதற்கு ஒருபடி மேலாக சிறுபான்மையினரது இனப்படுகொலை என்ற பாசிச செயல்திட்டம் நம் கண்முன் அரங்கேறியிருக்கிறது.

முஸ்லிமாக இருப்பதே ஆபத்தானது என்ற பாதுகாப்பின்மை உணர்வினை உருவாக்கியுள்ள குஜராத் படுகொலைகளின் பின்னணியில் தமிழகச் சூழலைக் கவனிக்க வேண்டும். எனது 'மிதவாத' முஸ்லிம் நண்பர்கள் 'பயங்கரவாதிகள்' என்று அரசால் சித்தரிக்கப்படும் முஸ்லிம்களை எப்படி மெச்சுகிறார்கள் என்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. 'நான் மார்க்சியவாதி' என்பதுபோல இப்போது 'நான் இஸ்லாமியவாதி' என்று சொல்லுகிற ஃபாஷன் உருவாகி வருகிறது. ஆனால் இவர்கள் குர்ஆன் மையவாதத்தை வலியுறுத்துவதில்லை. முஸ்லிம்கள் அதிகாரம் பெறுவதன் மூலமே இஸ்லாம் வாழும் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட தோழர்கள் இவர்கள். விமானம் ஓட்டித்தான் இஸ்லாமிய எதிரியான அமெரிக்காவுக்குப் பாடம் புகட்ட முடியுமென்றால் அவர்கள் விமானம் ஓட்டக் கற்றுக் கொள்வார்கள். செயற்கைக்கோள் தொழில்நுட்பம் தெரிந்துதான் இஸ்லாமிய விரோதிகளை எதிர்கொள்ள முடியுமென்றால் அதையும் செய்வார்கள். ஒரு சினிமா எடுத்துத்தான் இஸ்லாமிய விரோதப் பிரச்சாரத்தை முறியடிக்க முடியுமென்றால் அதையும் செய்வார்கள். வெப்சைட் தொடங்கிதான் இந்துத்துவாவின் விஷமப் பிரச்சாரத்தை முறியடிக்க முடியுமென்றால் அதையும் செய்வார்கள். இவ்வாறான முன்னேறிய சிந்தனைப் போக்கு உஸாமா பின் லாதன் வழி வந்தது என்று கூடச் சொல்லலாம். ஆனால் அதற்கு இணையாக அரசுகளின் கண்காணிப்பும் ஒடுக்குமுறையும் பன்மடங்கு பெருகிவிட்டது; இஸ்லாமிய விரோதிகளின் வன்முறையும் அதன் உச்சத்தில் இருக்கிறது.

குஜராத்திற்குப் பிந்தைய இந்தச் சூழலில் முஸ்லிம்கள் முன்புபோல் அல்லாமல் உருது பேசும் முஸ்லிம்கள், தமிழ் பேசும் முஸ்லிம்கள், போரா முஸ்லிம்கள், ஷியா முஸ்லிம்கள் என்ற பாகுபாடுகளையெல்லாம் கடந்து கைகோர்க்க வேண்டிய அரசியல் தேவை உருவாகியிருக்கிறது. எமது பெண்கள் கல்வி பெற வேண்டும்; அயல்நாட்டிற்குக் கூலி வேலைக்குப் போகும் மோகம் எமது பையன்களின் மனதிலிருந்து அகல வேண்டும். இளைய தலைமுறை முஸ்லிம்கள் தமிழகத்திலிருந்து செய்ய வேண்டிய பணி ஏராளமாய்க் காத்துக் கிடக்கிறது. இந்தியாவில் இஸ்லாமியப் புரட்சிக்கான விதை தமிழகத்திலிருந்து புறப்படுவதற்கான எல்லா சாத்தியங்களும் உண்டு. தமிழகத்தின் இஸ்லாமியப் பாரம்பரியம் குறித்த கதைகள் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும். ஜெயமோகன் போன்ற ஆர்.எஸ்.எஸ்காரர்கள் நமக்குப் பாடம் எடுக்க வேண்டிய அவசியம்

கிடையாது. முஸ்லிம் நண்பர்கள் நடத்துகிற பூங்காற்று 2002 ஆகஸ்ட் மாத இதழில் இஸ்லாமிய இலக்கியம் குறித்து ஜெயமோகனை கட்டுரை எழுத அனுமதித்திருக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! இப்படியொரு கட்டுரை எழுத குறைந்தபட்சம் தோப்பில் முகமது மீரானையாவது கேட்டிருக்கலாம்.

பண்பாட்டுத் தளத்தில் முஸ்லிம்கள் தங்கள் கதைகளைச் சொல்வது, தங்கள் கலாச்சாரத்தைப் பிறருக்கு விளங்க வைப்பது போன்றவை முன்னெப்போதை விடவும் இப்போது அவசியமாகியிருக்கிறது. தமிழ் சேட்டிலைட் சேனல்கள் மூலம் மவுல்வி. பி. ஜைனுல் ஆபிதீன், டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முகமது போன்றவர்கள் செய்கின்ற இஸ்லாமியப் பிரசங்கங்கள் முஸ்லிம்கள் குறித்த தவறான பிரச்சாரங்களைத் தகர்ப்பதில் ஓரளவு உதவி செய்கின்றன. அறிவியக்கத் தளத்தில் அ. மார்க்ஸ், வளர்மதி இருவரும் தொடர்ந்து பேசி வருகிற கருத்துகள் இஸ்லாத்திற்குப் பகிரங்க ஆதரவை அறிவிக்கின்றன.

தமிழ்ச்சூழலில் நிகழ்த்தப்பட வேண்டிய கருத்தியல் யுத்தத்தில் தினமலர் உள்பட முன்னணி நாளிதழ்கள் முதல் காலச்சுவடு போன்ற இடைநிலை இதழ்கள் வரை குறிவைக்கப்பட வேண்டும். 2002 மார்ச்-ஏப்ரல் காலச்சுவடு இதழில் பதிவான இஸ்லாமிய எதிர்ப்புக் கருத்துகளுக்கு முஸ்லிம் தோழர்கள் கடுமையான எதிர்வினை யாற்றினார்கள். இந்த எதிர்வினைகள் காலச்சுவடு 2002 ஜூலை-ஆகஸ்ட் இதழில் இடம்பெற்றன. 2002 செப்டம்பர் 30ஆம் தேதியிட்ட குமுதம் இதழில் தமிழகக் கோவில்கள் பற்றி எழுதிய ஜோதிடர் ஏ.எம்.ராஜ கோபாலாச்சாரியார் முஸ்லிம் படையெடுப்பாளர்கள் மாபெரும் கலைச் சின்னங்களான கோயில்களை அழித்துச் சிதைத்து விட்டதாக சர்வ சாதாரணமாக எழுதிச் செல்கிறார். இதற்கு எந்த எதிர்வினையும் பதிவாக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் சினிமாவில் முஸ்லிம்கள் பற்றிய சித்தரிப்புகளை விமர்சித்து சினிமா விமர்சகர் வெங்கடேஷ் சக்ரவர்த்தி ஒற்றுமை 2002 செப்டம்பர் 1-15 இதழில் எழுதிய கட்டுரை மிகவும் முக்கியமானது.

ஜனநாயக நிறுவனங்களைப் பயன்படுத்துவதிலும் முஸ்லிம்கள் பின்தங்கியே இருக்கிறார்கள். இதற்குக் காரணம் கல்வியின்மை என்பது மட்டுமல்ல, முஸ்லிம்களை வழி நடத்தும் இறைநம்பிக்கை கூட இந்தப் போலித்தனமான நிறுவனங்களிலிருந்து அவர்களை விலக்கி வைத்திருக்கிறது. ஆனால் இந்த நீதித்துறை, காவல்துறை, உளவு அமைப்பு ஆகியவற்றின் பிடியிலிருந்து நழுவி தலைமறைவ வாழ்வுக்குப் போகும் நெருக்கடியும் இப்போது இல்லை. ஆனால் இந்த அமைப்புகளுக்கு முகம் கொடுக்கும் திராணியைப் பெறுவது இன்று நமக்கு அவசியமாகியுள்ளது. அதே நேரத்தில் 'சுதந்திர' இந்தியாவில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதி, வேறு வழிகளையும் நாம் கைக்கொண்டால்தான்

நம் வாழ்வுரிமையை நிலைநாட்ட முடியும் என்ற இக்கட்டான நிலைக்கு நம்மைத் தள்ளியுள்ளது.

இந்தியாவில் இந்துத்துவச் சக்திகள் நடத்திய முஸ்லிம் இனப் படுகொலையின் நெடிய வரலாற்றைப் பார்க்கும்போது தற்காப்புக்கான காப்பு வட்டம் ஒன்றை அமைப்பது குறித்து முஸ்லிம்கள் யோசித்தே ஆகவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு முஸ்லிம் தெருவும் போர்க்களமாகக் கட்டமைக்கப்படும் பாசிசச் சூழலில் இது மிகவும் முக்கியமான கேள்வி யாகிறது. ஆதிக்க நோக்கிலான இந்துத்துவ அணிதிரட்டலும் இந்துத்துவ சமூகத்தின் ராணுவமயமாக்கலும் பாசிசத்திற்கான அகக்கட்டுமானத்தை, மற்றதின் மீதான வெறுப்பை நாளுக்கு நாள் வலுவாக்கி வருகின்றன. எனவே ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்து முன்னணிச் சக்திகளுக்கு இணையான, அதற்கு ஈடுகொடுக்க வேண்டிய சக்தியைத் திரட்டுவது முஸ்லிம்கள் மீதுள்ள வரலாற்றுக் கடமையாகி விட்டது. முஸ்லிம் சமூகத்தின் தற்காப்பு வட்டத்தின் உருவாக்கத்திற்கான செயல்திட்டம் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டிய தருணம் நம்மை நெருங்கி விட்டது. தலித்துகள் தமது தற்காப்புக்காக ஆயுதம் வழங்க அரசைக் கோருவது இங்கு சிந்திக்கத்தக்கது. அது ஜனநாயகச் சொல்லாடலிலிருந்து பிறக்கும் கோரிக்கை. ஆனால் இஸ்லாம் முன்வைக்கும் ஜனநாயகம் தனக்கான தனித்துவமிக்கது. (அதைப்பற்றி விவரிக்க இங்கு இடமில்லை.) முஸ்லிம்களது திட்டமிடாத எதிர்த்தாக்குதல் முயற்சி (unorganised) தொடர்பான எனது மனப்பதிவுகளை இங்கு நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

2002 செப்டம்பர் 29ஆம் தேதி சினிமா கல்விக்கான அறைக்கூட்டம் ஒன்றில் பங்கேற்றிருந்தேன். ஆனால் அந்தக் கூட்டத்தில் எந்தவிதத்திலும் ஒன்றிப்போக இயலவில்லை. அன்று அதிகாலையில்தான் பெங்களூரில் முஸ்லிம் போராளிகளான இமாம் அலி, மாங்கா பஷீர், முகமது இப்ராஹிம், யாஸ்மின், சீனியப்பா என்ற சைஃபுல்லாஹ் ஆகியோர் பாசிசத்திற்கு ஏவல் புரியும் போலீஸ் சுட்ட குண்டுகளால் சல்லடைகளாகத் துளைக்கப்பட்டு வீர மரணத்தைத் தழுவியிருந்தார்கள். அக்டோபர் முதல் தேதி செவ்வாய்க்கிழமையன்று ஷஹீதாக்கப்பட்ட (இறைவழியில் மரணமடைந்த) அந்த ஐவரின் உடல்கள் அடக்கத்திற்காக மதுரை நெல்பேட்டையிலுள்ள சுங்கம் பள்ளிவாசலுக்குக் கொண்டுவரப்பட்டன. அப்போது 500க்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் கறுப்புச் சின்னம் அணிந்து கொல்லப்பட்டவர்களுக்கு 'இறைவழிப் போராளிகள்' என்ற அந்தஸ்தை வழங்கி இறுதி மரியாதை செய்தார்கள். யாஸ்மின் என்ற பெண்ணும் இந்தப் போலி மோதலில் கொல்லப்பட்டிருந்தும் ஒரு மனித உரிமை அமைப்புகூட அது குறித்துக் கேள்வி எழுப்பவில்லை. நமது சூழல் முழுவதும் பாசிசத்திற்கு ஆதரவான மௌனத்தால் நிரம்பி வழிகிறது. வழக்கறிஞர் ரஜினி மட்டும் சென்னையில் மனித உரிமை

மக்கள் கழகத்தின் தமிழகப் பிரிவு துவக்க விழாவில் அதைக் கண்டித்துப் பேசினார். முஸ்லிம் தற்காப்புத் தாக்குதலுக்கு எதிரான விமர்சனத்தையும் நான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மதுரையிலுள்ள 'பீப்பிள்ஸ் வாட்ச்' என்கிற அமைப்பும் இதுகுறித்த அய்யம் ஒன்றை தேசிய மனித உரிமை ஆணையத்தின்முன் எழுப்பியுள்ளது.

சென்னையில் போன வருடம் சந்தித்த முஸ்லிம் ஓவியர் ஒருவர், முஸ்லிம் உளவியலாளர் ஒருவர் இருவருமே எனக்குள் ஒளிந்திருக்கும் வகுப்புவாதத் தன்னிலை என் பேச்சில் வெளிப்படுவதாக அபிப்பிராயப் பட்டார்கள். அது குறித்த சுய விசாரணையின் தொடர்ச்சியாக நான் சிலவற்றை அவதானிக்க முடிந்தது. நான் நிச்சயமாக மதவாதி அல்ல; ஆனால் எந்த நேரத்திலும் எனது உயிருக்கு ஆபத்து நேரக்கூடிய (நான் முஸ்லிம் பெயர் வைத்திருக்கும் ஒரே காரணத்திற்காக) சூழலை உருவாக்கியுள்ள இந்துத்துவ அணிதிரட்டலை, இந்துத்துவ ராணுவ மயமாக்கலை எதிர்கொள்ள கருத்தியல் தளத்தில் முஸ்லிம் சமூகத்தின் தற்காப்பிற்கான ராணுவமயமாக்கலை வலியுறுத்துவது அவசியம் என்று நம்புகிறேன். எமது மக்களின் உயிர்கள் முக்கியம்; அவர்களுக்கு இந்த அரசோ போலீஸோ ராணுவமோ உதவ முடியாது என்பது மறுபடியும் மறுபடியும் நிரூபணமாகி வருகிறது. எனவே மீண்டும் நான் முஸ்லிம் சுய உறுதியாக்கத்தை நோக்கிய கருத்தியலை முன்மொழிகிறேன்.

தமிழ் முஸ்லிம் இளைஞர்களில் கணிசமான ஒரு பிரிவினர் இன்று இந்துத்துவத் தாக்குதலுக்கு முகம் கொடுக்கத் தயாராகி வருகிறார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தி. அடக்கவியலாத ஆத்திரத்தில் குண்டு வைத்து அப்பாவி மக்களைக் கொல்வதை விட எதிரிகளை இனங்கண்டு நீக்க முயற்சிக்கும் திட்டமிட்ட செயல்பாடு முஸ்லிம் தற்காப்பிற்குக் கைகொடுக்கும். 'முஸ்லிம் பெண்களின் கருக்களில் இந்து விந்துக்களைச் செலுத்த வேண்டும்' என்ற ஆணாதிக்கப் பாசிச பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழலில் முஸ்லிம் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தற்காப்பு நடவடிக்கைதான் பிரதான அரசியல் செயல் பாடாக அமைய முடியும். அத்வானியும் நரேந்திர மோடியும் கிரிமினல் குற்றவாளிகள், பெருந்திரள் கொலைகளுக்காக (mass killing) தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதைப் பகிரங்கமாகச் சொல்லத் துணிந்தவர்கள்தான் இப்போது முஸ்லிம்களின் வலுவான அரசியல் தலைமையாக உருவெடுக்க முடியும்.

ஆனால் அதே சமயம் இஸ்லாமிய ஆதரவு கருத்துப் பிரச்சாரமும் பெரிய அளவில் முன்னெடுக்கப்பட வேண்டும். 'கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் பணத்திற்காகவும் பிற சலுகைகளுக்காகவும் மதம் மாறி யவர்கள்' என்று எனது அலுவலக நூலகர் சொல்லும்போதோ தமிழ்த் தேசியவாதி ஒருவர் 'மதம் மாறியதால் தலித்துகளுக்கு என்ன கிடைத்தது?' என்று கேட்கும்போதோ ஒரு முஸ்லிம்/கிறிஸ்தவ தன்னிலை எவ்வளவு

குறுகலான வரையறைக்குள் ஒடுக்கப்படுகிறது. இந்தப் பாசிச ஆதரவு பொதுப்புத்தியை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம் என்பது மிகவும் சவாலான கேள்வி. ராணுவமயமாதலும் அரசியல்படுத்தலும் உடனடித் தேவையாகியுள்ள சூழலில் தமிழக முஸ்லிம் அரசியல் தலைமை அதற்கு ஈடுகொடுக்கும் சக்தி வாய்ந்ததாக உருப்பெற வேண்டும்; அல்லது வறிய முஸ்லிம்களது பரந்துபட்ட தலைமை ஒன்று தன்னால் உருவாகி அந்த வெற்றிடத்தை நிரப்பும் காலம்வரை எதையாவது செய்து கொண்டிருப்போம்.

இன அடையாளம், கலாச்சாரம், தேசியம் பற்றிய பிரச்சினைகள்: ஒரு தலித்திய வெளிப்பாடு

ஆர். ஆர். சிவலிங்கம்

தமிழில்: கால சுப்ரமணியம்

அறிமுகம்

சமகால உலகில், இனத்துவமும் இன அடையாளமும் முக்கியமான சமூக - அரசியல் பிரச்சினைகளாயிருக்கின்றன. மூலாதாரப் பிரக்ஞையைத் தூண்டிச் செயல்படுத்துவது இன அடையாளமே என்று சமூகவிய லாளர்கள் தீர்மானமாகச் சொல்கிறார்கள். தம் இனத்துக்கு விசுவாசமாக இருத்தலை எளிதில் துடைத்து அழித்துவிட முடியாத நிலை இருந்து வருகிறது. முந்திய ருஷ்யாவிலும் யுகோஸ்லேவியாவிலும் எழுந்த சமீபகாலத்திய இனத்துவக் கிளர்ச்சிகள் இதை நிரூபிக்கின்றன. பரந்துபட்ட தேசம் என்ற கருத்தின் கீழ் சிறு குழுக்களின் அடையாளங்கள் அமுக்கப் பட்டு வருகின்றன. ஐரோப்பிய வரலாற்றில் ஒரு தேசத்தினுள் பல தேசிய அடையாளங்கள் ஒருங்கிணைக்கப்படும் ஜரூரான காரியங்கள் நடை பெற்றதற்கு நாம் சாட்சியாயிருந்துள்ளோம். ஜெர்மனி மற்றும் இத்தாலிய வரலாற்றில் வேறுபட்ட தேசியங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு பரந்து பட்ட தேசம் கட்டமைக்கப்பட்டு, 'தேசம்' அல்லது 'தேசியநாடு' என்று அறியப்பட்ட ஓர் அரசியல் புத்துருவாக்கம் உருவானதற்கும் நாம் சாட்சியங்களாய் இருந்துள்ளோம். ஆனால் ஆசியாவைப் பொருத்தவரை இதனை அடைவதற்கான ஆரம்ப முயற்சி நிலையிலேயே இருப்பதைக் காண்கிறோம். ஏகாதிபத்திய வெற்றிகளால் உப - தேசிய அடையாளங்களை ஒதுக்கிவிட்டு, நவீனமான ஒரு தேசம் தன்னிச்சையாக உருவாக்கப்பட்டு முள்ளது. சுதந்திரத்தின் வைகறை வேளையில் அமுக்கப்பட்ட உப தேசியங்கள் கூர்மையும் தீர்மானமும் கொண்ட பண்புகளைச் சம்பாதித்துக் கொண்டன. அதிகாரப் பகிர்விலிருந்து அவை வெளியே தள்ளி வைக்கப் படும்போது, குறிப்பாக தென் ஆசிய நாடுகளின் அடையாளத்துக்கான கிளர்ச்சிகளில் இவற்றைத் தெளிவாக அடையாளம் காண முடிகிறது. தமக்குச் சொந்தமான அடையாளங்களுக்காக வெளிப்படுத்தப்படும் கதறல் களாகத்தான் பஞ்சாபியர், காஷ்மீரிகள், ஜார்கண்டியர்கள் ஆகிய உபதேசியங்களின் பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பாகிஸ்தானால் இந்தியரும் பலுச்சியரும், ஸ்ரீலங்காவில் தமிழரும், பர்மாவிலும் ஜப்பானிலும் கொரியர்களும் தத்தம் இனத்துவ அடை யாளங்களை வலியுறுத்துகின்றனர். யுகோஸ்லேவியாவின் போஸ்னியர்கள்,

செர்பியர்கள், முந்திய சோவியத் யூனியனின் கஸாக்கியர், அஸர்பை ஜானியர், ஆர்மீனியர், செஸானியர் போன்றோருக்கு எந்த விதத்திலும் குறைவுபடாமல் அழுத்தமாக இவர்கள் வலியுறுத்துகின்றனர். ஐக்கிய நாடுகளில் கூட எஸ்கிமோக்கள், செவ்விந்தியர்கள், கறுப்பர்கள் போன்றோர் தமது மூலாதாரப் பிரக்ஞையாக உள்ள இனத்துவக் குழுக்கள் என்ற நிலையை அழித்தும் கீழ்ப் படுத்தியும் வருவதற்கு எதிராகக் கைகளை உயர்த்தியுள்ளனர். ஐக்கிய நாடுகளில், கறுப்பின மக்கள், இந்தியாவைப் போலவே நீண்ட நெடுங் காலமாகவே கீழ்ப்படுத்தப்பட்ட வகுப்பினராக நடத்தப்பட்டுள்ளனர். 'கறுப்பே அழகு' என்ற கோஷத்தோடு அவர்கள், மால்கம் எக்ஸ் போன்ற மனங்கவரும் சிறந்த தலைவர்களைப் பெற்றுத் தமது நிலையை உயர்த்தப் போராடி வருகின்றனர். நாஸி ஜெர்மனி, யூதர்கள் மேல் அடக்குமுறையையும் இனப்படுகொலையையும் ஏவி விட்டதே ஒரு புதிய நாடாக இஸ்ரேல் தோன்றக் காரணமாயிற்று. சமூக - கலாச்சார இனக்குழுக்கள் தொடர்ந்து அடக்கப்பட்டால், அவர்கள் வெகுண்டெழுவார்கள். தனிநாடு கேட்டு வற்புறுத்தியும் தம் நாடுகளின் சுயநிர்ணய உரிமை என்ற ஜனநாயக உரிமையைக் கோரியும் கலகம் செய்வார்கள்.

ஒருங்கிணைந்த ஒருலகம் என்ற தற்காலக் கருத்துக்கிணங்க தலித் வகுப்புகளுக்கிடையிலான அடையாளம் பற்றிய கிளர்ச்சி, ஒரு கூர்மையான பகுப்பாய்வை இன்று வேண்டி நிற்கிறது. தலித்துகள் அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது அட்டவணைச் சாதியினர் என்று பலவாறாக அறியப்படுகிறவர்கள், வரலாற்று ரீதியாக ஒரு தொன்மையான நாகரீகத்தின் வழித் தோன்றல்கள். இந்தியா, திராவிட மக்களின் வாழ்விடமாக இருந்து வந்தது. ஆரியர்களால் தோற்கடிக்கப்பட்டு வெற்றி கொள்ளப்படும்வரை, திராவிடக் கலாச்சாரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா, லோத்தல் நாகரீகங்கள் இந்தியாவின் சுதேசிக் கலாச்சாரங்களாக இருந்தன. ஆரியர்களுக்கு முந்திய இந்திய வரலாறு தொன்மையின் கருமுகிலில் தொலைந்து போனது. எனவே, ஆரியர்களுக்கு முந்திய மக்களின் நாகரீகமும் கலாச்சாரமும் பற்றிய சான்றாதாரங்கள் பெரிதும் மறைந்துவிட்டன. திராவிடர்கள் என்போர் இந்தியாவின் சுதேசி மக்கள்; அவர்கள் வேத காலத்துக்கு முந்தியே வாழ்ந்தவர்கள். இதிகாசமான இராமாயணத்தில், ஆரிய கலாச்சாரத்துக்கும் அதற்கு எதிரானவர்களுக்கும் இடையில் அடிக்கடியும் தொடர்ந்தும் நடக்கும் சச்சரவுகளால், இதனை வெளிப்படையாகக் கண்டறிய முடிகிறது. இந்த எதிராளிகளே தற்போதைய திராவிட சமூகத்தினரின் முன்னோர்கள். ஆரியர்கள் வெற்றியாளர்களாக வெளிப்பட்டு, அதிகார மையங்களைக் கைப்பற்றி, அனாரிய மக்களை அரக்கர்களாகவும் ராட்சத சக்திகளாகவும் தீர்ப்பளித்து அந்தச் செய்தியை வெற்றிகரமாகவும் பரப்பினர். இது பழங்கால மக்களை அழித்தொழித்த மிருகத்தனமான செயலாகும். 18ஆம் நூற்றாண்டின்

பிராமணரல்லாதோரின் பக்தி இயக்கத்திலும் தமிழ்நாட்டின் சித்தர் பாடல்களிலும் பிராமணர்கள் அவர்களது சாதீயத்துக்காகவும் கலாச்சாரத்துக்காகவும் குத்திக் காட்டப்படுகின்றனர். இவற்றில் சாதீயக் கலாச்சாரம் முற்றுமாகத் தாக்குதலுக்குள்ளாகியது. என்றாலும், வெற்றி பெற்ற மக்களின் சமூகப் பொருளாதார நிலையாலும் சாதிக்குப் புறம்பானவர்களை இவர்கள் ஒடுக்கும் முறையினாலும் அவர்களது சமூக ஒதுக்கம் பிடிவாதமாகத் தொடர்ந்தது.

ஆனால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் விடியலோடும் கிறிஸ்தவத்தின் பரவலோடும் அட்டவணைச் சாதியினரின் இழப்புகளைச் சீர்படுத்தும் ஈடுபாடு அதிகரிக்கலாயிற்று. இந்த மக்களிடையே 30 ஆண்டுகள் வாழ்ந்த அப துயிஸ் என்ற பிரஞ்சு ஜெசூட் பாதிரியார், மிருகத்தனமான ஒடுக்குமுறைக்கு எதிரான கருணையுடன் பணிபுரிய ஆரம்பித்தார். இந்துப் படிமுறைப் பாரம்பரியத்தின் பகுதியாக இவர்கள் இருப்பதைவிட காலனித்துவத்தில் சிறப்பாக இருப்பார்கள் என்று உணர்ந்தார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் பெரும் அளவினர், இந்து மதத்தை ஒதுக்கிவிட்டு கிறிஸ்தவர்களாக மாறினர். இந்து மதத்திலிருந்து விலகுவது, இந்துக் கலாச்சாரத்தின் சமூக ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை தரும் என்று நினைக்கப்பட்டது. ஆனால் அது அவ்வாறு ஆகவில்லை. பிரிட்டிஷ் நிர்வாகம், தீண்டத்தகாத வகுப்பினர் என்று அழைக்கப்பட்டவர்களைப் பட்டியலுக்குட்படுத்தி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது அட்டவணைச் சாதியினர் என்ற வகையில் அவர்களைப் புனர் நிர்மாணம் செய்தது.

19ஆம் நூற்றாண்டிலிருந்து இந்திய மக்களுக்கிடையில் தோன்றிய அரசியல் இயக்கமானது, காலனிய அரசை வெளியேற்ற முயன்றது. அத்தோடு இணையாக இந்துப் படிமுறை அமைப்பின் அருவருப்பான பிடியில் இருந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினரை விடுதலை செய்யும் இயக்கமும் எழுந்தது. இந்த விடுதலைக்கான இயக்கத்தின் முன்னோடிகளில் சிலர் நீலகிரியின் பண்டித அயோத்திதாஸரும் திவான் பகதூர் ரெட்டைமலை சீனிவாசனும் சென்னை எம்.சி. ராஜாவும் ஆவர். தமிழ்நாட்டின் பறையர்களைப் பற்றிய அவர்களது முதல் மாநாடு1891இல் நீலகிரியில் பண்டித அயோத்திதாஸரால் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இனிமேல் திராவிடர்கள் அல்லது தமிழர் என்று அழைக்கப்படுவார்கள் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நீலகிரி மாநாட்டில் வாழ்த்துரைத்தார் ரெட்டை மலை சீனிவாசன். என்றாலும், பறையர் முதலானோர் என்றே குறிப்பிடப்பட வேண்டும் என்றும் அவ்விதமாகக் குறிப்பிடப்படுவதை பூசி மெழுக வேண்டிய அவசியம் இல்லை என்றும் மாறுபட்ட கருத்தையும் அவர் கொண்டிருந்தார். உண்மையில் அவர் 'பறையன்' என்ற ஒரு நாளிதழையும் துவக்கினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று குறிப்பிடப்படுவதிலிருந்து விலகி நின்று, தம்மை இவ்வாறு கம்பீரமாக அடையாளப்படுத்திக் கொள்ளும் பிரகடனத்தின்

பகிரங்க முயற்சியாக இது விளங்கியது. மேலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மேலாக விளங்கும் பின்தங்கிய வகுப்பினரையும் திராவிட மக்களுக்குள் அரவணைப்பதாக திராவிடர் என்ற சொல் இருந்தது. எனவே, ஆதி திராவிடர் என்ற, மிகவும் பொருத்தமான ஒரு பெயர் பண்டித அயோத்திதாஸரால் உருவாக்கப்பட்டது. இது நன்கு ஒத்துக்கொள்ளக் கூடியதாகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பின்தங்கிய வகுப்பினரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதாயுமிருந்தது. ஏனெனில், பின்தங்கிய வகுப்பினர் தம் பங்கிற்கு நிலமற்ற ஏழைகளையும் சமூகத்தின் ஒதுக்கம் செய்யப்பட்டவர்களையும் அடக்கியாள்பவர்களாகவே விளங்கினர். மிண்டோ மார்லி குழுவின் முன்பாக ஒரு பிரதிநிதியாகச் சென்ற பண்டித அயோத்திதாஸர், தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சாதியற்ற திராவிடர்களாக விவரித்து, மற்றொரு முக்கியமான அடையாளப்படுத்தலையும் செய்தார். இந்துத்துவப் படிமுறை அமைப்பையும் சாதீய முறையையும் ஒருசேர மறுத்ததால் வரவேற்புக்குரிய நிலைபாடாகவும் அது விளங்கியது. இதற்கும் மேலாக, ஆதிதிராவிடர் என்ற இந்தப் பெயர், ஆதித்தமிழர்கள் எனப்படும் தமிழ்நாட்டவரையும் ஆதி ஆந்திரர்கள் எனப்படும் ஆந்திரர்களையும் உட்படுத்தி விரிவடைவதாக இருந்தது. இந்தச் சொல், எம்.சி. ராஜாவுக்கும் ஒப்புக் கொள்ளக்கூடியதாகத் தோன்றியது. எனவே, 1922இல் ஆதிதிராவிடர் என்று நாங்கள் அழைக்கப்படுவது, வரலாற்று ரீதியில் ஒதுக்கப்பட்ட மக்களின் அடையாள விளக்கத்துக்கு மிகவும் பொருத்தமானதாக விளங்குகிறது என்ற தீர்மானத்தை அவர்கள் முன் மொழிந்தார்கள். 1927இன் -'Madras Local Act'ல் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆதி திராவிடர்களாகக் கூறப்பட்டனர். இந்தக் குறியீட்டுச் சொல்லே தென் இந்தியாவில் வழக்குமுறைக்கு வந்தது. இந்த அடிப்படையில் ஆந்திராவில் ஆதி ஆந்திர மகாசபை தோற்றுவிக்கப்பட்டது. 1930களின் ஆரம்ப கட்டப் போக்கு இவ்வாறுதான் இருந்தது. 1919வாக்கில் தென் இந்தியாவின் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காகச் சபையினால் ஓர் ஒப்பந்தப் பத்திரம் உருவாக்கப்பட்டது; இது 1923இல் சைமன் கமிஷன் முன்னிலையில் அட்டவணைச் சாதியினரின் பல்வேறு பிரிவுகளும் விண்ணப்பங்களை அளிப்பதற்கு முன் நிகழ்ந்தது. இந்தச் சமயத்தில்தான் ஒவ்வொரு சாதியினரும் வேறுபட்ட தோற்றங்களை மேற்கொண்டனர். எடுத்துக் காட்டாக தமிழ்நாட்டில் தேவேந்திரகுல வேளாளர் என்பது போன்றவை. ஆனால் எல்லோரையும் அரவணைக்கும் குறியீட்டுச் சொல்லின் கீழ் பல்வேறுபட்ட சாதிச்சங்கத்தினரும் ஒன்றிணைவதே மிகவும் வேண்டப்படுவதான போக்கு என்றானது. டாக்டர். அம்பேத்கர், புறநிலைச் சாதியினர் அல்லது சாதியற்ற இந்துக்கள் என்றே குறிப்பிட்டு வந்தாலும் நாளடைவில் ஓர் அரசியல் கட்சியை 1924இல் அவரே உருவாக்கியபோது, 'ஆல் இண்டியா ஷெட்யூல்டு கேஸ்ட் பெடரேஷன்' என்ற பெயரையே அவர் பயன்படுத்தினார். ஜே.பி.புலே போன்ற முன்னோடிப் பெருந்தலைவர்கள் தலித் என்ற சொல்லைப் பயன்படுத்த டாக்டர் அம்பேத்கரால் அது

ஏற்றுக் கொள்ளப்பட்டு மஹர்களை அழைக்க அது பயன்பட்டது. பின்பு அவர் அனைத்துத் தாழ்த்தப்பட்ட வகுப்பின ரையும் குறிப்பதாக அதன் அர்த்தத்தை விரிவுபடுத்தினார். முதல் வட்ட மேஜை மாநாடு நடந்தபோது, இந்தியாவின் வடக்கிலிருந்து தெற்கு வரை யுள்ள எல்லாத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் இந்திய மக்களின் ஒரு பிரிவினராக வகைப்படுத்தி, பிரதிநிதித்துவம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் வட இந்தியத் தாழ்த்தப்பட்ட வகுப் பினருக்குப் பிரதிநிதியாகவும் ரெட்டை மலை சீனிவாசன் தென் இந்தியத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதியாகவும் செயல்பட்டனர். அட்டவணைச் சாதியினரை ஒன்றுகூட்டும் ஒரு முயற்சி இது. இதே மாதிரியான உத்வேகத்தில், அம்பேத்கர் தீண்டப்படாத மக்களின் அனைத்துப் பிரிவையும் குறிப்பதாகத் தலித் என்ற சொல்லை விரிவுபடுத்தினார். தீண்டாமையும் அடிமைத்தனமும் இந்த இனத்து மக்களின் முக்கியமான குணச்சித்திரங்களாக்கப்பட்டன. 1973இல் தலித் பாந்தர் இயக்கம் தோற்றம் கொண்டபோது, தலித் என்ற சொல்லுக்கு வேறுபட்ட அர்த்தங்களை அளித்தனர். அதனால் மிக விரிந்துபட்ட அர்த்தம் ஏற்பட்டு, சாதி என்பது ஒரு வர்க்கமாக மாறும் குணம் பெற்றது. என்றாலும், மிகவும் வரையறுக்கப்பட்ட ஆனால் ஆழமான அர்த்தத்தையும் இச்சொல்லிலிருந்து வரவழைக்கலாயினர். வில்சன் என்பவர் கூறினார்: 'தலித் என்ற சொல் சமஸ்கிருதச் சொல்லான தல் என்பதிலிருந்து வந்தது; ஒடுக்கப்பட்ட வகுப்பினரை அர்த்தப்படுத்துவது. எனவே தல் என்பதன் அர்த்தம், பிரிக்கப்பட்டோர் அல்லது அடக்கப்பட்டோர் என்பதாகும். ஆனால் இந்தக் குறிப்பிட்ட சிந்தனைப் போக்கில் வேறு பல வகுப்பினரும் தலித்துகள் என்று அழைக்கப்பட முடியும். பொருளாதார வகையில் அடக்கப்பட்டவர்கள் என்பது பல்வேறு இனத்தினருக்கும் பொருந்துவது. ஆனால் பொருளாதார ரீதியில் மட்டுமல்லாமல் சமூக எதார்த்தத்தின் அளவிலும் அடக்கப்பட்டவர்கள் என்பதோ ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கே பொருந்தி வரக்கூடியது. சுதந்திரத்துக்குப் பிந்திய மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியச் சமூகமாக மாறிவிட்ட இன்றும் மனித உயிர்களாகத் தொடர்ந்து நிலைத்திருப்பது அவர்களுக்கு ஓர் அடிப்படைப் பிரச்சினையாக இருந்து வருகிறது. இவர்கள்தான் ஹரிஜன் என்றழைக்கப்படுகிறவர்களும் தீண்டத்தகாதோர் என்போரும். தீண்டாமை, ஏழ்மை, அடக்குமுறை, மனிதாபிமானமற்றதனம் போன்றவை தலித்துகளின் கலாச்சாரப் பாரம்பரியமாகத் தொடர்கிறது. எனவே அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாலும் கூட ஒடுக்கப்பட்டவர்கள், கீழினும் கீழானவர்கள் என்று அழைக்கப்படுவதுதான் சரி?'

இன்று இந்த தலித் என்ற சொல்வழக்கு சந்தேகமற அகில இந்திய அளவில் ஏகதேசமாக எங்கும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தலித் கலாச்சாரம், தலித் இயக்கம், தலித்திய பிரக்ஞை என்ற அதன் இன்றைய

பயன்படுத்தல்களே இதற்கு சாட்சி. உதாரணமாக, கர்நாடகாவின் தலித் சங்கர்ஷ் சமிதி, ஆந்திரப் பிரதேசிலுள்ள விஜய நகரத்தில் நடந்த தலித் மகாசபைக் கருத்தரங்கம், கடைசியாக விடுதலைக்கான தலித் பாந்தர் அமைப்பு போன்றவைகளைச் சொல்லலாம். இந்தியாவில் 10 கோடி மக்கள் தொகையில் 1000 தாழ்த்தப்பட்ட வகுப்பினரை அடையாளம் காணமுடியும். அதிலும் 50% பேர் இந்தி பேசும் 5 மாநிலங்களில் இருக்கின்றனர். இந்தி பேசும் மாநிலங்களில் தலித் என்ற சொல் மிக நன்றாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. தென்னக மாநிலங்களிலும் கூட, இந்த வார்த்தை தீண்டப்படாதோரையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் குறிப்பது என்று எளிதாக உணரக்கூடியதாக மாறி வருகிறது. குறிப்பாக, கிறிஸ்தவ வகுப்பினரிடையே 85% பேர் தலித் பூர்வீகத்தினர் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. இங்கே சக்தி மிக்க கிறிஸ்தவ தலித் இயக்கம் இருந்து வருகிறது. இவையெல்லாம் தலித் என்ற சொல் பரந்த ஏற்பைப் பெற்றுள்ளதையும் உணர்ச்சிகர உள்ளடக்கமும் கலாச்சார முக்கியத் துவமும், எல்லாவற்றுக்கும் மேல் அரசியல் உள்ளடக்கமும் பெற்று வருவதையும் இச்சொல் மூலதனப்படுத்தியுள்ளது. எனவே, வரலாற்று ரீதியாக, அடிமைத்தனத்துக்கு ஆட்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட ஆரியருக்கு முந்திய கலாச்சாரப் பிரிவினர், 'தலித்' என்ற உணர்ச்சி வேகம் மிக்க கனமான சொல்லால் வெளியே கொண்டு வரப்படுவது நல்லது என்பதும் இதுவே வரலாற்று அதர்மத்தின் குறியீடாகவும் தொலைந்துபோன வரலாற்றின் அடையாளத் தீர்வாகவும் இருக்கும் என்பதும் எனது வேண்டுகோளாகும்.

கலாச்சாரம் மற்றும் இன அடையாளத்தின் முக்கியத்துவம் என்ன?

வகுப்புவாத மோதல்கள் கலாச்சார மோதல்களாக அவ்வப்போது காட்டப்படுகிறது. இன்றைய அரசியல் கட்டமைப்பு என்பது அரசியல் - பொருளாதார மூல வளங்களைக் கட்டுப்படுத்தும் அமைப்பாக மட்டும் அல்லாமல் அர்த்தங்களையும் குறியீடுகளையும் கட்டுப்படுத்தும் அமைப் பாகவும் பார்க்கப்படுகிறது. உதாரணமாக, அயோத்தியின் பாப்ரி மஸ்ஜிதில் விக்கிரகங்களின் மீதான உரிமை கோரலில் கலாச்சார மதக்குறியீடுகள் அரசியல் முரண்பாட்டின் மையமாக உருவெடுத்ததைக் காணலாம். விவாதங்களில், கருத்தியல்களை ஒதுக்கி விட்டு கலாச்சார உள்ளடக் கத்துக்கு அழுத்தமான பங்கு அளிக்கப்பட்டு விவாதிக்கப்படுவதாகத் தோன்றுகிறது. அல்லது சுதந்திரத்தின் விடியல் வேளையில், அரசியல் கருத்தியலின் தோற்றத்தின்போது பழமைக்கு விசுவாசமாக இருத்தல் பற்றிய வேறுபடுத்தல் வெளியிடப்பட்டதையும் காணலாம். இந்த வெளிப்பாட்டுக்கு நம்பிக்கை மோசமே நிகழ்ந்தது என்பதும் வெளிப்படை. கலாச்சாரம் என்பது கருத்தை வெளிப்படுத்துதல் என்றும் ஆதியிலிருந்தே இணைந்த இனங்களாகச் செயலாற்றுதல் என்பதுமான ஒருவித நம்பிக்கையும் இருந்து வந்துள்ளது. பொதுவான நம்பிக்கைகள், மதிப்புகள், வாழ்க்கை முறைகள், மத வழிபாடுகள் போன்றவற்றால் இனங்கள் இணைக்கப்பட்டிருந்தன. கலாச்சாரத்தின் பிரசன்னம் என்பது இனங்களின் அடையாளத்தை நிறைவேற்றும் அத்தியாவசியமாக ஆகிப்போனது.

இனத்தின் ஒரு குறிப்பிட்ட அடையாளம், அதன் கலாச்சார முறை களால் அறிந்து கொள்ளப்படும் என்பது இன்னொரு நம்பிக்கை. ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு தனிமனிதன் என்பவன், தனிமனித - இன - கலாச்சார மதிப்புகளைப் பகிர்ந்து கொள்கிறான் என்பதாக உதாரணப்படுத்தினார்கள். எனவே கலாச்சாரமே, இன அடையாளத்தின் அசல் அறிகுறியாகச் செயல்பட்டது. ஓர் இனத்தின் கலாச்சாரம், அந்த இனத்தில் பிறந்த ஒருவனுக்கு உயர்வானது என்பது மற்றொரு பார்வை. அந்நியர்களால், இந்தக் கலாச்சாரச் செயல்பாடுகளையும் மதிப்புகளையும் புரிந்து கொள்வது என்பது கடினமாகவே இருக்கும். உதாரணமாக ஒரு தலித்தின் வலிகளையும் மதிப்புகளையும் இன்னொரு தலித்தாலேயே நன்கு அறிந்து கொள்ள முடியும். ஒரு தலித்தின் கலாச்சாரப் பாரம் பரியத்தில் புகுவது தலித்தல்லாத ஒருவனுக்குச் சாத்தியமே இல்லாது போகாம்.

மதமும் கலாச்சாரமும் அடிக்கடி ஒன்று மற்றொன்றாக மாறக் கூடியன. மத - கலாச்சாரச் செயல்முறைகளின் உயிரோட்டமான குணம், இன அடையாளத்தின் சட்டகமாக அவ்வப்போது செயல்படுகிறது. உதாரணமாக, கேரளாவிலிருந்து காஷ்மீர் வரையுள்ள முஸ்லிம்களின் தேசிய அடையாளம், அவர்களது ஒற்றையான மத நம்பிக்கையின் அடிப் படையில் அமைகிறது - பிராந்தியக் கலாச்சாரத்தில் அவர்கள் வாழும் சூழல் எவ்வாறு இருந்தபோதிலும். இந்துக்களும் இதே போன்றுதான். ஆனால் வரலாற்றுப் போக்கில் முஸ்லிம் அடையாளமானது, இந்தியா, பாகிஸ்தான் என்று இந்தியாவைப் பிரிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது. மத அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டால், கலாச்சாரத்துடன் ஒட்டி வரும் தீமையாக இது பெரும்பாலும் இவ்வாறு நிலை கொள்கிறது. ஆனால் பாகிஸ்தான் என்ற ஒன்று உருவானதும், கலாச்சார வாழ்தலின் வேறுபாடுகள் உருத்திரண்டு பாகிஸ்தான், பங்களாதேஷ் என்று அது பிரிக்கப்பட்டது. இவ்வாறாக அங்கே மத அடையாளம் இரு கலாச்சாரக் குழுக்களை ஒன்றாக நிலை நிறுத்த முடியவில்லை. மத நம்பிக்கைகள், செயல்பாடுகள் ஆகியவற்றைவிட கலாச்சாரம் என்பது எங்கும் மிகுந்த அளவில் ஊடுருவியிருப்பதாகவே தோன்றுகிறது. தலித்துகளுக்கும் இதே நிலைதான். தலித்துகள் எல்லா மதங்களிலும் காணப்பட்டாலும் கூட அவர்களது கலாச்சாரம் மத அடையாளத்தைக் கடந்து நிற்கும். கிறிஸ்தவ தலித் இயக்கங்களில் ஒரு தனித்த தலித் அடையாளம் தெரிவதாகத் தோன்றுகிறது. எனவே பரந்துபட்ட அகில இந்திய அடையாளம் எந்தவொரு வகுப்பினருக்கும் தப்பித்தலாகவே இருக்கும் என்று பலரும்

நினைக்கிறார்கள். தலித் அடையாளம் என்பது சாதியைச் சுட்டுவதிலும் வரலாற்று ஒதுக்கத்திலும் வேர் கொண்டதாகவே இருக்கும்.

ஓர் இனத்தின் அடையாளம் கலாச்சார மதிப்புகளில் வேரோடியிருக்கிறது என்றாலும் இது சிக்கல் நிறைந்த செயல்பாடாகத் தோன்றினாலும் நாம் தேசியப் பிரச்சினைகள் மேல் கவனம் செலுத்தத்தான் வேண்டும். தலித்துகள் ஒரு தனி தேசிய அடையாளத்தை வேண்டினாலும் கூட அரசியல் ரீதியான சுய நிர்ணயத்தையும் அவர்கள் கோருகிறார்கள். இன்றைய இந்திய அரசியலில் காரியங்கள் நிகழும் முறைப்படி, இந்த ஜனநாயக ஆட்சி முறையில் தலித்துகள் நிரந்தரச் சிறுபான்மையினராகவே நீடிப்பார்கள். அவர்களது தாழ்ந்த நிலையும் சமூகப்படிமுறையும் பாராளுமன்ற நடவடிக்கைகளாலும் நலத்திட்டங்களாலும் அரசியல் சாசன ரீதியான ஒதுக்கீடுகளாலும் தீர்க்கப்படவென்றே காத்திருக்கின்றன. அரசியல் சாசன ரீதியில் அடையாளப்படுத்தக்கூடிய ஒரு குழுவினர் நிரந்தரச் சிறுபான்மையினர் நிலைக்குக் குறைக்கப்படுவது ஒரு தாழ்வுபட்ட சூழ்நிலையே. இதுவே அரசியல் ரீதியான சுயநிர்ணயத்தைத் தேட அவர்களைக் கட்டாயப்படுத்துகிறது. ஜார்கண்ட் இயக்கத்தின் ஆதிவாசிகள் தற்போது வற்புறுத்தி வருவது போன்று அரசியல் ரீதியில் சுய நிர்ணயத்தை தலித் வகுப்பினர் நிர்ப்பந்திக்க வேண்டிய வெளிப்படை நிலை இன்று உருவாகியுள்ளது. ஆனால் இந்த வகை அரசியல் நிர்ப்பந்தம் செய்வதற்கு பல்வேறு தலித் குழுக்களின் ஒன்றிணைவு வேண்டியிருக்கிறது. இது தேசிய அளவில் அடையாளப்படுத்தக்கூடிய அரசியல் இயக்கமாக வளர்வதுவே இன்றைய தேவை. வரலாற்றுக்கு முந்திய திராவிடப் பிரக்ஞையின் மூழ்கடிக்கப்பட்டு விட்ட இயல்பை இது தூண்டியெழ வைக்கும் செயலைச் செய்யுமா என்பது ஆழ்ந்து சிந்திப்பதற்குரிய சரியான ஒரு விஷயமாகும்.

முடிவுரையாகக் கூறப்போனால், தலித் அடையாளம் பற்றிய விஷயம் மூலங்களின் மீதான விசுவாசத்தின் வெளிச்சத்தில், கலாச்சாரப் பாரம்பரியச் சொத்தினால், தேசியப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது; தேவையான காலம் எடுத்துச் செய்ய வேண்டிய பணியென்பதாலும் அதிகப் புலமையின்மையாலும் துரிதமாகவே பார்வையிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கும் விளக்குவதற்கும் எண்ணுவதற்குமான சட்டகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளதாக நான் நம்புகிறேன். ஆனால் தலித் மக்களின் ஆன்ம எழுச்சியாக இன அடையாளம் காட்டப்படுதலும் அரசியல் ரீதியில் செயல்புரியத் திடப்படுத்தலும் குழுவை உருவாக்க ஒரு துடிப்பு மிக்க இயக்கம் காட்டப்படுதலும் வரலாற்று ஒதுக்குதலுக்குத் தீர்வு காண்பதும் இழந்த அடையாளத்தை மறு கண்டு பிடிப்புச் செய்தலும் இன்றைய காலத்தின் தவிர்க்க முடியாத தேவைகளாகும்.

வியாகுல சங்கீதம்

சாரு நிவேதிதா

12.08.2002 அன்று கன்னியாகுமரியில் 'வானவில் இலக்கிய வட்டம்' சார்பாக நடத்தப்பட்ட கருத்தரங்கில் புதுமைப் பித்தனின் சிறுகதைகள் பற்றி வாசித்த கட்டுரையை துரதிர்ஷ்டமாக நான் தொலைத்து விட்டதால் அச்சிறுகதைகளை மீண்டும் ஒருமுறை படிக்க வேண்டிய வேதனை எனக்கு ஏற்பட்டது.

புதுமைப் பித்தனைப் பற்றி காரசாரமான விவாதங்கள் அதிக அளவில் நடந்து கொண்டிருக்கின்றன. உண்மையில் இவ்விவாதங்களில் நான் பங்கேற்கவே விரும்பவில்லை. இவ்வளவு விவாதங்களை எழுப்பக் கூடிய அளவுக்கு அவர் கதைகளில் ஏதுமில்லை என்பதே காரணம்.

'வாழ்ந்தபோதும் வாழ்ந்து மறைந்து இத்தனைக் காலம் கழிந்த பிறகும் பெரும் சர்ச்சைக்குள்ளான தமிழ்ப் படைப்பாளி அநேகமாக புதுமைப் பித்தனாகத்தான் இருப்பார். அவரது படைப்புகள் பற்றி தமிழ் இலக்கிய உலகில் இருவேறு மதிப்பீடுகள் உண்டு. புதுமைப் பித்தனை மேதையாகப் போற்றுபவர்கள், படைப்புகள் மூலம் கட்டுடைப்பவர்கள். இவ்விரண்டு முகாமிலும் சமீப காலங்களில் புதுமைப் பித்தன் அதிகமாகப் பேசப்படுகிறார். விவாதிக்கப்படுகிறார்' என்று எழுதுகிறது தினமணிகதிர் (20.5.2001).

ஆனால் புதுமைப் பித்தன் பற்றி மூன்று வித மதிப்பீடுகள் இருப்பதாகவே நான் கருதுகிறேன். ஒன்று - புதுமைப் பித்தனை canonise செய்பவர்கள். இரண்டு - புதுமைப் பித்தனைப் பெரும் படைப்பாளியாக ஏற்றுக் கொண்டு அவரது எழுத்துகளிலும் பழைமைவாதம், சாதியம், மதவாதம் போன்றவற்றை எதிர்ப்பவர்கள், விமர்சிப்பவர்கள். மூன்றாவது மதிப்பீடு - புதுமைப் பித்தனை முற்றாக நிராகரிப்பவர்கள். இவர்கள் மிகவும் சிறுபான்மையினர்.

புதுமைப் பித்தனின் எழுத்துகளைப் படிக்கும்போது ஐம்பது அறுபது ஆண்டுகளிலேயே அவை காலாவதியாகி விட்டதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஓர் எழுத்தாளரின் மிகப் பெரிய தோல்வி, அவரது படைப்புகள் 'அமெச்சூரிஷாக' அமைந்து போவதுதான். புதுமைப் பித்தனின் பெரும்பாலான கதைகள் அசட்டு/அரைவேக்காட்டுத் தனமானவை. தட்டையான மொழியில் எழுதப்பட்ட தமிழ் சினிமா பாணிக் கதைகள். சங்குத் தேவனின் தர்மம், பொன்னகரம், திருக்குறள் செய்த திருக்கூத்து என்று பல கதைகளை உதாரணமாகச் சொல்லலாம்.

புதுமைப் பித்தனுக்கு தமிழ் சினிமா காமெடி ட்ராக் நன்றாகவே வருகிறது. திருக்குறள் செய்து திருக்கூத்து கதை ஜனகராஜ்

காமெடி (அபூர்வ சகோதரர்கள் ஜனகராஜ்). கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் - 'லக்கிமேன்' கவுண்டமணி, செந்தில்.

மேலும் கட்டில் பேசுகிறது, மோட்சம், காளிகோவில், உணர்ச்சியின் அடிமைகள், நிகும்பலை, புதிய நந்தன், கவந்தனும் காமனும், இது மிஷன் யுகம், திறந்த ஜன்னல், பறிமுதல், தெருவிளக்கு, அகல்யை கடிதம், சித்தம் போக்கு, நன்மை பயக்குமெனின், தியாகமூர்த்தி, கண்ணன் குழல், வாடா மல்லிகை, கொடுக்காப்புளி மரம், நம்பிக்கை, புதிய ஒளி, கனவுப் பெண், நானே கொன்றேன், சாயங்கால மயக்கம், தேக்கங்கன்றுகள், புதிய கந்தபுராணம், குப்பனின் கனவு, ஆண்மை, சணப்பன் கோழி, மாயவலை, பால் வண்ணம்பிள்ளை, குற்றவாளி யார்?, வழி, பூசணிக்காய் அம்பி, சாமாவிட், தவறு, கலியாணி, ஒரு கொலை அனுபவம், நாசகாரக் கும்பல் என்று 'அச்சுப் பிச்சு' அசட்டுக் கதைகள் தொடர்ந்து நம்மைத் தாக்குகின்றன.

ஸ்ரீராம் சிட்ஸ் உபயத்தில் வெளியிடப்பட்டுள்ள தலையணை சைஸ் புத்தகத்தில் 283ம் பக்கம் வரை படித்துக் கொண்டு வருகிறேன். ஒரு கதைகூடத் தேறவில்லை. எல்லாம் ஜெமினி கதை இலாகா கதைகள். பல கதைகள் செய்தித்தாள் ரிப்போர்ட்டுகள். சில கதைகள் அதற்குக் கூட லாயக்கற்றவை. சில மாடர்ன் தியேட்டர்ஸ் துப்பறியும் கதைகள் (நானே கொன்றேன்). சில விட்டலாச்சார்யா கதைகள் (காஞ்சனை, பிரம்மராக்ஷஸ்). சில சரித்திர நாடக ஸ்கிட்டுகள் (கொன்ற சிரிப்பு) மற்றும் கருச்சிதைவு, சொன்ன சொல் போன்ற அசல் குப்பைகள். எல்லாமே ஒன்றரை நாட்களுக்கு ஒரு கதை வீதம் verbal dysentryயாக கழிந்து தள்ளப்பட்ட கதைகள்!

இப்படிச் சொல்வதால், பிற்பாடு அவர் நாற்பதுகளில், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதானமாக எழுதிய கதைகளைச் 'சிறப்பானவை' என்று சொல்ல முடியாது. உதாரணமாக 'சித்தி' திரும்பவும் ஜெமினி கதை இலாகாதான்.

இதையெல்லாம் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போடாமல், இத்தனை ஆண்டுகள் கழித்து இவற்றைப் பிரசுரிப்பதும் இது பற்றி விமர்சனம் எழுதுவதும் - தமிழ்ச்சூழலின் அவலங்களில் ஒன்று.

புதுமைப் பித்தனுக்கு மட்டும் நீண்ட ஆயுள் இருந்திருந்தால் கருணாநிதிக்கு முன்னதாகவே தமிழகத்திற்கு ஒரு 'கலைஞர்' சீஃப் மினிஸ்டர் கிடைத்திருப்பார். புதுமைப் பித்தனின் குடும்பத்தாருக்கு இப்படி 2000 ரூபாய் ராயல்டி கொடுத்தேன், 3000 ரூபாய் ராயல்டி கொடுத்தேன் என்று பதிப்பகங்களுக்கு இடையே திருவோட்டுச் சண்டையும் ஏற்படால் இருந்திருக்கும். தமிழகம் கொடுத்து வைக்கவில்லை, என்ன செய்ய!

வெறும் BULLSHIT கதைகளை எழுதிய ஒருவர் எப்படி இவ்வளவு காலம் கழித்துத் தமிழ்ச் சூழலில் பேசப்படுகிறார் என்று யோசித்துப் பார்த்தேன். பமீலாவின் ஞாபகம் வந்தது. அவள் என்னுடைய முன்னாள் சிநேகிதி. (பெயரை மாற்றியிருக்கிறேன்.) ஒரு சினிமா நடிகை. அதாவது சினிமா நடிகை ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பவள். வயது முப்பது இருக்கும். இருபதாகவும் இருக்கலாம். சினிமா நடிகைகளின் உண்மையான வயதை எவனாலும் சொல்ல முடியாது. அளவைப் பார்த்து பதினெட்டு என்று முடிவுக்கு வருவோம். அவளோ எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருப்பாள். ஆனால் பமீலாவை யார் பார்த்தாலும் முப்பது என்றுதான் சொல்வார்கள். எடை நாற்பது இருக்கும். முழு எடை அல்லா. ஸ்தனங்களின் எடை மட்டும்! அப்படிப்பட்ட ஒரு நீர்யானை உடம்பு. ஒன்றிரண்டு படங்களில் சிறுசிறு வேடங்கள், தொலைக்காட்சி சீரியல்கள், சில விளம்பரப் படங்கள்.

'மிகப்பெரிய நடிகையாக வேண்டும்' என்பது இவள் கனவு. எனக்கு ஒன்றும் புரியவில்லை. இவள் எப்படி மிகப்பெரிய நடிகையாக முடியும்? ஆனால் சினிமாவில் என்ன வேண்டுமானாலும் நடக்கும்.

பமீலா இப்போது சுமார் 25 படங்களில் ஹீரோயினாக நடித்து விட்டாள். கைவசம் பத்துப் படங்கள். மாதம் இரண்டு படங்கள் ரிலீஸ். தமிழகச் சுவர்கள் எங்கும் இவளது பிரம்மாண்டமான முலைகள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கின்றன. எல்லாம் மலையாள 'ஏ' படங்கள்.

எப்படி இது சாத்தியம்? ஜாதகம்தான். பமீலா முப்பது வயதில் புகழின் உச்சிக்குப் போவாள் என்று அவள் ஜாதகத்தில் எழுதியிருக்கிறது. குழப்ப மில்லாமல் தெரிகிறது புதுமைப் பித்தன் விஷயத்திலும் இதுதான் நடந்திருக்கிறது. மரணத்திற்குப் பிறகு விருத்தாச்சலம் பிள்ளைக்கு 'ஓஹோ' என்ற புகழ் என்பது அவர் ஜாதகம்!

○

முற்போக்கு இலக்கியம் என்ற பெயரில் பல ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் வைக்கோல் போருக்கும் கூட புதுமைப் பித்தன்தான் முன்னோடியாக இருந்திருக்கிறார் என்று தெரிகிறது.

'பொன்னகரம்' என்ற கதை பற்றிப் பலரும் சிலாகித்துப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் அம்மாளு வேசைத்தனம் செய்வது- விபத்தில் அடிபட்டு வீட்டில் விழுந்து கிடக்கும் புருஷனுக்குப் பால் கஞ்சி வார்த்துக் கொடுப்பதற்காகத்தான்! அம்மாளு எப்படிப்பட்டதோர் கற்பின் சிகரம்! புதுமைப் பித்தன் விபச்சாரி பற்றி எழுதவில்லை. சமூக மதிப்பீடு எதுவோ அதையே - அதாவது கற்பின் மேன்மையையே - எழுதியிருக்கிறார். தனி ஒருவனுக்கு, நம்பிக்கை, துன்பக் கேணி போன்ற பல கதைகள் முற்போக்கு வகையறாவைச் சேர்ந்தவைதான்.

○

இதேபோல் பல pseudo - philosophy கதைகளும் காணக்கிடைக்கின்றன. ராமனாதனின் கடிதம், சாயங்கால மயக்கம், நினைவுப் பாதை, போன்ற கதைகள் இந்த ரகத்தைச் சேர்ந்தவை. உபதேசம் என்ற ஒரு கதை. கதையின் பொருளுக்கு ஏற்ற புதிர்களையும் முடிச்சுகளையும் கட்டாமல் labyrinthஐ உருவாக்கத் தவறி வெறும் செய்தியாக விழுந்து கிடக்கும் கதை இது! இன்றும் பெரிதாகப் பேசப்படும் சிற்பியின் நரகம், மகா மகானம், கயிற்றரவு போன்ற கதைகளுக்கு நிகழ்ந்திருப்பதும் இதே விபத்துதான்.

○

புதுமைப் பித்தனின் எல்லாக் கதைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கும் மற்றோர் அம்சம் - மத்தியதர வர்க்க மதிப்பீடுகள். மத்தியதர வர்க்கத்தைப் பற்றி எழுதுவது குற்றமல்ல. ஆனால் அந்த வர்க்கத்தின் மதிப்பீடுகளையே எவ்விதக் கேள்வியுமற்று தனது மதிப்பீடுகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் அவர். அவருடைய கதாபாத்திரங்களான சைவ வெள்ளாள கணக்கப் பிள்ளைகள் அத்தனை பேருமே சொ.விருத்தாச்சலம் பிள்ளையாக நமக்குத் தெரிய வருகிறார்கள்.

'வெளிப்பூச்சு' என்று ஒரு கதை. மாதக் கடைசி. சம்பளம் போட வில்லை. வீட்டில் ஏகப்பட்ட செலவு. வீட்டு வாடகைக்காரன் என்ன வெல்லாம் பேச முடியுமோ அதெல்லாம் சொல்லிவிட்டுப் போய் விட்டான். வீட்டுச் சாமான்களைத் தூக்கி எறிய அவற்றின் மீது கைதான் வைக்கவில்லை. இரவு வேளைக்கு வீட்டில் அரிசி இல்லை.

யாரிடமிருந்தோ எட்டணா கடன் வாங்கி வருகிறார் ரங்கநாதம். அப்போது ரங்கநாதத்தின் நண்பர் ராகவன் வருகிறார். ராகவனை வரவேற்று நாற்காலியில் உட்கார வைத்துப் பேசிக் கொண்டு இருக்கிறார் ரங்கநாதம். வெற்றிலை போடச் சொல்லி தானும் போட்டுக் கொள்கிறார். சினிமா பற்றிப் பேசுகிறார்கள். காப்பி தயாராகியது. ரங்கநாதத்தின் மனைவி கதவண்டையில் வந்து நிற்கிறாள்.

'என்ன ஸார், காப்பி கொஞ்சம் சாப்பிடுங்களேன்' என்றார் ரங்கநாதம்.

'இல்லை ஸார், இப்பொழுதுதான் சாப்பிட்டேன்; நீங்கள் சாப்பி டுங்கள்' என்றார் ராகவன்.

'கொஞ்சம் சாப்பிட்டால் என்ன வந்துவிடுகிறது? ராதா, காப்பியை இங்கேதான் கொண்டு வாடி' என்றார் ரங்கநாதம்.

காப்பி பரிமாறப்படுகிறது. ராகவன் ஒரு எட்டணா கடன் கேட்க, ரங்கநாதமும் கொடுத்து விடுகிறார். ரங்கநாதத்தின் மனைவி வந்து அரிசியும் மண்ணெண்ணெயும் வாங்கி வரச் சொல்கிறாள்.

'இரவு தோசையே சாப்பிட்டு விடலாம்' என்கிறார் ரங்கநாதம். 'மண்ணெண்ணெய்?' என்கிறாள் மனைவி.

எட்டணாவை ராகவனிடம் கொடுத்திருப்பதாகவும், நாளை காலையில் வாங்கிக் கொள்ளலாம் என்றும் சொல்கிறார் ரங்கநாதம்.

இப்படி ஒரு சிறுகதை! இதை எழுதியவர் தமிழ் இலக்கியத்தின் சாதனையாளர். த்தூ... உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

○

'ஒருநாள் கழிந்தது' என்று ஒரு கதை. மாசக் கடைசியில் எட்டணா கூட இல்லாமல் கஷ்டப்படும் ஓர் எழுத்தாளப் பிள்ளைவாளின் தரித்திரக் கதை. தமிழ் இலக்கியம் உலகத் தரத்தை அடையாமல் போனதற்கு இப்படிப் பட்ட ஆபாசமான, குப்பைக் கதைகளே முன்னோடிகளாக அமைந்து போனதே காரணம் என்று தோன்றுகிறது.

'மனித யந்திரம்' கதையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்ற ஸ்டோர் குமாஸ்தா. 'நியாயந்தான்' என்ற கதையில் வரும் வடலூர் குமாரு பிள்ளை.

'செல்லம்மாள்' என்று ஒரு கதை. தமிழ் இலக்கியத்தின் சிகர சாதனை! ஜவுளிக்கடையில் வேலை செய்யும் பிரம நாயகம் பிள்ளை. அவர் மனைவி செல்லம்மாள். அவர்களின் கொடிய வறுமை. ரோட்டில் குழந்தையை வைத்துப் பிச்சையெடுக்கும் பிச்சைக்காரனைப் போல் செல்லம்மாளை வைத்துப் பிச்சையெடுத்திருக்கிறார் புதுமைப் பித்தன். என் தமிழ் இலக்கிய வாசிப்பிலேயே இவ்வளவு கேவலமான கதையை நான் படித்ததில்லை. ஏதோ சைவப் பிள்ளைகள்தான் இந்த உலகத்திலேயே அதிகம் ஒதுக்கப் பட்டவர்கள் என்ற சுயஜாதி அபிமானத்தில் தனது பிரமநாயகம் பிள்ளையை உருவாக்கியிருக்கிறார் புதுமைப் பித்தன்.

'புப்பி'யைப் படிக்கும்போது அவனைக் குப்பியடிக்க வேண்டும் போல் இருக்கிறது என்று சொன்னார் என் தலித் நண்பர் ஒருவர். அதையும் நான் இங்கே பதிவு செய்துவிட விரும்புகிறேன்.

மற்றொரு கணக்கப் பிள்ளை சிவ சிதம்பரம் பிள்ளை. (சிவ சிதம்பர சேவுகம்) நரையோடி நெஞ்சை மறைக்கும் தாடி, மல் வேஷ்டி, சிட்டி துண்டு, ஐந்து பெண்கள், பதினைந்து ரூபா சம்பளம். கல்லத்தி முடுக்குத் தெருவில் வறுமையின் இருளடித்த கர்ப்பக் கிருகம். ஜவுளிக்கடை குமாஸ்தா! தான் உண்டு, தன் கணக்கு உண்டு, தன் காரியம் உண்டு என்று இருப்பவர் இந்த குமாஸ்தா.

'சிவ சிதம்பரம் பிள்ளை சொப்பனத்திலிருந்து விழித்துக் கொண்டது போல் தம் வாழ்வின் பேரேட்டுக் கணக்கைப் பார்த்தார். ஐந்து பெண்கள். எம்டன் குண்டு போட்ட போது கிடைத்து வந்த சம்பளம். குட வயிறு. சில நரையோடிய தலைமயிர்கள் - இவைதான் இவரது வரவிலிருந்தது... ஐந்து பெண்களைக் கரையேற்ற வேண்டுமே; அவருக்கு நினைக்க நினைக்க மூச்சே திணற ஆரம்பித்தது. நெஞ்சு சுளுக்கிக் கொள்ளும் போலிருந்தது...'

'நிர் விகற்ப சமாதி'யின் ஸ்ரீமான் உலகநாத பிள்ளை. இக்கதையைப் படித்ததும் மலத்தைத் தின்றதுபோல் இருந்தது எனக்கு. ஒரு வாயால்

போர்ஹேஸ் என்றும் அதே வாயால் புதுமைப் பித்தன் என்றும் சொல் கிறீர்களே தமிழ் எழுத்தாளர்களே... உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

'நிசமும் நினைப்பும்' என்று ஒரு புல்ஷிட். இதிலும் வாடகை பாக்கி தரித்திரப் புலம்பல்தான். செருப்பால் அடிக்க வேண்டும் என்று தோன்றியது. இப்படிப்பட்ட கதை எழுதியவனை அல்ல. கேஸ் போட்டு விடுவார்கள். இதற்கென்றே ஒரு மாஃபியா கும்பல் இலக்கிய முகமூடியில் அலைந்து கொண்டிருக்கிறது - அதனால் இந்தக் கதைகளைப் படித்த என்னைத்தான் செருப்பால் அடித்துக் கொண்டேன்.

'தயிர்வடை சென்ஸிபிலிட்டி' என்றால் என்ன என்று ஓர் உரை யாடலில் என்னை மடக்கினார் ஜாம்பவான் ஒருவர். நான் சொன்ன வார்த்தையையே என்னால் விளக்கத் தெரியவில்லை. இப்போது அதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம். கதையின் பெயர் 'புரட்சி மனப்பான்மை'. இனி வருவது கதை:

'அன்று என் நண்பரின் பத்திரிகை ஆபீஸிற்குப் போயிருந்தேன். அங்கே ஒரு புரட்சிக்காரர் - அசல், அப்பட்டமானவர், கொஞ்சம் கூடக் கலப்புக் கிடையாது - நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் மாஜி - ஏதோ ஓர் - சதிக் கைதி...'

'சரி, இதுதான் ஸ்ரீமான் புரட்சியா என்று நிர்ணயித்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தேன்...'

'பாட்லிவாலா, பண்டார சன்னிதி, கங்காரு, 1939 மாடல் மோட்டார் கார், இரட்டைப் பெண்கள், ஸினிமா ஸ்டார் காந்தாமணி பாய், உயர்திரு தேசபக்தர், இத்யாதி இத்யாதி ரகத்தைப் பார்க்க மனுஷருக்கு சுபாவமாக உள்ள ஆசையை என் விஷயத்தில் திருப்தி செய்து வைத்த அந்த ஸ்ரீமான் இன்குவிலாப் ஜிந்தாபத்துக்கு என் மனமார்ந்த வந்தனம்.

'என் நண்பரும் சிறை சென்ற தேசபக்தர். கார்ல் மார்க்ஸ் பாராயணமும் கொஞ்சம் உண்டு. சுருங்கச் சொல்லுகிறேனே - வெகு தீவிரம்'

'குசலப் பிரசன்னங்களுடன் பரஸ்பர போலீஸ் காவல், சிறையில் கசையடி, இடைமறிக்கப்பட்ட கடிதங்கள், சமீபத்தில் வெளியான விக்டர் கொலான்ஸின் தீவிரவாத கிரந்தம் - சுங்க அதிகாரிகள் கண்ணில் பிஸ்கோத்து டின் மாதிரி இந்தியாவிற்குள் நுழைந்தது...' போன்றவைகளை இரண்டு நண்பர்களும் பேசிக் கொள்கிறார்கள்.

ஆனால் 'பழம் பஞ்சாங்கம்' என்று தன்னையே வர்ணித்துக் கொள்ளும் கதைசொல்லியான எழுத்தாளரின் கவனமோ, தான் கடன் வாங்க வந்த ரெண்டு ரூபாயிலேயே இருக்கிறது.

புரட்சியும் போலீஸ்காவலும், கசையடியும் எழுத்தாளருக்கு வெறும் கிண்டலுக்குரிய சமாச்சாரங்களாகத் தெரிவதைக் கவனியுங்கள். ரெண்டு ரூபாய் கடன் வாங்க வந்த மிடில் கிளாஸ் எழுத்தாள நாய்க்குப் புரட்சிக்காக சிறைக்குச் சென்றவனைப் பார்த்து ஸ்ரீமான் புரட்சி என்று நக்கல்!

புரட்சிக்காரர்களைப் பார்த்து பயந்து போன எழுத்தாளன் - கால்களின் இடையே வாலை இடுக்கிக் கொண்டு பதுங்கி ஓடும் நாயைப் போல் - கடற்கரைக்குப் போகிறான். அங்கே எழுத்தாளனின் ரசிகன் ஒருவனைச் சந்திக்கிறான். இருவரும் பேசிக் கொள்வதை தமிழ் இலக்கியத்தில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் வாசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்:

'அதிலே ஓர் ஆழ்ந்த உண்மை இருக்கு, பார்த்தேன் சார். நேற்று இப்படி மூர் மார்க்கெட் பக்கம் போனேன். இதை அடுக்கியிருந்தான். அட்டைப் படம் எல்லாம் கிழிஞ்சு போச்சு. காலணாவுக்கு ரெண்டுன்னான். ஏன் சார் நமக்கு விஷயந்தானே வேணும். அப்படியே ஒரு ரெண்டணாவுக்கு ஒரு கத்தை வாங்கினேன். நம்ம வீட்டுக்காரி இருக்காளே, அவளுக்குக் காகிதக் கூடையைப் பண்ணணுமாம், அப்படியே குடுத்துடுன்னு வாதாடினாள். அதிலே ரொம்ப விஷயங்கள் இருக்கு, படிச்சுட்டுத்தான் தருவேன்னுட்டேன். எப்பப் பார்த்தாலும் இந்தத் தொந்தரவுதான் சார். நல்ல கோட் சார், மூணா வருஷந்தான் வாங்கினது. கை ஓரத்திலேதான் கொஞ்சம் கிழிசல். அதைக் கொடுத்து ஒரு கண்ணாடி ஜாடி வாங்கிப் போட்டாள் சார்...'

டிசன்ட்ரி இன்னும் தொடர்கிறது.

'... அதிலே போட்டிருக்கான், எண்ணெய் தேய்ச்சுண்டா கெடுதல்னு. கெடுதல் எப்படின்னா ஜன்னி வந்துவிடுமாம். ...சுக ஜன்னி வந்திடுமாம். இன்னிக்கு ஒரு காரியம் செய்றதுன்னு தீர்மானம் பண்ணிப்புட்டேன். இனிமே எண்ணெயே தேய்ச்சுக்கிறதில்லேன்னு. வீட்ல ஏக ரகளை. இன்னிக்கு என்ன கிழமை தெரியுமா. புதன்! ஒரே பாட்டா முடியா தின்னுப்பிட்டேன். தலைலே கூட எண்ணெயைக் கொண்டு வந்து வச்சிப்பிட்டா. நான் தீரமா உதறித் தள்ளிட்டு ஆபீஸுக்கு வந்துட்டேன். இன்னும் வீட்டுக்குப் போகல்லே. இப்படியே பீச்சுக்கு வந்திட்டு பூ வாங்கிக் கிண்டு போகலாமுன்னு வந்தேன்' (ஸ்ரீராம் சிட்ஸ் உபயம் - பக்கம் 451, 452).

1938ஆம் ஆண்டு எழுதப்பட்ட சிறுகதை இது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளங்கள். ஹரிஜன இயக்கம், தலித் எழுச்சி, சுயமரியாதை இயக்கம், இரண்டாம் உலகப் போர் மூள்வதற்கான சூழல், பேரூராட்டம், தடியடி, சிறை என்று இருந்த ஒரு நிலைமையைப் பற்றிய பிரக்ஞை இல்லாமல் - சமுத்திரக் கரையில் உட்கார்ந்து கொண்டு எண்ணெய் தேய்த்துக் கொண்டால் கெடுதலா, எண்ணெய் தேய்த்துக் கொண்டு ஜோலி பண்ணினால் சுகஜன்னி வருமா - வராதா என்று ஆராய்ச்சி செய்கிறார்கள் எழுத்தாளரும் அவர் ரசிகரும்.

(இப்படி ஒரு மலக்கிடங்கில் விழுந்து புரள வேண்டிய அவசியத்தை உண்டாக்கி விட்ட வானவில் இலக்கிய வட்டத்தினருக்கு எனது கண்டனங்கள்.)

'விபரீத ஆசை' என்று மற்றொரு குமாஸ்தா பிலாக்கணம்: 'வாழ்வென்ற குளத்தில் நிரந்தரக் கடன் என்ற பாசியை ஏதோ இரண்டொரு நாளாவது விலக்கும் முப்பது ரூபாய் இனி யார் வந்து போடுவார்கள்...' (பக்.460).

'பொய்க்குதிரை' புலம்பல்: 'வாழ்க்கையே பிடிப்பற்றது; வாழ்வாவது மாயம்' என்றெல்லாம் நினைவு ஓடிக் கொண்டிருந்தது விசுவத்திற்கு; ஏனென்றால் அன்று ஆபீஸில் அவனுக்கும் சம்பளம் போடவில்லை. வீட்டிலே சாமான் கிடையாது. வாடகைக்காரன் நெருக்குகிறான். மனைவி கமலத்தின் துயரந்தேங்கிய முகம் அவன் மனக்கண் முன்பு நின்றது' (பக்.479).

தலித்துகளை விடவும் ஒடுக்கப்பட்ட கந்தசாமிப் பிள்ளைவாளின் பரிதாப நிலையைப் பாருங்கள்: 'மேலகரம் ராமசாமிப் பிள்ளையின் வாரிசுக்கு நாற்பத்தைந்து வயசு; நாற்பத்தைந்து வருஷங்களாக அன்ன ஆகாரமில்லாமல் வளர்ந்தவர் போன்ற தேகக்கட்டு; சில கறுப்பு மயிர்களும் உள்ள நரைத்த தலை; இரண்டு வாரங்களாக க்ஷவரம் செய்யாத முகவெட்டு...' (பக்.552).

○

என் எழுத்துகளை சிலர் வக்கிரம் என்று குற்றம் சாட்டுகிறபோது வக்கிரம் என்று எதுவுமே இல்லை என்று நினைத்து வந்திருக்கிறேன். ஆனால் புதுமைப் பித்தனின் சில கதைகளைப் படிக்கும்போது வக்கிரம் என்றால் இதுதான் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

'பாட்டியின் தீபாவளி' என்ற கதையில் பாட்டியின் பிள்ளை, மாட்டுப் பெண், குழந்தை எல்லோரையும் ஒரேயடியாகக் கொண்டு போய் விடுகிறது காலரா. கிழவி மட்டும் தனியாக இருக்கிறாள்.

'கோபாலபுரம்' என்ற கதையில் ஓர் எழுத்தாளன் தாமிரவருணிக் கரையில் இருக்கும் கோபாலபுரம் என்ற சிற்றூருக்குப் போகிறான். அங்கே லக்ஷ்மி என்ற பெண்ணைப் பார்க்கிறான். பண்ணை ஐயரின் மகள். அழகி. ஆனால் மணமானவள். அவள் மீது எழுத்தாளனுக்குக் கண். அவளை வர்ணித்து ஒரு கடிதம் எழுதுகிறான். நேரடியாக அவளுக்கு எழுதப் பட்டதல்ல. அவன் நாவலின் ஒரு பகுதி அக்கடிதம். நாயகியின் பெயரும் லக்ஷ்மி. கடிதம் ஐயர் கைகளுக்குக் கிடைத்து விடுகிறது. பண்ணை ஐயருக்கும் மாப்பிள்ளைக்கும் லக்ஷ்மி மீது சந்தேகம். லக்ஷ்மியின் பிரேதம் கிணற்றில் மிதக்கிறது.

போலீஸ் செய்தி போன்ற பத்திரிகைகளில் வரும் செய்தி அதே தரத் துடன் கதையாக எழுதப்பட்டுள்ளது. இரண்டுக்கும் உள்ள ஒரே வித்தியாசம் - பத்திரிகைச் செய்தியில் தண்ணீரில் ஊறி வீங்கிய பிணத்தின் அகோரமான புகைப்படம் பிரசுரமாகியிருக்கும். கதையில் அந்த ஆபாசம் இல்லை.

'ஞானக்குகை' என்ற மற்றொரு ஆபாசமான கதையில் மற்றொரு பிணம் விழுகிறது. சிற்றூரின் தலைமைக்காரத் தேவரின் மகன் - ஏக புத்திரன் - மன்மத ரூபன் - ஆனால் பிறவி ஊமை. பிறந்தவுடனேயே தாயார் காலி. பிறகு சித்திக் கொடுமை. ஊமை என்பது மட்டுமல்லாமல் மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளை. பிள்ளைக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கிறார் தேவர். கடைசியில் ஒரு விஷ ஊற்றில் தண்ணீர் குடித்துச் செத்துப் போகிறான் பையன். 'தலைமைக்காரத் தேவரின் குழந்தை கருகிக் கரிக்கட்டையாகச் சுனையில் மிதப்பதை மாட்டுக்காரப் பையன்கள் கண்டு ஊராருக்குத் தெரிவித்தார்கள்' என்று முடிகிறது கதை.

பையனின் மனைவி தாலியறுப்பது கதையில் உள்ளீடு. கதைக்கு இடையே குழந்தை சுனைநீரைக் குடித்து ஒரு தவ உருவத்தையும் தேவியையும் கண்டதாக ஒரு 'புருடா' வேறு.

'விநாயக சதுர்த்தி' என்ற கதையில் வரும் பையனும் 'ஞானக்குகை' பையனைப் போல் அற்பாயுசில்தான் செத்துப் போகிறான். அவனுக்குச் சுனைநீர் என்றால் இவனுக்குப் புதைகுழிச் சேறு. பிள்ளையாரை இருபது வருஷமாகச் சுற்றி வந்து மருத வேளாருக்கு ஒரு பிள்ளை பிறக்கிறது. பெயர் சுப்பிரமணியன். பதினாறு வயது ஆனதும் அவனுக்குக் கிறுக்குப் பிடிக்கிறது. அற்புதமான விநாயகர் விக்ரகம் செய்வான். ஆனால் விற்க மாட்டான். களிமண்ணாக்கி விடுவான். ஒருநாள் அப்படிச் செய்த விக்ரகத்தை அவன் மனைவி விற்று விடுகிறாள்.

அது தெரிந்தவுடன் 'இந்தத் தேவடியாத் தொழில் உனக்கு எதுக்கு?' என்று மனைவியைக் கேட்டு விட்டு வீட்டை விட்டு வெளியேறி கசத்தில் குதித்து விடுகிறான். வலை போட்டுத் தேடியும் உடம்பு அகப்படவில்லை.

'அப்புறம் என்ன தெரியுமா? அவன் (மருத வேளாளர்) குடும்பத்தில் பிறக்கிற பிள்ளைகளுக்கு எல்லாம் அவன் செத்த வயசில் இந்தப் பிரளை ஏற்படும்... கடைசியில் வெள்ளைக் களிமண்ணைத் தின்று உயிரை விடும்.

'சிற்றன்னை' என்ற கதையிலும் இதே வக்கிரம். சிற்றன்னை மற்று தகப்பனார் கொடுமையில் கொடூரமாக இறந்து போகிறான் ராஜா என்ற சிறுவன். மற்றொரு குழந்தை சாவுவரை சென்று மீள்கிறது.

இலக்கியத்தில் எழுதக் கூடாதது என்று எதுவும் இல்லை. வக்கிரம், குரூரம், துன்பம், காமம் என்று எதை வேண்டுமானாலும் எழுதலாம். Literature of sex, PornograpImagination, Literature of trash என்றெல்லாம் எவ்வளவோ இருக்கின்றன. ஒரு டீவி சீரியல் குப்பையைக் கூட இலக்கியத்தில் கொண்டு வரலாம். ஆனால் அதற்கான அழகியலை அந்தப் பிரதி உருவாக்கியாக வேண்டும்.

மார்க்கி தெ சாத் - குரூரத்தின் அழகியலை உருவாக்கினான் ழார் புத்தேல் Pornographic Imagination என்பதைத் தனது story of the eye என்ற நாவலில் நிகழ்த்திக் காட்டினார். அமெரிக்க வெகுஜன ஊடகக்

குப்பைகளைத் தனது பிரதிகளின் கச்சாப் பொருளாக்கி Literature of trash என்பதை உருவாக்கினார் டொனால்ட் பார்த்தெல்மே.

ஆனால் புதுமைப் பித்தனின் வக்கிரம், துன்பம், சோகம், குரூரம் எல்லாம் அழகியலாக உருவாகாமல் வெறும் ரிப்போர்ட்டாகவே நின்று விடுகின்றன. அவரது வக்கிரம் - போலீஸ் செய்தி வக்கிரம். அவரது துன்பம், சோகம் - தமிழ் சினிமா துன்பம், சோகம். அவரது குரூரம் - தமிழ் சினிமா வில்லனின் குரூரம் (பழைய அசோகன், புதிய பொன்னம்பலம்).

O

இனி புதுமைப் பித்தனின் எழுத்துகளில் தெரியும் ஜாதி வெறியையும், மதத்துவேஷத்தையும் காண்போம்.

'நியாயம்' என்ற கதை இப்படித் துவங்குகிறது... 'தேவ இறக்கம் நாடார் - அவருக்கு வல்லின இடையினங்களைப் பற்றி அபேதவாத கொள்கையோ தனது பெயரை அழுத்தமாகச் சொல்ல வேண்டும் என்ற ஆசையோ எதுவானாலும் அவர் எப்பொழுதாவது ஒரு தடவை இந்த 'டமிலில்' எழுதுவது போலவே எழுதி விடுவோம் - நல்ல கிறிஸ்தவர் மாஜிஸ்திரேட் பதவி வகிப்பவர்.'

'சில சமயம் பால்ராஜ் ஐயர் அவர்கள், ஓர் இருபதாம் நூற்றாண்டு இந்திய யோவான் ஸ்னானகனைப் போல், 'ஏ! விரியன் பாம்புக் குட்டிகளே! உங்கள் பாவங்களை மன்னிக்கும்படி, கர்த்தராகிய ஏசு கிறிஸ்துவின் வழியாக, அந்த மனுஷ குமாரன் வழியாக, பரமண்டலங்களில் இருக்கும் பிதாவை முழங்கால் படியிட்டு வேண்டிக் கொள்ளுங்கள். ஏ! விரியன் பாம்புக்குட்டிகளே!...' என்று உற்சாகமாக பிரசங்கிக்கும் பொழுது, தமது அருமை மேரிக்குஞ்சு முதல் அங்கு வந்திருக்கும் வெள்ளைக்கார பிஷப் உள்பட எல்லாம் இரட்டை நாக்குகளை நீட்டிக் கொண்டு நெளிவது போல் தோன்றும்.'

இந்த மாஜிஸ்திரேட் தேவ இறக்கம் நாடாரிடம் ஒரு குற்றவாளி கொண்டு வரப்படுகிறான்.

'யா! ஒம் பேரென்ன!'

'சொள்ளமுத்துப் புள்ளெ'

'சொள்ளமுத்து இண்ணு சொல்லுமேவே. புள்ளை என்ன புள்ளை! கூண்டுல ஏறுனாப்ப? நீரு புண்ணாப் போன குருதையெ வண்டிலே மாட்டலாமா? என்னா மரங்கணக்கா நீக்கிராவே; ஒமக்கு புத்தியில்லே? வாயில்லாச் சீவனை; ஊமையாவே! என்ன நிக்கிரா?'

காயம்பட்ட குதிரையைக் கட்டி ஓட்டியதற்காகத் தொழிலாளியான பிள்ளைக்கு ஐந்து ரூபாய் அபராதம் விதிக்கிறார் மாஜிஸ்திரேட். சுடலை முத்துப்பிள்ளை ஆவேசம் கொண்டவன் போல் ஓடி வந்து காலைப் பிடித்துக் கொண்டு, 'தரும தொரைகளே! இந்த ஒரு தடவை மன்னிக்கணும். புள்ளே குட்டி வவுத்துலே அடியாதிங்க...'

'பின்னாலே போ சாத்தானே!' என்று தேவ இறக்கம் நாடார் கர்ஜித்தார். கோர்ட் ஆர்டலீ, சுடலை முத்துப் பிள்ளையை இழுத்துக் கொண்டு வெளியே போனான்.

இரவு, தேவ இறக்கம் நாடார் படுத்துக் கொள்ளுமுன் முழங்கால் படியிட்டு ஜபம் செய்கிறார். 'பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே! உமது நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக... எங்கள் பாவங்களை மன்னியும். நாங்களும் எங்களிடம் கடன்பட்டவர்களுக்கும் மன்னிக்கிறோமே... ஆமென்!' கண்ணை விழித்து எழுந்தார். அந்த அஞ்ஞானி வண்டிக்காரனைப் பற்றி ஞாபகமேயில்லை!

இந்தக் கதைக்கு எந்தக் கட்டுடைப்பு மசிர் மட்டையும் தேவையில்லை என்று நினைக்கிறேன். மதத்துவேஷமும், வன்மமும், ஜாதி வெறியும் மிகவும் வெளிப்படை. இதை அ.மார்க்ஸ் தவிர வேறு யாரும் இதுவரை சுட்டிக் காட்டவில்லை என்றால் என்ன பொருள்? சுட்டிக் காட்டினாலும் ஜாதி என்ற குண்டாந்தடியைத் தூக்குகிறார்கள் என்று ஓலமிடுகிறார் வெங்கட்சாமிநாதன். 1934இலேயே ஜாதி என்ற குண்டாந்தடியைத் தூக்கி நாடார்களின் மண்டையில் போட்டு உடைத்திருக்கிறார் புதுமைப் பித்தன். 1934இல் நிலைமை எப்படி இருந்தது? வரலாறு என்ன?

இங்கே ஓர் இடைச் செருகல். புதுமைப் பித்தனைப் பற்றி அ.மார்க்ஸ் மதிப்பிடுவதற்கும் என் விமர்சனத்திற்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. 'புதுமைப் பித்தனின் எழுத்துகள் என்னை எப்போதுமே ஈர்த்து வந்துள்ளன' என்கிறார் அ.மார்க்ஸ். எனக்கோ புதுமைப் பித்தனின் எழுத்துகள் மீது காறித் துப்ப வேண்டும் போல் இருக்கிறது.

'சேத்தும் புதுமைப் பித்தனும்' என்ற கட்டுரையில் டிக்கன்ஸ், கோன்ராட், கம்யூ முதலிய ஐரோப்பிய எழுத்தாளர்களிடம் அவர்கள் அறிந்தும் அறியாமலும் வெளிப்பட்டுள்ள ஏகாதிபத்தியப் பார்வையை சேத் எவ்வாறு விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தியுள்ளார் (Culture and Imperialism என்ற நூலில் எட்வர்ட் சேத்) என்பதை விவரிக்கும் அ.மார்க்ஸ் அதேபோல் புதுமைப் பித்தனிடம் உள்ள ஒழுக்கவாதக் கூறுகள், மேற்சாதி மனப்பான்மை, ஆளும் கருத்தியலுக்கு ஏற்ப பிரதிகளை உருவாக்கியது போன்றவைகளை தான் விமர்சிப்பதாகக் கூறுகிறார்.

ஆனால் ஒரு வகையில் இவ்வகை விமர்சனம் புதுமைப் பித்தனை canonise செய்பவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. 'புதுமைப் பித்தன் ஒரு மேதை. அவரை அரசியல் ரீதியான வாசிப்புக்கு உட்படுத்துவதால் அவரது மேன்மை ஒன்றும் குறைந்து விடாது. ஆனானப்பட்ட ஷேக்ஸ்பியரின் எழுத்துகளிலேயே இனவாதக் கருத்துகள் இடம் பெற்றிருக்கவில்லையா என்ன?' என்கிற வாதத்தை வைத்து புதுமைப் பித்தனை இன்னும் உசரத்திற்கு தூக்கிக் கொண்டு போய் வருகிறார்கள் அவர்கள்!

'எட்வர்ட் செய்த் கட்டுடைத்த கோன்ராட், கம்யூ போன்றவர்களை ஒத்தவர் அல்ல புதுமைப் பித்தன். அவர் ஒரு mediocre எழுத்தாளர்களுக்கு இலக்கிய உலகில் இடமில்லை' என்பதே என்னுடைய விமர்சனம்.

'புதிய நந்தன்' என்று ஒரு கதை. ஜெமினி கதை இலாகாவுக்குப் போயிருக்க வேண்டிய கதை. ராமனாதன் மெர்ஜியா தோழர் நரசிங்கம் எஸ்.எஸ்.ஆர் கருப்பன் எஸ்.வி.அய்லையா. கருப்பன் மகள் விஜயகுமாரி.

பரமண்டலங்களிலிருக்கும் பிதாவாகிய கர்த்தரின் நீதிகளை ஆதனூரில் பரப்பும்படி ரெவரெண்ட் ஜான் ஐயர் ஒரு தடவை ஆதனூர் சேரிக்கு வந்தார். பாவாடையின் புத்தி விசேஷத்தைக் கண்டு, அவனைத் தம் மதத்தில் சேர்க்க அனுமதித்து விட்டால் பெரிய பண்ணை மாதிரி ஆக்கி விடுவதாக ஆசை காட்டினார். ஜான் ஐயர் வேளாளக் கிறிஸ்தவர் பையன் புத்தி விசேஷம் 10 கிளாஸ் படிக்கும் வரை பிரகாசித்தது. இன்னும் பிரகாசித்திருக்கும். ஆனால் பரமண்டலங்களிலிருக்கும் கர்த்தரின் விதி வேறு விதமாக இருந்தது.

பாவாடைக்கும் ஜான் ஐயரின் மகள் மேரி வில்லிக்கும் காதல் அரும்புகிறது. அதை அவன் ஜான் ஐயரிடம் கூற, அவருக்கு பெரிய கோபம் வந்து விடுகிறது.

'பறக்கழுதை வீட்டை விட்டு வெளியே இறங்கு' என்று கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளுகிறார் ஜான் ஐயர். சாமியாராகப் போய் விடலாம் என்று கத்தோலிக்க மதத்தைத் தழுவி மடத்தில் சேருகிறான் தானியேல் என்கிற பாவாடை. ஆனால் 'சுற்றி நடக்கும் அபத்தங்களும், சில சுவாமியார்களின் இயற்கைக்கு விரோதமான இச்சைகளும் மனதிற்குச் சற்றும் சாந்தி தராத இருப்புச் சட்டம் போன்ற கொள்கைகளும் அவன் மனத்தில் உலகக் கட்டுப்பாடே ஒரு பெரிய புரட்டு என்ற நம்பிக்கைகளைக் கிளப்பி விட்டு விடுகின்றன.

பிறகு சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபடுகிறான். இதற்கிடையில் பண்ணையார் மகன் ராமனாதன் பறைச்சியான (புதுமைப் பித்தனின் பிரயோகம்) கருப்பன் மகளைக் காதலிக்கிறான். பறையர் சமூகம் இதை ஒத்துக் கொள்ளவில்லை. புதுமைப் பித்தனுக்குக் கிடைக்கும் தீர்வு என்ன தெரியுமா? எல்லோரையும் கொன்று விடுவது. கருப்பன், ராமனாதன் மற்றும் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்த நரசிங்கம் மூவரையும் ரயில் தண்டவாளத்தில் போட்டுக் கொன்று விடுகிறார் புதுமைப் பித்தன். என்ன அருமையான தீர்வு!

இந்தக் கதையிலும் சரி மற்ற பல கதைகளிலும் சரி, கிறிஸ்தவப் பாதிரியார்கள் என்றாலே அவர்கள் ஹோமோ-செக்ஷுவல்கள்தான் என்ற முடிவில்தான் புதுமைப் பித்தன் எழுதுகிறார். ஹோமோ செக்ஷுவாலிட்டியையே ஏதோ 'இயற்கைக்கு விரோதமான' காரியமாகப் பார்க்கும் புதுமைப் பித்தன் அதை கிறிஸ்தவப் பாதிரியார்கள்தான்

இந்தியாவுக்கே இறக்குமதி செய்தது போல் எழுதியிருக்கிறார். அதற்கு முன்னால் இந்துச் சாமியார்களிடமும் இந்திய மக்களிடமும் ஹோமோ செக்ஷுவாலிட்டி இருந்ததில்லை என்பது அவரது முடிவு போலும்!

இதே போல் வேசி என்றால் அவள் ஏன் ஆங்கிலோ இந்தியப் பெண்ணாக இருக்க வேண்டும் என்பதும் எனக்குப் புரியவில்லை. 'ஒப்பந்தம்' என்ற கதையில் 'இவனுக்குப் பக்கத்தில் ஓர் ஆங்கிலோ இந்திய மாது - இள நங்கை - உட்கார்ந்திருந்தாள்... அந்த நங்கை ஐந்து ரூபாய்க்கு இரண்டு மணி நேரம் அவன் மனைவியாக இருக்கச் சம்மதித்தாள்' என்று எழுதுகிறார்.

மௌனியின் கதைகளிலும் விபச்சாரிகள் ஆங்கிலோ இந்தியப் பெண்களாகவே இருப்பது ஞாபகம் வருகிறது. வெகுஜன அபிப்பிராயத்தை அப்படியே நூற்றுக்கு நூறு பிரதிபலிக்கும் எழுத்தாளர்கள் வேறு எப்படி எழுத முடியும்?

'கொடுக்காப்புளி மரம்' என்ற கதையில் ஆரோக்கியமாதா தெரு என்று ஒரு தெரு. அத்தெருவைச் சேர்ந்தவர்கள் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். உண்மையில் அது தலித் கிறிஸ்தவர்கள் வாழும் ஒரு தெரு. புதுமைப் பித்தனின் வர்ணனையைப் பாருங்கள். 'பரிசுத்த ஆவி அவர்களுடைய ஆத்மாவைத் திருத்தியிருக்கலாம்; அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அந்த ஆத்மா சில வருஷங்கள் தங்கி இருப்பிடத்தைச் சுத்தப் படுத்தவில்லை என்று எனக்குத் தெரியும்'

தலித்துகள் என்றாலே அவர்கள் குடிகாரர்கள், அழுக்காக இருப்பவர்கள், சோம்பேறிகள் என்ற வர்ணனை அவர்களைப் பற்றிய எல்லா இடங்களிலும் வருகிறது. ஆனால் பிள்ளைமார்கள் மட்டும் 'கூழானாலும் குளித்துக் குடிப்பவர்கள்; கந்தையானாலும் கசக்கிக் கட்டுபவர்கள்!'

மாதா தெருவின் ஒரு மூலையில் ஜான் டென்வர் சுவாமிதாஸ் ஐயர் அவர்கள் வீடு. அவர் ஒரு புரோட்டஸ்டன்ட் கிறிஸ்தவர் பெரிய பணக்காரர். பிறகு கிறிஸ்தவர்களைப் பற்றிய வழக்கமான கிண்டல் தொடர்கிறது.

சுவாமிதாஸின் பங்களா வாசலில் ஒரு கொடுக்காப்புளி மரம். அதில் உதிர்ந்து விழும் பழங்களை சவரியாயிக்குக் குத்தகை விடுகிறார் அவர். காரணம்? 'ஒதுக்கப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சிறு குழந்தைகளுக்கும் இதை மலிவாகக் கிடைக்கும்படிச் செய்வதினால் கிறிஸ்துவின் பிரியத்தைச் சம்பாதிப்பதற்கு வழி என்பது அவர் நியாயம். அவர்கள்தான் மோக்ஷ சாம்ராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்கள். அவர்கள் இதற்காகத் திருட ஆரம்பித்துப் பாப மூட்டையைக் கட்டிக் கொள்ளாதபடி இவர் இந்தக் கைங்கர்யம் செய்து வருகிறார்.'

அந்தத் தெருவில் பெர்னான்டஸ் என்ற பிச்சைக்காரன். அவன் மனைவி இறந்து விட்டாள். பெண் குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இவனுக்கு.

ஒருநாள் சுவாமிதாஸ் வீட்டுக்குப் பிச்சையெடுக்க வருகிறான் பெர்னான்டஸ். சுவாமிதாஸ் சில்லறை எடுக்க வீட்டின் உள்ளே செல்கிறார். கூட வந்த குழந்தை தரையில் கிடக்கும் கொடுக்காப்புளிப் பழங்களைப் பொறுக்கி கிழிந்த பாவாடையில் நிரப்புகிறது. அதைப் பார்த்துவிட்ட சுவாமிதாஸ் 'போடு கீழே! போடு கீழே!' என்று கத்திக் கொண்டு வெளியே வந்தார். குழந்தை சிரித்துக் கொண்டு ஒரு பழத்தை வாயில் வைத்தது. அவ்வளவுதான். சுவாமிதாஸ் கையிலிருந்த தடிக்கம்பை எறிந்தார். பழத்துடன் குழந்தையின் ஆவியையும் பறித்துக் கொண்டு சற்றுத் தூரத்தில் போய் விழுந்தது. திக் பிரமை கொண்டவன் போல் நின்ற பெர்னான்டஸ் திடீரென்று வெறி பிடித்தவன் போல் ஓடினான். கீழே கிடந்த தடியை எடுத்தான்.

'போ நரகத்திற்கு, சைத்தானே!' என்று கிழவர் சுவாமிதாஸ் மண்டையில் அடித்தான். கிழவரும் குழந்தையைத் தொடர்ந்தார். பெர்னான்டஸ் கொலைகாரன் என்று கைதாகிறான். பிறகு அவனும் செத்துப் போகிறான்.

'கடவுளின் பிரதிநிதி' என்ற கதையில் பிராமணர்களைப் பற்றியும் தலித்துகளைப் பற்றியும் புதுமைப் பித்தனின் வர்ணனையைப் பாருங்கள்: 'இந்த அக்ரகாரப் பிச்சைக்காரர்களுக்கு அடிமைப் பிச்சைக்காரர்கள் (அதாவது தலித்துகள்) இரு ஜாதியாருடைய நிலைமையும் ஒன்றுதான். ஒருவர் சேஷப்படாது பட்டினியிருந்தால் இன்னொருவன் அசுத்தத்துடன் பட்டினி யிருக்கிறான். சேரிப் பட்டினிகளுக்கு அக்ரகாரப் பட்டினிகளின் மீது பரமபக்தி.'

(பார்ப்பானும் பறையனும் ஒன்று என்று எழுதுகிற ஒருவன் ஜாதி வெறியன் இல்லையா? புதுமைப் பித்தனுக்கும் முன்னால் வாழ்ந்த பாரதி தலித்துகளின் நிலையைப் பார்த்து ரத்தக் கண்ணீர் வடித்திருக்கிறானே? அவன் கலைஞனா? புதுமைப் பித்தன் கலைஞனா?)

கதை இவ்வாறு தொடர்கிறது...

'இம்மாதிரி சாந்தி குடிகொண்ட வாழ்க்கையிலே சூறைக்காற்று போல் புகுந்தது ஹரிஜன இயக்கம்.'

'அது ஊரையே ஒரு குலுக்கு குலுக்கியது.'

'திரு சங்கர் சிற்றூரில் தமது தொண்டைப் பிரச்சாரம் செய்ய வந்தார். அவரும் ஜாதியில் பிராமணர். தியாகம், சிறை என்ற அக்னிகளால் புனித மாக்கப்பட்டவர். சலியாது உழைப்பவர். உண்மையை ஒளிவு மறை வில்லாது போட்டு அடித்து உடைப்பவர்.'

ஹரிஜனங்களைக் கோவில்களுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று சொன்ன சங்கரை சேரிப் பறையர்களே உதைத்துப் போட்டு விடுகிறார்கள். சுப்பு சாஸ்திரிகள் என்பவர் சங்கரைத் தேடி, மேற்குப்புறம் வாய்க்கால்

பக்கமாக மயங்கிக் கிடப்பதைக் கண்டு பதைபதைத்து வாய்க்காலில் இருந்து ஜலம் எடுத்து வந்து தெளித்து மூர்ச்சை தெளிவித்து போஜனம் கொடுக்கிறார்.

கதையில் வரும் சங்கர் ஒரு பிராமணன் என்பதற்கு புதுமைப் பித்தன் என்ன செய்ய முடியும்? அந்தக் கால நிலைமை அப்படி! இதுவும் 1934இல் எழுதப்பட்ட கதை. முப்பதுகளில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளை வாசகர்கள் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் புதுமைப் பித்தன் கதைகளில் உள்ள பொதுத் தன்மைகளையும் நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.

சாந்தி குடிகொண்டிருந்த கிராமத்தில் சூறைக் காற்றாய்ப் புகும் ஹரிஜன இயக்கம் அந்தப் பொதுத் தன்மைகளில் ஒன்று. தீண்டாமை என்கிற கொடூரமான வழக்கம் இன்றைக்கும் நடைமுறையில் இருக்கும்போது இவ்வளவு கேவலமாக உலகத்தில் ஓர் எழுத்தாளன் எழுதுவானா? இதே விஷயத்தைத்தான் 'எப்போதும் முடிவிலே இன்பம்' என்ற கதையிலும் முயல், நரி, நாய் என்று குறியீடாக வைத்து எழுதுகிறார்.

சாந்தி குடிகொண்டிருந்த ஒரு பங்களாவில் வேதம் படித்த முயல் ஒன்று வாழ்கிறது. அதற்குக் கறுப்புப் பறை நாய் ஒன்று அடிமை வேலை செய்து பிழைத்து வருகிறது. முயல் மிகவும் ஆசாரம். நாலு வேதம் ஆறு சாஸ்திரம் மற்றும் தர்க்கம் வியாகரணம் எல்லாம் படித்த முயல். இந்த முயலைப் பிடிக்க ஒரு கறுப்பு நாய் வளர்க்கப்படுகிறது. தினசரி அதற்கு மாமிசமும் எலும்புத் துண்டுகளும் கலெக்டர் போடும் மிச்சத் தீனியும் கிடைக்கிறது. பறை நாய்க்கு இது ஒரு சௌகர்யமான உத்தியோகம்.

இப்படி அமைதியாக இருந்த அந்த பங்களாவில் ஒரு நரி வந்து சேர்ந்ததும் எல்லாம் கெட்டுப் போகிறது. அந்த நரி யார் தெரியுமா? ஆலய நுழைவுப் போராட்டம், ஹரிஜன இயக்கம் என்றெல்லாம் நடத்து கிறவர்கள், கிறிஸ்தவர்கள், புதுமை விரும்பிகள்! நரியைக் கலெக்டர் சுட்டுக் கொன்று விடுகிறார். கறுப்புப் பறை நாய் துரத்தப்பட்டு விடுகிறது.

'இதற்கு முன் பஞ்சவாடி மாதிரி இருந்த இடம்; குட்டிச் சுவராகப் போச்சு' என்று சொல்லும் முயலினியும் முயலும் சர்க்கார் தோட்டத்தை நோக்கிச் செல்கின்றன.'

எப்போதும் முடிவிலே இன்பம்!

இப்படி ஒரு கதை எழுதியவனை - பறை நாய் பறை நாய் என்று எழுதுகிறவனை - மாறு கால் மாறு கை வாங்கினால் என்ன தப்பு?

'கோபாலய்யங்காரின் மனைவி' என்று ஒரு சிறுகதை. பாரதி தனது சந்திரிகை என்ற நாவலில் கோபாலய்யங்காருக்கும் வீரேசலிங்கம் பந்துலு வீட்டுப் பணிப் பெண்ணாகிய மீனாட்சிக்கும் பிரம்ம சமாஜத்தில் நடந்த கலப்பு மணத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட திருமணம் நமது சைவப் பிள்ளைவாள் எழுத்தாளருக்கு ஆகவில்லை. சைவமும்

அசைவமும் எப்படி ஒன்றுசேர முடியும், ஒன்று சேர்ந்தாலும் எப்படி ஒத்துப் போகும் என்று எழுத்தாளப் பிள்ளைவாளுக்கு ஒரே சம்சயம். கோபாலய்யங்கார் எப்படி புளித்த குழம்பையும் குழைந்த சோற்றையும் உண்ணச் சம்மதிப்பான்? பாரதியின் கதை புதுமைப் பித்தனிடம் இப்போது என்ன பாடுபடுகிறது பாருங்கள்...

டெப்டி கலெக்டர் கோபாலய்யங்கார் இடைச்சி மீனாட்சியைக் கல்யாணம் செய்து கொள்கிறார். கோபாலய்யங்கார் குடிகாரர்தான். ஆனால் மாமிசப் பட்சிணி அல்ல.

புதுமைப் பித்தனின் அத்தனை எழுத்துகளிலும் 'மாமிசம் உண்பவன் மனிதனே அல்ல; அவன் ஒரு மிருகம்' என்கிற சைவ வெள்ளாள ஜாதீயப் பார்வை விரவிக் கிடக்கிறது. உணவு விஷயத்தில் கூட ஜனநாயகப் பார்வை இல்லாத நாய்கள் இங்கே எழுத்தாளன்களாக இருக்கிறான்கள்.

மீனாட்சி இடைச்சி அல்லவா? அவளுக்குக் காதலிக்கக் கூடத் தெரியவில்லை.

'அவளை ஆரத் தழுவித் தமது மடிமீதிருத்தி முத்தங்களைச் சொரிந்தார். மீனாள் செயலற்ற பாவை போல் இடங்கொடுத்தாள்...'

பிறகு வழக்கம்போல் - அசைவப் பிரச்சினை குறுக்கிடுகிறது. லவங்கப் பட்டை, பெருஞ்சீரகம் இத்யாதியெல்லாம் போட்டுச் செய்த சமையல் ஐயங்காருக்குக் குமட்டலை ஏற்படுத்துகிறது. 'குடலைப் பிடுங்கியது போல் ஓங்கரித்து வாந்தியெடுக்கிறார்.' சாப்பாட்டுக்கு என்று பரிசாரகர் சுப்பு அய்யங்கார் அமர்த்தப்படுகிறார். மீனாவுக்குக் காதலிக்கவே தெரிய வில்லை. முத்தம் கொடுக்கக் கூடத் தெரியவில்லை. 'எங்க ஜாதியிலே அது ஒண்ணும் கெடையாது இப்போ' என்கிறாள்.

'கோபாலய்யங்கார் ஒரு பொம்மைக்குக் காதலுயிர் எழுப்பப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார். இதில் தோல்வி இயற்கை யாகையால் மது என்ற மோகனாங்கியின் காதல் அதிகமாக வளர ஆரம்பித்தது.'

மீனாவுக்கு ஐயர் சமையல் வெறுப்பாக இருக்கிறது. ஆபீஸ் பியூன் கோபாலக் கோனாரிடம் மாமிச உணவு வாங்கிச் சாப்பிட்டு, அதையே ஐயங்காருக்கும் - அவர் போதையில் இருக்கும்போது - கொடுக்கிறாள். இவ்வாறாக, கோபாலய்யங்காரும் மாமிசப் பட்சிணியாகிறார்.

'இரண்டு வருஷ காலம் சிட்டாகப் பறக்கிறது. மீனாளின் துணைக் கருவியாக கோபாலய்யங்காரின் மேல்நாட்டுச் சரக்குகள் உபயோகிக்கப் பட்டன.

தம்பதிகள் இருவரும் அதில் ஈடுபட்டதினால் மூப்பு என்பது வயதைக் கவனியாமலே வந்தது. மீனாளின் அழகு மறைந்து அவள் ஸ்தூல சரீரியானாள். கோபாலய்யங்கார் தலை நரைத்து வழுக்கை விழுந்து

கிழப்பருவம் எய்தினார். இதை மறப்பதற்குக் குடி. ஆபீஸிற்குப் போகும் முன் தைரியம் கொடுக்கக் குடி. வந்ததும் மீனாளின் சௌந்தர்யத்தை மறக்கக் குடி.

இப்பொழுது அவர்கள் தென்னாற்காடு ஜில்லாவில் இருக்கிறார்கள். இருவருக்கும் பங்களா ஊருக்கு வெளியிலே. இரவு பத்து மணிக்கு அப்பக்கம் யாராவது போனால் கலெக்டர் தம்பதிகளின் சல்லாப வார்த்தைகளைக் கேட்கலாம்.

'ஏ! பாப்பான்!' என்று மீனாள் கொஞ்சுவாள்.

'என்னடி எடச்சிறுக்கி!' என்று கோபாலய்யங்கார் காதலுரை பகருவார்.

இருவரும் சேர்ந்து தெம்மாங்கு பாடுவார்கள். மீனாளின் 'டிரியோ, டிரியோ' பாட்டில் கோபாலய்யங்காருக்கு அந்த ஸ்தாயிகளில் - பிரிய மதிகம்.'

'பாரதியைப் புதுமைப் பித்தன் குப்பியடித்து விட்டான்' என்பதைத் தவிர எனக்கு வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

அடுத்து 'புதிய கூண்டு' என்ற கதைக்கு வருவோம். மீண்டும் ஒரு மோசமான, படு மட்டரகமான, தமிழ் சினிமாத்தனமான கதை என்று சொன்னால் மட்டும் போதாது. இந்துத்துவத்தை ஃபாசிஸ வெறியோடு நிலைநாட்டுகிற ஒரு கதை.

'அகன்ற மார்பில் யக்ஞோப வீதம் போல் ஆற்றில் நீர் பெயருக்கு மட்டிலும் ஓடிக் கொண்டிருந்தது' என்று ஓர் உதாரணத்தோடு கதை துவங்குகிறது.

ஆதிக்கச் சாதிப் பயல்களுக்குத்தான் இப்படிப்பட்ட உதாரணங்கள் வரும். சரி, கதைக்கு வருவோம்.

கிட்டு, அம்பி என்று இரண்டு சகோதரர்கள். கிட்டு உணர்ச்சி வசப்படு கிறவன். இளையவன் திடசித்தம். எதையும் அறிவுத் தராசில் போட்டு நிறுக்கும் உறுதி படைத்தவன். அம்மா மீனாட்சியம்மாள் விதவை. இட்லி, முறுக்கு சுட்டு விற்று பிள்ளைகளைப் படிக்க வைக்கிறாள். (எல்லாக் கதையிலும் இந்தத் தரித்திரம்தான். வேறு ஒன்றும் புதிது இல்லை). கிட்டு ஓர் உதவாக்கரைப் பயல் என்பதற்குக் கதையில் சிற்சில சம்பவங்கள். அம்பியோ அத்வானி மாதிரி. திடசித்தம்.

பாளையங்கோட்டைக் கல்லூரி ரோமன் கத்தோலிக்கருடையது. அங்கே ஞானாதிக்கம் என்ற சாமியாருக்குச் சகோதரர்கள் மீது ஒரு கண். (புதுமைப் பித்தனுக்கு நன்றி. ஹோமோசெக்ஸ் பிரச்சினையாக எழுதவில்லை... 'கண்' என்றது மதம் மாற்றுவதற்காக.)

ஸ்ரீஜான் சகரியாஸ் நாடாரின் முன்னோர் எப்படி புரோட்டஸ்டன்ட் மதத்தைத் தழுவினார்கள் என்பதற்கு ஒரு கிண்டல், 'இந்து மதம் மனிதர் களையெல்லாம் சமமாக நடத்தியது. கிறிஸ்தவம்தான் இந்தியாவைக்

கெடுத்தது' என்கிற ரீதியில் வாயிலும் வயிற்றிலுமாக அடித்துக் கொண்டு சில வர்ணனைகள்...

சகரியாஸ் நாடார் ஒரு தலைமையாசிரியர். 'தமக்குக் கர்த்தருடைய கருணை கிடைத்த போதெல்லாம் அஞ்ஞானிகளுக்கு விழிப்பைக் கொடுப்பதில் முனைந்து வந்தார்.'

அவருக்கு ஒரு புதல்வி. லில்லி அற்புதம் ஜயலக்ஷ்மி. ஜயாவுக்கும் கிட்டுவுக்கும் காதல் பிறக்கிறது. எல்லாம் கேவலமான தமிழ் சினிமாப் பாணிதான். சந்தேகிப்பவர்கள் பக்கம் 344, 345ம் பக்கம் பார்க்க. கிட்டு மதம் மாறுகிறான். திருமணம் நடக்கிறது. ஞானப்பிரகாசம் சாமியாருக்குப் பெரும் தோல்வி. தம் மதத்திற்கு மாறாமல் பாவி புரோட்டஸ்டன்ட் மதத்தைத் தழுவி விட்டானே என்று. இதைவிட அவன் இந்து மதத்திலேயே அஞ்ஞானியாகக் கிடந்து செத்திருக்கலாம்.

மீண்டும் சைவ-அசைவப் பிரச்சினை. கோபாலய்யங்கார் - மீனாள் அளவுக்குப் போகவில்லை. ஜயா மாமிச உணவு தொடுவதில்லை என்று வீரசபதம் எடுக்கிறாள்.

அம்பியும் மீனாக்ஷியம்மாளும் நடுத்தெருவில். ஊராரும் அவர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்து விடுகிறார்கள். மீனாக்ஷியம்மாள் பசி, பட்டினி, புத்திர சோகம் இவற்றால் சாகிறாள்.

கடைசி சீன்:

தாய் செத்துக் கிடக்க கிட்டுவும் அம்பியும் கத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஜயா 'இந்த இடத்திலா சண்டை? நீங்களும் ஆண் பிள்ளைகளா?' என்று சொல்லி ஓடிச் சென்று மீனாக்ஷியம்மாளைத் தன் மடி மீது எடுத்துக் கிடத்திக் கொண்டு கதறுகிறாள்.

நமக்கு மயிர்க்கூச்செறிகிறது. 'நீ ஒரு ஹிந்துப் பெண்' என்கிறான் அம்பி.

இக்கதையைப் படித்ததும், 'இந்த எழுத்தாளனிடம் மட்டும் ஆயுதத்தைக் கொடுத்திருந்தால் கிறிஸ்தவர்களை அடித்தே கொன்றிருப்பான் போலிருக்கிறதே' என்ற நினைவு ஓடியது.

இந்த மாதிரி ஆட்கள்தான் தேவாலயங்களைக் கொளுத்துகிறார்கள், பாதிரியாரையும் அவர் குழந்தைகளையும் உயிரோடு எரிக்கிறார்கள், கன்னிகாஸ்திரீகளை மூத்திரம் குடிக்கப் பண்ணுகிறார்கள். கன்னிகாஸ்திரீகளை வன்புணர்ச்சி செய்கிறார்கள்.

'அவதாரம்' என்று ஒரு கதை. ஊரைப் பற்றி வர்ணிக்கும்போதே தலித்துகளைப் பற்றி 'பட்டினிப் பட்டாளங்கள்' என்று ஒரு நக்கல். ஊரில் கிருஷ்ணக் கோனார் என்று ஒருவர். அவருக்கு ஒரு குழந்தை. மனைவி காலி. கால்நடைகளுக்கோ கோமாரி நோய். ஆனால் பையனோ புத்திசாலி. அதனால் அவனைச் சாமியார் பள்ளிக் கூடத்தில் சேர்க்கிறார். உடனே புதுமைப் பித்தனிடமிருந்து கிறிஸ்தவ மதத்துவேஷம் விஷ வார்த்தைகளாய்க் கிளம்புகிறது.

'எம்மதத்தவரானாலும் துறவிகளாக வருகிறவர்களுக்கு நம்மவர் செலுத்தும் மரியாதை சிற்சில இடங்களில் தவறான மதிப்பும் அந்தஸ்தும் கொடுத்து விடுகிறது. இத்துடன் ஓரளவு தர்மச் செலவு செய்யும் சேவையும் சேர்ந்து கொண்டால் அந்தஸ்து வளர்ச்சிக்கு அளவே கிடையாது. ஏகாதிபத்தியத்திற்கே பிரத்யேகமான வர்ணம் என்ற வெள்ளைத் தோலும் சேர்ந்து கொண்டாலோ கேட்க வேண்டியதே இல்லை. இந்த மூன்று அந்தஸ்தும் கொண்ட பிறமத மிஷனரிப் பள்ளிக் கூடங்கள் தர்மம் செய்யும் ஏகாதிபத்தியமாக, ஏகாதிபத்தியம் செய்யும் தர்மஸ்தாபனமாக இரண்டு நோக்கங்களையும் கதம்பமாக்கி இரண்டையும் ஒருங்கே குலைத்து வருகிறது.'

'இப்படிப்பட்ட ஸ்தாபனம் ஒன்றில் ஸ்தல சர்வாதிகாரி சர்ச்.ஞானாந்தச் சாமியார். இவர் ஸ்தல கிறிஸ்தவர்களின் ஒரு வகுப்பாருக்கு மோட்சத்தில் போட்டுக் கொடுக்கும் வேலையுள்ள ஸ்தல ஹைஸ்கூலின் தலைமை நிர்வாகத்தை ஏற்று...'

'கிறிஸ்துவின் பரித்தியாகம் இவன் மனசைச் சிறிது கவர்ந்தது என்றாலும் கிறிஸ்து முனியின் தத்துவம் பூண்டிருந்தும் அமல் மிகுந்த சேவை அவனுக்கு அவரது தத்துவத்தின் மேல் வெறுப்பையே ஊட்டியது. மேலும் புண்ணைக் காட்டி பிச்சை வாங்குவதற்கும் கிறிஸ்துவின் புண்கள் வழியாக அவர்களும் மோக்ஷ சாம்ராஜ்யத்தை நம்பும்படித் தன் வயிற்றுப் பசியை உபயோகிப்பதற்கும் பிரமாத வித்தியாசம் ஒன்றுமில்லை எனவே இவன் நினைத்து வந்தான்.'

இந்த இடத்தில் கன்னியாகுமரியில் என் கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும்போது உணர்ச்சி வசப்பட்டுத் தமிழில் 'ங்...' என்று துவங்கும் ஒரே சொல்லான அந்த வசைச் சொல்லைப் பயன்படுத்தி 'ங்... இப்படியெல்லாம் கதை எழுதுகிறான்கள்...' என்று சொன்னேன்.

உடனே புதுமைப் பித்தன் ரசிகர்களுக்குக் கோபம் ஆசனவாய் வழியே பொத்துக் கொண்டு வந்து விட்டது. அது எப்படி புதுமைப் பித்தனை அவ்வாறு திட்டலாம்? அப்படியானால் 'கறுப்புப் பறை நாய்' என்று எழுதுகிற ஒருத்தனை என்ன சொல்லித் திட்டலாம் என்று தயவு செய்து பு.பி. ரசிகர்கள் சொல்ல வேண்டும்.

தவிர, இயேசு கிறிஸ்து என்ற பெயர் - தியாகம், அன்பு, மனித நேயம், துன்பம், துயரம், தனிமை போன்றவற்றின் குறியீடு. கஸான்ஸாகிஸ் போன்ற இலக்கிய மேதைகளுக்குக் கிறிஸ்துவின் வாழ்வுதான் அவர்களது எழுத்தின் அடிப்படை உந்துதலாக இருந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் காவியம் என்று சொல்லத்தக்க Zorba the Greek என்ற தனது நாவலில் 'மனித வரலாற்றில் என்னைக் கவர்ந்த மூன்று பெயர்களாக புத்தன், இயேசு, நீட்ஷே' என்று சொல்லுவார் கஸான்ஸாகிஸ்.

எழுத்தின் அடிப்படையே மனிதநேயம்தான். மனிதநேயத்தின் ஒரு குறியீடு கிறிஸ்து. ஆக, ஓர் எழுத்தாளனால் கிறிஸ்துவின் தியாகத்தின் அடையாளங்களைப் பார்த்து 'புண்' என்று சொல்ல முடியுமா?

அடுத்து வருகிறது 'ஹோமோ செக்ஸ்' பிரச்சினை. 'இசக்கிமுத்துக்கு ஏழாவது வகுப்பில் ஏற்பட்ட உபாத்தியாயர் சர்ச்.பெர்னான்டஸ் சாமியார் விபரீத ஆசையைக் கொண்டவர். பையனுடைய அழகு அவருடைய நேர்மையற்ற காம விகாரத்திற்கு இலக்காகியது. பையன் திடுக்கிட்டான்...' பிறகு பள்ளியிலிருந்து வெளியேறுகிறான் பையன்.

இசக்கிமுத்துவுக்குக் கல்யாணமாகிறது. லெட்சுமி என்ற பெண். அவளோ இன்னொருத்தனோடு படுத்து விடுகிறாள். இதற்கு மேல் கதையை நீங்களே யூகித்து விடலாம். மனைவி சோரம் போனால் புதுமைப் பித்தன் உருவாக்கும் கணவன் என்ன செய்வான்? சாமியாராகி இமயமலை செல்வான். அதையே இசக்கிமுத்துவும் செய்கிறான். என்ன ஒரு புரிதல்! அப்படியானால் பிரம்மம், அது, இது என்பதெல்லாம் பெண்ணின் ஜாமானின் தூ(ய்)மையைப் பொறுத்ததுதானா? இந்திய ஆன்மீகத்துக்கு என்னதொரு விளக்கம்! மெய் சிலிர்க்கிறது.

○

முடிவாக, புதுமைப் பித்தனிடம் ரசிக்கக் கூடிய இடம் எதுவுமே இல்லையா என்று கேட்டால் ஒரே ஓர் இடம் இருக்கிறது என்று சொல்லுவேன்.

'சாமியாரின் வலது பக்கத்தில் ஒரு சின்னக் குழந்தை. நான்கு வயசுக் குழந்தை. பாவாடை முந்தானையில் சீடை மூட்டைக் கட்டிக் கொண்டு படித்துறையில் உட்கார்ந்து காலைத் தண்ணீரில் விட்டு ஆட்டிக் கொண்டிருக்கிறது. சின்னக் கால்காப்புகள் தண்ணீரிலிருந்து வெளிவரும் பொழுது ஓய்ந்து போன சூரிய கிரணம் அதன் மேல் கண் சிமிட்டும். அடுத்த நிமிஷம் சூரியனுக்கு ஏமாற்றம். குழந்தையின் கால்கள் தண்ணீருக்குள் சென்றுவிடும். சூரியனாக இருந்தால் என்ன? குழந்தையின் பாதத் தூளிக்குத் தவம் கிடந்துதான் ஆக வேண்டும்.'

அடுத்து சில கதைகள். காலனும் கிழவியும், மனக்குகை ஓவியங்கள். ஆனால் இப்படி ஒன்றிரண்டு கதைகள் தமிழில் எழுதியிருக்கிற அத்தனை பேரிடமிருந்தும் தேறக் கூடியவைதான் என்பதால் புதுமைப் பித்தன் போன்ற mediocre எழுத்தாளர்களின் பெயர்கள் தமிழ் இலக்கியத்திலிருந்து முற்றாக அழிக்கப்பட வேண்டும்.

○

'சாப விமோசனம்' என்ற கதையைத் தமிழின் சிகர சாதனை என்கிறார்கள். கவனமாக வாசித்தேன். இதுவும் புதுமைப் பித்தனின் மற்றொரு குப்பை. ஐம்பது ஆண்டுகளிலேயே காலாவதியாகிவிட்ட கதை இது. Purity of CUNT என்பது இன்று அர்த்தமற்றுப் போய் விட்டது. கற்பு என்ற கருத்தாக்கத்தின் முரண்பாடுகளைப் பற்றிப் பேசுகிறது இக்கதை. ஆனால் இன்றைய வாழ்வோ அந்தக் கருத்தாக்கத்தையே நிராகரித்து விட்டது. எனவே கதையும் அர்த்தமற்ற குப்பையாகி விடுகிறது. ஆனால் 2500 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கிரேக்கக் காவியங்கள் இன்றைக்கும் மனி

வாழ்வோடு உறவுள்ளவையாக இருப்பதன் காரணம் என்ன? (உ.ம். சிஸிஃபஸ், ஸோஃபோக்ளிஸ் எழுதிய மெடீயா என்ற நாடகம், ஈடிபஸ்...) என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

○

என்னுடைய கருத்துகள் பலருக்கு முகச்சுளிப்பை ஏற்படுத்தலாம். ஆனால் புதுமைப் பித்தனை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து உலக இலக்கிய அரங்கிற்கு எடுத்துச் சென்றால் அங்கே அந்த எழுத்து குப்பைக் கூடைக்கே செல்லும் என்பதில் எனக்குச் சிறிதளவும் சந்தேகமில்லை. அப்படி ஏற்கனவே இரண்டு லோக்கல் வஸ்தாதுகள் உலக இலக்கிய மேடைக்குப் போய் செவுனியில் அறை வாங்கிக் கொண்டு குற்றுயிராய் விழுந்து கிடக்கிறார்கள்.

ஏற்கனவே நான் ஒரு விவாதத்தில் 'புதுமைப் பித்தனிடம் பின் நவீனத்துவக் கூறுகளைக் காண முடியும்' என்று எழுதியிருக்கிறேன். ஆனால் இப்போது அவரது ஒட்டு மொத்த எழுத்துகளைப் படிக்கும்போது என் முந்தைய கருத்து மிகவும் தவறானது என்றே முடிவுக்கு வருகிறேன்.

ஓர் எழுத்தாளர் தனது காலத்தைத் தாண்டி மிகுந்த தொலைநோக்குப் பார்வை கொண்டவராக இருக்க வேண்டும். தனது குடு

ம்பத்தை, ஊரை, சாதியை, மதத்தை, தேசத்தை, தனது மொழியையெல்லாம் தாண்டியவராக இருக்க வேண்டும். கிட்டத்தட்ட ஓர் எழுத்தாளரை துறவி என்றே சொல்ல முடியும். இந்தவிதத்தில் பெரியார்தான் ஒரு துறவியாக இருந்திருக்கிறார். அவரே இதைப் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டும் இருக்கிறார்.

புதுமைப் பித்தனைப் படித்து விட்டு அதே சமயத்தில் பெரியாரையும் படித்தேன். புதுமைப் பித்தன் பொதுஜனத்தை விட பத்தாம்பசலியாகவும் பெரியார் ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய தார்மீக ஆவேசத்துடனும் காலத்தை மிஞ்சிய புரட்சிகர சிந்தனைகளுடனும் இருப்பதைக் காண முடிந்தது.

உதாரணமாக, தீண்டாமை பற்றிய இருவரின் கருத்துகளையும் வாசகர்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எந்தக் காலக்கட்டத்தில் புதுமைப் பித்தன் தன்னுடைய சாதிவெறி பிடித்த கதைகளை எழுதியிருக்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். காந்தியிடம் சென்று இந்து மதத்தை அழித்துவிட வேண்டும் என்று விவாதித்திருக்கிறார் பெரியார். ஆனால் புதுமைப் பித்தன் கைகளில் சூலாயுதம் மின்னுகிறது.

பார்ப்பனர் தெருக்களில் தலித்துகள் நடப்பதற்கே தடை விதிக்கப் பட்டிருந்த காலம் அது. இதுபற்றி சட்டசபையில் நரசிம்மாச்சார்லு என்ற பார்ப்பன உறுப்பினர் 'இன்று சாலையில் நடக்க உரிமை வேண்டும் என்பார்கள். நாளை ஆலயப் பிரவேச உரிமை கேட்பார்கள். பிறகு கலப்பு

மணம் வேண்டும் என்பார்கள். அதனால் கலவரம் ஏற்படும்' என்று பேசியுள்ளார். இது பற்றிய விபரம் 'குடி அரசு' 27-12-1925 தேதியிட்ட இதழில் உள்ளது.

சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநில மாநாடு செங்கல்பட்டில் கூடி இயற்றிய தீர்மானங்களில் சில:

சிற்றுண்டிச் சாலைகளில் சாதி வித்தியாசம்

அ. வகுப்பு பேதம் காண்பிக்கப்படுகிற எல்லா ஹோட்டல்களையும் காப்பிக் கிளப்புகளையும் இந்த மாநாடு கண்டிப்பதுடன் இவ்வித விஷமத்தனமான பேதங்களுள்ள ஹோட்டல்களுக்கும் காப்பிக் கிளப்புகளுக்கும் அவ்விடத்திலுள்ள அதிகாரிகள் லைசன்ஸ் கொடுக்கக் கூடாதென்றும் கேட்டுக் கொள்கிறது.

ஆ. இரயில்வே அதிகாரிகள் தங்கள் வசத்திலும் மேற்பார்வையிலும் உள்ள சாப்பாட்டுச் சாலைகளில் சிற்றுண்டிச் சாலைகளிலும் ஜாதி, மதம், வகுப்பு, நிறம் முதலியவற்றைப் பொறுத்து எவ்வகையிலும் வேற்றுமையாகப் பிரயாணிகளைப் பாராட்டாமலிருப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனே கைக்கொள்ளுமாறும் இவ்விழிவினை, வேற்றுமையை ஒழிக்க ரயில்வே ஆலோசனைக் கமிட்டியினர்களும் இந்திய சட்டசபை மெம்பர்களும் ஏற்பாடு செய்யுமாறும் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

- குடி அரசு - 24-02-1929

இதுதான் புதுமைப் பித்தனின் 'பறை நாய்' கதைகள் வெளிவந்தபோது இருந்த சமூகச் சூழல். இந்தச் சூழலில் வைத்து அக்கதைகளைப் படித்துப் பாருங்கள்.

'நவீன தமிழ் இலக்கியத்தின் ஆரம்பக் கட்டம்' என்றெல்லாம் பசப்பி மன்னிப்புக் கோர முடியாது. ஏனென்றால் இதே காலகட்டத்தில் எழுதியவர்தான் சதாத் ஹாஸன் மான்டோ. இந்திய உபகண்டத்திலிருந்து உலக இலக்கிய அரங்கிற்குச் சென்ற எழுத்துகளில் முதன்மையானதாகக் கொண்டாடப்படுகிறது மான்டோவின் எழுத்து. புதுமைப் பித்தனின் சிறுகதைகளைப் படித்துவிட்டு - அவற்றின் மீது மூத்திரம் அடித்தேன். அதைத் தவிர வேறேதும் எனக்குச் செய்யத் தோன்றவில்லை.

○

நேர்காணல்

நூல் விமர்சனம்

அறியாமையிலிருந்து பெறும் விடுதலைதான் அருந்ததியர் பெறும் விடுதலை*

புத்தமித்திரன்

கேள்வி: உங்கள் கருத்துகள் பற்றிய விவாதம் எதுவும் பெரிய அளவிற்கு எழவில்லையே. அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

உறைப்பதற்கு நிறைய உண்டு என்பதால் உரைப்பதற்கு ஒன்று மில்லாதிருக்கிறார்களோ என்னவோ? பௌத்தத்தைப் பற்றிப் பேசாமலேயே பௌத்தக் கருத்துகளையும் தொன்மங்களையும் திரித்துப் புராணங்களையும் வேதங்களையும் எழுதிக் கொண்டு தம்மை நிலைநிறுத்துபவர்களாகப் பார்ப்பனர்கள் இல்லையா? அதுபோலத்தான் இதுவும். Kill by untouchability என்பது ஒரு யுத்தி. Kill by silence என்பது இன்னொரு யுத்தி. 'ஏன் சக்கலியர்களைப் பற்றிப் பேச வேண்டும், அதுவும் இவ்வளவு ஆதாரங்களுடன் வரலாற்றை முன்நிறுத்திப் பேசப்படும் இது எமது நலன்களுக்கு எதிரானதாக வளர்ந்து விடும்' என்பதான அச்சமே சக்கலியர்களைப் பற்றிப் பேசவிடாத மௌனமாய் கனக்கிறது. ஆனால் வரலாற்றின் வாயை மூட உலைமூடி ஒன்றுமில்லை. லூயிஸ் அல்தூசர் ஒருமுறை சொன்னார்: 'வரலாற்றில் மறைக்கப்பட்டவை எவையும், தூக்கி எறியப்பட்ட பழைய செருப்புகளைப் போன்றனவன்று எறிந்தால் திரும்ப வராமலிருக்க.' நிகழுங்காலத்தின் பருண்மைச் சூழல்களின் தேவைக்கும் பண்பிற்குமேற்ப வரலாறுகள் வெளிக்கசிந்து கொண்டே இருக்கும். வெடிப்புற வெளிப்படவும் செய்யும். அதையெல்லாம் நிரந்தரமாகத் தடைபோட்டுத் தடுத்துவிடலாம், தன்னால் முடியும் என்பதுதான் - பார்ப்பனியமாகவும் பாசிசமாகவும் பறைஅடிப்படைவாதமாகவும் இருக்கும் - பெருங்கதையாடல்களின் கொக்கரிப்பு. அதெல்லாம் பிளவுற்றுச் சிதறுகின்ற காலங்கள் இவை. சாக்கிய பந்துக்களான நாங்கள் எங்களதான வரலாறுகளை எம்மொழியாயினும் எவ்விடமாயினும் தேடித் தேடிக் கண்டடைந்து விடுகிறோம். சக்கலியர்களின் விடுதலை என்பது அறியாமையிலிருந்து பெறும் விடுதலையாகத்தான் இருக்கும். தன் வரலாறும் உலக ஞானமும் தன்தேவையும் இருப்பும் பற்றிய கரிசனத்தோடு அது தன்னையும் உலகையும் விமர்சித்துக் கொண்டு

*தோழர் புத்தமித்திரனின் பேட்டி கவிதாசரண் (அக்டோபர் 2002) இதழில் வெளிவந்தது. பல்வேறு விவாதங்களுக்குக் காரணமான அம்முக்கிய பேட்டியை ஒட்டி எழும்பிய கேள்விகளுக்கு இங்கே அவர் பதிலளிக்கிறார்.

முன்னேறும். எனவே பேசாப் பொருளைப் பேசத் துணிவதும் கேட்காக் கேள்வியைக் கேட்கத் துணிவதும்தான் சக்கலியர்களின் அரசியலாய், தத்துவமாய், கலாச்சார நடைமுறையாய் இருக்கும். அடிப்புறம் நனையாத தோணி எந்த நதியில் ஓடும்? பேசாமல் இருக்கிறார்கள் என்பதே எமது மக்களின் வரலாற்று ரீதியான உண்மைகளை அங்கீகரிக்கும் ஒரு பாணிதான் என்பது என் அபிப்பிராயம்.

கேள்வி: சக்கலியர்கள் பௌத்தர்கள்தான் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் ஆதாரபூர்வமாக நீங்கள் சொல்ல முடியுமா?

சக்கலியர்கள் என்ற சொல் பாலிச் சொல் என்பதும் அது சாக்கியா என்ற சொல்லின் தமிழ் பெயர்ப்பு என்பதும் அந்தப் பெயரால் அழைக்கப்படும் மக்களாக நாங்கள் 1 கோடியே 25 லட்சம் பேர் இருக்கிறோம் என்பதே நாங்கள் பௌத்தர்கள் என்பதற்கு முதல் சாட்சி. வேறு எந்த தாழ்த்தப் பட்டவர்களாக ஆக்கப்பட்ட பௌத்தர்களும் 'சக்கலியா' என்று அழைக்கப்படாது நாங்களே அழைக்கப்பட்டோம். விடுதலையைத் தரும் இச்சொல் ஒரு மிகப்பெரிய வரலாற்றைத் தன் கற்பத்துள் கொண்டு 2500 ஆண்டுகளுக்கு மேலும் இதுகாறும் உறங்கி வந்திருக்கிறது, இன்று விழிக்கிறது.

சக்கலியர்கள் பௌத்தர்கள் என்பதற்கு தீண்டத்தகாதவர்களாக அவர்கள் உருவாக்கப்பட்டது இரண்டாம் சாட்சியம். ஏனென்றால், சாக்கியர்கள் சிராமண தத்துவ மரபினை வளர்த்தெடுத்த புத்தரை ஈன்றவர்களும் அவர் தமது தம்மம், புத்தம், சங்கம் எனும் முக்காயங்களையும் உலகெங்கும் பரப்பி மக்களுக்கு அறிவும் மானமும் கொளுத்தியவர்கள். அதன் பொருட்டே, சக்கலியருள் 'முக்காயனுவாரு' எனும் குலத்தார்கள் இருக்கிறார்கள். தம்மம்பிட்டகா, வினயப்பிட்டகா, ஆனந்தபிட்டகா எனும் பௌத்தச் சிந்தனைக் கூடைகளைக் காத்துப் பரப்பியவர்கள் என்பதால் அவர்களுள் ஒரு குலத்தாருக்குப் பெயர் 'புட்டகலுவாரு' என்றாயிற்று. 'புட்டகம்' என்பது பேச்சு வழக்குத் தெலுகு; பிட்டகா என்ற பாலி மொழியினின்று தோன்றிற்று. பாலியினின்று தெலுகைப் போலவே தோன்றிய தமிழில் அது 'பெட்டகம்' என்றாயிற்று.

'போதிவாரு' என்றொரு குலம் சக்கலியர்களுள் இருக்கிறது. போதி என்ற சொல்லுக்குத் தனியே ஒரு விளக்கம் வேண்டியதில்லை. 'தெரிந்தது விளக்கல்' எனும் குற்றத்திற்கு நான் ஆளாகக் கூடும். ஆனால் போதிகாரு என்ற அந்தச் சொல்லின், அந்தக் கட்டத்தின் வரலாறு என்ன என்பதைச் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது.

போதிவாரு என்றால் போதிமரத்தைப் புனிதமெனக் கருதியவர்கள், போதி மரத்தினடியில் இருந்த புத்தராம் போதி மாதவனைப் பின்பற்றியவர்கள் என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெற்றென விளங்கக் காணலாம்.

இப்போதியார்கள் (போதிவாரு எனும் பாலிச்சொல்லின் தமிழ் வளர்ச்சி) தாம், பௌத்த சங்கங்களை நிறுவி பாட்டும் யாப்பும் யாத்தார்கள், சங்கங்களுக்குத் தலைமை வகுத்தார்கள் என்பதை இளம் போதியார்கள் என்ற தேரர் ('தேரா' என்ற பாலிச் சொல்லுக்கு மூத்தவர் என்ற பொருள், பாலியினின்று பிறந்த தமிழில் தேரா - 'திரு' என்றாகிறது. சிங்களமோ தேரா என்பதைப் பெயருக்குப் பின்னால் இட்டுச் சிறப்புச் செய்கிறது. எ.டு: மஹா மாதிகத் தேரர்) சங்கப்பாடல்களை யாத்துள்ளமையிலிருந்து அறியக்கிடக்கிறது. இளம்போதியார் என்ற சொல்லே முதுபோதியார் இருந்திருப்பதைக் காட்டுகிறது என்பது குறித்து தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் விளக்கியுள்ளமையை நினைவுபடுத்திக் கொள்ளத் தோன்றுகிறது. (எனவே சக்கலியர்கள் தமிழ் மொழியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அப்பாற்பட்ட அன்னியர்கள் அல்லர். மாறாக மண்ணுக்கேற்ற மொழியை - அம்மக்களின் தேவைக்கேற்ப வடித்துக் கொடுத்த பௌத்தர்களின் வழித்தோன்றல்கள். அதுவும் சங்கம் வளர்த்துச் சிறப்பு செய்த கோசங்கிகள், மாதங்கிகள், போதியார்கள் என்பது விளங்கும்).

திருவள்ளுவ நாயனார் பறையர் என்று ஓயாது வாய்ப்பாட்டுப் பாடும் நண்பர்களுக்கு திருவள்ளுவர் 'மாதங்கி' என்றும் 'செந்நாப்போதர்' என்றும் (போதையன், போதையரு என்று பெயரிடும் வழக்கம் இன்றும் சக்கலியர்கள் மத்தியில் விளங்கி வருவதைக் களப்பணி அறிவு ஜீவிகள் கண்டு கொள்ளவும்.) 'முள்ளுபழன பட்டத்த தீசின வள்ளுவ சாக்கியனுத்த முந்து கனின யாதிகத் தல்லி' (முள்ளில் விழுந்த ஆடையை எடுத்த வள்ளுவ சாக்கியனை முதலில் ஈன்ற மாதிகத்தாய் என்பது பொருள் - என்று ஆந்திராவில் வழங்கிவரும் சொலவராந்தமும்= சொல்+வரவு+அந்தம்= முடிவன்றி வரும் சொல் - பழமொழி) வள்ளுவமாதிகளு என்று கர்நாடகத்தில் வழங்கிவரும் சொல்லும் வள்ளுவ சக்கலி என்ற சக்கலியருள் உள்ள ஒரு பிரிவும் கொண்டு வள்ளவர் - பௌத்தரும் - சக்கலிய குல விளக்கும் என்ற உண்மை விளங்கக் கிடைக்கிறது. ஒருவேளை வள்ளுவர் என்பது குடிதோற்றுவித்த முநியாக இருந்து அவருள் கிளைத்த சிறந்த பெரியோர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களை - வள்ளுவர்கள் என்று அழைத்திருக்கலாம். மேலும் அவரை 'மாதாதுபங்கி' என்பதிலிருந்தும் - அவர் பௌத்த சாக்கியக் குடியினை வழி நடத்திய பௌத்தப் பெருமகன் என அறியலாம்.

சக்கலியர்களின் வாழ்விடங்களை 'மாதிகப்பள்ளிலு' என்று அழைப்பதிலிருந்தும் மாத்யாமிகா எனும் பௌத்த நெறியைப் பின்பற்றி சாக்கியருள் ஒருபிரிவான மாதிகாக்கள் இருந்த இடம் என்பதை அறியலாம். பீரஹவாருலு என்றொரு குலமும் சக்கலியருள் இருக்கிறது. பீரகம் = பௌத்தர் தங்கும் விகாரைகள் என்பதன் தெலுகுத் திரிபு. விஹாரவாருலு என்பதாலும் சக்கலியர்கள் பௌத்தர்கள் என்பது தெளிவு.

நான் கண்டறிந்து சொல்லும் இவை எனது கற்பனையோ கதையாடல்களோ அன்று. அப்படி எவரேனும் கருதிக் கொண்டாலும் 'ஆசிரியன் இறந்து போன யுகத்தில்' பௌத்தன்/வாசகன் விழித்துக் கொள்ளும் யுகத்தில் இருக்கும் நான் கவலைப்பட வேண்டியதில்லை. இக்குலங்கள் - நிஜம் - அவை எமது சமுதாயத்தினுள் கொள்வன - கொடுப்பன குறித்த விதிகளை வரையறுக்கின்றன. மச்சாளுவாரு - மீனை - (புத்தர் தனது ஆடைகளைக் கலைந்து கரை மீது வைத்துவிட்டு, திருமேனியை நதியிற் படிந்து கழுவி எழும்வரை அவர் தம் ஆடைகளை தன் மூச்சுத் திணறும்படி நீருக்கு மேல் தலையை வைத்துக் காத்துக் கொண்டிருந்து அதனால் இறந்த மீனை ஞானக் கண்ணுடைய அய்யன் சக்கியா எனும் சக்கலியப் பெருமாளான புத்தர் மீட்டு உயிரூட்டி அந்த மீனிடம் உனக்கு என்ன கைமாறு நான் செய்யக் கூடும் என்றதற்கு அய்யனே நீரின் அழுக்கைத் தின்று சுத்தப்படுத்தும் எனக்கு என்றென் றைக்கும் கௌரவம் கொடுக்கும் வரம் தர வேண்டும் என்றது. அதனின் கோரிக்கைக்கு இணங்கி பகவான் புத்தர் - தாமே அந்த மீன்குலத்தில் பிறந்து மனுக்குலத்தால் அம்மீனினம் வணங்கப்படும் பெருமையைத் தருவேன் என்றார். அவ்வண்ணமே அண்ணல் தோன்றிய அவதாரம் மச்சவதாரம்) அந்த மச்சவதாரத்தைப் பூஜித்துப் போற்றி வணங்கிய குலத்தவராதலால் எமது சக்கலியர்கள் 'மச்சாளுவாருளு' என்றும் 'மச்சவதாரவாருளு' என்றும் அறியப்பட்டார்கள்.

திருப்பதியில் நிற்கும் வெங்கடசலபதியின் கோயில் பௌத்தக் கோயில் என்பதும் அது விஷ்ணு என்ற பாலிச் சொல்லில் 'ஞானம் பெற்றவன்' என்ற புத்தரின் நின்ற கோலம் என்றும், கிருஷ்ணம் = கரியவன் என்ற கிருஷ்ணவதாரம் = அய்யனின் நடந்த கோலம் என்றும், திருவரங்கத்தில் அய்யன் நிர்வாணம் எய்திய 'அறிதுயில்' வண்ணத்தினைக் கிடந்த கோலம் என்றும் அறிஞர்கள் விளக்குவதினின்று அறியலாம். ஆயின் பௌத்தர்கள் இளைத்ததும் புத்தரையே விஷ்ணுவினின்று வேறாக்கி விஷ்ணுவைப் பார்ப்பனர்கள் கைக் கொண்டதும் புத்தரை அவரின் அவதார மாக்கியதுமான ஆரியக் கூத்து ஏற்படுத்திய கேட்டினை என்னென்பது?

புத்தரைத் திருவரங்கம் என்பதும் வெங்கிடசலபதி என்பதும் இவை மஹாயான பௌத்தம் தோன்றிய காலத்திய நிகழ்வுகள் என்பதும் புத்தரைப் பற்றிய கற்பனை சிருஷ்டிகள் - gothic imagination - என்று சொல்லப்படும் பிரமாண்டமானவை என்பதும் (பாமியான் புத்தர் சிலைகளையும் ஸ்ரீலங்க பௌத்த சிலைகளையும் கன் ரகரி குகைச் சிற்பங்களையும் காணுறும் போது) கொண்டு அவரைப் பெருமாள் என்று எமது குலத்தார் அழைத்துத் துதித்துப் போற்றினர். பெருமாள்=பெரும்+ஆள் என்பது தெளிவு. இந்தப் பெருமாளை குலத் தெய்வமாகக் கொண்டவர்கள் எம்மவர் என்பதை 'மீரு பெருமாள் குடிவாரா?' - 'நீங்கள் பெருமாள் கோவில்காரர்களா?' - என்று எமது மக்கள் ஒருவரையொருவர் அறிமுகமான உடனே

கேட்டுக் கொள்வதனின்றும் எமது கோயில்கள் - பெருகிக் காணக் கிடப்பதினின்றும் அறிக.

எங்களுள் 'பந்திவாரு' என்றொரு குலம் இருக்கிறது. இவர்கள் ஏன் பந்திவாரு என்று அழைக்கப்படுகிறார்கள்? 'பந்தி' என்ற தெலுகுச் சொல்லுக்கு பன்றி என்று பொருள். 'பன்றியை'க் குலக்குறியாக (totem) கொண்டவர்கள் என்று அர்த்தம். அதே சமயத்தில் 'சுகரலு' என்றும் 'வராகவதாரலு' என்றும் ஆந்திராவில் ஒரு மாதிகப் பிரிவு இருக்கிறது. 'சுகரோ' என்ற பாலிச் சொல்லுக்குப் பன்றி என்று அர்த்தம். சுகரோ-வராகம் என்று சமஸ்கிருதத்தில் இது வழங்குகிறது. வராகம் தெலுங்கிலும் புழங்கிவரும் சொல். இது என்ன வரலாற்றைக் குறிக்கிறது? விஷ்ணுவாம் புத்தபெருமானை எந்தவொரு ஜீவராசிகளும் அவர் தமது நிஷ்டை யிலிருக்கும்போது அண்டித் தீங்கு செய்துவிடக் கூடாது என்று பன்றி ஒன்று ஊனுறக்கம் பாராது காவல் காத்து உடலும் எலும்பும் இளைத்து, வனப்பும் கொழுப்பும் குறைந்து மடிந்து விட்டது. அறிதுயில் பெருமான் இஃது அறிவாராதலால் அப்பன்றியை உயிர்ப்பித்து 'மிருகராசிகளில் சிறந்த பசுவே! (பசு என்பது பாலியில் அனைத்து விலங்குகளுக்கும் வழங்கும் பொதுவான சொல். அதை மாட்டிற்கு மட்டுமான சொல்லாகச் சுருக்கியது பார்ப்பனியத்தின் அரசியல்) உனக்கென்னால் ஆவதுதான் எது?' என்றார் அய்யன். அதற்கு 'அய்யனே! நீங்கள் என்னை அழைத்த விதமே நானாகக் கடவதே நான் வேண்டுவது' என்று இறைஞ்சியது. அதனின் அறிவையும் பக்தியையும் மெச்சிய சாக்கல்ய மாதவனார் 'மனுக்குலத்தின் கழிவைச் சுத்திகரிக்கும் நின்னை மனிதன் தின்னக்கடவது; யாமே உமது மிருகராசியில் அவதரித்து இப்பூவுலகை ரட்சிப்போம். அவ்வமயம் யாம் வராக மூர்த்தி எனும் திருநாமம் கொண்டு எழுந்தருளுவோம். என்னைப் பூஜிக்கும் எனது அன்பர்கள் இனி உன்னையும் பூஜிப்பார்கள். அவர்களின் குடியும் குலமும் நினது திருப்பெயரால் உலகறிய விளங்கட்டும்' என்றருளினார். அங்ஙனமே வராகவதாரமும் வராகவதாருலுமான சாக்கிய குலத்தோர் பன்றியைக் குலக்குறியாகவும் தெய்வமாகவும் கொண்டனர். இதுதான் 'பந்திவாரு' என்று உலகறிய விளங்கும் எமது சாக்கல்யரின் ஒரு பிரிவின் வரலாறு.

இவ்வாறாக நான் எனது மக்களினூடு சஞ்சரித்து அவர்களில் முதிர்ந்த ஞானப் பெருமக்களின் வாய்ச்சொல் கேட்கும் போதெல்லாம் எமது வரலாறு உயிர்ப் பெறுகிறது. அரலக்ஷ்ஹேசி - தனது வரலாற்றை சொற்களைக் கொண்டு தேடித்தேடி ஓடி, தான் யார் என்று கண்டடைந்த உருக்கம் மிக்க 'ஏழு தலைமுறைகள்' (roots) வரலாற்றில் காண்கிறோம். அப்படிப்பட்ட உயிர்ப்பும் விறுவிறுப்பும் மிக்க எமது வரலாற்றைக் கண்டறிய இன்றும் யாங்கள் கொண்டுள்ள குடியும்/குலமும் அருகியும் திரிந்தும் மருவியும் எங்களோடு இருந்து வரும் பாலி/தெலுகு/தமிழ்/ கன்னடச் சொற்களும் எமது வரலாற்றை - யாம் பௌத்தர்கள் என்பதைக்

கண்டடைய உதவும் மைல்கற்களாகும். பௌத்தர்களாகிய யாம் குடியையும் கோயில்களையும் நூல்களையும் நிலபுலன்களையும் ஆடு மாடுகளையும் இழந்து இன்று தீண்டப்படாதவர்களாக்கப்பட்டுள்ளோம். எமது கடவுளாம், உலகின் இரவு பகலற்ற திவ்விய ஜோதியாம் அவலோதப் பெருமாளோ பார்ப்பனியத்தாலும் சாதி இந்துக்களாலும் தீண்டப்படாத கடவுளாக ஆக்கப்பட்டுள்ளார். கட்டுண்டோம் இனி பொறுப்பதில்லை. வில் உண்டு, விடுதலை தரும் சொல் உண்டு, விடுதலை உண்டு கண்டீர்.

எழுத்தின் அரசியல் என்பது ஒரு வன்முறை என்பதும் அது வரலாற்றிற்கு அநீதி இழைப்பதாகவும் இருக்கிறது என்பதும் வாய் மொழிகளை/எம்மூடு புழங்கிவரும் கதைகளை/ஐதீகங்களை/சொற்களை யாம் பௌத்தர்கள் என்பதற்கு ஆதாரமான எனது கதைப்புகளை எழுத்து வடிவத்தில் வராததாலேயே புறக்கணித்து வருவது எமது வரலாற்றுக்குச் செய்யும் வங்கொடுமையாகும். எம்மை ஒதுக்கி ஒடுக்கிய போதும் யாங்கள் இன்னும் பிழைத்திருப்பது எமது மொழியை/சொற்களை/தெய்வங்களை/ வரலாற்றை நாங்கள் பூடகமாகவும் மறைமுகமாகவும் எங்களூடே கதைத்து வருகிறோம்; ஒரு காதில் பேசுவது இன்னொரு காதிற்கு கேட்காவண்ணம் கிசுகிசுத்து வருகிறோம். 'சிம்ஹத்தின் கர்ஜனையை கர்ஜிக்க வரும்' சாக்கிய சிம்ஹம் எமக்கு இன்று வாக்கினை நல்கும். 'தாச'பேரியை முழக்கி (தாசரிகள் ஒரு மாதிகப் பிரிவு) நாங்கள் மீண்டும் மானுடம் இனிது வாழ வேண்டி தம்மத்தைப் போதிக்க/சாதிக்க எழுவோம் போதியராய் நல்ல மாதியராய் நல்ல மானுட சாதியராய். எம்மூடு வாய்மொழியாய் விளங்கி வழங்கி வரும் சொற்களே எமது குலங்கள் பௌத்தர்கள் என்பதற்கான ஆதாரங்கள்.

ஆப்ரிக்கர்களின் வரலாறுகள் மூடி மறைக்கப்பட்டபோது 'உனக்குத் தத்துவ மரவு கிடையாது. எழுத்தில் ஏதும் உன் வரலாற்றுக்கு ஆதார மில்லை' என்று வெள்ளை வெறித்தனம் கொக்கரித்தபோது, 'என் வரலாற்றை ஏடேறவும் என் மக்கள் ஈடேறவும் விடாது தடுத்த நீ எழுதப்பட்ட வரலாற்றை கேட்கிறாயா? எனது வார்த்தைகளை என்னுள் புழங்கிவரும் கதைப்புகளை எவ்வளவுதான் நீ அடக்கினாலும் நான் மறக்கப்போவதில்லை. அப்படியே உன் வங்கொடுமைக்காட்பட்ட எனது உடல் நோயினும் பசியினும் வருந்தி தேய்ந்து அழிந்து போனாலும் என் எச்ச சொச்சங்களை என் மக்களுக்கு நான் விட்டுச் செல்கிறேன். அவை எம்மைப் பற்றிய நினைவுகளை எமது பாலகர்களின், சிறுமியரின் நெஞ்சில் விடுதலைக்கனலை நீறுபூத்த நெருப்பாய்க் கனன்று கொண்டிருக்கச் செய்யும்' என்று 'மய்யோ மற்கடலோ மழைமுகிலோ, அய்யோ இவன் என்ன அழியாவோர் வடிவழகுடையார்' என்று வியக்கும்படியாய் இருக்கும் எமது கருப்பழகர்களும் அழகிகளும் ஆப்ரிக்க கண்டத்திலே முழங்கினார்கள்.

வெள்ளையரின் எழுத்தின் வன்முறையை அதனின் செவ்வியல் தன்மையை மொழியின் தரம் பேசும் பம்மாத்தை ஊதிப் புறந்தள்ளி எமது பாட்டாதி பாட்டன்களும் எமது பாட்டாதி பாட்டிகளும் இரத்தமும் சதையுமாய் உலவிவரும் கதைப்புகளையும் வரலாறுகளையும் பதிவு செய்வோம். அதை முன்னெடுத்து எமது வரலாறு என்ன என்பதை உலகுக்கு உணர்த்தக் கொண்டுவருவோம் என்று புறப்பட்ட முயற்சிகளின் வெளிப்பாடுதான் 'Literature'ன் வன்முறையை மறுக்கும் 'Orature' எனும் மொழிப்புரட்சி. அறிஞர் அ.மார்க்ஸ், எஞ்சியவைகளின் வரலாற்றை ஒடுக்கும் 'செவ்வியல்' மொழிகளின் வன்முறையை மிகச் சரியாகப் பின்நவீனத்துவக் கருத்துகள் மூலம் தோலுரித்துக் காட்டியுள்ளதும், நடைமுறையில் கட்டமைக்கப்படும் செவ்வியல் தன்மைகளை சிந்தனைச் சிம்ஹம் பெரியார் போட்டுடைத்ததை அடையாளம் காட்டியுள்ளதும் நன்றியோடு நினைவு கூரத்தக்கன. எமது மக்களூடு வழங்கிவரும் சொற்கள்/நினைவுகள்/கதையாடல்கள் என்ன என்பதையெல்லாம் பறைக் கொடுந்தமிழும் (பெருஞ்சித்திரனாரின் வெறிச்சிந்துகளும்) வெள்ளாளக் கொடுந்தமிழும் (வேதாசலம் பிள்ளைவாளின் தமிழ், கலியாணசுந்தர முதலியார்வாள் தமிழும்தான்) காது கொடுத்துக் கேட்குமா? கேட்கத் தோணுமா? அங்கத்துள்ள அத்தனைத் துவாரங்களும் ஆதி சேஷனாய் அல்லோ அனலைக் கக்கும்! அய்யோ நான் என்ன செய்வேன்? எனக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் கல்வி என் மண்டை ஓட்டில் மலம் நிரப்புவதாகவும் என் விரைகளைக் காயடிப்பதாகவும் இருக்கின்றதே! நோயும் நொடியும் சுமத்தப்பட்ட வறுமையும் ஒடுக்கப்பட்ட, தாக்கப்பட்ட உடல்களும் கொண்ட எனது கோடானகோடி பாட்டன்களும் பாட்டிகளும் செத்துக் கொண்டிருக்கிறார்களே! அய்யோ அவர்களிடம் எமது குலக் கொழுந்துகள் அருகமர்ந்து கேட்காமல் மடியமர்ந்து வாழ்வின் வரலாறு கேட்கும் பெருமை மிகு வாய்ப்புகள் அருகி வருகின்றனவே. எமது சக்கலியப் பெருமானே யாம் என்ன செய்வோம்?

கொண்ட தொட்டியா, மாரகலு தொட்டியா, பண்டிய தொட்டியா, எர்ர தொட்டியா ('d' என்ற உச்சரிப்புக் கொள்ள வேண்டும். இங்கு எழுதப்படும் 'ட'விற்கு மூக்கிழந்த பாழையான தமிழில் 'ட'கர வர்க்கமும் தகர வர்க்கமும்தான் கிடையாதே. கேட்டால் 'ழ'கரம் இருக்கிறது என்று பேயாடத்தான் 'புழவர்கள்' இருக்கிறார்களே. அவ்'ழ'கரம் பாலியில் இருக்கிறதும் தெலுகிலிருக்கிறதும் அறியா நிர் மூட மூட தமிழ்ச் செல்வங்கள் இருக்கிறார்களே! இவர்களால்தானோ என்னவோ மெல்லத் தமிழினிச் சாகும் என்று இந்துத்துவ பாரதி பேசியிருக்கிறான்)

ராஜ தொட்டியா, நாத தொட்டியா, தராகத தொட்டியா, நாமஜெல்லி தொட்டியா, குண்ட தொட்டியா, லோகநாத தொட்டியா, அவலோகித தொட்டியா, பழனி தொட்டியா எல்லாம் செத்துப் போய்க் கொண்டிருக் கிறார்களே! செத்துப் போய் விட்டார்களே! அய்யோ விடுதலை தரும் வரலாற்றை அவர்கள் எங்கு சொல்லி வைத்தார்களோ, எங்கே போட்டு

பூட்டி வைத்தார்களோ தெரியவில்லையே! அது எந்த இடிக்கப்பட்ட விகாரையில், எந்தத் தோட்டத்தில் எந்தக் கோயிலின் கீழ், எந்த ஆதிக்க வெறியரின் (எமது பறிக்கப்பட்ட) நிலங்களுள் இருக்கின்றதோ? தெரியவில்லையே!

மாராயி தொட்டம்மா, நயின் பெத்தம்மா, அருக்காணி தொட்டம்மா பள்ளி கொண்டம்மா, குருகூ தெலுவாரு அவ்வா, கொண்டவ்வா, கோன தொட்டம்மா, பிட்டகளு பெத்தம்மா, எல்லம்ம அம்மம்மா, வீரமாதி கத்தி, வீர கொட்டம்மா, பெருயாயி கொட்டம்மா, பெருமாளு பெத்தம்மா எல்லாம் இல்லையே! செத்துக் கொண்டிருக்கிறார்களே. என் பாட்டி செத்தபோது நான் சொல்லிவரும் எத்தனையோ வரலாறுகளின் கதைப்பு களின் ஆதாரமாய் இருந்த ரத்தமும் சதையுமாய் நடமாடிய வரலாறு மரித்துவிட்டதாய்த்தான் நான் கதறிக் கதறி அழுகிறேன். (அ.மார்க்சிடம் ஒருமுறை என் பாட்டியைப் பற்றிப் பேசும்போது broke down - மார்க்ஸ் சொன்னார் பாட்டிகளைப் பற்றிக் கவலைப்படும் கலெக்டர்கள், அதுவும் இளைஞர்கள் கூட இருக்கிறார்களா என்று தான் வியந்து போனதாய்த் தெரிவித்தார்.)

அவர்களோடு மடிந்துபோன வரலாறுகள்/கதைகள் யாங்கள் வீறார்ந்து வாழ்ந்த விதம், தம்மமும் புத்தரும் சங்கமும் பரிபாலித்த நேர்த்தி, கீர்த்தியனைத்தும் அறியப்படாமலேயே போய்விடுமோ. இன்னும் இருப்பவர்களிடமேனும் விடுதலை தரும் வாய்ச்சொல் பௌத்த மந்திரம் போல் ஒரு சொல் கேட்டறியலாகாதா? என் குல மக்களும் மானுடக் காதல் மிக்க அறிஞர்களும் அப்பணியைச் செய்ய முன்வரக்கூடாதா என்று யாம் இறவா இறைந்து நிற்கிறோம்.

இதெல்லாம் செய்ய கி.ராஜநாராயணன் போன்றவர்களுக்கும் இற்று விழுந்து போகும் புளியமரத்திற்காக ஒப்பாரி வைப்பவர்களுக்கும் மனம் வருமா? முடியாது. கோபல்ல கிராமம் மட்டும்தான் அவர்களுக்குத் தெரியும். தன் சாதி உண்டு, புணர்வுக்குப் பெண்டுண்டு, உண்ணப் பருப்புண்டு, கதைக்கப் பொய் மூட சாஸ்திரங்கள் பல உண்டு, இழவெடுக்க இலக்கியச் 'செவ்வியல்கள்' ஒளிவட்டங்கள் உண்டு, அவ்வளவுதான். ஓதிய மரங்கள் ஒருபோதும் தூணாகா என்றறிவோம் யாம். இதெல்லாம் பற்றி ஒரு சிறிதும் கவலையில்லாது 'பஞ்சப் பாட்டு பறைப்பாட்டு' என்று 'வந்ததை வாயில் பேசி வெந்ததை மடியில் போடென்று' தன் ஊனைப் பெருக்கிக் கொள்வதிலேதான் பறையரியக்கம் இருக்கிறது. 'பார்ப்பனன்' எப்படி 'இந்து' என்ற சொல்லைக் கலாச்சாரத் துருப்புச் சீட்டாக முன்னெடுத்துப் பரப்பி அதன் பதாகையின் கீழ் தனது அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்கிறானோ அதே வேலையைப் பறையர் 'தலித்' என்ற சொல்லை கலாச்சாரத் துருப்புச் சீட்டாய் தான் மட்டுமே வசதி வாய்ப்புகளையும் பொருளாதார, அரசுத்துறை அதிகாரங்களையும் அனுபவிக்க வேண்டி பயன்படுத்தி வருகின்றனர்.

இன்று வாய்மொழி ஆதாரங்களைப் புறமொதுக்கி செவ்வியல்வாதம்/ பார்ப்பனிய/வெள்ளாள மொழித் தூய்மைவாதம் பேசும் 'தமிழர்கள்' பறையர்கள்தாம். அது ஞா.தேவநேயப் பாவாணர், அயோத்திதாசர் குணா, பெருஞ்சித்திரன், திருமாவளவன், சிவகாமி என்று நீண்டு கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் முடி வைத்தார்போல பறையர்களைத் தமிழகத்தின் ஆதிகுடிகள், தமிழ் பறையர் மொழி என்று தமிழ் அறிவுஜீவிகளை வேறு பறை மயக்கத்தில் ஆழ்த்தியாயிற்று.

சக்கலியர்கள், பௌத்தர்கள் என்பது பற்றிய விரிவான ஆராய்ச்சிகளை - வாய்மொழி ஆதாரங்களைத் திரட்டியும் குலம், குடி போன்றவைகளைப் பற்றிய ஆதாரங்களைச் சேகரித்தும் மிகச் சிறந்த ஆவணம் ஒன்றை வெளியிட அமெரிக்க கொலம்பியப் பல்கலை அறிஞர் ஒருவர் முயன்று கொண்டிருக்கிறார். அதேபோல தில்லி ஜவகர்லால் பல்கலையில் இயங்கும் தோழர்கள் பலரும் இப்பணியினைச் சிரமேற்கொண்டு உழைத்து வருகிறார்கள். கண்ணின் நீர் துடைத்துப் புன்னகை ஏற்றும் உன்னதமான வரலாறு ஒன்று எழுந்து கொண்டிருக்கிறது.

கேள்வி: சக்கலியர்களை 17ம் நூற்றாண்டில் மலம் அள்ளுவதற்காகக் கூட்டி வரப்பட்டவர்கள் என்று கூறுகிறார்களே...

ஏன் சக்கலியர்கள் 17ம் நூற்றாண்டில் மலம் அள்ளுவதற்காகக் கூட்டி வரப்பட்டவர்கள் என்று சொல்லாமல் ஓட்டி வரப்பட்டவர்கள் என்று கூறுங்களேன். வரலாற்றின் உக்கிர நெருப்பு போன்ற, பொட்டலம் கட்ட முடியாமையின் விவரம் அறியாத வெட்கம் கெட்டவர்கள், மூர்க்க மூடர்கள் வேண்டுமானால் அப்படிப்பட்ட கருத்தைச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்வதால் அவர்களுக்கு நிறைய லாபங்கள் இருக்கின்றன.

17ம் நூற்றாண்டிற்கு முன்பு வரை கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய தமிழ்க் குரங்கிற்கு மலத்துவாரம் பரிணாம வளர்ச்சியில் உருவாகாதிருந்ததா என்ன? நவ துவாரங்களில் ஒன்றான வாய் துவாரமே கொண்டு கொள்வதும் தள்ளுவதுமான பணியை 17ம் நூற்றாண்டுக்கு முன்புவரை 'தமிழர்கள்' செய்து கொண்டார்களாமோ?

வரலாற்றை மூடி மறைக்கும் அயோக்கியர்கள் பேசும் வேடிக்கை வாதம்தான் சக்கலியர்கள் மலம் அள்ளும் சாதி என்பது. மகுடம் இழந்து விட்டால் மன்னன் பிச்சைக்காரனாகவும் தன்னையே விற்கும் பரிதாப நிலைக்குரியவனாகவும் ஆகிவிடுவதென்பது எளிய விசயம். அப்படித் தான் வீழ்ந்து விட்ட சத்திரியர்களான சக்கலியர்கள் மலம் அள்ளும் படியெல்லாம் இழிவுபடுத்தப்பட்டார்கள். திண்ணியத்தில் மலம் தின்ன வைப்பது சாத்தியமாகும்போது மலம் அள்ள வைப்பது சாத்திய மில்லையா?

மேலும் சக்கலியர்கள் மலம் அள்ளுகிறவர்கள் என்று பேசுவது ஒரு essentialist வாதமாகும். கவுண்டர்களும் தேவர்களும் பறையர்களும்

முதலியார்களும் நாடார்களும் பீ வாரிகளாக இருந்திருக்கிறார்கள். சைவப் பெருமை பேசும் இலங்கைக் கரையார்களும் பிள்ளைகளும் இலண்டனிலும் பிரான்சு தேசத்திலும் பீ வாரிகளாக இருக்கிறார்கள். அதே போல மலத்திலிருக்கும் அணரிசியையும் நாயின் மலத்திலிருக்கும் புழுவையும் கூட எதுவுமே கிடைக்காத பஞ்சகாலத்தில் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பிராமணன் தின்னலாம் என்று self preservationக்காக மத நியாயம் கற்பித்து சாஸ்திரங்கள் எழுதிக் கொண்ட பிராமணர்களும் ஆரியர்களும் திராவிடர்களும் பீ வாரிகளாக இருந்திருக்கிறார்கள். அம்பேத்கரின் அத்தை வீட்டிற்கு அம்பேத்கர் போயிருந்தபோது அவரின் வீட்டிலிருந்து கொஞ்சம் பணம் எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம் என்று அம்பேத்கர் அவளின் சுருக்குப் பையைப் பார்த்தபோது அதில் ஓர் அணாதான் இருந்ததால் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே, தன் மக்கள் என்று அன்று முதல் படிப்பில் கவனம் செலுத்தி மாமேதையுமாய் தத்துவவாதியுமாய் தன்னிகரற்ற பௌத்த நடைமுறையாளருமாய் உருவாகியவர் அம்பேத்கர். அவரின் அத்தை ஒரு துப்புரவுத் தொழிலாளி என்பதும் பெருவாரியான மஹார்களும் அப்பணி செய்தவர்கள் என்பதும் காணக்கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் வன்னியர்களும் கவுண்டர்களும் முதலியார்களும் பீ வாரிகளாக இருந்திருக்கிறார்கள். இது பற்றி விரிவான களத் தகவல்களை (field date) சேகரித்து ஆராய்ந்து வருகிறார் புது தில்லியைச் சேர்ந்த தோழர் சுரேஷ் என்பார்.

நாமக்கல், சேலம், தாராபுரம், கிருஷ்ணகிரி, கரூர், ஆத்தூர், சின்ன சேலம், தாத்தையங்கார் பேட்டை, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் பறையர்களும் பள்ளர்களும் மலம் அள்ளும் துப்புரவப் பணியாளர்களாய் இருக்கிறார்கள். திருச்சி, மதுரை, கோவை, சென்னையில் பலதரப்பட்ட சாதியார்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளது தெரியக் கிடக்கும் உண்மை.

விஜயநகரத்திலிருக்கும் - ஆந்திராவின் கலாச்சாரத் தலைநகரம் என்று அறியப்படும் ஸ்தலச் சிறப்பு மிக்கது விஜயநகரம் - 'பைடிதல்லி' அம்மன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பைடிதல்லி அம்மனின் வாரிசுகளாக இருக்கும் 'பைடிதல்லிவாருலு' எனும் சக்கலிய குலத்தார்கள் நாமக்கல்லில் தங்களை ராஜிலு என்றுதான் அழைத்துக் கொள்கிறார்கள். சக்கலியர்கள், சத்திரியர்கள் என்பதை இன்றும் எமது குலத்தில் மூத்த பெரியவர் ஒருவர் தென்னம்பாளைகளும் கூரபட்டும் பொட்டும் (Bopal என்ற சொல்லில் உள்ள 'Bo' போல இப்பொட்டு என்ற சொல் உச்சரிக்கப்பட வேண்டும்) சுற்றியும் வேலும் வாளும் கொண்டு சாமரமும் குடையும் ஏந்தி சக்கலிய வீரர்கள் புடைசூழ கையில் மிகப்பெரிய வாளுடனும் சாட்டாவார் எனும் 32 கண்ணியுள்ள சாட்டையும் கொண்டு ஆயிரம் பந்தங்களை முதுகின் மீது கட்டி ஆடிக் கொண்டு பகடை

எழுந்தருளி மாரியம்மனுக்குத் தென்னம்பாளையும் கூரபட்டும் பொட்டும் கொடுத்து ஆந்திராவிலிருந்து வந்து ராஜிலுகள் இறைஞ்சிக் கேட்க அவர் தம் கோரிக்கை ஏற்று மூன்று தினங்களுக்கு தெலுகு ராஜிக்கள் கட்டிய கோயிலுக்குள் இருக்கும் விக்கிரகத்தில் அம்மன் குடியேறுவாள். இவ்வாறு உயிர்ப்பிக்கும் பணியை மூன்று முறை 'அண்ணாகாரு மீரே செய்யாண்டி, அண்ணாகாரு மீரே செய்யாண்டி, அண்ணாகாரு மீரே செய்யாண்டி' என்று ஆந்திராவிலிருந்து வந்த/தெலுகு ராஜிக்கள் கேட்க எமது சாக்கல்ய பெரியவர் மூன்று முறை உயிர் பிரதிஷ்டை செய்வார். அவ்வாறே ஆலமரத்தடியில் இருக்கும் பச்சாயி கோயிலுக்கும் பூஜை செய்யும் உரிமை சக்கலியர்களுக்கு உண்டு. 'மாசான கொள்ளை' எனும் ஆட்டுக் கிடாயின் குரல்வளைக் கடித்து இரத்தம் மட்டுமே உண்ணும் மாதிகராயலு அவ்வாறு குடித்துத் துப்பும் இரத்தம் பிள்ளைப் பேற்றையும், தூக்கி மாலை போல வானின் மீது வீசப்பட்ட ஆட்டுக்குட்டியினை மடியேந்திப் பெற்றவர்கள் வம்சாவழி பெரும் சம்பத்து உடையதாகும் என்றும் ஐதீகமும் அந்தப் பெருவிழாவும் இன்னும் எமதூரில் நடக்கிறது. மாசான கொள்ளை எனும் அந்த நிகழ்வு - சுடுகாட்டில் உட்கார்ந்திருக்கும் சாக்க முனியின் முன்னே ஆட்டமும் பாட்டமும் கள்ளும் இறைச்சியும் உண்டு நடத்திக் கொண்டாடி விட்டு இரவு எட்டு மணிக்குள்ளாக திரும்பிப் பார்க்காது ஜனங்கள் திரும்பி வேகவேகமாய் நடந்து வந்து கோயிலில் கும்பிட்டு வீடு சேர்வார்கள். அப்படிச் சேர்பவர்கள் அன்றிரவு முழுக்க வெளியே வராதிருப்பார்கள். பைடிதல்லி தேவியும் அவளின் காதலனும் முநிகள் புடைசூழ ஊரில் திரிவார்கள் என்பதால் அவர்களுக்கு இனிய சங்கீதங்களையும் மந்திரங்களையும் உச்சரித்து இரவு முழுக்க சாக்கல்யர்களே மயானத்தில் இருப்பார்கள். இவ்விழா முடியும்வரை இது தொடரும். ஒரு காலக்கட்டத்தில் சக்கலியர்களிடமிருந்து தெய்வத்தை அழைத்துப் போய் பிரதிஷ்டை செய்யாதிருந்தால் என்ன நாமே செய்து கொள்ளலாம் என்று தெலுதேனுகேரு என்று அழைக்கப்படும் ஆந்திர ராஜிக்கள் முற்பட்டபோது சீதபேதியும் கொள்ளைநோயும் ஊரில் கண்டு மக்கள் அல்லோலகல்லோலப்பட்டார்கள். பின்னர் மன்னிப்புக் கேட்க அம்மன் சீற்றம் தணிந்தது என்றும் இன்னும் அந்த வழக்கம் தொடர்கிறது. இதை எனது ஊரின் பெரியவர்களும் வயதுக்கு வந்தவர்களும் இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது இன்னும் நடந்து கொண்டு இருக்கிறது. 'நாம் மாட்டுக்கறியும் வேற சாங்கயங்களையும் பின்பற்றி யதால் நமது தம்பி நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டான். ஆனாலும் இந்த ஒரு விழாவின் போது மட்டும் நமது இருவருக்கும் தாயான பைடிதல்லியின் வேண்டுகோளுக்கு இணங்க இருவரும் சேர்ந்து இவ்விழாவைக் கொண்டாடுகிறோம். அந்த விழாவின்போது மீனும் மாட்டிறைச்சியும் கட்டக்காலு வாருலும் (கட்டக்காலு வாருலு என்பது பன்றியின் தோலும் கொழுப்பும் சிறுசிறு கயிறுகளைப் போல் வார்த்து எடுக்கப்பட்டது என்ற பொருளுடையது) சமைத்து காகங்களுக்கும்

பிதுர்களுக்கும் பிண்டம் வைக்கவேண்டும் அதை அவனும் நாமும் செய்கிறோம் இன்று வரைக்கும்' என்று கொண்ட தொட்டியா எனும் வையாபுரித் தாத்தாவின் வாக்குமூலத்திலிருந்து அறியலாம். எனது தாத்தாவின் தம்பி அவர். என் ஊரில் இருக்கும் எந்தப் பாட்டனுக்கும் இந்த வரலாறு பாட்டோடு பாடி உரைக்கத் தெரியும். இவ்வெல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிறு விசயத்தையும் சொல்ல வேண்டும். இந்த சாங்கயங்கள் அனைத்தின் போதும் மாலாடு மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தகுந்த உண்மை. குலபங்கம் செய்த பாவத்திற்கான தண்டனையோ அது என்றார் கொண்ட தொட்டியா.

இவ்வாறு சத்திரியர்களாக இருக்கும் 'பைடிதல்லிவாரு' (எனது சொந்தக் குலம்) ராஜிலுகளாக இருக்க, அவர்கள் சக்கலியர்கள் என்றும் மாதிகர்கள் என்றும் அழைக்கப்படுவது ஏனென்றால் கொண்ட தொட்டியா சொன்ன 'நமது தெய்வம் வேறு தம்பியின் தெய்வம் வேறு. அவனது சாங்கியம் வேறு நமது சாங்கியம் வேறு' என்பதுதான். அதாவது சத்திரியர்களாக இருந்தும் பௌத்தத்தைப் பின்பற்றியதால் தாழ்த்தப் பட்டதும் பார்ப்பனிய தலைமையைப் பின்பற்றியதால் ராஜிலுகள் இன்னும் தங்களைச் சத்திரியர்கள் என்று சொல்லிக் கொண்டு உண்பன கொள்வன (இந்த ஒரு குறிப்பிட்ட விழா நாட்கள் தவிர்த்து) தவிர்த்து வருவதும் காணும்போது பௌத்தத்தை எவ்வளவு மூர்க்கமாக பார்ப்பனியம் வீழ்த்தியிருக்கிறது என்பது விளங்கும். ராஜிலுகளை அழிக்கும் பரசுராமனை வணங்கும் ரத்தவெறியர்கள் அல்லவா அவர்கள்.

அதேபோல் பங்காருவாருலு என்றும் சிலர் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்கள் என்றால் பொன் செய்யும் பணியைச் செய்யும் சக்கலியர்கள் அவர்கள். பைடி - என்ற சொல்லும் 'பொன்' என்ற அர்த்தமுடையதுதான். அதே சமயத்தில் 'பைடி' என்ற சொல் ஒருபடி என்ற அளவீட்டையும் குறிக்கும். ('நாழி' என்பதற்குச் சமம் 'படி' என்பது. நாழி என்பது பாலிச் சொல் என்பதை London Palitext Societyன் அகராதியில் கண்டுகொள்க) இவ்வாறு தெய்வக் குறிப்பும் தொழிற் குறிப்பும் பைடி குற்றியவர்கள் எனும் பௌத்தத் துறவிகளின் வழித் தோன்றல்களையும் குறிக்கும் சொல்லாக, குலங்களின் அடையாளமாக இது இருக்கிறது. இவர்கள் பௌத்தத்தைப் பின்பற்றியதாலேயே - பொன் செய்யும் பணியிலிருந்து முடக்கப்பட்டார்கள். விஷ்வகர்மாக்கள் இதை எடுத்துக் கொண்டார்கள். ஆனாலும் என்ன வரலாறு மறைவதில்லை. அந்த வரலாறாய் வாழும் எமது மக்கள் 'பங்காருவாருலு' என்று இன்றும் இருப்பதிலிருந்தே அது விளங்குகிறது.

ஏற்கனவே நான் போதிவாரு, மங்கவாரு, தாசரி, ஜானவாரு போன்றோரின் பணிகளையும் வாழ்க்கை முறைகளையும் பற்றி எம் மக்கள் கூறியதை எடுத்துக் கூறி இருக்கிறேன். 'கூலவாரு' என்பதற்கு தானியங்களைக் கொண்டு வியாபாரம் செய்பவர்கள் என்று அர்த்தம்.

அவர்களே 'செட்டிசெலவாரு' என்றும் அழைக்கப்பட்டார்கள். செட்டிசெலவாரு என்பது பலசரக்குகளைக் கொடுத்தும் வாங்கியும் செய்யும் பணியைக் குறிக்கும் சொல். 'செட்டி' என்ற பாலிச் சொல்லிற்கு 'Exchange' என்று அர்த்தம். பார்ப்பனக் கருத்தியலை ஏற்றுக் கொண்ட வியாபாரமும் செய்தவர்கள் ஆரிய வைசிய செட்டியார்கள் என்று சாதி முத்திரை பெற்றார்கள். பௌத்தர்களாக இருந்து பலவிதமான பண்டங்களை 'கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறை கொடாது' என்று பரிவர்த்தனை செய்தவர்கள் தங்கள் தொழிலில் முடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தீண்டத்தகாதாராக்கப்பட்டு வறியவர் களாயும் ஏழைகளாயும் வலிமையிழந்து வாழ்க்கைக்காதாரமற்றுப் போனார்கள். வியாபாரம் போயிற்று 'செட்டிசெலவாரு' எனும் சொல் மட்டும் மிஞ்சியது. விடுதலை தரும் வரலாற்றை மீட்டும் மீட்டும் மீட்டும் அந்தச் சொல் இனிது பொருள் இனிது. எமது குலத்தவருக்கு - 'பைடிதல்லி வாருலு'க்கு - முறைக்காரரான அவர்கள் இனியவர்கள்; அவர்கள் என் முறைப் பெண்கள்; அழகிகள். அவர்கள் விழிக்கட்டும், அவர்கள் செழிக்கட்டும். உலகுக்கெல்லாம் சொல்லட்டும் தம்மைக் கீழ்ப்படுத்தி ஒற்றை வரையறைக்குள் வரையறுப்பவர்களின் செவிட்டில் அறையும்படி 'செட்டிசெலவாரு' எனும் சொல் ஓங்கி ஒலிக்கட்டும்.

பந்திவாரு பற்றி ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். திருதராஷ்டிரனைப் போல பறைக்குருடால் பாதிக்கப்பட்டுப் பறையர் களுக்கே நாடும் நலனும் வேண்டி பாடுபட்டிருந்தாலும் அயோத்திதாசப் பண்டிதர், 'பந்திவாரு' என்பவர்கள் பன்றி நாட்டை ஆண்ட ராஜாக்கள் என்றும் அவர்கள் புத்தர் தமது தம்மத்தைப் பரப்ப 16000 பௌத்த மித்திரர்களோடு தட்சினபாரதத்திற்கு விஜயம் செய்தபோது 'கண்டலு கூடு' அதாவது ('கண்ட' என்ற தெலுகுச் சொல்லுக்கு கொழுவிய இறைச்சி என்று பொருள்) இறைச்சியும் சோறும் பொங்கி - பெருஞ்சோறு கொடுத்து தம்மம் பரப்ப உதவினார்கள் என்றும் தம்மத்தைப் பன்றி நாட்டில் முழுவதும் பரப்பி சீரும் சிறப்பும் பெற்றவர்கள் என்றும் எழுதியிருக்கிறார். ஆனால் அந்த 'பந்திவாருலு' எமது மக்கள் எனும் உண்மை தெரிந்திருந்தும் சொல்லாமல் 'வாளா' இருந்து விட்டார்.

வளையல் வியாபாரம் செய்தவரை காஜலுவாரு என்றும் பெருந் தோணிகளை வைத்துக் கடல் தாண்டி வியாபாரம் செய்தவர்களை 'ஓடவாருலு' என்றும் 'மாசாத்துலு' என்றும் (ஓக்கூர் மாசாத்தியார்: தன் காதலன் - Lay Buddhist - அவன் இவ்வூரன் அல்ல. எனவே வெல்லக் கூடாது என்று ஊரின் ஒரு பிரிவும் மற்றவர்கள் அவன் வெல்ல வேண்டும் என்று இன்னொரு பக்கமும் நின்று தமக்குள் சண்டை போட்டுக் கொண்டார்கள். ஆனால் நானோ பருத்த அடிப்பனையின் மீதேறி நின்று என் காதலன் வென்றதைக் கண்டேன் என்ற சுவைமிக்க காதல் பாட்டைப் பாடியவள்) கண்ணகி இப்படிப்பட்ட ஒரு மாசாத்துவனின் மகள்தான். அவள் மாதிகத்தி எனும் மாசாத்திதான்!

இங்ஙனமே 'சேனுசெட்டுலுவாரு' எனும் பெயர் எமது மக்கள் சேனு=நிலம் செட்டு ('Chapter' என்பதில் வரும் 'ch' போன்று உச்சரிக்கப்பட வேண்டும் இந்தச் சொல்) என்றால் தோப்பு, மரக்கூட்டம் என்று அர்த்தம். அதாவது நிலனும் புலனும் தோட்டமும் தொரப்பும் வைத்து வாழ்ந்த இல்லறம் எனும் நல்லறம் பேணிய Lay Buddhist என்பதை அறிக.

நிலனும் புலனும் கொண்டு வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் பல நூல்களும் பல மொழிகளும் கற்று சமஸ்கிருதம், பாலி, தெலுகு போன்ற மொழிகளில் பாண்டித்தியம் மிக்கவர்களாகவும் சிறந்த மருத்துவர் களாகவும் எமது குலத்தோர் இருந்து வந்துள்ளனர். எனது பாட்டிக்கு 16 பிள்ளைகளுள் மூத்த பிள்ளையாய் உதித்த அய்யாவு கவிராயர் பற்றித் தெரியாதவர்களே அம்மம்பாளையத்தில் இல்லை என்பது ஓர் எடுத்துக் காட்டாகும். இன்னும் இப்படி எத்தனையோ எமது குலங்களைச் சேர்ந்தவர்கள் அறிவுஜீவிகளாய் பௌத்தம் வளர்த்தவர்கள் என்பதை 'சூதலுவாரு' என்ற சொல்லும் வைபுளவாதுலு எனும் சொல்லும் வெலுநாட்டிலுவாரு என்ற சொல்லும் கவிஜமாவுலு (ஜமாவுலு எனும் தெலுகுச் சொல்லுக்குக் கூட்டம் என்று அர்த்தம்) என்பதும் பிட்டகலுவாரு என்பதும் ராமஜல்லிவாரு என்பதும் ஓங்கி எம்மோடு வழங்கி வருவதினின்று அறியக் கிடக்கிறது.

மலைஎருதுகளை அடக்கி/வேட்டையாடி/பழக்கி கொண்டு வருபவர்களாக கொல்லிமலை, பவளமலை, ஏழமலை, செங்கல்வராயன் மலை, பச்சை மலை, நைனா மலை என்று சேலம், நாமக்கல், சின்ன சேலம், கரூர், ஆத்தூர், திண்டுக்கல் பக்கம் உள்ள எமது மக்களுள் ஒரு சாராரை 'கொண்டெத்துலுவாரு' (கொண்ட=மலை, எத்து=எருதுகள், மலைஎருதுகள் என்று அர்த்தம்) என்றும் ஆடுமாடுகளை பட்டி பட்டியாய் கிடைபோட்டு அவைகளைச் சொத்தாகக் கொண்டு ஊர் ஊராக இன்றும் திரியும் எமது இனத்தாரில் ஒரு சாரார் கொல்லமாதிகலு என்றும்('கொல்ல' என்பதை 'go' என்ற ஆங்கில வார்த்தையை உச்சரிப்பதுபோல உச்சரிக்க வேண்டும்) அறியப்படுகிறார்கள்.

ஆக, இப்படிப்பட்ட எந்த உண்மைகளையும் அறியாமல், எங்களை அண்டாமல், எங்களிடம் என்னதான் நிலவி வருகிறது என்றுகூட தெரிந்து கொள்ளும் குறைந்தபட்ச ஆராய்ச்சி நேர்மையும் ஆர்வமும் இல்லாது சக்கலியர்கள் மலம் அள்ள அழைத்துவர/இழுத்துவரப்பட்டார்கள் என்பது எவ்வளவு அயோக்கியத்தனமானது என்பது சொல்லினால்தான் விளங்கும். அதனால்தான் சொல்லுகிறோம், கதைக்கிறோம், அலறுகிறோம்.

சக்கலியன் என்ற சொல்லின் மூலச்சொல் சாக்கியா என்பதுதான். பாலி மொழியில் கூட 'பற' என்பது அன்னியமானது என்றுதான் குறிக்கிறது. ஆனால் 'பறையர்' என்ற சொல்லும் சாக்கியா என்ற சொல்லும் ஒன்றைக் குறிக்கும் இரண்டு சொற்கள் என்று பேசுபவர்களுக்கு ஏன் சக்கலியன் சாக்கியன் என்ற சொற்கள் ஒரு குடும்பத்து, ஒரு குலத்து,

ஒரு கூட்டத்துச் சொற்கள் என்பது விளங்கமாட்டேன் என்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. 'தமிழ் மூலம்' என்று முக்கிக் கொண்டிருக்கும் தமிழ் மூலவர்கள் கொஞ்சம் மூளை உழைப்புச் செய்தால் 'சிந்தித்தல்' என்ற சொல்லைக் கூட 'சிந்தித்தி' எனும் பாலிச் சொல் என்ற உண்மையை அறியக் கூடும். அங்ஙனமே கதளி என்ற சொல்லும் சின்னாபின்னம் என்ற சொல்லும் ('சின்னா'=chief என்பதில் உள்ள 'chi' போல் உச்சரிக்கப்பட வேண்டும், 'பின்னம்'=Biharல் உள்ள 'Bi'போல் உச்சரிக்கப்பட வேண்டும்) பாலியிலுள்ளனவே. 'சக்கலியா' என்ற பாலிச் சொல்லுக்கு The Achiever/one who is capable என்று அர்த்தம். சாக்கியா என்ற சொல் the 'more' man - மாமனிதன் என்று அர்த்தம். (மா=அதிகம், கல்விமான், ஈகைமான் என்ற சிறப்பு விகுதி என்று பாலியில் உள்ளது)

ஆக,

Sakya = மா + அதிக + மான் = மாதிதமான் =மாதிகமான்

அல்லது Sakya = மா + அதிகம் 'more' man = அதிகன் என்று சுருக்கம் பெற்று Sakya = மாதிகன்.

The 'more' man என்பது one who is more capable என்ற அர்த்தம் தரும் சக்கலியாவோடு அர்த்த ஒருமிப்பு உருவாவதையும் சக்கலியர்கள் சாக்கையர்கள் என்றும் மாதிகாக்கள் என்றும் அழைக்கப்படுவதிலிருந்து அவர்கள் சாக்கியர்கள் என்பது தெற்றென விளங்குகிறது. (இவ்விளக்கத் திற்கு ரிஷ் நேவிஸின் Sakya என்ற நூலைக் கண்ணுறுக) அவர்கள் 'பிராமணன்' என்ற சொல்லை எப்படி ஒரு கொள்கை, ஓர் அடையாளச் சொல்லாக பௌத்தம் எதிர்த்த மத அடிப்படைவாதிகள் கைக் கொண்டார் களோ அதைப் போலவே 'சக்கலியா/சாக்கியா' என்ற சொல்லும் பௌத்தர்களைக் குறிக்கும் ஒரு generic (அது geneaologicalஆக இருந்தபோதும் சக்கலியர்களைப் பொறுத்தவரை) சொல்லாயிருக்கிறது. பலமும் அறிவு தீர்க்கமுமுள்ள ஒருவனை சாக்கிய சிம்ஹடுரா என்று சொல்வது எம் சொல் வழக்கு. சாக்கிய சிம்ஹரு என்று புத்தரைக் குறிக்கும் சொல் என்பது சொல்லாமல் விளங்கும். பார்ப்பனியத்தைச் சுயநல நோக்கோடு சுவீகரித்துக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். பார்ப்பனர்கள் சாக்கிய சிராமணர்களுக்கு எதிராக மறைந்து கரைந்து யுத்த தர்மங்களை உதாசீனம் செய்து நடத்தும் மாயாஜாலம் மிக்க கொலைகாரக் கலகங்களின் கொள்ளையில் கிடைக்கும் அவிர்பாகத்திற்காக. அதனால்தானோ என்னவோ பறையர்களுக்குள்ளோ எம்முள் உள்ளதைப் போன்ற குலங்களும் கோத்திரங்களும் கிடையாது.

அதேபோல பிராமணன் என்று சொல்லிக் கொள்ளத் துடிக்கும் ஆனால் சொல்லிக் கொள்ள முடியாதிருக்கும் மற்ற சாதிகளைப் பாருங்கள். குங்குமப் பொட்டுக் கவுண்டர் கூட்டம், பெரிய கவுண்டர் கூட்டம், சின்ன மணியன் கூட்டம், நரம்புகூட்டு கவுண்டர், வரப்பு கட்டும் கவுண்டர்,

தக்காளிக் கவுண்டர் என்றுதான் பிரிவுகள் இருக்கின்றன. இவற்றிற்குப் பின் பெரிதாக ஏதொரு வரலாறும் இல்லை என்பது மேற்சொன்ன சொற்களாலேயே விளங்கும். வெகு சுவாரசியமான ஓர் உண்மையும் உண்டு: அது 'கவுண்டன்' என்ற சொல் தமிழ்ச் சொல் இல்லை என்பதுதான். நாடோடிகளாக வந்த கொடாக்களான (gowda) இவர்கள் கொங்கு தேசத்திலிருந்து கொங்கு மாதிகர்களைப் பார்த்துத் தங்களையும் கொங்குக் கவுண்டர்கள் என்று அழைத்துக்கொண்டார்கள். கொங்கு மாதிகர்கள் வெள்ளாமை செய்வதைப் பார்த்துத் தாங்களும் வெள்ளாமை செய்ய முற்பட்டார்கள். 'கவுண்டம்' - என்ற சொல் 'கௌண்டன்யம்' என்றும் கோமியம் என்றும் வழங்கும் சமஸ்கிருதச் சொல். மாட்டின் சாணி என்று அர்த்தம். வெட்கம் கெட்ட பார்ப்பனர்கள் மாட்டின் சாணியிலிருந்து உதித்த ரிஷியின் பெயரை கௌண்டன்ய ரிஷி என்றும் தம்மைக் கௌண்டன்ய ரிஷி குலத்தார்கள் என்றும் சொல்லிக் கொள்ள, பார்ப்பனக் கருத்தியல் வேண்டி சுவீகரித்துக் கொண்ட இந்நாடோடிகளும் அதன் அர்த்தம் இன்னதென்று அறியாமலேயே தங்களைக் கவுண்டர்கள் என்று அழைத்துக் கொள்வாராயினர்.

அப்படியே தேவர்கள் என்பவர்கள் திருடர்கள் என்பதும் கள்ளர்கள் என்பதும் குற்றப்பரம்பரையினராய் நேற்றுவரை போலிசு ஸ்டேசனுக்குச் சென்று கைநாட்டு வைத்துக் கொண்டிருந்தவர்கள் என்பதும் நாமறியக் கிடக்கும் உண்மை. இவர்களை 'கள்ளம் காசேவாரு கொத்து கோசேவாரு மதுரசீரடு' கள்ளம் செய்பவர்களின் கழுத்தை அறுக்கும் வீரன் மதுரை வீரன் என்று எம் மக்களுடே வழங்கி வரும் பாடலினின்று இவர்கள் கள்ளம் காய்ப்பவர்கள் (கள்ளம் காசேவாரு) என்பது தெளிவு.

ஆக வீரம்மிக்க, போரிடும் பரம்பரையினரான சத்திரியரான சாக்கியர்கள் பௌத்தம் பரப்பும் பொருட்டு அநாதிகாலந்தொட்டே இந்தியா முழுமைக்கும் விரவி இருந்தார்கள் என்பது அறிந்தும் அதை மூடி மறைத்து அவர்களை இழிவு படுத்தும் பொருட்டு அவர்கள் செருப்புத் தைப்பவர்கள், துப்புரவு செய்பவர்கள் என்று கதை கட்டுகிறவர்களின் நிர்மூடத் தன்மையை என்னவென்பது.

எந்தவொரு தொழிலையும் வேறொருவரும் செய்ய நேர்வதை அவரவர் தனிப்பட்ட அறிவும் திறமையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும்தான் பெரும் காரணிகளாக நின்று தீர்மானிக்கின்றன என்பதை அறிவுபூர்வமாக சிந்தித்து ஏற்றுக் கொள்ளாமல் 'இவர்கள் இதுதான்' என்று முத்திரை குத்துவதன் அரசியல் என்ன என்பதை யாம் அறிவோம். எனவேதான் 'நான் இதுதான்' என்ற அரசியலையும் 'நான் இதுவல்ல' என்ற தத்துவத்தையும் முன்வைத்து இன்று சக்கலியப்பெருமகன்கள் எழுகிறார்கள். படையும் பரிவாரங்களும் இழந்து நிற்கும் மன்னன் தன்னை மன்னனென்று சொல்வது அம்பலத்தில் விலை போகாது. அதனால்தான் வாளோடும் வரலாற்றோடும் எழுகிறது எமது இனம்.

இங்ஙனம் பல்வேறு தொழில்களைச் செய்தும் சிறப்புற்றும் குடியோச்சியும் அரசும் சங்கமும் நிறுவி பௌத்தம் எனும் சிராமண மரபை வளர்த்தெடுத்ததனாலேயே சக்கலியர்கள் ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப் பட்டு, நொறுக்கப்பட்டவர்களாக (தலித்) ஆக்கப்பட்டார்கள். இழிவும் பழிப்பும் ஏற்றிய பணிகளைச் செய்யும்படி வற்புறுத்தப்பட்டார்கள்.

ஸ்ரீலங்காவிலும் சாக்கியர்கள் மிக இழிவானதாகக் கருதப்படும் துப்புரவுப் பணியைச் செய்யும்படி நேர்ந்திருக்கிறது என்றாலும் சிங்களர்களும் 'சாக்கியர்களே சக்கலியர்கள்' எனும் வரலாற்று உண்மையை உணராது இருக்கிறார்கள் என்பதும் ஒருபுறம் இருக்க ஆனாலும் 'தொடாதே, தீண்டாதே' என்று எவரொருவரையும் கூறுவாராய் இல்லாதிருப்பதிலிருந்தே தெரிகிறது, அவர்கள் தொழில்களிடையே வித்தியாசம் பார்க்காமல் தொழில் சார்ந்து வாழும் அந்தஸ்து வித்தியாசம் பார்க்கிறவர்கள் என்பது. ஆனால் 'தீண்டத்தகாதவன், தாழ்த்தப்பட்டவன்' என்று பௌத்தனை விரட்டுவதும் கழுவிலேற்றுவதும் மாதிகப் பள்ளிகளை எரிப்பதும் மாதிகப் போதகர்களைக் கொல்வதும்தான் வைதிகத்தை ஏற்றுக் கொண்ட வெறியர்களின் செயல்பாடாக இருக்கிறது.

எமக்கு 'பங்காருவாரு' என்ற சொல் மட்டும் எஞ்சியது; 'பொன்'தான் இல்லை; 'பந்திவாரு' என்ற சொல்தான் இருக்கிறது; பன்றிநாடும் அய்யனாம் சக்கலியப்பெருமாளின் வராகத்திருஅவதாரத்தை உரிமை கொண்டாடும்படியான வழிதான் இல்லை. 'செட்டிசெலவாரு' எனும் சொல்தான் எஞ்சியது. வியாபாரம்தான் இல்லை. 'போதிவாரு' என்ற சொல்தான் எஞ்சியது, 'பௌத்தமும் சங்கமும்' இல்லை. பாலிவாரு என்ற சொல்தான் எஞ்சியது, ஆசிய மொழிகளின் ஆதியும் அந்தமுமற்ற தந்தையும் தாயுமான 'பாலி'யெனும் அருமந்த மொழிதான் இல்லை. 'பைடிதல்லிவாரு' எனும் சொல் மட்டும் எஞ்சியது, குடியும் அரசும் இல்லை. இவ்வாறாக அதல பாதாளத்திற்கு அழுத்தப்பட்டவர்களாய் சக்கலியர்கள் கிடக்கிறார்கள்; சாக்கியர்கள் பௌத்தர்கள் என்ற ஒரு காரணத்தினாலேயே.

இவ்வாறு குலங்கள் மட்டும் தொக்கி எஞ்சியிருக்க கொண்ட பௌத்த கொள்கையும் தொழில்களும் அரசும் வாழ்வும் இல்லாதொழியும்படி ஒழிக்கப்பட்டிருப்பதை எமது சாக்கிய குலக்கொழுந்துகள் கண்ணுற்று,

'விழி மட்டும் இருக்குதிங்கே ஒளிதான் எங்கே?
குளம் மட்டும் இருக்குதிங்கே குமுதம்தான் எங்கே?
கடை கண்டான் எங்கே? சாக்கல்யன் பொருள்தான் எங்கே?'

என்று புதையுண்ட வரலாற்றை மீட்டழைத்து வரும் குரல் புதையுண்டுபோன விஹாரைகளில் மட்டும் மீண்டொலிக்கிறது. புதையுண்ட கடவுளான எமது சக்கலிய பெருமானார் கல்லாலி மரத்தடி போதியனாள், மீட்டும் எழுகிறார். கணக்கு தீர்க்க வரும் அவரின் சந்ததிகளுக்குப் பார்ப்பனர்களும் அவர்தம் 'சதுர் வண்ண' மயக்கில் சிக்கிக்

கிடக்கும் நிர்மூடக் கூட்டங்களும் அண்ணன் சற்றே இளைத்தால் அண்ணன் பொண்டாட்டி தனக்கு அரைப் பொண்டாட்டி என்று சாக்கியரின் வரலாற்றை மறைத்துவரும் பறையர்களும் பதில் சொல்லியே தீர வேண்டும். எழுகிறார்கள் எமது மக்கள்.

ஆக, நாங்கள் உள்ளம், உடல், வாக்கு ஆகியவற்றின் மலங்களை எரிக்கும் அவலோகித பெருமானாம் அமலனின் வழி போற்றும் அமலச்சாதி என்று அறிக; எந்தவொரு அழுக்கும் கசடும் அற்ற நிர்மலனின் வழி தோன்றிய நிர்மலசாத்துகள் என்றறிக. மனிதர் நோக மனிதர் பார்க்கும் வழக்கொழிந்து போக, கண்ணின் கருணை ததும்பி எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாதிருங்கோள், தம்மம் கடைப்பிடியுங்கோள், அதம்மம் கடைப் பிடியாதிங்கோள் என்று நான்கு மறை போதித்த போதிமாதிகப் பெருமாளாம் தாமரைக் கண்ணனான கமலனின் வழித்தோன்றிய கமலச் சாதிகள் என்பதை அறிக.

இப்படியான அமலசாக்கியர்களை நிர்மல சாக்கியர்களை கமலச் சாக்கியர்களை இழிவுபடுத்தி மலம் அள்ளும் விதியாகவும் எமது அவலோஹிதப் பெருமாளைப் புதையுண்ட சாமியாராகவும் ஆக்கிய வன்கொடுமைக்கு முடிவுகட்ட எமது மக்கள் எழுகிறார்கள். சாக்கிய சிம்ஹமே சொல்லினை எடடா, பௌத்தச் சொல்லினை எடடா; இந்தப் புல்லியர் மந்தமதியினை பூழ்த்தி செய்திட என்றே யாம் சக்கிலியர்களுக்கும் பௌத்தத்தின்பால் காதல் மிக்க அன்பர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

கேள்வி: வரலாற்று ரீதியான பௌத்தர்களான சக்கலியர்களின் அரசியல் பிரக்ஞை எப்படி வடிவெடுக்கிறது? அவர்களின் இன்றைய பிரதான பிரச்சினைகள் எவை? இனி, அவர்கள் செய்ய வேண்டுவதுதான் என்ன?

மூன்று பெரிய கேள்விகளை ஒரே மூச்சில் கேட்டிருக்கிறீர்கள். வஞ்சிக்கப்பட்ட சக்கலியர்களின் மீதான உங்கள் Anxietyக்கு நன்றி.

சக்கலியர்கள் பல இடங்களில் சிதறுண்டு கிடக்கிறார்கள். சில இடங்களில் நிலபுலன்களுக்குச் சொந்தக்காரர்களாயும் (நாமக்கல், கரூர், etc.) தொழிலதிபர்களாயும் மிகக் குறுகிய அளவில் அரசுத்துறைகளில் பணிபுரிபவராயும் திருச்சி, மதுரை, தூத்துக்குடி, சென்னை,கோவை போன்ற இடங்களில் துப்புரவுத் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். வறுமையும் நோயும் நொடியும் சுரண்டுபடும் உழைப்பும் காரணமாக புத்தரை 18 அடி உயரமுள்ள பெரும் ஆளாக (பெருமாளாக) கற்பனை செய்து கோயில்கள் எழுப்பி கும்பிட்டார்கள். குட்டக் குட்டக் குனிந்து உயரம் குறைந்து கூன் விழுந்து காணப்படுகிறார்கள். மிகவும் அதீதமான வறுமையில் சிக்கித் தவிக்கிறார்கள். மிகப் பெரிய 'Historical Imagination' இருந்தாலொழிய 'இவர்களா பண்டைய பௌத்தர்களின் எச்ச சொச்சங்கள்' என்று நம்ப முடியா வியப்பும் அயர்ச்சியும் தோன்றும். மறந்து

விடாதீர்கள் ஊனுடையும் வனப்பும் சொற்செட்டும் நிரந்தரமில்லை; சித்திரமும் கைப்பழக்கம், செம்பாலியும் வாய்ப்பழக்கம்.

ஏற்கனவே கள ஆய்வுகள் மூலம் திரட்டிய வாய்மொழி ஆதாரங்கள் எம்மூடு நிலவிவரும் குலங்கள், கதையாடல்கள் போன்றவை யாம் பௌத்தப் பரம்பரைகள் என்பதான வரலாற்றுக்கு இட்டுச் செல்லும் அடையாளங்களாய் தங்கப்பாளங்களை அடையாளங்காட்டும் தாரகை களாய் நிலவி வருவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். தொடர்ந்து பேணப்படாத எதுவும், போதிக்கப்படாத எதுவும், வளர்த்தெடுக்கப்படாத எதுவும் வளனும் வனப்பும் வாழ்வும் செழிப்பும் அழிந்து பட்டுப்போம். அதுவும் தொடர்ந்த பன்முகத் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்ட பௌத்தர்கள் வீழ்ந்து, தாழ்ந்து இன்று உள்ளீடற்ற மனிதர்களாய் ஊசலாடுவது மட்டுமின்றி நரம்பும் சதையோடும் 'இன்னும் சாகாமல்' இவ்வளவு கொடுமைகளை 'இடும்பைக்கே கொள்கலன்'களோ இவர்கள் எனும்படி இருக்கிறார்கள் என்பது வியப்புக்குரியது என்றே சொல்ல வேண்டும். அனைத்துத் தொழில்களையும் சக்கலியர்கள் செய்கிறார்கள். களை எடுத்தல், பயிர் நடுதல், நெல் அறுவடை செய்தல், ஆடுமாடு மேய்த்தல், வரப்பு வாய்க்கால் போடல், நீரிறைத்தல், தோப்பறா செய்தல் என்று பண்ணைப் பணிகளை கிராமங்களிலும் வீதி கூட்டல், வாசல் பெருக்கல், துப்புரவுப் பணி செய்தல் என்று நகர்ப்புறத்திலும் உழைப்புச் சுரண்டப்பட்டு மனிதாபிமானமற்றுக் கீழ்த்தரமாக நடத்தப்பட்டு, மானுடப் பெருமிதம் (Human Dignity) ஏதும் இல்லாது இருக்கிறார்கள்.

சக்கலியர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதைப் பற்றி அறிஞர்கள் பலரும் அதிகாரிகளும் தங்கள் குறிப்பேடுகளிலும் அறிக்கை களிலும் குறிப்பிட்டுள்ளார்கள். அவைகள் வெளிச்சத்துக்கு வராமலும் போராட்டத்திற்குரிய கச்சாப்பொருள்களாகக் கைக் கொள்ளப்படாமலும் இருக்கின்ற துர்பாக்கியத்தை என்னவென்பது?

சக்கலியப் பெண்களோ சொல்லொணா துன்பங்களையும் துயரங் களையும் வீட்டிலும் பாலியல் வன்புணர்ச்சிக் கொடுமைகளால் வெளியிலும் தாங்கித் தாங்கி மனசுள் வைத்து வெம்பி நொந்து மாய்ந்து கொண்டிருக்கிறார்கள். களப்பணி செய்யும் தோழர்கள் பலரும் எப்படி மதுரையிலும் கோவையிலும் உடுமலைப் பேட்டையிலும் பள்ளர்கள், பறையர்கள் கூட சக்கலியர்களை இழிவுபடுத்தி வன்கொடுமைக்கு ஆளாக்கி வருகிறார்கள் என்பதை ஆதாரப்பூர்வமாக பொதுப்பார்வைக்குக் கொண்டு வருகிறார்கள். வெளியே தலித்தென்று ஒன்றுமை பேசியும் உள்ளே வஞ்சிப்பதும் வன்கொடுமையும் செய்யும் டறையர், பள்ளர்களைச் சரியாகவே அடையாளம் கண்டதாலோ என்னவோ 'எங்கரூரு பண்ணாட கொழுத்தா பறையாகும்; பறை கொழுத்தாப் பள்ளியாகும்' என்ற உண்மை மொழி (பழமொழி) வழங்கி வருகிறது. பறைபள்ளு தலைமைகளோ/ அறிவுஜீவிகளோ 'பேசுவது மானம்; பேணுவது காமம்' எனும் ரீதியில்

இரட்டை வேடமும் இரட்டை நாக்கும் இரட்டைப் போக்கும் கொண்டு திரிகிறார்கள். இன்னொருபுறமோ கவுண்டன்கள் கோவை போன்ற மேற்குப் பகுதிகளிலும் தேவன்கள்/கள்ளன்கள் தெற்குப் பகுதிகளிலும் சென்னை போன்ற இடங்களில் மாலாடுகளும் நடுப்பகுதிகளில் நாயுடுகளும் முதலியார்களும் எங்களை வன்கொடுமைக்கு ஆளாக்கி வருகிறார்கள். அது மட்டுமே இன்றி அரசுத்துறைகளோ - காவல்துறை போன்றவை குறிப்பாக நீதி வழங்குவதுதான் எப்போதும் நிகழாத ஒன்று என்றாலும் வன்கொடுமைக்கு/தங்கள் வெறியாட்டத்திற்கு கிடைத்த மென் இலக்குகளாக (soft target) எம் மக்களை ஆணென்றால் உடலைஅடித்து நொறுக்கியும் பெண் என்றால் உடலை பால் ரீதியாக பலாத்காரம் செய்தும் அழித்து வருகிறார்கள். அதே போல எமது சாக்கிய சிசுக்களோ கல்வியும் விளையாட்டும் நல்ல சோறும் துணியும் நட்பும் தோழமை அரவணைப்பும் புன்னகையும் பெறாது பிஞ்சிலேயே வெம்பி உதிர்ந்தும் கருகியும் மடிந்து வருகின்றன.

எமது இனத்தின் விடுதலைக்குப் பாடுபடுவதால் எழுந்த அமைப்புகள் 1875களிலிருந்தே முயன்று வந்திருப்பினும் பறை ஆதிக்கத்தால் உரிய கவனிப்பையும் சரியான பாகப்பிரிவினையையும் பெறாது முடக்கப் பட்டுள்ளது. 75க்கும் மேற்பட்ட அமைப்புகள் இருந்தும் அவை கருத்து பலமும் பொருள்பலமும் ஆள்பலமும் இன்றி பெட்டிக்கடைகளாக சுருங்கிக் கிடக்கின்றன. ஆனாலும் தனிப்பட்ட போராளிகளை மிக அதிகமாக ஈன்றெடுத்துக் கொடுத்த வீரம் மிக்க இனம் எமது என்பதை வரலாறு நெடுக காணக் கிடைக்கும் தரவுகளால் அறிய முடியும். மதுரை வீரன்தான் தோழர் இம்மானுவேலுக்கும் தெற்கில் பள்ளர் எழுச்சிக்கும் ஆதர்சமாய் இருந்த வரலாற்றுப் புருஷன் என்பது ஊர் அறிந்த சேதி.

ஒண்டி வீரன், வீரன் முத்துப் பகடையார், வீரன் கந்தன் பகடையார், வீரன் எல்லையனார், வீரன் அய்யாவுக் கண்ணு என்று சாக்கிய வீரர் எண்ணிக்கை நீண்டு கொண்டே போகிறது.

சாக்கியர்களின் பிரதிநிதியாக லண்டன் சட்டமேதை மாநாட்டில் கலந்து கொண்ட தாத்தா ராவ் பகதூர் எல்.சி.குருசாமியார் அவர்களும் இலங்கையில் மாபெரும் இயக்கத்தைத் தொடங்கிய தந்தை இராஜகோபால் அவர்களும் மாவீரன் ராசப்பனும் நாமக்கல்லில் அருந்ததி குல வெள்ளார் அமைப்பு கட்டி செயல்படும் பேரா.முத்துசாமி அவர்களும் கோவை அதியமானும் மதுரை எஸ்.டி.கே அவர்களும் சென்னையில் சமீபத்தில் தனி இட ஒதுக்கீட்டிற்காகப் பெரும் மாநாடை நடத்தியவரும் அதற்காக மிக நூதனமான முறையில் கொல்லப்பட்டவருமான இனமானத் தியாகி வக்கீல் சேகர் அவர்களும் ஆந்திராவில் நடைமுறைப்படுத்தப்பட்ட A,B,C,D முறையைப் பற்றி ஆராய்ந்து சென்னை சட்டக் கல்லூரியில் 'Lawyers for Justice' என்ற இயக்கத்தை ஆரம்பித்து அதனால் மிக மர்மமாக எங்கோ இழுத்துச் செல்லப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது

கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படும்படியான வரலாற்றை உடைய மாபெரும் போராளி மாயவன் பி.எல். அவர்களும் மாவீரன் செகுடந்தாழ் முருகேசனும் அம்மம்பாளையும் திரு.அயோத்தி கவிராயன் அவர்களும் திரு.பெருமாள் ராஜ் பெருந்தலத்த எழிலரசன், கவிஞர் இளங்கோவன், எம்குல இளம்புயல் சக்கையன் போன்றவர்களும் இவ்வினத்தின் வரலாற்றைத் தேடித்தேடி விடிவைத் தேடித்தேடி போராடிக் கொண்டு வருகிறார்கள். அதே நேரத்தில் அமுது இருப்பதைப் போலவே நஞ்சும் உற்பத்தி ஆகி இருக்கிறது, இந்தச் சமூகத்திலே.

'தானுண்டு தன் வயிறுண்டு' என்று இனத்தின் பெயரால் ஒப்பாரி வைத்து எம்.பி. எம்.எல்.ஏ.க்கள் ஆகிப்போனவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஐ.ஏ.எஸ் அரசு அதிகாரத்தில் இருக்கும் சக்கலியர்களும் உள்ளனர். எம்ஜியாருக்கு வைத்தியம் செய்த மருத்துவர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர்களாக உள்ளவர்கள் இவர்களெல்லாம் கூடத் தமது சக்கலியப் பின்னணியை மறைத்து வாழ்ந்துள்ளனர். இப்படியிருக்கையில் பறையர், பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த தலித் விடுதலை பேசுகிற ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் எமக்கொன்றும் செய்யவில்லையே எனப் புலம்புவதில் என்ன பயன்? அனைத்து தலித்துகள் என்கிற பொது வரையறைக்குள் அகப்படாமல் எஞ்சி நிற்கும் மிச்ச சொச்சங்களான (remainders) சக்கலியர்களின் நலன்களைப் பிற தலித் பிரிவுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் யாரும் பேசுவதில்லை என்பதே நாம் அவர்கள் மீது வைக்கும் விமர்சனம். தனது குடும்ப சுய கஷ்டங்களை, சூழ்நிலைகளை, உபாதைகளை, நிர்ப்பந்தங்களை முதன்மைப்படுத்தி அதனால்தான் என்னால் சமுதாயத்திற்கு எதுவும் செய்யமுடியவில்லை என்று சக்கலியர்களாகப் பிறந்த இந்தப் பெரியவர்கள் பெட்டைப் புலம்பல்கள் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ பறையர்களும் பள்ளர்களும் அப்படிப்பட்ட கஷ்ட ஜீவனத்திற்கு மத்தியில்தான் தமது சாதி நலன்களுக்காகத் துடிக்கவும் தியாகம் செய்யவும் தயங்காது உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இவர்கள் அறிய வேண்டும். 47 விதமான நோய்களால் அவதிப்பட்டவரும் கூன் விழுந்த முதுகுடையவருமான அந்தோனி கிராம்ஷிதான் முசோலினியின் பாசிசத்தை எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மிகக்கொடூரமான வறுமையில் வாடியபோதும் கடைசி நாட்களில் உட்கார்ந்து உட்கார்ந்து எழுதியும் படித்தும் வந்ததால் பிருஷ்டத்தில் ஏற்பட்ட புண்களால் உட்காரவும் நிற்கவும் முடியாமல் மார்க்ஸ் கஷ்டப்பட்டார் என்பதும் சிந்திக்கத்தக்கது. ஒரு கொள்கைக்காக வாழ்ந்தவர்கள் என்பது அவர்களைச் சிறந்த மனிதர்களாக அடையாளம் காட்டியிருக்கிறது. மேலும் வசதி வாய்ப்போடு வாழ்ந்தால் மக்களைப் பற்றி நினைக்கக் கூடாது என்பது முட்டாள்தனம். ராஷ்டிரபதியாக இருந்தும் தலித்துகள் நலன் கருதி கே.ஆர்.நாராயணன் பாடுபடவில்லையா? டாக்டர். அம்பேத்கர்

இல்லையா? மாமேதை எங்கல்ஸ் என்ற பிரபு இருந்ததில்லையா? சாம்ராட் அசோகர் இருந்ததில்லையா? பவுத்தம் பரப்ப அசோகனால் அனுப்பப்பட்ட அனுப்ப மஹதனான அனுப்ப மாதிகனான மகேந்திரனும் அனுப்ப சாக்கியச்சியான சங்கமித்ராவும் இல்லையா?

கொள்கை வேண்டும். அந்தக் கொள்கைக்காக வாழ வேண்டும். எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கட்டும் என்று பாடுபட்ட பௌத்தத்தைப் பின்பற்றியதால் வீழ்த்தப்பட்டோம். இந்த வீழ்ச்சி தனக்கே எல்லாம் வேண்டும் என்ற பேராசை வெறி/ஏகாதிபத்திய வெறி மிக்க பார்ப்பனியத்தாலும் அதனின் தொங்கு சதைகளான சதுர் வண்ணத்தில் சிக்குண்டவர்களாலும் என்பதை அறிந்து கொள்ளாதின்னும் அறியாமை இருட் சிறையில் கிடந்து வாழ்வதோ புழுக்களைப்போல்?

சக்கலியர்கள் தங்களைத் தேய்த்தழிக்கும் வறுமைச் சூழல்களினின்றும் நெஞ்சின் ஊக்கத்தை அரித்துத் தின்றழிக்கும் பார்ப்பனிய/சதுர் வண்ணக் கரையான்களிடமிருந்தும் தம் தம் அளவில் பறையர்கள் திருடித் தின்று வரும் அரசு உரிமைகளைக் கண்ணுற்றுத் தங்கள் அரசியற் பிரக்ஞையைப் (political consciousness) பெற்று வருகிறார்கள். 75க்கும் மேற்பட்ட அமைப்புகளாக ஆங்காங்கு தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படும் யுத்த வியூகங்களை அவர்கள் ஏற்படுத்தி வருகிறார்கள். ஆனால் அவர்களுக்குள் அவர்களின் உண்மையான அடையாளம் என்ன, கொள்கை என்ன, இன்னும் தாங்கள் யார் என்பது பற்றி பிரக்ஞை ஒருமுகமாக ஏற்படாதிருக்கிறது. பார்ப்பன சக்திகளுக்கு தாங்கள் 'பிராமண' கருத்தியலின் வாரிசுகள், உலகை ஏய்க்கும் தொழில்நுட்பத்தின் சொந்தக் காரர்கள் என்ற உயிர்நிலைப் பிரக்ஞை (Existential Brahmanism) இருக்கிறது. எனவேதான் பல வாய்களில் பல கரங்களில் பலதையும் பேசினாலும் செய்தாலும் அது ஒரு மூளையில் இருந்து உற்பத்தி ஆனதுவாய் இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ், வி.இ.ப, பஜ்ரங்தள், பா.ஜ.க என சங்கப் பரிவாரங்கள் பலமுகங்கள் கொண்டு தோற்றமளித்த போதும் ஒரே நோக்கத்துடன் செயல்படுவது இதற்கோர் உதாரணம்.

இப்படிப்பட்ட யுத்த தந்திரத்தை இந்த 75க்கும் மேற்பட்ட பிரிவுகளாய்ச் சிதறுண்டு கிடக்கும் சக்கலிய அமைப்புகள் தங்களுடு நடைமுறைப் படுத்த வேண்டும். தாங்கள் சிராமணக் கருத்தியலான 'எவ்வுயிர்க்கும் செந்தணலோ பூண்டொழுகும்' பௌத்தத்தின் சொந்தக்காரர்கள் என்கிற இருப்பியல் உண்மையை (Existestial Fact) உணர்ந்து கொள்ள வேண்டும். நான் முன்பே குறிப்பிட்ட உயிரியல் சார்ந்த பௌத்தத் தொப்பூள்கொடி உறவை (liberation Biology) கண்டு கொண்டால் வரலாற்றில் ஈடேற வாய்ப்பிருக்கிறது. ஏறியது இறங்கும், இறங்கியது ஏறும் எனும் பௌத்தத் தத்துவத்தை நாம் அறிந்து இறங்கிக் கிடக்கும் பௌத்தத்தை முன்னெடுக்க வேண்டும். ஏனென்றால் remainders/fragments பற்றி பேசாமல் தானே reminderஆகவும் fragmentஆகவும் சிதறுண்டும் தொக்கும் நொறுங்கியும்

எஞ்சியும் கிடக்கின்றது பௌத்தம். எனவே பௌத்தம் சிதறுண்ட, தொக்கிய, எஞ்சியவர்களை எம்மூடு மீட்டும் மூண்டெழுகிறது.

பறையர்களிடமிருந்து அரசுரிமையையும் (Reservation) கவுண்டன் களிடமிருந்து நிலஉரிமையையும் (Land & fixed Assets) பிராமண/வைதிகன் களிடமிருந்து சிராமண/மாதிகத் தத்துவ உரிமைகளையும் (Philosophical Rights) பணக்காரர்களிடமிருந்து ஏழைகளுக்கான உரிமைகளையும் ஆண்களிடமிருந்து பெண்களுக்கான உரிமைகளையும் பிரிக்கும் பாகப் பிரிவினை(partitioning)தான் இன்று சாக்கியர்களான சக்கலியர்களின் பிரக்ஞையாகவும் தத்துவமாகவும் அரசியலாகவும் நடைமுறையில் கொள்ள வேண்டியிருக்கிறது.

கேள்வி: சாக்கியர்கள் 'தீண்டத்தகாதவராக்கப்படுவதினின்றும் மீண்டெழ வேண்டும் என்றும் பௌத்தம் எனும் சிராமண/மாதிக மரபை மீட்டெடுக்க வேண்டும் என்றும் கூறுகிறீர்கள். அது எப்படிப் பட்ட நிகழ்வாக இருக்கும் என்று கனவு காண்கிறீர்கள்?

அறியாமையிலிருந்து பெறும் விடுதலை பற்றிப்பேசுவதாய் எமது பௌத்தம் எழும். 'ஏற்றுக உலையே ஆக்குக சோறே' என்பதுதான் எமது பௌத்தமாக இருக்கும். நமது பௌத்தம் சோறு சீலை கதை பற்றிப் பேசுவதாய் இருக்கும். தற்பாதுகாப்புக் கத்தியைக் கக்கத்தில் வைத்துக் கொள்வதாய் எமது பௌத்தம் இருக்கும். அறியாமையிலிருந்து பெறும் விடுதலையே விடுதலை (Enlightment) என்று எமது பௌத்தம் ஞானத்தைச் சம்பாதிக்கும்; பன்றியின் கொழுவிய இறைச்சியையும் இளம் பசுக் கன்றுகளின் கறியையும் சுவைபடச் சமைத்துக் கடுநறுந்தேறலுடன் விருந்துக்குப் படைத்துத் தாமும் உண்டு மகிழும் உண்டாட்டு வழக்கத்தை எமது பௌத்தம் உரிமை பாராட்டும்; காகிதம் செய்யும் நல் ஆயுதம் செய்யும், சந்தித் தெருப்பெருக்கும் எந்திரம் செய்யும்; உடலையும் உடல் சார்ந்த இன்பங்களையும் பேசுவதாய் எமது பௌத்தம் இருக்கும்; அது வேட்கையின் அரசியலை (the politics of desire) கொண்டாடும்.

ஆண் இனிது, பெண் இனிது சுட்டிப் பால் குறியாப் புணர்ச்சி இனிது என்று எமது பௌத்தம் முழங்கும். ஆணென்றும் பெண்ணென்றும் திணிக்கப்படும் வரையறைகளை ஊதிப் புறந்தள்ளி அனந்தகோடி வண்ணங்களுற்று எமது பௌத்தம் காதலை முதன்மைப் படுத்தும். கவுண்டன்/நாயுடு எனும் சொற்களில் உறைந்து கிடக்கும் வன்முறைகளை கட்டுடைக்கும். அச்சொற்களின் 'அதிகாரங்கள்' எனும் மிகை அர்த்தங்களை (surplus meaning) கொட்டிக் கவிழ்த்து உறிஞ்சிக் குடித்து அதனின் அர்த்தங்களைக் குறைவுபடுத்தும் (meaning deficit). சக்கல்யன் என்ற சொல்லின் வழங்கப்பட்ட அர்த்தங்களை மீண்டும் அதற்குள் பாய்ச்சும். நிலனும் பொழுதும் அரசும் பொருளும் அனைவருக்கும் அனைத்து மானுட சாத்துக்களுக்கும் முறையின் முறையே பகிர்ந்து ஈந்து

மகிழும். 'உண்ணும் சோற்றுக்கு உழைப்பு' என்று உழைப்பை எல்லோருக்கும் உரிய மகிழ்வான செயல்பாடாக்கும். இசையும் கூத்தும் வாய் மொழியும் மக்களுடே இரண்டறக் கலந்து விரவ மகிழ்ந்து கரையும்; படையும் சேனையும் திரட்டும்; சிலம்பும் கொம்பும் கற்கும்; குழலும் யாழும் இனிதென்று பயிலும்; உயிர் சிராமண போதத்தில் சோர்வுறாத மதியை வளர்க்கும்; இதுவும் இன்னுமாய் இருக்கும்

முன்முடிவுகள் ஏதும் இல்லாது நிகழ்வுகளை நடப்புகளைப் பரிசீலிக்கும். ஒரு சமிக்ஞையாகச் சொன்னால் மீட்டெழும் எமது பௌத்தம் தீராத விழிப்புணர்வையும் போராட்டத்தையும் முன்வைக்கும். வாளோடு எமது புத்தர் சிம்ஹத்தின் கர்ஜனையை கர்ஜிக்க வருவதைக் கனவித்துப் போற்றும். இன்னும் கொஞ்சம் புரியும்படிச் சொன்னால் கலாச்சார, விமர்சன நடைமுறையில் பெரியாரைப் போல் இருக்கும். கோயில் தலமனைத்தும் பள்ளி செய்யும் எமது பௌத்தம்.

இப்படியும் இன்னும் அநேககோடி வண்ணங்களோடும் எழும் எமது பௌத்தம் சாக்கியர்களால் முன்னெடுக்கப்படுகிறது. சக்கலியர்கள் முழங்குகிறார்கள்:

புத்தம் மேவ ஜெயதே
(புத்தம் வெல்க)
தம்மம் மேவ ஜெயதே
(தம்மம் வெல்க)
சங்கம் மேவ ஜெயதே
(சங்கம் வெல்க)

பட்டிதொட்டிகளில் கிடக்கும் எமது சக்கலியர்களுக்கு அறியாமையிலிருந்து பெறும் விடுதலை பற்றி சக்கரத்தை உருட்டி, தாகயேரியை முழக்கி விளக்குவதாய் எமது பௌத்தம் இருக்கும். யாங்கள் வரலாற்று ரீதியாக பௌத்தர்கள், அரசியல் ரீதியாக அம்பேத்கர்கள், கலாச்சார ரீதியில் பெரியார்கள் என்று முழங்கும்.

இதுவரை எழுத்தில் இடம்பெறாத பழங்குடி மக்களின் கதைகள்*

அ. மார்க்ஸ்

தலித் இலக்கியங்களையும் தலித் அரசியல் நூல்களையும் வெளியிடுவதில் முன்னோடிச் சாதனைகள் புரிந்துள்ள விடியல் பதிப்பகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள, பழங்குடி மக்களின் வாழ்வைக் களனாகக் கொண்ட மூன்று மொழி பெயர்ப்பு நாவல்கள் நமது களத்திற்குரியவை. பிற மொழிகளிலிருந்து முக்கிய பல நூற்கள் தமிழுக்கு வந்து கொண்டிருக்கும் சூழலில் மகாராஷ்டிர மண்ணில் வாழ்கிற இப்பழங்குடி மக்களைப் பாடு பொருளாகக் கொண்டுள்ள இம்மூன்று நூற்களை[1] தேர்வு செய்து, மொழியாக்கி, வெளியிட்டுள்ள தோழர்கள் சிவா, கோவிந்தசாமி, எஸ். பாலச்சந்திரன், கண்ணன். எம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

இவற்றில் லட்சுமண் மானேயின் 'உபாரா', நாடோடிப் பழங்குடியினரான 'கைக்காடி'களின் வாழ்வைப் பேசுவது. காடுகளில் மூங்கில் சேகரித்துக் கூடை முடைந்து விற்றல், திருமணங்களில் வாத்தியம் இசைத்தல், சில நேரங்களில் விவசாய வேலைகள், பிற நேரங்களில் பிச்சை எடுத்தல் என்பன இவர்களின் தொழில், வாழ்வு. கூடையில் கடவுளரையும் அற்ப சொற்ப உடைமைகளைக் கழுதைகளிலும் ஏற்றிக் கொண்டு ஊர் ஊராக இடம் பெயரும் பிழைப்பு இவர்களுடையது. ஊர் எல்லையில் உயர்சாதி மராத்தியினர் மலம் பெய்யப் பயன்படுத்தும் ஒதுக்குப் புறங்களைக் கூட்டிச் சுத்தம் செய்து தமது கூடாரங்களை அமைத்துக் கொள்வது இவர்கள் வழக்கம். ஊருக்குள் சென்று பிச்சை எடுத்தல் இவர்கள் வாழ்வின் இன்னோர் அங்கம்.

சாந்தாபாய் காலேயின் 'குலாத்தி' ராஜஸ்தானிலிருந்து மராட்டியத்திற்கு இடம் பெயர்ந்து வந்த ஒரு நாடோடிப் பழங்குடிச் சாதியைப் பற்றியது. குடும்பத்துப் பெண்களை, குறிப்பாகச் சகோதரிகளையும் மகள்களையும் (மனைவி மட்டும் விதிவிலக்கு) தமாஷா, லாவணி, ஜல்ஸா என்றெல்லாம் அழைக்கப்படுகிற உல்லாச நடனங்கள் ஆட விட்டு ஆண்கள் மட்டும் உழைக்காமல் சாப்பிடும் ஒட்டுண்ணிச் சமூகத்தில்

*விடியல் பதிப்பகம் வெளியிட்டுள்ள மூன்று மராத்தி தலித் தன் வரலாற்று நாவல்களின் அறிமுகம்: 1. 'உபரா', லட்சுமண் மானே, 2. 'குலாத்தி', கிஷோர் சாந்தாபாய் காலே, 3. 'உச்சாலியா', லக்ஷ்மண் கெய்க்வாட்.

கட்டமைக்கப்பட்டுள்ள மதிப்பீடு: குலாத்திப் பெண்கள் காதலிக்கக் கூடாது; திருமணம் செய்து கொள்ளக் கூடாது. எங்கேனும் தொடர் நடன நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கும்போது அங்குள்ள வசதிக்கார உயர் சாதியான் ஒருவன் ஒரு குலாத்திப் பெண்ணை விரும்பினால் அப்பெண்ணின் குடும்பத் தலைவன் கேட்கிற தொகையைக் கொடுத்து விட்டு அவளுடன் முதல் பாலுறவு கொள்ளலாம். 'சிரா உட்டர்ன' என்பது அதற்கான சடங்கின் பெயர். யாருடனாவது வாழ்ந்து குழந்தை பெற்றுக் கொள்வது, அவன் கைவிட்டுச் சென்றால் எந்த உரிமையையும் கோர இயலாமல் இன்னொருவனை நாடுவது அல்லது விபச்சாரம் செய்வது என்பதுதான் இப்பெண்களின் வாழ்க்கை. இப்படிப் பிறக்கும் குழந்தைகள் பெண்களாயின் அவர்களுக்கும் இவ்வாழ்க்கை தொடரும். ஆண்களாயின் சிறு வயதில் நடன அரங்கில் எடுபிடி வேலைகள், பின் இசைக் கருவிகள் இசைத்தல், மாமா வேலை அல்லது தம் குடும்பப் பெண்களை ஆடவிட்டு வரும் வருவாயில் வாழ்தல். தந்தையற்ற இக்குழந்தைகளில் ஒருவர்தான் இந்நாவலின் நாயகனும் ஆசிரியனுமான சாந்தாபாய் காலே.

மூன்றாவது நாவல் லட்சுமண் கெய்க்வாடின் 'உச்சாலியா'. 'பத்ருத்' எனப்படும் குற்றப் பரம்பரைப் பழங்குடிச் சாதியின் கிளைகளில் ஒன்று உச்சாலியா. சாராம்சமாகக் குற்றப்பண்பைக் கொண்டவர்கள், பிறக்கும் போதே குற்றப் பண்புகளுடன் பிறப்பவர்கள் என்கிற அடிப்படையில் சில சாதிகளை வரையறுத்து அவர்களைக் குற்றப் பரம்பரைச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தது பிரிட்டிஷ் அரசு. இத்தகைய வரையறைக்கான கோட்பாட்டை உருவாக்கியது சீசர் லோம்ப்ரோசோ என்கிற 'மானுடவியல் அறிஞன்.' இவனது கோட்பாட்டின்படி 'குற்ற மனிதர்கள்' என்போர் பிற 'சாதாரண மனிதர்'களிடமிருந்து உயிரியல் அடிப்படையிலேயே வேறுபட்டவர்கள்.

குற்றப்பரம்பரைச் சட்டத்தின்படி இச்சாதியில் பிறந்த வயது வந்த ஆண்கள் அனைவரும் காலையிலும் மாலையிலும் அருகிலுள்ள காவல் நிலையத்திற்குச் சென்று கையெழுத்திட வேண்டும். நெருங்கிய உறவினர் செத்தால் கூட ஊர் தாண்டிச் செல்ல வேண்டுமெனில் காவல் நிலையத்தில் - கொடுக்க வேண்டியவைகளைக் கொடுத்து - அனுமதிச் சீட்டு பெற வேண்டும். காவலர்களுக்கும் கிராம அதிகாரிகளுக்கும் தொடர்ந்து மாமூல் கொடுக்க வேண்டும், இலவச உழைப்பு நல்க வேண்டும். இவர்களின் திருட்டுப் பொருட்களை நகை வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்குவர். இப்படியாகத் திருட்டையே முழுநேரத் தொழிலாகக் கொண்ட வாழ்க்கை ஒன்று அவர்கள் மீது சுமத்தப்படுகிறது. துண்டு பிளேடையும் , ஊர் தாண்டிச் செல்வதற்காகக் காவல் துறை அளிக்கும் அனுமதிச் சீட்டையும் தெய்வங்களாக வழிபட்டு, அவற்றிற்குப் பலியிட்டுத் தொழில் செய்யப் புறப்படுபவர்கள் இவர்கள். தொழில் மந்தமாக உள்ளபோது பறவைகளையும் சிறு விலங்குகளையும்

வேட்டையாடுவர். எதுவும் கிடைக்காத நாட்களில் தொடர்ந்து பல நாட்கள் பட்டினி. பசிக் கொடுமையின் உச்சத்தை இந்நாவலில் சந்திக்கிறோம். பத்துப் பன்னிரண்டு நாட்கள் வரை தண்ணீரைக் குடித்தே கழிக்கிறார்கள். வாய்ப்பிருந்தால் ஒரு துண்டு வெல்லத்தைத் தண்ணீரில் கரைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார் கெய்க்வாடின் அப்பா. பசி தாளாமல் ஆட்டுக் கல்லில் உப்பைத் தடவிக் குழந்தைகள் நக்குகின்றன. காட்டு இலைகளை வேக வைத்துச் சாப்பிடுகின்றனர். குப்பையில் கிடக்கும் புளியங்கொட்டைகளைப் பொறுக்கி ஊற வைத்து உண்கின்றனர். 1947க்குப் பின் குற்றப் பரம்பரைச் சட்டம் ஒழிக்கப்பட்ட பின்பும் அரசாலும் காவல் துறையாலும் குற்றவாளிகளாகவே அணுகப் படுகிறவர்கள் இவர்கள்.

2

இம்மூன்று நாவல்களுக்கும் பொதுவான சில அம்சங்களை இப்போது தொகுத்துக் கொள்வோம். பழங்குடி மக்களின் வாழ்வைச் சொல்பவை இவை என்பதை விரிவாகப் பார்த்தோம். இவர்களின் இரு சாதியினர் (கைக்காடி, குலாத்தி) நாடோடிப் பழங்குடியினர். மூன்றாமவர் (பத்ருத்) குற்றப்பரம்பரையினர்.

நாடோடிகளைப் பொறுத்த மட்டில் அவர்கள் எந்த மண்ணுக்கும் உரியவர்கள் அல்லர். மண்ணின் மைந்தர்கள் என்கிற உணர்வும் அவர்களுக்குக் கிடையாது.[1] ஒரு குறிப்பிட்ட புவியியல் எல்லைக்குள் கட்டாயமாக முடக்கப்பட்டக் குற்றப்பரம்பரையினரைப் பொறுத்த மட்டில் முழுச் சமூகத்தின் எதிரிகளாகவும் கண்காணிக்கப்பட வேண்டியவர்களாகவும் உள்ள நிலையில் அவர்களுக்குங் கூட மண்ணின் மைந்தர்கள்/குடிகள்/குடிபடைகள்/குடிமக்கள் என்பதான உணர்வு தோன்ற வாய்ப்பில்லை. தவிரவும் குலாத்திகள் ராஜஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்த நாடோடிகள். உச்சாலியர்கள் தெலுங்கு மொழி பேசும் குற்றப்பரம்பரையினர்.

இந்த வகையில் அவர்கள் பிற மராட்டிய தலித் சமூகங்களிலிருந்து வேறுபட்டு நிற்பது கண்கூடு. அங்குள்ள தலித் சமூகங்களில் மஹர், மங் எனும் இரு சாதிகள் பிரதானமானவை. இங்குள்ள அருந்ததியர், பறையர், பள்ளர் என்பது போல. இவர்கள் நாடோடிகள் அல்லர்.

ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தீண்டாமைக் குள்ளாக்கப்பட்ட போதிலும் ஏதேனும் ஒரு கிராமத்தோடு பிணைப் புற்றவர்கள். பொது அடிமைகள். இடம் பெயராத (நிரந்தர)

1. உபாராவில் சித்தரிக்கப்படும் 'கைக்காடி'க் குடும்பங்களுக்குச் சில கிராமங்கள் கூடை முடைவதற்கும் பிச்சை எடுப்பதற்குமென ஒதுக்கப்படுகின்றன. 'பாலூத்' உரிமைகளும் பெயருக்கு வழங்கப்படுகின்றன. எனினும் அவர்கள் அக்கிராமங்களில் நிரந்தரமாக வாழ்வதில்லை. அங்கு அவர்களுக்கு நிரந்தரக் குடிசைகளுமில்லை.

விவசாயத்தோடு கட்டாயமாக (sedantic agriculture) இணைக்கப்பட்டவர்கள். இவ்வாறு பிணைக்கப்பட்டிருப்பதின் இரு விளைவுகள் கவனிக்கத் தக்கவை. கடுமையான பொருளாதாரச் சுரண்டல், இலவச உழைப்பு ஆகியவற்றோடு தமக்கென ஒதுக்கப்பட்ட தீட்டுக் கழித்தல், சவம் காவுதல், பறை அடித்தல், மலம் அள்ளுதல் என்பன போன்ற இழிவான சாதீயக் கடமைகளையும் அவர்கள் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு தீண்டாமையின் உச்சத்தை இவர்கள் (மஹர், மங்) அனுபவித்த போதிலும் மிகமிகக் குறைந்த அளவிலேனும் இவர்களது வாழ்நிலைத் தேவைகள் கிராம சமுதாயத்தால் பூர்த்தி செய்யப்படுகின்றன. இந்தச் சமூக அமைப்பை உயர்த்திப் பிடிக்கும் அறிவு ஜீவிகள் இந்த அம்சத்தைப் புகழ்ந்து பேசுவதை யோசிப்பவர்கள் விளங்கிக் கொள்ள இயலும்.

நாடோடிகளுக்கு நிலத்தோடு உள்ள இந்தச் சார்பு நிலையும் பிணைப்பும் குறைவென்பதால் ஒப்பீட்டளவில் இவர்கள் சுதந்திர மானவர்கள். எனினும் இந்த மண்ணின் எப்பகுதியின் மீதும் இவர்களுக்கு எந்தவிதமான பாத்தியதையும் உரிமையும் கிடையாது. குறைந்த பட்சமாகவேனும் இவர்களின் வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பையும் கூட இந்துச் சமூக அமைப்பு ஏற்றுக் கொள்வதில்லை. எனவே சமவெளிகளில் நாடோடிகளாக வாழ்கிற இவர்களுக்கும் குறைந்தபட்ச உடை, உணவு ஆகியவற்றிற்கும் உத்தரவாதமில்லை.[2] பசிக் கொடுமையின் உச்சத்தை அனுபவிக்க வேண்டிய கட்டாயம் இவர்கள் மீது திணிக்கப்படுவதை இந்த நாவல்களில் நாம் சந்திப்பது இப்படித்தான். எனினும் இந்த நாடோடிப் பழங்குடியினர் மீது இழிவான சாதிக் கடமைகள் சுமத்தப்படுவதில்லை. ஆனாலும் இவர்களை முழுமையாகத் தீண்டத்தகாதவர்களாகவும் இந்துச் சமூகம் கருதுவதில்லை, நடத்துவ தில்லை. இது அவர்களை ஒரு வகையில் இரண்டுங் கெட்டான் நிலையில் நிறுத்தி விடுகிறது. தம்மை அவர்கள் கீழானவர்களாக உணர்கிறபோதும் தீண்டத்தகாதவர்களாக உணர்வதில்லை. சொல்லப்போனால் இதரத் தீண்டத்தகாதவர்களை இவர்களும் தீண்டத்தகாதவர்களாகவே கருதும் நிலையும் ஏற்படுகிறது. இப்பிரதிகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

---

2. தீண்டத்தகாத சாதியரல்ல எனக் காரணஞ்சொல்லி அரசு நிறுவனமொன்று லட்சுமண் மானேக்கு உதவி செய்ய மறுக்கிறது. மானே சொல்கிறார்: 'யாரை நீங்கள் தீண்டத்தகாதவர் என அழைப்பீர்களோ என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதோ பாருங்கள் ஒரு மஹர் சாதியைச் சேர்ந்தவனுக்கு இறந்து போன விலங்குகளின் தோலை உரிக்கும் தொழிலாவது இருக்கிறது. நல்ல நிலைமையில் இல்லாவிட்டாலும் அவன் ஒதுங்குவதற்கு ஒரு கூரை இருக்கிறது. ஆனால் எனக்கு... மண்ணில் எனக்கு இடமில்லை, வானத்தை என் கைகள் எட்டுவதில்லை. மனிதர்கள் மலம் கழிக்கும் இடத்தில் வசிக்கும் ஒருவன் தீண்டத்தகாதவன் அல்லவா? அவன் தீண்டத்தகாதவன் அல்ல என்றால் வேறு யார்தான் தீண்டத்தகாதவர்? வயிற்றுப் பிழைப்புக்காக ஊர் ஊராகச் சுற்றித் திரிபவருக்கு என்ன பெயர்?' (உபாரா, பக்.250-251).

எடுத்துக்காட்டாகச் சில: தாம் இடம் பெயரும்போது எதிரே மஹர் சாதிக்காரர் யாராவது வந்துவிடக் கூடாது என்பதில் கைக்காடிகள் கவனமாக இருக்கின்றனர் (உபாரா, பக்.35). தனது சாதிக்கு அப்பால் ஒரு பெண்ணை லட்சுமண் மானே காதலித்து திருமணம் செய்கிறபோது கைக்காடிகள் அதனைக் கண்டிக்கின்றனர். சாதி விலக்கு செய்யத் துணிகின்றனர். அவள் மராத்திக்காரி என மானே கூறுகிறார். 'அவ மராத்திக்காரி என்பதற்கு என்ன அத்தாட்சி? அவ மஹர் இல்லீங்கறதுக்கு என்ன அத்தாட்சி? அவ பொறந்தபோது யாரு பாத்தாங்க?' என மானேயின் அப்பா கேட்கிறார் (உபாரா, பக்.244). சாதிப் பஞ்சாயத்து இப்பிரச்சினையை விவாதிக்கும்போதும், 'உன்னோட சாதியப் பத்தியோ உன்னோட சனங்களைப் பத்தியோ உனக்கு அக்கறையில்லை. நீ ஒரு கேவலமான மஹர் பொம்பள மாதிரிப் போறே' எனப் பஞ்சாயத்தார் மானேயைக் கடிந்து கொள்கின்றனர் (பக்.278).

குலாத்திகளுங்கூட மஹர், மங் சாதியினரைத் தீண்டத்தகாத வர்களாகவே கருதுகின்றனர். மராத்தியர் எவருடனும் உறவு கொள்வதையும் நிரந்தரமாக வாழ்வதையும் அனுமதிக்கும் குலாத்திச் சமூகம், ஒரு 'குலாத்திப் பெண், மஹரையோ அல்லது முஸ்லிமையோ மணந்து கொள்வதை மாபெரும் குற்றமாகப்' பார்க்கிறது (குலாத்தி, பக்.74). குஷூம் என்கிற குலாத்திப் பெண் கும்ளே என்கிற மஹருடன் ஓடிப்போய்விட்டதற்காக அவளையும் அவளுக்கு உதவி செய்த ஒரு குலாத்தியையும் சாதி விலக்கு செய்த நிகழ்வைக் காலே விவரிக்கிறார் (அதே பக்கம்).

குற்றப்பரம்பரையினரான உச்சாலியர்கள் சட்டத்தாலும் காவல் துறையாலும் கிராம எல்லைக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் என்றோம். இவர்கள் கிராமத்தாரால் தீண்டத்தகாதவர்களாகவே கருதப்படுகின்றனர். அம்மி, ஆட்டுக்கல் கொத்துவதற்கு இவர்கள் அனுமதிக்கப்பட்ட போதும் உரல்களிலுள்ள மாவின் மீது இவர்களின் கை படக்கூடாது என்பதில் மராத்தியர் குறியாக உள்ளனர் (உச்சாலியா, பக்.45). எனினும் இவர்கள் பலி கொடுத்த ஆட்டின் பச்சை மாமிசத்தில் பங்கு கோருவதற்கு மட்டும் மராத்தி உயர் சாதியினர் தயங்குவதில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரான மங்குகளும் பங்கு கோரி வருகின்றனர். ஆனாலும் அவர்களின் கூடைகள் தனியாக வைக்கப்படுகின்றன. எல்லோரது கூடைகளிலும் மாமிசத்தைப் பகிர்ந்து வருகிற கெய்க்வாடின் அம்மா, மங்குகளின் கூடைகளுக்கு அருகில் வரும்போது மட்டும் 'கூடையின் மீது கை பட்டுவிடாதவாறு எச்சரிக்கையாக இருக்கிறார்' (பக்.49).

மகாராஷ்டிர மாநிலத்தின் சட்டபூர்வமான சாதி வகைப்பாட்டில் இவர்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அட்டவணைப் பழங்குடியினர் (Scheduled Tribes) என வகைப்படுத்தப்படுகின்றனரா

இல்லை பிற்படுத்தப்பட்ட சாதிகளின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனரா என்பது புரியவில்லை. நூல்களை மொழியாக்கிய தோழர்களுக்கும் இது பற்றித் தெளிவில்லை. பிரதிக்குள்ளிருந்தும் இவர்களின் சட்டபூர்வமான நிலை குறித்துத் தீர்மானகரமாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. எனினும் இம்மூன்று புதினங்களையும் வெறும் இலக்கியப் பிரதிகளாக மட்டு மின்றிச் சமூகவியல் ஆவணங்களாகவும் வாசிக்க வேண்டிய நிலையில் இது குறித்து நாம் யோசிப்பதும் தவிர்க்க இயலாததாகிறது.

'என்னுடைய சாதி பிற்படுத்தப்பட்ட சாதிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்ததை அறிந்தேன்' என்கிறார் மானே (உபாரா, பக்.210). 'குலாத்தி போன்ற பிற்பட்ட சமூகத்தினருக்குக் கல்வி நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடுகள் இருப்பதாக எனக்குத் தெரியும்' எனவும் (குலாத்தி, பக்.106) தேர்வு முடிவுகள் வந்தபோது பிற்படுத்தப்பட்ட மாணவர்களில் தாம் இரண்டாவதாக வந்ததாகவும் குறிப்பிடுகிறார் காலே (பக்.164). சட்டப்படி குற்றப்பரம்பரைச் சாதியாக வரையறுக்கப்பட்டிருந்த உச்சாலியர்கள் பற்றிய நாவலிலும் 'பிற்படுத்தப்பட்டவர்களுக்கான பால் பண்ணை ஒன்றை அண்ணி நடத்தினார்' என்று பதிவு செய்கிறார் கெய்க்வாட் (உச்சாலியா, பக்.219).

பிரதிகளில் பயன்படுத்தப்படுகிற 'பிற்படுத்தப்பட்ட' என்கிற சொல் சட்டபூர்வமான வரையறையைக் குறிக்கிறதா இல்லை, பொதுவாகப் பின்தங்கிய, வளர்ச்சியற்ற, கீழ்நிலையில் உள்ள என்கிற பொருளில் பயன்படுத்தப்படுகிறதா என்பது விளங்கவில்லை. நமது சூழலுடன் ஒப்பிட்டு அதன் அடிப்படையிலும் இறுதியாக ஒன்றும் முடிவு செய்ய இயலவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் குற்றப்பரம்பரைச் சாதிகளாக வரையறுக்கப்பட்டிருந்த சிலர் இன்று பழங்குடிப்பட்டியலிலும் (எ.டு. இருளர்) இன்னும் சிலர் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலும் (எ.டு. பிறன்மலைக் கள்ளர் - மிகப்பிற்படுத்தப்பட்டோர்) உள்ளடக்கப் பட்டுள்ளனர். குலாத்தி சமூகத்திற்கு ஓரளவு இணையாகச் சொல்லத்தக்க இசை வேளாளர்களும் இங்கே அட்டவணைச் சாதியாக வரையறுக்கப் படுவதில்லை.

சட்டபூர்வமான நிலை எதுவாக இருந்தபோதிலும் தம் மீது சுமத்தப் படுகிற இழிவுகளின் அடிப்படையில் தாங்கள் அனைவருமே தலித்துகளாகத்தான் மராட்டிய சமூகத்தில் அறியப்படுகின்றனர் என்பதாக இம்மூன்று ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர் (நூலாசிரியர்களுடன் தொலைபேசியில் உரையாடியதன் அடிப்படையில் திரு. கண்ணன். எம் இதைக்குறிப்பிடுகிறார்). தவிரவும் தலித் இலக்கிய விருதுகள் இப்பிரதி களுக்கு வழங்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது (எ.டு. தலித் சாகித்ய விருது, டாக்டர். பாபா சாகேப் அம்பேத்கர் புரஸ்கார் விருது முதலியன 'குலாத்தி'க்கு வழங்கப்பட்டுள்ளன). பிரதிகளில் வெளிப்படும் இவர்களின் வாழ்வை வாசிக்கும்போதும் இவர்கள் தீண்டத்தகாதவர்களாக

ஒதுக்கப்பட்டுள்ள நிலை நமக்கு விளங்குகிறது. தங்களைப் பற்றிச் சொல்லும்போது 'தீண்டப்படாத சாதிகளாகிய நாங்கள்' என்றே குறிப்பிடுகிறார் கெய்க்வாட் (உச்சாலியா, பக்.45). அம்மி கொத்த அனுமதிக்கப்பட்டபோதுங்கூட மாவின் மீது இவர்களின் கை படக்கூடாது என்பதில் ஆதிக்கச் சாதியினர் குறியாக இருக்கின்றனர். ஊருக்கு வெளியே மராத்தியர் மலம் கழிக்கும் இடத்தைக் கூட்டி ஒதுக்கிக் குடியிருக்கும் பிச்சைக்காரச் சாதியினர்தான் கைக்காடிகள். இவர்கள் நாய்களோடு போட்டி போட்டுக் கொண்டு எச்சில் இலைகளைப் பொறுக்குகின்றனர் (உபாரா, பக்.140). திருமண வீட்டில் தப்பட்டை வாசித்துக் களைத்து நிற்கும் நிலையில் கூட இவர்களுக்குத் தம்ளரில் தண்ணீர் கொடுக்காமல் கையை நீட்டச் சொல்லி ஊற்றுகின்றனர். தவறிப்போய் மானேயின் கை தண்ணீர்த் தொட்டியில் பட்டபோது, தண்ணியை நாசம் பண்ணிட்டியே எனத் திட்டுகின்றனர். தண்ணியைத் தீட்டாக்கிய செய்தி பரவி, இறுதியாக ஒரு தொட்டித் தண்ணீரையும் கீழே ஊற்றிவிட்டு மாட்டு வண்டியில் புதிதாகத் தண்ணீர் கொண்டு வரும் பொறுப்பு கைக்காடிகளின் மீது சுமத்தப்படுகிறது (பக்.148). இவர்கள் தீண்டத்தகாதவர்களாக நடத்தப் படுவதற்கு வேறென்ன சான்றுகள் வேண்டும்?

3

குலாத்திகளைப் பொருத்தமட்டில் அந்த சாதிப் பெண்களின் உடல்கள் இந்த உயர்சாதி ஆணாதிக்கச் சமூகத்திற்குத் தேவை. அவர்களது வீட்டிலேயே வந்து, தங்கி, உண்டு, உறவு கொள்ள வேண்டிய நிலையில் மராட்டியர்கள் இவர்கள் மீது தீண்டாமையைக் கடைப்பிடிக்க இயலாத நிலையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தீண்டாமைக்குப் பின்புலமாக உள்ள கருத்தியல், சடங்காசாரங்கள் என்பவை எத்தன்மை யாயினும் நடைமுறையில் அது உடலை ஒதுக்குவதாகவே உள்ளது. உடல் மீதான இச்சை என்பது அறிவையும் தர்க்கத்தையும் சடங்கையும் மரபையும் மதத்தையும் வென்று விடுகிற சக்தி மிக்கதாக இருக்கிறது. இச்சை முன் தீண்டாமை தோற்றுப்போய் விடுகிறது. கடுந்தீண்டாமை கடைப்பிடிக்கப் படக் கூடிய தாழ்த்தப்பட்ட பெண்களின் உடல்களாயினும் அவற்றின் மீது பாலியல் வன்முறை மேற்கொள்ள உயர்சாதிஆண்கள் தயக்கம் காட்டுவதில்லை.

குலாத்திகள் தீண்டாமையை அனுபவிக்கவில்லையாயினும் கற்பு, குடும்பம் முதலான மதிப்பீடுகளின் அடிப்படையில் இச்சமூகம், குறிப்பாக இச்சமூகத்துப் பெண்களும் குழந்தைகளும் கடுமையாக ஒதுக்கல்களுக்கும் இழிவுகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். ஒப்பீட் டளவில் தீண்டாமை குறைவாக உள்ள நகரங்களுக்கு உயர் கல்வியின் பொருட்டு இடம்பெயரும்போதுகூட 'குலாத்தி' என்கிற தனது சாதியை மறைத்து 'மராத்தி' என்று சொல்லும்போதுதான் காலேக்கு தங்க ஓர் அறை

கிடைக்கிறது (குலாத்தி, பக்.156). சாதி தெரிகிற போது அடிக்கடி அறையை மாற்ற வேண்டியுமிருக்கிறது (பக்.154). முஸ்லிம்கள் வசிக்கிற பகுதியில் தங்க நேர்கிறது (பக்.153). கூடப்படிக்கிற மாணவன், 'உன்னுடைய சித்தி என்னிடம் வருவாளா?' என வெளிப்படையாகக் கேட்டு காலேயை அவமானப்படுத்த முடிகிறது (பக்.154).

ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களுக்குத் தமது உடலின் மீது எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் செய்து, ஒட்டு மொத்தமாக அச்சமூகத்து உயர்சாதி ஆண்களின் அதிகாரமும் இச்சையும் செயல்படும் களமாக அது மாற்றப்படும்போது அது தீண்டாமைக்கு அடுத்தபடியாகவும் இணையாகவும் கருத வேண்டிய ஒரு கொடுமையாகிறது. இதன் விளைவாகத்தான் தேவதாசி ஒழிப்புக்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்பட வேண்டிய அவசியம் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தது. விதவைகள், தேவதாசி குலப் பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளித்து அவர்களை இளைஞர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென திராவிட இயக்கத்தின் சார்பில் பிரச்சாரம் செய்யப்பட்டது. குத்தூசி குருசாமி, நெ.து.சுந்தர வடிவேலு ஆகியோர் பிறப்பால் முதலியார்களாயினும் தேவதாசி குலச் சகோதரியரை இப்படித் திருமணம் செய்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. மராத்திய சமூகத்தில் குலாத்திகளை இதுபோல் தலித்துகளுக்கு இணையாகக் கருத வேண்டிய அவசியமிருப்பதைத்தான் தலித் இலக்கிய விருதுகள் இந்நூலுக்கு அளிக்கப்பட்டுள்ள செய்தியும் உறுதி செய்கின்றது.

இப்பிரதிகளினூடாக வெளிப்படுகிற சாதீயத்தின் இரு அம்சங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒன்று: கிராமங்களில் உச்சமாக இருக்கும் தீண்டாமை ஒதுக்கலின் உக்கிரம் இவர்கள் நகரத்திற்கு இடம் பெயரும்போது சற்றே தணிவதை மூன்று புதினங்களும் பதிவு செய்கின்றன. தொழிற் சங்கம், உயர்கல்வி, நகர வாழ்க்கை, நட்பு ஆகியவற்றினூடாகத் தம் மீதான ஒதுக்கல்களிலிருந்து அவர்கள் சற்றே விடுதலை அடைய முடிகிறது. மற்றது: 'குலாத்தி'யில் ஒரு காட்சி, அம்பேஜோகை என்னும் நகரில் தங்குவதற்கு ஒரு வீடு தேடி காலே அலைகிறார். கடைசியாக ஒரு வீடு. வீட்டுக்காரன் கோமதி சாதிக்காரன். பெயரைக் கேட்கிறான். 'கிஷோர் காலே' என்கிறார். 'சாந்தாபாய்' என்கிற தலைப் பெயரை இவர் தவிர்ப்பதை நாம் கவனிக்கிறோம். அடுத்த கேள்வி நாம் எதிர்பார்ப்பதுதான். 'நீ மராத்திக்காரனா இல்லை, பார்ப்பனரா?' 'மராத்தி' என்கிறார் காலே (குலாத்தி, பக்.156). மற்ற இரண்டு நாவல்களிலுங்கூட இந்த மராத்தி என்கிற பதம் பார்ப்பனரையும் தலித்/பழங்குடியினரையும் விலக்கிய இடைநிலை அடையாளமாக விளங்குவதைக் கவனிக்கலாம். பார்ப்பனரைப் பொறுத்த மட்டில் அவர்கள் தமக்குகந்ததாக ஓர் அகில இந்தியத் தேசியத்தைத் தேர்வு செய்து கொள்கின்றனர். நெருக்கடி நேர்ந்தால் மாநில அளவிலான

மொழித் தேசிய அடையாளத்தில் ஒட்டிக் கொள்ளும் தயாரிப்பு நிலையுடனேயே அவர்கள் விளங்குவர். இத்தகைய தேசிய அடையாளங்களிலிருந்து நழுவியவர்களாகவே தலித்துகளும் பழங்குடியினரும் அமைகின்றனர். தொடக்க காலத் தமிழ்த் தேசியச் சொல்லாடல்களிலுங்கூடத் 'தமிழாள் × துலுக்காள்' என வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் போன்றோர் எதிர் நிறுத்தம் செய்ததும் இந்தத் 'தமிழாள்' என்பதிலுங்கூட மாட்டு மாமிசம் தின்பவர்களாயுள்ளவர்களே கருதப் பட்டதும் சிந்திக்கத் தக்கன. பார்ப்பனர்களும் தலித்/பழங்குடியினரும் அல்லாத இடைநிலை சாதி அடையாளமாகவே இந்த தேசிய இனம் உருப்பெறுகிறது.

4

இப்புதினங்களில் பொதுக் கூறுகளில் ஒன்று இம்மூன்றுமே ஒடுக்கப்பட்ட பழங்குடிச் சாதிகளில் பிறந்த மூன்று இளைஞர்கள் எப்படித் தமக்குப் பிறப்பால் விதிக்கப்பட்ட வாழ்விலிருந்து விலகி, படித்து, வளர்ச்சி பெற்று, சாதீய இழிவுகளுக்கு எதிராகத் தம் மக்களைத் திரட்டி, அச்சமூகத்தின் வழிகாட்டிகள், தலைவர்கள் என்கிற நிலையை எட்டிய வரலாற்றைச் சித்தரிப்பவை. சமாஜ்வாடி, யுவக்தளம், பாக்தீய விமுக்தி ஜாமதி சங்காதனம் முதலான அமைப்புகளில் இயங்கி வந்த லட்சுமண் மானே இன்று 'மகாத்மா பூலே சமதா பிரதிஷ்தான்' அமைப்பின் பொதுச் செயலர் ஆகவும் நாடோடி/குற்றப்பரம்பரைப் பழங்குடி மக்களின் ஆய்வு/வளர்ச்சிக்கான இந்தியக் கல்லூரியின் நிறுவனத் தலைவராகவும் உள்ளார்.

மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர் கிஷோர் சாந்தாபாய் காலே, துடிரன் பகுதியில் பழங்குடியினர் மத்தியில் மருத்துவ சேவை புரிந்து வருகிறார். பழங்குடி மக்களுக்கான 'தாரா நினைவு சன்ஸ்தா', 'சாந்தாயி டவாகானா' முதலிய அமைப்புகளை (தன் பாட்டி மற்றும் அம்மாவின் பெயர்களில்) நடத்தி இலவச மருத்துவம், அனாதைக் குழந்தைகளைப் பராமரிப்பது முதலான பணிகளை மேற்கொண்டு வருகிறார். தனது தொடர்ந்த பணிகளின் மூலமாகக் குலாத்திப் பெண்கள் தமாஷா ஆடுவதைக் கிட்டத்தட்ட முடிவுக்குக் கொண்டுவந்து விட்டதாகப் பெருமை கொள்கிறார்.

லட்சுமண் கெய்க்வாட், லாட்டூரில் உள்ள 'ஜனகல்யாண் விகாஸ் சாஸ்தா'வின் தலைவராகவும், 'பாத்கீய விமுக்தி ஜமாதி சங்காதன'த்தின் துணைத் தலைவராகவும் மேலும் பல நாடோடிப் பழங்குடி மக்களுக்கான அமைப்புகளில் உறுப்பினராகவும் உள்ளார்.

இவர்கள் மூவரும் இந்நிலையை எட்டுவதற்கான இளமைப் பின்புலம், அனுபவித்த வறுமை/இழிவு, எதிர்கொண்ட பன்னூறு தடைகள், வெறும் பொருளாதாரம் மட்டுமின்றி இச்சமூக அமைப்பே எவ்வாறு தமது முன்னோக்கிய நகர்வுக்கு எதிராக இருக்கிறது என்பது குறித்த

அனுபவபூர்வமான புரிதல்களை அடைந்த விதம் ஆகியவற்றை 'ப்ளாஷ் பேக்' போன்ற மிகச் சாதாரண இலக்கிய உத்திகளும் கூட இன்றி மிக மிக நேரடியாகச் சொல்லப்பட்ட கதைகள் இவை. இவர்களது முயற்சிகளும் செயற்பாடுகளும் ரொம்பவும் சட்டபூர்வமானவை. இவர்கள் மூவருமே தமது சமூகத்தின் இழிநிலை குறித்து நாணுகின்றனர், வேதனைப்படுகின்றனர். கடின உழைப்பு, முயற்சி, இழிவான பழக்கங்களை விட்டொதுக்குதல், கல்வி ஆகியவற்றின் மூலமாகத் தம் இழிவைப் போக்கிவிட இயலும் என நம்புகின்றனர். 'வெற்றிக்குத் தேவை முயற்சி மட்டுமே' என்கிறார் மானே (உபாரா, முன்னுரை). கைக்காடி சாதிப் பெண்ணைத் தவிர்த்து ஒரு மராத்திப் பெண்ணைத் திருமணம் செய்வதையே தன் லட்சியமாகக் கொண்டு நிறைவேற்றியவர் அவர். உழைப்பு, முயற்சி, கல்வி இவற்றின் மூலம் சமூக உயர்வு பெறுவதற்கு உதாரணமாகத் தன் வாழ்வையே முன் வைக்கிறார் டாக்டர் காலே. தமது சாதியினரின் குடிப்பழக்கம், அசுத்தம் முதலியனவற்றைக் குற்ற உணர்ச்சியோடு சொல்லிச் செல்லும் கெய்க்வாட் வாய்ப்புக் கிடைத்தபோது உயர்சாதியினருடன் இணைந்து பஜனை செய்வதற்கு விரும்புகிறார். சிவலீலாம்ருதம், பகவத் கீதை முதலானவற்றைக் கற்க விரும்புகிறார். (எனினும் அதே திசையில் அவர் தனது வாழ்வைத் தொடரவில்லை என்பதும் இங்கே சொல்லத்தக்கது.)

இம்மூன்று புதினங்களுக்குமான இன்னொரு பொது அம்சம் இவை மூன்றுக்குமே மராத்திய மொழியில் மட்டுமின்றி இந்திய அளவிலும், ஏன் உலக அளவிலுங்கூட அங்கீகாரம் கிடைத்துள்ளது. 'உபாரா'வுக்குச் சாகித்ய அகாதமி பரிசு, உமா சங்கர் ஜோஷியின் பாராட்டு, 'போர்டு பவுண்டேஷனி'ன் இரண்டு லட்ச ரூபாய் பரிசு மற்றும் அமெரிக்கப் பயணம். கெய்க்வாடுக்கு சாகித்ய அகாதமி விருது. காலேக்கு முன்பு குறிப்பிட்டது தவிர தமானி சாகித்ய புரஸ்கார் விருது, வி.கே. பாட்டீல் புரஸ்கார் விருது முதலியன. மூன்று நூற்களுமே உடனடியாக ஆங்கிலத்திலும் பின்னர் வேறு பல இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன.

இப்புதினங்களுக்குக் கிடைத்துள்ள இந்த ஏற்புகளுக்கும் இந்தப் பிரதிகளினூடாக வெளிப்படும் தலித்/பழங்குடி மக்களின் வாழ்க்கை பற்றிய குற்ற உணர்வுக்கும் சட்டபூர்வத் தன்மைக்கும் மேற்தட்டு மதிப்பீடுகளுக்கும் (எ.டு. முயற்சியே வெற்றி தரும்) இடையேயான நேரடியான தொடர்பு நம்மை உறுத்தாமலிருக்க முடியாது.

5

ஓர் இலக்கியப் பிரதியாக இப்புதினங்களை எதிர்கொள்வதற்கு முன் இவற்றுக்கிடையேயான வேறு சில பொருத்தப்பாடுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வோம். இவை மூன்றுமே ஏதோ பல தலைமுறைகளுக்கு

முந்திய சாதீயக் கொடுமைகளை விவரிப்பவையல்ல. சமகால அல்லது ஒரு தலைமுறைக்கு முந்தைய கால வரலாற்றைச் சொல்பவை.

மானே 1949இல் பிறந்தவர்; கெய்க்வாட் 1956இல். காலே எல்லோர்க்கும் இளைஞர் 1970. இப்புதினங்கள் எண்பது, தொண்ணூறுகளில் எழுதப்பட்டவை. இந்தக் கொடுமைகளும் ஒதுக்கல்களும் இப்போதும் நடந்து கொண்டிருப்பவைதான் என்கிற உணர்வுடன் இவற்றை நாம் வாசிப்பது அவசியம். 'இப்போது நான் லட்டூரில் வசித்து வருகிறேன். என் சகோதரர்கள் பிழைப்புக்காகத் திருட்டுத் தொழில் செய்து வருகிறார்கள்' என முடிகிறது 'உச்சாலியா' (பக்.295). தீண்டாமைக்கு அரசியல் சட்டத்தில் முடிவுகட்டி விட்டோம். சாதி என்பது உள்நாட்டுப் பிரச்சினை, அதை சர்வதேசத் தளத்தில் பேச வேண்டியதில்லை என இந்துத்துவ சக்திகளும் தலித்துகளின் தனித்துவத்தை வலியுறுத்தி இன ஒற்றுமையைக் குலைக்கிறார்கள் எனத் தேசியவாதிகளும் நம்மைக் காய்கிற சூழலில் யதார்த்தம் இப்படியாகத்தான் இருக்கிறது என்பது ஒருபக்கம்.

இன்னொரு பக்கம், இப்பழங்குடியினர் மீதான இழிவுகளை எதிர்க்கும் முதல் முயற்சிகளே இவர்களால் இப்போதுதான் தொடங்குகின்றன என அறியும்போது தலித் அரசியலுக்கும் தலித் இயக்கங்களுக்கும் முன்னோடியான மராட்டிய மண்ணிலுங்கூட இந்தப் பழங்குடிகள், நாளது வரை அம்பேத்கரிய இயக்கம்/குடியரசுக் கட்சி முதலான பெயர்களில் இயங்கியவர்களாலுங்கூட அணுகப்படாதவர்களாக இருந்தார்களா என்கிற கேள்வி எழுகின்றது. மஹர், மங் முதலான மண்ணுடன் பிணைக்கப்பட்ட சாதிகளை மட்டும் திரட்டுவதோடு தலித் இயக்கங்கள் நிறுத்திக் கொண்டனவா? பழங்குடியினரின் பிரச்சினைகள் கண்டு கொள்ளப் படாமலேயே தொடர்கின்றனவா?

தமிழகத்திலும் கூட கிட்டத்தட்ட இதுதான் நிலைமை என்பது நமக்குத் தெரியும். பறையர்கள், பள்ளர்கள் ஆகிய சாதியினர் மத்தியிலேயே சென்ற நூற்றாண்டின் முக்காலிறுதி வரை தலித் இயக்கங்கள் உருக் கொண்டன. சென்ற நூற்றாண்டின் இறுதியில்தான் அருந்ததியர்கள் தம்மை இயக்கமாக்கிக் கொள்ள முனைந்தனர். இன்னும் கூட அவர்களது இயக்கம் பலவீனமானதாகவே உள்ளது.

பழங்குடியினர் பற்றிச் சொல்லவே வேண்டாம். தங்களை அவர்கள் இயக்கமாகத் திரட்டிக் கொண்டு அடையாளப்படுத்திக் கொள்ளும் நிலையோ அவர்களிலிருந்து ஒரு தலைவரோ இன்றளவும் உருவாகவில்லை. தோழர்கள் கல்யாணி, லூசியானா, வி.பி. குணசேகரன் முதலானோர் முயற்சியில் அவர்களுக்கான பாதுகாப்பு அமைப்புகள் இன்று உருவாகியுள்ளன (எ.டு. திண்டிவனம் - செஞ்சிப் பகுதியில் கட்டப் பட்டுள்ள 'பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்'). ஆக, பழங்குடியினர் இன்னும் மற்றவர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாகவே உள்ளனர்.

தமிழில் உருவாகியுள்ள தலித் இலக்கியங்களுங்கூட இப்படிப் பலதரப்பட்ட தலித் பிரிவினரின் வாழ்வையும் களனாகக் கொண்டு உருவாகவில்லை. பெரும்பாலான தலித் இயக்கங்கள் பறையர் சமூக வாழ்வையே சித்தரிப்பவை. இதயவேந்தன், மதிவண்ணன் முதலிய மிகச் சிலரே அருந்ததியர் சமூகத்திலிருந்து உருவானவர்கள்; அருந்ததியர் வாழ்வை இலக்கியப் பிரதிகளில் அடையாளப்படுத்துகிறவர்கள். தமிழகத்தின் தென் கோடியிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை உக்கிரத்தோடு வெளிப்படுத்துகிறார் என்.டி.ராஜ்குமார். பள்ளர் சமூகத் திலிருந்து குறிப்பிடத்தக்க புனைவு எழுத்தாளர்கள் அதிகமில்லை. தய்.கந்தசாமி போன்ற மிகச் சிலரே கண்ணுக்குத் தென்படுகின்றனர்.

பழங்குடியினர் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களிடமிருந்து சொல்லத்தக்க எழுத்தாளர்கள் உருவாகும் சூழல் இன்றிருப்பதாகத் தெரியவில்லை; தோன்ற வேண்டும். பலதரப்பட்ட தலித் வாழ்வுகளும் அடையாளங்களும் இலக்கியப் பதிவு பெற வேண்டும். அதற்கான சூழலை உருவாக்குவது நம் கடமை.

6

இந்தப் புதினங்களினூடாக வெளிப்படும் இன்னொரு பொதுக்கூறாக, தீண்டாமைக்கும் சாதீயத்திற்கும் அப்பால் ஆதிக்கச் சாதிகளைச் சேர்ந்த சில தனி மனிதர்களிடம் தலைகாட்டும் சனநாயக உணர்வைச் சொல்லலாம். செய்கிற தொழில், சார்ந்திருக்கும் அரசியல், சில தனிப்பட்ட பண்புகள் ஆகியவற்றினூடாக இத்தகைய உணர்வுகள் உருவாகின்றன. தீண்டத்தகாத இச்சாதிகளிலிருந்து முதல் தலைமுறையாகப் பள்ளிக்கு வர நேர்ந்த இந்தப் பிள்ளைகளிடம் சில ஆசிரியர்களும் பேராசிரியர்களும் நண்பர்களும் அரசியல் தோழர்களும் காட்டும் அன்பு குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர்கள் தாபோலோ, பட்கோன்கர், சவுத்ரி, ஆசாராம் குருஜி, தோழர்கள் பிரதீப் பாடில், பிரகாஷ் ரெட்டி, பகவன் ராவ் தேஷ்பாண்டே ஆசிரியர்கள் எல்லப்ப வெய்து குருஜி, குல்கர்னி குருஜி, பகவன் ராவ் தேஷ்பாண்டே என்றொரு பட்டியலை நாம் இவ்வகையில் இந்தப் புதினங்களிலிருந்து உருவாக்க முடியும். டாக்டர் காலேயின் அன்னை சாந்தாபாயை இரண்டாவது மனைவியாகச் சேர்த்துக் கொண்ட சாலி (நெசவாளர்) சாதியைச் சேர்ந்த வட்டிக்கடைக்காரன் நானாவின் முதல் மனைவியின் பிள்ளைகள் காலேயின் மேற்படிப்பின்போது செய்கிற சிற்சில உதவிகள் இங்கே சொல்லத்தக்கன. மருத்துவக் கல்லூரி நேர்முகத்திற்காக முதன் முதலாக காலே மும்பை செல்கிறபோது நானாவின் முதல் மனைவியின் மகள் ஜெயஸ்ரீயும் அவள் கணவனும் காலேக்கு உதவி செய்கின்றனர்; மருத்துவக்கல்லூரிக்கு அழைத்துச் செல்கின்றனர். இத்தனைக்கும் காலேயும் அவர் தம்பி தீபக்கும்

நானாவுக்குப் பிறந்தவர்களுமல்லர். நானாவுக்கு முன்னால் சாந்தாபாய் கொண்டிருந்த இரு வேறு தொடர்புகளுக்குப் பிறந்த பிள்ளைகள் இவர்கள்.

இது போலவே கீர்த்தி கல்லூரியில் மானே சேர்கிறபோது தோட்டக் காரர் சாதியைச் சேர்ந்த நாராயண் மற்றும் ராம்தாஸ், மாருதி முதலான நண்பர்கள் செய்கிற உதவியும் மஹர் சாதியைச் சேர்ந்த ராம்பாபு தனது ஊர் கிராமப் பஞ்சாயத்தில் கைக்காடிகளுக்கு ஆதரவாகப் பேசி அதன் விளை வாக அடிதடி உருவாவதும் இங்கே குறிப்பிடத்தக்கவை. அங்கொன்றும் இங்கொன்றுமானதும் சாதியை மீறிக் கனலும் நட்புச் சக்திகளையும் சனநாயக உணர்வுகளையுந்தான் அழுகிப்போன இந்துச் சமூகத்தினிடையே நம்பிக்கைக் கீற்றுகளாகக் காணமுடிகிறது.

7

இச்சாதிகள் மூன்றிலும் நிலவுகிற பஞ்சாயத்து முறையையும் (சாதிக்குள் நிலவுகிற ஜாட் பஞ்சாயத்து முறை மட்டுமே இந்த அத்தியாயத்தில் பேசப்படுகிறது. இம்மக்களின் 'குற்றங்களை' விசாரிக்க ஆதிக்கச் சாதியினரால் நடத்தப்படுகிற கிராமப் பஞ்சாயத்து முறை இங்கு விவாதிக்கப்படவில்லை) அவற்றில் வழங்கப்படுகிற அருவருப்பான தண்டனைகளையும் இம்மூன்று நாவலாசிரியர்களுமே கடுமையாகக் கண்டிக்கின்றனர். இது இந்நாவல்களின் இன்னொரு பொது அம்சம். வாதியின் மூத்திரத்தில் மூக்கை நனைக்க வைப்பது, பஞ்சாயத்தார் பெய்யும் மலங்களைப் பிசைந்து ரொட்டி தட்ட வைப்பது, மலமும் மூத்திரமும் நிறைந்த பானையைத் தலையில் சுமக்க வைத்துக் கற்களால் பானையை உடைத்து மலத்தை முகத்தில் வழிய வைப்பது, கடும் அபராதங்கள், சாதி விலக்கு முதலானவை இத்தண்டனைகளில் சில.

நூலாசிரியரின் முயற்சியின் விளைவாக குலாத்திகள் ஜாட் பஞ்சாயத்து முறை ஒழிக்கப்பட்டது நூலின் முன்னுரையிலேயே குறிக்கப்படுகிறது. 'உபாரா'வின் முன்னுரையிலும் இத்தகைய பஞ்சாயத்து ஒன்றையும் அதில் விதிக்கப்பட்ட தண்டனையையும் அருவருப்போடு குறிப்பிடுகிறார் மானே. தங்கள் சாதிப் பஞ்சாயத்து செயல்பட்டு வந்த விதம் இரங்கத் தக்கதாகவும் அருவருப்பாகவும் இருந்ததை கெய்க்வாடும் மனம் நொந்து சுட்டிக் காட்டுகிறார் (உச்சாலியா, பக்.161).

சாதிக்குள் இருக்கும் ஒருசில 'பெரிய' மனிதர்களின் அதிகாரத்தில் இயங்கும் இப்பஞ்சாயத்துகள் தம் முன் வரும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பது மட்டுமின்றி, சில சந்தர்ப்பங்களில் சாதிக் கட்டுமானத்தையும் கவுரவத்தையும் காரணம் காட்டித் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குகின்றன. கடுந்தண்டனைகளையும் வழங்குகின்றன. அபராதத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் பஞ்சாயத்தார் குடித்துக் கும்மாளமடிக்கப் பயன்படுகிறது. எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்வு: இரு வீட்டார் சம்மதத்துடன் கெய்க்வாடின்

அண்ணியின் வீட்டில் ஒரு திருமணம் நடைபெற உள்ளது. அமைதியாக நடைபெற இருந்த திருமணத்தைத் தடுத்து நிறுத்துகிறது பஞ்சாயத்து. மணப்பெண்ணின் தாய் வழிப் பாட்டியொருத்தி ஒரு மராத்தியனோடு வாழ்ந்து வருவதைச் சுட்டிக்காட்டி மணப் பெண்ணின் தாய்க்குத் தண்டனை வழங்க வேண்டுமென்கிறது பஞ்சாயத்து. மலம் தின்ன வைப்பது, மூக்கை அறுப்பது முதலான தண்டனைகளெல்லாம் முன் மொழியப்பட்டு இறுதியில் அவளை மொட்டையடித்துக் கரும்புள்ளி, செம்புள்ளி குத்துகின்றனர். இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் அவளுக்கு விதிக்கப்படுகிறது (உபாரா, பக்.161,162).

இப்படியான பஞ்சாயத்துகளும் அவற்றில் வெளிப்படுகிற ஆணாதிக்க மனோ நிலைகளும் நம்மை அதிர வைக்கின்றன. நாடோடிப் பழங்குடி களைப் பொருத்தமட்டில் பொழுது சாய்வதற்குள் கூடாரம் அடித்துள்ள இடத்திற்குப் பெண்கள் திரும்பியாக வேண்டும். திரும்பாவிட்டால் அவளது ஒழுக்கம் பற்றிய அய்யத்தையும் கடுந்தண்டனையையும் அவள் எதிர் கொள்ள வேண்டும்.

சாதியை, சாதிக் கட்டுமானத்தைக் காப்பாற்றுவது என்கிற கருத்தியலின் அடிப்படையில் இந்த அதிகாரத்தைப் பஞ்சாயத்து எடுத்துக் கொள்கிறது. 'மகனே... சாதியைக் காப்பாத்துறதுக்காக ஒருத்தன் மண்ணைக் கூட திங்கலாம். சாதியில்லாம மோட்சம் கிடைக்காது' என்கிறார் மானேயின் அப்பா (உபாரா, பக்.221).[3] மானே திருமணம் செய்து வந்த பெண்ணை, 'அவ பாப்பாத்தியா இருந்தாலும் நம்ம சாதியில் இடமில்லை' எனக் கறார் பேசுகிறது பஞ்சாயத்து (பக்.275).

பிரதிகளில் வெளிப்படும் பஞ்சாயத்து நிகழ்வுகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது பழங்குடிப் பஞ்சாயத்துகளின் இன்னொரு பரிமாணம் வெளிப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை அல்லது திருவிழாக்களில் இச்சாதி மக்கள் அனைவரும் திரளும்போது பஞ்சாயத்து கூடிப் பல்வேறுவிதமாக வழக்குகளும் விசாரிக்கப்பட்டுத் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இந்த விசாரணைகள் மேம்போக்காக நடப்ப தில்லை. சிக்கலான வழக்குகளாயின் பல நாட்கள் கூட விவாதங்கள் நடைபெறுகின்றன.

வாதி, பிரதிவாதி, இதர குற்றம் சாட்டப்பட்டவர் இவர்கள் ஒவ்வொருவரின் சார்பாகவும் சாதி வழக்கங்களையும் ஏற்கனவே முடிவு சொல்லப்பட்ட பல்வேறு வழக்குகளையும் நன்கறிந்த 'உத்தரவாதிகள்' வழக்காடுகின்றனர். வரலாற்றுச் செய்திகளையும் வழக்குகளையும் சாதக

3. நாடோடிப் பழங்குடியினரைப் போன்று எல்லாவற்றிலிருந்தும் ஒதுக்கப்பட்ட ஒரு சாதிக்கு இத்தகைய பெருமை எவ்வாறு உருவாகிறது. இனக்குழு உணர்வுகள் என்பன மோட்சம் முதலான நம்பிக்கைகளோடு இணைந்து இத்தகைய சாதிப் பெருமை கட்டமைக்கப்படுகிறது. இத்தகைய சாதிய உணர்வைத்தான் இந்துத்துவ சக்திகள் இவற்றோடு நெருக்கங்கொள்வதற்குப் பயன்படுத்துகின்றனவா?

பாதக அம்சங்களையும் மேற்கோள் காட்டித் தேர்ந்த வழக்கறிஞர்களாக இவர்கள் வாதிடுகின்றனர்.

வாதப் பிரதிவாதங்கள் இடையில் நிறுத்தப்பட்டுப் பார்வையாளர்களும் பஞ்சாயத்தார்களும் குழுக்களாகப் பிரிந்து விவாதித்து மீண்டும் கூடி முடிவெடுக்கப்படுவதுமுண்டு. முடிவு சாத்தியமில்லாத நிலையில் மூன்றாவதாக ஓரிடத்தில் கூடி அங்குள்ள பெரியவரின் கருத்தை இறுதித் தீர்ப்பாகவும் ஏற்கின்றனர். ஆக, பெரும்பான்மையான வழக்குளில் அவசரக் கோலத்தில் தீர்ப்புகள் வழங்கப்படுவதில்லை.

இந்தப் பஞ்சாயத்துகளின் இன்னொரு முக்கியக் கூறு, இறுதியில் இவை ஏதோ ஒரு வகையில் இம்மக்களை, அதாவது சாதி உறுப்பினர்களை உள்ளடக்குவதற்காகவே உள்ளன. மராத்திப் பெண்ணை மானே திருமணம் செய்து கொண்ட வழக்கிலுங்கூட சாதிப் பஞ்சாயத்துக் கூடி கடும் விவாதங்களுக்குப் பின் எளிய சடங்கொன்றின் மூலம் அந்தப் பெண்ணைக் கைக்காடிச் சமூகத்தின் ஓர் உறுப்பாக, கைக்காடிகளில் ஒருத்தியாக ஏற்கிறது. கெய்க்வாடின் அண்ணி வீட்டுத் திருமண வழக்கிலுங்கூடக் கடைசியில் திருமணமும் விருந்தும் அமோகமாக நடைபெறுகிறது. தம் அம்மா செய்த 'குற்றத்திற்காக' கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அவமானப்படுத்தப்பட்ட பெண்ணிற்கும் கூட அத்தோடு அந்தக் 'களங்கம்' நீங்குகிறது. தாய்க்கும் மகனுக்குமிடையேயான உறவு (உபாரா, முன்னுரை) தந்தைக்கும் மகளுக்குமிடையேயான உறவு (உச்சாலியா, பக்.80-81) குறித்த மிகவும் சிக்கலான முறை மீறிய பாலியல் வழக்குகளிலுங்கூட அருவருப்பான தீர்ப்புகள், கடுமையான அபராதம் முதலியன வழங்கப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்டவர்கள் முற்றாகச் சாதியிலிருந்து விலக்கி வைக்கப்படவில்லை. உறவு வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட தாய்க்கும் மகனுக்கும் எழுபத்தைந்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட போதிலும் அதை முழுவதும் அவர்களே கட்ட வேண்டியதில்லை, அவர்களும் பிந்தைய சந்ததிகளும் செலுத்தினால் போதும். இது குறித்து மானே அந்தத் தாயிடம் விசாரிக்கும்போது அவள் சொல்கிறாள்: 'தம்பி வெள்ளரி விதையை விதைத்தேன். வெள்ளரியைத் தின்னேன். என்னோட குத்தம் என்ன?' (உபாரா, முன்னுரை). எனக்கு நாலு புருசன். அய்ந்தாவதாக ஒருத்தன் தேவையில்லை. எனது முதல் பையனையே எனக்குப் புருசன் என்கிறாங்களே என்று சொல்லிச் செல்கிறார் அந்தப் பழங்குடித்தாய்.

மகளுடன் உறவு கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட சங்கரய்யாவின் மீசை மகளின் மூத்திரத்தைத் தடவி மழிக்கப்படுகிறது. இருவரையும் சாதி விலக்கமும் செய்கின்றனர். எனினும் நிரந்தரமாக அல்ல. இரண்டாண்டு களுக்கு மட்டும். சாதி விலக்கம் செய்யப்பட்டவர்களை எல்லாவற்றி லிருந்தும் முற்றிலுமாக ஒதுக்கிச் சாகவிடுவதுமில்லை. சாதி விலக்கம் செய்யப்பட்ட சங்கரய்யா தன் ஊருக்கு வந்த கதையை விவரிக்கிறார்

கெய்க்வாட் (உச்சாலியா, பக்.81). தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதிக்கச் சாதியினர் சிரட்டையில் தண்ணீர் கொடுப்பது போலச் சங்கரய்யாவுக்கும் கொடுக்கின்றனர். விவசாயத்திற்குப் பயன்படும் இரும்புச் சட்டியில் உணவிடுகின்றனர். வீட்டிற்கு வெளியே படுக்க வைக்கின்றனர். இவை எல்லாமுங்கூட இரண்டாண்டுகளுக்கு மட்டுமே. அதற்குப் பிறகு எல்லோரையும் போல அவர்களும்.

தண்டனை என்பது நிரந்தர அவமானத்திற்குரியதாகவும் கருதப் படுவதில்லை. வழங்கப்படும் கணத்தோடு முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு அவர்களும் எல்லோரையும் போல அச்சமூக உறுப்பினர்கள்தான். எந்தக் குற்ற உணர்வும் அவமானமும் அவர்கள் மீது தேங்குவதில்லை. சங்கரய்யா வந்து சென்ற கதையைச் சொல்கிற கெய்க்வாட் இறுதியாக, 'சங்கரய்யா வழங்கப்பட்ட தீர்ப்பால் வருத்தப்படவோ வெட்கப்படவோ இல்லை. அவன் எங்களுடன் நடந்து கொண்ட விதம் நட்பானதாகவும் இயல்பானதாகவும் இருந்தது' எனச் சொல்வது (பக்.82) சிந்திக்கத்தக்கது. சிரட்டையில் தண்ணீர் தந்து வீட்டுக்கு வெளியில் நிறுத்தும் போதுங்கூட இரு தரப்பினரும் அதை இயல்பாகவே எடுத்துக் கொள்கின்றனர்.

பிடிக்காத தம்பதியினரைப் பஞ்சாயத்து எளிதில் பிரித்து விடுகிறது. யார் காரணமோ அவர் மற்றவருக்குத் திருமணச் செலவைத் தந்தால் போதும். பிரிந்தவர்கள் மறுமணம் செய்து கொள்வதற்குத் தடை ஏதும் இல்லை. ஒரு வழக்கில் கணவன் தன் மனைவியை இன்னொருவனிடம் அடகு வைக்கிறான். அங்கே அவளுக்கு ஒரு குழந்தை. வழக்கை விசாரித்த பஞ்சாயத்து அவளைக் குற்றமற்றவளாகத் தீர்மானிக்கிறது. இரண்டாவது கணவனுடன் அவளை வாழ அனுமதிக்கிறது. இரண்டாமவன் முதல் வனுக்குத் திருமணச் செலவைத் தந்துவிட வேண்டும், அவ்வளவுதான்.

தீர்ப்புகள் பலவும் அருவருப்பாகவும் இழிவு செய்வதாகவும் இருந்தபோதிலும் அவை சமூக உறுப்பினர்கள் தமக்குள்ளாகவே வழங்கிக் கொள்வது என்பதும் அவை உடனே நிறைவேற்றத்தக்கதாகவும் உடல் துயரை ஏற்படுத்துவதாகவும் ஏதோ ஒரு வகையில் சாதி உறுப்பினர்களை உள்ளடக்குவதாகவுமே உள்ளன என்கிற கூறுகள் கவனிக்கத் தக்கன. (திருட்டைத் தொழிலாகக் கொண்ட குற்றப்பரம்பரையில் காட்டிக் கொடுப்பது பெருங்குற்றமாகக் கருதப்படுகிறது. இதற்கு மரண தண்டனை உட்படக் கடுந்தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அப்படி மரண தண்டனை வழங்கப்பட்ட ஒருவரின் பேரன்தான் கெய்க்வாட். இத்தண்டனைகள் குறித்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சம்: தமக்குள்ளாக இவர்கள் வழங்கிக் கொள்ளும் இந்த இழிவான தண்டனையை ஆதிக் கச் சாதியினர் இவர்கள் மீது சுமத்தும்போது அது வேறொரு பரிமாணத்தை அடைகிறது.)

வழங்கப்படும் தண்டனைகளிலுள்ள இந்த அருவருப்பான கூறுகளை நீக்க வேண்டும் என்பதில் இந்த நூலாசிரியர்களைப் போலவே நமக்கும்

மாற்றுக் கருத்து இருக்க இயலாது. எனினும் இந்தக் கூறுகள் அவர்களின் தண்டனை முறைகளின் ஓரங்கமாக மாறிப் போனதை எப்படி விளங்கிக் கொள்வது? கஞ்சர்பாட் பழங்குடியினர் தமது குலதெய்வத்தைப் போற்றிப் பாடும்போதுகூட, 'ஓ! மாரி உன் பீயை முழுங்குவோம்; உன் மூத்திரத்தைக் குடிப்போம்' என்று வணங்குவதென்ன? (உபாரா, முன்னுரை)

இந்தக் கேள்விக்கு ஒரு தீர்மானகரமான பதில் நமக்குத் தோன்றா விட்டாலும் வேறு சில கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்ளலாம். அதற்கு முன் இந்த மக்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை பற்றிய ஒரு பிரதியியல் விவரணை (உச்சாலியா, பக்.31):

'எங்கள் குடிசை ஓர் அசுத்தமான இடம். தெற்றுப் பூச்சிகளின் கூட்டத்தைப் போலவே நாங்கள் அதனுள்ளே நிரம்பியிருந்தோம். அதே குடிசையில்தான் எங்கள் ஆடுகளுக்கிடையில் ஹரிச்சந்திராவும் நானும் ஒன்றாகப் படுத்துத் தூங்கினோம். குளிர் காலங்களில் நாங்கள் நடுங்கி விறைத்துப் போய்விடுவோம்.'

'ஹரிச்சந்திராவுக்கும் எனக்கும் சேர்த்து ஒரே ஒரு போர்வைதான் இருந்தது. நாய்களுங்கூட வெதுவெதுப்பிற்காக எங்கள் போர்வைக் குள்ளேயே படுத்துக் கொள்ளும். ஆட்டுக்குட்டிகள் அருகில் கட்டப் பட்டிருக்கும். அவை கழிக்கின்ற மூத்திரம் எங்கள் உடம்பின் மீது வெதுவெதுப்பாக வந்து படும். ஆட்டுக் குட்டிகளின் சூடான மூத்திரம் ஒரு கதகதப்பான போர்வையைப் போன்று ஓர் இதமான உணர்ச்சியைத் தந்தது. சில்லென்ற குளிரைப் போக்குகின்ற விதத்தில் ஆட்டுக் குட்டிகள் தொடர்ந்து மூத்திரம் பெய்து கொண்டேயிருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.'

'காலையில் தூங்கி எழுந்தவுடன் போர்வையைத் துவைக்காமலே குடிசையின் கூரையின் மீது தூக்கிப் போட்டு விடுவோம். மூத்திர நாற்றம் எங்கள் மூக்கைத் துளைத்த போதிலும், நாங்கள் அந்த ஈரப் போர்வையையே தொடர்ந்து பயன்படுத்தினோம். எங்கள் புலனுணர்வுகள் செத்துவிட்டன; நாங்கள் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தோம்.'

'போர்வையில் ஏராளமான பேன்கள் இருந்தன. அவற்றைக் கொல்லும் போது நானும் ஹரிச்சந்திராவும் அவற்றை எண்ணத் தொடங்குவோம். நூறு அல்லது இருநூறு வரை எண்ணிய பிறகு எண்ணுவதை நிறுத்தி விடுவோம். வெயிலில் போர்வையை விரித்து வைப்போம். வெயிலின் சூட்டைத் தாங்க முடியாத பேன்கள் அங்குமிங்குமாக ஓடிக் கொண் டிருக்கும். அவற்றை நாங்கள் கற்களால் நசுக்குவோம். அதை நாங்கள் வருடத்திற்கு ஒரு முறைதான் துவைத்தோம்.'

திருட்டுத் தொழிலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட உச்சாலியர்களின் வாழ்க்கை இது. இதைப் படிக்கும்போது குழந்தைப் பருவத்திலேயே

'திருடன்' என்கிற அடையாளம் சுமத்தப்பட்டு, பின்னர் அந்த அடையாளத்தை விரும்பி ஏற்று அந்த வாழ்வின் உச்சங்களை எட்டு வதையே வாழ்க்கையாக அமைத்துக் கொண்ட ஃப்ரெஞ்ச் ஜெனேயின் பிரதிகளிலிருந்து சில க்ாட்சிப் படிமங்கள் நம் கண்முன் விரிகின்றன.

ஜெனேயின் பிரதி ஒன்றில் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்ட இரு குற்றவாளிகள் தங்களுக்கிடையேயான (ஓரினக்) காதலை வெளிப் படுத்திக் கொள்ளும் அடையாளமாக சீலைப் பேன்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். (Edmund White, Genet, Picador, p.) அவரது திருடனின் குறிப்புகள் நூலிலிருந்து இன்னொரு காட்சி: நகரத்து விளக்குக் கம்பமொன்றின் கீழ் தட்டையான வெளுத்த முகமுடைய ஒரு வயதான பெண்ணைச் சந்திக்கிறார் ஜெனே. அந்த முகத்தில் வெளிப்படுவது சோகமா பாசாங்கா என்பது விளங்கவில்லை. அவள் அவரை நெருங்கிப் பிச்சை கேட்கிறாள். அவள் அப்போதுதான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருப்பாள் என்பதை அந்த வட்ட முகத்தில் வெளிப்படும் கம்பீரம் ஜெனேக்கு உணர்த்துகிறது. 'திருடி' என அவர் தனக்குள் சொல்லிக் கொண்டு நகர எத்தனிக்கும்போது சிந்தனையோட்டத்தில் ஒரு தெறிப்பு. பிறந்த சில நாட்களிலேயே தன்னை அனாதையாக விட்டுச் சென்ற தன் தாயாக அவள் ஏன் இருக்கக்கூடாது..? ஓ! அப்படியாயின் அவளை நான் ரோஜா மற்றும் கிளாடியோலிப் பூக்களால் மூழ்கடிப்பேன், அலங்கரிப்பேன். முத்தங்களிட்டு அவளின் உடலைப் போற்றுவேன். அந்த வட்டக் கண்களின் மீது, தட்டை முகத்தின் மீது என் கண்ணீரைச் சொரிவேன்.

இப்படியாக ஜெனே எண்ணி வரும்போது சிந்தனையோட்டத்தில் ஒரு குறுக்குப் பாய்ச்சல். ஏன், ஏன் நான் அழ வேண்டும்? அன்பையும் உன்னதத்தையும் வெளிப்படுத்தும் இந்த வழக்கமான குறியீடுகள், மெய்ப்பாடுகளுக்குப் பதிலாக, முத்தங்கள்/கண்ணீர்த்துளிகள்/பூக்கள் என்பனவற்றிற்கு ஈடாக என்னால் பொருள் கொள்ள முடிந்த வேறு சில வெறுக்கத்தக்க மெய்ப்பாடுகளை நான் ஏன் வெளிப்படுத்தக்கூடாது?

அவள் உடல் முழுக்க எச்சிலால் குளிப்பாட்டுவதில் நான் மகிழ்ச்சி யடைவேன். அவளது தலையில் துப்புவேன். கைகளில் வாந்தி எடுப்பேன். ஆனால் என் தாயாகிய அந்தத் திருடியை நான் போற்றுவேன், வணங்குவேன்.[4]

இதை ஏதோ தன்னை வஞ்சித்த சமூகத்தின் மீதான ஒரு பழி வாங்கலாகவும் கொள்ள முடியாது. அவன் உமிழ்ந்து போற்ற நினைப்பது

4. (Jean Genet, The Thief Journal, Penguin Books, 1965, p14,15) இதே நூலிலிருந்து இன்னொரு படிமம்: ஜெனேயின் திருட்டு நண்பனொருவன் வீடுகளை உடைத்துத் திருடிய பின்னர் வாசலில் அல்லது பின் மாடிப்படி அருகில் 'நான் ஒரு 'வாட்ச்மேனை' நிறுத்திவிட்டு வருகிறேன்' எனச் சொல்லி அங்கு மலம் கழித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருப்பான் (Ibid, p.187).

அவனை ஒதுக்கிய சமூகத்தையல்ல; அபூர்வமாகக் கண்டெடுத்த அன்னையை, சொல்லப்போனால் உமிழ்தல் என்பது ஜெனேயைப் பொருத்தமட்டில் இகழ்ச்சியின் மெய்ப்பாடல்ல. அவன் உமிழ்ந்து இகழவில்லை; உமிழ்ந்து வணங்குகிறான். காறி உமிழ்தல் என்கிற மதிப்பீடு இங்கே தலைகீழாகிறது. மரபு வழிப்பட்ட ஒழுக்கவாதிகளுக்கும் தூய்மைவாதிகளுக்கும் இது அதிர்ச்சியைத்தான் அளிக்கும். ஒரு மரபு வழி வாசகனைச் சுகப்படுத்துவது, சொரிந்து விடுவது ஜெனே உருவாக்குகிற பிரதியின் நோக்கமல்ல.

அதே சமயத்தில் வாசகரை அதிர்ச்சிக்குள்ளாக்குவதற்காக மட்டுமே சொல்லப்பட்டதாகவும் இதை நாம் கருத முடியாது. இதை நாம் 'இழிவின் அழகியல்' என்பதாக விளங்கிக் கொள்வதா? வழக்கமான நமது அரசியல் மதிப்பீடுகள் இங்கே பயனற்றுப் போகின்றன. எல்லாவிதமான ஒழுக்க மதிப்பீடுகளுக்கும் அற விதிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு தேடலின் உச்சம் இது.

எல்லாவற்றிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்ட இம்மக்கள் தங்களைத் தாழ்த்திக் கொள்வதன் மூலம், தங்களை இழிவாக்கிக் கொள்வதன் மூலம், எல்லா மனித மதிப்பீடுகளையும் கீழே தள்ளி மிதிப்பதன் மூலம் அவற்றைப் பயனறச் செய்கின்றனரா? அவற்றின் பயன்பாட்டைத் துறக் கின்றனரா? துறவின் உச்சமா இது? அதனால்தான் சார்த்தர் ஜெனேயைப் 'புனித ஜெனே' என்றாரா? ஒரு புனிதனின் தேட்டம் நன்மையின் உச்சத்தை எட்டுவதாக, கடவுளை நோக்கிய பயணமாக அமைகிறது. நன்மை தீமைகளுக்கு, மேன்மை இழிவுகளுக்கு அப்பாற்பட்டு ஒதுக்கப்பட்ட இந்த இழிகால்களின் தேட்டம் தீமையின் உச்சமாக, குற்றத்தின் உச்சத்தை நோக்கிய பயணமாக இருக்கிறதா?

8

நமது நாவலாசிரியர்கள் மூவரும் இத்தகைய தேட்டத்தை ஆதரிப்பவர்கள் அல்லர், கண்டிப்பவர்கள். நாவலாசிரியர்கள் என்கிற பரிமாணத்தைக் காட்டிலும் அந்தச் சமூகத்தின் தலைவர்கள், அந்தச் சமூகத்தைத் திருத்தி நேர்படச் செய்ய வந்தவர்கள் என்கிற பரிமாணம் அவர்களிடம் மேலோங்கி நிற்கிறது. மானே சொல்வார்: 'நாடோடிப் பழங்குடியினரின் வாழ்க்கை உண்மையிலேயே மாறப் போகிறதா? உள்ளார்ந்த அளவில் அது மாறுமா? அவர்களின் வாழ்க்கை மாறுவதற்கு நம் சமூகம் அனுமதிக்குமா? குறிப் பிட்டதொரு இடத்தில் குடியேறி, புதியதொரு வாழ்க்கை முறையை ஏற்றுக் கொள்வார்களா? ஒரு புதிய பண்பாட்டின் பங்காளிகளாக அவர்கள் வாழ்க்கை நடத்துவார்களா? தங்கள் நெற்றிகளிலிருந்து உபாரா என்னும் களங்கத்தைத் துடைத்தெறிந்துவிட்டு அதிகாரம், சொத்து, கௌரவம், தத்துவார்த்தம், சிந்தனை, கலைகள் போன்ற துறைகளில் இந்தப் பல்வேறு நாடோடிப் பழங்குடியினரின் நீரோட்டங்கள் ஒரே பெரிய மனிதப் பண்பாட்டோடு ஒன்று கலக்குமா? (உபாரா, முன்னுரை)

மற்ற இரு நாவலாசிரியர்களுங்கூட இதே ஒழுக்கமுடையவர்கள்தான். தனது நாவல் வந்த ஆறு மாதத்திற்குள் குலாத்திப் பெண்கள் தமாஷா ஆடுவதை விட்டுவிட்டனர் எனக் காலே கூறுவது (சந்தியா பாண்டேயின் முன்னுரை) முன்பே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜெனே இவர்களிடமிருந்து வேறுபடுகிற புள்ளி இது. தம்மை யொத்தவர்களின் குற்றச் செயல்களைக் கருதி வேதனைப்படுவதோ இழிவைக் கண்டு நொந்து கொள்வதோ மன்னிப்புக் கோருவதோ ஜெனே பிரதிகளின் தொனியாக இருப்பதில்லை. அவற்றை அறிவியல் பூர்வமாக விளக்குவதோ ஆதரவான வாதங்களை முன் வைப்பதோ கூட அவற்றின் நோக்கமல்ல, பணியுமல்ல. பதினோரு வயதில் திருடன் எனவும் பிச்சைக்காரன் எனவும் முத்திரை குத்தப்பட்ட இம்மக்கள் இவற்றைத் தம் சாராம்சப் பண்பாகக் கட்டமைத்துக் கொள்கின்றனர். ஜெனேயைப் பொருத்த மட்டில் திருட்டு என்பது ஒரு செயலின் விவரணம் அல்ல. இருப்பின் வடிவம். எனவே அவற்றை மிகுந்த ஈடுபாட்டுடன் விவரிக்கிறார். தான் எதுவாக இருக்கிறோம் என்பதை முழுமையாகப் புரிந்தேற்றுக் கொண்டதன் விளைவாக அவர் வெட்கத்திலிருந்தும் குற்ற உணர்ச்சியிலிருந்தும் விடுபடுகிறார். பதிலாகத் தனது குற்றமையில் பெருமிதம் கொள்கிறார். தன்னைக் கம்பீரமானவனாகவும் தனது செயல்களை மிக்க அழகானதாகவும் உணர்கிறார். ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கிப் பயணிப்பது உன் நோக்கமானால் இருளை நோக்கிய இயக்கமே எனது பயணம் என ஏற்றுக் கொள்கிறார். அந்தச் சமூகத்தில் ஒருவனாய் அந்தச் சமூகத்திற்குள்ளிருந்து அவர் குரல் ஒலிக்கிறது. ஜெனேயின் பிரதிகள் ஒரு சமூகவியல் ஆவணம் என்கிற நிலையில் நின்றுவிடாமல் இலக்கியப் பிரதி என்கிற நிலையை எட்டுகின்றன.

நமது நாவலாசிரியர்கள் மூவரும் இந்தச் சமூகத்தின் மதிப்பீடு களிலிருந்து விலகி நிற்கின்றனர். அவர்களை வழி நடத்தத் தலைப்படு கின்றனர். திருத்தப்படவேண்டிய ஒன்றாகத் தமது சமூகத்தைக் கையாளு கின்றனர்.[5] இதனால் வெளியிலிருந்து அச்சமூகத்தை உற்று நோக்கும் ஓர் இரண்டாம் நிலைத் தன்மையுடனும் குற்ற உணர்ச்சியுடனும் இப்பிரதிகள் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகிறது. பன்முகப் பரிமாணங்கள்

5. சென்னையில் இம்மூன்று நாவல்களின் விமர்சனக் கூட்டம் 'நிறப்பிரிகை'யின் சார்பாக நடைபெற்ற போது நான் முன் வைத்த இந்தக் கருத்தை எழுத்தாளர் சிவகாமி மறுத்தார். இத்தகைய மக்களுக்குத் தலைவர்கள் தேவையில்லையா? அவர்களின் செயற்பாடுகளை எப்படித் தவறு எனச் சொல்ல முடியும் என வினவினார். தலைவர்கள் தேவையில்லை என்றோ, அவர்களுக்குத் தனித்துவமான இயக்கங்கள் வேண்டாமென்றோ நாம் எங்கும் சொல்லவில்லை. மாறாக அவற்றை வற்புறுத்தியே வந்துள்ளோம். இக்கட்டுரையில் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல இவர்களிடத்தில் நாமிருந்தால் இதையே செய்திருப்போம். பிரச்சினை என்னவெனில் அத்தகைய நிலைப்பாட்டை எடுத்து அந்த நோக்கிலிருந்து இம்மக்களின் வாழ்வு மேலிருந்து கீழாக அணுகப்படும்போது அப்பிரதி தட்டையாக அமையாமல் பன்முகப் பரிமாணங்களுடன் அமையுமா என்பதே.

தொனிக்கும் இலக்கியப் பிரதியாகவன்றி சமூகவியல் ஆவணம் என்கிற ஒற்றைப் பரிமாணம் தூக்கலாய் வெளிப்படுகிறது.

ஓர் இலக்கியப் பிரதி என்கிற பரிமாணம் குறைபாடுடையதாகிப் போனதை இம்மூன்று நாவலாசிரியர்களும் வேறு காரணங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்கின்றனர். எழுதுவது என் தகுதிக்கு மீறிய செயல் என்கிறார் மானே. இலக்கிய அழகு இல்லை என விமர்சிக்கப் படுவதை ஏற்றுக் கொள்ளும் குலாத்தியின் ஆங்கில மொழி பெயர்ப்பாளர் விரைவாக எழுதப்பட்டது, சரியாகச் செப்பனிடப்படவில்லை என்று காரணம் சொல்லுகிறார். முறையான கல்வியை அதிகம் பெற்றிராத லட்சுமண் கெய்க்வாடிடம் ஓர் எழுத்தாளருக்குரிய நயமோ தனித் திறமையோ இல்லை என மன்னிப்புக் கோருகிறார் உச்சாலியாவின் ஆங்கில மொழி பெயர்ப்பாளர் (பார்க்க முன்னுரைகள்).

நாம் இந்தக் கருத்துக்களுடன் உடன்படவில்லை. 'இலக்கிய அழகு' குறித்து மரபு வழி மதிப்பீடுகளையும் கூட இந்நூலாசிரியர்களும் மொழி பெயர்ப்பாளர்களும் அப்படியே ஏற்றுக் கொண்டதன் விளைவே இந்த ஒப்புதல் வாக்குமூலங்கள். இத்தகைய மதிப்பீடுகளை எல்லா மட்டங்களிலும் ஏற்றுக் கொண்டதனால்தான் இந்தப் பிரதிகள் மரபு வழி வாசகர்களிடமும் விமர்சகர்களிடமும் எந்த அதிர்ச்சியையும் ஏற்படுத்த வில்லை.[6] பிரதிகளுடனான இவர்களின் உறவு ரொம்பவும் சுமுகமாக இருக்கிறது. இதன் விளைவாகவே நிறுவனங்களும் இவற்றிற்குப் பரிசளித்து மகிழ்கின்றன; உள் வாங்கிப் பெருமிதம் கொள்கின்றன.

பின்குறிப்பாய்ச் சில

1. 'உச்சாலியா'வின் இறுதியில் லட்சுமண் கெய்க்வாட் முன்வைக்கும் சில கருத்துக்கள் நமது சிந்தனைக்குரியன. 'ஆக்ஸ்ஃபாம்' என்கிற தன்னார்வ நிறுவனத்திடம் உதவி பெற்றுத் தனது இயக்கத்தை நடத்தி வந்த கெய்க்வாட் இந்த உதவியைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளக்கூடாது என முடிவெடுத்து அதிலிருந்து விலகிக் கொள்கிறார் (பக்.273). காரணங்கள் விரிவாகச் சொல்லப்படவில்லையாயினும் ஒரு நேர்மையான இயக்கப் பணியாளர் இந்த முடிவுக்கு வந்ததன் பின்னணியை நாம் யோசிக்க வேண்டியுள்ளது. மேல் சாதித் தலைவர்கள் தம்மைப் போன்றவர் களைப் பயன்படுத்திக் கொள்வது பற்றிய அவரது வெறுப்பும் கவனிக்கத் தக்கது (பக்.295). இறுதியாக, 'நாடோடி மற்றும் குற்றப்பரம்பரைப் பழங்குடிகள், பட்டியற்சாதிகள், அடக்கி ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரின் முழுமையான விடுதலையைச் சாதிப்பதற்காக

6. இளைஞர்களின் வாழ்வைச் சொல்லும் இந்நாவல்களில் அவர்களின் உடலிச்சைகள் எங்கும் கொண்டாடப்படுவதில்லை; ஓரிடத்திலும் பதிவு செய்யப்படவில்லை. விமர்சன அரங்கில் இந்த அம்சத்தைத் திரு. வெளி. ரங்கராஜன் அவர்களும் தோழர் ஜி.கே. விஜயனும் சுட்டிக் காட்டினர்.

அறிவுத் தளத்தில் பழங்குடி மக்களின் இயக்கங்களை உருவாக்கவும் பலப்படுத்தவும் பல்வேறு வழி முறைகளைத் தேடுவதுதான் இப்போது என்னுடைய லட்சியம்' என அவர் முடிப்பதையும் (பக்.295) நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2. குலாத்தி ஆசிரியர் டாக்டர் கிஷோர் சாந்தாபாய் காலேயின் வாழ்வு பல்வேறு அம்சங்களில் நாம் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கதாக நான் உணர்கிறேன். போராளிகள் தோற்கும்போது தியாகி ஆகிறார்கள். வெற்றி பெற்றுத் தொடர்ந்து நிற்கும்போது தலைவர்கள் ஆகின்றனர். தவிர்க்க இயலாமல் அவர்களைச் சுற்றி அதிகாரம் கட்டமைக்கப்படுகிறது. எந்தப் போராட்டங்களுமின்றி அதிகாரங்களைக் கைக்கொள்ளும் சூழலும் இன்றுள்ளது. இது எல்லோருக்கும் பொருந்தும்; உங்களுக்கும், எனக்கும். நம்முள் கட்டமைக்கப்படும் இந்த அதிகாரத்தை, பாசிசத்தை வெல்வதற்கான வழிகளில் ஒன்று சேவை. குலாத்தி மற்றும் பழங்குடி யினரைத் திரட்டி அதன் மூலமான அதிகாரம் ஒன்றைக் கட்டமைப்பது என்பதாகவன்றி அம்மக்களோடு வாழ்ந்து, அவர்களுக்குச் சேவை செய்யும் வாழ்வை அவர் தேர்ந்துள்ளது நம்மை நெகிழ வைக்கிறது.

3. தமிழ் மொழியாக்கம் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆங்கிலப் பிரதிகளை நான் பார்க்கவுமில்லை. எளிய கதை சொல்லல் என்கிற வகையில் மொழியாக்கத்திலும் சரளம் இயல்பாக வந்து விடுகிறது. எனினும் இன்னும் ஒரு முறை வாசிக்கப்பட்டு வாக்கிய அமைப்புகள் திருத்தப்பட்டிருந்தால் சரளம் கூடியிருக்கும்.

செருக்கவரவுக்காரனின் சூரி

——————————————பாப்லோ அறிவுக்குயில

அடைமழை காலம் தொடங்கி விட்டது. நடுசாமத்தில் வலுக்கத் தொடங்கிய மழை நிற்காமல், உரிய நேரத்தைத் தாண்டியும் விடாமல் சொண சொணவென்று தூறிக் கொண்டே இருந்தது. வெயில் காலமென்றால் உக்கிரமாய் வீசும் காங்கலையும் நீரற்றுப் போய்க் கிடக்கும் குளங்களையும் பார்க்க வெறுமையாக இருந்தாலும் யாவற்றையும் பொறுத்துக்கொண்டு வேலைக்கோ காடு காடாய் அலைந்து ஒரு மிடறு குடி நீருக்கோ பயணித்தாலும் வெளியே தலை காட்டவாவது முடியும். ஆனால் மழைக்காலத்தில்தான் அன்றாட பிழைப்பே பிரச்சினையாகி விடுகிறது. மழையில் நனைந்திடாமல் விறகைப் பத்திரப்படுத்த வேண்டும். பழங்கூரையை மாற்றி விட்டு வரகு வைக்கலோ கருப்பஞ்சருகோ இல்லை குறைந்தபட்சம் பனை மட்டையோ கொண்டு புதுக்கூரை வேய வேண்டும். இல்லையென்றால் சாணத்தால் மெழுகப்பட்ட தரையெல்லாம் மழை நீர் ஒழுகி பொக்கைப் போரையாகி விடும். ஆடு மாடுகளை மழையில் நனைந்தபடி மேய்ப்பது சிரமமாய் இருக்கும். ஒளையில் நடந்தால் சேற்றுப்புண் வருமென்று, கொஞ்சம் வசதியானவர்கள் 'பாதகட்டை' செருப்பு போட்டுச் செல்வார்கள். தெருவில் 'கொள்ளமட்டை' மனிதர்கள் நடமாடுவார்கள் குடை வாங்க வக்கின்றி. தென்னங்கீற்றால் பின்னப்பட்ட கொள்ளமட்டை தூறலில் நனையாமல் காப்பாற்றும். பெருமழை என்றால் இடுப்பிற்குக் கீழே முன்னும் பின்னுமாய் நனைந்து விடும். 'வெளிவாசப்' போவதென்றால் அருவருப்பாக இருக்கும். பெண்கள் கருவைத் தோப்பிற்கும் ஆண்கள் எல்லோரும் ஏரிக்கரைக்கும் போவார்கள். அங்கெல்லாம் 'மலக்குப்பைகள்' மழையில் கரைந்து போய் அதிலிருந்து கிளம்பும் நாற்றம் குடலைப் பிடுங்கும். கால் வைக்கக் கூசும். மூக்கைப் பிடித்துக் கொண்டு வான் வெளியையோ வேலிகளில் இதழ் விரிய ஒளிரும் பெயர் தெரியாத மலர்களையோ ரசித்தபடிதான் முக்கிவிட்டு வரவேண்டும். வேறுவழி? பசியைப் போக்கவே ஒவ்வொரு நாளும் போராடும் ஜனங்களுக்குத் திறந்தவெளிதானே கழிவறையாய்

வாய்க்கும். இப்படி அடைமழைக்காலம் வந்தாலே ஜனங்களுக்குச் சிரமம்தான். ஒழுகும் குடிசையில் வாழ்பவன் மழையை எப்படி ரசிப்பான்?

○

மழையை வெறித்தபடியே குந்தியிருந்தாள். நீரில் நனைந்து சிறகெல்லாம் ஒடுங்கிப் போயிருந்தாலும் இரையெடுப்பதற்காகக் கோழிகள் தெருவில் அலைந்து கொண்டிருந்தன.

சுவரில் மாட்டியிருந்த போட்டாவைக் காட்டி 'இவருதான் அப்பான்னு சொல்லுறியே, அப்பா எப்பம்மா வருவாரு?' மழலையின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது? அவன் பிஞ்சு மனதைக் காயப்படுத்தக் கூடாதென்றுதான் 'அப்பா வெளியூரு போயிருக்காரு' எனச் சமாதானமாய் பதிலைச் சொல்லி, அடம்பிடித்தவனைத் தட்டித் தாலாட்டித் தூங்க வைத்திருக்கிறாள்.

அடைமழைக்காலம்தானே தன்னோடு மாமனையும் சேர்த்து வைத்தது; தன்னையும் ஒரு தாயாக்கிப் பெருமைப்படுத்தியது. ஒவ்வொரு வருஷமும் மழைக்காலம் வருகிறது. ஆனால் அந்த இன்பத்தை பேரானந்தத்தைத் தொலைத்துவிட்டு, சூன்ய வெளியில் சிக்கித் துயரோடு வாழும்போது அவரின் ஞாபகங்களைக் கிளறிவிடுகிறது அடைமழைக்காலம்.

கண்ணீர் அவளைக் கேட்காமலேயே வழிந்து கொண்டிருந்தது. முந்தானையால் துடைத்துக் கொண்டாள். ஊரில் நடந்த சம்பவத்தை எதிர் வீட்டு கதிர்வேல் வந்து சொல்லியபோது நம்பவும் முடியவில்லை, நம்பாலும் இருக்கமுடியவில்லை. துயரம் அவள் மனசைப் பிளந்து கொண்டு உள் நுழைந்திருந்தது. எப்படியிருந்த ஊர்? எத்தனை அழகாய் இருந்த தெருக்கள்? ஒரே ஓர் உயிரின் இழப்பு, சேரியையே பூகம்பம் தாக்கிய பூமியாக்கி விட்டதே? தங்களுக்கும் தன் முன்னோர்களுக்கும் கால காலமாய் தொண்டூழியம் செய்தே வயிற்றைக் கழுவிக்கொண்ட ஊமை ஜனங்களின் குடிசைகளுக்கு அவர்களால் எப்படி மனசாட்சியைப் புதைத்துவிட்டு தீ வைக்க முடிந்தது.

ஆண்டைக்குடிகள் செய்த அக்குறும்புகளையும் கொலை பாதகத் தையும் பட்டியல் போட்டால், அவர்கள் மட்டுமல்ல அவர்களின் வம்சா வழிகளை எல்லாம் தேடித் தேடியல்லவா அழிக்க வேண்டும்? அப்படி யெல்லாம் இந்த பாவப்பட்ட ஜென்மங்கள் யோசித்ததுகூட இல்லையே! தன் கணவரும் அவர் கூட்டாளிகளும் செய்த முதல் தாக்குதலையே அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையே! அதற்காக இப்படியா ஒரு ஊரையே அழிக்க வேண்டும்? சேரியென்ற ஒன்று அந்த ஊரில் இருந்ததற்கு அடையாளமாய் இடிக்கப்பட்ட சுவர்களும் எரிந்து கருகிக் கிடக்கும் கூரைகளும் தீயின் வெப்பம் தாளாமல் அம்மிக்கல் கூட பாளமாய் வெடித்துக் கிடக்கிறதே!

தெருவெங்கும் ஊளையிட்டபடி நாய்கள் திரிந்தன. ஆட்களில்லாத வீடுகளில் இருள் பதுங்கிக் கிடந்தது. ஐநூறு வீடுகள் உள்ள தெருவில், ஆண்டைகளின் விசுவாசத்தைப் பெற்ற வீடுகளைத் தவிர எஞ்சியுள்ள வீடுகளை எல்லாம், காற்று எங்கிருந்தோ கொண்டு வந்து 'தீச்சொரிந்து'. சாம்பலாக்கி விட்டிருந்தது. ஜனங்களில்லாத தெருக்களில் கானல் அலைந்தது. ஆடு மாடுகள் கருகிப்போய் நிணம் வழிய வழிய மல்லாந்து கிடந்தன. 'தீ விபத்தென்று' அதிகாரிகள் எழுதிச் சென்றனர். தினசரிகள் கூட அதையே உறுதிப்படுத்தின. பாதிப்பேர்கள் உயிருக்குப் பயந்து வெளியூருக்கு ஓடிப்போய் விட்டார்கள். அரசு தரும் உதவிப் பொருள் களைப் பெறுவதற்குக் கூட, உயிர்ப்பயம் ஊருக்குள் நுழையாதபடி அவர்களைத் தடுத்து விட்டிருந்தது.

கண்முன் காட்சிகள் விரிந்தன. ஒவ்வொரு முறையும் அடைமழைக் காலம் அவரின் நினைவோடு ஊரின் இழப்பையும் கொண்டு வந்தே மனசெங்கும் துயரைப் பொழிகிறது.

○

அத்தை வீடென்ற உரிமையில் அவள் மாமன் அடிக்கடி வரத் தொடங்கினான். அண்டை அயலார்கள் விசாரித்தால், 'அத்தையையும் மாமனையும் பாக்காம இருக்க முடியல...' பாசம் வழிய பேசுவான். நீண்ட கிருதாவும் கெளுத்தி மீசையும் நெகு நெகுவென்ற கறுத்த மேனியும், அவளுக்கு மாமனை ரொம்பத்தான் பிடித்திருந்தது.

அவன் மழை மாரியில்லாத மேசீமைக்காரன். 'மேற்கெத்தியான்' என்றுதான் அவனை அவன் அத்தைப் புருஷன் அழைப்பார். மாமனோடு பேசிக்கொண்டிருக்கும்போதே, 'செருக்க வரவு திங்கிற வக்காளோழி' என்று கிண்டலடிப்பார். மைத்துனர் மகனென்ற உறவு முறையாலும் தனக்கு மருமகனாய் வரப்போகிறவன் என்ற உரிமையிலும் 'ஒறமுற சீண்டலின்' நெடி மனசைக் கவ்வும். மொடவரப்ப சுத்தி எலி புடிக்கிற ஆளுங்களுக்கெல்லாம், எங்க அருமபெரும எங்கேத் தெரியப் போவுது? விட்டுக் கொடுக்காமல் பதிலடி கொடுப்பான். விடாமல் மாமனும், 'ஆமா ஆமா மொறத் தெரியாம போற ஒங்களோட அருமையெல்லாம் எங்களுக்கு எங்கே தெரியப்போவுது?' இடம் பார்த்து மாமா சாட்டையைச் சொடுக்குவார். இதற்கு மேலும் இவரிடம் பேசக்கூடாதென்று 'ந்தா வாறேன் மாமா' நழுவி விடுவான். மாமா சொல்லுறது நெசந்தான் என்பதற்கு சாட்சியாகத்தான் ஒரு சம்பவம் நடந்தேறியது. ஊர் விஷயம் பற்றி பேச அப்பா வரச் சொன்னாரென்று, சித்தப்பவைக் கூப்பிட்டு வரப் போனான். இவன் வந்த விபரத்தைச் சொன்னதும், ஏற்கனவே குமைச்சலில் இருந்த சித்தி பொறுக்க மாட்டாமல் விஷயத்தைப் போட்டு உடைத்தது. 'அம்பா பூரா ஊட்ட போயி பாரு. அங்கதான் அவ சாண்டு ருசியா இருக்கின்னு ஓஞ்சித்தப்பன் உழுந்து கெடக்குறான்.' பேசக்கூடாததை எல்லாம் மகனிடம் பேசுறோமே என்று நினைத்துப் பார்க்காமல்,

வயிற்றெரிச்சலால் சித்தி பொறிந்து தள்ளிவிட்டது. அசலூருக்கு வாக்கப்பட்டுப் போன பெண்கள் தாய் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருந்தாலோ - வாழாவெட்டியா உள்ளூருலேயே இருந்து விட்டாலோ அந்தப் பெண் வாக்கப்பட்டுப்போன புருஷன் ஊரைச் சொல்லி கூப்புடுரது ஊர் வழக்கம் என்பதால், சித்தி சொன்னவுடன் யாரென்று யூகித்துக் கொண்டான். தேடிக் கொண்டு போனபோது சித்தப்பாவும் 'அங்கெ'தான் இருந்தார். ஊர் முறைக்கு அவள் சித்தப்பாவிற்கு தங்கச்சி முறை வேண்டும் என்பதால்தான், இத்தனை சீண்டல்கள், கேலிகள், கோபத்தெறிப்புகள். அம்பா பூரா அறுத்து போனவ என்பதால் ஊரில் யாரும் இதைப் பெரிசாய் எடுத்துக் கொள்ளவில்லை. இதுபோல ஊரில் ஒவ்வொருத்தருக்கும் ஒரு கதையுண்டு என்பதால், 'கமுக்கமாய்' மனசுக்குள்ளேயே வைத்து மூடிக் கொண்டார்கள். இவற்றை எல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டுதான் தன்னோடு 'வார்த்தையாடும்' ஊர்க்கார இளவட்டங்களை 'இதை அவுத்துட்டு' வாயை மூட வைத்துவிடுவார். 'இந்தாளுகிட்ட வாயக் குடுத்து நாம ஏன் சூத்தப் புண்ணாக்கிடணும்?' என்றுதான், இவரைக் கண்டாலே பயல்கள் கழன்று கொள்வார்கள்.

அவனை மேற்கெத்தியான் என்பதோடு, 'முந்திரிக்காட்டுப்பய' என்று வேறு அடிக்கடி சொல்வார். அவர் சொல்லுவது சரிதான் என்பது போலத்தான் அவன் ஊருக்குப் போகவேண்டுமானால் அரசின் வனப் பகுதியாகி விட்ட, முந்திரிக்காட்டையும் தைல மரங்கள் அடர்ந்துள்ள பகுதியையும் கடந்துதான் போக வேண்டும். வரகும் கம்பும் கேழ்வரகும் முத்துச் சோளமும் கொழித்துக் கிடக்கும் வானம் பார்த்த பூமி. மழைமாரி பெய்தால்தான் ஏறுபூட்டி நிலக்கடலை போடுவார்கள். வெரபுட்டி யிலிருந்து எள்ளெடுத்து விசிறித் தெளிப்பார்கள். மோட்டார் பம்பு செட், டீசல் எஞ்சின் வசதியுள்ள ஒரு சிலர்கள்தான் கரும்பு, நெல், வாழையென்று நஞ்சைப் பயிர்களை விவசாயம் செய்வார்கள். விவசாய வேலைகளை மட்டும் நம்பாமல் பிழைப்பைத் தேடி வெளியூர் செல்பவர்கள்தான் அதிகம். மாதக்கணக்கில் குடும்பத்தைப் பிரிந்து சம்பாதித்து அனுப்பினால்தான் குழந்தைகளின் படிப்புச் செலவு, துணிமணிகள், நல்லது கெட்டது மட்டுமின்றி வயிறாரவும் சாப்பிட முடியும். வெளியூர் போக விரும்பாதவர்கள் ஊரில் உதிரிக் கூலியாளாகவும் ஆண்டை வீடுகளில் மாடு, கன்று வீட்டு வேலை என்று பண்ணையாளாகவும் எஞ்சியவர்கள் ஊரில் 'வெட்டி வேலை' பார்த்து குடும்பத்தைக் காப்பாற்றுவார்கள். மற்றவர்கள் அண்டையிலுள்ள கிராமங்களுக்கோ இல்லாவிடில் வேறு பக்கம் சென்றோ பிழைப்பைப் பார்ப்பார்கள். பணக்கூலி இல்லா வேலை என்பதால், என்னதான் உடம்பைக் கயிறாய்த் திரித்து வேலை செய்தாலும் உடலுழைப்பிற்கு மரியாதை தராமல், 'வெட்டி வேலை' என்றுதான் அழைப்பார்கள்; பின் அதுவே காரணப் பெயராயிற்று. ஒவ்வொரு வெட்டியான்களுக்கும்

ஐந்துக்கும் மேற்பட்ட ஆண்டை வீடுகள் உண்டு. மொத்த ஊரையும் பத்து வெட்டியான்கள் பிரித்துக் கொள்வார்கள். ஆண்டைமார்கள் வீடுகளில் 'எழவு விழுந்தால்' கூலி வாங்காமல் தப்படிக்க வேண்டும். சாமி புறப்பாடு என்றால் துவரைமெலாரால் 'சகடை வண்டி' ஊர்வலம் வரும் தெருக் களைச் சுத்தமாய்க் கூட்ட வேண்டும். மின்சார வசதி இல்லாத கால மென்றால் விடிய விடிய சாமி ஊர்வலத்திலும் குறவன் குறத்தி ஆட்டம் நிகழ்த்தும் கூட்டத்திற்கும் தீப்பந்தம் பிடிக்க வேண்டும். மின்வசதியுள்ள இந்தக் காலத்திலும் உச்சந்தலை எரிய எரிய 'பெட்ரமாஸ்' விளக்குத் தூக்க வேண்டும். தங்களுக்குள் பிரித்துக் கொண்ட ஆண்டைகள் வீடுகளுக்குத் 'தொண்டூழியம்' செய்வதே இவர்கள்தான். விறகு உடைத்துக் போடு வதிலிருந்து, மாட்டுத் தொட்டிக்கு தண்ணி மொண்டு ஊற்றுவது வரை. அவ்வப்போது அண்டைச்சாயிகள் கூப்பிட்டவுடன் 'போய் வருவது' உட்பட. அதெல்லாம் நல்ல வாட்டஞ்சாட்டமான திரேகக்கட்டு உள்ள இளவட்டங்களுக்குக் கிடைக்கும் வேலை. அமாவாசை நாள் வந்தால் தாமரை இலைகளையோ இல்லை பூவரசு இலைகளையோ பறித்து வந்து (பூவரசாக இருந்தால் சீவாங்குக் குச்சியால் தைத்து, இலைகளை வீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வீட்டுக்கு ஐந்தோ அல்லது ஏழோ கட்ட வேண்டும்.) இவற்றோடு விறகுக் கட்டுகளையும் சேர்த்து, காலை ஒன்பது மணிக்குள் ஒவ்வொரு வீடாய்ச் சென்று போட்டு விட்டு வரவேண்டும். காலையில் இலைக்கட்டையும் விறகுக்கட்டையும் போட்டு வந்த வீடுகளுக்கெல்லாம், இரவானால் கொடிக்கூடை ஈயக்குண்டு சகிதமாய் சோறெடுக்கச் செல்ல வேண்டும். வெட்டியானும் அவன் பொஞ்சாதியும் வீட்டு வாசல் படியில் நின்றபடியே, 'வெட்டியான் வந்திருக்கேங்கோ' - 'வெட்டியாஞ்சாமீ' கெஞ்சும் குரல் வீட்டிற்குள் புகுந்து சோறு போட அழைக்கும். மெழுகப்பட்ட சாணிப்பத்தைத் தெரியாமல் 'கொட்ட இலையால்' மறைக்கப்பட்டிருக்கும். அதில் சோறும் ஈயக்குண்டில் குழம்பும் வாங்கிக் கொண்ட பிறகு வேறு வீடு பார்க்க வேண்டும். தீபாவளி பொங்கலென்றால் கூடுதலாக அரப்புப் பொட்டலமும் - கோழியும் கொண்டுபோயி கொடுக்க வேண்டும். அவர்களும் ஸ்பெஷலாக வேட்டித்துண்டு கறிச்சோறோடு ரெண்டு மூன்றாய் ஊசவடைகளையும் போட்டு அனுப்பி வைப்பார்கள். வெட்டியான்கள் ஒவ்வொருவரும் வருஷ கடைசியில் நாலு மூட்டை வரகை மானியமாய்ப் பெற்று 'வெட்டி வேலை சுதந்திரம்' பெறுவார்கள்.

ஊரில் விவசாயக் கூலிவேலை செய்பவர்களுக்கு, வேலை செய்த அன்னைக்கே கூலிப்பணத்தைக் கொடுக்க மாட்டார்கள். இரண்டு மூன்று நாளைக்காவது இழுக்கப் போட்டாப் பிறகுதான். ஏதோ எனாம் போடுவது போல கூலியைத் தருவார்கள். கூலிப்பணத்தை வாங்க ஆண்டை வீடுகளுக்கு நடையாய் நடக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் வீட்டு வேலை எதையாவது செய்யச் சொல்லி விட்டு, 'நாளைக்கு வா'

என்று கூசாமல் சொல்வார்கள். வேலை வாங்கும்போது மட்டும் ஆண்டைச்சாயின் குரலில் 'கரிசனை' இழையோடும்.

கோவணத்துணியோடு கொல்லவேலை செய்யும்போது பார்த்தால், எவன் ஆண்டை எவன் பண்ணையாளென்று வேறுபடுத்திப் பார்க்க முடியாதபடி நிறமும் தோற்றமும் உணவு முறைகளும் ஒன்றாகவே இருந்தாலும் பரம்பரையாக அவர்கள் கட்டிக்காத்து வந்த சாதிப்பெருமை அழிந்து விடக் கூடாதென்றும் ஊர்க்கட்டுமானம் சிதைந்து விடுமோ என்று அஞ்சியதாலும் அதிகார பீடத்திலிருந்து இறங்காமலேயே இருக்கிறார்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து விடக்கூடாதென்பதில் உறுதியாக இருக்கும் அரசாங்கமும் - தன் பங்கிற்கு சான்றிதழ்களிலும் இன்னும் பல்வேறு ஆவணங்களிலும் - (சாதி என்கின்றபோது 'இன்ன சமூகத்தவன்' என்று குறிப்பிட்டாலும், மதம் என்கின்ற இடத்தில் மட்டும் எல்லாரையும் 'இந்து' என்று அடையாளப்படுத்துகிறது) அட்டவணை இனத்தோர் என்று கட்டம் கட்டிச் சலுகை தருவதாகப் பீற்றிக் கொண்டு, இழிவு செய்வதையே தன் தலைமைப் பணியாய் இன்றுவரை பிரித்து வைத்தே அவர்களை காயடித்து வருகிறது.

இப்படிச் சோறெடுத்துக் கொண்டு வருபவர்களை தெரு இளவட்டங்கள் கிண்டல் பேசியே உண்டு இல்லையென்று செய்து விடுவார்கள். 'ஏம்மாமா ஒண்டைச்சாயி வடை போட்டாளா?' இவன் எதுக்கு கேக்குறான் என்று, வாங்கி வந்தவர் எதுவும் புரியாமல் முழிப்பார். 'ம்... போட்டாங்க' என்று புரிந்து கொள்ளாமல் சொல்பவரை, இடைமறித்துப் பேசுவான். 'அந்த நாத்த வடைக்கா நாக்க ஒணாத்திகிட்டு ஓடுறீங்க?' கொஞ்ச நேரம் கழித்துதான் அவருக்கே உரைக்கும் 'வக்காளோழி வாய நிண்டுறாம் பாரு' என்று கெலித்தபடியே ஊர்ச் சோறோடு வீடு போயி சேருவார்கள்.

இதுபோல் செஞ்ச வேலைக்குக் கூலி கேட்டுப் போகிறவர்களை வேலை வாங்கிக் கொண்டு கூலி தராமல் அனுப்புகிறவர்களப் பற்றியும் கிண்டலாய் வெளுத்துக்கட்டி விடுவார்கள்; மறைமுகமாகத்தான் 'தோளுல குந்தி காதுல உடுற ரகம்டா அவென்?' அவனுங்களை எல்லாம் 'வாயில குடுத்து பாயில படுக்க வெக்கிணும்' இப்படி ஒவ்வொரு நிகழ்வுக்கும் பின்னே, ஊற்றுத் தண்ணியைப் போல கிண்டல் கிளம்பி வந்துகொண்டே இருக்கும். இதுபோலத்தான் வெளியூரில் காலேஜில படிக்கிறவன் லீவுல ஊருக்கு வந்திருக்கான். தெருவில் அபூர்வமா ஒருத்தன் ரெண்டு பேருதான் காலேஜ் வரைக்கும் போவானுங்க. லீவுல வீட்டுலேயே இருப்பது என்னவோ போலிருக்கவே, அப்பன் பாத்து சொல்லிவிட்டு, பக்கத்து டவுனு வரைக்கும் போயிட்டு வரலாம்னு ஆண்ட வீட்டுக்குப் போயிருக்கான். வீட்ல என்ன சண்டையோ தெரியல. அந்தாயி தன்னோடு மகளை 'ஒன்னையெம் பறையன் போவ' என்று அவ சொன்னதுதான் தெரியும். இவன் உடனே 'நான் போவட்டா ஆயி' என்றானாம். நண்பர்கள்

இவனைப் பார்க்கும் போதெல்லாம் அதையே சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள்.

இவன் மட்டும் ஊரில் எவன் கொல்லையிலும் வேலை வித்தென்று கால் பதித்தது இல்லை. இவன் அய்யா, இவனைப் பக்கத்து டவுன் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பினார். பத்தாம் வகுப்பு வரை படித்ததே போதுமென்று நிறுத்திக் கொண்டான். பள்ளிக்கூட நாட்களிலும் தங்களுக்கிருந்த ஒருகாணி மனக் கொல்லையில் ஏதாவது வேலை செஞ்சிட்டுதான் போவான். நிலக்கடலை, துவரை என்று மாற்றி மாற்றி விவசாயம் செய்து அவன் அய்யா காசு பார்ப்பார். கொல்லை வேலை இல்லா நாட்களில் வெளியூர் சென்று ஆடு - மாடுகளுக்குக் காயடிக்கக் கிளம்பி விடுவார். மூர்க்கமாய் முரண்டு பிடித்துக் கொண்டு மூத்திரம் குடிக்க ஓடும் காளைகள் கூட இவர் கைவைத்தவுடன் 'சேங்கிட்டி'யைக் குறைத்துக் கொண்டு, உழவு வேலையிலிருந்து வண்டியிழுப்புவரை பழகிக்கொண்டு சாதுவாகி விடும். வெள்ளாடுகளும் கொட்டைகள் கூழாகிய பின் 'ஓங்கும்' ஆடுகளைத் துரத்தாமல் தழையெடுத்து போத்போத்தென்று வளரும். சந்தையில் நல்ல விலைக்கு விற்பார்கள். ஆடு மாடுகள் என்றில்லாமல் நாய் பன்றிகளுக்கும்கூட விரை நீக்கி விடுவார். இவரின் கைத்திறமையைக் கண்டு உள்ளூர் ஆண்டைகள், எனக்கு ஒனக்கு என்று போட்டி போட்டுக் கொண்டு அழைப்பார்கள். கூலிப்பணத்தைக் கொடுத்தால்தான் வேலையை ஆரம்பிப்பார். ஊர் வெட்டி வேலை பண்ண வேலை என்று போகாததால் இவர் மீது எப்போதுமே ஊர் ஆண்டைகளுக்கு ஒரு கண்ணுண்டு.

இவனும் அப்படித்தான் படிப்பை நிறுத்திக் கொண்டாலும், அவ்வப் பொழுது வேலைதேடி டவுனுக்கு ஓடி விடுவான். சோறெடுப்பதையும் வெட்டி வேலையையும் தாத்தா காலத்தோட விட்டு பல வருஷமாகி விட்டது. 'ஒப்பந்தான் கிட்டியும் கையும்மா அலையிரான். நீயாவது வேலைக்கு வர்றியா?' கூப்பிடுபவர்களிடம் புன்னகையையும் 'வேறெச் சோலி இருக்குங்க' பதிலையும் கூறி எதிராளியின் வாயை அடைத்து விட்டு வருவான். இவனுக்குக் கல்யாணம் கூடிவந்தபோது தாத்தா காலத்து ஆண்டைகள் வீடுகளுக்குப் போய் பத்திரிகை வைத்து விட்டு வந்ததோடு சரி, 'ஆண்டைத்தாலி' செய்யும் வழக்கத்தையும் முதல் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு பணம் வாங்கும் பழக்கத்தையும் விட்டொழிந்து விட்டான். இதனால் இவன் குடும்பத்தின் மீது உள்ளூர் ஆண்டைகட்கு வன்மம் வளரத் தொடங்கியது.

ஊர்ச்சோறு எடுக்க யாரும் போகக்கூடாது; பண்ணவேலை செய்யக் கூடாது. செய்யிர வேலைக்குக் கூலி வாங்கிக்கொண்டாலே போதும்; அவனுங்க சோறு போட்டுதான் ஓம்பீக்குடலு நெறையணுமா? சொல்லிப் பார்த்து விட்டான்; தடுத்தும் பார்த்துவிட்டான். இன்னும் சிலர் தெருச்சோறு எடுக்க, கொடிக்கூடையைத் தூக்கிக் கொண்டுதான் அலைகிறார்கள். தான் சொன்னால் எடுபடாது என்று வெளியூரிலிருந்து

இயக்கத்தோழர்களை அழைத்து வந்து 'இராக்கூட்டம்' போட்டுப் பேசிப் பார்த்து விட்டான். தொடை நடுங்கிப் பயல்கள் குடல் ரொம்பினாலே போதுமென்று தோழர்களை இனி 'ஊட்டுப்பக்கம் வராதீங்க' என்று கையெடுத்து கும்பிட்டுத் துரத்தி விட்டார்கள் ஆண்டைகளுக்குப் பயந்து.

இவனுகங்ககிட்ட மாட்டிக்கிட்டு 'எழவெடுப்பதற்கு' விரும்பாமல் தான் இவன் நாத்துபறி அறுவடைக்காலம் வந்தால் தன் அத்தை ஊருக்குப் போய்விடுவான். நஞ்சவேலை எல்லாம் முடிந்து ஊருக்குத் திரும்பினான் என்றால் மீண்டும் நடவுக்காலமாய்ப் பார்த்துதான் செல்வான். அவன் எப்பொழுது வந்தாலும் அண்ணன் மகன் வந்து விட்டானென்று தினமொரு விருந்து வைத்து, உபசரிப்பால் அவனைத் திக்குமுக்காடச் செய்து விடுவாள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகைக் கறிக்குழம்பு ஆண்டைச் சட்டியில் வேகும்போதே அதிலிருந்து எழும் மனம், அண்டை அயலார்களை எச்சில் ஊற வைக்கும். வேலைக்குப் போய்வந்த நேரம்போக அவன் அத்தை புருஷன் வயல் வயலாய்ச் சுற்றி 'கிளுக்கி' ஆட்டி, நண்டு பிடித்து வந்து தர அத்தை காரஞ்சாரமாய் நண்டு கொழம்பு வைத்துத் தருவாள். பின்னும் இரண்டொரு நாளில் வயல்களில் மேயும் ஊமச்சி நத்தைகளைப் பிடித்து வந்து, ஓடுடைத்துக் கறி நோண்டியெடுத்து சட்டியில் போட்டு வறுத்துத் தருவாள். அவ்வப்போது வரப்பெலி, கொக்கு கௌதாரி என்று அத்தை வீட்டுக் குழம்புச் சட்டியிலிருந்து எழும் வாசம், தெருப் பெண்களை ஓசிக்குழம்பு கேட்டு, ஏனம் தூக்க வைக்கும்.

முன்பொருமுறை அப்படித்தான் மிளகாய் நாற்று வாங்க வாழரைக் குறிச்சி வரை வந்திருந்தவன், அவளைப் பார்த்திட்டு வரலாமென்ற ஆசையில் மனம் 'நமநமக்க' அத்தை வீட்டிற்குச் சென்றான். 'செத்த களைப் பாறிட்டு உறுமச் சோறு தின்னுட்டுப் போப்பா' அத்தையும் மாமனும் வேலைக்குப் போயிருப்பதாகவும் தான் ஆண்டவூடுவர போயிட்டு பொசாய வந்து விடுவதாகவும் கூறிவிட்டுச் சென்றாள் அத்தை மாமியாள். அவனைப் பார்த்து பழக்கப்பட்ட பல்லியொன்று 'ச்சச்சோ' என்று பரிகசித்தது. 'அவ எங்கே போயிருக்கான்னு கேக்காம உட்டுட்டோமே' தவிப்போடு அவளுக்காகக் காத்திருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஈரம் மினுங்கும் கூந்தலோடு 'எப்ப மாமா வந்தே? ரொம்ப நேரம் ஆயிடுச்சா? இரு இரு வாரேன்' மகிழ்ச்சிப் பீறிட ஒருவித துள்ளலோடு விசாரித்து விட்டு, உடை மாற்றிக் கொள்ள உள் வீட்டிற்குள் சென்றாள். ஈர உடையைக் களைந்து கொடிக் கயிற்றில் போட்டுவிட்டு, அடுக்கப் பானையில் துவைத்து வைத்திருந்த சேலையை எடுத்துச் சுற்றிக் கொண்டாள். மாமன் வெளியே குந்தியிருக்கு என்ற நினைப்பே அவளுக்கு வெட்கத்தையும் ஒருவிதப் படபடப்பையும் தூண்டி விட்டிருந்தது. தன் உடலையே தான் பார்க்கக் கூச்சப்பட்டாள். அடுக்குப் பானைக்குள் இருந்ததால் சீலை ஏகப்பட்ட சுருக்கங்களோடு, சந்தையில் வாங்கி வந்த அந்துருண்டை வாசத்தை வீடெங்கும் பரப்பியது. கண்ணாடியைப்

பார்த்தாள். அறையிருட்டிலும் மஞ்சள் குளித்த முகம் பளபளப்பாய் தெரிந்தது. நெற்றியில் விழுந்த மயிரை ஒதுக்கி விட்டதும், உதட்டோரத்தில் இருந்த மச்சத்தை ஆட்காட்டி விரலால் நீவிவிட்டாள். அவளை அறியாமலே மனமும் உடலும் முறுக்கிக் கொண்டு முறுவலித்தன. அதுவொரு அடை மழைக்காலம். 'செத்தயிரு மாமா ஒல வெச்சிடுறேன்' என்று கூறிக் கொண்டே உள்ளே நுழையப் போனவளின் கையை லாவிப்பிடித்தான். 'உடு மாமா உடுங்குரேன்ல' பிடி இறுகி இருந்தது. அவன் மூச்சுக் காற்று காங்கையாய்ச் சுட்டது. 'கண்ணாலத்துக்கு முந்தி வாணாம் மாமா.' பயத்தால் உடம்பு நடுங்கியது. வாய் குழறியது. மாமனின் மீது ஆசை இருந்தாலும் எங்கே தொட்டு புட்டு உட்டுடுமோன்னு பயந்தாள். அவள் மனக்கட்டுப்பாட்டையும் மீறி உறைந்து கிடந்த உணர்வுகள் உருகிக் கீழுடம்பு பிசுபிசுத்தது. இதுக்கு மேலும் பேசாமல் இருந்தால் நிலமை கைமீறிப் போய்விடலாமென்று பயந்தவளாய் வேறுவழி தெரியாமல்தான் சாட்டையைக் கையிலெடுத்தாள். 'ச்சீ, வுடு கைய, அக்கா தங்கச்சி மொற தெரியாமப் போறவம்சத்து ஆளுதானே நீ. அதான் அத்தமவதான்னு மனச அறிஞ்சிக்காமலேயே கைய புடிக்கிற' தன் உயிர் நிலையைப் பிடித்து கசக்கியது போல் பதறிப் பற்றியிருந்த கையை உதறிவிட்டு வெளியே வந்தான். வலி மனசைக் கிழித்தது. வியர்வை வழிந்தது அடைமழைக் காலத்திலும் திண்ணையில் குந்தினான். ஓடும் நீர் மேகங்களில் எதையோ தேடின அவன் விழிகள். மூர்க்கமாய் இப்படி நடந்திருக்கக் கூடாதோ? சங்கடப்பட்டான்.

என்னதான் அத்தைமகள் என்ற உரிமை இருந்தாலும், கட்டிக்கிட போகிறவள்தானே என்று அவள் சம்மதமில்லாமல் தொட்டிருக்கக் கூடாது. கலகலப்பாய் சிரித்துப் பேசுகிறாள். கள்ளமில்லாமல் வாயடிக் கிறாள். இவற்றை எல்லாம்விட கொச்சையான மொழியில் விடுகதை வேறு போடுகிறாள். உள்ளுக்குள் ஆசை கனன்று கொண்டு இருக்கும் தானே என்று அவசரப்பட்டிருக்கக் கூடாது. என்ன பேசி சமாதானம் செய்வதென்று தெரியாமல் உள்ளுக்குள் குமைந்தான். எப்படி அவளுக்குப் புரிய வைத்து சகஜ நிலைக்குக் கொண்டு வருவது என்று யோசித்தான். 'ஆளாயி' மூணு வருஷம் ஆகிறது. இன்னுமா புரியாமல் இருப்பாள். ரெண்டு மாதத்தில்தான் கல்யாணம் அதற்குள் அவரசப்படக் கூடாதென்று மனசை அடக்கிக் கொண்டிருப்பாளோ...? குழம்பினான். ஆனால் முடிவில் மட்டும் உறுதியாய் இருந்தான்; இன்று எப்படியாவது அவளை 'இணங்க' வைக்க வேண்டுமென்று.

மாமன் எங்கே கோவித்துக் கொண்டு போய்விடுமோ என்று பயந்த வளாய் முதன்முதலாய் மாமன் அருகில் வந்தமர்ந்து அவன் விரலைப் பற்றி வருடியபடியே 'யெம்மேல கோவமா மாமா' 'ம்... இல்ல கும்மாளம். இன்னும் ஒண்ணும் தெரியாத மாரி நடத்துகிறயே. நான் ஒம்மாமன் மவன்தானே. அதுவும் இன்னும் ரெண்டு மாசத்துல கட்டிக்கப் போறவன்,

அப்படியென்ன இதுவொரு குத்தமா? இல்ல ஊரு உலகத்துல நடக்காதா?' 'இல்ல ஒன்ன பாத்தா பயமா இருக்கு மாமா...' 'என்ன பயம் - பயமில்ல பயம் - காயில்லாம' கையை உருட்டிக் காட்டி சீண்டினான். 'சீ போ மாமா...' சிணுங்கியப்படியே அவன் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளிடம் எதுவும் பேசாமலேயே உள் வீட்டிற்கு அணைத்த படியே அழைத்துச் சென்றான். ஆண்வாடையே அண்டாமலிருந்த அவள் உடல் நடுங்கியது. வீசும் சாறலிலும் முகத்தில் வியர்வை அரும்பியது. விட்டத்தில் குந்தியிருந்த பூனை இவர்களைக் கண்டதும் பயந்துபோய் சுவரைத்தாண்டி வெளியே ஓடியது. பழைய நெல்லின் மணம் குதிரி லிருந்து கசிந்து வீடெங்கும் பரவியிருந்தது. ஆக்ரோஸமாய் வீசிய காற்று மழையை விசிறிக் கொண்டிருந்தது; வீட்டிற்குள்ளும்தான்.

அவள் ஆசைப்பட்டது போலவே பின்னும் இரண்டுமாத இடைவெளி யில் திருமணம் நடந்தேறியது. தடங்கலே இல்லாமல் வாழ்ந்தவளின் வாழ்க்கையில் முதன் முதலாய் பஞ்சாயத்து எலக்ஷன் குறுக்கிட்டது. ரிசர்வு பஞ்சாயத்துதான் என்றாலும், ஊரில் பெரிய நாட்டாமைக்கு விசுவாசமாய் நடந்து கொள்ளும் 'காலனி ஆள்தான்' பஞ்சாயத்து பிரசிடெண்டாக இதுவரை ('அன்னபோஸ்டாக') தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். வெற்றி பெற்றவர் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டாலும், அப்பதவிக்கான நாற்காலியில் நாட்டாரோ அல்லது அவர் தம்பியோதான் உட்கார முடியும். வெளியிலிருந்து அதிகாரிகள் வரும் போது மட்டும் தலைவராய் 'நடமாட' அனுமதி உண்டு. மற்றபடி அறிவிக்கப்படாத தலைவர் பெரிய நாட்டார்தான். இப்படிக் காலங் காலமாய் நடந்துவரும் பழக்கத்தை மாற்ற வேண்டும். அரசு தரும் தற்காலிக உரிமைகளையாவது தன் சமூகம் அனுபவிக்க வேண்டுமென்றுதான் தன் கூட்டாளிகள் தந்த தைரியத்தில், ஆயி, அப்பனும், தன்சாதி சனங்களும் தடுத்துப் பார்த்தும் பிடிவாதமாய் தலைவர் பதவிக்கு 'டெபாசிட்' கட்டினான். நாமினேஷனை வாபஸ் வாங்கச் சொல்லி ஆள் மேல் ஆள் அனுப்பிப் பார்த்தார் ஆண்டை. இவனோ பிடிவாதமாய் மறுத்து விட்டான். பேசியெல்லாம் இவனை மசிய வைக்க முடியாதென்று, கட்டி இழுத்துக் கொண்டுவர அடியாட்களை அனுப்பினார் ஆண்டை. தேர்தலுக்காக விளம்பர நோட்டீஸ் அடித்துவர இவன் கூட்டாளிகளோடு ஜெயங்கொண்டம் போயிருப்பது இவர்களுக்குத் தெரியாது. ஆண்டையின் ஆட்கள் மூங்கில் படலை முறித்துக் கொண்டு திமுதிமுவென்று உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் வருவார்களென்று தெரிந்துகொண்டு மருமகளையும் பேரனையும் மேலத்தெருவிலுள்ள தம்பி வீட்டில் பத்திரமாய் இருக்கச் சொல்லி விட்டு வந்திருந்தார் கிழவர். எப்படியும் அவர்களின் காலில் விழுந்து கோபத்தை 'அமத்தி' விடலாமென்ற தைரியத்தில். வந்தவர்களில் ஒருவன் தட்டியை உதைத்துத் தள்ளினான். இன்னொருவனோ வாசலில் கிடந்த 'காசரைநார்' கயிற்றுக்கட்டிலை தூக்கிக் கெடாசினான். குரைத்துக்

கொண்டே பாய்ந்த நாயின் முதுகில் உருட்டுக்கழி இறங்கியதும், குரல் உடைந்த பிசிறு தட்ட 'வாள் வாள்' என்று கத்திக் கொண்டே தெருப்பக்கம் ஓடியது. உடல் நடுங்க, அடியாட்களின் காலில் விழுந்து கும்பிட்டார் கிழவர். தேடிவந்த ஆள் இல்லை என்றவுடன் ஆத்திரமெல்லாம் கிழவர் மீது பாய்ந்தது. கால்களும் உருட்டுக் கழிகளும் ஏ வர்களின் மிருக வெறியைத் தீர்த்து வைத்தன. ரத்தம் வழிந்தோட மண்ணில் சரிந்து மயக்கமானார் கிழவர். தடுத்துப் பார்த்தும் முடியாமல் போகவே லவுக்கை போடாத வற்றிப்போன மாரிலெல்லாம் ரத்தப் பிசுபிசுக்கு ஒட்டுவதைக் கூட உணரமுடியாதவளாய், புருஷனின் உடல் மீது விழுந்து கதறினாள் கிழவி. கிழவியிடமிருந்து வெடித்துக் கிளம்பிய ஆங்காரமும் அழுகையும் ஒப்பாரியாகி, கசிந்து பரவி கருத்த இருளையும் ஈரமாக்கின. பால்கள்ளி மறைவில் நின்ற ஜனங்களின் மனதில் துயரத்தை ஊற்றியது கிழவியின் குரல். என்ன செய்வதென்று தெரியாமல் கிலியோடு பார்த்துப் பதறினார். உருட்டுக்கழிக்கூட்டம் வெளியேறிய மறு நிமிடமே அரிக்கேன் விளக் கோடு கூடிய சொந்த பந்தமென்று சொல்லிக் கொள்ளும் தெருக்கார ஜனங்களெல்லாம் 'ஆண்டைய எதுத்தா அம்புட்டுத்தான்' 'கீழ்சாதியிலே பிறந்த நமக்கெல்லாம் எதுக்கு பட்டம் பதவி?' 'ஊட்ல அடங்காதத ஊரு அடக்கிடுச்சி' 'திமிறு கொண்டு போயி நாலுபயலுவ பேச்ச கேட்டு நாட்டார எதுக்காதடான்னு சொன்னா கேட்டானா? இப்ப ஆரு அழுவுறது?' தெரு ஜனங்களெல்லாம் அவனை ஆளாளுக்கு வஞ்சித் தீர்த்தனர். ஆஸ்பத்திரிக்கு தூக்கிவிட்டுப் போகலாமென்று வண்டி கட்டியவனைத் தடுத்து தலையில் அடித்துக் கொண்டு கதறினார் கிழவரின் தம்பி. இரத்தப்போக்கு அதிகமாகிச் சிறிது நேரத்திற்குள் சடலமாகிக் கிடந்தார் கிழவர். கைக்குழந்தையோடு வந்த மருமகள் மாமியாரைக் கட்டிக் கொண்டு மாரடித்தபடிக் கதறி அழுதாள். அவளின் ஆறுமாதக் குழந்தை பெருங்கூச்சலையும் களேபரத்தையும் கண்டு பயந்துபோய் அழுதது. பெண்களின் ஒப்பாரியால் விழித்துக் கொண்ட தெரு அரவங் காட்டத் தொடங்கியது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் கொடுக்க வேண்டும் என்றவர்களையும் பழிக்குப்பழி வாங்கியே தீரவேண்டுமென்று சொன்ன இளவட்டங்களையும் தடுத்து, 'இது யேங்குடும்பத்துப் பிரச்சினை அய்யா இதுல ஆரும் தலையிட வாணாம் - போன உயிரு திரும்பி வந்திடுமா?' கையெடுத்து கும்பிட்டு பிரச்சினை எதுவும் பண்ணவேண்டாமென்று அழுதார் கிழவரின் தம்பி.

விளம்பர நோட்டீசோடு நடுசாமத்தில் வந்தவன் தன் வீட்டில் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டதும் 'திடுக்கிட்டு' அருகில் சென்று பார்த்தான். அய்யா பிணமாகிக் கிடந்ததைப் பார்த்ததும் அழுகையோடு ஆத்திரமும் வெடித்து வெளிவர, அய்யாவின் காலைக்கட்டிக் கொண்டு குமுறினான். பெரிய நாட்டாரைப் பழிவாங்க வேண்டுமென்ற வெறியே அவனுள் தீயாய் மேலெழுந்து, மேலும் அவனை மூர்க்கனாக்கியது. கண்ணீர்க் கதறலோடு

தாழவாரத்திற்கு ஓடினான். கையில் அகப்பட்ட ஈட்டியை எடுத்துக் கொண்டு பாய்ந்தவனை ஹோமியோபதி டாக்டர் ஷாகுல்தான் தடுத்தார். டாக்டரைத் தவிர வேறு யாராக இருந்தாலும் 'எடாச்சி ' இருப்பான். அவர்தான் அவனை சாந்தப்படுத்தி, வெறும் ஆத்திரத்தால் மட்டும் ஆண்டைய வீழ்த்திவிட முடியாது என்று சொல்லியதோடு, வழிச் செவுக்குப் பணமும் கொடுத்து, ரெண்டு நாள் பொறுமையாக இருந்து காரியத்தைப் பார்க்கும்படியும், மூன்று நாள் கழிச்சி 'கிளினிக்' வா நிறையப் பேசலாம் என்றும் ஆறுதல் சொல்லிவிட்டுச் சென்றார். போலீஸ்-கோர்ட்டால் மட்டும் அவனைத் தண்டித்துவிட முடியாது; அதற்கு வலுவான 'ருசு' வேண்டும். எழுந்த சினத்தை அடக்கிக் கொண்டான். திட்டம் போட்டு அவனைத் தீர்த்துக் கட்ட வேண்டும். உறுதியாய் முடிவெடுத்தான். உள்ளுக்குள் தீ கனன்றபடியே இருந்தது. தெற்கேயுள்ள சுடுகாட்டில் அய்யா சாம்பலாகி மூன்று நாட்களாகி விட்டன. நாலாவது நாளில் முடிவெடுத்தான். மாட்டையும் வீட்டையும் சித்தப்பாவிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, மனைவி, குழந்தை அம்மாவோடு, அப்பாவின் இறுதிச் சடங்குக்கு வந்த மாமாவையும் அத்தையையும் கூட்டிக் கொண்டு அத்தை ஊருக்குச் சென்றான். பின்னங்கால்களை ஊன்ற முடியாமல் முதுகொடிந்துபோன நிலையிலும் ஊர் எல்லைவரை உடம்பை மண்ணில் இழுத்துக் கொண்டே வழியனுப்பி வைக்க வந்தது அவன் நாய். கண்ணீர் கூட துளிர்க்க முடியாதபடி இறுகிப் போயிருந்த மனதில், நாயைப் பார்க்க பார்க்க 'வெறி' அவனை உசுப்பி விட்டபடியே இருந்தது. கண்ணீர் திரண்டாலும் கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஊருக்குச் சென்று இரண்டு நாள்தான் பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தான். அப்பாவின் 'எட்டாம் துக்கம்' வருவதற்குள் அவர் மண்ணில் சாயக் காரணமாக இருந்தவனை வேரோடு வீழ்த்த வேண்டும் என்ற எண்ணமே வலுப்பெற்றுக் கொண்டிருந்தது. டாக்டர் ஷாகுல் அமீது செலவுக்குப் பணம் கொடுத்து அனுப்பியிருந்தார். தான் வரும் கிழமை யையும் இடத்தையும் ஊரை விட்டுப் புறப்படும்போதே கூட்டாளிகளை அழைத்துச் சொல்லி விட்டுத்தான் வந்திருந்தான். மனைவியை மட்டும் அழைத்தான். 'மனசே சரியில்ல டவுனுவர போயிட்டு வந்திடுறேன்' அவள் போக வேண்டாமென்று சொல்லியும் கேட்காமல் கிளம்பினான். தொட்டுப் பார்த்துக் கொண்டான். இடைவாரில் வெகு அமைதியாக உறங்கியபடி இருந்தது சூரி.

அப்பாவை நினைவு சுற்றி வந்து கொண்டிருந்தது. பால்யகால நிகழ்வுகள் வந்து தீ மூட்டியது. பஸ் ஏறி ஊர் போகும் பாதையில் இறங்கும்வரை உயிருள்ள இயந்திரம் போலவே யாரிடமும் எதுவும் பேசாமல் மௌனமாய் இருந்தான். பஸ்ஸை விட்டிறங்கி முந்திரிக் காட்டில் அரைமைல் தூரம் ஒத்தையில் நடந்து சென்றான். காசாப்புதரில் இருந்து இரண்டு உருவங்கள் வெளிப்பட்டன.

இவன் சொல்லியிருந்த இடத்திலேயே இருவரும் காத்திருந்தனர். நடுசாமம்; விடிநிலா காலமென்பதால் வானம் சாம்பல் பூத்துக் கிடந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் நட்சத்திரங்கள் மட்டும் மின்னிக் கொண்டிருந்தன. கூட்டாளிகளைக் கண்டதும் துயரம் கசிந்தது. விழுங்கிக் கொண்டான். முதுகைத் தட்டிக் கொடுத்து தைரியம் சொன்னார்கள். கொஞ்சம் இடைவெளி விட்டுத் தனித்தனியாக நடந்தனர். மனதிலிருந்த வேகமும் துணிவும் கால் பதிவை வேகப்படுத்தின. சாணை பிடித்திருந்த சூரி சாதுவைப் போல் தோல் உறைக்குள் உறங்கிக் கொண்டிருந்தது. பெரிய நாட்டார் வீட்டின் பின்புறம் கொல்லைக் காடுகள் இருப்பதால் பின்கட்டை எட்டிப்பிடிக்க தைலமரத் தோப்பு வழியாகச் சென்றனர். கூட வரும் இருவரையும் புளிய மரத்தில் ஒதுங்கி இருக்கும்படிச் சொல்லிவிட்டு கொல்லையின் நடுநடுவே இருக்கும் மாங்கன்றின் மறைவினில் பதுங்கிப் பதுங்கி முன்னேறினான். ஏதேனும் சிக்கல், பிரச்சினை என்றால் மட்டுமே கூட்டாளிகள் வரலாம் என்றும், மற்றபடி அவர்கள் வெறும் பக்கத்துணை என்றும் முன்னாலேயே சொல்லி விட்டதால் அவர்கள் மரநிழலில் ஒளிந்து கொண்டனர். வெயில் காலம் ஆதலால் விசிப்பலகையை வெளியே போட்டுத்தான் பெரிய நாட்டார் என்கின்ற ஆண்டை படுப்பார் என்பது தெரியுமாதலால், வேலை சுளுவாய் முடிந்துவிடும் என்று நம்பினான். துளி ஒலி கசிந்தாலும் உயிரோடு மீளமுடியாதென்று அவனுக்குத் தெரியும். அவனுள் பயத்தின் நிழலைக்கூட அண்ட விடாமல், நூற்றாண்டின் இழப்புகள் சுத்தமாய்த் துடைச்சிருந்தது. நினைத்தது போலவே விசிப்பலகையில் மல்லாந்தபடி படுத்திருந்தார். இரவின் அமைதி அவர் குறட்டைச் சத்தத்தால் கிழி பட்டது. இடுப்பிலிருந்த சூரியை உறையிலிருந்து உருவினான். கத்தியின் கைப்பிடியை விரல்கள் வலுவாய் பற்றி இருந்தன. இழப்பிற்குத்தான் பதிலடி கொடுக்கிறோம் என்கின்ற எண்ணம் மனதை உரமேற்றி பதட்டமையாமல் சமன்படுத்தி இருந்தது.

ஒரே இழுப்பு சுணையுள்ள சூரியின் கூர்முனை பசியோடு குரல் வளையில் பாய்ந்து குருதியை ருசித்தது. குறட்டை ஒலியோடு மூச்சுக் காற்றும் அறுபட்டு காற்றில் கரைந்தன. மிதிபடும் சருகுகளின் முணு கென்ற ஒலிகூட எழாமல் காரியத்தைக் கச்சிதமாய் முடித்துவிட்டு, இரத்தம் தோய்ந்த சூரிக்கத்தியை உறைக்குள் போட்டு இடைவாரில் செருகிக்கொண்டு வந்தது தெரியாமல் அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

கூட்டாளிகள் காத்திருந்தனர். அவர்களிடம் விபரத்தைக் கூறியதோடு கிழக்கே பிரியும் ஒற்றையடிப்பாதை வழியாகப் புறப்பட்டு வெளியூருக்குப் போகச் சொன்னான். தைல மரத்தோப்பைக் கடந்தனர் இருவரும். எந்தவொரு சேதமும் இல்லாமல் கூட்டாளிகளை ஊருக்கு அனுப்பி வைத்ததாலும் வந்த காரியம் முடிந்ததாலும் மனம் இலேசாகி இருந்தது.

முந்திரிக்காட்டைக் கடந்து தார்ச்சாலை சென்றால், முதல் பஸ் பிடித்து 'டவுன் போலீஸ்டேஷன்' சென்று ஆஜராகி விடுவதுதான் நல்லது என்று முடிவெடுத்தான்.

கௌதாரியின் கெதாவல் பிசிறில்லாமல் தெளிவாய்க் கேட்டது. விடிநிலா எட்டிப் பார்ப்பதுபோல் மேகத்தில் மிதந்து கொண்டிருந்தாள். தார்ச்சாலையை நோக்கி விரசாய் நடைபோட்டான்.

○

வெளியே பெருமழை கரகரவென்று பெய்து கொண்டிருந்தது. கூரையிலிருந்து ஒழுகும் 'கூராறத் தண்ணியை' கையிலேந்திக் கொண்டிருந்தவனைப் பிடித்திழுத்து மடியில் குந்த வைத்தாள். தன் மூன்று வயது மகன், அப்பாவின் போட்டாவைக் காட்டி மழலைக் குரலில் கேட்கும் போதெல்லாம் கொட்டும் மழையிலும் வழியும் ரத்தத்துளிகளைப் போல் பளீரிடும் முசுமுசுக்கையின் பழங்களாய் புருஷனின் பிரிவுத்துயரால் மனம் கனன்றாலும் அழுதழுது சிவப்பேறிய விழிகளோடு அப்பா வெளிநாடு போயிருக்காருத் தங்கம், சீக்கிரமா வந்துடுவாரு என்று வழக்கம்போல சொல்லிய பொய்யை மீண்டும் சொல்லாமல் மகனின் முகத்தைப் பார்த்து 'ங்கொப்பா ஜெயில்ல இருக்காருப்பா' என்று சலனமில்லாமல் சொன்னாள். புரியாமல் மலங்க மலங்க முழித்த மகனின் முடியை ஆதரவாய்க் கோதிவிட்டபடியே அப்பா ஜெயிலுக்கு ஏன் போனாரென்று சொல்லத் தொடங்கினாள். மழை முன்னிலும் அதிகமாய் வலுக்கத் தொடங்கியது - அடைமழைக்காலம் என்பதை உணர்த்தும்படி.

வழக்குச் சொல் விளக்கம்

1. பாதகட்டை	மரத்தாலான செருப்பு
2. கொள்ள மட்டை	தலையையும் முதுகையும் மறைத்துள்ள தென்னங்கீற்றால் வேயப்பட்ட மழைக்கோட் (உடை)
3. செருக்கவரவு	உணவாகும் வரகரிசியில் இதுவொரு ரகம். இந்த வரகரிசியை உணவாக்கிய பின், வரகுச் சோற்றை தின்பவர்கட்கு - ஒருநாள் முழுவதும் உடல் நடுங்கும்/தலைசுற்றும்... ஜுரம் வந்தவனாய் உடல் உதறும்
4. கமுக்கமாய்	ரகசியமாய்
5. வெரபுட்டி	விதை/தானியங்களை அள்ளித் தெளிப்பதற்குப் பயன்படும் சிறிய ரக கொடிக்கூடை.
6. ஆண்டை	பண்ணையார்/குறுவிவசாயி சாதி இந்துக்களாக இருக்கும் பட்சத்தில் தலித்துகளால் 'ஆண்டை' என்று அழைக்கப்படுகிறார்கள்
7. வெட்டிவேலை	பணம் வாங்காமல் (பணக்கூலி) செய்யும் பண்ண வேலை
8. சகடை வண்டி	சாதி இந்துக்களின் - சாமியை ஊர்வலமாய் அழைத்துவரப் பயன்படும் சிறிய ரகத்தேர்.

9. கொட்ட இலை	ஆமணக்கு இலை
10. கெலித்தபடி	கிண்டலாய் சிரித்தபடி
11. சேங்கிட்டி	கிடேரியைத் துரத்தும் காளையின் செயலைக் குறிக்கும் சொல்
12. ஓங்கும்	கொழுத்து வளரும்
13. ஆண்டைத்தாலி	பண்ணையார்& ஆண்டை - தன் செலவில், தன் பண்ணையாளுக்கு திருமணத்திற்கு செய்து தரும் பவுன் தாலி
14. கிளுக்கி	கிலுக்கி/நண்டு பிடிக்கப் பயன்படும் சிறிய மூங்கில் சிம்பு (நத்தை ஓடுகள் கம்பியில் கோர்க்கப்பட்டிருக்கும்)
15. கீழுடம்பு	பெண்குறி
16. ஆளாயி	வயதுக்கு வந்த குமரியைக் குறிப்பது
17. குதிர்	தானியங்களைச் சேமிக்கும் மண்ணாலான பத்தாயம்
18. காலனி ஆள்	தலித்
19. காசரை நார்	புளிச்சக் கீறை செடியின் குச்சிகளை காய வைத்து/தண்ணீரில் ஊற வைத்து உறித்தெடுக்கப்படும் நார் (கயிறு)
20. லவுக்கை	ரவிக்கை
21. ருசு	சாட்சி (தடயம்)
22. சூரி	தலித்துகள் மாடறுக்கப் பயன்படுத்தும் கூர்மையுள்ள கத்தி
23. காசா	நீலப்பழங்களோடு காட்சி தரும் குறுமரம்
24. சுணையுள்ள	கூர்மையுள்ள
25. கௌதாரியின் கெதாவல்	ஆபத்து வரப்போவதை அறிவிக்கும் கௌதாரியின் அபாயக்குரல்
26. கூராறத் தண்ணி	கூரை வீட்டில் - கூரை வழியே ஒழும் மழைநீர்
27. முசுமுசுக்கை	மூலிகைக் கொடி (வேலிகளில் அதிகமாய்ப் படர்ந்து கிடக்கும்)

பைத்தியம் செய்த சூனியம்

சேனன்

சிவத்தாருக்கும் நவமணிக்கும் குசுகுசுப்புக்கள் இருந்தபொழுது வைரவர் கோயிலுக்கு முன்னிருந்த பனங்கூடலுக்குள் கிடந்த கொட்டிலுக்கு ஒரு குடும்பம் குடிவந்தது. ஒரு பொடி, ஒரு பொட்டை, ஒரு வயசான கிழம். மூண்டும் முழுக்கப் புதுசு. அவர்கள் வந்த கையோடு வதந்திகள் விறுவிறு என்று கிளம்பி விஸ்வரூபம் எடுத்தன. அந்தத் துண்டுப் பனங்கூடலின் சொந்தக்காரன் விக்கினேஸ்வரன். இண்டைக்கு விக்கி... விக்கி... என்று ஊரின் 'பெரிய' சனங்கள் நல்ல ஒட்டுறவு. எண்டைக்கு அவன் பெரதேனி யாவில் படிப்பை முடிச்சுப்போட்டு ஏ.ஜி.ஏ ஒப்பிஸில் வேலைக்குச் சேர்ந்தானோ அண்டைக்கே சனம் எல்லாத்தையும் மறந்துபோச்சு எண்டு அவர் மனதுக்குள் ஒரு எண்ணம். குழந்தை குட்டிகள் என்று சமூகத்தில் கஸ்டப்பட்டு ஒரு இடத்தை எடுத்த பிறகு இவ்வளவு காலமும் துணியாத ஒரு காரியத்தைத் துணிந்தார் அவர்.

விக்கிக்கு அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் சொந்தம் என்று மட்டும் ஊருக்குத் தெரியும். இருப்பினும் ஊரின் முறுக்குக்கு முன் விக்கி நிமிர்ந்தது போல் அவர்கள் நிமிர முடியவில்லை. போஸ்ட் மாஸ்டர் முருகேசுவுடன் கதைச்சுப் பேசி அந்தப் பொடியனுக்கு ஒரு பியோன் வேலை எடுத்துக் கொடுத்தார் விக்கி. அந்தப் பொடியன் பைத்தியம் என்று ஊருக்குத் தெரிஞ்சுபோக கனகாலம் எடுக்கவில்லை. அதனால் இன்று வரைக்கும் அந்தப் பொடியனின் பெயர் யாருக்கும் தெரியாது. அவனின்ர சகோதரி சொத்தி - காது கேக்காது - அரைப் பைத்தியம். அவளைப் பற்றி ஊரில் ஏராளமான பயங்கரக் கதைகள் உலாவி வந்தன. அவள் கொட்டில் பக்கம் ஆம்பிளயள் போகக் கூடாது என்ற எழுதா விதியை எல்லாரும் பின்பற்றினர். ஆம்பிளைகளைக் கண்டால் எப்படி அவள் இழுத்துப் போட்டு 'அசிங்கப்படுத்துவாள்' என்று இரகசியக் கதைகள் உண்டு. அந்த 'அசிங்கப்படுத்துதல்' ஆண்குறியோடு விளையாடுதல் என்று பொடிசுகளுக்குள் கதை. அதனால் சின்னப் பொடிசுகள் அந்தப் பக்கம் போனது கிடையாது. அவளைப் பற்றி இல்லாத பொல்லாத கதைகள் எல்லாம் சொல்லி சின்னப் பொடியன்களை தாய்மார்கள் வெருட்டி வைத்திருந்தனர். இருப்பினும் சில காவாலிப் பொடியள் மீசை அரும்பி ஆசை துறுதுறுக்கும் வயசுக் கோளாறினால் 'திக்திக்' என்ற இதயத்துடன்

அந்தப் பக்கம் நடமாடிப் பார்ப்பார்கள். அவள் ஆண்குறியை மடக்கி உடைத்துப் போடுவாள் என்று பொடி வட்டாரத்துக்க கிடந்த கதைதான் அவர்களின் துணிவில் இடித்தது.

தகப்பன் கிழவனை பனைவளவுக்க பாளை, பன்னாடை பொறுக்கும்போது பலர் கண்டுள்ளார்கள். அவன் ஊமை என்று ஒரு கதை. ஆனால் அதுவும் உண்மை தெரியாது. தன் பொக்கை வாயை மாடு அசைபோடுவதுபோல் அங்கும் இங்கும் ஆட்டிக் கொண்டு குழி விழுந்த கண்களுடன் ஆடி ஆடி மெதுவாக நடப்பது மட்டும்தான் கிழவனின் கிராமத்து இருத்தல்.

ஒரு நாள் வானம் வெம்பிக் கொண்டிருந்தபொழுது சிவத்தார் கணவாய்க் கோர்வையுடன் பனை வளவுக்குள்ளால் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தார். சிவத்தார் வெள்ளைக் கடற்கரைக்கு மீன் வாங்கப் போறதுக்கு இரண்டு விதமான ரூட்டு வைத்திருந்தார். ஒண்டு, வைரவர் கோயிலடிப்பக்கம் போய் பனைவளவு தாண்டி சீமான்ர கள்ளுக் கொட்டில் தாண்டிப் போகும் ரூட்டு. மற்றது, ராசாவின் வீதியடியால கல்லுகளுக்க விழுந்தெழும்பி சீமான்ர கொட்டில் விலத்தி கனகனின் கொட்டில் கண்டு போகும் ரூட்டு. அண்டைக்கு சீமான்ர முட்டிய குலுக்கிக் குலுக்கி குடிச்சுப் போட்டு பனைவளவுக்குள்ளால விழுந்துடித்து வந்து கொண்டிருந்தார். நவமணி வீட்டுக்கு மீன் கோர்வை வாங்குவது சிவத்தார்தான். அவயிட்ட நசுக்கிடாம ஒன்றிரண்டு ரூபாவ சிவத்தார் கள்ளுக்காக அடிச்சுப் போடுவேர். அது அவைக்கும் தெரியும். இருந்தாலும் சிவத்தார் நல்லாப் பார்த்து வாங்குவேர் என்பதால் அவர்கள் கண்டு கொள்வதில்லை. அன்றைக்கு நல்ல மழை வேறு.

நவமணியின் வீட்டில் நின்று பார்த்தால் தூரத்தில் பனங்காடும் அதோடு கரையும் நீலவானமும் தெரியும். சில நேரம் கறுப்புக் கறுப்பாக மேகக்கூட்டம் பனைவளவுக்கு மேல் இறங்குவது தெரியும். பேந்து தூரத்தில் மழை பெய்வது தெரியும். சில நேரம் கிழக்கில் இருந்து மேற்கிற்கு மழை நடந்து போவதைப் பார்க்கலாம். சின்னப் பொடியள் 'டேய் மழை துரத்திக் கொண்டு வருகுதடா ஓடுறா... ஓடுறா' என்று பின்னால பார்த்துக் கொண்டு ஓடுவதைப் பார்க்கலாம். சில நேரம் மூஞ்சிய நீட்டிக் கொண்டிருக்கிற நாயின் மூக்கு நுனியில் வந்து மழை நிற்கும். தலையச் சிலுப்பிப் போட்டு பப்பி அருண்டு படுக்கும். வானம் மீண்டும் நிலம் வெளுத்துக் கொண்டு வரும். இந்த மாதிரி மாயஜால வித்தைகளுக்கு மத்தியில் அடாமழை விடாமழை எனப்படும் மழையும் பெய்யும். வெள்ளான் குளம் பெருகி நெருஞ்சிக் காடு தாண்டி ஓடி நெடுங்கேணி வயலுக்கு வந்து விளையாடும். இந்தக் காலத்தில்தான் பொத்துப் பொத்தென்று மண்டையப் போடுங்கள் சனங்கள். பனங்கூடல் கொட்டிலுக்கு அந்தக் குடும்பம் வந்த அதே ஆண்டு மூண்டு சாவு. அதுக்கு

முன்னாடி இப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று சனங்கள் பேசிக் கொண்டார்கள்.

இப்படியான ஒரு அடாமழை விடாமழை நாளில்தான் சிவத்தார் பனங்கூடல் தாண்டிக் கொண்டிருந்தார். அண்டைக்குத்தான் முதன் முதலாக பனங்கூடல் கொட்டில் வீட்டுக் கிழவனைக் கண்டார் சிவத்தார். மழையோடு மழையாக இரத்தம் கரைய வயிறு பிளந்து குடல் வெளிப் போந்து அம்மணமாக கிழவன் கை கால்கள் விரித்துக் கிடந்தது. கள்ளும் போன இடம் தெரியவில்லை சிவத்தாருக்கு. இரண்டு பனை தள்ளி நின்ற ஒரு வளைந்த பனையின் உச்சியில் ஊத்தைத் துணிகள் ஒரு தடி வைத்து சுத்திக் கட்டப்பட்டிருந்தது. தடியின் இரண்டு பக்கங்களிலும் மாட்டுக் குடல் - மாட்டுக் குடலாய்த்தான் இருக்க வேண்டும் - தொங்கிக் கொண் டிருந்தது. கிழவனின் குஞ்சாமணியில் திரிச்சீலை சுத்தப்பட்டிருந்தது. திரிச்சீலை நுனியில் எரிந்து காணப்பட்டது. கிழவனின் தலைமாட்டில் புதிதாக வெட்டப்பட்டிருந்த கிடங்கில் எரிந்து கருகி மழையில் நனைந்து கரித்துண்டுகள் தேங்கிய மழைநீருடன் கிடந்தன. கிழவனின் தலைமயிர் கருகி சுருங்கிப் போயிருந்தது. கிழவன் கிடந்த பனையடியில் மறுபக்கம் நிலத்தில் ஆழமான கோடுகள் கீறப்பட்டுக் கிடந்தன. ஒருவிதமான மருந்து நெடி மண்புழுதி வாசனையோடு கலந்து வந்தது. திரும்பியும் பாராமல் ஒரு வேகநடை எடுத்தார் சிவத்தார்.

சிவத்தாருக்குக் கொஞ்ச நாள் ஊரில் நல்ல மவுசு. 'சிவம், டேய்... சிவம், கதைய வடிவாச் சொல்லு' என்று விழுந்து விழுந்து கேட்டார்கள். பிறகு அட அதுதானா என்று அடிக்கடி மறந்தார்கள். இது கொலையில்லை, தற்கொலை என சிவத்தார் அடிச்சுச் சொன்னார். இல்லை, இது இயற்கைச் சாவு என்று பலர் முடிவெடுத்தார்கள். ஆனால் அய்யர்மாருக்கு நல்ல திருவிழா. கோயில்களில் கூட்டம் வழிந்தது. அர்ச்சனைக்கான வரிசை நீண்டது.

தகப்பன் தாய்மாரை ஒட்டுக்கேட்ட குஞ்சுகுருமான்களுக்கு விழுந்தது நல்ல அடி. கொஞ்சம் வயசுவந்த பொடியன்களுக்கு 'அதொண்டுமில்ல, உங்கிட வேலையைப் பாருங்க பார்ப்பம்' என்று உறுக்கு விழுந்தது.

பிணம் கேட்பாரற்று நாற நாற சனம் கிலி குறைந்து இயற்கைச் சாவு, தற்கொலைக்கு முற்றுப்புள்ளி போட்டுவிட்டு சிவத்தாரைப் போட்டுக் குடையத் தொடங்கியது. சனம் கேக்க கேக்க சிவத்தார் யோசிச்சு யோசிச்சுக் கதை சொன்னார். கிழவன்ர கமக்கட்டுக்குள்ளால ஏதோ மின்னிக் கொண்டு கிடந்தது என்று ராசலிங்கத்துக்குச் சொன்னார். வாயடியில ஏதோ தெரியுதென்று பார்த்தன். பாம்புகள்... சளக் புளக்கென்று கன பாம்புகள் என்று கனகனுக்குச் சொன்னார். நிலம் கொஞ்சம் ஆடின மாதிரிக் கிடந்ததென்றும் தான் கொஞ்சம் தள்ளி நடக்கத் தொடங்க துணி கட்டிக் கிடந்த நிமிர்ந்த பனை ஒருக்கா தன்னை நோக்கி வளைந்து வந்து நின்றதென்றும் ராசாத்தியையும் புருசனையும் வெருட்டினார்.

இப்படியாக சிவத்தார் கதை சொல்லித் திரிந்த காலை நவமணியும் சிவத்தாரைப் பிடித்து வைத்து நிறையக் கதை கேட்டார். இது நடந்து ஏறத்தாழ இருபத்திரண்டு நாளுக்குப் பிறகு பைத்தியம் நவமணி வீட்டுக்கு வந்தது. 'இனிமேல் இஞ்சாலப் பக்கம் வரவேண்டாம்' என்று நவமணியின் தாயார் சொன்ன பிறகு கொஞ்ச நாளாய் வீடு வீடாக நெருப்புப் பெட்டி கேட்டு பொறுக்கிக் கொண்டு திரிந்தது பைத்தியம். பைத்தியத்தை மட்டுமில்லை, அவன் சகோதரியையும் நிப்பாட்டினார்கள் நவமணி வீட்டார். நெல்லுக்குத்த மாவிடிக்க என்று போய்க்கொண்டிருந்த பைத்தியத்தின் சகோதரிக்கு போக்கிடமற்றுப் போனது. மீண்டும் நாற்பத்தி மூன்றாம் நாள் நவமணி வீட்டுக்குப் போனான் பைத்தியம். நவமணி கீச்சிட்டுக் கொண்டு போய் வீட்டுக்குள் ஒளித்தாள். தாய்க்காறி விழுந்தடித்துக் கொண்டு விறாந்தைக்கு வந்தாள். 'உனக்கு என்ன தம்பி சொல்லி அனுப்பினான்?' என்று சினந்தாள். பிறகு 'சரி குசினிப்பக்கம் வா' என்று சொல்லி உள்ளே போனாள். பைத்தியம் வீட்டைச் சுற்றி குசினிப்பக்கம் போனான். கிடந்த பழங்கறி, சோறையெல்லாம் அவனுக்கு கொட்டிக் கொடுத்துப்போட்டுக் கொஞ்சக் காசையும் திணித்தாள். 'தம்பி உனக்கு நிலமை விளங்கும்தானே, கொஞ்ச நாளைக்கு பொறுமையா இரு' என்று சொல்லி அனுப்பினாள். 'கொஞ்ச நாளைக்கு பொறுமையாய் இரு' என்றால் 'தம்பி இனி இந்தப் பக்கம் வராத' என்று கேட்டுக் கொள்ளுதலாகும். குசினி ஜன்னலை ஓரமாகத் திறந்து பார்த்துக் கொண்டிருந்த நவமணிக்கு எட்டி 'போட்டு வாறன்' எண்டு சொன்னான் பைத்தியம். 'ஊச்' என்ற சத்தத்துடன் ஜன்னலை அடிச்சுச் சாத்தினாள் நவமணி.

அறுபத்தொன்பதாவது நாள் வெள்ளான் குளத்தில் வேலனின் பிணம் மிதந்தது. அடாமழை விடாமழையில் பெருகிப் போய்க்கிடந்த வெள்ளான் குளத்தில் வேலனுக்கு என்ன அலுவல் என்று கேட்டது சனம். போயும் போயும் வெள்ளான் குளத்தில் யாரும் குளிக்கப் போவானா?

பைத்தியம் ஏன் கொட்டிலுக்குள் பதுங்கிக் கிடக்கென்று சிவத்தார் கேட்டார். முப்பத்தொண்டுக்கும் சாப்பாடு வாங்க வரவில்லை. நடவடிக்கைகளையும் நடந்தவைகளையும் வைத்து தீர ஆலோசித்து சாத்திரி ஒரு முடிவுக்கு வந்தான். பைத்தியம் ஒரு கொடிய சூனியத்தை ஏவி விட்டிருக்கிறது என்று எல்லாருக்கும் எடுத்து விளக்கினான். ஒவ்வொரு வீட்டிலும் சூனியத்துக்கு எதிரான 'காப்பு' நடவடிக்கை நடந்தது. இதில் முக்கியமாகத் திடுக்கிட்டது நவமணி வீட்டார்தான். 'அய்யோ கடவுளே அவன் குடும்பத்துக்கு நாங்க ஒரு அநியாயமும் செய்யேல்ல' என்று அடித் தொண்டையிலிருந்து கும்பிட்டார் நவமணியின் தாயார். சிவத்தார் இச்செய்தியை ஆதாரங்களுடன் ஆமோதித்தார். ஆனால் பைத்தியத்துக்கு இதுக்கொண்டும் நேரம் இருக்கவில்லை. அவள் சகோதரி எத்தனை நாளைக்குத்தான் பனம்பழத்தைப் பொறுக்கித் தின்னுவது? அவனுக்குத்

தெரியாமல் அவள் ரோட்டுப் பக்கம் கெந்திப் போய் நின்று போற வாற ஆட்களிடம் பஸ்ஸால் இறங்குபவர்களிடம் பிச்சை எடுத்தாள் என்று அவளைக் கட்டிப் போட்டான் பைத்தியம். அவளைக் கொட்டிலுக்குள் கட்டிப் போட்டதிலிருந்து அவள் கயித்தைக் கடிச்சுக் கடிச்சு திண்டுகொண்டிருந்தாள்.

போன மாசம்தான் விக்கினேஸ்வரன் வந்து திட்டிப் போட்டுப் போனான். 'உங்கள ஒரு மனுசரா மதிச்சு இஞ்ச கொண்டு வந்து விட்டனான், உருப்படியா இருப்பம் எண்ட யோசின இல்ல' என்று பைத்தியத்தின் மேல் பாய்ந்தான். 'உங்கிட சாதிக்குணம் உங்களவிட்டுப் போகா'தென்று திட்டினான். அவன் இவ்வாறு கொட்டிலுக்குள் கலாட்டா செய்த மூன்றாம் மாசம் கிளிநொச்சிக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அப்ப ஏ.ஜி.ஏ.வா இருந்தவர் ரட்ணசிங்கம். ரட்ணசிங்கம் அவனைத் தனியக் கூப்பிட்டு அன்போடு விசாரிச்சார். தம்பி கேக்கிறன் எண்டு குறை நினைக்கக் கூடாது என்ற வழமையான எடுப்போடு கொட்டில் வீட்டு மர்மங்களைக் குடைந்து குடைந்து நோண்டினார். ஏ.ஜி.ஏ ரட்ணசிங்கத்தில் விக்கி நிறைய மதிப்பு வைச்சிருந்தார். அண்ணே, அண்ணே... என்று அன்பொழுகப் பழகி வந்தார். அண்ணே உங்களோடதான் கதைக்கிறன்; வெளியில விட்டுராதிங்கோ என்று குரலைக் குறைத்து தனக்குத் தெரிந்த கதையைச் சொன்னார். 'கிழவன் பாருங்கோ ஒரு கிறுக்கன். ஆரோ ஒருத்தர் நிறையக் கள்ளு வெறியில கொட்டில் பக்கம் வந்து அவள் பொடிச்சியோட கதைச்சுக் கொண்டு நிண்டிருக்கிறேர். அவள் பொடிச்சியும் ஒரு மாதிரிப் பாருங்கோ. விளக்கமில்லாம நிண்டு கதைச்சுக் கொண்டு நிண்டிருக் கிறாள். அவர் கையில கிடந்த கணவாய் கோர்வைய வாசலில போட்டிட்டு பொடிச்சியோட உள்ள போயிருக்கிறேர். பாளை, பன்னாடை பொறுக்கப் போன கிழம் நேர உள்ள போய் பாளையப் போட்டிட்டுப் பாளை வெட்டுற கத்தியோட வெளியில வந்திருக்கு... பிறகு ஏதோ கைகலப்பில கிழவனுக்கு படக்கூடாத இடத்தில கத்தி பட்டுட்டுது போலக் கிடக்கு...' பின்பு சாகிற வயசுதானே என்று முடித்தார்.

சொல்லிறமட்டும் கதையை ஓமோம், ஓமோம் என்று கேட்டுப் போட்டு ரட்ணசிங்கம் விதானைக்குச் சொன்னேர் 'இவன் பாவி விக்கி விட்டா சிவத்தாரைக் குறை சொல்லுவான் போல கிடக்கு.' அதோட 'குலக்குணம் விட்டா போகப்போகுது' என்று காரணமும் சேர்த்தேர். காரண காரியத்தோடு சொன்ன கதை சுத்திச் சுழன்று வந்து விக்கி காதில் விழுந்தது. கிளிநொச்சிக்கு மாற்றல் கேட்டுவிட்டு கொட்டிலுக்குப் போய் ஒரு கலாட்டா செய்தான் விக்கி. விக்கிக்கு தெரியும் விசயம் தன் கைவிட்டுப் போய்விட்டதென்று. வேறு எங்காவது மாற்றல் கேட்டிருந்தால் இவ்வளவு விரைவாக மாற்றல் கிடைத்திருக்காது. விக்கி விசயத்தோடு கிளிநொச்சிக்கு மாற்றல் கேட்டபடியால் ஒழித்துவிட முடிந்தது.

பயித்தியத்துக்கு தன்ர மானம் போனாலும் பரவாயில்லை; தனக்கு எவ்வளவோ செய்த விக்கியின்ர மானம் போகக்கூடாதென்று ஒரு அக்கறை. விக்கி மாற்றலாகிப் போன கையோடு பயித்தியத்துக்கு பயித்தியம் முற்றியே போய்விட்டது. தின்ன ஒன்றுமில்லாத நிலையில் சகோதரிக்குக் கொடுத்த பனங்காய்களைப் பறித்துதான் தின்றான். அவளுக்குத் தன்னைக் கட்டியிருந்த கயித்தைக் கடிக்கக் கூட சக்தியிருக்க வில்லை. பயித்தியத்துக்கு நடந்துபோய் பனங்காய் பொறுக்கச் சக்தி யிருக்கவில்லை.

மந்தமான ஒரு பின்நேரம் பயித்தியம் போய் வெள்ளான் குளத்தில் தண்ணியை முட்டி முட்டி குடித்துப் போட்டு கிடந்த பனங்காய்களைச் சூப்பி தும்போடு விழுங்கிப்போட்டு விழுந்தடித்துக் கொண்டு மண் கும்பான் பக்கமாகப் போனது. அந்தப் பக்கம் போனவன் தான் எங்கு போனான், என்னவானான் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

பயித்தியம் இருக்கா, இல்லையா என்ற விபரம் தெரியாத இந்தக் காலத்தில், சுடுகாட்டுக்குள் அடிக்கடி சந்தித்துக் கொண்டிருந்த மஞ்சுளாவினதும் குணத்தினதும் குசுகுசுப்பு குணம் வீட்டுக்குத் தெரிய வந்தது. முழங்காலுக்கும் மொட்டைக்கும் முடிச்சுப் போட முடியாதென்று குஞ்சு குருமான்களில் இருந்து புல் பூண்டுகளுக்கும் தெரியும். இதுவரை கால கிராமத்து வரலாற்றில் அப்படியொரு கலப்பு முடிச்சு விழுந்ததில்லை. ஒரு வெட்டுக் கொத்தைத் தவிர்க்க மஞ்சுளாவும் குணமும் நஞ்சைக் குடித்துச் செத்தார்கள். அது அவர்களது நீண்ட காலத் திட்டம். எண்டைக்கு அவர்களது உறவு வெளியில் வருகுதோ அண்டைக்கு கூடிக் கலவி செய்து இன்புற்றிருந்து நஞ்சுண்டு ஆவி துறப்பது என்பது அவர்கள் சந்தித்துப் பழகிய ஆரம்ப காலத்தில் எடுத்த சங்கற்பம். இரண்டு நாளாக ஊரெல்லாம் அவர்களைத் தேடித் திரிந்தது சனம். குணம் மஞ்சுளாவை இழுத்துக் கொண்டு எங்கோ ஓடிவிட்டான் என்பதுதான் கதையாக இருந்தது. ஆனால் இரண்டாம் நாள் கைகோர்த்து கட்டிப் பிடித்துக் கொண்டு செத்துப் போயிருந்த மஞ்சுளாவினதும் குணத்தினதும் பூதவுடல்களை சுடுகாட்டுக்குள் கண்டு பிடிச்சது சனம். எங்களை எடுத்துச் சென்று புதைக்கிற எரிக்கிற வேலையும் உங்களுக்கு வேண்டாம் என்று அவர்கள் எழுதி வைச்சிருந்த துண்டைத் தூக்கி அங்கால போட்டுவிட்டு கஸ்டப்பட்டு அவர்களைப் பிரித்தெடுத்து வீட்டுக்குக் கொண்டுபோய் அவரவரே செத்தவீடு கொண்டாடி மீண்டும் சுடுகாடு கொண்டுவந்து வேறு வேறு இடத்தில் எரித்தார்கள்.

எப்பேர்ப்பட்ட பொடியன் இப்படிச் செய்து போட்டான் என்று ஊர் முழுக்கக் கவலைப்பட்டது. இதுவும் பைத்தியம் செய்துவிட்ட சூனியத்தின் ஒரு பகுதியாகச் சனம் எடுத்துக் கொண்டது. 'என்ர அம்மாளாச்சி ஏன் இப்பிடி நடக்கக் கூடாததெல்லாம் நடக்கு'தென்று நவமணியின் தாயார் சமையலறையில் கண்ணீர் விட்டு அழுதாள்.

கொட்டிலுக்குள் பைத்தியத்தின் சகோதரியின் பிணம் கிடந்து நாற ஊர் ஆம்பிளையள் எல்லாம் கூடி விபூதி, சாத்திரி கொடுத்த காப்பு சரக்குகளுடன் கொட்டிலுக்குப் போனார்கள். கொட்டில் ஒரே பிணக் காட்டு மணமாய்க் கிடந்தது. கூடப்போன வயித்தி 'பொட்ட கர்ப்பிணி போல கிடக்கு' என்றார். ஆயுள் வேத நிபுணத்துவத்தால் அவருக்கு வயித்தி என்று பட்டம். 'அது வயிறு பட்டினியால ஊதியிருக்கும்' என்று நவமணியின் தகப்பன் சச்சி ஒரு கருத்துத் தெரிவித்தார். அது காதில் விழாமல் 'அறுவாள் ரெண்டு உயிரைப் பட்டினி போட்டுக் கொண் டிருக்கிறாள்' என்றார் வயித்தி. சச்சிக்கு நெஞ்சிடித்தது. மாவிடிக்க வந்தவளப் பேசாம மாவிடிக்க வர விட்டிருக்கலாமோ என்று யோசிச்சாள். அவள் பட்டினி கிடந்து செத்துப்போன கோலம் இந்த வலு கடினமான ஆம்பிளயள் மனங்களில் நிறைய நேரம் கிடந்து அலட்டிக் கொண்டிருக்க வில்லை. அப்பிடியே கொட்டிலோடு போட்டு அவளை எரித்தார்கள். எல்லாம் எரிஞ்சு சாம்பலோடு சாம்பலாகி, மண்ணோடு மண்ணாய்ப் போனாலும் அந்தப் பக்கம் போக யாருக்கும் துணிவிருக்கவில்லை.

இதன் பிறகு அர்ச்சனைகள் மட்டும் ஒழுங்காக நடந்து கொண்டிருந்தது. காலப்போக்கில் சச்சி சனத்தின்ர கதை பொறுக்க முடியாமல் சிவத்தாருக்கே நவமணியைக் கட்டிக் கொடுத்தார். சிவத்தார் வீட்டோடு மாப்பிள்ளையாக வந்த பிறகு சச்சிக்கு தோட்ட வேலைகளுக்கு ஆள்பிடிக்கிற அலுவல் குறைஞ்சுது.

நவமணியைக் கட்டிக் கொடுத்து பொறுப்பைக் கரைத்த பிறகு சச்சிக்கு சமயப்போக்கு கூடிப்போச்சென்று சனம் கதைச்சுக் கொண்டிருந்தாலும் சச்சி இப்பிடியொரு திருப்புமுனையான காரியம் செய்வார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க இல்லை. சச்சியின் தொழில் சைக்கிளை [illegible]த்துக் கொண்டு ஊர் சுற்றி வருவது. சில நேரம் சைக்கிளை எடுத்துக் கொண்டு போனால் அடுத்த நாள்தான் திரும்பி வருவார். 'எங்காலையா போனனியள்?' என்று நவமணி கேட்டால் அந்தக் கோயிலுக்குப் போய் வந்தனான்; இந்தச் சாமியாரப் பார்த்து வந்தனான் என்று பொறுப்பில்லாமல் பதில் சொல்லுவார் சச்சி. ஒருநாள் சச்சி திரும்பி வந்து சொக்கிப் போயிருந்தார். தன் தேவாரக் கொப்பியை எடுத்து வைத்து நமச்சிவாயம் எழுதினார். சாமியறைக்குள் பூட்டிக் கொண்டிருந்து பலமணி நேரம் தியானமியற்றினார். பிறகு ஆறுதலாக விறாந்தையில் வந்திருந்தபோது நவமணியும் தாயாரும் அவரைத் தேத்தண்ணியுடன் அணுகினர். 'மகள், நேற்றொரு அற்புதம் நடந்த'தென்றார். அவர் சொன்னது நம்பமுடியாமல் இருந்தது. காசியில் நூற்றாண்டுகள் தவமிருந்து வந்த ஒரு ஆந்திர சாமியாரைத் தான் சந்தித்ததாகச் சொன்னார். தான் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தபோது செயின் இறுகி சைக்கிள் தானாக நின்றபொழுது தெருவோரமிருந்த மரத்தின் கீழிருந்து 'நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்' என்று சாமியார் அழைத்தாராம். பின்பு சச்சி கண்ணைக் கசக்கி

விட்டுப் பார்த்த பொழுதுதான் தெரிந்ததாம் சாமியார் தரைக்கு ஒரு அடி உயரத்தில் காத்தில் சம்மாணம் கட்டிக் கொண்டிருந்தது.

சச்சிக்கு சமயப்பித்து முத்தி பிசகிப் போச்சோவென்று சந்தேகம் வந்தது. ஒரு சனமும் அவர் கதையை நம்பத் தயாரில்லை. அவரைக் கண்ட மாத்திரத்தில் அவரைத் தான் அழைத்து வருவதாகச் சொன்னார். 'அப்பரை முதல் அதைச் செய்யச் சொல்' என்று சிவத்தார் நவமணிக்கு அறிவுரை சொன்னார். சச்சி தன் பழைய காரை கழுவித் துப்புரவு செய்து விபூதி பன்னீர் தெளித்து புனிதப்படுத்தி எடுத்துக் கொண்டு பண்ணைப்பாலம் தாண்டிப் போனவர் அடுத்தநாள் சாமியாரோடு வந்தார். சனம் அலறிப் பதறியது.

நாகேஸ்வரராவ் என்ற நபரைத் தன் காரில் சச்சி அழைத்துக் கொண்டு வருவார் என்று யாரும் நம்பியிருக்கவில்லை. நமச்சிவாயம்... நமச்சிவாயம்... என்று மணிக்கு நூற்றெட்டுத் தடவை சொல்லிக் கொண்டிருந்த நாகேஸ்வரராவின் கைகள் ஒன்றில் குண்டிப் பக்கம் கிடந்தது அல்லது கொட்டைப் பக்கம் கிடந்தது என்பர் பெரியர். குண்டியையும் கொட்டையையும் மாறிமாறிச் சொறிந்து கொண்டிருந்தார் அவர். கட்டி கட்டியாகத் திரண்டு போயிருந்த தலைமுடி பினாட்டு நாத்தம் எடுத்தது.

தனது கராஜை சுத்தம் செய்து ஆச்சிரமம் ஆக்கினார் சச்சி. சச்சி வீட்டில் மச்சம், மாமிசம் நிறுத்தப்பட்டது. குசினியை ஒரு உரஞ்சு உரஞ்சிக் கழுவிப் புனிதம் போக்கும்படி நவமணிக்கு ஒரு கட்டளையிட்டார் தாயார். சாமியாருக்குப் பணிவிடை செய்வதிலும் சச்சியின் தேவைகளை ஓடி ஓடிக் கவனிப்பதிலும் அவவுக்கு நேரம் விண்கட்டிப் பறந்தது.

நாகேஸ்வரராவைத் தரிசிக்க சனம் வரிசையில் தவம் கிடந்தது. அவர் மக்களுக்குப் புனித தீர்த்தமும் வழங்கி ஆசிர்வதித்தார். தீர்த்தத்துக்காக செம்பில் தண்ணியை நிரப்பி நிரப்பிக் கொடுத்தார் சச்சி. ஒவ்வொரு முறை செம்பைப் பெறும் பொழுதும் கராஜுக்கு வெளியே வந்து வலக்கையை சூரியனுக்குக் குறிபார்த்து நீட்டி நின்று சடாரென தொண்ணூறு டிகிரியில் திரும்பி தன் கட்டிப் போன தலை மயிரை செம்புக்குள் விட்டு ஒரு ஆட்டு ஆட்டினார் அவர். பின்பு தன் புனித எச்சிலை செம்புக்குள் மூன்று முறை துப்பினார். அத்துடன் தண்ணீர் தீர்த்தமானது. இதைப் பார்த்துக் கொண்டு நின்ற பொடி பொட்டைகள் 'உவெக், உவெக்' என்றதுகள். 'பிள்ளைகள் நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது' என்றா சாந்தம் டீச்சர். 'புனிதமான சாதுகளைப் பற்றி அரியண்டம் கதைக்கக் கூடாது. கண்ணை மூடிக்கொண்டு காலில் விழுந்து வணங்கி வாங்கிக் குடியுங்கள். உங்களுக்கு நல்ல படிப்பு வரும்' என்று போதித்தா அவா. அந்த 'டேம்' அவவின்ர கிளாஸில கனபேர் பெயில். 'தீர்த்தத்த அளவுக்கதிகமாக நம்பிப்போட்டுதுகள் இதுகள்' என்று பிரின்ஸிபல்லுக்கு விளக்கம் சொன்னா சாந்தம் டீச்சர்.

நாகேஸ்வரராவ், திருநீறு எங்கிருந்தெடுத்தேர், எப்படியெடுத்தேர் என்று யாருக்கும் தெரியது. அதுபாட்டுக்கு வந்து கொண்டிருந்தது. நீறை வாயடியில் பிடித்து சுண்டி ஊதியும் நெற்றியில் இருந்து பிடரி வரை இழுத்தும் ஆசிர்வதித்தார். அவர் காலடியில் மா, பலா, வாழை கனி வகையினங்களும் தேங்காய், கற்பூரங்களும் வந்து குவிந்து கொண் டிருந்தன. இருப்பினும் ஒரு நாளைக்கு ஒரு வாழைப்பழம் மட்டும்தான் சாமியார் உண்ணுவார் என்ற ஊர் முழுக்க சச்சியால் எடுத்து விளங்கப் படுத்தப்பட்டது. 'இன்று என் வாழைப்பழத்தை உண்ணுங்கள் சாமி' என்று சனங்கள் அடிபிடி பட்டுக் கொண்டு வந்தார்கள். சனங்களின் வாழைப் பழங்களை ஒரு உரப்பைக்குள் போட்டு உலுக்கென்று உலுக்கி பின்பு, கண்மூடி ஒரு வாழைப்பழத்தைத் தெரிந்து உண்டார் சாமியார்.

ஊர் அவரில் பெரிதாக நம்பிக்கை வைத்தது. பைத்தியத்தின் சூனியப் பலம் இவர் வரவால் நலியும் என்று நம்பியது ஊர். பைத்தியத்தையும் நாகேஸ்வரராவையும் நேருக்கு நேர் மோதவிடுவது பற்றியும் கதை நடந்தது.

தொண்டரடிப் படைகள் எத்தனையோ கேட்டும் சாமியார் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை - குருவின் ஆசியோ என்னவோ சச்சிக்கு எங்கிருந்து வந்ததோ தெரியாது இந்த ஆற்றல் - அவர் சாமியாரின் எண்ணங்களையும் நோக்கங்களையும் செந்தமிழில் மொழிபெயர்த்தார்.

சாமியாரின் புகழ் எட்டுத் திக்கும் பரவியது. 'மலைக்குள் துவாரமிட்டு கொஞ்சகாலம் மரணித்துக் கிடந்த ஆதி மனிதன் - விரதம் உண்டு காற்றைப் பழகி வாழ்ந்த ஞானி - முக்கால வாழ்வின் விரிவும் மூன்றாம் கண்ணும் கிடக்கும் முனி - முக்திக் கதவின் சாவிக்காரன்' என்று செய்திகள் பறந்தது. ஒவ்வொருவரும் தம் வாழைப்பழத்தை அவர் இண்டைக்கு உண்ண வேண்டும் என்ற ஏக்கத்துடனும் கனவுடனும் அவர் வாசலில் வரிசையில் காவல் கிடந்தார்கள்.

யாழ்ப்பாணமெங்கும் புகழ் பெற்ற பண்டிதரும் பல்வேறு ஞானப் பரம்பரைகள் பற்றி ஆய்ந்த அறிஞருமான ஆறுமேகம் சாமியாரைத் தரிசிக்க வந்தார். அவர் பட்டப்பெயர் பல்வேறு மேகன். மேலுதட்டை மூக்கோடு சேர்த்துச் சொருகிவிட்டபடி முன்பல்லு முகத்துக்கு தொண்ணூறு பாகையில் முண்டிக் கொண்டு நின்றது அவருக்கு. அவருக்கு எக்காலமும் வாயைச் சரியாக மூட முடிந்ததில்லை. சற்றே மூட முடிந்தாலும் கீழுதடு கணக்காகப் போய் முன்பல்லுக்குக் கீழ் சொருகிக் கொண்டு நின்றது. 'அய்யர்'மார்களைப் போல் தொப்பையும் பெண்களைப் போல் பெருகி வளர்ந்த நீண்ட முலைக்காம்புகள் கொண்ட பெரும் மார்புமாக இருப்பினும் அவர் ஒருபோதும் மேல் சட்டை அணிந்ததில்லை. அவர் ஆறுமேகம் பிள்ளையாக இருப்பினும் பூணூல் போட்டு சால்வை அணிந்திருந்தார். அவருக்குக் குடுமி வளராதபோதும் தலைமுடிக்கு 'ரப்பர் பான்ட்' போட்டிருந்தார். ஆறுமேகம் பிள்ளை சாமியாருடன் வந்து கூடவே

தங்கி பலநாட்கள் உரையாடித் தெளிந்த பின் சாமியாரின் வரலாற்றை சாது சொன்னவாறே சனத்துக்கு இயம்பத் துணிந்தேன்.

சாமியாரைச் சந்தித்த இரண்டாம் நாளே தன் வேட்டியை ஆந்திர பாணியில் கட்டிக் கொண்டார். சாதுவின் சரித்திரத்தை ஒவ்வொரு மாலைப்பொழுதும் வயிரவர் கோவில் வாசல் படியில் வைத்து சனத்துக்குச் சொன்னார் அவர்.

சூணம் பட்டு, சாந்தி பெற்று, சூத்திரத்தையும் மூத்திரத்தையும் கடந்த, முழுநிலவில் உதித்த கனவென காலனை பாலன் பருவத்தில் கடித்துத் துப்பிய சய்தாரன்ய, சங்கீதபால, சாகித்ய குருக்கள் கங்கைக் கரையோரம் சவத்தை உண்டு சாவுக்கு முன் சம்மாணங்கட்டி, சுயம் நிசம் எல்லாம் சுக்கலாக்கி அகில அண்ட துணுக்கின் நுணுக்க பாவங்களைக் குறுக்கிக் குடித்து, வெறுத்து, கமக்கட்டுக்குள் மயிர் பெருக்கி வலிப்பு வந்து சாகமுதல் அமெரிக்காக்காரனுக்கு பேட்டி குடுத்திட்டுப்போன, அல்லா கில்லா அனைத்தும் தாண்டிய என் குருநாதருக்கு ஆனந்தமய கோடிகளைக் காணிக்கை ஆக்கிக் கொண்டு கங்கைக்கு குறுக்கால் நடந்து வந்து, கன்னடம் தம்பிடித்து பிசுக்கிவிட்ட காவேரிக்குள்ளால் நீந்தி வந்து ஆந்திரம் தாண்டி தமிழ்நாட்டின் கடற்கரையில் எல்லா சி.எம்களுக்கும் ஒதுக்கின இடம் போக மீதி இடத்தில் குறுக்குக் கட்டுடன் ஒரு குருகுலத்தை ஆரம்பித்தவர் அற்றிய நிதி, சநாதன சதி அவர்கள். என்ர குருநாதருக்கும் அவருக்கும் கிடந்த இறுக்கத்தின் பண்புதான் என்னைப் போன்ற எளிய நாய்களை, செல்லாச் சீடர்களை கிறுக்கி அடித்து அவர்தம் காலடியில் சறுக்கி வீழ்த்தியது.

சாவென்பது சகடதமுனியின்படி சங்கீதம் போன்றது. என்ட குருநாதன் அதைச் சுடச் சுடக் குடிக்கும் 'சூப்' என்றும் சொல்லலாம் என்றான். அற்றிய நிதி, சநாதன சதி செய்த ஆய்வுகளே உங்களைக் குலை நடுக்க வைக்கும் என்பதால் என் குருநாதர் பற்றி மட்டுமே உரைப்பேன். என் குருநாதர் அற்புதம் நிறைந்தவர். அற்புதமேயானவர்.

பாலும் பழமும் கைகளில் ஏந்தி பவள வாயில் புன்னகை சிந்தி என்ட குருநாதன் வர அடிக்கடி கனவு கண்டு திடுக்கிட்டு முழிக்கும் நான் 'மடக் மடக்'கென்று முலைப்பால் குடிக்கும் குழந்தை மாதிரி என்று சொன்னார் என் குருநாதர். குழந்தாய்... குழந்தாய் என்று அவர் விளிக்கும் பொழுதெல்லாம் ஞான் என்னையறியாமல் எழுந்தேன்; விழுந்தேன்; உடல் களைத்துச் சிதைந்தேன். ஞான் ஆடிக்களைத்து ஓய்கையிலே சூரிய நெருப்பெடுத்துக் குழைத்து 'நங்'கென்று செவ்வாய்க்கு அடித்தது போல் என் நெற்றிக்கு நீறடித்து என் கவலை களைந்து ஒரு முடிவு கட்டுவார் என் குருநாதர்.

இவ்வாறு என் குருநாதர்... என் குருநாதர் என்று புலம்பி புலம்பி பெயர் எடுத்தார் பண்டிதப் பிள்ளைவாள். அவர் தொப்பையை மடியிற் தன்னை

விட்டபடி பிரச்சாரத்துக்கு ஓய்ந்து இருந்தபோது அவரது மார்புகள் தொப்பையின் மேல் வந்துவிழுந்து சரிந்து நின்றன. சிறுபிள்ளைகள் இதைக் கிண்டல் செய்யாதிருக்கும் பொருட்டு தாய்மார் அவர்களுக்கு மந்திரத்தைப் போதித்தனர்.

பண்டிதப் பிள்ளைவாளின் பேச்சின் அடியும் நுனியும் ஆருக்கும் விளங்காவிட்டாலும் அவர் வருகை சச்சியின் 'மார்க்கெட்'டைக் குறைத்தது. சச்சி இரண்டாவது சீடப்பிள்ளை இடத்துக்குத் தள்ளப்பட்டார். சச்சிக்கும் பண்டிதருக்கும் சீடப்பிள்ளை போட்டி நடந்து கொண்டிருந்த காலை சாது ஒரு சட்டம் கொண்டு வந்தார். அதன்படி கிராமத்தில் எல்லோரும் ஒவ்வொரு இரவும் கிழக்குப் பக்கமாகப் படுக்கப் போய் மேற்குப் பக்கமாக எழும்பி வெள்ளான் குளத்து நீரில் முகம் கழுவி நாளைத் தொடங்கினர். வெள்ளான் குளத்து நீரை தானுண்டு புனிதப்படுத்தி விட்டதாக சாது சொன்னதன் பிரகாரம் வெள்ளான் குள நீருக்குத் தட்டுப்பாடானது. குளம் வேகமாக வற்றிக் கொண்டு போனது.

இவ்வாறு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாற்றத்தைக் கொண்டு வந்தார் சாது. ஆண்களுக்குத் தோட்டம் துரவு பார்க்கவும் பெண்களுக்குச் சமையல் செய்யவும் பொடிசுகளுக்குப் படிக்கவும் நேரம் போதாமல் கிடந்தது. இருப்பினும் சனங்கள் உருகி உருகிச் சடங்குகள் செய்தனர். இவ்வாறு நாட்களும் நிமிடங்களும் பறந்து கொண்டிருந்த நாளில் ஒருநாள் நவமணியின் தாயார் 'வீச்'சென்று கத்தினார். அய்யோ இவன் பாவி செய்த வேலையைப் பாருங்கோ என்று கத்திக் கொண்டு சச்சியிடம் ஓடினார். சிவத்தார் நல்ல கள்ளு வெறியில் வந்து சாதுவின் கராஜ்பக்கம் மூத்திரம் பெய்துவிட்டு விறாந்தைக் கயித்துக் கட்டிலில் அம்மணங் குண்டி தெரிய ஏறிப் படுத்து விட்டேர். சிவத்தார் எண்டைக்கு வீட்டோட மாப்பிள்ளையா வந்தேரோ அண்டையிலிருந்து அவர் மூத்திரம் பெய்யும் இடம் அதுதான் என சச்சிக்கு நன்றாகத் தெரியும். சாது வந்ததில் இருந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்த சிவத்தார் இண்டைக்கு நிறைவெறியில் எல்லாம் மறந்து போனேர். நவமணியின் தாயார் அந்தரப்பட்டு அங்கும் இங்கும் ஓடித்திரிந்தா. கள்ளடித்துப் போட்டு புனித வீட்டுக்கு வந்தது ஒரு மகா குற்றம். அதைவிட மெகா குற்றம் சாது சந்நிதியில் மூத்திரம் அடித்தது. கூடவே பெண்கள் பார்க்க அம்மணங்குண்டி காட்டிப் படுத்தது. மன்னிக்க வொண்ணாக் குற்றம். நவமணியின் தாயின் நெஞ்சு துடிச்சு சொன்னது போலவே நடந்திற்று.

அதிகாலை எழுந்த சாது சீறிச் சினந்தார். 'யாரிந்த பேதை மகன்' என்று கூறிப் பின் சமஸ்கிருதத்தில் சபித்தார். சச்சி குலை நடுங்கிப் போய் நின்றார். எல்லாத்தையும் நாறடித்த சிவத்தார் மேல் அவருக்குக் கோபம் பீற்றிக் கொண்டு வந்தது. சீறி, உறுமி, காறித்துப்பி விட்டு தனது தலைச்சீடர் பண்டிதப்பிள்ளை குடிகொண்டிருந்த வீட்டிற்கு ஒரே நடையில் போனார் சாது.

சனத்துக்கு கதை பரவி நாற முதல் தன்னை நாறடித்த சிவத்தாரை வீட்டை விட்டுத் துரத்தினார் சச்சி. நவமணியையும் சேர்த்துத் துரத்தினார் தாயார். 'என்னிடமிருந்து ஒரு கல் உப்பு, ஒரு பிடி அரிசி கூட எதிர்பார்க்க வேண்டாம். உங்களுக்கும் எனக்குமான உறவு துண்டறுந்து போச்சு' என்று நவமணிக்கும் சிவத்தாருக்கும் சாபம் போட்டார் சச்சி. சிவத்தாருக்கு இருந்த ஒரே சொத்து வெள்ளான் குளத்தில் இருந்து ஒரு அரை மைல் தூரத்தில் கிடந்த ஒரு துண்டுக் காணி. அதற்குள் ஒரு கொட்டில் போட்டு குடிபூர அரை குறை வெறியில் நவமணியையும் இழுத்துக் கொண்டு போனார் சிவத்தார்.

சாதுவுக்குப் பண்டிதர் பிள்ளைவாளையும் பிடிக்கவில்லையோ என்னவோ, அடுத்தநாள் எல்லோரையும் கைவிட்டு அவர் காணாமல் போனார். மக்கள் மீண்டும் அலறிப் பதறினர். ஒப்பாரி வைத்து தலையைத் தரையில் தேய்த்தனர். அவர் பாதங்களை முத்தமிட கூட்டம் கூட்டமாய் காத்துக் கிடந்த சனங்கள் அழுகைக்கும் அப்பாற்பட்ட சோகத்தை உண்டனர். சிவத்தாரைச் சபித்தனர். ஊருக்கு அபசகுனத்தைக் கொண்டு வந்ததாக கண்டவன், நிண்டவன், குஞ்சு குருமான்கள் எல்லாம் சிவத்தார் மேல் பாய்ந்தனர்.

ஒருநாள் வானம் பிய்த்துக் கொண்டு விழுந்த காலை, வாலையாட்டி இலையான் கலைத்தபடி வந்த காசியின் நாம்பன் நாகமாத்தாளை முட்டி மோதியது. காசியின் நாம்பன் போல ஒரு சாது மாடு ஊர் அறிந்ததில்லை. அதுவே முட்டி மோதுவதென்றால் ஊருக்குத் தெரிந்தபடி இரண்டே இரண்டு காரணங்காளகத்தான் இருக்க முடியும். ஒன்று சிவத்தாரின் துர்நடத்தையால் வந்து சேர்ந்த சாதுவின் சாபம் அல்லது மீண்டும் கையோங்கும் பைத்தியத்தின் சூனியம்.

மக்களின் சோகம் தீராத சோகமாக இருந்தது. சிவத்தாரின் மேல் ஒரு கொடிய சாபப்பாட்டு பாடிவிட்டு யாழ்ப்பாணம் போய்விட்டார் பண்டிதர். சாதுவுக்கு வாழைப்பழம் கொடுத்தோர், நெற்றியில் எச்சில்பட்டோர், பாதத்தை முத்தமிட்டோர் என்று சற்றே நெருங்கியவர்கள் முக்கிய மானவர்களாகி மற்றவர்களைத் தேற்றினர். உங்கள் பாவங்களைக் கழுவ அவர் மீண்டும் வருவார் என்றனர். இப்போது அவர் காற்றோடு கரைந்து விளையாடினாலும் மீண்டும் அவர் காணக்கிடைப்பார் என்றனர். அவர் இவ்வுலகத்தைச் சேர்ந்தவர் அல்லர்; அதனால் அவர்தம் லீலைகள் எம் சிறுபுத்திக்கு எட்டாது என்று தேற்றி கவலைப் பெருக்குக்கு அணைபோட எத்தனித்தனர். அவரைத் தவறவிட்ட மக்களால் தேற முடியவில்லை. 'வா ராசா வா... வா...' என்று தம் மக்களை வாரி அணைத்து மடியில் இருத்தியபடி தாய்மார்கள் அலறினர். அவருக்குக் கோயில் கட்டி சிலை வைத்து அதில் தலையை மோதி உடைத்தனர். அந்தத் தெய்வத்துக்கான காத்திருத்தல் மதமானது. காத்திருத்தலியலாளர்கள் கூட்டம் பூத்துப் பெருகியது. புதிதாகப் பிறந்த பிள்ளைகள் காத்திருக்கப் படித்தனர்.

காத்திருத்தலின் சோகம் சுகமானது. மேதைகளால் காத்திருத்தல் தத்துவம் விரிவு கண்டு ஆழமானது. அதன் சிறப்புப் பிரிவுகள் உதித்தன.

காற்றோடு கலந்து கிடந்த துறவி மீண்டும் தவம் குலைத்தார். ஒரு பற்றைக்குப் பின்னால் மூத்திரம் இருந்துவிட்டு அவர் நழுவிக் கொண்டிருக்கும்போது ஒரு 'புலைச்' சிறுவன் அவரைக் கண்டு பிடித்தான். காத்திருத்தல் பீடங்களின் தலைமைகள் விரைந்து வந்து ஆய்ந்தன.

ஒருநாள், இருநாள் என்று கிழமைகள் கரைந்தன. மக்கள் பொறுமையிழந்து மண்டையைப் பிய்த்து எறிந்தனர். முடிவாக இரண்டு மாத 'பங்கர்' ஆய்வுக்குப் பின் அன்னார் தந்தையல்ல, காற்றோடு கரைந்த துறவியுமல்ல என்ற முடிவை தலைமைப் பீடம் எடுத்தது. இது காணாமற்போன பைத்தியம் என்ற தகவல் மிக்க சோகத்தோடு தலைமைப் பீடத்தின் ஆசியோடு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

தலைமைப் பீடம் ஒரு முடிவு எடுத்தால் அதற்கு மாற்றே இல்லை. அது போக பைத்தியம் எப்படித் துறவியாக முடியும்? அவன் பையில் கிடந்த குப்பையில் பொறுக்கிய இறைச்சித் துண்டுகளே அதற்கு சாட்சி. ஆனால் இவ்வளவு காலமும் இந்தப் பைத்தியம் எங்கிருந்தது? அவன் பையில் ஒரு வாழைப்பழம் கூட இல்லை இவன் எப்படித் துறவியாக இருந்திருக்க முடியும்?

'எச்சில் இலைப் பொறுக்கி, எம் தெய்வத்தை 'மிமிக்ரி' செய்ய உனக்கென்ன துணிவு?' என்று அவரின் நெத்திப் பொட்டில் வெடி வைத்து லாம்ப் போஸ்டில் ஏத்தினர். இனிக் காத்திருத்தல் முடிவிலிக்குச் செல்லுமாக.

சாது சென்ற பிறகு விழுந்த சச்சிதான் எழும்பவேயில்லை. சிவத்தாரைச் சாகும் வரைக்கும் ஊர் சேர்க்கவில்லை. நவமணிக்குப் பிள்ளைகளும் பிறக்கவில்லை. இப்படியாகச் சாபம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரையும் என்று தலைமைப் பீடம் அறிவித்தது.

சூரியனிலிருந்து வந்தவர்கள்

——————————————————காருண்யன் கொன்பூசியஸ்

இக்கதை என்றுடைய பிறிதொரு பரிசோதனை முயற்சி. இது கதை மாதிரி இல்லையே என்பவர்களுடன் குஸ்திபோடும் எண்ணம் எதுவுமில்லை. 1983 - 2000 காலகட்டத்தில் மக்கள் மனதிலிருந்து உதிர்த்த கருத்துக்கள் அனுமானங்களின் வாய்மொழிப் பதிவுகளை மட்டும் கொண்டு அவற்றை உதிர்த்தவர்களை அடையாளப்படுத்தாமலும் அவை பகரப்பட்ட காலங்களை ஆவர்த்தப்படுத்தாமலும் ஒரு கற்றுக் குட்டிக் கலைஞனாக கொலாஜ் ஓவியமொன்று பண்ணும் திசையில் ஒரு சிறு முயற்சி, அவ்வளவுதான்.

இந்தச் சிறிய தேசத்தில் அனைத்துச் சமூக மக்களும் அமைதியாகவும் சமாதானமாகவும் கௌரவத்துடனும் சமவாய்ப்புகளுடனும் வாழ வேண்டுமென்பதே எனது அவா, இலட்சியக் கனவு எல்லாம். எனது மக்களின் அபிலாசைகள் ஈடேறும்படி இங்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் (1998-04-01 - ரூபவாகினி மே தின உரையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க).

போர்விமானங்கள் தேர்வு செய்யவும் மற்றும் கனரக ஆயுதங்கள் கொள்வனவு செய்யவும் இலங்கை தரை - விமானப்படை அதிகாரிகள் உக்கிரெயின் விரைவு (1998-04-15 ஒப்சேவர் பத்திரிகைச் செய்தி.)

(1998 கோடை. யாழ் முற்றவெளியிலுள்ள முனீஸ்வரன் கோவில் முன்றில் விரிவுரை - காசி.)

'இந்த உலகத்தை ஒரு கோணத்தில் பார்த்தோமென்றால் இங்கு நடக்கிற ஒவ்வொரு விஷயமும் விந்தைதாம்... இதையே இன்னொரு கோணத்தில் நோக்கின் இதுகள் எதுவுமே விந்தையில்லை. சில பாதங்களுக்குக் கண்ணிவெடிகளை விதைப்பது, சில பாதங்களுக்கு நிலவிரிப்பை விரிப்பதென்ற வினைகள், எதிர்வினைகள் உலகில் உண்டென்கிறேன். உண்டு உண்டு உண்டு.

ஒரு சமூகத்தில் இது இப்படித்தான் நடக்கும் அல்லது நடக்காது என்ற ஒரு நம்பிக்கை, ஒரு பொது அபிப்பிராயம் ஒரு கருத்தியல் தளத்திலிருந்து அதற்கு முரணாக ஒரு சம்பவம் நடந்தேறும்போது அது விந்தையாகிறது. அமாவாசையைத் தொடர்ந்து அட்டமி வாறதொன்றும் அதிசயமில்லை அது அனாதியிலிருந்து அப்படித்தான். ஆனால் பிரகதீஸ்வர சர்மா பெண்சாதி அவர்களிட்ட எருவாங்க வந்த குத்தியனோடு ஓடிப்போனால் அது விந்தை.

இது இப்படித்தான் நடக்கும் என்று நினைப்பவர்கள் யார்?

நாங்கள்!

இது இப்படி நடக்காது என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் யாரோ? அதுவும் நாங்கள்தான்.

ஆதலாலே மகா மகா ஜனங்களே இப்பிரபஞ்சத்தில் எதையும் பார்த்து அதிசயிக்காதீர்கள். அதிசயம் ஒன்று நடக்கிறதென்றால் அது நடக்கவல்ல சாத்தியம் ஒன்று நாங்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கிறது என்றபடியால் தான் நடக்கிறது. எனவே நடப்பொன்றை விந்தை யென்பதுவும் பூ! ஒன்று மில்லையென்பதுவும் அவரவர் ஞானோ விலாசத்தை, ஒளிவட்டத்தைப் பொறுத்த விஷயம். எமது அறியாமை உடைபடும் கணங்களைப் பாருங்கள்... அங்கதம் நிறைந்திருக்கும்.

பாற்கடலில் யாதவன் பள்ளி கொள்கிறான் என்கிறார்களா? கொஞ்சம் பூவையோ வில்வத்தையோ காதுகளில் வைத்துக் கொண்டு நம்பி விடுங்கள். கடல் பிரிந்து யேசுவுக்கு வழி விட்டதென்கிறார்களா... மெய் மெய் என்று சொல்லுங்கள்... பிரிந்திருக்கலாம். வை நொட்? நாங்களே சூரியனிலிருந்து வந்தவர்களில்லையா... நமக்குப் பாற்கடலிலே பள்ளி கொள்வதா விந்தை?

உலகத்தின் இரசாயனங்கள் யாவற்றையும் மாற்றி அமைக்க முடியும் ஆதலால் விந்தையோ இல்லையோ உலகில் எதுவும் நடைபெறும் என்றும் பிரபஞ்ச நடப்புகள் எதுவும் விளக்கப்படுமென்றே உள்ளது. இப்பிடி நடந் திருக்கிறபடியால்தான் நீங்களும் நானும் இப்படி ஆகிவந்து ஏன் எதற்கு எப்பிடி எதற்காக என்று கேள்விகள் கேட்டுக்கொள்றம். எல்லாவற்றுக்கும் விளக்கம் எல்லோருக்கும் கிட்டும் என்கிறேன். அதனால உலகத்து நடப்புகளெதையும் பார்த்து ஆகா அதிசயமென்று நாம் வாயைப் பிளக்க வேண்டியதில்லை... என்ன மசிருக்கென்றேன்?

அட மசிரெண்டு அவையில சொல்லப்படாதாக்கும் வாபஸ்! வாட்ஸ்! வாபஸ்! இந்த மசிரெண்டது மெய்யாலும் கெட்டவார்த்தைதானோ?

ஒரு நாளுமில்லை. காலத்துடன் வார்த்தைகளின் பொருள்களும் மாறுபடும். மனதால கெட்டுப்போன மனிஷன் மசிரெண்டதும் தான் கெட்டதென்று நினைக்கிற, கருதுகிற ஏதோவொன்றோடை அதை அவனாய்ப் பொருத்திப் பார்க்கிறான். அப்போ அங்கு மயிர் கெட்டதாய் தெரியுது.

மசிர் குளிரில இருந்து எங்களைக் காக்குது, அழகைத் தருகுது; அப்பிடி யிருக்க அதொரு கெட்ட சாமானென்றால் நெஞ்சில, முகத்தில, கையில கால்லயெல்லாம் எதுக்கு முளைக்குதென்கிறேன்? அததுவும் அததன் இருப்பையும் தேவையையும் பொறுத்து முக்கியம் வாய்ந்தவைதான்.

இங்கே மயிர்தான் கெட்டதா அல்லது அத்துடன் அவனாகப் பொருத்திப் பார்க்கும் பொருள்தான் கெட்டதா அல்லது மனிதனே

எல்லாவற்றைவிடவும் கெட்டவனா என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பகுத்துப் பார்க்கவேணும். ஒரு பொருள் கெட்டதென்றால் அதைக் கழற்றி வைத்துவிட வேண்டியதுதானே? ஆனால் முடியாமலிருக்கு. ஆக எதுவுமே கெட்டதில்லையென்றது தெரியுது. ஒரு வஸ்த்து கெட்டதுதானென்றால் ஏன் கெட்டது, எதனால் கெட்டதென்றதை நிறுவத் தெரிந்திருக்கவேணும். வாழ்க்கை நெறிகள் பற்றி வள்ளுவன் கூறியதையும் சூஃபிக்கள் கூற முயன்றதையும் தொகுத்து நோக்கினோமாயின் யாதொரு குழப்பமும் நமக்கிரா...'

'இப்படி சேர்ட்டும் போடாமல் நீர்க்காவி ஏறிய வேஷ்டியோட சால்வையால் உடம்பைப் போர்த்தி அதன் விடுதலைகளை முன்னுக்கு முடிஞ்சு கொண்டு பரதேசிக் கோலத்தில திரிகிற மனுஷன்ர கால் பரவாத ஒரு சிற்றூர்தானும் குடா நாட்டில இருக்குமோ தெரியாது. மனுஷன் ஞானப்போக்கில் போய்க்கொண்டிருக்கும். எந்தவூரிலாயினும் வெட்டையளை கோயில் பிரகாரங்களைக் கண்டிட்டால் போதும். அறுப்பும் முடிப்புமின்றிச் சங்கிலித்தொடராகச் சிந்தனைகள் ஜனித்துப் பிரவகித்துக் கபாலம் நிறைக்கக் கால்கள் நின்றுவிடும். அவருக்குள் பிரவகிக்கும் அச்சொல்லாழியை அதிலேயே வழிந்தோடவிட்டாலே சுகம் விடுதலை; அல்லது மனுஷனுக்கு மண்டை வெடித்துப்போகும்.'

'வெள்ளிக்கிழமை இண்டைக்கு கோயிலுக்கு வாற சனம் கூடிக் கொண்டே போகும். பேச்சிண்டைக்கு முடியாதென்றன்.'

'அப்பிடியில்லை, சனம் கூடுதோ குறையுதோ கேட்குதோ போகுதோ அவருக்குக் கவலையில்லை. சனத்தைப் பார்த்துத்தான் பேசுவாரென்றால் பஸ் ஸ்டாண்ட், திருவிழாக்கள் கூட்டங்களில் வந்தல்லோ ஊன்றுவார். அப்பிடிச் சனக்கூட்டமுள்ள இடத்தில் தொடங்கமாட்டார். வெட்டையள் தான் அவற்றை முதல் விருப்புக்குரிய இடங்கள். எப்போ பேசத் தொடங் குவார், எப்போ முடிப்பாரென்று யாரும் கூறமுடியாது. போன ஞாயிறுக்கு முந்தின ஞாயிறு யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதா னத்தில மத்தியான வெய்யில் ஒரு சனஞ்சாவட்டை இல்லை. நான் சென். ஜோண்சுக்கு சில பிரத்தியேக வகுப்புகளுக்காகப் போகும்போது கிறிக்கெட் பிட்சுக்கு கிட்ட ஊண்டிப்போட்டு நிண்டு கைகளைக் காற்றில் வீசி பேசிக்கொண்டிருந்தவர். நான் வகுப்பெல்லாம் முடிந்து மாலை ஏழுமணிபோல செக்கல்ல வாறன் சாவாரைப்போல வாயால நுரை கக்கக் கக்க வைக்கல் லொறி றிவேர்ஸ் எடுத்த மாதிரிக்குரல் கேரி சத்தமே வெளியில வருகுதில்லை. மனுஷன் உணர்ச்சி வசப்பட்டு சும்மா நுனிக் கால்ல ஆலாலசுந்தரம் மாதிரிக் கெம்பிக்கொண்டு நிக்கிறாரென்றன்.'

'இதையேன் கின்னஸ் புத்தகத்தில இடம்பெற வைக்கப்படாது?'

'மேடைப்போச்சாளனாக வரவேண்டுமென்ற பால்யவயது ஆசையோ அரசியல் கட்சி ஊழியமோ ஆளை இப்படி ஆக்கிப்போட்டுது.'

'தோற்ற அமைப்பை வைத்து மதிப்பீடுகளைத் தரும் பேர்வழிகள் இவரை விசர்க்காசி என்பார்கள். அவர் சுட்டும் வித்தியாசமான கருத்துக் கோணங்களை வியப்பவர்கள் காசி மாஸ்டரென்று சற்றே கௌரவமாகவும் சொல்வர். அநேகமாய் காசி மாஸ்டரென்றாலுஞ்சரி விசர்க்காசி யென்றாலுஞ்சரி யாழ்ப்பாணம் மாவட்டம் ஏகலுக்கும் அவரைத் தெரியாத ஆட்களிரா. சுவாதீனம் குறைந்த நிலையிலும் அவரைப்போல இத்தனை வாசிப்பும் தேடலுள்ள மனிதனை வேறெங்கும் பாக்கேலா. ஆட்கள் இல்லாமல் ஆரம்பிக்கிற அவருடைய கூட்டங்கள் பெருஞ்சொற் பெருக்குகள் அனேகமாய் கோட்டை முற்றவெளி மைதானத்தில்தான் இடம் பெற்றிருக்கு. கோவிலுக்கு வாற சனத்தோட அங்கின காற்று வாங்கவந்த சனம் சுப்பிரமணியம் பூங்காவுக்குப் போகிற ஆட்களென்று கூடியிருக்கிற சனத்தைப் பார்க்க,

திருவிழாக்களில் கவிதை பாட
கவிஞர் வருவர்
நான் கவிதை பாடத் திருவிழாக்கள் வரும்

என்ற மேத்தாவின் கவிதையைக் காசி நிரூபணமாக்குகிறார் போலயிருக்கு. அவர் கருத்துக்கள், அவதானிப்புக்கள், அனுமானங்கள், விமர்சனங்கள், பரிந்துரைகள் யார்காதிலும் விழாமலேயே காற்றிலே கலப்பவற்றுக்குக் கணக்கில்லை. என்னதான் கடுகியே விரையும் உலகென்றாலும் காசி யினது ஒரு சர்றியலிஸ்டிக் படைப்பைப்போலும் மடிந்தும் முறிந்தும் தாவித்தாவியும் கொலாஜ் சித்திரம்போல அறுந்து தொடர்பற்றும் வரும். பேச்சுக்களுக்குக் காது கொடுக்கும் நிதானமிக்க மக்களும் இல்லாமல் இல்லை. ஊர் மனைக்குள் எங்கேதான் அவர் பேச ஆரம்பித்தாலும் இப்படித்தான் ஒன்று இரண்டாக சனம் கூடி முடிவில பெரிய கூட்டமாகி விடும்.'

(நவாலி தேவாலயத்தின் மீது குண்டு வீச்சு அங்கே அகதிகளாகத் தங்கி யிருந்தோரில் 156 பேர் கோரப்பலி - 1998 வீரகேசரி)

(1983 கோடை - நல்லூர் வீரமாகாளி அம்மன் தீர்த்தக் கிணத்துப் பள்ளம்.) காலை பஸ்ஸில் யாழ்ப்பாணம் போகும்போது சொற்பெருக்கை அவதானித்த பல கச்சேரி உத்தியோகஸ்தர்கள், அன்று மாலை நாலு மணிக்கு வீடு திரும்புகையிலும் நெஞ்சால் வியர்வை வழிய வழிய தயாரிப்புகள் ஏதுமற்ற அவரது நீண்ட பேச்சைத் தொடர்ந்து கொண் டிருப்பதைக் கண்டு வியக்கிறார்கள்.'

'சூனியம் பிரபஞ்சம் பிரம்மம் சராசரமென்பதையோ... சக்தித்திணிவு பெருவெடிப்பு காலம் பதினாறாவது பரிமாணமென்பதையோ அல்லது சூழலை அண்டத்தை அதிலுள்ள இத்தனை கோடி விந்தைகளை அறிவது அர்த்தப்படுத்துவது முடியாமற்போவது எல்லாம் எமது புரிதலில் தான் உள்ளது. விந்தைகளின் விளக்கங்களும் இன்டபிற்டேசன்களின் குறைகளும் நிறைகளும் எம்மிடந்தான், எமது புரிதலில்தான் - பிரபஞ்சத் திலில்லை.

பல ஆண்டுகளாக மனதோடு கொண்டு திரியும் ஒரு கணிதப் பிரச்சினைக்கு, சிக்கலுக்குக் கள்ளருந்திக் கொண்டிருக்கும் ஒரு மாலையில் - குளிக்கையில், சோப்புப் போடுகையில் திடீரென விடை கிடைத்துவிடுவதுபோல எமது வியப்புகள் தேடல்கள் அனைவற்றுக்குமே திடீரென வரும் ஒரு பேரொளியில் விடை கிடைக்கும். நாம் செய்யவேண்டியதெல்லாம் எமது தேடலை விடாது இலக்கை நோக்கி விரைந்து கொண்டிருப்பதுதான். தன் தேடல்களில் ஒருவன் அவன் போகவேண்டிய பாதையில் பாதிக்குமேல் கடந்துவிட்டானாயின் அவன் மனது சாந்தத்தின் பக்கம் விரைந்து நகும். சரணாகதி அடைந்து விடுபவனுக்குப் பாரிய ஞானோவிலாசம் வேண்டியதில்லை. தேடலில் இலக்கை அடைய முடியாவிட்டால் சரணாகதி அடைந்து விடலாம். சரணாகதி அடைந்து விட்டவனின் முகத்திலுள்ள களையை அமைதியை தேஜஸைப் பாருங்கள். சரணாகதி அடையமுடியாதிருப்பதுதான் சிந்திப் பவனது பிரச்சினை. சிந்திப்பவனுக்குச் சிக்கல்களும் மன அழுத்தங்களும் அதிகம். தொடர்ந்த சிந்தனையில் தேடலையடையாத மனம் சமாதானம் அடைந்துவிடுவமா?

இந்த உலகத்து மனிதர்களிலே நாலு வர்ணங்கள் இருக்கிறதாச் சொன்னது மெய்தர்னெங்கிறேன். முதற்பிரிவு அவ்வை சொன்ன ஆண் பெண்ணெங்கிற மெயின் டிவிஷன். பின்னர் அவற்றுக்குள்ள சிந்திக்கிற ஜாதி, சிந்திக்காத ஜாதி என்று இரண்டு உப பிரிவுகள். இதனை இதனால் இவன் முடிக்கும் என்பது இன்னொன்று. ஆண்கள் என்னதான் ஒற்றைக் கம்பத்தில கைபிடிக்காமல் நின்று வித்தைகள் காட்டினாலும், உலகத்தை மாற்றி அமைக்கக்கூடிய ஆற்றலும் சக்தியும் பெண்களிடந்தானிருக்கு தெரியுமோ? அவர்கள் நினைத்தால் உலகத்தின்ரை எல்லாப் பிரச்சினை களையும் விரட்டியே விடலாம். உதாரணத்துக்கு பொருளாதாரப் பிரச்சினையை எப்பிடி விரட்டலாமெண்டதைப் பறையட்டா?'

'பறையும் பறையும்!'

'உலகத்துப் பெண்கள் எல்லாருமொத்து நின்று ஒரு இருபத்தைந்து வருஷத்துக்குப் பிள்ளைகளே பெத்துக்கிறதில்லையென்று ஒரு ஒத்த தீர்மானத்தக்கு வந்து ஸ்டிறைக் பண்ணினால்...'

மோவாயில் சுட்டுவிரலால் தட்டிக் கொண்டு நாலு செகன்ட் மௌனமாக இருந்தார். பின் கிழடுகட்டையெல்லாம் தம்பாட்டுக்குப் போய் மறைய உலக சனத்தொகை 'பக்'கென்று பாதியாகிடாதில்லை? அச்சுவேலிச்சந்தைத் திடலில தட்டிவான்காரன் கணக்கில எயர்லங்காவும் லுஃப்தான்ஸாவும் பிளைட்டுக்கு ஆள்பிடிக்க கூவுமில்லை? மனுஷர் பஸ்ஸில ரயிலில விட்டு வீதியாய் சாஞ்சிருந்து போகலாமில்லை? ஆஸ்ப்பத்தரி யளெல்லாம் காலியாகிவிடுமில்லை? ரூபாய்க்கு நாலு கொத்தரிசி விக்குமில்லை. கொள்வாரில்லாமல் காய் பிஞ்சு சந்தையில காயுமில்லை? தரப்படுத்தல் எல்லாம் மறைஞ்சுபோய் ஏ.எல் படித்தவனெல்லாருக்கும்

இஞ்ஜினியரிங், மெடிகல் ஃபாகல்டி சீற்றுக்கள் காத்திருக்குமில்லை? பென்சன் எடுத்திருந்தாலும் பரவாயில்லை வாங்கடா வந்து படியுங்கடா வென்று யூனிவேசிட்டிகள் கேற்றை அகட்டி வைக்குமில்லை? வேலைக்கு வாங்க தொழிலாளத் தோழர்களேயென்று வீட்டுக்கே முதலாளிமார் வந்து கையில பிடிச்சு இழுப்பாங்கள்லை? கனக்கவேன் நாம கூப்பன் அரிசிக்கு கியூவில நிற்க வேண்டாமில்லை? ஆனாலதைச் சாதித்து இம்முழு வையத்தையுமே குபேர புரியாக்கும் அதிசயத்தையெல்லாம் செய்து விடுவார்களா நம்மவர்கள்... மாட்டார்கள்! ஏனெனில் கெடுகிறோம் பந்தயம்பிடியென்று பந்தயம் கட்டியிருக்கும் சமூகம் இது.

இந்தப் பிள்ளை பெறுகிற அலுவலும் ஆயிரங்கன்று கடுவல்தறை கொத்திறமாதிரியொரு வில்லங்கமான காரியமென்றால் எத்தினை பேரிதிலை வினைக்கெடுவினமென்கிறன்.

ஒரு தனி மனிதன் வளம்பெறுவதா எம் கனவு? யாம் பெற்ற இன்பம் இவ்வையம் பெற்றிடக் கனவு கண்டவனின் வாரிசுகளல்லவா நாங்கள்? நாம ஒற்றுமையாகவோ அடிச்சுக் கொண்டோ இந்தப் பிரபஞ்சத்தில வாழ்றதுக்கு ஒரேயொரு பூமிதான் இருக்கிறதால எம்மால் இங்கே அதிசயங்கள்தான் பண்ணமுடியாவிட்டாலும் முடிந்தவற்றையெல்லாம் செய்து இவ்வுலகை அழகும் சீருமாக்கலாம். உண்ண உணவும் குடிக்க நீரும் உறங்க ஓர் இடமும் ஒவ்வொரு தமிழனுக்கும் சிங்களவனுக்கும் சோனகனுக்கும் சேர்த்தே கிடைக்க வேணும். கிடைக்கும் கொஞ்ச உணவும் நம் எல்லோருக்கும் பங்கிடப்பட வேண்டும். மீதமிருப்பது கவனமாக நவீனமான முறையில் சேமிக்கப்பட வேண்டும். நாளைய மனிதனின் வளமான தறைகளிங்கு தரிசாகுது. கடலுக்குள் வீணாய் வடியும் மழை நீர் முழுவதும் தடுத்து நிறுத்திச் சேமிக்கப்பட்டு பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட வல்ல வல்லபங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும். குறைந்த பட்சம் மரவள்ளி பயிராகவேண்டிய நிலத்தில் பீடிப்புகையிலை தேவைதானாங்கிறன்?'

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புச் சந்தைப்பகுதியில் இரு குண்டு வீச்சு கிபீர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் பாடசாலை மாணவர், பெண்கள் உட்பட 22 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். (சரிநிகர் புதன் 15 ஐப்பசி 1999)

ஏஐஐ
போரின் பகைப்புலம் அறியாது
போர்ப்பரணி பாடும் பாட்டுக்காரர்கள்
எவரோ
அவரே ஈழம் இன்னமும்
எரிந்து கொண்டிருக்க
முதற்காரணி என்பேன் நான்.

'நிதியமைச்சின் பொருளாதார மேம்பாட்டுச் சிறகத்தில், வேலை பார்த்துக் கொண்டிருந்தவர் தனிச்சிங்களச் சட்டம் வந்தபோது சிங்களம் படிக்க மறுத்து வேலையைத் தூக்கி எறிந்துவிட்டு வந்தவராம். பேச்சில் பொருளாதார அக்கறைகள் சீர்திருத்தங்கள் தென்படுவது அதனாலா யிருக்கலாம். சதா சிந்தனைகளால், கருத்துக் கருவூலங்களால் ஓய்வு ஈவின்றி உந்தித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதன் அவர். தெருவில் போகும்போதுகூட தீவிர சிந்தனையுடன்தான் நடந்துபோவார். எதிர் கொள்ளும் எவரையும் நேர்கொண்டு பார்ப்பதோ நின்று எவருடன் ஒரு வார்த்தை பேசவோ மாட்டார். ஏதாவது கேட்டாலும் பதிலேதும் வராது. தனி ஒருவனுக்காக நின்றுவிடாத சூறாவளி. நெருக்கமான நண்பர்களோ உறவினர்களோ யாரும் எங்கும் இருப்பதாகவும் தெரியவில்லை. எதையும் பொருட்படுத்தாத, எதிலும் நிலைகாள்ளாதவொரு வெள்ளாட்டுப் பார்வையுடன் அலையும் அவரை எந்த ஊரிலும் காணலாம். அவர் கண்களில் சுடரும் அதீத தீட்ஷண்யத்தையும் பிரகாசத்தையும் கூர்ந்து கவனிக்கும் எவருக்கும் அவரின் சித்தசுவாதீனத்தின் மேல் சந்தேகம் தோன்றலாம். அவர் சித்தரா அல்லது மூளையின் ஆணைகளை ஒருங்கிணைக்கும் மயூறோன் கூறுகளில் நுண் பிசகேதோ ஏற்பட்டுவிட்ட ஒருவராவென்று தீர்மானமாகக் கூறமுடியாது.'

அம்பாறை மாவட்டம் புஞ்சி-சிகிரிய எல்லைக் கிராமத்தில் பெண்களும் குழந்தைகளுமுட்பட்ட 56 சிங்களவர் வெட்டிக் கொல்லப் பட்டனர். விடுதலைப்புலிகள் இச்செயலுக்கு உரிமை கோராவிட்டாலும் சிங்கள மக்களும் ஊடகங்களும் சர்வதேச மன்னிப்புச் சபையும் இது விடுதலைப்புலிகளின் செயலேயெனக் குற்றஞ்சாட்டினர் (சரிநிகர், செவ்வாய் 19, ஐப்பசி 1999).

(1984 தீபாவளி, திருநெல்வேலிச் சனசமூக நிலையத்தின் கைப் பந்தாட்ட மைதானம்.)

'பிரபஞ்சத்தில் அனைத்து இயக்கங்களும் நிகழ்வுகளும் ஏதோவொரு கணித இயற்பியல் வேதியியல் விதிகளுக்கமைய நிகழ்கின்றன என்பது விந்தைதான். உயிர்த்திசுக்களில் நடைபெறும் பல இரசாயனங்கள் கூட உயிர் இரசாயனத்தின் கணித விதிகளுக்கு அமையத்தான் நடைபெறு கின்றன. இந்த கணித விதிகளும் சட்டங்களும் இப்படியிப்படி இருக் கின்றன என்ற இரகசியங்கள்கூட மனிதனாகக் கண்டுபிடித்ததுதான். கேள்வி என்னவென்றால் அந்த விதிகள் நித்தியமும் அநாதியுமானவை யெனின் அவை கடவுளுக்குக்கூட வளைந்துகொடா. பரந்த பிரபஞ்சத்தின் பாட்டையும் இயக்கமும் உற்பத்தியும் படைப்பும் அதிசயங்களும் யாரோ ஒருவன் விருப்பத்தில்தான் நடைபெறுகின்றனவென்றால் அவன் தேவைக்கேற்ப விதிகளை வசைக்கவோ உடைக்கவோ வல்லவனாக விருப்பான். படைப்பில் உற்பத்தியில் இத்தனை கலைத்துவம் காணப்படுவது அதனாலாயிருக்கலாம். ஒரு றோஜா மலர், ஒரு பெண்,

ஒரு கவிதை இதெல்லாம் சாதாரண சாதனங்களா? அச்சூக்கும சக்தியை அறிய இப்பிரபஞ்சத்தின் படைப்புக்குட்பட்ட எம் மூளையின் தகுதரம் போதாதாய்க்கூட இருக்கலாம். சேதன உடலின் ஆயுளுக்கும் மரிப்புக்குங்கூட ஏதும் கணிதவிதிகள் உளதோவென்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. ஒருவேளை அதே விதிகள் பிரபஞ்ச இயக்கம் முழுவதுக்கும் சார்புக்கும் ஏற்புமுடையதாயிருக்கலாம்.

அறிவியலில் வேடிக்கையாகச் சொல்வார்கள் மேற்கொண்டு அறிய முடியாதபோது விதிகள் செய்யப்படுமாம். தத்துவத்தில் மேலே பதில் தெரியாத போது விளக்கந்தர இயலாதபோது ஆத்மீகப்பக்கத்துக்கு வந்திடறது. அதாவது கடவுள் என்கிறது, சரணாகதியடைகிறது எமக்கு வசதியாகிறது. சிந்தனை நின்று போகிறபோது பாமரத்தனம் வந்து சேர்கிறது.

நாம் உயிர் வாழ்வுளிகளாக இருப்பதால் நல்லதென்றும் கெட்டதென்றும் சாதகமானதென்றும் பாதகமானதென்றும் நிகழ்வுகளை எம் சிற்றறிவுக்கேற்றபடிக்கு எமது நலன்களை ஒட்டிப் பாகுபடுத்தி வைத்திருக்கிறோம். பிரபஞ்சத்தை ஒரு சூக்குமசக்திதான் வழி நடாத்துகின்றதென்றால் அதற்கு போர் - கொள்ளை நோய் - பூகம்பங்கள் பிரசவங்கள் - கும்பாபிஷேசங்கள் - பஜனைகள் - கோயிலுடைப்புக்கள் எல்லாமே ஒன்றுதான். இப்பிரபஞ்சமே இயற்கை விதிகளைச் சதா மீறுகின்ற ஒரு கிளர்ச்சிக்காரனாய்க்கூட இருக்கலாம். ஆனா மனுஷன் தனக்குத்தானே கெட்டவனா மாறிக்கொண்டு வாறானே? காற்றில கரியைக் கக்கிறான், கந்தகத்தைக் கக்கிறான்; வானத்தில ஓட்டை போடுறான்; கடல்ல எண்ணெயைக் கலக்கிறான். கதிர்வீசும் எச்சங்களைக் கொட்டுறான். இனி வரப்போகிற ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் ஒரு டிகிறி ஏறுதாம். இப்பவே கோடையில வெய்யில் நாற்பத்தைஞ்சு ஐம்பது டிகிறிக்கு ஏறுது. சவூதிப்பக்கம் ஐம்பது அறுபது டிகிறி ஏற்கெனவே உண்டு.

கேத்தில்ல கொதிக்கிற தண்ணீரின் வெப்பநிலை நூறு டிகிறி. மனுஷன் தன் வாழ்க்கை முறையை மாற்றாமல் இந்த றேட்டில போய்க் கொண்டிருந்தானென்டால் தியறிப்படி இன்னும் ஐயாயிரம் ஆண்டுகளில் அடுப்பேத்தாமலேயே பூமியில தண்ணி கொதிக்கும். அதுக்குள்ள இங்கை மனுஷன், பச்சை, பயிர், கொடி, மரமெல்லாம் பிழைச்சிருக்குமென்று எதிர் பார்க்கலாமா?'

(1984 ஒரு பௌர்ணமி நாளின் மதியப்பொழுது. அச்சுவேலி தொண்டைமானாறுவீதி அம்மன் கோவில் வெளிப்பிரகாரத்தில் சிலர் இரண்டு மூன்று கல்லடுப்புகளில் பானை வைத்துப் பொங்கிக் கொண்டிருக்கிறார்கள். உட்பிரபாரத்தில் மதியப்பூசைக்கு முன்னதாக இளம் பூசகர் ஒருவர் நவக்கிரகங்களுக்கு பூசை செய்கிறார். அணில் அடிக்கப்போன நான்கைந்து உள்ளூர்ப்பையன்கள் மண்டபத்தூணருகில் பிரசாதத்துக்காகக் காத்திருக்கிறார்கள். வசந்த மண்டபத்தின் நிழல் விழும் பக்கமாக மைக்கை ஊன்றிய காசி அங்கு நடப்பவற்றை ஏளனங் கலந்தவொரு பார்வையால் நோக்கி விட்டுத் தன் விரிவுரையை ஆரம்பிக்கிறார்.)

'ஆதிபராசக்தி ஆளானது
ஆடிப்பூரத்திலாம்
அம்மா சொல்கிறாள்
ஆசிரியர் சொல்கிறார்
அம்மன்கோவில் ஐயர் சொல்கிறார்
அந்த அதிசயத்தை ஆர்வமாய்க் கவனித்து
உங்களுக்கறிவித்த அவ்
ஆதி மானுஷன்தான் யாரோ?'

கல்யானைக்கு கரும்பு குடுக்கிற மகாஜனங்களே... நீங்கள் படைச்சதெல்லாம் ஆச்சி அவளும் விடாமல் தின்றாளேயென்றால் தினந்தினம் இப்படிப் போட்டுக் கொண்டு பொங்கிப் படைப்பியளோ? அல்லது சனியனுடைய படையலை நைவேத்தியத்தை வீட்டை கொண்டு போகப் படாதெண்ட மாதிரி ஆச்சிக்குப் படைச்சதை மானுடன் புசிக்கப்படாதென்றொரு வேதம் சொல்லிச் சென்டால் அப்பவும் டெய்லி நைவேத்தியம் படையல் பஞ்சாமிர்தம் பூசை புனஸ்காரமெண்டு சேட்டையள் விடுவியளோன்றன்... என்னா பம்மாத்திது?

நீங்கள் படைக்கிறதைத் தின்று குடித்து உறங்கி விழிக்க கடவுளென்ன மனுஷனோ... அப்படியென்றால் அவன் ஒருநாள் இறந்தும் போகலாம். கடவுள் ஒருநாள் இறந்திட்டானென்று சலங்கை கட்டாத ஒரு கீரி வந்து இரகசியமாய் உங்கள் காதில வந்து சொல்லுதெண்டு வைப்பமே அன்றைக்கு எத்தனை காரியங்களையெல்லாம் நீங்கள் செய்யலாம்.

இரவோடிரா'வாய் தோப்பு வாழைக்குலை அத்தினையும் வெட்டி நவற்கீரித்தோட்டத்து வெங்காயம் அத்தனையையும் கிளப்பிக் கொழும்புக் கேத்தலாம். நல்லூர் காண்டாமணியைக் கழட்டிக் கொண்டுபோய் அரியாலை வார்ப்புப்பட்டறையிலை விக்கலாம்.

கைதடி செல்லப்பாவின்ரை சவாரி மாடுகளை இரவோடிரவாய் தரவையால சாய்ச்சுக் கொண்டுபோய் சின்னக்கடையில இறைச்சிக்குத் தட்டலாம். நீங்க கடன் கைமாத்து வாங்கின பேர்வழிகளெல்லாரையும் கைதட்டிக் கூப்பிட்டு காசு ஒன்டும் உங்களிட்ட வாங்கேல்லை திருப்பித்தரச் சரிப்படாதென்று சொல்லிவிடலாம்.

சிலசில விசயங்களை நாங்கள் செய்யாமலும் விடலாம். 'பெரிசு'தானில்லையே? இரவில பெரியப்பாவுக்கு முணுக்கிக் கொண்டுபோய் கால் அமுக்கி விடுவாயில்லை. இனி அதுக்கெல்லாம் போகத் தேவையில்லை பார். நாட்டுச் சொத்தெல்லாமினி உங்கடை சொத்தென்று பிரகடனப்படுத்தி விட்டால் வேலை வெட்டிக்கெல்லாம் போய் மாய வேண்டாம் காண்...

வர்ணங்களைப் படைத்தவனும் நான், உயிர் சுமந்து திரியும் உடல்களைப் படைத்தவனும் நானே எனும்போது அந்தக்கூற்றுக்கொரு உள் நோக்கம் இருக்கல்லவா... அதாவது சக்தியுள்ளவன் எதையும் செய்வான் அற்பன் நீ சும்மா பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான் என்கிற மமதை தெரிகிறதல்லவா? ஜீவாத்மா பரமாத்வாவைப் பணியவேணும்; அதாவது இன்னொரு மாதிரிப் பார்த்தால் தன்னைத்தானே துதிக்கவேணும்.

கும்பிட்டால் அருள் பாலிப்பேனென்று எந்தக் கடவுளாவது குந்தியிருப்பரென்று நினைக்கிறீங்களோ... கடவுள் ஒரு இலட்சிய ஆதர்ச புருஷன் என்றால்கூட சேவிச்சவன் துவேஷித்தவன் எல்லோருக்கும் நன்மை செய்யக்கூடிய மாபெரும் சோஷலிஸ்ட்டாக அல்லவா அவன் இருக்கமுடியும்?

கிரேக்க, எகிப்திய, இந்திய, சீன புராணக்கதைகளோ பைபிளோ கூட அடக்கப்படுகிற மக்களின் கனவுகள்தான் அங்கு வெளிப்படுது. கஷ்டப்படறவன் கஷ்டப்படுவான் வானத்திலிருந்து ஒரு தேவதையோ தேவ தூதனோ வந்து ரட்ஷிப்பார்களாம். அப்படி ரட்ஷிக்கப்படறதாகப் பிரசங்கிக்கிறதால ஒரு கனவு சுகத்தைத் தற்காலிகமாக வழங்குதல். மஜிகல் றியாலிசத்தின் ஊற்றுக்கண் இவைகள்தான். இந்தக் கண்ணன் எவ்வளவொரு கனவு மனிதன். எத்தனை கோபியரை தொடுறான், கிள்ளுறான், தடவுறான், கொஞ்சுறான். எந்தப் பாத்திரமாவது ஒழுக்கத்தை மரபை எப்படி நீ மீறலாமென்று அவனைக் கேள்வி கேட்கிறதா பாருங்கள். மக்கள்தான் பாமரமென்றால் கடவுளென்று சுட்டப்படுவர்களில்கூட அதைச் சமைத்தவர்களின் பாமரத்தனந்தான் வெளிப்படுகிறது.

அனைத்தும் அறிந்த கண்ணபரமாத்மா அந்தப் பாண்டவர் சேனாதிகளுக்காக துரியோதனன் பார்ட்டியிட்ட நாலு ஊரோ நாலு வீடோ கேட்டு ஊம்பி அலைந்த நேரம்... பாஸ்போட்டுந்தேவையில்லை... ஆட்களை அப்பிடியே குண்டுக்கட்டாய் அமெரிக்காவுக்கோ அவுஸ்திரேலியாவுக்கோ கூட்டிக் கொண்டு போய் மகுடஞ்சூட்டி விட்டிருக்கலாமில்லை? போரும் சூக்குமமாய் தவிர்க்கப்பட்டிருக்கும் பின்னே போன கொலம்பஸ் பார்ட்டிக்கு எங்க சனம் நமஸ்த்தே சொல்லிப் பூச்செண்டு கொடுத்து வரவேற்றிருக்குமில்லை?

சுத்திச் சுத்தி கும்பிடுறியளே நவக்கிரகங்கள்... இதெல்லாம் வந்துதான் பூமியை ரட்ஷிக்கிறதா? சனி ராகு கேது இது மூன்றுந்தான் இதுக்குள்ள மஹாதுஷ்ட நட்சத்திரங்களாக்கும். ராகு கேது பிரபஞ்சத்தில் மனித அறிவெல்லைக்குள் இல்லவே இல்லாத நட்ஷத்திரங்கள். எஞ்சியுள்ள சனீஸ்வரன்தான் புவியோரின் இத்தனை கஷ்டங்களுக்கும் காரணமென்பதை மனிதனால அறிவியல் ரீதியில் நிறுவ முடிந்தால் இன்றைக்குள்ள நவீன உயர்தொழில் நுட்ப வசதிகளால ஒரு நூறு அணுக் குண்டுகளை ஏவுகணைகளில கொண்டுபோய் ஒரே நேரத்தில் சனியனை அடிச்சால் அவற்றையாட்டம் குளோஸ். பிறகென்ன பூமி அன்றைக்கே

சொர்க்கமாகிவிடும்! அதென்ன சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது என்ற ஒன்பது கிரகங்களுந்தான் மனிதரைப் பாதிக்குதா? பூமியும் பென்னாம் பெரியதொரு கிரகமாச்சே அது பாதிக்கிறதில்லையோ? பூமியும் பாதிக்குதென்று எந்த சோதிடரும் சொல்றதில்லை ஆனால் ஜப்பானில அடிக்கடி பாதிக்குதென்று பத்திரிகைகள் சொல்லுதே? இன்னும் கோடிக்கணக்கான கோள்கள் பிரபஞ்சத்தில இருக்கோய்..!

'கோயில்ல வந்து நாத்திகம் பேசிற பயலைக் கல்லாலை அடிச்சுக் கொல்லவேணும்.'

'மாக்ஸியக் கொள்கைகள் கோட்பாடுகள் கொண்டதாகச் சொல்லப்படும் அரசியல் கட்சியொன்றில தமிழ்ப்பகுதி பிரதம பிரசாரகனாகப் பணியாற்றியவர். ஆனால் தேர்தல், அரசியல் நாற்காலிகள், மந்திரிப் பதவிகளென்று பாராளுமன்றச் சகதியில் புரண்டு கொண்டிருந்த அக்கட்சியிடம் தமிழினப் பிரச்சினை தொடர்பான திட்டமான தீர்வுகளோ, அது தீர்க்கப்பட வேண்டுமென்ற முனைப்போ இல்லாதது கண்டு தலைமையுடன் கருத்து முறுகளேற்படக் கழன்று வந்து ஏரிக்கரைப் பத்திரிகையில செய்தி ஆசிரியரானவர். அரசு அப்பத்திரிகையைக் கையகப்படுத்தியபோது அதை வன்மையாக எதிர்த்ததோடு தொடர்ந்தும் அரசுக்கு ஊதுகுழலாயிருக்க மறுத்து வேலையை உதறிவிட்டு வந்தவர். அவருக்கு இத்தனை புரட்சிகரச் சிந்தனைகளும் துடிப்புமிருப்பது அதனால்தான்.'

(1987 - நாட்டில் மா, அரிசி, சீனிக்குப் பெரும் தட்டுப்பாடு; மக்கள் எதற்கும் நீண்ட வரிசைகளில் நின்ற நாட்களில் அதிகாலையில் ஒரு வெதுப்பகத்திற்கு முன்னால்...)

'பேரீஞ்சு எந்த நாட்டிலிருந்து வருகுது?'

'ஈரான் அன்ன மத்திய கிழக்கு நாடுகளிலேயிருந்து வருது.

'மெத்தச் சரி மக்காள் அந்த அறிஞருக்கொருக்கால் கைதட்டுங்கோ... போதும் போதும்... நெஸ்பிறே என்றாலே அதிலேயே பிட்டவிச்சுக் காட்டவல்ல என்னரும் தமிழினமே எங்கள் மண்டீச்சம் பழத்திலை ஜாம் செய்து நாங்கள் ஏன் அவங்களுக்குத் திருப்பி அனுப்பப்படாது? போகட்டும்... முட்கிழுவை பூவரசங்குழையை எத்தினைபேர் சப்பியிருக்கிறியள்? இதுகள் மனுசரும் சப்பக்கூடிய கசப்பில்லாத இலை குழைகள். அதுகளிலை பாருங்கோ விலங்கினம் புசித்துப் பிழைக்கக்கூடிய ஏதோ ஒரு கூறிருக்கில்லை? அதைப் பிரிச்செடுத்து மனுஷன் சாப்பிடக்கூடிய ஒரு உணவை நாம் தயாரிக்கும் வல்லபங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டி சிந்திக்க வல்ல மக்களிடம் இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

வாழையென்றால் அதன் குலையை வெட்டிப்போட்டு மரத்தைச் சாய்த்து விடுகிறோமே... அதன் குருத்தை எத்தனைபேர் சாப்பிட்டிருக்கிறியள்? அதன் கிழங்கை எத்தனைபேர் சமைத்துப்பார்க்க முயற்சித்திருக்கிறீர்கள். சில மக்கள் அங்கே மண்டியாய் வளரும் மூங்கில் குருத்துக்களை ஆய்ந்து சீவி அதில் கறி சமைத்து உண்கிறார்கள் தெரியுமோ? மக்களே முட்கிழுவை பற்றிச் சிந்தியுங்கள். நெல்லிக்காய் மாதிரியான அதன் காயை யார் சுவைத்துள்ளீர்கள்? அதன் இலையிலும் காயிலும் உணவு செய்யலாம். முட்கிழுவமிலை தின்ற எந்த ஆடாவது செத்துப்போனதுண்டா? இப்போ மக்கள் அதைச் சாப்பிடுவதில் என்ன தயக்கம்? அறிஞர்களே விவசாயப் பெருமக்களே உங்கள் பகுதி நிலத்தடி நீர் உவர்ப்பாகவுள்ளது என்று கவலை கொள்கிறீர்களா? நம்புங்கள், குரக்கன் எள்ளு சாமை கம்பு உவர் நீர் பாய்ச்சினாலும் நன்கு வளரும்; எரியாது கருகாது விளையும். உண்மை உண்மை உண்மை. மக்களே பரீட்சித்துப் பாருங்கள். நாங்களெல்லாம் எம்மரபுத் தானியங்கள் எத்தனையைக் கைவிட்டு விட்டோம்?

அறிவியல் இயந்திரங்களைக் கொண்டுவந்தது, இயந்திரங்கள் இலாபத்தைக் கொண்டுவந்தன, இலாபங்கள் மனிதனை விலங்குகளின் திசையில் வளர்த்தன. விலங்கான மனிதன் மீண்டும் போரிடலானான். ஒவ்வொரு மனிதனின் இரத்தத்திலும் நானே மற்றவனைவிட மேம்பட்டவன் என்ற கர்வம் ஏதாவதொரு வீதத்தில கலந்திருக்கு. உலகத்திலேயே நிற, சமய, இன கருத்து பேதக் குரோதங்களால் தன்னினத்தையே அழிக்கின்ற ஒரே விலங்குக்குழு மனிதன்தான். மனிதனுக்கு மேல் மனிதன், குடும்பத்துக்கு மேல் குடும்பம்; ஜாதிக்கு மேல் ஜாதி, சமூகத்துக்கு மேல் சமூகம். இப்பிடியே போய் நாட்டுக்கு மேல் நாடு என்றாகி ஒரு நாட்டின் மேல் இன்னொரு நாடு அணுக்குண்டை வீசி இப்பூமிப்பந்தை மனுஷன் உடைக்கிற நாளில கடவுள் இருந்தால் அவருக்கும் ஒரு குண்டு கிடைக்கலாம்.

மனிதன் தனக்குத்தானே பகைவனானான். பகையை வளர்த்ததால இழப்புகளைத் தவிர இங்கு எதைக் கண்டோம்? சாமானியனுக்கு வாழ்க்கையில பிடிப்புவர என்ன இருக்கிந்த நாட்டில?

ஒருவேட்டை உண்டா வெடியுண்டா? ஒரு மானுண்டா, மரையுண்டா? காடையுண்டா கௌதாரியுண்டா? ஒரு காட்டுக்கோழி தன்னும் கண்ணால காணவுண்டா? எம்கைக்குத்தரிசி எங்கே? மணம் வீசும் நல்லெண்ணையெங்கே? பங்குனிப் பனங்கள்ளெங்கே? வெள்ளைப் போத்தல் வெட்டிரும்பெங்கே? ஒரு வாளை விளை பாரையுண்டா, நண்டு, றால், கணவாயுண்டா? முழுகினாக்கூட ஒரு கருவாட்டுத்தீயலில்லை. தாவடிப் புகையிலையை நினைச்சுப் பத்த ஒரு கோடாச்சுத்துதானுமில்லை. வாழ்க்கை வக்கில்லையெண்டு ஆகிப்போச்சு. பின்னாலும் எதற்கிந்த உலகத்தில வாழ வேணுமெண்டுறன்?'

'பின்னிலவு தோட்டத்து வடலிக்கு மேலால தேய்ஞ்சும் எழும்பி நிக்குது மணி இரண்டென்றாலும் இருக்கும்போல... யானைத்தந்தம் போலே பால் நிலவு வீசுதே வானிலே... நிலவிலதான் பாலிருக்கு. ஆனால் வயித்தில பசியிருக்கே... இதென்னொரு புதுப்பிரச்சினை? எப்ப கடைசியாய் சாப்பிட்டனான்? ஒன்றும் நினைவுக்கு வரமாட்டனெண்டுது.

தோசை தின்ன ஆசையாகுதே
தோசை தின்ன ஆசையாகுதே
நெய் சுடச் சுட... நீ தரத் தர

கடைசியொரு தேத்தண்ணியென்றாலும் அடிச்சால்... இனியெங் கத்தையான் தேத்தண்ணி குறைஞ்சது கொஞ்சம் பழந்தண்ணி... ம்ம்ம்... சோத்துக்கு வழியில்லாட்டா சோஷலிசம். எல்லோருக்கும் சோத்துக்கு வழியிருந்திருந்தால் இந்த இசங்கள் அவ்வளவா எடுபட்டிராதென்றன்.

மனமோகனாங்க வதனி... உன்னைக் காணும் பாக்யம் வருமோ...'

'ஒவ்வொருதருக்கும் ஒவ்வொரு உறுப்பாலே சக்தி வெளிப்பட வேண்டுமென்று படைப்பிலயிருக்காம்... இந்தக்காசிக்கு அது வாயால போல கிடக்கு, இல்லாட்டிக்கு பிரசங்கங்கள் முடிச்சிட்டு வந்தும் இந்தச் சாமத்தில கோயில் சகடைக் கொட்டிலுக்கையிருந்து பாட்டெழுப்புதே.'

'விழித்திருக்கும் நேரம் முழுவதும் ஜனித்திருக்கும் சிந்தனைகள். ஆனால் வயிறு பசியாயிருக்கும்... அதுதான் பாட்டெழுப்புதுபோல.'

'ஏதாவது கொடுக்காதையுமன்?'

'ம்ம்ம்... அன்றைக்கொருநாள் காசி கொஞ்சம் பால்கஞ்சி குடியுமன் என்றன்... வேண்டாம் இப்பதான் இடியப்ப பிரியாணி சாப்பிட்டனெங்குது. திமிர்தானே?'

'திமிரல்ல உண்மை பேசியிருக்குது... நல்லா வாழ்ந்த மனுஷனப்பா. ஒருநாள் மோட்டோ சைக்கிள்ல நெல்லியடிக்குப்போட்டு வாறன், வல்லைவெளிப்பாலம் தாண்டிவர றோட்டருகில் ஒரு அம்மன்கோவில் இருக்கு தெரியுமே. அதில மைக்கை ஊன்றிப்போட்டு சிலம்பு காட்டும் நன்னெறிகள் பற்றி ஆய்வுரை நடக்குது. அந்தப் பிராந்தியத்திலேயே ஒரு சனஞ்சாவட்டையில்லை. ஒரு மணிவெய்யில்ல கானல் பாய்ந்து கொண்டிருக்கு. பைக் பன்னியர் பாக்கில இருந்தவொரு ஒறேஞ் பார்லியைக் கொடுத்திட்டு வந்தனான் தொண்டையை நனைக்கட்டுமென்று. குறை இன்ன உறுப்பிலதான் என்று தெரிந்தும் எந்த டாக்டருமே தன் கத்தியை நுழைத்துச் செப்பனிட்டுவிட முடியாத உறுப்பான மூளையில ஏதோ மெல்லிய பிசகு அதுதானிப்படி ஆளை மக்களில்லாத அரங்குகளில் சொற்பெருக்காற்ற வைக்குது. ஆளுக்கு எந்தவூரென்று ஊகிக்கிறதும் வல்லை. தீவகப்பகுதி ஊர்காவற்றுறை வலிகாமம் கிழக்கு வடமராட்சி பச்சிப்பள்ளி வாக்கிலுள்ள அத்தனை வார்த்தைகளும் அவர் விரிவுரைகளில் கலந்து கலந்து வரும்...'

'அதுகள் வரட்டும்... நீங்கள் ஏதோ பிளானோட இருக்கிறமாதிரிக்கிடக்கு. இஞ்சை வேர்த்துக் கொட்டுது. இடுப்பை இறுக்காமல் தள்ளிப்படுங்கோ...'

(விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வந்து இந்த முடிவில்லாப் போருக்கு ஒரு முடிவு எட்டப்பட வேண்டும். அன்றேல் ஒடுங்கி வரும் பொருளாதாரச் சிதைவிலிருந்து நாட்டைக் காப்பாற்றவே முடியாது - ஜனாதிபதி சந்திரிகா.)

'பெரியவர் தமிழ்த் தேசிய விடுதலை நிதியாக அரிந்து வைச்சிருக் கிறதில இரண்டாயிரம் கல்லுத்தாங்கோ.'

'தம்பியவை லேசாய் சொல்லிவிட்டீங்கள் இரண்டாயிரமெண்டு. இவ்வளவு கல்லை அறுத்தவரையில ஒரு மனுஷனுக்கு இருந்திருக்கக் கூடிய உழைப்பைப் பற்றி யாரும் கணக்கெடுத்ததாய் தெரியேல்லை. சின்னப்பிள்ளை கணக்காய் பேசிறியள்.'

'இது மேலிடத்து உத்தரவாக்கும்.'

'நீங்கள் எல்லாத்துக்கும் மேலிடம் மேலிடமென்று சும்மா மேல மேல கையைக் காட்டிக் கொண்டிருங்கோ... உங்களுக்கும் மூளையிருக்கு; கொஞ்சம் யோசிக்க வேண்டும். ஒரு அரசாங்க சேவையாளன் தன் ஆயுள் முழுத்திலுக்கும் ஒரு லட்சம் ரூபாய் சேமிக்கிறதெண்டது ஒரு வல்லையான காரியம். ஓய்வு பெறுகிற வயதில இனிப்பெரிசாய் வங்கிக் கடனுகளுமெடுக்கேலாது. என்னுடைய ஆயுள் சேமிப்பில கூட்டி யெண்ணி ஒரு அறுபத்தையாயிரம் ரூபாவுக்கு சீமெந்து மணல் வாங்கி கூலி கொடுத்து நாலாயிரம் கல்லறுத்து வைத்திருக்கிறன் மூன்று அறையில சின்னதாய் ஒரு வீட்டுக்கும் மட்டு மட்டாய்த்தான் வரப்போகுது... அதில நீங்கள் இரண்டாயிரம் கல்லு வேணுமென்று நிற்கிறது பெரும் அடாத்து. என்ரை நிலமைக்கு அதுவே அதிகம் எண்டாலுங்கிடக்கட்டு... ஒரு இருநூற்றம்பது கல்லுத்தாறன் சந்தோஷமாய்க் கொண்டுபோங்கோ.'

ஐ

குரல் எடுத்ததோர் குயில் படுத்தது
குமுறி நின்றதோர் குரல் படுத்தது
தரமறித்திடும் உரிமை பெற்றிடத்
தன் வயிற்றிலே போர் தொடுத்தது
உரமெழுந்தினித் தடை உடைக்குமாம்
உயிர் பிரியமுன்னிது நடக்குமாம்
வரமறுப்பவர் வருகை கூடுமாம்
வலை விரித்தவர் படைகள் ஓடுமாம்
நெஞ்சிலாடிடும் கனவு வாடுமா
நினைவிழந்திடும் பிள்ளை மீளுமா

அஞ்சி வாழ்ந்தவர் அரசு ஏறவா?
அனலிலாடிய வேங்கை சாகவா?
நஞ்சு தின்றிட அஞ்சிடாதவன்
நல்லை வீதியில் பாடை ஏறவா
வந்து பாரடா வந்து பாரடா
வாட முன்னொரு சேதிகூறடா!

'சிங்களம்கூடத் தொன்மையான மொழியான பாளியிலிருந்து மருவி வந்தது. உலகின் அழியும் ஆபத்திலுள்ள மொழிகளிலொன்று. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய கணனிவயப்படுத்த வேண்டிய மொழி. இதையிங்கு பப்ளிக்கிலை சொல்லிப்போட்டு உயிரோடை வீட்டைப் போறதெண்டது வல்லை.'

ஏ 9 றோட்டு அதின்ர நீளத்துக்கு அகலம் துண்டாய் பத்தாது தமிழீழம் கிடைச்சவுடனே வாற ஆட்சியாளர்கள் இந்த விஷயத்தை மனங்கொண்டு ஆவன வேண்டும். இந்தப் பிரபஞ்ச வெளியின் வியாபகத்துக்கு பூமியின்ரை பெருப்பம் பத்தாது. இருபத்தையாயிரம் கிலோமீட்டர் சுற்றளவில பண்ணினதை பிரபஞ்சம் எவ்வளவுக்குத்தான் வியாபிக் கிறதோ அல்லது எங்கேதான் முடிவற்றுப் போய்க்கொண்டிருக்கிறதோ என்று யோசிக்கலாமென்றால் இந்த ஆமியில இயக்கங்களில இருக்கிற இளசுகள், இளவலுகளைப் பற்றிய சிந்தனையும் கவலையுந்தான் குறுக்க குறுக்க வந்து மனதைக் கவ்வுது.

ஏஐஐ

அகதி வாழ்வில்
அருவருப்பொன்றும்
அவ்வளவாயிருந்ததில்லை
வாயுள் சலங்கழித்த சமாதானச்சிப்பாயின்
மூத்திரப்போக்கியை
கடித்தெடுக்கா இயலாமையைவிட

அருமை ஆமிச்சகோதரர்களே சிப்பாய்களே அதிகாரிகளென்று பட்டைகள் சூடிக்கொண்டுள்ள மாத்தையாமார்களே ஏவலில் குதறிப் போகிற விசுவாசமிக்க வேட்டை நாய்கள் நீங்கள். வறுமையில வயித்துப் பிழைப்புக்காக சீவியத்தைக்கொண்டு நகர்த்த வேறு வழி தெரியாமல் கொஞ்சம்போல இனத்துக்காக போராடுகிறோமென்று வந்து அநியாயத் துக்கு மரித்துப்போகின்ற உங்களின் மரணங்கள் எங்களைப் பாதிக்குது. எல்லாக் குழந்தைகளைப் போலவுந்தான் பிறந்தீர்... பாம்பையொத்த அறியாமையையும் ஆபத்தையும் உங்களுக்கு எப்படி இந்தச் சமூகம் தந்தது? குழந்தைகளும் தாய்மாரும் பெரியவர்களும் நிறைந்த ஒரு அப்பாவிச் சமூகத்தைத் தூங்கவிடாமல் ஷெல் அடிப்பதில் சந்தோஷங் கொள்கிற மனது எப்படித்தான் உங்களுக்கு வாய்த்தது?

ஏஐ
சதைக் குவியலாய்
சிதைந்து கிடக்கிறது
சூரியன்
வான வெளியெங்கும்
சிதறிக்கிடக்கிறது
இரத்தம்
இந்த அதிகாலைப்பொழுதில்
குண்டுப்பொதியுடன்
சூரியன் மீது
பாய்ந்த பாலகன் யார்?

'சூ... மந்திரக்காளி விளையாட்டுக்களால் எமது விலங்குகள் ஒன்றும் அறுந்துபடப்போவதில்லை என்பது எம் பின்னாலுள்ள நீண்ட சரித்திரம் தந்த பாடம்.

காந்தி தத்துவம் தோல்வி கண்டதால்
கையிலே துவக்கேந்தி வந்தனம்

போர்க்களத்துக்கு வந்துவிட்ட பின்னால் இவ்வளவு காலம் தாழ்த்தி 'எதிரியை நேசி' என்கிறது எவ்வளவு தூரம் எடுபடும்?

உண்மை விடுதலையின் உபாசகர்களே சொல்லுங்கள் ஆயுதங்களை வீசிவிடுற நேரமா இது? எமது இத்தனை தியாகங்களுக்கும் தற்கொலைகளுக்கும் விலை இதுதானா? ஆயுதங்களை வீசிவிட்டால் எம் போராட்டம் எத்தனை ஆண்டுகள் பின்னோக்கிப் போய்விடும் என்ற பிரக்ஞை இல்லாமலல்லவா பேசுகிறீர்கள்? போர் வேண்டாமென்றால் அடுத்த அடியை எப்படி எங்கே வைப்பது? போராடாமல் இனியொரு விடுதலையை எப்படிச் சாதிப்பதென்றதைக் கூறாத வரையில் உங்கள் கோறைக் கருத்துக்களை ஏந்தி வரும் கவிதைகளும் நிரம்பலற்ற பொட்கோளங்களே!

என்னென்ன அராஜகங்களையெல்லாம் பண்ணலாம் எனக் காத்திருக்கும் ஓர் இனவாத அரசு ஆயுதங்களையும் வீசிவிட்டோமானால் என்னென்ன வன்முறைகளையெல்லாம் எம்மீது கட்டவிழ்த்துவிடும்? எம் இருப்பு மேலும் எவ்வளவு பாதுகாப்பற்றதாகிவிடும்? கரந்தடிப் போராட்டத்தில் இறங்கிய ஒரு கூட்டத்தை வெல்வது இலகுவல்லவென்பது அரசுகளுக்குப் புரியாததா என்ன? பேச்சுவார்த்தைகள் என்னதான் பம்மாத்தென்றாலும் அதுவரையாவது அரசை இறங்கி வரவைத்தது வாங்கிய அடிகளெல்லாமல் வேறென்ன?'

ஏஐஐ
புல்லின் நுனியில் ரத்தம்
மொட்டவிழ்ந்த மல்லிகை இதழில் ரத்தம்

தாமரை பூக்கும் குளமெல்லாம் ரத்தம்
குழந்தைகளின் தொட்டில்களில் ரத்தம்
பாடும் மீன்களின் வாய்களில்
மனிதத் தசைத்துண்டம்
ராவணன் இறந்துவிட்டான்
அவன் வில்லனும் இறந்துவிட்டான்
இன்னமும் ஏன் எரிகிறது
இலங்காபுரி?

'எல்லா இயக்கங்களும் உட்கார்ந்து பேசி இந்தப்போருக்கான ஒரு வியூகத்தை வகுத்திருக்கலாம். வன்னி யாழ்ப்பாணத்தில புலிகள் நின்று கொண்டு மட்டக்களப்பைப் புளொட்டுக்கும் திருகோணமலையிலை மன்னார் நெடும் எல்லையை ரெலோ, இபிஆர்எல்எஃப்பும் ஈறோஸூம் பங்கிட்டிருந்தால் எப்பிடி நுழைவான் எதிரி? இயக்கங்களிடையேயான மோதலில் பலியானது உயிர்கள் மட்டுமல்ல எவ்வளவு ஆயுதங்கள் மண்ணுக்குள் மண்ணாகிப்போச்சு?'

'கேட்க நல்லாத்தானிருக்கு... ஆனால் ரோவின்ரை எலும்புக்காகச் சுத்திக்கொண்டிருந்த கூட்டத்தை நம்பி எப்பிடிப்பின்னால போறதென்றன். தக்க சமயத்தில காட்டிக்கொடுத்துக் காலைவாரி விட்டாங்களேயென்றால் எங்கட தயாரிப்புக்கள் நாசமாகிப்போகாதா?'

'என்ரை வீட்டிலேயே நல்ல காரியம் பண்ணியிருக்கிறியளே தம்பியவை... சமாதானமாகிப்போறமாதிரிப் போட்டு நடுச்சாமத்தில திரும்பி வந்து கொள்ளைக்காரர் மாதிரி வேலியை வெட்டி முழுக்கல்லையும் அள்ளிக் கொண்டு போயிருக்கிறியளே இது நியாயமா? கண்டிப்புக்குப் பேர்போன இயக்கம் என்று பேர் இருக்கு. இப்படியான செயலுகளால அதையும் கெடுக்காதையுங்கோ கல்லுகளைத் திருப்பித் தாங்கோ ராசாவை.'

'நாங்கள்தான் எடுத்தது; ஆனா எடுத்ததொன்றும் உடனே திருப்பித் தாறதுக்கில்ல... எங்களுடைய எல்லா வளங்களையும் பயன்படுத்தி இந்தப் போராட்டத்தில நாங்கள் வெற்றி பெறவேணும். தமிழீழம் கிடைச்ச உடனே அவரவர் பொருட்கள் அவரவர்களிடம் திருப்பித் தரப்படும்.'

'இதொரு அடிப்படை மனித உரிமை மீறலாக உங்களுக்குப் படவில்லையா? இந்த லட்சணத்தில களவெடுத்தவனை கம்பத்தில வைச்சுச் சுடுகிற உரிமையை உங்களுக்கு யார் தந்தது? விபச்சாரக்குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கப்பட்ட பெண் காணாமல் போறது... பெரிய தர்மப்பிரபுக்கள்.'

உங்களில் ஒரு பாவமும்
செய்யாதவன் எவனோ அவன்
இவள்மேல் முதல் கல்லைவிட்டெறிவதாக!

-இயேசு பிரான்.

'களவு எடுத்த யாருக்கும் நாங்கள் மரணதண்டனை தரேல்ல... எங்களைக் காட்டிக் கொடுத்தவைக்கும் கால்தடுக்குப் போட்டவைக் குந்தான் தண்டனை கொடுத்தனாங்கள். இன்னும் இது விஷயமாய் விவாதிச்சு ஆதாரமில்லாத பேச்சுக்காகத் தண்டனை பெறப்போறீர்... எங்கள் பிரதேசப் பொறுப்பாளரிட்டை விஷயம் போச்சேயெண்டால் கதை கந்தலாய் விடும் வயசான மனிஷனேயெண்டு பார்க்கிறேன். மரியாதையாய் பொத்திக் கொண்டு மாறும் பார்ப்பம்.'

ஐ

இங்கு ஓர் மலர் வாடுகின்றதே
இதய நாடிகள் ஒடுங்குகின்றதே
தங்க மேனியை சாவு தின்னுதே
தரணியாடிய மேனி சோருதே
பொங்கி நின்றவன் பேச்சடங்குதே
பொழுது சாயுதே பொழுது சாயுதே
வந்து பாரடா வந்து பாரடா
வாடமுன்னொரு சேதி கூறடா
சுற்றிவர நின்று சுழன்றடித்த புயற்காற்று
பற்றியெரிகின்ற பசி வயிற்றோடிருக்கிறது
பேரிடியாய் நின்று பொழிந்த மழைமேகம்
நீரெதுவுமின்றி நினைவிழந்து கிடக்கிறது
உண்ணாமலிங்கு உரிமைப்போர் நிகழ்கிறது
கண் மூடப்போகின்ற கற்பூரம் எரிகிறது
தேர் ஓடுகின்ற தெருவினிலே
புலியொன்று போராடிக்கிடக்கிறது
புனிதப்போர் நிகழ்கிறது
குண்டு பட்ட குடலோடு குரல் கொடுத்த
குயிலொன்று இன்று பட்டுப் போகிறது
இளவயதில் முடிகிறது

(1998 ஐப்பசி மாலை)

(நீர் வேலி கண்ணாடித் தொழிற்சாலைக்குப் பின்னாலுள்ள குளக் கட்டுச்சரிவு. ஏதும் வயித்தைக் கலக்கி கால் கழுவப்போயிருந்திருக்கலாம். மைக் ஊன்றியாகி விட்டது. அங்கிருந்து தென் கிழக்கே பார்த்தால் செம்மணி தெரியும் வாய்க்கால் தரவை.)

'சகோதரர்களே உங்கள் இலட்சியம் உன்னதமானது, தியாகங்கள் மகத்தானவை; கொடைகள் புனிதமானவை. பல விஷயங்களில் குறைபாடுகளுடன்தான் வளர்ந்தோம். ஆனால் வளர்ந்தோம். ஆனால் உங்கள் ஆயுதங்களை நீங்கள் தமிழ் முஸ்லிம் சிங்கள சிவிலியன்கள் மீது திருப்பிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெட்கித்தலைகுனிந்தோமடா.

ஹிட்லரின் நாசிப்படையைப்போல பேரினவாதத்துள் தோய்ந்த ஒரு படை, சித்தாந்தங்கள், சிந்தனைகள் எதுவுமற்ற அரசின் ஏவல்கள் எதையும் செய்யத்தயங்காத ஒரு காட்டுமிராண்டிப்படை அப்பாவி மக்கள் மீதும் பெண்கள் மீதும் குழந்தைகள் மீதுங்கூடத் தன் கொலைப்பசியைத் தீர்க்கும்; அது முழு உலகத்துக்கும் தெரியும். அதற்காக நீங்களும் அம்பாறையில் செய்ததுபோலத் தூங்கிக் கொண்டிருந்த பச்சைக் குழந்தைகள் மீது கிறிஸ்கத்தியைச் சொருகினால் - உலகம் உங்களை அட இவர் களும் பயங்கரவாதிகள்தானென்று ஏன் எடைபோடாது? அந்தக் கிறிஸ் கத்தி ஒரு தமிழ் உலையில் இணக்கப்பட்டிருந்தாலே அந்தத் தலைக்குனிவும் எமக்குத்தான். சித்தாந்தத்தெளிவும் கொள்கைகளில் பிடிப்பும் சுயவுள்ளொளியுமுள்ள போராளிகளா இதைப் பண்ணியது? சர்வதேசத்தின் முன் நாங்களும் பயங்கரவாதிகள்தானென்று பெயரெடுத் தால் எங்கள் கோரிக்கைகளில், போராட்டத்திலுள்ள நியாயங்கள் இத்தனை கரும்புலிகளும் போராளிகளும் பண்ணிய தியாகங்கள் அடிபட்டுப் போகாதா? கௌரவம் பெறும் எங்கள் கனவுகள் அகௌரவத்தைச் சம்பாதிக்காதா?

எம் மிதவாதத் தலைவர்களின் போராட்ட வழிமுறைகளில் பிழை களிருந்தன; சகித்தோம், பொறுத்தோம். வேறு மாற்று இல்லாததால் அவர்களையும் ஆதரித்தோம். ஆனாலும் அவர்களைப் பாராளுமன்றம் அனுப்பிவைத்த மக்களுக்கு அவர்கள் மீதான மதிப்பீடுகளும் விமர்சனங் களும் இருந்தன. எம் போராளிகளின் செயற்பாடுகளில் பிழைகளிருக் கின்றன; சகிக்கிறோம், பொறுக்கிறோம். ஆனாலும் ஆதரிக்கிறோம். விமர்சனங்கள் அழற்சியை ஏற்படுத்துகின்றன என்றால் தவறுகளும் குற்றங்களும் நிரடுகின்றன என்று அர்த்தம். இன்று ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் குடிமகளும் தினசரி அரசியலால் பாதிக்கப்பட்டுள்ளனர். செயல்கள் அதர்மமானால் விமர்சனங்கள் வருவது இயற்கை. விமர் சனங்கண்டு சினமடைவதும் - விமர்சிப்பவனெல்லாம் எதிராளி யென முடிவு செய்வதும் கருத்தியல் மாறுபாடுகளுக்குத் தண்டனை தருவதும் நாங்கள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்களென மறைமுகமாகப் பிரகடனஞ்செய்வதாகும். சே குவெரா கொல்லப்பட்டு இத்தனை ஆண்டு களுக்குப் பின்னரும் பேசப்படுகின்றானேயென்றால் என்றாவது விமர் சனங்கள் வரும் திசைக்கு அவன் தன் துப்பாக்கியை நீட்டியதுண்டா?'

'தலைமையைக் கலந்து கொள்ளாது அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்ட போராளிகள் அனைவரும் களையெடுக்கப் பட்டு இயக்கம் எப்போதோ சுத்திகரிக்கப்பட்டுவிட்டது. இப்போது எமது பாதை தெளிவானதும் நேரானதுமாகும்.'

'தலைமைக்குத் தெரியாமலும் கிரியைகள் நடக்குமென்றீர்?'

'அப்படித்தான்.'

'காலம் மாறும் காற்றுகள் திசைமாறி வீசும் கருத்துக்கள் மாறும் நடந்து வந்த பாதைகள் திரும்பிப் பார்க்கப்படும். விமர்சனங்களால் ஒரேயடியாய் எம்மைத் தாக்கிக் கொண்டிருந்தால் எங்கள் செயற்பாடுகள் ஸ்தம்பித்துப் போகுமில்லை?'

'பொதுமகன் பாதிக்கப்படுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் நிலைப்பாட்டை நீங்கள் தெளிவுபடுத்தவேணும். நடந்தது தவறு தானென்றால் அதை வியாக்கியனங்களால் மூடி மறைப்பதை விடுத்துத் தயக்கமில்லாமல் மன்னிப்புக் கேட்க வேண்டும். அல்லது மக்களுக்கு உங்கள் மனிதநேயம் மேல் அவநம்பிக்கையும் இவர்கள் சர்வாதிகாரிகள், ஃபாசிஸ்ட்டுகள் என்ற சந்தேகமும் தோன்றிவிடும். எங்கெங்கே அடக்கு முறையும் ஏகபோகமும் ஏகாதிபத்தியமும் ஓங்குகிறதோ அங்கங்கே மொழி, இன, மதத்தேசிய உணர்வுகள் கிளறிவிடப்படும். 'அடே கரித்தெமிளா' எனும்போது 'அல்ல மறத்தமிழன்' என்ற எதிரொலிப்பும் தேசிய உணர்வுகளும் முன்னெப்போதைவிட அருட்டப்பட்டெழுந்தன. அதே சர்வாதிகாரம் எங்களை விடுவிக்க வந்தவர்களிடமிருந்து வந்தால் அதன் விளைவுகள் எங்கள் ஐக்கியத்தைப் பாதிக்கும்.'

'சுவிஸில மகன் இருக்கிறான்; ஆச்சிக்கு ஒரு ஐம்பதினாயிரம் வெட்டிவிட ஏலாமக்கிடக்கென்ன?'

'ஐந்து லட்சம் கடன்பட்டு அவனைச் சுவிஸுக்கு அனுப்பினது உண்மை ராசா. அங்கின போன கையோட அவன் விசாவெடுக்க வெண்டொரு சுவிஸ்காரியை கல்யாணம் பண்ணிக் கொண்டு, சொன்னா நம்ப மாட்டியள் இப்ப பத்து வரியம் எங்களைச் சுகம் விசாரிச்சு ஒரு கடிதம் போடுறேல்ல. இதில அவன்ரை விலாசம் இருக்கு தம்பியவை; உங்கால முடிஞ்சால் ஐம்பதினாயிரமல்ல ஐந்து லட்சமென்றாலும் அவனிட்ட வாங்கியெடுத்துக் கொண்டு எங்களுக்கும் ஏதாவது தந்தால் சந்தோஷம்.'

'இப்போ ஒன்றை சிவப்பு என்கிறம், இன்னொன்றைக் கறுப்பு என்கிறம்; அந்த நிறம் தோற்றுகிற சடத்தில இருக்கிறதா கண்ணில இருக்கிறதா ஒளியிலயிருக்கிறதா புத்தியில இருக்கிறதா? அது சும்மா மூளையின் ஒரு சங்கேதக் குறிப்பின் விரிவாக்க அனுபவந்தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? பார்வையின் பார்வை, மனதின் மனது, உயிரின் உயிர், ஜோதியின் ஜோதி, வேணுமானால் கடவுளின் கடவுள் என்று எல்லா மக்களுக்குந்தான் சிந்திக்க வேண்டாம், தலைவர்களுக்காவது சிந்திக்கத் தெரிந்திருக்கா? முடிந்தால் தமிழனா தள்ளி வை; சோனகனா வீட்டுக்கலை என்ற பேச்சு வருமா? பிரான்சுக்குப் போய்ப்படித்த தலைவிதான் என்ன செய்தாரென்கிறேன். அவராலைதான் துவேஷத்தைக் களைய முடிந்ததா? இத்தனைத் தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டுள்ளனரே இதைக் கண்டித்த, அறிவுஜீவிகள் எதிர்த்து

போர்க்கொடி தூக்கிய சிங்கள மகளிர் முன்னணிகள், பெண்ணிய அமைப்புகள்தான் எத்தனை?'

'காலவரிசைப்படி சரித்திரத்தை நோக்கினால் விஜயனையும் அவன் சகாக்களையும் கப்பலில் ஏற்றித் தள்ளிவிடுறது... பௌத்தர்களை சுண்ணாம்புக் காளவாயில தள்ளி மூடிறது, தமிழர்களைக் கலைச்சுக் கொண்டு போய் இந்து சமுத்திரத்தில குதிக்கச் செய்ய வேணுமென்றது முஸ்லிம்களை பஸ்லிலேத்திப் பிரதேசப் பிரஸ்டம் செய்யிறது, மனுஷனுக்குரிய நிர்த்தாட்ஷண்ய குணங்களின் வெளிப்பாடுகளல்லேயிதுகள்?'

'சோனைகளைக் கூட வைச்சுக் கொண்டு போராடலேப்பா! வெளியில இருந்து பார்க்கிற உங்களுக்கு அது தெரியாது, களத்தில இருந்தால்தான் உங்களுக்கும் அவர்கள் போடுற முட்டுக்கட்டைகளும் கஷ்டங்களும் புரியும். சிம்பிளாச் சொன்னா நாங்கள் உயிர்களைத் தாரை வார்த்துச் சாண் ஏறினால் அவங்கள் அற்ப அலாபங்களுக்காக இருந்த இரையிலேயே முழத்துக்கு கீழை இழுத்து விடுறாங்கள்... தேவையா இது?'

'காட்டிக்கொடுக்கிற பயலுகளுக்கு நீங்கள் வேணுமென்றால் தண்டனை கொடுத்திருக்கலாம்.'

'எவன்தான் உளவு சொல்றான் எவன்தான் சொல்லேல்லையெண்டது தெரியாமக் கிடக்கு. ஆமியளோட கதைச்சுச் செற்பண்ணிக்கொண்டு குண்டடியில இருந்து தப்பிக்க எல்லோரும் தங்கடை வீட்டுக் கூரைகளில மாத்திரம் இரகசியமாக நீலக்கொடிகளைக் கட்டி விட்டிருக்கிறாங்கள்; சொல்லுமப்ப யாரைக் கொல்றது யாரை விட்டு வைக்கிறது?'

'அதுக்காக ஒட்டு மொத்த மக்களை வெளியேத்திறது எப்பிடி நியாயம்? இன்றைக்கு புத்தளத்திலையும் சிலாபத்திலையும் புனர் வாழ்வு முகாம் களிலும் வாடிற இளைஞர்கள் நாங்கள் தொலைத்த கல்வியையும் வாழ்வையும் நிம்மதியையும் தரச் சொல்லிக் கேட்டால் என்ன பதில் சொல்லுவியள்?'

'துயில்கின்ற எங்கள் மாவீரர்களின் உயிர்களை மீட்டுத்தாருங்களென்று யார் கேட்டார்கள்? சாத்தியமானதையல்லோ மனிசர் பறையவேணும். இழப்புகள் அவர்களுக்கு மாத்திரம் இல்லை. ஆயிரக்கணக்கில மரண தண்டனைகள் நிறைவேற்றப்படும் அவலத்தைத் தவிர்ப்பதற்குதான் அப்பிடிச் செய்தனாங்கள். ஆனாலது சர்வதேச சமூகத்தால பெரும் ஜனநாயக விரோதமா உருப்பெருக்கப்படுமென்ற விஷயம் அப்ப தெரியாமப் போச்சு. கணக்கெடுக்காமல்தான் விட்டிட்டோம்; தப்புத்தான். கவலை வேண்டாம், அவர்களெல்லாருமே மீளமர்த்தப்படுவார்கள்.'

'சர்வதேச சமூகம் ஒத்துக்கொள்ளாத கிரியைகள் செய்யிறது இதுதான் முதல் தடவையல்ல.'

'புரியுது... ஒரு மனிதன் அவன் பிரமாவேயானாலும் அவனால எங்களுடைய அமைப்பே அழியும் அபாயம் இருக்குமென்றால்

எங்களுக்கு மற்றவர்கள் கருத்துக்களை முக்கியத்துவப்படுத்தேலாது. இது கண்ணீரால் மாத்திரம் வளர்ந்ததல்ல, உயிர்களை தாரை வார்த்து வளர்த்த பயிர்; கருகவிட முடியாது. எங்கள் தோழர்கள், உயிர்கள், ஆசைகள், கனவுகள், இலட்சியங்கள் முக்கியமில்லையா... எங்கள் மழலைகளின் எதிர்காலம் முக்கியமில்லையா தனியொருவன் தலைதானா முக்கியம். பிரச்சினையின் மற்றக் கோணத்தையும் புரிஞ்சு கொள்ளுங்கோ.'

ஐஐஐ
புதிய பூமி
புதிய பூமி எழுந்து வருகவே!
வேறொரு உலகம் பிறந்து வருகவே!
வானத்தில் அமைதி அழகுற எழுதப்படட்டும்
அஞ்சாமை மிக்கதோர் இரண்டாம் தலைமுறை
உதித்து வருக வருகவே
விடுதலை வேட்கை நிரம்பிய மக்கள் பிறந்து வருகவே
தடைகளைத் தாண்டும் வல்லபமும்
போர்க்குணம் கொண்ட தோள்களும் உயர்ந்து வருகவே
சிறுமை கண்டு சீறும்
குணம்
நின் குருதியில் கலந்து பாய்க
நவ மனிதன் எனுமோர் இனம் எழுந்து வந்து
அதிகார மையங்களைக் கைப்பற்றுக!

'ஐயா சைக்கிள் கடை நீங்கள் குறைஞ்சது மாதம் ஆயிரம் ரூபா நிதி தரவேணும்'

'மாதம் யாராவது எனக்கு ஆயிரம் ரூபா தந்தினமென்றால் நானும் குழந்தையளும் நிம்மதியாய் கஞ்சி குடிப்பம்.'

'இதை எத்தினை நாளைக்குச் சொல்லுவியள்... மாதம் எத்தனை சைக்கிள் திருத்திறியள், என்ன வருமானம் வருகுதெண்டதை நாங்களும் அறியாமலில்லை.'

'நீங்கள் வாங்கோ; வந்து ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு ஒரு கிழமைக்கு என்னோடை உட்காருங்கோ... வரும்படியைப் பாருங்கோ பிறகு என்ன நான் தரவேணுமெண்டதைச் சொல்லுங்கோ.'

'என்னிட்டை இருப்பதே ஒரு ஸ்குறு டிறைவர் உட்பட மூன்று சாவி... இன்னுமொரு கொறடும் சாவியும் வாங்க மாட்டாமல் இரண்டு வரியமாய் அல்லாடுறன்.'

'ஒரு நாளைக்கு பத்துச் சைக்கிள் டியூப் ஒட்டினாலே ஐம்பது ரூபாயைக் காண்றது வல்லை.'

'ஆயிரம் ரூபாவெல்லாம் கனவிலதான் தம்பி.'

'ஐயா... நீங்கள் இனிமேலும் சாட்டுச் சொல்லேலா... இந்தாரும் பற்றுச் சீட்டுப் புத்தகம். இண்டையிலயிருந்து எல்லா வாடிக்கையாளர்களிட்டையும் பற்றுச் சீட்டுக் கொடுத்துதான் காசு வாங்கிறியள். மொத்த மாத வருமானத்தில எத்தனை வீதம் கட்டவேணுமெண்டதைப் பிறகு வந்து சொல்லுவம்.'

'என்னட்டை டயர், டியூப் வல்கனைஸ் பண்ணவோ றிம் பக்கிள் பாக்கவோ கூட இயணங்களில்லை. ஆகக் கூடி இஞ்சை டியூப் ஒட்டுறதுதான் செய்யக்கூடியது. வேலையென்றால் நீங்களாய் ஒரு பத்துப்பேரைப் பிடிச்சு என்னட்டை அனுப்பி வைச்சாத்தான் ஏதாவது நடக்கும்... அல்லது முதல்ல கொஞ்சப் பணவுதவி நீங்கள் எனக்குச் செய்யுங்கோ, தொழிலை விஸ்த்தரிச்சுக் கொண்டு என்னாலையான நிதியுதவியை உங்களுக்குச் செய்யிறன்.'

'நீர் கனக்கக் கதைச்சீரேயெண்டால் பிரச்சினை வரும்.'

'நாலு வருஷமாய் பிள்ளையளோட ஊரை விட்டு இடம் பெயர்ந்து வந்து அக்கராயன் காட்டுக்குள்ள றோட்டோரத்தில கூரை ஒழுகிவழியிற இந்த ஒத்தாப்புக்குள்ள குந்தியிருந்து சைக்கிள் டியூப் ஒட்டி வயிறு கழுவுற அவல நிலைக்கு வந்திட்டம்... இதுக்கு மேலும் என்ன பிரச்சினை வரப்போகுதாக்கும்?'

'தமிழீழம் வந்திட்டுதேயெண்டால் எல்லாப் பிரச்சினையளில யிருந்தும் எங்களுக்கு விடுதலைதானே?'

'உண்மை பறையிறதெண்டால் இப்படியொரு சுதந்திரத்தோடை தமிழீழம் வந்திடுமோவெண்டுதான் எங்களுக்குப் பயமாய்க் கிடக்கு. மக்களை இம்சித்தொரு சுதந்திரம் வேண்டாம்; மக்கள் வேண்டுவது எஜமானர்களின் மாற்றமல்ல. சுதந்திரம் என்ற அர்த்தத்தில் சுதந்திரம். என்று தனிமனிதன் சுதந்திரம் கௌரவிக்கப்படுகின்றதோ அன்றுதான் கௌரவம் பெறும் உங்கள் கனவுகள், தியாகங்கள்.'

'1977ஆம் ஆண்டு தேர்தல் நேரம் பருத்தித்துறை மாதனை வெளியில் காசி மைக்கை ஊன்றிவிட ஏதோ பிரச்சாரக் கூட்டமாக்குமென்று ஒரு வெள்ளம் சனங்கூடிவிட்டது. மனுஷன் மழித்த கன்னங்களுடன் பேச ஆரம்பிப்பார். விரிவுரை முடிந்து போகும்போது தாடி மீசை முளைத்திருக்கும் என்று ஜோக்கடிப்பார்கள். அவர் தன் விரிவுரைகளின் விஷயங்களைக் கேட்கும் மக்களின் தண்டுதரம், நேரம் இவற்றையிட்டு மாற்றிக் கொள்வதில்லை. ஒருமுறை சுன்னாகம் காலிங்கனில் 'செகண்ட் ஷோ' படம் பார்த்துவிட்டு நாலைந்து சைக்கிள்களில் டபிள் வந்தவர்களை கட்டுவன் அம்மன் கோவிலில் நிறுத்தி இந்திய தத்துவமரபுகளுக்கும் மேற்கத்தைய தத்துவ ஞானத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அலசி விடியும்வரை கேட்க வைத்திருக்கிறாரென்றால் பாருமன்.

அன்றைக்கும் அப்படித்தான் மாதனை வயல்வெளியில் சிந்துப் பாடல்களில் சந்த அமைதியும் அழகியலும் என்ற பொருளில் காசியின் விரிவுரை தொடர்ந்து கொண்டிருந்தது. வந்து பார்த்த உள்ளூர் தத்தாரி இளைஞர்கள் சிலருள் ஒருவன் அவருக்கு ஒரேஞ் பார்லி வாங்கி வந்து கொடுத்தான். இன்னொருத்தன் சந்தனக் கும்பாவைக் கொண்டுவந்து நீட்டவும் தொட்டு நெற்றியிலும் மேற்கைப் புயங்களிலும் செழிக்கவே பூசிக் கொண்டார். அருகில் நெல்லண்டை அம்மன் கோவிலில் இங்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் தண்டிகைத் திருவிழா நடந்து ஒரு மூலையில் குவித்து வைத்திருந்த ஒரு கும்பாரம் சரங்களை அள்ளி வந்து முப்பது நாற்பது மாலையாக முடிந்து வைத்துக் கொண்டு அவர் பேசப்பேச ஒவ்வொருவராக வரிசையில் வந்து போட்டுக் கொண்டேயிருந்தனர். மாலைகள் தலையை மூடி பார்வையை மறைத்தபோது அவற்றைக் களைந்து அருகில் குவித்துவிட்டு வழமையான உற்சாகத்தோடு சளைக்காமல் நள்ளிரவையுந்தாண்டிப் பேசிக் கொண்டே போனார்.

மறுநாள் அவரவரும் அவரவர்க்குமுள்ள சோலிகளை நினைத்து வீடுகளுக்குப் போய்விடத் தொண்டைத்தண்ணி வற்றத் துவண்டு விழுந்தவர் உஷத்துக் காலப் பூசைக்கு வந்த ஐயர் எழுப்பிவிடத்தான் எழும்பிப்போனாராம்.'

'தமிழீழம் கிடைத்தால் ஸ்ரீ லங்காதான் முதல்ல பொருளாதாரத்தில முன்னேறும்.'

'ஏனோ?'

'ஒருத்தன் கடனை உடனைப்பட்டு ஒரு தொழிலையாரம்பித்தால் முதல்ல அவை வந்து ரசீதுப் புத்தகத்தோடை வந்து குந்தி விடுவினம்... யார் விடப்போகிறான் முதல்?'

'ஏன்?'

'புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலே இருக்கிற, நாடு திரும்புகிற தமிழர்கள் இவர்களுடைய றிசீட்டுப் புத்தகங்களுக்குப் பயந்து தங்கள் சேமிப்புகளை ஸ்ரீலங்காவிலேதான் முதலீடு செய்யப்போகினம் பாருங்கோ.'

'பேச்சு வார்த்தைகளால சில சமயம் ஒரு சமஷ்ட்டி அரசு வாய்த்தாலுந்தான் தமிழ்ப்பகுதிக்கான நிதி ஒதுக்கீடுகளில் சனத்தொகை, அவர்கள் வதியும் பரப்பளவு இவற்றினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நிதிகள் நிர்ணயம் செய்யப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? மீண்டும் மீண்டும் இனப்பாகுபாடுகள் மீண்டும் போர் என்றுதான் நம் கதை தொடரப் போகிறதா? ஒற்றையாட்சி முறைக்குள்ளதான் தீர்வென்றால் பெண்களும் சிறுபான்மையினரும் சுடுகலன்கள் வைத்திருக்க உரிமம் தேவை.'

ஐஐ

வேண்டுவதெல்லாம்...
சொர்க்கங்கள் ஏட்டில் இருக்கட்டும்
நமக்கு இருத்தலும் இவ்வாழ்வுமே போதுமே
இயற்கை குழம்பாத பூமியும் என்றும்
பசுமைவயல்களும் பயிர்களும்
அமைதி காத்திடும் கடலுடன்
மாசு கலவாத சூழலும் போர்
மேகங்கள் சூழாத பொழுதும்
அச்சம் திகிலற்ற தூக்கமும்
மண்ணும் மரங்களும் தண்ணீரும்
ஒதுங்க ஓர் எளிய குடிசையும்
எங்கள் ஒற்றுமை சூழும் கிராமமும்
உழைக்கச் சலித்திடா மக்களும்
அன்பில் தளைத்திடுஞ் சுற்றமும்
புது வையகம் படைத்திடும் ஆசையும்
வேண்டு வதெல்லாம் இஃதுதான்
வாழ்வு தன்பாதையில் செல்லுமே

(பன்னிரண்டு ஆண்டுகளாக இந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் புலிகளுடன் புரிந்து வருகிற போரினால் எமது அழகிய திருநாடு அழிந்து சுடுகாடாக மாறிக் கொண்டு வருகிறது. நலிந்துவிட்ட பொருளாதாரம் விலைவாசி யேற்றம் வறுமை பிணியினால் மக்கள் படுந்துயரம் சொல்லுந்தரமன்று. இங்கே எந்தவிலை கொடுத்தாவது இந்த நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டியது மக்கள் ஐக்கிய முன்னணியின் முதற் கடமை யாகும். மக்கள் எம்மை ஆட்சிப் பீடம் ஏற்றினால் போராடுகின்ற இளைஞர்களுடன் பேசி சமரசத்தையும் சமாதானத்தையும் உடனடியாகக் கொண்டு வருவேன் - சந்திரிகா குமாரணதுங்க, 1992 மார்ச் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில்).

'என்ன விலை கொடுத்தாகிலும் சமாதானத்தைக் கொண்டுவருவேன் என்று பதவிக்கு வந்தவர் சந்திரிகா. பேச்சுவார்த்தை முறிந்ததுதான் முறிந்து போனது அடுத்து அவர் என்னதான் செய்யப்போகிறாரென்று மொத்த உலகமே கவனிச்சுக் கொண்டிருக்குது; உங்களுக்குப் பொறுமையில்லை, முதற்கல்லை எறிஞ்சிட்டியள். மீண்டும் போரைத் தொடங்கினது நீங்கள் தான் என்ற வகையில் சனங்களுக்கு உங்கள் மேல் வரக்கூடிய ஆத்திரம் ஏன் உங்களுக்குப் புரியுதில்லை? கேட்டால் இனி சந்திரிகா பேச்சுவார்த்தைக்கு வரப்போறதில்லை என்டது தெரிந்தவுடன் மேலிடமெடுத்த முடிவென் றாங்கள். எது முட்டாள்தனத்தைக் காட்டுறதோ என்றேன்... துவக்கை நீட்டுறான்.'

ஐ

விண்ணிருந்து பார்ப்பேன் விடுதலையை என்ற மகன்
கண்ணெதிரேயிங்கு கட்டிலிலே முடிகின்றான்
பாலோடு வீரம் ஊட்டிட்ட தாய்மாரே
பட்டினியால் இவனைச் சாகவிடப்போறீரா?

'கவிதை பாடி உருவேற்றிச் சாவை அவனுக்கு முன்மொழிந்த அறிவு ஜீவிக் கவிஞர்களே அத்தமிழ் மகனின் அநியாய உயிரழிவை நீங்களெல்லாம் தடுத்திருக்க வேண்டாமோ? தலைவர்களால்கூட அவன் மரணத்தைத் தடுக்கமுடியாமல் போனதென்ன? சுற்றி வந்து சுழன்றடித்த புயற்காற்றே உன் போராட்டத்தை ரசித்தோம். யார் வந்து எப்படி நியாயப்படுத்தினாலும் திலீபா உன் மரணத்தை ரசிக்க முடியயேல்லையடா!'

ஏ

மகத்துவங்கள் ஆயிரம் நிறைந்த
மரணத்தின் மேலும்
வாழ்வே வலியது

ஐஐ

தாய்மார்கள் திலீபனைச் சாகச்சொல்லவில்லை
கருங்கல்லில் சாறேதும் வடியாதென்ற கதை
விசர்க்காசி கால் தூசி எனக்கே புரிகையிலே
ஏன் கேளிர் திலீபனை பாடையிலே ஏறவிட்டீர்?

'உங்கள் கொள்கைகள் தத்துவங்கள் நாட்டுக்கு நாடு இடத்துக்கிடம் வளைந்து நெளிந்து போயிருக்கே?'

'எப்படி'

'தமிழகச் சினிமா கலாச்சாரச் சீர்கேடென்று அதை ஈழத்தில் தடை பண்ணினீர்கள், சரிதான்; ஐரோப்பாவில் உங்கள் பின்னணியில் நடப்ப தாகச் சொல்லப்படும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து சதவீதம் சினிமாவின் ஆளுமைதான். அதாவது சினிமாவைத் தவிர்த்து தமிழர்களுக்குக் கலை, கலாச்சாரம் இல்லை யென்றாகி விட்டது. ஒத்துக் கொள்ளாவிட்டாலும் நீங்களும் எங்கேயோ தடுமாறிறியள். இந்த இலட்சணத்தில் லண்டனிலிருந்து மட்டக்களப்பு வந்த தமிழ்ப்பெண் மினிகவுண் அணிந்து கொண்டிருக்கிறாள் என்பதற்காக அவள் கவுணைக் கிழித்துவிட்டது எந்தக் கலாச்சாரம்? அந்தப் போராளியின் தவறுக்கு என்ன தண்டனை வழங்கினீர்கள்? தாடி வைக்கச் சொன்ன, தாடியை மழிக்கச் சொன்ன பல ராஜ்ஜியங்களின் சரித்திரங்களையும் அனுபவங்களையும் கண்டது இந்த உலகம் மறந்திடாதையுங்கோ. எம் சரித்திரங்கள் நல்லவிதமாக அமையவேணுமென்றால் அது தெளிந்த சிந்தனைகளாலேதான் முடியுமே தவிர நட்டாமுட்டித்தனங்களாலல்ல.

அது சரி... எம் கலாச்சாரத்தின் காவலர்கள் நீங்கள்தானென்று உங்களை நியமித்தது யார்?'

'காசிக்கு வாய் ஓயுதில்லை என்றால் சனசஞ்சாரமில்லா கச்சத்தீவு மாதிரியொரு இடத்துக்குப்போய் தன் பிரசங்கங்களை வைத்துக். கொள்ளட்டும். தேவையில்லாமல் புலியள்ள வாய் வைக்கிறதோ அவர்களைப் பற்றி விமர்சிக்கிறதோ விளம்பிறதோ நல்லதுக்கில்லை. அது ஆயுதம் தாங்கின ஒரு இயக்கம்; ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி இருப்பாங்கள். எல்லாற்றை கடிவாளத்தையும் ஒருத்தன் பிடிச்சிருக்கேலா கண்டியோ, முதிர்ச்சி பத்தாததில சின்னச் சின்னப் பிழையளை அங்கையிங்கை விட்டுத்தானிருப்பாங்கள், இல்லையெண்டேல்ல... ஒரு தவறும் விடாதவன் ஒரு காரியமுமே உருப்படியாய்ப் பண்ணியிருக்க மாட்டான் என்பார்கள்... அதனால் அதுகளைப் பறைஞ்சு கொண்டிருக்கிற நேரமல்ல இது! என்றைக்கென்றாலும் தமிழீழமோ மாநில சுயாட்சியோ தமிழ் மக்களுக்கு ஒரு விமோசனமெண்டால் அது புலியளாலதான் எண்டதைத் தெரிஞ்சுகொள்ளவேணும்.'

'தமிழர்கள் பின்னே வந்தேறிய குடிகள், சோழர்கள் படையெடுப்பின் பின்னர்தான் அவர்களின் எண்ணிக்கையே இங்கே அதிகரித்தது. அவர்கள் தமக்கெண்டு ஒரு நாடு அமைந்துவிட்டால் முதலிலே திருகோண மலையில் இருந்து கொண்டு அனுராதபுரத்தைக் கைப்பற்றி அதை இராஜ தானியாக்கி அங்கே திராவிடக்கட்சிகளின்ரை ஆட்சியைக் கொண்டு வருவார்கள். ஏற்கனவே சிங்களம் இந்து சமுத்திரத்தாலே சூழப் பட்டிருக்கு. அதன் பிறகு திராவிடரால சூழப்படும்; பிறகு முழுச் சிங்களவருமே ஒடுக்கப்பட்டு அவர்களுக்குச் சேவகம் செய்ய வேண்டி வரும். அல்லது எல்லோருமே மெள்ள மெள்ள கடலுக்குள் குதிக்க வேண்டியதுவரும்' (ஒரு ஜே.வி.பி தோழர் பிரச்சாரக்கூட்டமொன்றில்).

'பெரும்பான்மையான சிங்கள மக்கள் அவர்கள் தலைவர்கள் என்று நம்பிய பேர்வழிகளால் எம்முடைய மதம்தான் சிறந்த மதம், என்னுடைய மொழிதான் சிறந்த மொழி, என்னுடைய கலாச்சாரம்தான் உலகின் மற்ற எந்தக் கலாச்சாரத்தை விடச் சிறந்தது என்று அரசியல் நோக்கங்களுக்காக அறிவுறுத்தப்பட்டு விட்டார்கள். அதனால் பிற கலாச்சாரங்களின் பன்முகத் தன்மையைப் புரியாதவர்களாகவும் ஏற்க முடியாதவர்களாகவும் இருக் கிறார்கள். அவர்களுக்கு தமிழர்களை ஒரு இனமாகக் கருதி அவர்களுக்குரிய சுதந்திரத்தை வழங்குவதில், மதத்தை, கலாச்சாரத்தை அங்கீகரிப்பதில் ஏற்கப்படக் கூடிய பயங்கள், தயக்கங்கள் போன்ற அகவயத் தடைகளைத் தகர்ப்பதற்கோ வேறுபாடுகள் மீதான சகிப்புத் தன்மையை வளர்ப்பதற்கோ ஏதாவது முயற்சியை நாம் என்றாவது எடுத்திருக்கிறோமா?'

'இன்னும் நூறு வருடங்களில் மக்கள் அறிவு பெறப்பெற அவ்வகையான முனைவாக்கக் கருத்துக்கள் மழுங்கிப்போய்விடும்.'

போரைப் போரிட்டு ஒழி - ஒரு ஜெர்மன் சுலோகம்

(சமாதானத்துக்கான யுத்தத்தை மக்கள் அனுபவிக்கத் தொடங்கியிருந்த காலம். 1996)

'பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு எதிரில் ஞானவைரவர் கோவில் திண்ணையில் கால் நீட்டிப்படுத்திருந்த காசியின் தலையில் ஒரு பிளாஸ்டிக் வாளி நிறைய பழைய இஞ்ஜின் ஓயிலைக் கொண்டு வந்து ஊற்றினார்கள். அவகளிப்பட்டு திடுக்கிட்டு எழும்பிய காசிக்கு கண்ணைத் திறக்க முடியேல்ல. எண்ணெய் கண்ணுள் இறங்கிவிட்டதில் அவை நெருப்பாய் எரிகின்றன. காசி குளறிச்சுது. பிச்சூ... உவாய்க்... ஓஓஓஓஓஓ. மூச்சுத் திணறியதில் நாசி வழி கணிசமான ஓயில் மூச்சுக் குழாயுள் இறங்கி விட்டது. புரைக்கேறி இருமியதில் வயிற்றைக் குமட்டி வாந்தியெடுத்தது. பிறகு வந்த யாரோ அவரைத் தூக்கிக் கொண்டு போய் கடலுக்குள் வீசினார்கள்.'

...வானம் முழுவதும் புகைமூட்டமும் துன்பமும் கவிந்த மேகங்கள். டயர்களைக் குவித்துப்போட்டு எரித்ததுபோல காற்று குமட்டும் வாசனையைக் கொண்டிருக்கிறது. அச்சுவேலி பாஸ்கரன் தியேட்டர் எதிரில் வெள்ள வாய்க்கால் பள்ளத்தில துப்பாக்கிக் குண்டுகள் தொண்டைக்குழியோட மூச்சுக் குழலைக் கிழித்துச் சென்றிருக்க அடித்து முறித்த ஒரு வாழையைப்போல தலை சரிந்து நெடுத்த உடல் மடிய விழுந்து கிடக்கிறார் காசி. வாயால் வழிந்த குருதி மணலில் ஓடிக்காய்ந்திருக்கிறது. சனங்கள் உடல் இருந்த இடத்தை அரை வட்டமடித்துச் சென்று கொண்டிருந்தனர். அவர்களிடம் ஒரு நாய் செத்துக் கிடக்கிற அக்கறைகூட இல்லை...

'தர்க்கம் தத்துவம் இலக்கியம் பொருளாதாரப் பிரச்சினைகளில் காசி அவதானங்கள், அனுமானங்களை ஒரு விதூஷகப் பேச்சாக எடுத்துக் கொண்டவர்களுக்கு நடப்பு அரசியலை அவர் விமர்சித்தபோது தாங்கமுடியாமற் போச்சு.'

'இது அவையின்ரை வேலையென்றால் ஒரு பூவோ பொட்டோ ஒரே குண்டில வேலையை வேறை மாதிரித்தான் செய்திருப்பினம்... இரண்டு மூன்று குண்டுகள் அடிபட்டிருக்கிறதைப் பார்த்தால் இது ஆமியின்ரை அல்லது 'ரோ'வின்ரை செல்லக்கொடுக்குகள்தான் பண்ணியிருக்கும்.'

'இன்னுமொரு காசி வாறார், இறந்துகிடக்கிற காசியை உற்றுப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறார்: 'காசி விடுதலை விரோதியல்ல... காலத்துக்குக் காலம் அரசு அதிகாரத்திலிருப்பவர்களின் சப்பாத்துக்களை நக்கிப் பிழைக்க வேண்டியவனுமல்ல... விடுதலைக்காகப் போராடும் மக்கள் ஆதரவு மிகுந்த ஒரு இயக்கத்தின் செயற்பாடுகளில் மனிதஉரிமை மீறப்பட்ட போது அதையே சுட்டிக்காட்டினான். கல்விமான்கள் அறிவுஜீவிகள் கலைஞர்கள் சிந்தனையாளர்கள் அதர்மங்களைப் பார்த்தும்

விமர்சனங்களற்று மௌனிகளாகத் தம்மேல் திணிக்கப்படும் எதேச்சாதிகாரத்தை எதிர்க்காது இருத்தல் அதிகாரத்துடன் இணங்கிப் போவதாகும்.'

இன்னொரு காசி வாறார், 'கருத்துக்காகக் காணாமற்போனோர் வரிசையில் காசியுமாகி விட்டானோ?' என்றார். வேறுமொரு காசி வருகிறார். வீழ்ந்து கிடக்கும் காசியை மௌனமாகச் சில நொடிகள் பார்த்துக்கொண்டு நிற்கிறார். பின் எதுவும் சொல்லாமல் அப்பாலே போகிறார். எதேச்சாதிகாரத்தின் கொடுங்கைகள் தாங்கிய சுடுகலன்கள் ஏதோவொன்றிலிருந்து காசியை இப்புவிப்பரப்பிலிருந்து அப்புறப்படுத்தப் புறப்பட்டு வந்த ஒரு குண்டு தன் காரியத்தைக் கச்சிதமாக முடித்து விட்டது. அவன் சுவாதீனமற்றவன் அல்ல மாவீரன் என்று பிரகடனப்படுத்த இங்கே துணிவுள்ளவர் யார்?'

'சமஷ்டி என்றார்கள் தலைவர்கள், ஆதரித்தோம்; மாவட்ட சபை என்றார்கள் 'சம்மதம்' என்றோம்; தமிழீழம்தான் ஒரே தீர்வென்றார்கள், 'சரி' என்றோம். அப்போதும் அனைத்து ஜனங்களைப் போலவே அவர்களை ஆரம்ப காலத்திலிருந்தே முற்றாக ஆதரித்து வந்தவன்தான் காசி.'

ஐஏ
கூனல் விழுந்த எம்
பொழுதுகளை
நிமிர்த்த வல்ல மகிழ்ச்சி
எதுவும் எவரிடமும் இல்லை
எல்லாவற்றையும் சகஜமாக்கிக் கொள்ளும்
அசாதாரண முயற்சியில்
தூங்கிக் கொண்டும்
இறந்துகொண்டும்
இருப்பவர்க்கிடையே
எனது நம்பிக்கைகளுடன்
தோற்றுக் கொண்டிருக்கிறேன் நான்

'வானக்கூரை ஒடுங்கி வந்து என்மேல் கவிந்திருப்பதைப்போல இருக்கு, மூச்சு வரமாட்டேண்ணுது; மருத்துவத் தாதிமாரின் அதட்டலும் அக்கப்பேச்சும் மருந்து நாற்றத்துக்கு மேலால கமழும் ஓயில் நாற்றமும் அட ஏதோவொரு ஆஸ்பத்தரி போலயிருக்கு.'

'ஒருநாள் பார்த்தால் காசி தோய்ஞ்சு குளிச்சு சலவை வேட்டி கட்டி மொட்டையாய் மழித்த தலையில் செழிக்கச் சந்தனம் பூசிக்கொண்டு வேறையொரு கோலத்தில வாறார்; கையில மைக்குமில்லை ஒண்டு மில்லை... இஞ்ஜின் ஓயிலின் கிருத்தியம்போல கண்கள் கோவைப்பழக் கணக்காய் சிவந்து போய்க்கிடக்கு.'

'கொண்டை இருந்தால் பூச்சூடலாம் அது பெண்டுகளுக்குத்தானே நமக்கெதற்கு?

வா... வா... வாழைப்பூ
கொண்டைக்குச் சூடலாம்
பெண்டுகளுக்கு
வாழைப்பூ!

அறிவியல் சொல்வதுபோல் பெருவெடிப்பு நிகழ்ந்தது உண்மையே யானால் சூரியனின் புத்திரர்களாகிய எம் தத்துவங்களும் செல்நெறி களுந்தான் எப்போதும் வரலாற்றைச் சீரமைக்கும். எம் கனவுகளும் உழைப்பும் மேலும் மேலும் விரிவதாக. இதைவிட நல்ல உலகம், இதைவிட விரிந்த கனவுகள், இதைவிட அதிகம் உழைப்பு, இதைவிட உயரிய சிந்தனைகள், இதைவிட ஆழங்களைத் தேடிப்போகும் தேடல், மனதில் இதைவிட வெளிச்சம் அனைவர்க்கும் கிட்டவல்ல சுகிர்தங்கள் நாம் வேண்டுவதெல்லாம் இஃதுதான்!'

ஐஐ
மனிதம்

அந்த மரம் வெகு அமைதியாக
நெடுங்காலமங்கே நின்று கொண்டிருந்தது
தளிர்த்தும் குளிர்த்தும் ஓங்கி வளர்ந்து
கனிந்து நின்றது

பின்னர் யார் யாருக்கோ
குறிவைத்த குண்டுகள்
குறிப்பில் வீசிய ஷெல்கள்
அதன் உடலைத் துளைக்கத் தொடங்கின

தினமும் காயம் பல பட்டு
வலி சுமந்ததாயினும் உயிர்
பிழைத்து நின்றது அம்மாமரம்

பின்னர் வாழ்வு என்பது தினமும்
காயம் கண்டல் நோவு
குருதி குமுறல் என்றாச்சு

பழைய ரணங்கள் ஆறமுன்னே
மீண்டும் புதிய புதிய ரணங்கள்
தலைமைக் கிளையும்
சிறு கிளைகளும் மடிந்து கருகி
பட்டுவிட மூலவேரில்
கொஞ்சம் உயிரைத்தாங்கி
நொந்து முனகிக்கொண்டே

கோமாவில் இருந்தது பலகாலம்
பின்னர் ஒருநாள் காலை
அதன் மரணம் அறிவிக்கப்பட்டது
அதன் உறவுகள் பல கோடி
அம்மாமரத்தின் பெயர்
மனிதம்.

'இப்போதெல்லாம் கோவில் மதியபூசை முடிந்து ஐயரோ கோவில் முகாமையாளரோ பிரதான கதவைப் பூட்டிவிட்டு வீட்டுக்குப் போன பின்னால் வசந்த மண்டபத்தில் ஒரு பக்கமாகத் தமது அலுப்போடும் கவலைகளுடனும் முழங்கையைத் தலைக்கணைத்துத் தூங்கிக் கொண் டிருக்கும் மேளகாரர், கோயில் சேவகம், பண்டாரம், பிச்சைக்காரர், பொழுதுபோகாத கிழடு கட்டைகளுக்கு நடுவில் காசியும் தன் துண்டை விரித்துப்படுத்திருக்கிறார். மைக் எங்கும் பூட்டுவதில்லை.'

'சுகமாயிட்டுதுபோல.'

'கதிர்காமமென்றாலும் கால் நடையாய் போற மனிஷனை அன்றைக்கு சாவகச்சேரி சுன்னாகம் 759ம் நம்பர் பஸ்ஸூக்கை பார்த்ததும் ஆச்சரிய மாய்ப்போச்சு. நவற்கிரி, தோப்பு, ஈவினை, புன்னாலைக் கட்டுகவன் தோட்டத்து வாழைக்குலைகள், வெங்காயப்பூ பிடிகளால நிரம்பின பஸ்ஸூக்க குன்னக்குடி வைத்தியநாதனை மாதிரியொரு கோமாளித் தோற்றத்திலை செழிக்க வெத்திலை போட்டு கையில துவரங்கழி யோடையிருந்த கோலத்தைப் பார்க்க கிழக்கூரிலிருந்து வாற மாட்டுப் புறோக்கரைப் போலவுமிருந்துது. சால்வை முடிச்சுக்குள்ளே இருந்த மில்க் வைற் பை நிறைய புதினப் பத்திரிகைகள்.

பஸ்ஓடும்போதும் வெளியே பார்த்துச் சிறு குழந்தையைப் போலக் குதூகலித்தார். சிலவேளைகளில் யாரும் சற்றே காதைக் கூர்மை செய்து கொண்டு கேட்டாலே புரியமளவுக்கு மெல்லிய குரலில் தன் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருக்கிற மாதிரியிருக்க அவர் பின்னாலே போய் அமர்ந்து கொண்டு காதை முன்னுக்கு எறிஞ்சன்.'

'மழை பெய்துதெண்டால் மரவள்ளிக் கிழங்கிழுக்கலாம்

'கீரைக்கறியென்றால் சூட்டோடு நாலுவாய் கூடத்தின்னலாம்.'

'ஐயா பச்சைச் சேட்டுப் போட்டிருக்கிறார். பச்சைச் சேட்டு இவரும் போடலாம் எவரும் போடலாம்.'

'கடுவனென்றால் பின்னே மைனர் சங்கிலி வேணுந்தானே?'

'நாய்க்கு எங்கங்கத்தையான் ஓய் சங்கிலி காப்பு?'

'நரைச்சாலும் மீசை விடலாம்.'

'நீர் உலக்கையாற்றான் கோமணங்கட்டுவேன்னென்கில் யாம் என் செய்கும்?'

'பார்லிமென்டில் நேத்து அமுதர் உந்த முக்கு முக்கியும், சுன்னாகச் சந்தையில இன்றைக்கு தேங்காய் விலை ஏறித்தானே போச்சு!'

கட்டை விரலை ஆட்டிச் சொன்னார், 'ஒன்றுஞ்செய்ய முடியாதோய்!'

பஸ் ஒரு தரிப்பில நிற்கவும் இறங்குபவர்களையும் ஏறுபவர்களையும் சுவாரஸ்யத்துடன் பார்த்தார்.

'ஐயாவுக்கு இன்றைக்கு எங்கேயோ சொற்பெருக்கு இருக்குப்போல'

யாரோ இவர்மீது 'கொமன்ட்' அடித்துவிட்டுப் போனதை அவர் கண்டுகொள்ளவேயில்லை.

'அதெல்லாம் எப்பவோ விட்டிட்டார்.'

'காசி சொன்னது சரி, சொன்னது பிழை'

'ஒரு காசி இருக்கிறேன்
இன்னும் சில காசிகள் வருகிறார்கள்
மேலும் காசிகள் வருகிறார்கள்
அட உலகம் முழுவதும்தான் எத்தனை காசிகள்!'

கவிதைகள்

ஐ	புதுவை இரத்தினதுரை
ஐஐ	காருண்யன்
ஐஐஐ	மார்கிரெட் வால்க்கர்
ஐஏ	சிவரமணி
ஏ	வ.ஐ.ச. ஜெயபாலன்
ஏஐ	திருமாவளவன்
ஏஐஐ	சக்கரவர்த்தி

பகுத்தறிவு பெற்ற நாள்

அந்தோணி

1

இலக்கம் 179, பிஹால் SEX SUPER MARCHE' என்ற முகவரியில் வைத்துக் கடந்த ஆறு மாதங்களாக எனக்குத் தொழில் பழக்கிய எனது முதலாளி தனக்கு உரிமையான இன்னொரு முகவரியான, இலக்கம் 50, சென்.டெனி SEX SHOPக்கு என்னைப் பணிமாற்றம் செய்தார்.

நான் முன்பு வேலை செய்த இடத்துடன் ஒப்பிடுகையில் இந்த SEX SHOP மிகவும் சிறியது. காலையில் கடையைத் திறந்து, நடாத்தி நள்ளிரவில் மூடும் வரை நான் தனி ஒருவனாகவே வேலை செய்ய வேண்டிருந்தது. சரியாக நடுச்சாமம் பன்னிரண்டு மணிக்கு முதலாளி 'கலக்ஷனு'க்கு வருவார்.

உள்ளே பலகைகளால் இணக்கப்பட்ட ஆறு கூடுகள் உள்ளன. ஒவ்வொரு கூட்டினுள்ளும் ஒரு தொலைக்காட்சி + ஒரு நாற்காலி + ஒரு ஆஷ் ட்ரே + ஒரு குப்பைக்கூடை. கூடுகளுக்கு வெளியே எனக்கொரு மேசை, மேசையில் ஒரு மட்டரகக் கணனி, என் காலுக்குக் கீழே ஆறு 'டெக்'குகள். என் தலைக்குப் பின்னாலுள்ள பெரிய கண்ணாடி அலுமாரியில் ரப்பரால் வார்க்கப்பட்ட பல அளவுகளில் உள்ள ஆண் குறிகள் + பெண்குறிகள் + முலைகள் + உதடுகள் + சவுக்குகள் + விலங்குகள் + ஆண்குறியில் மாட்டிவிடும் மென்மயிர் வளையங்கள் + பெண்குறியினுள் நுழைத்தெடுக்கும் நூலில் கோர்த்த குண்டுகள் + வீரியம் பெருகிட அருந்தும், நுகரும் மற்றும் தடவும் மருந்துகள், லேகியங்கள்.

மற்றைய மூன்று புறங்களிலும் உள்ள அலுமாரிகளில் ஆண் சமப்பாலுறவு + பெண் சமப்பாலுறவு + இருபாலுறவு + எதிர்ப்பாலுறவு + கூட்டுப்பாலுறவு + விலங்குப்பாலுறவு, இன்னும் பல வகையினங்களைச் சித்தரிக்கும் வீடியோ ஒளி நாடாக்கள் + குறுவட்டுக்கள். என் மார்பின் கீழுள்ள மேசையில் பரப்பப்பட்டிருக்கும் பிரஞ்சு + ஆங்கிலம் + இத்தாலி + டொச்சு போன்ற மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள பாலுறவு குறித்த பத்திரிகைகள் + சஞ்சிகைகள் + சிறுகதைத் தொகுப்புகள் + கவிதைகள் + குறுநாவல்கள் + நாவல்கள்.

அநேகமாக இங்கு வருபவர்கள் புத்தகங்கள் வாங்குவதில்லை. அவற்றை ஒரு வியாபார தோதுக்காகத்தான் வைத்திருக்கிறோம். இங்கு வரும் பெரும்பாலான வாடிக்கையாளர்கள் வீடியோப் படங்கள் பார்க்கவே வருகிறார்கள். அலுமாரியில் இருந்து ஏதாவது ஒரு படத்தைத் தெரிவு செய்து கூட்டுக்குள் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டு அவர்கள் பார்க்கலாம். ஒரு படம் பார்க்க பதினைந்து ஈரோக்கள் என்று நாங்கள் கொள்ளையடித்து வந்தபோதிலும் முதலாளி 'இணையத் தளங்கள் வந்த பின்பு இந்தத் தொழில் வீழ்ச்சியுற்றுவிட்டது' என்று மூக்காலே அழுகிறார்.

இந்த வீதியின் மறு அந்தலையில்தான் லா-சப்பல் உள்ளது. எனவே இந்த ஏரியாவில் ஈழத்தமிழர்களின் நடமாட்டம் அதிகம். எமது SEX SHOP நுழைவாயிலில் ஒரு முரட்டு நீலத்திரை தொங்கவிடப்பட்டுள்ளது. அவ்வப்போது தயக்கத்துடன் இத்திரையை விலக்கியவண்ணம் ஒன்றுபாதி ஈழத்தமிழர்கள் உள்ளே நுழைவதுண்டு. உள்ளேயும் ஒரு ஈழத்தமிழனைக் கண்டவுடன் அவர்களுக்கு மடம், பயிர்ப்பு முதலியவை ஏற்படுகின்றன. தமது வாய்களுக்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே அவர்கள் பின்வாங்குவது உண்டு.

ஆனால் நான் இந்தக் கடையை பொறுப்பெடுத்துக் கொண்ட ஒரு கிழமையாகவே சரியாக மாலை ஆறு மணிக்கு ஒரு ஈழத்தமிழ் இளைஞன் இங்கு வருகிறான். ஒவ்வொரு நாளும் முப்பது ஈரோக்கள் செலுத்தி இரண்டு வீடியோப்படங்கள் பார்க்கிறான். ஆள் நல்ல கறுத்த உயர்ந்த வடிவான ஆண்பிள்ளை. அவனுக்கும் என் வயதுதான் இருக்கும் - முப்பதிலிருந்து முப்பத்தைந்துக்குள் இருக்கலாம் - கிளீன் சூட் + கழுத்துப்பட்டி + கையில் ஒரு அலுவலகப் பை + கண்களில் விலை உயர்ந்த கண்ணாடி. அருகேயுள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் வரவேற்பாளனாக பணிபுரிவதாகச் சொல்லி 'விசிடிங் கார்ட்'டும் தந்தான். அவனை நான் முதன் முதலாய் SEX SHOPல் சந்திக்கையில் இலக்கண சுத்தமான ப்ரஞ்சில் 'மாலை வணக்கம், நீங்கள் ஒரு தமிழர் என்று நான் நினைப்பது சரியா?' என்று கேட்டான். நமக்கு அவ்வளவுக்கு சுத்தமாக ப்ரஞ்ச் பேச வராதாகையால் 'ஓம்' என்று தமிழில் பதில் சொன்னேன்.

அவன் நாகரிகமான பொடியன். பிறகு எக்காரணம் கொண்டும் அவன் ப்ரஞ்சில் பேசி எனக்கு இன்றுவரை துன்பம் தந்ததில்லை. தமிழிலேயே பேசினான்.

'அண்ணே தமிழ் பொட்டையள் நடிச்ச படம் உங்களட்ட கிடக்கோ?'

'இல்லை'

'இல்ல, அண்ணே கனடாவில எங்கிட பொட்டையள் ஒரு ஃபுளு பிலிம் நடிச்சிருக்காம்; உங்களுக்கு அந்தக் கொப்பி வரயில்லையோ?'

எனக்கு கோபத்தில் அடி முடியெல்லாம் பற்றி விட்டது. 'அவற்ற ஷேப்புக்கு தமிழ்ப் பொட்டையள் நடிச்ச கொப்பி பார்க்க திரியிறார்' என்று

மனதுக்குள் கொதித்துப் போனேன். அடுத்த செக்கனே 'அட வெள்ளை, ஆபிரிக்கன், சீனா, ஜப்பான், ரஷ்யா, கியூபா, அமெரிக்கா எல்லாப் பொட்டை பொடியளின்ர படமும் வைச்சு விக்கிறன். தமிழ்ப் பொட்டையளைக் கேட்டா மட்டும் எனக்கு கோவம் வாறது சரியோ?' என்று என்னை நானே கேட்டு வெட்கப்பட்டேன்.

அவன் இப்போதெல்லாம் படங்கள் பார்த்து முடிந்தவுடன் போய் விடுவதில்லை. என்னோடு பேசிக் கொண்டிருப்பான். பலதும் பத்தும் பேசுவோம். ஆனால் ஆள் கடும் அறிவாளி. ஒரு முறை கதையோடு கதையாக 'நாட்டுப் பிரச்சினை என்ன மாதிரி முடியும்?' எனக் கேட்டு விட்டு ஒரு சிகரட் பற்ற வைத்தேன். எனக்கும் பொழுது போகத்தானே வேண்டும்.

அவன் சிகரட் புகைப்பதில்லை. 'அது பாருங்கோ அண்ண, செப்டம்பர் பதினொண்டுக்குப் பிறகு ஒரு பெரிய மாற்றம். அமெரிக்கன் ஆப்கனில செய்த சண்டை ஒரு விசயமே இல்ல. ஆனால் அவன் உலகம் முழுவதும் ஒரு மீடியா போர் நடத்தியிருக்கிறான். தீவிரவாதம், பயங்கரவாதம் எண்டு உலக அளவில சனங்களப் பயப்பிடுத்தி வைச்சிருக்கிறான். இப்ப பாருங்கோ பிலிப்பைன்ஸில கொண்டு போய் அமெரிக்கன் தன்ர ஆமியை இறக்கியிருக்கிறான். இலங்கையில பேச்சுவார்த்தை குழம்பிச்சுதோ உலக ஆதரவோட அங்கேயும் போவான். ரைகர்ஸ் ஒரு லொக்குக்குள்ள மாட்டுப்பட்டிருக்கினம். பேச்சு வார்த்தைய ஆர் குழப்பினாலும் பழி புலிக்குத்தான் வரும். ஏனெண்டால் நோர்வே என்ன தீர்ப்பு சொல்லுதோ அதுதான் உலகத்தின்ர கவனத்தில எடுபடும். நோர்வே எப்பயும் அரசாங்கத்துக்கு சப்போர்ட்டாய்தானே வேலை செய்யும். அதால புலிகள் சண்டைய தொடக்க ஏலாது. குடுக்கிறதை வாங்கத்தான் வேணும். ஆனால் பாருங்கோ, இது ஒரு பொது அபிப்பிராயம். பொது அபிப்பிராயம், அரசியல் அவதானியளின்ர கருத்து, பேப்பருகளின்ர கருத்து எண்டு நாங்கள் எதை நினைக்கிறமோ அதுக்கு தலைகீழா நடந்துதான் இதுவரை புலிகளுக்குப் பழக்கம்.'

அவன் சொன்ன கடைசி வரி என் 'நெஞ்சைத் தொட்டுட்டுது'.

நாளாக நாளாக எனக்கு அவன் மேலான அக்கறை அதிகமாயிற்று. மனத்திலோ, நடத்தையிலோ, பேச்சிலோ அவன் மாசு மறுவற்றவனாகவே எனக்குத் தெரிந்தான். நீலப்படம் பார்ப்பதும் ஒரு சாவான பாவமில்லைத் தானே? ஆனால் இவன் தொடர்ந்து பார்க்கிறான். வாழ்வதே நீலப்படம் பார்க்கத்தான் என்ற தொனியில் பேசுகிறான். தொடர்ந்து, ஆவேசமாய், அம்புலோதியாய் நீலப்படங்கள் பார்ப்பது ஒரு மனநோய் என்று படித்திருக்கிறேன். எப்படியாவது இந்தத் தோழனை இந்த மனநோயிலிருந்து மீட்டுவிட வேண்டும் எனத் தீர்மானித்தேன். மெல்லப் பேசி அவனை இணங்கப் பண்ணி ஒரு மனநோய் மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும் என முற்றெடுத்தேன். அது குறித்தே எப்போதும் சிந்தித்தேன்.

பேச்சைத் தொடங்குவதற்கு ஒரு பொன் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன். இப்போது புதிய நீலப்படங்கள் எமது கடைக்கு வருவதில்லை எனப் பொய் சொன்னேன். அந்த மனநோயின் பெயர் மட்டும் தொண்டைக்குள் இருக்கிறது; வாயில் வரமாட்டேன் என்கிறது. அந்த நோயின் பெயரை ஞாபகம் கொள்ளச் சிரமப்படலானேன்.

ஆனால் அந்தப் பெயர் அவன் வாயில் சர்வசாதாரணமாக வந்தது. அவனே ஒருநாள் என்னிடம் தனக்கு மனநோய் உள்ளதாக வலியக் கூறினான். பிள்ளைப் பருவத்தில் பாலியல் உறவுகளைக் காண நேர்ந்தால் அது வரும் என்றான். அந்த நோய்க்கு ப்ரஞ்சில் 'பிரிமீயர் ஸீன்' எனப் பெயர் என்றான். தனக்கு அந்த நோய் தாக்கிய பருவத்தை அவன் கீழ்க்கண்டவாறு விபரித்துச் சென்றான்.

2

யாழ்ப்பாண லைபிரரி எரிக்கயிக்க நாங்கள் ரவுணிலதான் குடியிருந்தம். அப்பா படிப்பிச்ச பள்ளியிலதான் நானும் படிச்சுக் கொண்டிருந்தன். ரவுண் முழுக்க எரியுது. ஒருத்தரும் வெளியில நடமாட ஏலாது. ரோட்டு முழுக்கப் பொலிசும் ஆமியும். பின்ன நானும் அப்பாவும் வீட்டுக்குள்ளேயே கிடந்தம்.

அப்பா வலு ஸ்மார்ட்டான ஆம்பிளை. நான் பிறந்து ஆறு மாசத்திலேயே அம்மா மோசம் போயிட்டாவாம். அப்பவெல்லாம் நிமோனியாக் காய்ச்சல் எண்ட ஒரு வருத்தம் இருந்ததாம். இப்ப சயன்ஸ் அதை முடிச்சுப்போட்டுது.

ஆக்கள் நடமாட ஏலாத அந்த ராவுகளிலேயும் சில பொடியள் மதிலேறிப் பாய்ஞ்சு வந்து அப்பாவோட கதைச்சு டிஸ்கஸ்பண்ணிக் கொண்டிருப்பினம். அவையள் இயக்கப் பொடியள். அப்பா ஒரு கொம்யூனிஸ்ட் போக்கு. கடவுள் நம்பிக்கை ஒண்டும் கிடையாது. அவற்ற இளம் வயசில யாழ்ப்பாண அளவில பெரிய விளையாட்டு வீரன்; சம்பியன்.

அப்பிடி ஒருநாள் வந்த ஒரு இயக்கப் பொடியன் என்ர கையைப் பிடிச்சுக் கொண்டு 'கூட்டாளி எத்தினையாம் வகுப்பு படிக்கிறீங்கள்?' எண்டு கேட்டார். நான் டபுள் புரமோஷனில அப்ப ஏழாம் வகுப்பு படிச்சுக் கொண்டிருந்தனான். கேட்டுப் போட்டு அந்தப் பொடியன் 'பயப்பிடாதேயுங்கோ கூட்டாளி ஓ.எல்.சோதனை தமிழீழத்திலதான் எழுதுவீங்கள்' எண்டார்.

திடீரெண்டு அப்பாவுக்கு தூர இடத்துக்கு ட்ரான்ஸ்பர் வந்துது. அப்பா கவலைப்படயில்ல. ஆனால் தன்ர அரசியல் போக்கு பிடிக்காமல்தான் மாத்திப் போட்டினம் எண்டு இரவில வந்த இயக்கப் பொடியளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்பாவும் நானும் பொட்டி, சாமான், புத்தகங்களைக் கட்டிக் கொண்டு வெளிக்கிட்டம். அந்தத் தீவுக்கு வள்ளத்திலதான் போக வேணும். தீவு முழுக்கப் பனையும் வெய்யிலும் புழுதியும். அங்க ஒரு வித்தியாலயம். அதில பத்தாம் வகுப்பு வரைதான் இருக்கு. பின்ன பதினோராம் வகுப்பு படிக்க நான் எங்க போறது எண்டு அப்பாவிட்டக் கேட்டன். அப்பா ஒண்டும் பறையாமல் முதுகில தட்டிப்போட்டு சிரிச்சார்.

ஏழாம் வகுப்பில என்னோட சேர்த்து ஏழு பேர். இப்பிடியே ஒரு இறங்கு வரிசையில போய் பத்தாம் வகுப்பில மூண்டு பேர் மட்டும் படிச்சினம். அதில ஒருத்தி பொட்டை. அவவின்ர பெயர் சின்னக்கிளி. அதுக்குப் பிறகு வாறன்.

அந்தப் பள்ளிக்கூடம் கட்டின முப்பது வருசத்தில அந்த பள்ளிக் கூடத்துக்கு வந்த முதல் இங்கிலிஸ் மாஸ்டர் அப்பாதானாம். இன்னுமொண்டு, அந்த முப்பது வருசத்திலும் ஒருத்தர்கூட பத்தாம் வகுப்பு பப்ளிக் எக்ஸாமில பாஸ் பண்ணயில்லயாம். சின்னக்கிளி பெயில் விட்டு மூண்டாம் தரம் பத்தாம் வகுப்பு படிக்கிறா. அதுக்குப் பிறகு வாறன்.

அந்தத் தீவில எண்ணி இருபது கல் வீடு. மற்றதெல்லாம் ஓலைக் கொட்டில்கள். அதுல ஒரு சின்னக் கல் வீட்டில நாங்கள் தங்கினம். ஒரு அறை, ஒரு விறாந்தை, ஒரு குசினி அவ்வளவும்தான் வீடு. முன்னுக்கு பின்னுக்கு, அறைக்கு எதுக்கும் கதவு இல்லை. ஒரு ஓலைப் பாய் கட்டித் தொங்கும் அவ்வளவுதான். வீடு பனங்காட்டுக்குள்ள தட்டத் தனியனா நிண்டுது. அயலாட்டத்தில பெரிய சனப்புழக்கமும் இல்ல.

அப்பா போற எல்லாப் பள்ளிக் கூடத்திலயும் நடக்கிற மாதிரித்தான் இந்தப் பள்ளிக்கூடத்திலும் அப்பா வந்தவுடன பள்ளிக்கூடம் ஒரு ஓடருக்கு வந்துது. தலைமை வாத்தியாரோட கதைச்சு அப்பா கனக்க மாற்றங்களைச் செய்தேர். தன்ர காசிலேயே ரவுணுக்குப் போய் அப்பா பந்து சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்து பிள்ளையளுக்குக் குடுத்தேர்.

அப்பா ஸ்போர்ட்ஸிலும் கெட்டிக்காரர் எண்டு சொன்னான். பின்னேரங்களில பிள்ளையளுக்கு விளையாட்டும் பழக்கினேர். அந்த வருசம் தீவுப்பகுதி பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டியள் நடந்துது. அப்பாதான் முன்னிண்டு நடத்தினார். சின்னக்கிளிதான் சம்பியன்.

சின்னக்கிளி நெடுநெடுவெண்டு வளர்ந்த பொட்டை. அவவின்ர கால் ரெண்டும் ஒரு குதிரையின்ர கால் மாதிரி. மெல்லிய பொட்டை. ஆனால் உரமான பொட்டை. அவ காத்தைக் கிழிச்சு விளையாட்டுப் போட்டியில ஓடினதப் பார்த்துக் கொண்டு நிண்ட ஒரு மாஸ்டர் 'பனங்கொட்டையை சூப்பிப்போட்டு இந்தப் பொட்டை என்ன உசாரா ஓடுது பார்' எண்டு வாயில கை வைச்சார். அப்பா அந்த மாஸ்டரை முறைச்சுப் பார்த்தேர்.

இதுக்குப் பிறகு அப்பா சின்னக்கிளியில தனிக்கவனம் எடுத்தார். அவவ ஓல் சிலோன் அளவில பெரிய விளையாட்டுக்காரியா ஆக்கிக் காட்டுவன் எண்டார். காலம்பிற எழும்பின உடன நானும் அப்பாவும் கடக்கரைக்குப் போவம். அங்க அப்பா சின்னக்கிளிக்கு விளையாட்டுப் பயிற்சி குடுப்பார். ஒரு எட்டு மணியளவில பயிற்சி முடிஞ்சு நாங்கள் வீட்ட திரும்பி வரயிக்க கடற்கரையில மீனும் வாங்கிக் கொண்டு திரும்பி வருவம். 'மாஸ்டருக்கு நல்லதாப் போடு' எண்டு சனங்கள் நான் நீ எண்டு அடிபட்டு அப்பாவுக்கு மீன் குடுப்பினம்.

பிறகு பின்னேர நேரங்களில் இங்கிலிஸ் படிக்கிறதுக்காக சின்னக்கிளி எங்கிட வீட்டை வரத்தொடங்கினா. ஆனால் எனக்குத் தெரிஞ்ச அளவு இங்கிலிஸ் கூட பத்தாம் வகுப்பு படிக்கிற அவவுக்கு தெரியேல்ல. என்னோட இருந்து படிக்க கஸ்ட்டப்பட்டா. பிறகு அவ தனியாத்தான் அப்பாவிட்ட இங்கிலிஸ் படிச்சா.

அந்தச் சித்திரை லீவில எனக்கு சின்னமுத்து வருத்தம் வந்தது. கை, கால், முதுகு, வயிறு எல்லாம் பொக்களமும் எரிவும் தாங்க ஏலாத அரியண்டம். விறாந்தையில பாய் விரிச்சு வேப்பம் இலையில என்னைச் சின்னக்கிளி வளர்த்தினா. அப்பா, ஆஸ்பத்திரிக்கு என்னை கூட்டிக் கொண்டு போகலாம் எண்டு சொன்னேர். சின்னக்கிளியோ இது அம்மாள் வருத்தம், இதுக்கு வேற பத்தியம் எண்டா; அப்பாவும் ஒத்துக்கொண்டேர்.

மச்சமில்லாத சோறும் பனங்கட்டியும் பழங்களும்தான் எனக்குச் சாப்பாடு. சொறிஞ்சு கொண்டு பாயிலேயே கிடந்தனன். இந்த வருத்தத்துக்கு தனிப்பனைக் கள்ளுங் கொஞ்சம் காலையில குடிக்க வேணுமாம். காலம்பிற ஏழு மணிக்கு கிட்டயா சீவி முடிச்ச கையோடை சின்னக் கிளியின்ர தேப்பன் அரைப் போத்தில் கள்ளு எங்கிட வீட்ட கொண்டு வந்து தந்தார். அப்பா காசு குடுத்தும் சின்னக்கிளியின்ர தேப்பன் அதை வாங்கயில்ல.

எனக்கு அம்மா இருந்தா எப்பிடியோ அப்பிடித்தான் என்னை சின்னக்கிளி பராமரிச்சா. இப்ப இடக்கிடை அப்பாவுக்கும் சின்னக் கிளிக்கும் காரணமில்லாமல் சந்தோசமும் சண்டையும் சிரிப்பும் கனைப்பும் வந்து போறதைக் கவனிச்சன். ரெண்டு பேரும் ஒரு வாத்தியார் மாணவி மாதிரி இல்ல.

ஒரு பின்னேரத்தில நான் நித்திரையால முழிச்சுப் பார்க்கயிக்க உள் அறைக்குள்ள இரண்டு பேர் இரகசியமாய் கதைக்கிற மாதிரிக் கேட்டுது. உள் மனம் ஏதோ சொல்ல நானும் மெள்ளமாய் நடந்து போய் அறைவாசலில தொங்கின ஓலைப் பாயை நீக்கிப் பார்த்தனான். உள்ள அப்பாவும் சின்னக்கிளியும் செக்ஸ் செய்து கொண்டிருக்கினம்.

பேசாமல் பறையாமல் திரும்பி வந்து பாயில படுத்திற்றன். காதை சுவருக்கு உத்துக் குடுத்தன். 'என்ர ராசாத்தி, என்ர குஞ்சு, என்ர அப்பன்,

என்ர தாயே, உன்னைப் பார்க்கயிக்க எனக்கு என்னை அந்தரிக்க விட்டிட்டு செத்துப் போனவளின்ர ஞாபகம்தான் வருகுது மாதாவே' எண்டு ஒரே காதல் வசனம். ரெண்டு கையாலும் காதைப் பொத்திக் கொண்டன். மண்டை முழுதும் சின்னக்கிளியின்ர அகட்டித் தூக்கின குதிரைக் காலும் சாய்ஞ்சு போய் கண்ண மூடிக் கிடக்கிற அவவின்ர செம்பட்டைத் தலையுமே வந்து நிண்டுது.

3

அத்தோடு அவன் கதையை முடித்து விரல்களைக் கோர்த்து நெட்டி முறித்தான். எனக்கென்னவோ இது ஒரு காரணம் மட்டுமே அவனை மனநோயாளியாக்கியிருக்க போதுமானதாகப்படவில்லை. மிகுந்த தயக்கத்துடன் அவனைப் பார்த்து, 'நீங்கள் பிறகும் பிறகும் அவையள் செக்ஸ் செய்ததைக் கண்டனீங்களோ?' என்று கேட்டேன்.

'ஓம் பிறகும் கண்டனான். பெரிய மானக்கேடு, அவையள் புருசன் பொஞ்சாதி மாதிரி லவ் வசனம் பேசுறதென்ன, கண்ணை, மூக்கை வெட்டுறதென்ன. அவையள் ரெண்டு பேரும் என்னையொரு ஆக விபரம் விளங்காத குழந்தைப் பிள்ளையாத்தான் நினைச்சுக் கொண்டிருந்தினம் எண்டு நினைக்கிறேன். ஒருநாள் அதுக்கும் ஒரு முடிவு வந்துது.

பள்ளிக்கூடத்திலேயே பொடியள் சின்னக்கிளி போக வரயிக்க அவவை எனக்குக் காட்டி உன்ரை சித்தி எண்டாங்கள். எனக்கு அதையும் தாங்கக் கூடியதாய் இருந்துது. ஆனால் சின்னக்கிளி என்னோட வந்து செல்லம் பொழியிறதையும் என்னில ஒரு கவனம் காட்டுற மாதிரி நடந்து கொள்ளுறதையும்தான் என்னால பொறுக்க ஏலாமலுக்குக் கிடந்துது.

ஒருநாள் பின்னேரம் வழமையா எங்கிட வீட்ட வாற நேரத்துக்கு சின்னக்கிளி வரயில்ல. அப்பர் அவதிப்பட்டு முத்தத்தில வந்து நிண்டு அங்கேயும் இங்கேயுமாய்ப் பார்க்கிறார். பிறகு கதிரையில வந்திருந்து இங்கிலிஸ் புத்தகம் படிக்கிறார். அவராल ஒரு செக்கன் தன்னும் கதிரையில இருக்க ஏலாமல் கிடக்கு. திரும்பவும் வந்து நிண்டு பார்க்கிறேர், சின்னக்கிளி வரயில்ல. மெள்ள என்னட்ட வந்து 'அப்பு, உனக்கு சின்னக்கிளியின்ர வீடு தெரியுமெல்லோ?' எண்டு கேட்டேர்.

'ஓம் தெரியும்; பனங்கட்டித் தொழிற்சாலைக்குப் பக்கத்தில' எண்டன்.

'அவவை இன்னும் காணயில்ல. ஒருக்காப் போய் பார்த்துக் கொண்டு வாறியா நல்ல பிள்ளை?' எண்டு அப்பர் கேட்டார்.

எனக்கு எப்பிடித்தான் அப்பிடியொரு ஆவேசம் வந்ததெண்டு இப்ப நினைச்சாலும் பெரிய அதிசயமாய்க் கிடக்கு. 'அவள் ஏன் இஞ்சை நெடுக வரூறாள்?' எண்டு அப்பாவின்ர மூஞ்சியைப் பார்த்து நேருக்கு நேராய்க் கேட்டன்.

அப்பா திகைச்சுப் போனார். நான் அவள் எண்டு உச்சரிக்கயிக்க என்ர மேல் வாய்ப் பல்லும் கீழ் வாய்ப் பல்லும் உரஞ்சி நெறுமிச்சுது.

அப்பா மெல்லமாய் ஆனால் ஆத்திரமாய் என்னைப் பார்த்து 'சின்னக்கிளி இங்கிலிஸ் படிக்கத்தான் வாறவ' எண்டார்.

'ஏன் தமிழீழம் கிடைச்சால் இங்கிலிசீலதான் கள்ளு விக்க வேணுமோ?' எண்டு எங்கேயோ பார்த்துக் கொண்டு கேட்டன். அப்பா ஒண்டும் பறைய இல்ல. பேசாமல் அறைக்குள்ள போயிற்றார்.

ஒரு பத்து நிமிசம் செண்டிருக்கும். சின்னக்கிளி வந்தா. அப்பா அவவை வாசலிலேயே நிப்பாட்டி 'சின்னக்கிளி, என்ர பிள்ளைக்கும் நல்லது கெட்டது தெரியிற வயசு வந்திற்று. இனி, நீ இஞ்ச வரவேண்டாம்' எண்டார்.

4

நான் அவனைப் பார்த்து 'சரி போதும் கதையை நிப்பாட்டும்' என்றேன். புதிய புதிய நீலப்படங்களாய்த் தருவித்து, முடியுமென்றால் அந்தக் கனடாப் பொட்டைகளின் படத்தையும் எடுத்து அவனுக்குப் போட்டுக் காட்டி அவனை மீள முடியாத மனநோயில் தள்ளி விடுவது என்று தீர்மானித்தேன். அது குறித்த ஆயத்தங்களில் ஈடுபட்டேன்.

திலகா என்னும் மனுஷியைத் தேடி

சி. புஸ்பராஜா

அது விடியற்காலையாக இருக்க வேண்டும். இராணுவம் நான் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டுக் கொண்டது. தப்புவதற்கு வழியில்லை. உயிர் கலங்கி நின்றேன். தற்கொலை செய்து கொள்ளவும் வழியில்லை. கதவைப் பலமாகத் தட்டினார்கள். நான் திறக்கவில்லை. ஏ.கேவை கையில் எடுத்து ஓட்டோவில் விட்டுக் கொண்டேன். கிரனைற் ஒன்றையும் எடுத்து கிளிப்பை உடைக்க வாயில் கொண்டுபோனேன். இப்போ கதவு இன்னும் பலமாகத் தட்டப்பட்டது... திடுக்கிட்டு எழுந்தேன்.

உண்மையாகவே யாரோ கதவைத் தட்டிக் கொண்டிருந்தார்கள். நித்திரைத் தூக்கம் - இரவெல்லாம் குடித்த விஸ்க்கியின் மயக்கம் எழுந்திருக்க முடியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாகக் கதவைத் தட்டும் வேகமும் சத்தமும் கூடியது. கட்டிலையிட்டு எழுந்த வேகத்தில் தடக்கி விழுந்து விட்டேன். வெறி இன்னமும் முறியவில்லை. சுவரெல்லாம் தடவி லைட்டைப் போட்டு கதவைத் திறந்தேன்.

தூக்கம் தெளியவில்லை. யாரோ பெண் நிற்பதுபோல் தெரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டேன். 'திலகா... இந்த நேரத்தில் எங்கையடி வந்தனி..?'

என்னைத் தள்ளி விட்டுக் கொண்டு உள்ளே போய் பொதார் என எனது படுக்கையில் விழுந்தாள்.

'எடியே அது என்ரை படுக்கை நீ மற்றதிலை படு' நான் வாய் மூடவில்லை.

'எங்கே படுத்தால் என்னடா, நீ போய் மற்றதிலை படு.'

நேரத்தைப் பார்த்தேன்; அதிகாலை 5 மணி; 'எடியே என்னத்திலை வந்தனி?'

'என்னைத் தூங்க விடடா; காலையிலை கதைக்கலாம்' திரும்பி குப்புறப்படுத்துக் கொண்டாள். போர்வையை இழுத்துப் போர்த்தி விட்டேன். எனக்குத் தூக்கமே வரவில்லை. காலையாகி விட்டது என்பது

காரணமாக இருக்கலாம். திலகா தூங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒரு காலத்தில் உயிர்க்குலை பதற எத்தனை பேர் இவளைக் கண்டு பயந்திருப்பார்கள். எத்தனை நூறு பேர் இவள் காலால் உதை பட்டிருப்பார்கள். இவளின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான அரச படையினர் - மாற்று இயக்கத்தவர்கள் எத்தனை பேர்... நினைத்துப் பார்த்தேன்.

ஜீப்பிலிருந்து இவள் பாயும் வேகத்தில் இவளது சப்பாத்துக் கால்கள் நிலத்தில் பட்டுப் புழுதி பறக்கும். வாய் திறந்து கட்டளை இடத் தொடங்கினாள் என்றால் மரங்களில் இருக்கும் பறவைகள் கெலிச்சுப் போய் அங்கும் இங்கும் பறக்கும். ஜீப் என்றால் என்ன, மோட்டார் சைக்கிள் என்றால் என்ன தானே ஓட்டி வருவாள். இடுப்பில் எப்பவும் 9 எம்.எம் பிஸ்டல் செருகி, முழுக்கை சட்டையினை முழங்கைப் பகுதி வரை மடித்துவிட்டு, குறுக வெட்டிய தலை மயிருடன் அவள் வரும்பொழுது அவளது படையணி மட்டுமல்ல, நாங்களும்தான் பதறிப்போவோம்.

திலகாவும் நானும் ஒரே இயக்கத்திலிருந்தாலும் அவள் என்னைவிட rankல் உயர்ந்தவள். அவள் என்ன செய்தாலும், என்ன தீர்மானம் எடுத்தாலும் அடுத்த கேள்வி இல்லை. அவள் சம்பந்தப்பட்ட விடயத்தில் தலைவரே தலையிட மாட்டார். அவளது தேசப்பற்று, இயக்கப்பற்று, அதற்கான நேர்மை, அதற்கான தியாகப் போக்கு போன்றவைகளில் அவள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவள்.

திலகாவை உற்றுப் பார்த்தேன். நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு நான் வந்தால்தான் கொஞ்சம் மகிழ்ச்சி, கொஞ்சம் அமைதி. முகத்தை சாதுவாக அலம்பிவிட்டு தேனீர் போடத் தொடங்கினேன்.

'டேய் என்ன செய்கிறாய்?' படுக்கையிலிருந்தே கேட்டாள். சொன்னேன். தனக்கும் தரும்படிக் கேட்டாள்.

தேனீர் குடித்துக் கொண்டிருக்கும் அவளது முகத்தைப் பார்த்தேன். என்னமா மாறிவிட்டாள்? இவளா அவள், அவள் இப்படி என்னுடன் சமமாக இருக்கக்கூடிய தரத்திலா இயக்கத்தில் இருந்தாள்? மனதுக்குள் பழைய நினைவுகள் ரணமாக வலித்தது.

'என்னடா அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்' சாந்தமாக சிரித்தபடி கேட்டாள்.

ஒன்றும் இல்லை என்பதுபோல் தலையை ஆட்டினேன். சாதாரணமாக ஒரு அணிக்குப் பொறுப்பாளராகத்தான் இருந்தாள். ஒரு இராணுவ முகாம் தாக்குதலில் அவள் புகுந்து விளையாடி இயக்கத்தின் முக்கிய நிலைக்கு உயர்த்தப்பட்டாள். எந்தவிதமான மோதல் என்றாலும் பின் நிற்க மாட்டாள். எதிரிப் படையணியினருடனான நேர் மோதல்களில் உயிர்

என்ன மசிர் என்பதுபோல் முன்னின்று தாக்குவாள். அவளுக்குத் திட்டமிடல் சம்பந்தமான ஆலோசனைகள் தேவையில்லை என்பது போல் தானே திட்டமிட்டு தானே படையணி நடாத்துவாள்.

இயக்கத்துக்குள் தவறு விடுபவர்களை இழுத்து வந்து உதைத்து ஈன இரக்கமில்லாது அவள் தண்டிக்கும்பொழுது பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கே உயிர் நடுங்கும்.

இராணுவ அணியொன்றை அவளது அணி சுற்றி வளைத்து தாக்கியழித்து மிஞ்சியவர்களைக் கைது செய்தபோது நீண்ட காலமாக மக்களை அச்சுறுத்தி வந்த ஒரு அதிகாரி அதில் இருப்பதை அடையாளம் கண்டு கொண்டாள். அவனால் விசாரணைக்கு எனக்கொண்டு செல்லப் பட்டு சித்திரவதை செய்யப்பட்ட ஆண்களைவிட பாலியல் வன்முறைக்குப் பலியான பெண்களே அதிகம். அவனை இழுத்து வந்த திலகா அந்த இடத்தில் வைத்தே தனது பிஸ்ட்டலின் குண்டுகள் ஏறக்குறைய தீரும்வரை அவனது பிறப்புறுப்பில் சுட்டு, அவன் துடித்து இறப்பதை மனமகிழ்வுடன் பார்த்து நின்றவள்.

'நான் வந்தது உனக்கு எப்படித் தெரியும்'

'அதுதான் நீ இங்கு வந்தால் உனக்கு கார் ஓட்டுவானே, அவன் பெயரென்ன? காளியா? அவன்தான் சொன்னான்.'

'அதுக்கு ஏன் விடியக்காத்தாலை வந்து பொலிஸ் மாதிரி கதவைத் தட்டினனி'

'நீ எங்காவது போய்விடுவாய் பேந்து ஆறுதலாய்த்தானே என்னை வந்து சந்திப்பாய்; அதுதான் வேளைக்கு வந்தனான்.' தான் ஏதாவது தப்புப் பண்ணி விட்டேனோ என்பது போல் பார்த்தாள்.

'எடி விசரி, நீ எப்பவும் வரலாம் எப்பவும் எனது கதவைத் தட்டலாம். ஆனால் விடியக்காத்தாலை வந்தது உனக்கு கரச்சலா இருக்குமோ எண்டு பார்த்தனான்.'

'சரி உன்ரை புரோகிராமைச் சொல்லு.' சொன்னேன்; தலையாட்டிக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தாள்.

நாங்களும் எங்களைப் போன்றவர்களும் இயக்கத்தில் விசுவாசமாகவும், விடுதலைப் போராட்டத்தில் உறுதியுடனும் இருந்தோம். இயக்கத்துக்குள்ளேயே சிறியதொரு பிளவு தோன்றியதை சில காலமாக அறியாமலிருந்தோம். அது பெரிதாகி குழுக் குழுவாகி இயக்கத்துக்குள்ளேயே கொலைகள் நடந்தபொழுதுதான் திலகா, நான் போன்றவர்கள் திகைத்து - விழித்துக் கொண்டோம்.

நாங்கள் எந்தக் குழுவிலும் இல்லாமல் இருந்தது ஆபத்தில்லை என நான் நினைத்திருந்தேன். ஆனால் நாங்கள் எந்தக் குழுவிலும் இல்லாமல் இருந்ததே இன்னும் ஆபத்தாகியது. ஒரு குழு நினைத்தது நாங்கள் மறு

குழுவென, மறு குழு நினைத்தது நாங்கள் தங்களுக்கு எதிரான குழுவில் என. ஆபத்து நெருங்குவதை உணர்ந்து கொண்டோம். நாங்கள் சுமார் முப்பது பேர் இயக்கத்தை விட்டுத் தப்பி வெளியேறினோம். ஆனாலும் எங்களில் சிலர் இரு குழுக்களுக்கும் பலியானார்கள். எஞ்சியவர்கள் நாட்டிலிருப்பதன் ஆபத்தை உணர்ந்து இந்தியாவுக்கு ஓடினோம். நாள் போக்கில் ஏற்பட்ட கூர்மையான கருத்து முரண்பாடு, மற்றவர்களின் உதவியின்மை, பண நெருக்கடி... எங்களால் நீண்ட காலம் ஒன்றாக இருக்க முடியாமல் போனது.

இயக்கத்தை விட்டு ஓடி வந்தமை, விரக்தி, ஒன்றாக இருந்த நெருக்கம் இவைகளால் எங்களில் ஒருவனுக்கும் திலகாவுக்கும் காதல் ஏற்பட்டது. இழுத்தடிக்காமல் பதிவுத் திருமணம் செய்து வைத்தோம். எண்ணி ஆறு மாதமிருக்காது, இந்தியாவுக்குள் வைத்து திலகாவின் கணவன் முன்னாள் தோழர்களால் கொன்று எறியப்பட்டான். திலகா துடித்துப் போய் விட்டாள். திலகாவின் மறுபக்கத்தை அன்றுதான் முதலில் பார்த்தேன் - கல்லுக்குள் ஈரம்.

எங்களை நாங்களே தேற்றி, எங்கள் துயரங்களை மறந்தபோது நானும் திலகாவும்தான் மிஞ்சினோம். சிலர் கொலை செய்யப்பட்டும், சிலர் எங்களுக்கே தெரியாமல் மறைந்தோடியும், சிலர் வெளிநாடுகளுக்குப் போயும் எங்களைத் தவிக்க விட்டார்கள். நாங்கள் இயக்கத்தில் இருந்த காலத்தில் எங்களை மதிக்காதவர்கள், எங்களைக் கண்டு பயந்தவர்கள், எங்களுக்கு இருப்பிடம் தந்தவர்கள், எங்களுக்கு உண்டி தந்தவர்கள் யாருமே இப்போ எங்களைக் கண்டு கொள்வதும் இல்லை, கணக் கெடுப்பதுவுமில்லை.

திலகாவுக்கு வேறு துணையில்லை; வேறு ஆறுதல் இல்லை. பூனைக்குட்டி காவியது போல் நான் போகுமிடமெல்லாம் அவளை அழைத்துச் செல்ல வேண்டியதாயிற்று. நீண்ட கால யோசனைக்குப் பிறகு கனடாவிலிருந்த எனது அண்ணனுக்குக் கடிதம் போட்டு என்னை அங்கு அழைக்க வேண்டினேன். மின்னல் வேகத்தில் காரியம் நடந்தது. எங்களிடமிருந்த பணத்தையும் அண்ணனிடமிருந்து பயணச் செலவுக் கென வந்ததில் மிஞ்சியதையும் சேர்த்தபொழுது திலகா கையில் சிறிய தொரு தொகை தேறியது. அவளைச் சென்னை மகாலிங்கபுரத்திலுள்ள பாதுகாப்பான பெண்கள் விடுதி ஒன்றில் சேர்த்து விட்டேன். மூன்று நேர உணவுடன் மாதம் ஆயிரம் ரூபாய்கள். திலகாவின் கண்ணீரில் மிதந்து கனடாவுக்கு விமானம் ஏறினேன். கனடாவிலிருந்தாலும் திலகாவின் பாது காவலன் நானே. எனது உழைப்பில் அவளுக்கான செலவை அனுப்பிய பின்பே நான் மற்றைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வேன்.

இப்படியே இரண்டாண்டுகள் ஓடிய பின் 'தான் ஒருவரை விரும்பு வதாகவும், உடனே வந்து பார்க்கும்படியும், எனது சம்மதத்துடனேயே எதையும் செய்வேன்' என எழுதியிருந்தாள். எனக்கு மனதில் மகிழ்ச்சியும்

திருப்தியும் ஏற்பட்டது. அவளுக்கு அவள் விரும்பிய வாழ்க்கை கிடைப்பதில் என்னைவிட இந்த உலகத்தில் சந்தோசப்பட யார் இருக்கிறார்கள்?

திருமணம் மிகவும் சாதாரணமாகவும் குறிப்பிட்ட நண்பர்களுக்கு விருந்து எனவும் நடந்து, நான் கனடாவுக்கு விமானம் ஏறினேன். சில மாதங்கள்தான் ஓடியிருக்கும் 'ஏன் எதற்கு என்று கேட்காமல் உடனே புறப்பட்டு வா' மீண்டும் கடிதம். புறப்பட்ட வேகத்தில் சென்னையில் நின்றேன். அவளின் வீட்டுக்குப் போனேன். என்னைக் கண்டவுடன் ஓவென்று கதறினாள். பிரமை பிடித்ததுபோல் சாமான்களை எறிந்து, போத்தல்களை உடைத்தாள்; தடுத்துப் பார்த்தேன், அடங்குவதாகத் தெரியவில்லை. கன்னத்தில் இரண்டு வைத்தேன். ஒரு மூலையிலிருந்து விம்மினாள்.

'ஏன் கத்துகிறாய், உனக்கு என்ன நடந்தது? உன்ரை புரிசன் எங்கே, ஏன் இப்படி நடக்கிறாய்?' எனக்கு பயணக் களைப்பு; அடிவயிற்றில் பசி வேறு விறாண்டிக் கொண்டிருந்தது.

'அவன் மனிசனா மிருகம்; என்னை இயந்திரமாக நினைக்குறான். தினமும் அடிக்கிறான், உதைக்கிறான். நீ இயக்கத்திலை இருந்தனிதானே, எத்தனை பேரோடை படுத்தனியோ எனக் கேட்கிறான். பொறுத்துப் பார்த்து ஏலாமல் விளக்குமாத்தாலை அடித்து விட்டேன்.' மூக்கைத் துடைத்துக் கொண்டாள்.

'சரி நல்லதுதானே செய்திருக்கிறாய்; அதற்கேன் அழுகிறாய்? சரி கொஞ்சம் அமைதியாய் இரு.' அவளின் செயலில் தப்பில்லை. இதைவிட அவளால் வேறு முடிவு எடுக்க முடியாது என்பதை நான் உணர்வதாகக் கூறி அவளுக்கு ஆறுதல் கூறினேன்; அமைதிப்படுத்தினேன்.

'சரி சாப்பாடு சமை. நான் விடுதிக்குப் போய் குளித்து விட்டு வருகிறேன்.' எனப் புறப்பட, 'இரு நானும் வருகிறேன். என்னால் சமைக்க முடியாது. ஹோட்டலில் சாப்பிடலாம்' என்றாள். சரி கொஞ்சம் வெளியே வந்து மனதை தளர்த்திக் கொள்ளட்டுமே, 'வா போகலாம்.'

நான் கனடாவிலிருந்து வந்தால் தனியார் விடுதி ஒன்றிலேயே தங்குவேன். இப்படிச் சென்னையிலுள்ள தனியார் விடுதிகள் நல்ல வசதி கொண்டவை. சமைத்துச் சாப்பிடலாம். எந்த நேரத்திலும் யாரும் வந்து போகலாம்; தங்கியும் போகலாம். கெடுபிடிகள் இல்லை. விரலுக்குத் தக்க வீக்கமான வாடகையுமாக இருக்கும்.

விடுதிக்கு வந்தவுடன் பையனைக் கூப்பிட்டேன். பசி தாங்க முடியாமலிருந்தது. திலகாவுக்கும் எனக்கும் சாப்பாடு வேண்டி வரும்படி கூறிவிட்டு குளிக்கப்போனேன். திலகா கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டாள். குளித்து விட்டு வந்தபோது அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். சரி சாப்பாடு வந்தபின் எழுப்பலாம். கொஞ்சம் விஸ்கி ஊற்றிக் கொண்டேன்.

திடீரென எழுந்தவளின் முகத்தைப் பார்த்தேன். வீங்கியிருந்தது. இவளது வாழ்வே துன்பமாகி விட்டதா என்ன? இவளுக்கு என்னால் இனி செய்யக் கூடியதெல்லாம், இவளை எப்படியாவது கனடாவுக்கு அழைத்துச் செல்வதுதான்.

'ஏய் நீ என்ன குடிக்கிறாய், சாராயமா?' உற்றுப் பார்த்தபடி கேட்டாள்.

'இல்லையடி விஸ்கி'

'வெறிக்குமாடா... எல்லாவற்றையும் மறக்கலாம் அல்லவா... எனக்கும் கொஞ்சம் தா' கெஞ்சினாள்.

'சீ உனக்கு வேண்டாம்' என்றதற்கு 'ஏன் பொம்பிளையள் குடிக்கக் கூடாது என்கிறாயா?' குறுக்கிட்டாள்.

'இல்லையடி ஆம்பிளையள் கூட குடிக்கக் கூடாது.'

'அப்ப நீ ஏன் குடிக்கிறாய்?' மடக்கியது போல் பார்த்தாள்.

'என்ன செய்யிறது கனடா போன பின்பு எல்லாக் கவலைக்கும் ஒரே மருந்தாக, ஒரே உறவாக இந்தப் பழக்கத்தை தொடங்கி விட்டேன். இனி விடமுடியுமோ தெரியவில்லை' அசடு வழிய அவளைப் பார்த்தான்.

'அதெல்லாம் கிடக்கட்டும் நானும் கவலையாகத்தான் இருக்கிறேன்...' என சொல்லிக் கொண்டு எனது அனுமதியில்லாமலேயே கிளாசிலிருந்த விஸ்கியை திடீரென எடுத்து வாய்க்குள் ஊற்றிக் கொண்டாள்.

நெருப்புத் தண்ணி குடித்ததுபோல் அங்கும் இங்கும் ஓடினாள். நீண்ட நிமிடங்களின் பின் மீண்டும் ஒரு கிளாசில் ஊற்றி கையில் எடுத்துக் கொண்டாள். நான் தடுக்கவில்லை. அவள் பிடிவாதக்காறி என்பதற்காக மட்டுமல்ல, அவளது துயரத்துக்கு, ஒரு மாறுதலுக்கு... என்னவாகிலும் செய்து தொலைக்கட்டும்.

அவளுக்கு நிரம்ப மது மயக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். தான் தொலைத்த வாழ் நாட்களைப் பற்றி மீண்டும் மீண்டும் நிறையப் பேசினாள். இடையிடையே கதறி அழுதாள். எல்லோரையும் திட்டினாள். இயக்கத்தை நம்பி நாசமாகிப் போய்விட்டதாக தலையில் அடித்துக் கொண்டாள்.

கொஞ்சமாகிலும் சாப்பிட வைத்துத் தூங்க வைத்தேன். காலையில் எழுந்தவள் தான் செய்தவைகள் பற்றி வருத்தப் பட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. சரி, அவள் அப்படி என்னதான் தவறு செய்துவிட்டாள். அவள் பொருட்டு, அவளை ஒரு நிலைக்கு கொண்டு வரும் பொருட்டு, நீண்ட காலமாக சென்னையில் தங்கினேன். அவள் எல்லாவற்றையும் மறந்து அமைதியாகும்வரை பல இடங்களுக்குக் கூட்டிச் சென்றேன். அவளிடம் மாற்றம் தெரிந்தது. சந்தோசமாகவிருந்தாள். கவலையின் ரேகைகள் முகத்தில் மறையத் தொடங்கியது. எனக்கு நிம்மதியாக விருந்தது. அவள் கனடா போவது பற்றிய திட்டத்தைச் சொன்னேன்.

கண்டிப்பாக மறுத்துவிட்டாள். பல விதமாக முயற்சித்தேன். அந்தக் கதையை மட்டும் எடுக்க வேண்டாம் என்று பிடிவாதமாக நின்றாள். அவள் விருப்பம் என் திருப்தி.

இதற்கிடையில் நான் அவளை வைத்திருப்பதாக - காதலிப்பதாக - எங்களிடையே கள்ளத் தொடர்பிருப்பதாக பல விதமாக கதைகள் கனடா வரை பரவத் தொடங்கியது. இது பற்றி நான் மட்டுமல்ல, திலகாவும் அலட்டிக் கொள்ளவில்லை. எங்களிடையே உள்ள உறவு பற்றி நாங்கள்தான் கவலை கொள்ள வேண்டும், மற்றவர்கள் அல்ல. நான் கனடாவுக்குப் புறப்பட்ட வேளையில் மீண்டும் பெண்கள் விடுதியில் அவளைச் சேர்த்து, பொழுது போகட்டுமே என்று தனியார் தொலைபேசி நிறுவனமொன்றில் வேலையும் வாங்கிக் கொடுத்தேன்.

எனக்குக் கிடைத்த விடுமுறையில் பல மாதங்களின் பின் மீண்டும் சென்னை வந்தேன். வழமை போல் அவள் என்னுடன் வந்து ஒட்டிக் கொண்டாள். இனி நான் கனடா திரும்பும்வரை அவளது பொழுது என்னுடனேயே கழியும். அவளது மகிழ்வு, அவளது திருப்தி. நான் எதுவும் கூறுவதில்லை. அவள் பிடிவாதக்காரி.

'எடியே உனக்கொரு மாப்பிள்ளை பார்க்கிறேன் செய்யிறியா, நான் சீரியஸாகத்தானடி கேட்கிறேன்.' அவளது முகத்தை உற்றுப் பார்த்தேன்.

'டேய், எனக்கொரு புரிசனை எண்டைக்கும் தேடாதை; எனக்கு தேடுவதானால் ஒரு மனிதனைத் தேடு - ஒரு துணைவனைத் தேடு. எனக்கு என்னைத் தன் பொண்டாட்டியாக நினைக்கும் ஆண் தேவையில்லை. என்னையும் ஒரு மனிச உசிராக நினைக்கக் கூடிய ஒரு மனிதனை எங்கிருந்தாலும் கூட்டி வா' இதற்கு மேல் அவளுடன் எதைக் கதைப்பது? சரி தேடித்தான் பார்ப்போமே.

அன்று ஞாயிற்றுக் கிழமை. எங்கும் போகவில்லை. இராயப்பேட்டை பொன்னுச்சாமி ஓட்டல் சாப்பாடு என்றால் எனக்கு மட்டுமல்ல, திலகாவுக்கும் விருப்பம். அங்கிருந்து சாப்பாடு வரவழைக்கப்பட்டது. நன்றாகக் குளித்து உடை மாற்றிக் கொண்டு, கொஞ்சம் விஸ்கியை ஊற்றிக் கொண்டேன். குளித்து விட்டு தலையைத் துடைத்துக் கொண்டு வந்த திலகா விஸ்கி கிளாசைப் பறித்து தனது வாயில் ஊற்றிக் கொண்டாள். சந்தோசமாகக் கதைத்தாள். ஒரு இசைக்கு அங்கும் இங்குமென ஆடிக் கொண்டாள். பொரித்த கோழியின் சிறியதொரு துண்டை எடுத்து கடித்துக் கொண்டிருந்தாள். மிகவும் சந்தோசமாக இருந்தாள். சில மாதங்களாக அவளுக்குச் சொல்ல வேண்டுமென சொல்லாமல் சந்தர்ப்பம் பார்த்திருந்த ஒரு விடயத்தை இப்போ செல்லலாமா என நினைத்தேன்.

'ஏய் திலகா நீ சந்தோசமாகத்தானே இருக்கிறாய். நான் ஏதாவது சொன்னால் கோவிப்பியா...' முடிக்காமல் இழுத்தேன்.

'இம்... இம் சொல்லு. உன்னோடு எனக்கென்னடா கோவம். அது எப்படி வரும்... சொல்லு'

நான் சொல்லப்போவதை சந்தோசமாக ஏற்றுக் கொள்வாளா? இல்லை..?

'நான் இப்ப ஒரு வருடமாக கனடாவில் எமது இயக்கத்தில் மீண்டும் இணைந்து வேலை செய்யிறன்.' நான் சொல்லி முடிக்கவில்லை.

'You mean... இயக்கத்தில் மீண்டும் சேர்ந்து விட்டாயா?' கத்தியபடி எழுந்த பொழுது பழைய திலகா என் முன் நின்றாள்.

காலால் சாப்பாட்டு மேசையை உதைத்து விட்டாள். உணவுத் தட்டுகள், கோப்பைகள் உயரப்பறந்தன. உணவுகள் சிதறிக் கொட்டியது. இடுப்பில் பிஸ்டல் செருகி, இராணுவ உடையில் எப்படி அன்றைய திலகா இருப்பாளோ அதே கோலம். என்னை அடிப்பதுபோல் வந்தாள். 'சீ போ நாயே, நீயும் ஒரு மனிசனா? மீண்டும் கொலைகாறருடன் சேர்ந்து விட்ட நீயும் கொலைகாரன். அன்று நாம் தெரியாமல் தேசத்தின் பெயரில் செய்தோம். இன்று நீ எல்லாம் தெரிந்து அனைத்துக் கொலைகளையும் நியாயப்படுத்துவதுபோல் மீண்டும் கொலைகள் நடக்கத் துணை போவது போல்... அடப்பாவி, இத்தனை நாள் ஒரு புதிய கொலைகாரன் கையாலையா சாப்பிட்டேன்... வேண்டாம், இதற்கு மேல் உனக்குப் பக்கத்தில் படுக்கவே எனக்குப் பயமாகவிருக்கிறது.'

கதவைக் காலால் உதைத்து வெளியேறினாள். பின் தொடந்தேன். 'நான் குழம்பிப் போயிருக்கிறேன். என்னுடன் வராதை; என்னை அமைதியாக இருக்கவிடு. இரவு போல் வந்து பார்' ஓட்டோவில் ஏறிப்பறந்தாள்.

அறைக்குள் வந்து கிடந்த விஸ்கியை எல்லாம் குடித்துத் தீர்த்தேன். இரவு எப்போ வரும் எனக் காத்திருந்தேன். கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஆவலுடன் பெண்கள் விடுதிக்குச் சென்று திலகாவைப் பார்க்க வேண்டும் என்றேன்.

'திலகாவா, அவ ரூமைக் காலி பண்ணி பெட்டி படுக்கையுடன் போய்விட்டா'

'...'

'எங்கே என்று எங்களுக்குச் சொல்லவில்லை. எங்களுக்கும் தெரியாது'

'...'

'இல்லையே, முகவரியோ தொடர்பு வழிகளோ ஒன்றும் சொல்லாமல் போய்விட்டா'

'...'

'ஆமாம், கொடுக்க வேண்டிய பணமெல்லாம் கணக்குப் பார்த்து கொடுத்து விட்டாள். நீங்கள் ஒன்றும் தரவேண்டாம்.'

'...'

'ஆமாம் வந்தால் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.' விடுதிப் பொறுப்பாளி எனது கேள்விகளுக்குப் பொறுமையாக, சுருக்கமாக பதில் கூறி முடித்தாள்.

திலகாவை நான் தேடாத இடமில்லை. கோவில்கள், கன்னியர் விடுதிகள், சன்னியாசி மடங்கள், அனாதை இல்லங்கள், முதியோருக்கு உதவும் முகாம்கள், பெண்கள் விடுதிகள் இப்படி எத்தனையோ முயற்சிகள் மூலம் திலகாவைத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் சென்னை வருகிறேன். திலகாவைத் தேடுகிறேன்... திலகாவைத் தேடுவதற்கென்றே சென்னை வருகிறேன்.

போராளி தோழியர் கனகராணி நினைவுக்கு...

கண்ணி

அ. தேவதாசன்

1

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்பு உடுத்த துணியோடு வீட்டை விட்டுப் புறப்பட்டு திரும்பவும் உடுத்த துணியோடு விட்டுக்குப் புறப்பட்ட சிந்தாமணி வன்னிக் காட்டிலும் வவுனியாச் சிறையிலும் படுத்து எழும்பி நெருப்புக் காய்ச்சலும் வாந்திபேதியும் உடம்பின் சொத்தாகி எலும்பும் தோலுமாய் யாழ்ப்பாணத்துக்குள் வந்துவிட்டாள்.

பன்னிரெண்டு வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்தைப் பார்க்கையில் உண்மையில் பெரிதாக எந்த மாற்றமும் தெரியவில்லை. சண்டை முடிந்து கோடு, கச்சேரி எல்லாம் சீராக நடப்பதுபோல் ஒரு தோற்றம். யாழ்ப்பாணத்தை ஒருமுறை சுற்றிப்பார்க்க வேண்டும் என்கிற ஆசை சிந்தாமணிக்கு அறவே எழவேயில்லை.

எழுபத்தாறாம் இலக்க பஸ்ஸைத் தேடிப்பிடித்து ஒரு ஓரமாக அமர்ந்துகொண்டாள். 'டிக்கட் எடுக்காத ஆக்கள் டிக்கற்றை எடுத்துக் கொள்ளுங்கோ' என்றவாறு கொண்டக்டர் மணியைப் பிடித்து இழுக்க அருண்ட சிந்தாமணி 'வேலணைத் துறைக்கு ஒண்டு தாருங்கோ' என்று கேட்டு வாங்கி டிக்கட்டை நெஞ்சுச் சட்டைக்குள் செருகிக் கொண்டாள். பஸ் குறிகட்டுவானை நோக்கிப் புறப்பட்டது.

இடிக்கப்பட்ட கட்டடங்கள், அழிக்கப்பட்ட கோட்டை இவைகளைக் கடந்து பஸ் சென்று கொண்டிருந்தது. கடற்காற்று முகத்தில் பட சிந்தாமணி சற்றுக் கண்ணயர்ந்து விட்டாள். திடுக்குற்றவளாய் விழித்துப் பார்க்கும் போது அராலிச் சந்தியைக் கடந்து பஸ் ஓடிக்கொண்டிருந்தது. பல வீடுகள் கூரையின்றியும் பல வீடுகள் முற்றாக அழிந்தும் கிடந்தன. வங்களாவடிச் சந்திவரை சன நடமாட்டம் ஏதுமின்றி காய்ந்தே கிடந்தது அந்தப் பூமி. வங்களாவடிச் சந்தி கழிந்த பின்புதான் சன நடமாட்டம் தென்பட்டது. சில கடைகள் திறந்திருந்தன. பள்ளிச் சிறுவர்கள் அங்கும் இங்குமாகச் சென்றுகொண்டிருந்தனர். நடந்து செல்பவர்களும் அதிகமாகவே காணப் பட்டனர். பஸ் கொம்பனியடி கழிய சிந்தாமணி தன்னை பஸ்ஸை விட்டு

இறங்குவதற்கு தயார்படுத்திக் கொண்டாள். பஸ் பழைய சர்வோதயத்திற்கு முன்னால் நிற்கையில் சிந்தாமணி இறங்கிக் கொண்டாள். பஸ்ஸை விட்டு இறங்கிய சிந்தாமணி தான் இறங்கிய இடம் சரிதானா என நாலு பக்கமும் பார்வையை எறிந்தாள்.

சர்வோதயக் கட்டடம் பாறி விழுந்து கிடந்தது. அங்கிருந்து அவள் வீட்டுக்குப் போகும் ஒழுங்கையயைப் பிடித்து நடந்தாள். ஒழுங்கை முன்னர் தார் பூசி கல்லொழுங்கையாய்க் கிடந்தது. இப்போது குண்டும் குழியுமாய்த் தூர்ந்து போய்க் கிடக்கிறது.

கதிரன் கடை இன்னமும் இருக்கிறது. ஆனால் கதிரன்தான் இல்லை. கடைக்குள் புதியவன் ஒருவன் இருந்தான். 'தம்பி ஒரு உப்புச் சோடா தாருங்கோ' என்று கேட்டவள் பின் 'கதிரன் இல்லையோ?' எனக் கேட்டாள். 'அவர் இந்தியா போய் பத்து வரியத்துக்கு மேல, இப்ப நான்தான் கடை நடத்திறன்' என்று பதில் வந்தது. சோடாவை வாங்கி இரண்டு மிடறுகள் குடித்தவள் மீதியைத் தனது சிறிய பையுக்குள் வைத்துக் கொண்டு நடந்தாள். அவளுக்கு முன்னால் ஒரு சைக்கிள் வந்து 'கால் பிரேக்' அடித்து நின்றது.

'சிந்தாமணி அக்கா, எப்ப வந்தது?'

'தம்பியை எனக்கெண்டா விளங்கயில்ல...'

'நான்தானக்கா சூசை.'

'அட தம்பி, நானெண்டா மட்டுக்கட்டயில்ல...'

முன்னர் கருகருவென்று தலைமுடி, மீசையோடு இருந்த சூசை எல்லாமே வெள்ளையாகி வெளிறிப்போய் இருந்தான்.

'நீயும்தானக்கா சரியா உடைஞ்சு போனாய், இவ்வளவு காலமும் எங்க போய்க் கிடந்தனி?'

'என்ர பரிசு கேட்டை உனக்கேன், இப்பயும் கள்ளுத்தான் சீவிறியோ?'

'ஓம்... ஓம்...'

'சங்கத்துக்குப் போற உன்னை மினக்கெடுத்திறன் போல...'

'சீவல் எல்லாம் வெள்ளன முடிஞ்சுது. இப்ப சாட்டிக்கு தண்ணியள்ளப் போறன்'

'பேந்து ஏன் மினக்கடுகிற... நான் ஆறுதலாய் வீட்டுப் பக்கம் வாறன்.'

இப்பொழுது ஒழுங்கை தானாகவே சிந்தாமணியின் கால்களை வீட்டுக்குக் கூட்டிப் போனது. வீட்டைச் சுற்றிப் போட்டிருந்த சீமைக் கிளுவைகள் மரங்களாகிப் பட்டுக் கிடந்தன. வேலிகளை மூடி பற்றைகள் பற்றிக் கிடந்தன. முற்றமே தெரியாத அளவுக்கு அது பனை, தென்னை ஓலைகளாலும் மட்டைகளாலும் மூடிக் கிடந்தது. வீட்டு வாசலில் ஒரு நாய் செத்து மக்கிக் கிடந்தது. வீட்டுக்குள் போனால் பாம்பு, பூச்சிகளிடம்

கடிபட நேருமென நினைத்த சிந்தாமணி ஒழுங்கையிலேயே குந்திக் கொண்டு வீட்டை வெறித்துப் பார்த்தவாறே இருந்தாள்.

இருந்த கொஞ்ச நஞ்சச் சொந்தக்காரரும் யுத்த சூறாவளியால் அள்ளி வீசப்பட்டு செத்தவர் சாக மிகுதிப்பேர் ஓடிப்போன, போன இடங்களிலேயே 'செட்டில்' ஆகிவிட்டனர். சிந்தாமணியின் மூத்த சகோதரி இந்தியாவுக்குக் குடும்பத்தோடு ஓடிவிட்டாள். இயக்கத்தில் இருந்த தம்பி இன்னொரு இயக்கத்தால் புதைக்கப்பட, மற்ற சகோதரி கொழும்புக்கு ஓடி விட்டாள்.

சிந்தாமணி கொழும்புத் தங்கையிடம் தான் தனித்து விட்டதாகவும் தன்னோடு அவளை வேலணைக்கு வருமாறும் கேட்டாள். தங்கை வரமாட்டேன் என்பதற்கு பல காரணங்களை அடுக்கினாள். 'வேலணைக்கு வந்து மைல் கணக்கில் நடந்து தண்ணி சுமக்க என்னால ஏலாது என்பது அதிலொரு முக்கிய காரணம்' என்றாள்.

இந்தியாவில் இருந்த தங்கையோ 'இப்ப பிள்ளைகள் நல்லா இங்கிலிஷ் படிக்குதுகள். ஒரு சோலி சுறட்டு இல்ல. என்ன, காசிருந்தால்தான் வாழ்க்கை! ஆத்தில தண்ணி வருது. அந்த உப்புத் தண்ணிக் காட்டுக்குள்ள வந்து நான் என்னத்தைச் செய்ய' என்று கடிதம் போட்டாள்.

சூசை இன்னமும் தண்ணிக்கு சைக்கிள் மிதித்துக் கொண்டு சாட்டிக்குத்தானே போய்க்கொண்டிருக்கிறான். 'தங்கச்சிமார் சொன்னதும் சரிதான்' என்று சிந்தாமணி நினைத்துக் கொண்டாள். ஆனால் தான் தனித்து விட்டோமென்ற உண்மை அவளைச் சுட்டுக்கொண்டேயிருந்தது.

இந்த வீட்டையும் காணியையும் என்னால் திருத்த இயலாது. யாரையும் கூலிக்கு பிடித்துத்தான் திருத்த வேண்டும். இனி நல்ல தண்ணிக்கும் அலைய வேண்டும். ஆனாலும் என் அப்பனும் ஆத்தையும் வாழ்ந்து செத்த வீடு இது. இதைவிட்டு எங்கே போக? நானும் இங்கேயே சாக வேண்டியதுதான் என்ற எண்ணத்தோடு இடுப்பைத் தடவினாள். இடுப்பில் கொழும்புத் தங்கை கைச் செலவுக்கு அனுப்பிய கொஞ்சக் காசு பவுத்திரமாக முடிந்து வைக்கப்பட்டிருந்தது.

சிந்தாமணி ஊருக்குள் வந்த செய்தி சூசை மூலமாக ஊருக்குள் பரவிவிட ஒரு அரை மணித்தியாலத்துக்குள்ளாகவே சிந்தாமணியைத் தேடி ஆட்கள் வந்து சுகம் விசாரிக்கத் தொடங்கினர். சிந்தாமணியை வாட்ட சாட்டமான, ஒரு கம்பீரமான பெண்ணாய்ப் பார்த்திருந்த சனங்கள் இப்பொழுது அவளின் உருக்குலைவைப் பார்த்து வருத்தமாகப் பேசினார்கள்.

இந்த வேலணை ஆறாம் வட்டாரத்தில் வெள்ளாளர், கோவியர், முக்கியர், பள்ளர், நளவர் என்று சனங்களைப் பிரித்து நிலங்களையும் பிரித்தும், ஒதுக்கியும், எட்டவும் வைச்சிருந்தாலும் நளவர், பள்ளர் குடியிருப்புக்களை தண்ணீர் இல்லாத உப்பு நிலங்களுக்குள்ளே ஒதுக்கி

விட்டிருந்தார்கள். அநேகமாக எல்லா நல்ல தண்ணீர்க் காணிகளும் வெள்ளாளர்களிடமே இருந்தன. ஒன்று பாதி கோவியர்களிடமும் விவசாயக் காணிகளும் நல்ல தண்ணீர்க் கிணறுகளும் இருக்கின்றன. மற்றவர்கள் குளிப்பதற்குக் கூட இரண்டு மைல் தூரம் நடக்க வேண்டும். வீட்டுக் கிணறுகள் குண்டி கழுவ மட்டுமே உதவும். மாரிக் காலங்களில் மட்டும் கிணற்றுக்குள் நிறைந்திருக்கும் மழைநீர் வற்றும்வரை குளிக்கலாம்.

சிந்தாமணி இளம் வயதாய் இருக்கையில் ஓடி ஓடி நல்ல தண்ணீர் அள்ளி வருவதிலேயே அவள் காலத்தின் பெரும்பகுதி போனது. அப்பொழுதெல்லாம் சிந்தாமணி பம்பரம்தான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றில் எதுவும் அறியாதவள். ஆண்களுக்குக்கூட அவளிடம் வாய் கொடுக்கப் பயம். இன சனத்துக்குள் ஏதாவது சண்டை சச்சரவு தொடங்கினால் நியாயம் கேட்க முன்னுக்கு நிற்பவள் சிந்தாமணிதான். அவள் கழுத்து நரம்புகள் புடைக்க கத்திப்பேசும்போது ஆண்களின் குரல்கூட அந்தப் 'பேரோசை'யில் அமிழ்ந்து விடும். சற்றேனும் ஏறுமாறாக எவரும் அவளின் அபிப்பிராயங்களோடு முண்டினால் அவள் வலு சரளமாக வீசும் தூசண வார்த்தைகளால் எதிராளியைத் தோல்வியடையச் செய்வாள். அறமிஞ்சினால் அடிக்கவும் தயங்க மாட்டாள்.

2

மதியம் இரண்டு மணியாகிவிட்டது. காலை ஒன்பது மணிக்கு வந்து மாப்பிள்ளைக்கு, மாப்பிள்ளைத் தோழன் பால் ஊற்றி, முழுக்காட்டி பெண் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும். பெண் வீட்டில் இருந்து இதுவரை யாரும் வரவில்லை. மாப்பிள்ளை அதிகாலையில் இருந்து தயாராகிப் பெண் வீட்டார் வருகைக்காகக் காத்திருந்து களைத்து விட்டான். அவனின் முகத்தில் ஏமாற்றமும் கோபமும் கவலையும் மண்டிக்கிடந்தது. உறவினர்கள் மூலைக்கு மூலை நின்று என்ன செய்வதென்று அறியாமல் குழம்பிக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளையின் தகப்பனோ 'எங்கள மரியாதை கெடுத்திப் போட்டாங்கள். இனிச் சும்மாவிட ஏலாது. ஒரு காரைப் பிடிச்சுக்கொண்டு இணுவிலுக்குப் போய் அவங்கள நாலு கேள்வி கேட்டு விழுத்திப் போட்டு மிதிக்காட்டி என்ர மனமும் கேளாது, நான் கணவதியின்ர மேனும் இல்ல...' என்று வீர முழக்கமிட்டுத் துள்ளினார். கொஞ்சப் பேர் 'அதுதான் சரியான வழி, நாங்களும் வாறம்' என்று உசார் கூட்ட, 'அது சரியில்ல அங்க என்ன பிரச்சினையோ தெரியா, போய்க் கதைப்பம்...' என்று கொஞ்சப் பேர் சொல்ல, பெண்கள் கூட்டம் மூலைக்கு மூலை சிணுங்கி கதைத்து நிற்க இவைகளையெல்லாம் அந்தச் சிந்தாமணி சற்றுத் தூரத்தில் இருந்து அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இப்பொழுது எழுந்தாள்.

'என்ன ஆம்பிளயள் நீங்க, புள்ள குடுக்கிறதத் தவிர வேற ஒரு பூளலும் உங்களுக்கு விளங்காதா?' என்ற கேள்வியுடன் தொடங்கி, மாப்பிள்ளையைப் பார்த்து 'டேய் தம்பி நீ வெளிக்கிடு, பொம்புளைக்கு குடுக்கிற சீலையும் கொண்டு வா, வாற ஆக்கள் வாங்கோ' என்று முடித்து மாப்பிள்ளையையும் காரில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டாள். அந்த இரண்டு வாடகைக் கார்களும் இணுவிலுக்குப் போயின.

அங்கும் சிறு தறப்பாள் பந்தல் போடப்பட்டிருந்தது. எல்லாமாக சிறுவர்களையும் பெரியவர்களையும் கூட்டிப் பார்த்தால் அங்கு பத்துப் பேர்கூட இருக்க மாட்டார்கள். வந்த இனசனங்களைக் கல்யாணம் நடக்காது எனச் சொல்லி திருப்பி அனுப்பி விட்டனராம். அந்த வீடு கல்யாணக் களை இழந்து செத்த வீட்டுக் கோலம் கொண்டு கிடந்தது.

மாப்பிள்ளை வீட்டார் கார்களை விட்டு இறங்கினர். சிந்தாமணி உறுதியாகச் சொன்னாள், 'ஒருத்தரும் தேவையில்லாமலுக்குக் கதைக்கக் கூடாது.' விறுவிறுவென வீட்டுக்குள் உள்ளிட்டாள். தலை குனிந்தே செல்ல வேண்டிய வாசல் கொண்ட அந்தச் சிறிய வீட்டின் ஒரு மூலையில் கல்யாணப் பெண் சுருண்டு படுத்துக் கிடந்தாள். உள்ளே வந்த சிந்தாமணி 'எடி பொட்ட, உனக்கு இந்தக் கலியாணத்தில விருப்பம்தானே?' என்று நேரடியாக விசயத்துக்கு வந்தாள். அவள் 'ஓமெ'னத் தலையசைத்தாள். 'எங்கயடி ஆத்த உன்ர கொப்பன்?' என்று சிந்தாமணி அடுத்த கேள்வியைக் கேட்டாள். பெண்ணின் தகப்பன் தலையைக் குனிந்தபடிக்கு பதுங்கிப் பதுங்கி வந்தார்.

'நீயெல்லாம் ஒரு மனிசனாடா? உனக்கொரு மீசை, ஒரு வேட்டி, த்தூ நாயே...' என்று ஆரம்பித்து அய்ந்து நிமிடங்கள் சிந்தாமணி பேசி ஓய கல்யாணப் பெண்ணின் சிறிய தகப்பன் 'சிந்தாமணி ஒரு பிழை நடந்து போச்சு, கலியாணத்துக்கு தாற காசு அய்யாயிரத்தையும் ஒராள் கடனாத் தாறன் எண்டு சொன்னது. நாங்களும் காசு வரும் வருமெண்டு மத்தியானம் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்தம். கடைசியில ஆள் கையை விரிச்சிப் போட்டுது.' என்று தலையைச் சொறிந்தார்.

'அப்பிடியெண்டால் மாப்பிள்ளை வீட்டை வந்து உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே...'

'நாங்களும் அப்பிடித்தான் யோசிச்சனாங்கள். ஆனால் புறோக்கர் காசில்லாட்டால் தான் வரமாட்டன் எண்டு போட்டு கோவிச்சுக் கொண்டு போயிட்டார்... நாங்களும் பயத்தில...'

சிந்தாமணி கையால் முகத்தைத் தேய்த்தாள். பின் மாப்பிள்ளையைப் பார்த்து 'டேய் தம்பி, பொம்பிளையிட்ட கொண்டு வந்த சீலையைக் குடு. எடி பிள்ள நீ 'டக்'கெண்டு சீலையை கட்டிக் கொண்டு வா' என்றாள்.

மாப்பிள்ளையின் தகப்பன் நைசாக சிந்தாமணியை ஒரு மூலைக்குள்

தள்ளிக் கொண்டு போனார். 'சிந்தாமணி உனக்கென்ன விசரே? இந்தக் காசை நம்பித்தான் கலியாண அலுவலுக்கு கடன் வாங்கி செலவழிச் சனான். கடைக்காரனுக்கு விடிஞ்சால் காசு எண்ணி வைக்கவேணும்' என்று இரகசியம் பேசினார்.

'அண்ண கலியாணத்தை முடிப்பம். வாற பிரச்சினையை அதுக்குப் பிறகு யோசிப்பம்.'

எல்லாக் காரியங்களும் முடிந்து கல்யாணப் பெண்ணை வேலணைக்கும் அழைத்து வந்தாகி விட்டது. எண்ணி ஆறே மாதத்தில் வெள்ளாளரின் தோட்டக் கிணற்றில் புதுப்பெண் திருட்டுத் தனமாய் தண்ணீர் அள்ளினாள் என்று சொல்லி பொலிஸில் விதானையால் பிடித்துக் கொடுக்கப்பட்டாள். சிந்தாமணிதான் பொலிஸ் நிலையத்துக்குப் போய் லஞ்சம் கொடுத்துப் புதுப் பெண்ணை விடுவித்தாள். அத்தோடு உடனடியாகக் 'கள்ள அருணாசல'னைக் கொண்டு விதானைக்குச் செய்வினை செய்வித்து இரவோடு இரவாய்ப் போய் விதானையின் முற்றத்தில் செய்வினைத் தகட்டைப் புதைத்தாள்.

3

அந்தத் துணிந்த கட்டையும், கையாடி வாயாடியுமான சிந்தாமணி இப்போது எலும்பும் தோலுமாய், ஒரு போக்காய் பேசுவதைக் கண்டு சனங்களுக்குக் கவலை. சிந்தாமணியின் தகப்பனுக்கு முதுசொமாக பறையன் தோட்டம் என்ற பெயரில் எட்டரைப் பரப்புக் காணியும், அம்பட்டன் கூடல் என்ற பெயரில் பதினொரு பரப்புக் காணியும் இருந்தது. அவரின் இனசனங்களுக்குள் இவ்வளவு பெரிய சொத்தை வைத்திருந்தது அவர் மட்டும்தான். சிந்தாமணிக்கு நல்ல மாப்பிள்ளையாக, அதுவும் கள்ளுச் சீவாத மாப்பிள்ளையாகத் தேட வேண்டும் என்று ஆசைப்பட்ட சிந்தாமணியின் தகப்பன் சபாபதி ஆனைக் கோட்டையில் 'டக்ஸி' ஓடும் ஒரு மாப்பிள்ளையைப் பிடித்துப் பறையன் தோட்டக்காணி எட்டரைப் பரப்பையும் சீதனமாகக் கொடுத்து கல்யாணம் செய்து வைத்தார். அம்பட்டன் கூடல் காணி இரண்டாகப் பிரிக்கப்பட்டு மற்றைய இரு பெண்களுக்கும் கொடுக்கப்பட்டது.

சிந்தாமணியின் புருசன் முதலில் கொஞ்ச நாட்கள் நல்ல மாதிரி இருந்தான். பின் 'தண்ணியில்லாத இந்த வேலணைக் காட்டுக்குள்ள மனுசன் இருப்பானா? நீயும் யாழ்ப்பாணம் வா' என்றான். அவனுக்கு சீதனமாகக் கொடுத்த காணியை விற்று ஆனைக் கோட்டையில் காணி வாங்க சிந்தாமணி சம்மதித்தாள். அவனோ காணி வாங்குகிறேன்... காணி வாங்குகிறேன் என்று சொல்லிச் சொல்லியே காணி விற்ற காசு எல்லாவற்றையும் செலவழித்துத் தொலைத்து விட்டு 'நீ கொண்டு வந்த சீதனம் போதாதடி' என்று நாளும் பொழுதும் நச்சரிக்க ஆரம்பித்தான். ஒரு நாள் 'தண்ணியில்லாக் காட்டுக்குள்ள என்னைக் கொண்டு வந்து

அமத்திற்றாய்' என்று சிந்தாமணியின் தகப்பனின் கழுத்தைப் பிடித்தான். அன்று கையில் விளக்குமாறை சிந்தாமணி எடுத்தாள். அதோடு அவளின் கல்யாண வாழ்க்கை முடிந்தது. புருசன்காரனுக்கு விழுந்த அடியின் வேகத்தைப் பார்த்து ஊரே திகைத்து நின்றது.

அந்தச் சிந்தாமணிக்கு இப்பொழுதெல்லாம் தளும்பாமல் நடக்கவே முடியவில்லை. மூளை இயங்க மாட்டேன் என்று மறுக்குமாப் போல் அவள் தடுமாறினாள். மெல்ல மெல்ல சூசையையும் உதவிக்கு வைத்துக்கொண்டு கூட்டிக் குவித்து வீட்டை ஒருவாறு துப்புரவு செய்து முடித்தாள். அதற்கே ஒரு கிழமையானது. அயலட்டம் இந்த ஒருவாரமாய் அவளுக்கு சாப்பாடு போட்டது. அரிசி, உப்பு, தண்ணி உடனடித் தேவைகள்.

தங்கச்சிமாருக்கு கொடுத்த சீதனக் காணியை இவளையே பராமரிக்கச் சொல்லிச் சொல்லியிருந்தார்கள். காணியில் உள்ள நூற்று முப்பது பனைகளில் ஓலைகளை வெட்டினால் நான்காயிரம் ஓலைகள் வரும். பதினொரு கள்ளுப் பனைகள் நிற்கின்றன. அவைகளைச் சீவலுக்கு விடலாம். பனங்காய், பனாட்டு, கிழங்கு, ஒடியல், ஊமல் இவைகளையும் விற்கலாம். எப்படியும் தன்னுடைய சீவியத்தை கொண்டோடி விடலாம் எனச் சிந்தாமணி நினைத்துக் கொண்டாள்.

அனல் தகித்தது. தண்ணீர் எடுப்பதற்குச் சிந்தாமணி புறப்பட்டாள். ஒழுங்கையின் முடிவில் ஆரம்பமாகும் வெள்ளாளர் குடியிருப்பில், விசாலம் வீட்டில் நல்ல தண்ணீர்க் கிணறு உண்டு. மெல்ல மெல்லப் பானையோடு ஒழுங்கையில் சிந்தாமணி நடக்க அவளை உரசுவது போல் ஒரு வாகனம் ஒழுங்கையால் விரைந்தது. இயக்கப் பொடியள் என்று சிந்தாமணி அனுமானித்துக் கொண்டாள்.

விசாலத்தின் மகள் வலு அன்பாக சிந்தாமணியை வரவேற்றாள். விசாலாட்சியின் புருசன் வவுனியாவில் ஒரு சாப்பாட்டுக் கடையில் வேலை செய்தான். விசாலாட்சி மிளகாய் ஆய புல்லுச் செதுக்க என்று கூலி வேலைக்கு போவாள். வீட்டில் பணத் தட்டுப்பாடு வரும்போது, அப்போதெல்லாம் விசாலம் சிந்தாமணியிடம் ஓடி வந்துதான் காசு மாறுவாள்.

'எங்க அம்மா இல்லையா?' எனச் சிந்தாமணி கேட்க விசாலாட்சியின் மகளின் கண்கள் கலங்கின. 'நாங்கள் இடம்பெயர்ந்து போய் வன்னியில இருக்கயுக்க காய்ச்சல் வந்து அம்மா மோசம் போயிட்டா' என்றாள். இப்போது அவளும் அவள் புருசனும் மட்டும்தான் இங்கேயிருக்கிறார்களாம்.

சிந்தாமணி அவ்விடத்திலேயே ஒரு ஒப்புச் சொல்லி மெதுவாய்ப் பாடினாள். பின் எழுந்து 'பிள்ள ஒரு குடம் தண்ணி அள்ளிக் கொள்ளுறன்' என்றவாறு கிணற்றை நெருங்கினாள். விசாலத்தின் மகள் இன்னும் அழுது முடியவில்லை. கண்ணைக் கசக்கிக் கொண்டே வேகமாக ஓடி வந்து

'பொறு சிந்தாமணி' என்று சொல்லிவிட்டு தண்ணீர் அள்ளி சிந்தாமணியின் பானையிலோ சிந்தாமணியிலோ தண்ணி வாளி படாதவாறு மிகக் கவனமாக, நுட்பமாக, தட்டாமல் முட்டாமல் ஊற்றினாள்.

தேசத்துரோகி

—ஷோபாசக்தி

அரசாங்கத்தாலும் அவனது பெறாமகனாலும் காசு சேர்க்க அறைக்கு வந்துபோகும் இயக்கக்காரராலும் பல தருணங்களில் தேசத்துரோகி என விளிக்கப்பட்ட ஸ்டான்லி இராஜேந்திரா தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அய்க்கிய தேசியக் கட்சி அரசுக்கும் 'பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தம்' கைச்சாத்திடப் பட்டதைத் தொடர்ந்து, பத்து வருடங்களுக்குப் பிறகு பிரச்சார வேலைகளுக்காக புலிகளின் அணியொன்று இளம் பரிதியின் தலைமையில் அவனின் கிராமத்துக்குள் உள்ளிட்டதைக் குறித்த அப்பத்திரிகைச் செய்தியை திரும்பத் திரும்ப விழுந்து விழுந்து விசர் கொண்டு வாசித்தான்.

இவன், இவனது சீவிய காலத்திலேயே இப்போதுதான் முதன் முதலாகத் தனது அநாதைக் கிராமத்தைக் குறிப்பிடும் முக்கிய செய்தியொன்றை அச்செழுத்துக்களில் படிக்கிறான். இவனது கிராமத்தில் எந்தெந்த இடங்களில் அரச படையினர் நிலை கொண்டிருப்பார்கள் என்று யோசித்துப் பார்த்தான். இவனது கிராமத்தின் ஒவ்வொரு கோவில்களிலும், தேவாலயங்களிலும் பாடசாலையிலும் சங்கக் கடையிலும் மோர்க்கடையிலும் றாத்தலடியிலும் உடையார் வீட்டிலும் கடற்கரை முழுவதும் தெருக்களில் முழத்துக்கு முழமும் அவர்கள் இருக்கக்கூடும். புலிகள் எந்த வழியாகக் கிராமத்தினுள் நுழைந்திருப்பார்கள்? அவர்கள் எந்த இடத்தில் இராணுவத்தின் காவலரண்களைக் கடந்திருப்பார்கள்? திலீபனது உடலை மலர்ப் படுகையில் வளர்த்தி இவனது கிராமத்துக்குள் அஞ்சலிக்காக எடுத்து வந்தபோது கிராமத்தின் 'மெயின் ரோட்டில்' நின்றிருந்த இந்திய ஆமிக்காரர் துவக்குகளை இறக்கி சல்யூட் செய்தது இவன் ஞாபகத்தில் வந்தது. திலீபனின் உடலின் பின்னால் வந்த ஒலிபெருக்கி வாகனத்துள் இருந்து 'திலீபன் அழைத்தது சாவையா இந்தச் சின்ன வயசில் இது தேவையா..?' என்று காசி ஆனந்தன் பேசிக்கொண்டிருந்ததும் ஞாபகத்துக்கு வந்தது.

அந்த மெயின் ரோட்டால்தான் இப்போதும் புலிகள் பிரவேசித்திருப்பார்களா? அல்லது கடல் வழியாக நுழைந்திருப்பார்களா? இல்லை, குயிலப்புலம் வழியாகப் போயிருப்பார்களா? என்று கடுமையாக யோசனை செய்தான்.

கடைசியில், புலிகள் மெயின்ரோட்டிலிருந்து இலந்தையடி ஊடாகத்தான் கிராமத்துக்குள் நுழைந்திருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வந்தான். இவனது கிராமத்தில் நடந்த இன்பம்-செல்வம் கொலையில் தொடங்கி

அயிட்டத்தின் சாவுவரை எத்தனையோ கோரமான, மகிழ்வான, துக்கமான, வீரமான, கோழைத்தனமான, விசுவாசமான, துரோகமான, வெற்றியான, தோல்வியான நிகழ்வுகள் அந்த இலந்தையடியில்தான் நிகழ்ந்திருக்கின்றன. எனவே இந்தச் சமாதான முயற்சி கூட இலந்தையடியில்தான் ஆரம்பித்திருக்கும் என இவன் நம்பினான்.

ஸ்டான்லியின் கிராமத்தை அவர்கள் தமது உள்ளங்கால்களில் எத்தி விளையாடிய கரி நாளில் அவர்கள் ஸ்டான்லியை இந்த இலந்தை மரத்தோடுதான் பிணைத்திருந்தார்கள். இலந்தை மரத்தில் கட்டப் பட்டிருந்தபோதுதான் ஸ்டான்லி ஆமிக்காரரின் 'நடந்து போ! சிதறிப்போ!' என்ற கட்டளைகளை நிலத்தைப் பார்த்தவாறே சிங்களத்திலிருந்து மொழி பெயர்த்து தமிழில் அயிட்டத்துக்குச் சொல்லி முடித்தான்.

அயிட்டத்தின் ஞாபகம் இன்று இவனில் அங்கேயும் இங்கேயுமாக மின்னி மின்னி இப்பொழுதில் ஏனோ அயிட்டத்தின் நினைவுகளே இவனில் முழுதாய்க் கவிந்திருக்கலாயிற்று.

இவனின் கிராமத்திலே அநேகமானோர் தமது பட்டப் பெயர்களால் மட்டுமே அறியப்பட்டிருந்தனர். காளைவாயர், ஆவடை, மொண்ணிக் குட்டர், பஞ்சமி, வெறிக்குட்டி, சாரைப்பாம்பு, சோட்டர், விசுக்கோத்து, சிணிப்பல்லன், கொதியர், வில்லங்கம், கே.ஆர்.விசயா, பட்டினி என்று பலமாதிரியான பட்டங்கள். ஸ்டான்லிக்கு மக்கோனா என்று பட்டம்.

'அந்த அயிட்டத்தைக் காட்டிலும் இந்த அயிட்டம் திறமான அயிட்டம்'

'கிளிநொச்சியிலயிருந்து ஒரு தொங்கல் அயிட்டம் கொண்டு வந்திருக்கிறன்'

'திருநாவுக்கரசரை அயிட்டத்தோட கட்டி கடலில போட்டாலும் அவர் மிதந்ததுதான் அயிட்டம்'

இப்படியாக வாயைத் திறந்தாலே வார்த்தைக்கு வார்த்தை அயிட்டம் என்ற வார்த்தையை பிரயோகித்து வந்ததால் அயிட்டத்துக்கு அயிட்டம் என்று பட்டம்.

'உலகம் சுற்றும் வாலிபன்' யாழ்ப்பாணத்தில் சக்கை போடு போட்ட காலத்தில் இவன் தவ்வல். மனோகரா தியேட்டரில் கலரி டிக்கட் வரிசையில் அடித்துப் பிடித்து நின்று கொண்டிருந்தான். இவன் நின்ற நெரிசலான க்யூ வரிசைக்கு மேலாக முகட்டுக் கம்பியைப் பிடித்துத் தொங்கியவாறே வரிசையில் நிற்பவர்களில் ஒரு எப்பனும் தட்டாமல் முட்டாமல் சட்டையில்லாமலும் வெறும் சண்டிக்கட்டுடனும் கால்களை அந்தரத்தில் துளாவி அயிட்டம் 'சர்' எனப் போய் டிக்கட் கவுண்டருக்கு முன்னால் 'ஸ்பொட்டா'க் குதித்ததை இவன் கண்டான். அங்கிருந்து தனது கட்டைத் தொண்டையால் 'இந்தப் படத்தில விஞ்ஞானி வாத்தியார் பாவிக்கிற அணுகுண்டு அயிட்டம் உண்மையிலேயே அந்தாளட்ட இருக்கு, ராமாவரம் தோட்டத்துக்குள்ள அயிட்டத்த தாட்டு வைச்சிருக்குது

மனுசன்' என்று அயிட்டம் யாருக்கோ சொல்லிக்கொண்டிருந்ததையும் இவன் கேட்டான்.

ராமாவரம் தோட்டம், வள்ளுவர் கோட்டம் என்றெல்லாம் அயிட்டம் கதைப்பதற்கு, அவர் நகரத்தில் பெரும் சைவ உணவகத்தில் சமையல் காரராய் வேலை செய்வதால் நகரத்து மனிதர்களோடு பேசிப் புழங்குவதும் கிழமைக்கு ஆறு நாட்கள் அவர் நகரத்திலே தங்கியிருப்பதும் மட்டுமே காரணங்களாக இருக்க முடியும். மற்றப்படிக்கு பொதுவாக ஸ்டான்லியின் கிராமத்துச் சனங்களை யாழ்ப்பாண ஜூம்மா தெருவில் கொண்டு போய்விட்டுத் தலையை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டால் திரும்ப வீட்டுக்கு வர வழி தெரியாமல் பதகளிப்பார்கள்.

ஸ்டான்லி மக்கோனாவில் மூன்று வருடம் இருந்துவிட்டு மீசை அரும்பிக் குரல் உடைந்த இளந்தாரிப் பருவத்திலே கிராமத்துக்குத் திரும்பி வந்தான். அந்தச் சின்னக் கிராமத்திலே சைவக்காரர் ஒரு பகுதியிலும் வேதக்காரர் இன்னொரு பகுதியிலுமாகச் சீவித்தார்கள். இரண்டு பகுதிக்கும் இடையில் அவ்வளவாகக் கொண்டாட்டம் இல்லை. அயிட்டத்தின் வீடு 'இனிச்சபுளியடி முருகன்' கோவிலுக்குப் பின்னால் இருந்தது. அயிட்டத்தின் மனைவி நெசவு டீச்சராக வேலை பார்த்தார். அவருக்கு நெசவக்கா என்று பெயர்.

ஒரு முன்னிலவுக் காலத்தில் இவனும் இவனொத்த பொடியளும் பீடி வலித்துக் கொண்டே ஒழுங்கைகளில் 'சும்மா' திரியும்போது அயிட்டத்தின் வீடிருந்த ஒழுங்கையிலும் உள்ளிட்டார்கள். அயிட்டத்தின் கிடுகு மறைப்புக் கிணற்றடியில் தண்ணீர் அள்ளும் சத்தம். அப்படியே வேலியோடு வேலியாக நின்று நிலாவொளியில் கவனித்தார்கள்.

அயிட்டம் கிணற்றிலிருந்து உற்சாகமாகக் குதித்துக் குதித்து துலாக்காலால் தண்ணீர் அள்ளுகிறார். அவரின் குள்ளமான, பருமனான தேகத்துடன் அவர் குதிப்பது அச்சு அசலாய் ஒரு பெரிய பந்து குதிப்பது போலவேயுள்ளது. ஒவ்வொரு முறை தண்ணீருடன் வாளியை மேலே இழுக்கும்போதும் தன் வாயால் 'கிறீங்... கிறீங்...' என்ற சத்தத்தை துள்ளலுடன் அயிட்டம் கிளப்பினார். அவரின் மனைவி அவரைவிட உசரம். எட்டி எட்டி நெசவக்காவின் தோளில் தண்ணீர் வார்த்தார் அயிட்டம்.

'கிறீங்... கிறீங்... உரஞ்சிக் குளியம்மா, உரஞ்சிக் குளி நாளைக்கு கடைக்கு போகவேணும். கிறீங்... கிறீங்... அடுத்த ஞாயிறு மட்டும் அம்மாவுக்கு ஆர் தண்ணி அள்ளித் தருவினம்... உரஞ்சிக் குளியம்மா, உரஞ்சிக் குளி கிறீங்... கிறீங்...'

இன்னொரு முறை, அயிட்டத்தின் மகள் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்திருந்தபோது அரசாங்கத்திடமிருந்து அவருக்குத் தனிச் சிங்களத்தில் ஒரு கடிதம் வந்திருந்தது. அதை எடுத்துக் கொண்டு

அயிட்டம் இவனிடம் வந்தார். இவன் அதைப் படித்துச் சொன்னான். மற்றப்படிக்கு அயிட்டத்தை எப்போதாவது ஸ்டான்லி வழி தெருவில் கண்டால் ஆளை ஆள்ப் பார்த்து தலையசைத்துக் கொள்வார்கள்; அவ்வளவே.

ஒரு செக்கன் பொழுதில் ஆமிக்காரர் இவன் கிராமத்தைச் சூழ்ந்து நெருக்குவதாக துப்பாக்கிச் சூடுகளும் எறிகணை வீச்சுக்களும் கடலில் ஆங்காரமாய் நின்று இவன் கிராமத்தையே நித்தியக் கண்காணிப்பில் வைத்திருக்கும் போர்க்கப்பலான 'சங்கமித்ர'விலிருந்து கிளம்பிய பீரங்கி முழக்கங்களும் இந்தக் கிராமத்தின் வானில் மோதி ஒளி எறிந்த 'பரா' விளக்குகளும் சொல்லின. இப்படியான தருணங்களில் எல்லாம் சனங்கள் சஞ்சுவானியார் தேவாலயத்துள் போய் சேர்ந்திருக்கப் பழகியிருந்தார்கள். இவனும் தனது அடையாள அட்டையை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டு தனது தாயாரைச் சைக்கிளில் வைத்து, மிதித்துக் கொண்டு சஞ்சுவானியார் தேவாலயத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். வழியில் சனங்கள் அந்தரித்துக் குறுக்கு மறுக்காய் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

சஞ்சுவானியார் கோவில் வீதியில் ஸ்டான்லியின் சைக்கிள் மிதந்தபோது தெருவில் நின்று அயிட்டமும் நெசவக்காவும் இழுபறிப் படுவதைக் கண்டான். நெசவக்காவின் கையில் ஒரு சூட்கேஸ். அவர் அயிட்டத்தையும் தேவாலயத்துக்குள் வந்திருக்குமாறு மன்றாடினார், கெஞ்சினார், திட்டியும் பார்த்தார். அயிட்டம் அசும்பவில்லை. நல்ல வெறியில் நின்று 'லெக்சர்' அடித்துக் கொண்டிருந்தார்.

'நீ போறதெண்டால் கோயிலுக்குள்ள போயிரு. ஆனால் நான் சிங்களவனுக்குப் பயந்தவனில்லக் கண்டியோ.' இந்த நேரம் பார்த்து கடலிலே பீரங்கி முழங்கிக் கேட்டது. அயிட்டம் கடலை முறைத்துக் கத்தினார். 'டேய் லேடிஸ் அன் ஜென்டில்மென்ற், மெம்பர் ஒவ் பார்லிமென்ற் நான் உனக்குப் பயப்பிடவோ' கைகள் இரண்டையும் விரித்து விரல்களையும் அகல விரித்து ஒருமுறை 'உர்' என்று உறுமிவிட்டு 'நான் பாயும் புலி பண்டாரவன்னியன். ஏலுமெண்டால் வந்து பாருங்கோ என்னட்டயும் வீட்டில ஒரு அயிட்டம் இருக்கு கேம் தாறன்.' அயிட்டம் திரும்பவும் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். நெசவக்கா முணு முணுத்துக் கொண்டே இவர்களோடு சேர்ந்து சஞ்சுவானியார் கோவிலுக்குள் போனார். இதற்கு முன்பாகவும் சில தடவைகள் இவன் கிராமத்தை ஆமிக்காரர் சூழ்ந்தபோதும் ஊர் மனைக்குள் ஆமிக்காரர் வந்ததில்லை. கடற்கரை ஓரமாக முன்னேறிப் போய்க்கொண்டே யிருப்பார்கள். இந்தத் தடவையும் அப்படியே நிகழும் என அயிட்டம் நம்பியிருக்கலாம். ஆனால் அது அப்படியல்ல. அடுத்தநாள் அதிகாலையிலேயே ஆமிக்காரர் ஊர்மனைக்குள் புகுந்த செய்தியை சனங்களின் காதுகளில் தீர்ந்த வெடி சொன்னது. மேலே உறுமிப் பறந்த

போர் விமானங்களுக்குக் கீழே கிராமமே ஒரு கோழிக் குஞ்சாய் பதுங்கிக் கிடந்தது. கிராமத்தின் ஒரேயொரு மாடிக்கட்டடமான பள்ளிக் கூடத்தின் நெற்றியில் போர்விமானம் குண்டு குற்றியது. இரவு தேவாலயத்துக்கு வராமல் வீடுகளிலேயே தங்கியிருந்த ஒன்று பாதிச் சனங்களும் சஞ்சுவானியார் கோவிலுக்கு ஓடி வந்தனர். அயிட்டமும் தலையில் ஒரு பெட்டியும் கையில் ரேடியோப் பெட்டியுமாக வந்து சேர்ந்தார்.

கோவிலின் முகட்டு ஓடுகளைத் துப்பாக்கிக் குண்டுகள் ஒற்றிச் சென்றன. வெடி மணம் சாளரங்களால் கசிந்தது. சனங்கள் பயத்தால் உறைந்து போனார்கள். ஸ்டான்லி ஒரு குழந்தையைத் தூக்கிக் கையில் வைத்துக் கொண்டான். அது ஆமிக்காரரிடம் அனுதாபத்தைப் பெற்றுத் தரக்கூடும் என நம்பினான். ஆனால் அந்தத் தாய் இவனிடமிருந்து குழந்தையைப் பறித்து எடுத்தாள்.

ஸ்டான்லி கோவில் முன்மண்டபத்தில் நின்று பார்த்தபோது கோவிலைச் சூழ நெருப்புகள் முளாசி எழுவதைக் கண்டான். அந்த இருள் பிரியாத வேளையில் நெருப்புக்களைக் கொண்டு ஆமிக்காரர் ஓடி வருவதைக் கண்டான். 'அய்யோ வாறாங்களே' என்று குழறிக் கொண்டே கோவிலுக்குள் ஓடினான். கோவிலினுள் பிரார்த்தனை எழுந்து விழுந்தது. எல்லா வேதக்காரச் சனங்களும் முழந்தாளிட்டுச் செபம் சொல்லிக் கொண்டிருக்க அவர்களைப் பார்த்து சைவக்காரச் சனங்களும் முழந் தாளிட்டார்கள். ஆமிக்காரர்கள் கோவிலைச் சூழ்ந்து கொண்டார்கள். வாசல்களாலும் சாளரங்களாலும் துப்பாக்கிகள் நீண்டன.

'மேஹே தேவாலயட்ட கௌத லொக்காய்? தமுனான்சலா ஒக்கோம இக்மனிங் எலியட்ட ஹீல. போளிங் கறல இண்ட மே இன்ன ரஸ்தவாதியாய், ரஸ்தவாதியிட்ட உதவ கரப்பு கட்டியாய் எக்க பத்தட்ட இன்ட, மேஹே இந்தலா கவுறுத் ஹரி பன்னால ஹீல ஹித்துவுக் ஒக்கோட்ட அப்பி வெடி தியனவா.'

ஆமிப் பெரியவன் ஒரு வெறிநாய் மாதிரி தன் உருண்டையான சிவந்த கண்களைப் புரட்டிப் பேசினான். இப்போது செப ஒலிகளும் சடுதியில் நின்று சவ அமைதி. ஆமிப் பெரியவன் ஒற்றைக் கையால் உலுப்பி தன் கைத்துப்பாக்கியை அடித்து 'லோட்' செய்ய ஸ்டான்லி முழங்கால்களில் இருந்து, எழுந்து சிங்களத்தில் 'தறோ'வாகப் பேசினான்.

'மாத்தையா, இந்தக் கோவிலுக்கு நிரந்தரமான சுவாமியார் கிடையாது. நகரத்திலிருந்து மாதத்தின் முதல் ஞாயிறு வந்து பூசை வைத்துவிட்டுப் போவார். நேற்றும் வந்து போனார். இங்கு இருப்பவர்களில் எவரும் பயங்கரவாதியல்ல. நாங்களெல்லாம் ஏழைச் சனங்கள் எங்கள் மீது இரக்கம் செய்யுங்கள்.'

'பன்றியே உனக்கு எப்படிச் சிங்களம் பேசத் தெரிந்திருக்கிறது?'

'துரை, நான் மக்கோனாவில் சில வருடங்கள் இருந்திருக்கிறேன்.'

தேவாலயத்துள் சனங்களைச் சிறைவைத்து ஒரு கூட்டம் ஆமிக்காரர்கள் நிற்க, அந்தச் சனங்களுக்குள்ளிருந்து பதினெட்டுப் பேரைத் தெரிவு செய்து அவர்களது சாரங்களை உரிந்து அவர்களின் கைகளைப் பின்புறமாக ஆமிக் காரர்கள் இறுக்கக் கட்டினார்கள். அவ்வளவு பொடியளும் ஓங்குதாங்கான இளந்தாரிகள். பத்தொன்பதாவதாக ஸ்டான்லியின் சாரத்தையும் உரிந்து அவனின் கைகளையும் முறுக்கிக் கட்டினார்கள்.

அப்போது தேவாலயத்தின் அறைவீட்டுக்குள்ளிருந்து பாதிரியின் வெண் அங்கி அணிந்திருந்த ஒருவரை சில ஆமிக்காரர்கள் மூஞ்சியில் காறித்துப்பி பெரும் இளிப்பு இளித்து இழுத்து வந்தார்கள். அப்படி இழுத்து வரப்பட்டவர் அயிட்டம். பாதிரியின் வெண் அங்கியை எடுத்து அணிந்து கொண்டால் பாதிரியார் என்று நினைத்துத் தன்னை ஆமிக்காரர்கள் விட்டு விடலாம் என்று அயிட்டம் அப்பாவித்தனமாக நினைத்திருக்கலாம். அந்த நரகத்து முள் பொழுதில் கூட இவனுக்கு 'சங்கே முழங்கு' படத்தில் எம்.ஜி.ஆர் பாதிரி போல் வெண் அங்கியணிந்து வேடமிட்டு தப்பிச் செல்வது ஒரு செக்கன் ஞாபகத்தில் மின்னிப் போனது. ஆனால் எம்.ஜி.ஆரிடமோ யாழ்ப்பாணத்துப் பாதிரிகளிடமோ உள்ள பளபளப்பான மினுக்கு மூஞ்சியும் மிதப்பான விழிகளும் இல்லாத அயிட்டத்துக்கு அந்த அங்கி பொருந்தவேயில்லை. குழறிக்கொண்டு ஓடிவந்த நெசவக்காவின் சேலையை உருவி அதன் தலைப்பால் அயிட்டத்தின் இடுப்பில் ஒரு சுற்று சுற்றிக் கட்டிய ஒரு இளைய ஆமிக்காரன் சேலையின் மறு தலைப்பை தன் கையில் பிடித்துக் கொண்டான். இந்த இருபது பேரையும் ஆமிக்காரர்கள் ஒழுங்கைகளிலும் வீதிகளிலும் முன்னே ஓட்டி பின்னே நடந்தார்கள். மிதிவெடி, கண்ணிவெடி போன்ற பயக்கெடுதியிலேயே தங்களை முன்னே நடக்கவிட்டு அவர்கள் பின்னே வருவதை ஸ்டான்லி உணர்ந்து கொண்டான். இப்படியான தேவைகளுக்கென்றே இந்தியன் ஆமிக்காரர் இந்தியாவிலிருந்து ஆடுகளை இறக்குமதி செய்து தங்கள் படையணிக்கு முன்னே ஓட்டிச் சென்றதும் ஞாபகத்தில் வந்தது.

போகும் வழியில் வீதியில் பெரியப்பா, ஜோர்ஜ், இராசு அன்ன லெட்சுமி, ஜப்பான், கொக்கன் ஆகியோரின் வெடிபட்டும் சிதறியும் பாதி எரிந்தும் கிடந்த பிரேதங்களை இவன் கண்டான். ஊர் மனையைத் தாண்டி மெயின்ரோட்டில் ஏறி இலந்தையடியை நோக்கி இவர்கள் விரட்டிச் செல்லப்பட்டார்கள். ஆமிக்காரருக்கு அயிட்டம் ஒரு விளையாட்டுப் பொருளாய் ஆகிப்போனார். அயிட்டத்துக்கு கிட்டே வருவதும் வலது கையை ஓங்குவதாய்ப் பாவனை செய்து இடது கையால் எதிர்பாராத இடத்தில் குத்துவதும், அயிட்டத்தின் காலைத்தட்டி கால்தடம் போடுவதும், அயிட்டத்தை உதைத்து ஓடச் சொல்லி அவர் ஓடும்போது அவரின் இடுப்பில் கட்டப்பட்டிருந்த சேலையை ஒற்றியிழுத்து விழப்பண்ணுவதுமாக விளையாடினார்கள்.

அப்போதெல்லாம் அயிட்டம் 'ஐயோ அடிக்காதேயுங்கே சேர், எனக்கு அம்பத்தி மூண்டு வயது, ரெண்டு பொம்பிளப் பிள்ளையள்' என்று கதறுவார். அயிட்டத்தின் கைகள் எப்போதும் கும்பிட்டவாறேயிருந்தன.

அந்த இளைய ஆமிக்காரன் - அவனுக்கும் ஸ்டான்லியின் வயதுதானிருக்கும் - அவனது முதுகில் கனத்துக் கிடந்த இராணுவப் பையை அயிட்டத்தின் முதுகில் ஏற்றினான். இப்போது அவன் ஃப்ரியாய் முன்னும் பின்னும் ஓடி ஓடி இவர்களை விரட்டிச் சென்றான். அவனின் கையில் சேலைத்தலைப்பு இருக்கிறது. சேலையின் மறுமுனையில் கட்டப் பட்டிருந்த அயிட்டமும் அவனோடு சேர்ந்து ஓடினார். முதுகுப் பாரத்தால் ஆள் அரைவாசியாய் வளைந்தார்.

பொழுது உச்சியில் நிற்க இவர்கள் இலந்தையடியை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். வெயிலிலும் பயத்திலும் ஸ்டான்லிக்கு நா வரண்டு கிடந்தது. தண்ணீர் கேட்டதற்கு முகத்தைப் பொத்தி அடிதான் கிடைத்தது. அயிட்டம் சற்று பயம் குறைந்தவராகக் காணப்பட்டார். ஆமிக்காரனுக்குப் பின்னால் சேலைத்தலைப்பில் ஓடும்போது தனது வாயால் 'ர்ர்ர்ர்...' என வாகனம் ஓடுவது மாதிரியான சத்தத்தை எழுப்பினார். கைகளை அரை வட்டமாகச் சுழற்றி வாகனம் ஓட்டுவதாய் அபிநயித்தார். இடை இடையே 'ஹோர்னு'ம் அடித்தார். ஆமிக்காரர்களும் இதைப் பார்த்து இளித்தனர்.

இலந்தை மரத்தில் ஏற்கனவே நான்கு இளைஞர்கள் நிர்வாணமாகக் கட்டப்படிருந்தார்கள். அவர்களின் தேகங்களில் இரத்தக் கோடுகள் இறங்கியவண்ணமிருந்தன. அவர்களிடையே உணர்ச்சிகள் அற்ற இறுகிய முகத்தோடு ரேமன் கட்டப்பட்டிருப்பதை இவர்கள் கண்டார்கள். ரேமன் இயக்கத்துப் பொடியன்.

இந்த இருபது பேரையும் ஒரு நீள் கயிற்றில் இலந்தை மரத்தோடு ஆமிக்காரர்கள் பிணைத்தார்கள். ஏற்கனவே கட்டப்பட்டிருந்த நான்கு நிர்வாண இளைஞர்களிடையே யாராவது புலி இருந்தால் அடையாளம் காட்டித் தருமாறு இந்த இருபது பேரையும் ஆமிக்காரர் திரும்பவும் திரும்பவும் மிரட்டினார்கள். அயிட்டம்தான் இப்போது ஆமிக்காரரோடு நல்ல 'ஹொந்தாய்' ஆகிவிட்டாரே. அவர் தனது இரு கைகளையும் விரித்து ஆட்டி 'இங்க ஒரு புலியும் இல்ல' என்று ஆமிக்காரர்களுக்குச் சொன்னார். அவருக்கு நிச்சயமாக ரேமனைத் தெரிந்துதானிருக்கும்.

இவர்களை நோக்கித் திடீர் திடீரென ஆமிக்காரர்கள் கேள்விகளை வீசினர். ஒவ்வொருவரையும் குறுக்கு மறுக்காக விசாரணை செய்தனர். ஸ்டான்லிதான் மொழிபெயர்த்தான். ரேமனை அவர்கள் விசாரித்தபோது அவன், 'தான் மீனவன் என்று கூறி தூரத்தே கடலில் தெரிந்த களங்கண்ணி வலைக் கூட்டங்களைக் காட்டி அவை தன்னுடையவை என்றும் சொன்னான். அவன் குரலின் மிகை நடிப்பை ஸ்டான்லி தானே வெட்டி யதார்த்தமாக மொழிபெயர்த்து ஆமிக்காரர்களுக்குச் சொன்னான்.

'அது அப்படியா?' என்று ஆமிக்காரர் அயிட்டத்தைக் கேட்டபோது அயிட்டம், 'ஆம், அது அப்படித்தான்' எனச் சாதித்தார்.

நகரத்திலிருந்து வெடி முழங்கும் ஒலி எழுந்தது. சலிப்போடு வெடி எழுந்த திசையைப் பார்த்த ஆமிப்பெரியவன் திரும்பி இவர்களைப் பார்த்து 'புலிகளுக்கு நான் பாடம் கற்பித்துக் காட்டுவேன்' என்று சிங்களத்தில் உறுமினான். அவன் புலிகள் என உச்சரிக்கும்போது தனது கை விரலாலே இவர்கள் இருபத்து நான்கு பேரையும் சுட்டி ஒரு வட்டம் போட்டான்.

இப்போது ஆமிக்காரர் பதற்றப்பட்டார்கள். அவர்கள் வீதி நீளத்துக்கு அணிவகுத்து விறைத்து நின்றார்கள். ஆயிரம் ஆமிக்காரருக்குக் குறையாது என இவன் எண்ணினான். மேற்கிலிருந்து மெயின் ரோட்டால் அலறிக் கொண்டு இராணுவ வாகனங்கள் இலந்தையடியை நோக்கி வந்தன. சடார் சடார் சல்யூட்கள். வாகனங்களிலிருந்து சிலர் இறங்கி இவர்களை நோக்கி நடந்து வந்தனர்.

அப்படியாக வந்தவர்களில் ஒருவர் வெள்ளை 'நஷனல்' போட் டிருந்தார். கீழே உருமறைப்பு முரட்டுத்துணியில் முழுநீளக் காற் சட்டையும் ஆமிச்சப்பாத்தும் போட்டிருந்தார். அவரின் தலை முழுவதும் சிலும்பிய வெண்முடிகள் கடற்காற்றில் நட்டுக்கொண்டு நின்றன. அவரை ஸ்டான்லி பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் பார்த்திருக் கின்றான். அவர் ரஞ்சன் விஜேரத்ன. சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர்.

ரஞ்சன் விஜேரத்ன இலந்தை மரத்தோடு பிணைக்கப்பட்டிருந்த இவர்களைப் பார்த்து, 'பயங்கரவாதி எல்லாத்துக்கும் நாங்க சொல்றது' என்று கொச்சைத் தமிழில் பேச ஆரம்பித்தார். ரஞ்சன் விஜேரத்னவின் உரையின் சாரம் 'நீங்கள் கொல்லப்பட வேண்டிய கலகக்காரத் தமிழர்கள்' என்றிருப்பதை இவன் உணர்ந்தான்.

இப்படியாக அவர் பேசும்போது அவரருகில் நின்றிருந்த கறுப்பு முழுக்காற்சட்டையும் சிவந்த சட்டையும் தலையில் ஓலைத்தொப்பியும் அணிந்திருந்த ஒருவரிடம் அடிக்கடி பேசிக் கொண்டார். அந்த ஓலைத் தொப்பிக்காரரையும் எங்கோ பத்திரிகைப் புகைப்படமொன்றில் தான் முன்பே பார்த்திருப்பதாக ஸ்டான்லிக்குப் பட்டது. இப்போது ஆள் யாரென்று ஞாபகத்தில் வரவில்லை. ஒருவேளை அவர் அந்தத் தொப்பியைக் கழற்றினால் யாரென்று ஞாபகம் வரலாம். அத்தொப்பி அவரின் முன் மூஞ்சியில் பாதியை மறைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த மனிதர் கடைசிவரை ஓலைத் தொப்பியைக் கழற்றவில்லை.

இலந்தையடியிலிருந்து முப்பது யார் தூரத்தில் கடல். கடலுக்கு அப்பால் டச்சுக் கடற்கோட்டை நிமிர்ந்து நின்றது. அந்தக் கோட்டையும் அதனுள் இருந்த இராணுவப் படையணிகளும் புலிகளின் முற்றுகைக் குள்ளிருந்தன. கடற்கரை முழுவதும் இயக்கம் மிதிவெடிகளைப் புதைத்து வைத்திருப்பதை இவர்கள் அறிந்திருந்தார்கள். அக்கடலோரத்தில் நடமாட

ஊர்ச்சனங்களுக்கு இயக்கம் தடை விதித்திருந்தது. அங்கு மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பது குறித்து ஆமிக்காரருக்கும் ஏதோ துப்புக் கிடைத்திருக்கிறது என்று இவன் நினைத்தான். நிகழ்வுகள் அப்படித்தான் அமையலாயின.

ஒரு ஆமிக்காரன் வந்து இலந்தை மரத்தோடு பிணைக்கப்பட்டிருந்தவர்களிலிருந்து அயிட்டத்தை அவிழ்த்தெடுத்தான். ஆமிப்பெரியவன் கடற்கரைக்கு நடந்து செல்லுமாறு அயிட்டத்துக்கு உத்தரவிட இவன்தான் அக்கட்டளையை அயிட்டத்துக்கு மொழிபெயர்த்தான்.

இந்தக் கட்டளையைக் கேட்டவுடன் அயிட்டத்தின் தேகம் உதறிக் கால்கள் பின்னுவதை ஸ்டான்லி கண்டான். அயிட்டம் ஸ்டான்லியிடம் மெதுவாக 'தம்பி கடற்கரையில பொடியள் அயிட்டம் தாட்டு வைச்சிருக்கிறாங்கள்' என்றார். திரும்பிப் பார்த்தார்; அயிட்டத்தின் பிடரிக்கு பின்னால் துப்பாக்கிகளின் இலக்கு முட்கள். அயிட்டம் தலையில் கை வைத்தவாறே அங்குமிங்கும் பார்த்தார். வீதியோரத்தில் ஒரு அறுந்த ஒற்றை ரப்பர் செருப்புக் கிடந்தது. அதை எடுத்து வலது காலில் போட்டு விரல்களால் கௌவிப் பிடித்துக் கொண்டார். இடது கால் விரல்களால் பாதம் உயர்த்தி பூமியைத் தொட்டார். பிள்ளையாரே... பிள்ளையாரே... என்று உச்சரித்துக் கொண்டே மெயின் ரோட்டிலிருந்து இறங்கி கடற்கரையை நோக்கி நடந்தார். ஸ்டான்லி அயிட்டத்தின் காலடிகளை மனதுக்குள் எண்ண முயற்சித்தான். எண்பத்து நான்காவது அடியில் அயிட்டத்தின் கால்களுக்கு கீழே பூமி சீறி வெடித்தது. அயிட்டத்தின் அலறல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

அரசுத் தலைவர்கள் பரபரப்பும் ஆவேசமும் உற்சாகமும் கொண்டார்கள். அந்த ஓலைத் தொப்பிக்காரர் 'எல்லோரையும் மிதிவெடிக்குள் விரட்டுங்கள்' என்று வீறிட்டுக் கத்தி உத்தரவிட இருபத்து மூன்று பேரையும் பிணைத்திருந்த நீள் கயிற்றோடு அவர்கள் மிதிவெடிப் பிரதேசத்துள் விரட்டி விட்டார்கள். ரஞ்சன் விஜேரத்னாவும் அந்த ஓலைத் தொப்பிக்காரரும் போய் வாகனங்களில் ஏறிக் கொண்டார்கள். ஒரே வெடிச்சத்தமும் புகையும் கந்தக மணமும் ஓலமுமாய் கடற்கரை சிதறிக் கருகலாயிற்று.

இப்போது பிடிபட்டவர்கள் பாதியாய்க் குறைந்திருந்தார்கள். எல்லாமாகப் பதின்மூன்று மனிதர்கள் அன்று மிதிவெடியில் சிக்கி கடலோரமாய் விழுந்து கிடந்து இழுத்து இழுத்து இரத்தமோடிச் செத்துப்போனார்கள்.

இவனும் இன்னும் எஞ்சியிருந்தான். எஞ்சியிருந்தவர்களை அருகிலிருந்த சிறிய அலுமனியம் தொழிற்சாலைக்குள் பூட்டி வைத்தார்கள். அன்றிரவே இராணுவம் கிராமத்திலிருந்து தற்காலிகமாக நகர்ந்தது. போகும்போது அலுமனியம் தொழிற்சாலை சன்னலுக்குள்ளால் இரண்டு கைக்குண்டுகளை எறிந்துவிட்டுப் போனார்கள்.

ஸ்டான்லி இன்னும் எஞ்சியிருந்தான். அலுமனியம் தொழிற்சாலைக்குள் அடைபட்டிருந்தவர்களில் இவர்கள் மூன்று பேர் மட்டும் படுகாயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்கள்.

மருந்துத் தடை, மின்சாரத் தடை எல்லாவற்றிற்கும் அப்பால் டாக்குத்தர்மார் அறுத்துக் கொட்டித் தைத்து ஆளைச் சரிபண்ணியிருந்தார்கள். ஆசுப்பத்திரிப் படுக்கையில் திகிலோடு ஸ்டான்லி படுத்துக் கிடைக்கையிலே ஸ்டான்லியை விசாரிக்க இயக்கம் வந்தது.

விசாரிக்க வந்த பொடியன் ஒருமுறையில் ஸ்டான்லிக்கு பெறாமகன் உறவு. மிகச் சின்ன வயதிலேயே இயக்கத்துக்குப் போனவன். சில வருடங்களுக்குப் பிறகு அவனை இப்போதுதான் ஸ்டான்லி காண்கிறான். பெறாமகனுக்கு அப்போதும் சரி இப்போதும் சரி வாயைத் திறந்தாலே 'அஹ்... அஹ் ஹா ஹா... ஹா...' சிரிப்புத்தான்.

'ஆஹா... ஹ்... ஹஹ்... குஞ்சையா ஒரு மாதிரித் தப்பியிற்றியுங்கள். ஹா... ஹா...' ஸ்டான்லி பீதியோடு புன்னகைத்தான். 'குஞ்சையா என்ன நடந்தது எல்லாத்தையும் விபரமாய்ச் சொல்லுங்கோ'

'என்ன நடந்ததோ? அது சரி ஆமி வர முன்னமே நீங்கள் ஓடிப்போட்டியள்தானே?

'ஹ்... ஹா... என்ன குஞ்சையா தேசத்துரோகி மாதிரிக் கதைக்கிறியள். நாங்கள் என்ன செய்தும் உங்களுக்கு நன்றியில்ல. இப்ப இஞ்ச ஆஸ்பத்திரிக்கு உங்களக் கொண்டுவந்து சேர்த்ததும் நாங்கள்தான் ஹா...'

'சரி இப்ப நீ என்ன கேக்கிறாய்?'

'அது, நடந்தது, வந்தது, காட்டிக் குடுத்தது, ரேமனுக்கு நடந்தது, வாகனம், ஆயுதம், ஆள்க்கணக்கு எல்லாம் சொல்லுங்கோ'

'என்னைத் திரும்பவும் ஆமி பிடிச்சால், உங்களுக்கு ரிப்ஸ் தந்ததைக் கேள்விப்பட்டானோ என்னை உடனே கொல்லுவான்.'

'ஹா பேந்தும் பார் குஞ்சையாவ ஒரு தேசத்துரோகி போல கதைக்கிறேர்...'

பெறாமகன், இந்தத் தேசத்துரோகி என்ற வாக்கியத்தைப் பிரயோகிப்பதில் அதீத ஆர்வம் காட்டினான். பகடி, வெற்றி எல்லாவற்றுக்கும் இப்பதத்தைப் பிரயோகித்துப் பேசினான்.

ஸ்டான்லி மிகுந்த பிரயாசையுடன் நிகழ்ந்த எல்லாவற்றையும் ஞாபக அடுக்குகளிலிருந்து உருவி இயக்கத்திடம் கொடுத்தான். ஆமிக்காரரின் எண்ணிக்கை, அவர்களின் ஆயுதங்கள், வாகன அமைப்புகள், அணிகள், ஆமிக்காரர்கள் தங்களுக்குள்ளே சிங்களத்தில் நடாத்திய உரையாடல்கள் போன்ற எல்லாவற்றையுமே ஒன்றுவிடாமல் சொன்னான். அவை இயக்கக்காரருக்குப் பெரிதும் பயனளிக்கும் தகவல்களாய் அமையக்கூடும் என நம்பினான். ரஞ்சன் விஜேரத்ன பற்றியும் ஓலைத் தொப்பிக்காரர் பற்றியும் சொன்னான்.

ஆனால் இவனுக்கு இப்போதுகூட ஓலைத்தொப்பிக்காரரை அடையாளம் பிடிக்க முடியவில்லை. பெறாமகனும் பெறாமகனோடு வந்தவர்களும் இதை விடுவதாயும் இல்லை. மிகுந்த ஆர்வத்துடனும் கவனத்துடனும் ஓலைத்தொப்பிக்காரர் குறித்துக் கிண்டிக் கிண்டிக் கேட்டனர். அடுத்த நாள் சில புகைப்படங்களைக் கொண்டுவந்து காட்டி விசாரித்தனர். ஒரு புகைப்படத்தைப் பார்த்த ஸ்டான்லி 'இவர் டக்ளஸ் தேவானந்தா, இவரை எனக்குத் தெரியும்' என்று முணுமுணுத்தான். 'ஹா... இந்தத் தேசத்துரோகியும் இல்லையா' என்று சொல்லி பெறாமகன் அலுத்துக்கொண்டான்.

ஸ்டான்லி ஓலைத்தொப்பிக்காரரின் அங்க அடையாளங்களை விபரித்தான். ஓலைத் தொப்பிக்காரர் மிகுந்த கோபத்துடன் அகங்காரமும் விசமமும் தோய்ந்த குரலில் இவர்களை மிதிவெடிக்குள் விரட்டிய 'ஸ்டைலை'ச் செய்தும் காட்டினான். இறுதியில ஒரு தெந்தெட்டாக அவரின் மூஞ்சியைக் கோடுகளாலே கீறியும் காட்டினான். என்னதான் முயற்சிகள் செய்து பார்த்த போதிலும் இவனாலோ இயக்கக்காரராலோ அந்த ஓலைத் தொப்பிக்காரரை அடையாளம் காண முடியாமலே போனது.

பின்பு ஸ்டான்லி வெளிநாட்டுக்கு வருவதற்காகக் கொழும்புக்கு வந்தபோது 'பஞ்சிகாவத்த' தெருச்சுவரில் ஒட்டியிருந்த ஒரு தேர்தல் பிரச்சாரச் சுவரொட்டியில் ஓலைத்தொப்பிக்காரரின் புகைப்படத்தையும், பெயரையும் கண்டான். அவர் ரணில் விக்ரம சிங்க.

அப்போதெல்லாம் ரணில் விக்கிரம சிங்க பெரிய பிரபலமில்லை. சர்வதேசப் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் அவரைக் குறித்து நம்பிக்கை தெரிவிப்பது போன்ற அயிட்டங்களும் நிகழ்ந்திருக்கவில்லை.

பணிப்பெண்கள்

ஜோன் ஜெனே

தமிழில்: கதி

கதாபாத்திரங்கள்

சோலான்ஸ், கிளேயர் இரு பணிப்பெண்கள்; சகோதரிகள்; முப்பதிலிருந்து முப்பத்தைந்து வயதுக்குள் இருப்பார்கள். சோலான்ஸ் மூத்தவள். மதாம் அவர்களின் எசமானி; அவளுக்கு ஏறத்தாழ இருபத்தைந்து வயது இருக்கலாம்.

எசமானியின் சயன அறை

15வது லூயி காலத்துத் தளபாடங்கள் மிக அரிதான லேஸ்துணிகள், முன்வீட்டை நோக்கித் திறந்த ஜன்னல் வலதுபக்கம் கட்டில், இடதுபக்கம் ஒப்பனை மேசையும் ஒரு கதவும்; மலர் அலங்காரத்தில் ஊதாரித்தனம்.

(கிளேயர் மெல்லிய உள்ளாடை அணிந்து தனது பின்புறத்தை ஒப்பனை மேசைக்குக் காட்டியவாறு நிற்கின்றாள் - விரிந்த கைகள், குரலில் மிகைப்படுத்தப்பட்ட வருத்தபாவனை)

கிளேயர்: கையுறைகள், என்றுமே உன்னை விட்டகலாத கையுறைகள்! எத்தனை முறை உனக்குச் சொல்லியுள்ளேன், அவைகளைச் சமையலறையிலே விட்டு வைக்கச் சொல்லி. நீ பால்காரனை உனது கையுறைகளைக் கொண்டு வசீகரிக்க நினைக்கின்றாய் போலும். இல்லை, இல்லை பொய் பேசாதே; அது உனக்கு எந்தப் பயனையும் அளிக்கப் போவதில்லை! அவைகளை கழுவும் தொட்டியின் மேல் தொங்கவிடு. இந்த அறையின் தூய்மை கெட்டுவிடக் கூடாது என்பதை என்றுதான் நீ புரிந்து கொள்ளப் போகின்றாயோ... எல்லாமும் - ஆம் சமையலறையிலிருந்து வரும் எல்லாமும் எச்சில் பட்டவைதான். எனவே அப்படி நடந்து கொள்வதை விட்டுவிடு. (இந்த உரையாடல் நேரம் முழுவதும் சோலான்ஸ் தனது ரப்பர் கையுறைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். தனது கையுறைகளிட்ட கைகள் ஒரு விசிறியைப் போல் விரிவதையும் பூங்கொத்தினைப் போல் சுருங்குவதையும் அவதானித்துக் கொண்டிருந்தாள்.) நீ வீட்டினில் இருப்பதை நினைவு கொள். ஒரு மயிலினைப் போல் உன்னை அழகுபடுத்திக் கொள்; எல்லாவற்றிற்கும் மேலாக அவசரப்படாதே! நமக்கு நேரம் தேவைக்கதிகமாகவே இருக்கின்றது.

(சோலான்சின் தோற்ற அமைவு மாறுகின்றது. பணிவுடன் ரப்பர் கையுறைகளை விரல் நுனியில் பிடித்தவாறு வெளியேறுகிறாள். கிளேயர் ஒப்பனை மேசையில் அமர்கிறாள். பூக்களை முகர்ந்து பார்க்கின்றாள். வாசனைத் திரவியங்களின் மேல் தனது விரல்களை ஓட விடுகின்றாள். தலை முடிகளைச் சீவிக் கொள்கிறாள். முகத்தினை ஒற்றிக் கொள்கின்றாள்.) எனது உடைகளை ஆயத்தப்படுத்து. சீக்கிரம், நேரம் விரயமாகின்றது... நீ எங்கே இருக்கின்றாய் (மேசையிலிருந்த வாறு திரும்பி) கிளேயர்! கிளேயர் (சோலான்ஸ் உள்ளே வருகின்றாள்)

சோலான்ஸ்: மன்னிக்க வேண்டும் மதாம். நான் மதாமின் தேநீரைத் தயார் செய்துகொண்டிருந்தேன்.

கிளேயர்: எனது ஆடை அணிகலன்களை ஆயத்தப்படுத்து. சரிகை வேலைப்பாடுடன் கூடிய எனது வெள்ளை உடை, கைவிசிறி, இரத்தினக் கற்கள் வைத்த நகைகள்.

சோலான்ஸ்: நல்லது மதாம். மதாமின் எல்லா நகைகளையுமா?

கிளேயர்: எல்லாவற்றையும் வெளியே எடுத்து வை, நான் தெரிவு செய்து கொள்கின்றேன். அத்துடன் நிச்சயமாக எனது பிரத்தியேக வடிவமைப்புக் கொண்ட தோல்காலணிகள். நீ வருடக் கணக்காக கண் வைத்துள்ளாயே, அதே காலணிகள்தான். (சோலான்ஸ் சில நகைப் பெட்டிகளை சிறு அலுமாரியினுள் இருந்து எடுத்து கட்டிலின் மேல்

வைக்கின்றாள்.) நீ உனது திருமணத்திற்கு அணியத்தானே எனது காலணிகள் மேல் கண் வைத்துள்ளாய். சந்தேகமே இல்லை, அவன் உன்னை மயக்கி விட்டான்! பார் அவளை, என்னவொரு செழுமை! உண்மையை ஒத்துக்கொள். (சோலான்ஸ் கம்பளத்தின் மீது குந்தி இருந்து கொண்டு எச்சிலிட்டு காலணிகளை மினுக்குகின்றாள்.) நான் உனக்குச் சொல்லி உள்ளேன் எச்சில் படுத்தாதே என்று; அதை உன் மனதில் பதித்து வைத்துக் கொள் என் குழந்தாய், மனதின் ஆழத்திலதை நிறுத்தி வை. ஹா... ஹா... (ஒரு பரபரப்பான அடங்கிய சிரிப் பொலியை வெளிப்படுத்தி) நீ ஓர் அருவருப்பானவள். முன்னால் உடலை வளைத்து எனது காலணிகளில் உன்னைப் பார்த்துக் கொள். உனது உமிழ் நீர் வெள்ளத்தில் என் கால் புதைந்து போவது எனக்கு மகிழ்ச்சியைத் தருமென நீ நினைக்கின்றாயா?

சோலான்ஸ்: (முழந்தாளிட்டு மிகப்பணிவாக) எனது ஆசை மதாம் அழகாகக் காட்சியளிக்க வேண்டுமென்பதே.

கிளேயர்: நிச்சயமாக நான் அழகாகக் காட்சியளிப்பேன் (கண்ணாடி முன் தன்னைச் சீர்படுத்திக் கொள்கின்றாள்) நீ என்னை வெறுக்கின்றாய் இல்லையா? உனது கவனிப்புக்களாலும், பணிவாலும் என்னை நீ அடக்கி விடுகின்றாய். பூக்களைக் கொண்டு என்னை நீ நசுக்கி விடுகின்றாய். (எழுந்து நின்று குரலைத் தாழ்த்திக் கொண்டு) நிறையப் பூக்களால் இந்த அறை தேவைக்கதிகமாகவே அலங்கரிக்கப் பட்டுள்ளது. என்னால் நம்ப முடியாமலிருக்கின்றது (மறுபடியும் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்கின்றாள்) நான் அழகாகத் தான் இருப்பேன். உன்னால் என்றுமே என்னைப் போல் அழகாக இருக்க முடியாது. இந்த முகத்தையும் உனது உடல் தோற்றத்தையும் வைத்துக் கொண்டு உன்னால் மரியாவைக் கவர்வது இயலாத காரியம். (பாசாங்கான தொனியைக் கைவிட்டு) ஓர் உதவாக்கரைப் பால்கார இளைஞன் எங்களை முட்டாளாக்குகின்றான். நாங்கள் ஒரு குழந்தையை அவன் மூலம் பெறப்போகிறோம்.

சோலான்ஸ்: ஆ நான் என்றுமே...

கிளேயர்: (விட்டதொனியில் தொடர்ந்து) பேசாதே முட்டாளே. எனது உடை!

சோலான்ஸ்: (அலுமாரியில் தொங்கும் உடைகளை கைகளால் தள்ளிக் கொண்டே) சிவப்புடுப்பு, மதாம் சிவப்பு உடுப்பினை அணிந்து கொள்வார்.

கிளேயர்: வெள்ளையுடுப்பு - சரிகையுடன் கூடியது.

சோலான்ஸ்: (உறுதியாக) மன்னிக்க வேண்டும். மதாம் சிவப்பு நிற வெல்வெட் உடையைத்தான் இன்று மாலை அணிவார்.

கிளேயர்: (வெகுளிக்குரலில்) ஏன்?

சோலான்ஸ்: (உணர்வுகளை வெளிக்காட்டாத குரலில்) வெல்வெட் மடிப்புகளினுள் பொதிந்த மதாமின் மார்பகங்களைப் பார்ப்போரால் மறக்கவே முடியாது. அத்துடன் மார்பிலணியும் அந்த 'புரோச்' மதாம் பெருமூச்சுக்களுடன் உரையாடும்போது, எனது பக்திக்குப் பாத்திர மான கர்த்தாவே! உங்களது விதவை நிலை முற்று முழுவதுமான கறுப்பு உடையைத்தான் அனுமதிக்கின்றது.

கிளேயர்: ஆ...

சோலான்ஸ்: இதற்கு மேலும் சொல்ல வேண்டுமா? அறிவுள்ளோர்க்கு ஒரு சொல்

கிளேயர்: ஆகா, அப்படியானால் நீ பேச விரும்புகின்றாய்... நல்லது என்னைப் பயமுறுத்து! உனது எஜமானியைச் சிறுமைப்படுத்து! சோலான்ஸ், மிசுயுவின் துர்பாக்கிய நிலைமை பற்றி நீ பேச விரும்புகின்றாய்; அப்படித்தானே? முட்டாளே பொருத்தமற்ற இந்த நேரத்தில் அது பற்றி ஏன் மறைமுகமாகக் கூட குறிப்பிடுகின்றாய்? என்னால் இந்தத் துர்ப்பாக்கிய நிலையைக் கூட எனக்குச் சாதக மாகத் திருப்பிவிட முடியும். நீ புன்னகைக்கின்றாயா? நீ இதை நம்பவில்லையா?

சோலான்ஸ்: அதை வெளிக்கொண்டுவர நேரமின்னும் கனியவில்லை.

கிளேயர்: என்னவொரு மொழிப் பிரயோகம்! என்றும் அழிக்க முடியாத என் மீதான பழி! என்றும் அழிக்க முடியாத என் மீதான பழி, வெளிக்கொண்டுவர!

சோலான்ஸ்: மதாம்...

கிளேயர்: மிசுயுவை பொலீசிற்குக் காட்டிக் கொடுத்ததற்காக உனக்கு நான் பணிந்துபோக வேண்டுமோ? அவரை விற்று விட்டதற்காக? என்னால் இதைவிடத் திறமையாக அன்றேல் முட்டாள்தனமாக நடந்திருக்க முடியும். நான் வருந்தவில்லை என்று நீ நினைக்கிறாயா? கிளேயர் எனது கரங்களால் அந்தக் கடிதத்தை எழுத என்ன பாடு பட்டேன்! எழுத்துப் பிழைகள் விடாமல், சொல், பொருளில் பிழை யில்லாதிருக்க, எதையுமே எழுதி பின்பதனைக் கோடிட்டு அழிக்காம லிருக்க, என் காதலனைச் சிறைக்கனுப்பிய அந்தக் கடிதத்தை வரைய... ஆனால் நீ எனக்குப் பக்கபலமாய் இருப்பதை விட்டு என்னைப் பரிகசிக்கின்றாய். உனது எண்ணங்களை என் மீது திணிக்கின்றாய். நீ விதவை நிலை பற்றிப் பேசுகின்றாய். அவர் இறந்து விடவில்லையே; மிசுயு ஒரு சிறைச் சாலையிலிருந்து இன்னொரு சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்படுவார். சில வேளைகளில் பேய்த் தீவிற்குக் கூடக் கொண்டு செல்லப்படலாம். அவரது காதல் அடிமையான நான் ஆழ் துயரோடு பைத்தியமாகி அவரைப் பின் தொடரலாம். அவரை ஏற்றிச் செல்லும் காவலர் வாகனத் தொடரணியில் நானும் செல்லலாம்.

அவரின் புகழை நானும் பகிர்ந்து கொள்ளலாம். நீ என்னவென்றால் விதவை நிலை பற்றிப் பேசுகின்றாய். அரசிகளின் துக்க மரபு நிறமான வெள்ளை ஆடையை அணியத்தர மறுக்கின்றாய். உனக்கு விளங்கவில்லை கிளேயர்...

சோலான்ஸ்: (உணர்வற்ற குரலில்) மதாம் சிவப்பாடையை அணிந்து கொள்வார்.

கிளேயர்: (சாதாரணமாக) பேசாதே! (கடுமையாக) எனது உடையை என்னிடம் கொடு. ஓ... நான் மிகவும் தனிமையாயும் நண்பர்கள் அற்றவளாயும் போய் விட்டேன். உனது கண்களில் என் மீதான மனமார்ந்த வெறுப்பினைக் காண்கிறேன். எனக்கு என்ன நடந்தாலும் அதுபற்றி உனக்கு அக்கறையே கிடையாது.

சோலான்ஸ்: நான் நீங்கள் போகுமிடமெலாம் உங்களைப் பின் தொடர்ந்து வருவேன். நான் உங்களை நேசிக்கின்றேன்.

கிளேயர்: அதில் சந்தேகமில்லை; ஓர் எஜமானியை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி என்னை நேசிக்கின்றாய், மதிக்கின்றாய்; அத்துடன் என்னிடமிருந்து முதுசொத்தை எதிர்பார்க்கின்றாய். என் உயிலில் உன் பெயரும் வரவேண்டுமென நினைக்கின்றாய்.

சோலான்ஸ்: எனது சக்திக்குட்பட்ட விதத்திலெல்லாம்...

ளேயர்: (வஞ்சகப் புகழ்ச்சியுடன்) நீ எனக்காக எதையும் செய்வாய், அது எனக்குத் தெரியும். (சோலான்ஸ் கிளேயர் உடையணிய உதவுகின்றாள்) சேர்த்துக் கட்டு, என்னை வரிந்து மூட்டையாகக் கட்ட முயலாதே. (சோலான்ஸ் கிளேயரின் பாதங்களருகில் முழந்தாளிட்டு உடையின் மடிப்புக்களைச் சீர் செய்கின்றாள்) என்னை உன் கையால் தொடு வதைத் தவிர்த்துக் கொள்; நீ ஒரு மிருகம் போல் நாறுகின்றாய். இரவினில் அடிமைப்பணி புரிபவர்கள் எங்களைச் சந்திக்க வருவார்களே, அந்த மேல் மாடத்து அறை, அங்கிருந்துதான் இந்த நாற்றத்தை நீ கொண்டு வந்துள்ளாய். அந்த அறைக்குமொரு பெயர் பணிப்பெண் அறை - ஒரு கேவலமான பொந்து. (நளினமாக) கிளேயர் ஞாபகம் காரணமாகத்தான் மேல்மாட அறையைப் பற்றிப் பேசினேன். அங்குதானே ஏவல் பணி புரிபவர்கள் எங்களை இரவில் சந்திக்க வருவார்கள் - பணிப்பெண் அறை! மேல்மாடி அறை! அத்துடன் அந்த இரண்டு கட்டில்கள், இரு சகோதரிகளும் ஒருவர் மேல் மற்றவர் கனவு கொண்டு தூங்குவது. (அறையில் ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி) அங்குதான் இரண்டு இரும்பிலான கட்டில்கள் கிடக்கும். இடையே ஒரு சிறிய மேசை. அங்கே (முன்னைய பக்கத்திற்கெதிராக ஒரு பகுதியைச் சுட்டிக் காட்டி) இங்குதான் மலிவான பலகையிலான ஒப்பனை மேசையுடன் கூடிய கன்னி மரியாளின் அடுத்தார்! நான் சொல்வது சரிதானே? 313

சோலான்ஸ்: தாங்கள் மிகவும் மகிழ்வற்றுக் காணப்படுகின்றீர்கள். இப்படியே பேசினால் நான் அழுதுவிட நேரிடும்.

கிளேயர்: நான் சொல்வது சரிதானே? உனது அழுகையையும் முழந்தாளிடலையும் விட்டு விடுவோம். நான் காகிதப் பூக்கள் பற்றிச் குறிப்பிடக்கூடாதுதான் (சிரிப்புடன்) காகிதப் பூக்கள்! இந்த மலர்களைப் பார், என்னை கௌரவிப்பதற்காகவே தங்கள் மலர்வினை அர்ப்பணித்தவை! கிளேயர், நானொரு அதிரூப கன்னியல்லவா?

சோலான்ஸ்: (தன்னைக் கிளேயருக்கு அர்ப்பணித்தது போன்ற தொனியில்) அமைதியாயிருங்கள்.

கிளேயர்: அத்துடன் அங்கே (ஜன்னலில் மிக உயரமான பகுதியைச் சுட்டிக்காட்டி) அந்தக் கூரை ஜன்னல், அதனூடானகத்தானே அரை நிர்வாணமாய் பால்காரன் உனது கட்டிலின் மேல் குதிப்பான்.

சோலான்ஸ்: மதாம், நீங்கள் உங்களை மறந்து பேசுகின்றீர்கள்.

கிளேயர்:கைகள்; உனது கைகள் பற்றி மறந்து போய்விட்டதா (பேச்சறுந்த இடைவெளி பின் முணுமுணுப்பாக) அவைகள் கழுவும் தொட்டியையே அசுத்தப்படுத்திவிடும்.

சோலான்ஸ்: வீழ்ச்சி!

கிளேயர்:: என்ன?

சோலான்ஸ்: (கிளேயரின் உடுப்பை இடையினில் ஒழுங்குபடுத்திய வாறு) உடுப்பு இடுப்பிலிருந்து கீழ் நோக்கி விழுவதை எடுப்பாகத் தெரிய ஒழுங்குபடுத்துகின்றேன்.

கிளேயர்: உன் கைகளை என் மீதிருந்து எடு குளறுபடிக்காறியே. (தனது சப்பாத்தின் குதியினால் சோலான்சின் தாடையில் உதைக்கிறாள். முழந்தாளிட்டிருந்த சோலான்ஸ் தடுமாறிப் பின் வாங்குகிறாள்)

சோலான்ஸ்: ஓ நானொரு திருடியா?

கிளேயர்: திருடியல்ல; எதிலும் திறமையற்றவள் என்று சொன்னேன். நீ தேம்ப வேண்டுமாயின் உனது பொந்துக்குள் போய் அழு. எனது படுக்கையறையில் கௌரவம் மிக்கவர்களின் கண்ணீர்தான் சிந்தப்பட வேண்டும். ஒரு காலம் வரும், அந்தக் கண்ணீர்த் துளிகள் என் ஆடையின் ஓரங்களை அலங்கரிக்கும். அவைகள் விலைமதிப்பற்ற கண்ணீர்த் துளிகளாய் இருக்கும். முட்டாளே, எனது உடையின் தரையில் புரளும் பகுதியை ஒழுங்கு செய்.

சோலான்ஸ்: (பரவச நிலையில்) நீங்கள் தன்நிலை மறந்து போய் விடுகின்றீர்கள்

கிளேயர்: உண்மையாகச் சொல்லுகிறேன், அவன் என்னைத் தன் வாசனை நிறைந்த கரங்களால் தூக்கிச் செல்கிறான். என்னை உயரத் தூக்குகின்றான். நான் தரையில் கால் பாவாது மேலெழும்புகின்றேன்.

(தனது சப்பாத்துக் கால்களால் தரையை உதைத்துக் கொள்கின்றாள்) ஆனால் நான் பின்தங்கி நிற்கின்றேன். எனது 'நெக்ல'சை எடு. எங்களுக்கு நேரம் போதாது. எனது ஆடை நீளமாக இருந்தால் மடித்து ஊசிகளைக் கொண்டு அளவாக மடித்துக் குத்து (சோலான்ஸ் எழுந்து நகைப் பெட்டியுனுள் இருந்து ஒரு 'நெக்லசை' எடுக்க கிளேயர் அதிலும் வேமாகச் சென்று அதனை எடுக்க அவளின் விரல்கள் சோலான்சின் விரல்கள் மீது படிகிறது. அருவருப்புடன் தனது விரல்களை மீட்டுக் கொள்கிறாள்.) உனது கைகளால் என்னைத் தொடாதே! என்னால் நீ தொடுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. சிறிது உன்னைத் துரிதப்படுத்து.

சோலான்ஸ்: எல்லாவற்றையும் மிகைப்படுத்த ஒரு தேவையுமில்லை. உங்கள் கண்களில் பிரகாசம் தெரிகின்றது.

கிளேயர்: (ஆச்சரியத்துடன்) நீ இப்போது என்ன சொன்னாய்?

சோலான்ஸ்: முடிவுகள் எல்லைகள் மதாம்; எல்லைகள் ஒப்பந்தங் களல்ல, மரபுமல்ல, அவை சட்டங்கள். இங்கே எனது நிலங்கள்; அங்கே உங்களது கரைகள்

கிளேயர்: என்னவொரு மொழிப் பிரயோகம், எனது அன்பான கிளேயரே! நான் ஏற்கனவே கடலைக்கடந்து விட்டேனென நீ கருதுகின்றாயா? உனது கற்பனைகளை என் மீது திணிக்கின்றாயா? நீ என்னைப் பழி வாங்குகின்றாய், அப்படித்தானே? காலப்போக்கில் ஒரு பணிப்பெண்...

சோலான்ஸ்: உங்களால் என்னை உள்ளும் புறமும் பார்க்க முடிகின்றது. எனது சிந்தனைகளை மகிமைப்படுத்துகின்றீர்கள்.

கிளேயர்: (மேலும் உணர்ச்சிவசப்பட்டு) காலப்போக்கில் ஒரு பணிப்பெண் பணிப்பெண்ணாக இல்லாது பழி வாங்கலாக உருமாறும் காலம் வந்து விட்டதென்கிறாய். ஆனால் கிளேயர் மறந்து விடாதே, கிளேயர் கவனிக்கின்றாயா? மறந்துவிடாதே பழி வாங்கும் திட்டங்களைப் பணிப்பெண்தான் சிந்தனையில் அடைகாக்கின்றாள். நான், கிளேயராகிய நான் இதைச் செவிமடுக்கவில்லை.

சோலான்ஸ்: (வேறெங்கோ கவனத்துடன்) நான் செவிமடுக்கின்றேன்.

கிளேயர்: நான் என்னுள் பணிப்பெண்ணையும் பழிவாங்கலையும் ஒரு சேரக் கொண்டுள்ளேன். அவ்வப்போது இவைகளில் ஒன்று வெளிப்படும். வாழவும் மீளவும் இவைகளுக்கு நான் சந்தர்ப்ப மளிப்பேன். கிளேயர் இது ஒரு சுமை. எஜமானியாக இருப்பது துன்பங்கள் நிறைந்த ஒரு வாழ்க்கை; எல்லா வெறுப்புகளினதும் ஊற்றுக் கால்களாகவும் அருவருப்பான மலக்குவியலாகவும் அதிலே வளர்பவளாயும் இருக்க வேண்டும். என்னை நிர்வாணமாக ஒவ்வொரு நாளும் பார்க்க விரும்புகின்றாய். நான் அழகானவள்? இல்லை

என்று கூற முடியுமா? என் காதலின் ஏக்கம் இன்னும் என்னை மெருகுபடுத்தும். ஆனால் எவ்வளவு மனத்தைரியம் வேண்டுமென்று உனக்குப் புரியாது. .

சோலான்ஸ்: (ஆழ்ந்த யோசனையில்) உங்கள் காதலர்!

கிளேயர்: என் பரிதாபத்துக்குரிய காதலன் என்னை மேன்மைப் படுத்துகின்றான். ஆனால் நமக்குத் தெரிந்ததெல்லாம் நமது இழி நிலைதான்.

சோலான்ஸ்: இந்த மட்டும் கதை போதும். விரைவாகப் புறப்படு. நீ செல்ல ஆயத்தமா?

கிளேயர்:: நீ ஆயத்தமா?

சோலான்ஸ்: (உடுப்பு அலுமாரியை நோக்கிச் சென்று கொண்டு) நான் ஒரு வெறுக்கப்படும் பொருளாக இருப்பதில் இனியும் எனக்குச் சம்மதமில்லை. நான் உன்னை வெறுக்கிறேன். என் மனது நிறைய உன் மீது ஏளனம்தான் உள்ளது. உனது வாசனையூட்டிய மார்பகங்களை வெறுக்கிறேன். உனது .... தந்த நிற மார்பகங்கள்! உனது .... தங்க நிகர் தொடைகள் ... உனது ... பொன்னாம்பல் நிறப் பாதங்கள். நான் உன்னை வெறுக்கிறேன். (சிவப்பு நிற உடை மீது துப்புகிறாள்.)

கிளேயர்: (திகைப்புடன்) அ... அ... ஆனால்....

சோலான்ஸ்: (அவளை நோக்கி நடந்து கொண்டு) ஆம், பெருமை பிடித்த அழகியே நீ நினைத்ததையெல்லாம் செய்துவிட முடியுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறாய். இவ்வுலகின் அழகெல்லாவற்றையும் என்னை அண்டவிடாது தடுக்க முடியுமென எண்ணுகிறாய். உன்னால் உனது வாசனைத் திரவியங்களை உனது நகப் பூச்சுகள் பட்டுகளை வெல்வெட் துணிகள், சரிகைகளைக் கவனமுடன் தேர்ந்ததெடுக்க முடியுமென்றும் என்னால் இவைகளை அடைய முடியாது செய்யவும் நீ நினைக்கிறாய். எனது பால்காரனை என்னிடமிருந்து பறிக்க முடியுமென நினைக்கிறாய்? ஒப்புக்கொள்! பால்காரனின் இளமையும் ஆண்மையும் உன் உணர்வுகளைத் தூண்டவில்லை? உண்மையை ஒத்துக்கொள்; ஏனெனில் சோலான்ஸ், சொல்கிறேன்! நீ நாசமாகப் போ!

கிளேயர்: (பயப்பிராந்தியுடன்) கிளேயர்... கிளேயர்...

சோலான்ஸ்: ங்ஹா...

கிளேயர்: (பிதற்றலாக) சோலான்ஸ் - கிளேயர் - சோலான்ஸ்

சோலான்ஸ்: ஆம் கிளேயர், கிளேயர்தான் சொல்கிறேன். நீ நாசமாய் போ. கிளேயர்தான் இங்கிருக்கின்றேன். பிரமிக்கத்தக்க அழகுடன் காண்போரை வெட்கித் தலை குனிய வைக்கும் சவுந்தரியத்துடன் (கிளேயரின் கன்னத்தில் அறைகிறாள்.)

கிளேயர்: ஓ கிளேயர் நீ... ஓ...

சோலான்ஸ்: மதாம் நினைத்தீர்கள் போலும் பூக்களின் அணி வகுப்புக்காவல் தங்களைப் பாதுகாக்குமென்று, மற்றவர்களில் நின்று வேறுபட்ட விசேட வாழ்க்கை தங்கள் தலையில் எழுதப்பட்டுள்ள தென்று. ஆனால் மதாம் நீங்கள் பணிப்பெண்ணின் எழுச்சியை, கோபத்தைக் கணக்கிலெடுக்க மறந்து விட்டீர்கள். அவள் உங்கள் அழகிய பேச்சுகளைக் குப்பையிலும் கேவலமாக ஆக்கிக் காட்டுவாள். உங்களது காதல் களியாட்டத்தின் அடிப்படையையே வெட்டிச் சாய்ப்பாள். உங்களது மிசுயு ஒரு கீழ்த்தரமான திருடன் நீங்கள்...

கிளேயர்: நான் உன்னை எச்சரிக்கிறேன். உனது மடமையை ஒத்துக் கொள்.

சோலான்ஸ்: சுத்தப் பிதற்றல், நீங்கள் எனக்குத் தடையுத்தரவு போடுகிறீர்கள்! மதாம்தான் மடமையை ஒத்துக் கொள்ள வேண்டும். தங்களது முகம் அதிர்ச்சியைக் காட்டுகிறது. கண்ணாடி வேண்டுமா பார்த்துக் கொள்ள, இதோ! (கிளேயருக்குக் கண்ணாடியைக் கொடுக்கிறாள்.)

கிளேயர்: (திருப்தியுடன் தன்னைப் பார்த்துக் கொண்டு) கன்னத்தில் அறைந்த விரல்களின் அடையாளம் பதிந்துள்ளது. ஆயினும் எப்போதையும்விட இப்போது அழகாகவுள்ளேன்.

சோலான்ஸ்: ஆம், ஓர் அறை!

கிளேயர்: ஆபத்தானது கிளேயர் நீ இருளில் உழல்கின்றாய்.

சோலான்ஸ்: ஆனால் இருள் ஆபத்தானது. இதுபற்றி எல்லாவற்றையும் ஏற்கனவே நான் அறிவேன். நான் என்ன மறுமொழி கூற வேண்டுமென்பதை உனது முகத்தைக் கொண்டே அறிந்து கொள்ள முடியும். எனவே நான் சொல்ல வந்ததை முழுமையாகக் கூறி முடித்து விடுகின்றேன். இங்கே பார் இரண்டு நம்பிக்கைக்குப் பாத்திரமான பணிப்பெண்கள். அவர்கள் உனக்கு முன்னால் நிற்கின்றார்கள். அவர்களை நீ நன்றாக இகழ். மேலும் மேலும் அலங்காரமாகக் காட்சியளி. நாங்கள் இனி உனக்குப் பயப்படப் போவதில்லை. எங்கள் கோபக்கனல் எங்களைச் சுற்றிப் படலமாகிப் படிந்திருக்க உன் மீதான கோபமும் அதை வெளிக்காட்டும் நடப்புமாக நாங்கள் உருமாறி மேலெழுந்துள்ளோம். வார்ப்பு இறுகி வருகின்றது. நாங்களும் உருமாற்றம் பெற்று வருகின்றோம். மதாம் ஏளனமாகச் சிரிக்க வேண்டாம்; முக்கியமாக எனது அபாரமான பேச்சுத் திறமையைக் கண்டு சிரிக்க வேண்டாம்.

கிளேயர்: வெளியே போ!

சோலான்ஸ்: ஆனால் உங்களுக்குச் சேவை செய்வதற்காக மட்டும்தான் வெளியேறுகிறேன். நான் எனக்கு விதிக்கப்பட்ட சமையலறைக்குச்

செல்கின்றேன். எனது கையுறைகளை அணிந்து கொள்ளச் செல்கின்றேன். நாற்றமடிக்கும் எனது வாயுடன் செல்கிறேன். நான் துவைக்கும் தொட்டிக்குச் செல்கிறேன். உங்களுக்கு மலர்களும் எனக்கு துவைக்கும் தொட்டியும். நானொரு பணிப்பெண்; உங்களால் என்னைக் கறை படுத்துவதோ இழிவு படுத்துவதோ முடியாத காரியம். ஆனால் - ஆனால் (பயமுறுத்தும் வகையில் கிளேயரை நோக்கி நகர்கிறாள்) நான் போவதற்கு முன்பு வந்த காரியத்தை முடித்து விட்டுப் போகிறேன்.

(சடுதியாக கடிகாரத்தின் அலாரம் அலறுகிறது. சோலான்ஸ் உறைந்து நிற்கிறாள். அந்த இரு நடிகைகளும் பரபரப்பாக சேர்ந்து ஓடிச் சென்று அருகருகாக நின்று காதைக் கூர்மையாக்கிக் கேட்கிறார்கள்.) இவ்வளவு விரைவாக...

கிளேயர்: சீக்கிரமாக, மதாம் திரும்பி வந்துவிடப் போகிறார். (தனது உடைகளைக் களையத் தொடங்குகிறாள்.) உடைகளைக் களைய உதவி செய்.நாடகம் ஏற்கனவே முடிந்து விட்டது முடிவைத்தான் நீ செய்யவில்லை.

சோலான்ஸ்:(கிளேயருக்கு உதவியவாறே கவலையான குரலில்) எல்லாத் தடவையும் இதே மாதிரித்தான் நடந்து விடுகிறது. நீ என்றுமே முடிவுக்குத் தயாராவதில்லை. அதனால் என்னாலும் உன்னை அழித்துவிட முடிவதில்லை.

கிளேயர்: ஆரம்பக் கட்டடங்களில் நாம் அதிக நேரத்தைச் செலவிட்டு விடுகின்றோம். ஆயினும் நாங்கள்...

சோலான்ஸ்: (கிளேயருக்கு உடைகளைக் களைய உதவியவாறு) ஜன்னலைக் கவனி

கிளேயர்: நமக்கு இன்னும் சிறிதளவு நேரம் பாக்கியுள்ளது அலாரம் வைக்கும்போது பொருட்களை ஒழுங்குபடுத்தச் சிறிது நேரம் கணக்கிட்டுத்தான் வைத்தேன். (அங்கிருந்த கதிரையில் களைப்பாக விழுகின்றாள்)

சோலான்ஸ்:(மென்மையாக) இன்று மாலை முடிவு கைக்கெட்டும் போல் இருந்தது. நாள் முழுவதும் அவ்வுணர்வே என்னை ஆட்கொண்டிருந்தது.

கிளேயர்: ஆம்

சோலான்ஸ்: முடிவுதான் எங்களை வதைக்கின்றதா கிளேயர்?

கிளேயர்: ஆம்.

சோலான்ஸ்: நேரம் முடிந்து விட்டது.

கிளேயர்: ஆம், (களைப்புடன் அவள் எழுந்து கொள்கிறாள்) நான் தேநீரைத் தயாரிக்கப் போகின்றேன்.

சோலான்ஸ்: ஜன்னல் மீது கவனமிருக்கட்டும்.

கிளேயர்: இன்னும் நேரமுள்ளது (தனது முகத்தைக் கைகளால் துடைத்துக் கொள்கிறாள்)

சோலான்ஸ்: நீ இன்னும் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயா கிளேயர்?

கிளேயர்:என்னைத் தனிமையில் விடு. எனது சக்தியெல்லாம் வழிந்தோடி விட்டது.

சோலான்ஸ்: (கடுமையாக) ஜன்னலைக் கவனித்துக் கொள். மிக்க நன்றி. இந்த அறை முழுவதும் மீண்டும் தாறுமாறாகக் கிடக்கிறது. மதாமின் ஆடையையும் நான் கழுவ வேண்டியுள்ளது. (அவள் தனது சகோதரியை உற்றுப் பார்க்கிறாள்) உனக்கு என்ன நடந்தது? நீ என்னைப் போல இப்போது இருக்கலாம்தானே. நீ கிளேயராக மாறு மீண்டும் எனது சகோதரியாகு.

கிளேயர்: நான் சோர்ந்து போய்விட்டேன். இந்த விளக்கொளி என்னைக் கொல்கிறது. எதிர்வீட்டுக்காரர் எங்களை... நீ என்ன நினைக்கிறாய்?

சோலான்ஸ்: அது பற்றி நமக்கேன் கவலை? (சிறிது தாமதத்தின்பின்) இருட்டில் எவ்வாறு நாங்கள் பணி செய்ய முடியும்? சிறிது ஓய்வு எடுத்துக் கொள். கண்களை மூடு. உனது கண்களை மூடிக் கொள் கிளேயர்.

கிளேயர்: (தனது கறுத்த குறுகிய பணியுடையை அணிந்து கொள்கிறாள்.) நான் களைத்துப் போய்விட்டேன் என்று சொன்னால் அதை ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன். என் மீது பரிதாபப்பட அதனைப் பாவிக்காதே. என் மீது அதிகாரத்தைத் திணிப்பதை நிறுத்திக் கொள்.

சோலான்ஸ்: நான் என்றுமே உன்னை அடக்கியாள நினைக்கவில்லை. நான் கேட்டதெல்லாம் உன்னைச் சிறிது இளைப்பாறச் சொல்லித்தான். நீ இளைப்பாறுவது எனக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

கிளேயர்: எனக்கு விளங்குகிறது. உனது விரிவுரை தேவையில்லை.

சோலான்ஸ்: ஆம், நான் விளக்கம் கூறத்தான் வேண்டியுள்ளது. நீதான் அதுபற்றி ஆரம்பித்தாய். பால்காரனைப் பற்றிப் பேசியதே நீதான். உனது உள்நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியாதென்று நீ நினைத்தாயா? மாரியோ...

கிளேயர்: ஓ...

சோலான்ஸ்: பால்காரன் கொச்சையாக என்னிடம் பேசுவான்; உன்னிடமும் அவ்வாறே. ஆனால் நீயோ அவைகளை ஏற்றுக் கொள்வதுபோல

கிளேயர்: (தோள்களைக் குலுக்கியவாறு) எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா எனப்பார். இங்கே பார். அந்த எழுதும் மேசையின் சாவி

இப்படித்தான் இருந்தது (அவள் சாவியை ஒழுங்கு படுத்துகிறாள்) மிசுயு சொல்வதுபோல்

சோலான்ஸ்: உன்னை மரியாதைக் குறைவாகப் பேசுவதை நீ விரும்புகிறாய்.

கிளேயர்: அவர் பணிப்பெண்களின் மயிர் ரோஜாக்களின் மீதும் மற்றப் பூக்கள் மீதும் கிடப்பதாகக் கூறுகிறார்.

சோலான்ஸ்: எங்கள் அந்தரங்க வாழ்க்கை பற்றிய விடயங்கள்

கிளேயர்: விடயங்கள்... என்ன விடயங்கள் சொல்லு? நாம் விரும்பும் விடயங்கள்? அது நிற்க ஓர் கலந்துரையாடலைத் தொடங்க நமக்கு நேரம் போதாது. மதாம் திரும்பி விடுவார். ஆனால் சோலான்ஸ் இந்த முறை அவள் எங்கள் பிடியில் சிக்கிக் கொண்டாள். நீ உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிதான். அவளின் காதலன் கைதான செய்தி கேட்ட அவள் முகம் போன போக்கை நான் பார்க்க மிகவும் ஆவலாக இருந்தேன். எனது வாழ்க்கையில் ஒருமுறையெனினும் நானொரு நல்ல காரியம் செய்தேன். எனது அனாமதேயக் கடிதமில்லாவிடில் ஓர் அழகான காட்சியை நீ இழந்திருப்பாய். காதலன் கையில் விலங்குகளுடன், மதாம் கண்களில் கண்ணீருடன். அதுவே அவளைக் கொல்லப் போதுமானது இந்தக் கவலையிலிருந்து அவளால் மீள்வது கடினம்.

சோலான்ஸ்: மிக நல்லது! அவள் அப்படியே சடுதியாக இறந்து போகட்டும். நான் வாரிசாவேன். ஏனெனில் அறையெனும் பொந்தினுள் சமையல்காரனோடும் 'பட்லரோ'டும் இனிமேலும் இருக்கத் தேவை வராது.

கிளேயர்: எமது அறை எனக்கு மிகவும் பிடித்தது.

சோலான்ஸ்: என் கருத்தை எதிர்க்க வேண்டுமென்பதற்காக மாத்திரம் அப்படிப் பேசுகின்றாய். அறை பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாதே. அறை பற்றி நினைத்தாலே வெறுப்பு அளவற்றுப் பெருகுகிறது. அறையை நான் அதன் அமைப்பு மாதிரியே பார்க்கிறேன். வெறுமையானதும் வெறுப்பூட்டத்தக்கதுமாகத்தான் அது இருக்கின்றது. ஓர் ஒழுங்கோ அழகோ அற்ற அறையென்ன, நாங்களே சமுதாயத்தின் கழிவுதானே!

கிளேயர்: மறுபடியும் அதைத் தொடக்காதே! ஜன்னலைக் கவனி என்னால் எதையுமே பார்க்க முடியாதிருக்கின்றது. வெளியே மிக இருட்டாக இருக்கிறது.

சோலான்ஸ்: என்னைப் பேசவிடு. என் உள்ளக் கிடக்கையை வெளியே சொல்லவிடு. எங்கள் அறை எனக்குப் பிடித்தமானது. ஏனெனில் அது மிகச் சாதாரணமானது. நான் எந்தவித பாசாங்குமின்றி அங்கிருக்கலாம்.

தொங்கும் சீலைகள் இல்லை; அதனால் அவைகளைத் தள்ளிவிடத் தேவையுமில்லை. கம்பளங்கள் எதுவுமில்லை. அதனால் அவைகளை உதறிப்போடத் தேவையுமில்லை. தளபாடங்கள் எதுவுமில்லை; அதனைக் கண்களாலோ துணியாலோ வருடத் தேவையில்லை. கண்ணாடிகளில்லை, திறந்தமாடமுமில்லை, ஒன்றுமேயில்லை. அழகாக எந்தச் சைகைகளையும் நாங்கள் செய்யத் தேவையில்லை. கவலைப்படாதே, நீ தொடர்ந்தும் அரசியாகப் பாவனை செய்து கொள்ளலாம். மேரி அந்தனெற்றைப் போல் இரவெல்லாம் வீடு முழுவதும் நடந்து திரியலாம்.

கிளேயர்: உனக்கென்ன பைத்தியமா நான் என்றும் இரவில் நடந்து திரியவில்லை.

சோலான்ஸ்: (திடமான குரலில்) இல்லை மதாம் திரைச் சீலையாலோ அல்லது அலரங்கார படுக்கை விரிப்பாலோ போர்த்துக் கொண்டு நடந்து திரியவில்லை. தன்னைக் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டும் செருக்கு நடை நடந்தும் இரவு இரண்டு மணிக்கு மேல் மாடத்துக்குச் செல்லவுமில்லை, அங்கு ஜன்னலின் கீழ் சாரி சாரியாகக் கூடிவந்த பொதுமக்களுக்குக் காட்சி தரவுமில்லை - இல்லை என்றுமே அப்படிச் செய்யவில்லை.

கிளேயர்: ஆனால் சோலான்ஸ்...

சோலான்ஸ்: மதாமை வேவுபார்ப்பதற்கு இரவு உகந்ததல்ல. ஏனெனில் கருமை அடர்ந்த இருளில் எதுவுமே தெரியாது. உன்னுடைய மேல் மாடத்தில் நின்றால் யாருக்குமே தெரியாது என்று நினைத்தாயா? என்னை என்னவென்று நினைத்தாய்? உனக்குத் தூக்கத்தில் நடக்கும் வழக்கமுண்டென்று எனக்குச் சொல்ல எத்தனிக்காதே. எங்களிருவருக்குமே என்ன நடக்கின்றதென்று தெரியும் பேசாமல் ஒத்துக்கொள்.

கிளேயர்: சோலான்ஸ் நீ கத்துகிறாய். தயவுசெய்து, தயவுசெய்து உன் குரலைத் தாழ்த்திக் கொள். மதாம் எந்தவொரு சத்தமும் செய்யாது உள்ளே வரலாம் (அவள் ஓடிச் சென்று திரைச் சீலையைத் தூக்கிப் பார்க்கிறாள்)

சோலான்ஸ்: சரி, நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். திரைச் சீலையைப் பற்றிப் பேசுவோம். நீ அதனைத் தூக்கிப் பிடிப்பதை என்னால் பொறுக்க முடியாதிருக்கின்றது. அதனைக் கீழே விடு. அது என்னை மிகவும் குழப்புகின்றது. மிசுயு கைதான காலையில் இப்படித்தான் அவரும் பொலிசாரை வேவு பார்த்தார்.

கிளேயர்: ஆக, நீ நன்றாகப் பயப்படுகின்றாய்? ஒரு சிறு செய்கை கூட ஒரு கொலைகாரன் பின்பக்கப் படிக்கட்டால் தப்பி ஓடுவது போன்று உன்னை நினைக்க வைக்கின்றது.

சோலான்ஸ்: பரிகாசம் பண்ணு; நன்றாக என்னைப் பரிகாசம் பண்ணி என் கோபத்தைக் கிளறு. யாருமே என்னை நேசிக்கவில்லை; யாருமே நேசிக்கவில்லை.

கிளேயர்: மதாம் நேசிக்கிறார்; மதாம் எங்களிருவரையும் நேசிக்கிறார். அவர் அன்புள்ளம் கொண்டவர் மதாம் எங்களை அளவு கடந்து நேசிக்கிறார்.

சோலான்ஸ்: தனது கதிரையை நேசிப்பது போல்தான் எங்களை நேசிக்கிறார். அந்த அளவு கூட இல்லை தனது கழிப்பறைத் தொட்டி போல் அல்லது ரோஜா நிற 'எனாமல்' மூத்திரக் கோப்பையைப் போல் இருக்கலாம். ஆயினும் நாங்கள்... நாங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க முடியவில்லை... குப்பைகள்...

கிளேயர்: ஆ...

சோலான்ஸ்: ... குப்பைகளை நேசிப்பதில்லை. நான் இதனை இப்படியே விட்டு வைக்கப் போகிறேன் என நீ நினைக்கிறாயா? தொடர்ந்தும் இந்த விளையாட்டை விளையாடி விட்டு இரவு மடக்குக் கட்டிலுக்குச் செல்வேன் என நினைக்கிறாயா? விளையாட்டு; நாங்களதைத் தொடரத்தான் முடியுமா? என்னை கிளேயர் என்று அழைப்பவள் மீது துப்ப முடியாவிடில் நான் மூச்சு முட்டிப் போய்விடுவேன். எனது உமிழ் நீர்த்துகள்கள்தான் எனக்கு வைரங்களின் தூவல் போன்றது.

கிளேயர்: (எழுந்து அழுதுகொண்டே) சிறிது மெதுவாகப் பேசு தயவுசெய்து; தயவுசெய்து மதாமின் அன்புள்ளம் பற்றிப் பேசு

சோலான்ஸ்: அவளின் கருணை அதுதானே? கருணை உடையவளாக இருப்பது மிகச் சுலபமானது. அத்துடன் எப்போதும் புன்சிரிப்புடன் இனிமையானவளாக - ஆ... எப்படியானதொரு இனிமை அவளது - அழகானவளும் செல்வச் சீமாட்டியுமாக இருந்தால் அது சாத்தியமே. ஆனால் ஒரு பணிப்பெண்ணாக மாத்திரமிருப்பின்? உன்னால் முடிந்ததெல்லாம் துப்பரவாக்கும் பொழுதோ துணிதுவைக்கும் பொழுதோ அதுமாதிரி பாவனை செய்து கொள்ள மாத்திரம் முடியும். ஓர் இறகுத் துடைப்பானை விசிறி மாதிரி விரிக்கலாம். பாத்திரங்கள் துடைக்கும் துணியை வைத்து நளினமான அசைவுகளைச் செய்யலாம், அல்லது நீ மதாமின் அறையினுள் உன் வரலாற்று அணிவகுப்புக்களை நடாத்தலாம்.

கிளேயர்: சோலான்ஸ் நீ மீண்டும் அதனை ஆரம்பிக்கிறாய். நீ என்னதான் செய்ய முயல்கிறாய்? இப்படிப் பேசி நாமிருவரும் கோபம் தெளியப் போவதில்லை. என்னாலும் இரண்டொரு விடயங்கள் உன்னைப் பற்றிக் கூற முடியும்.

சோலான்ஸ்: நீ? நீ...

கிளேயர்: ஆம், நான்தான். ஏனெனில் எவ்வாறு இருப்பினும்...

சோலான்ஸ்: ஆகையால்? நீ எதற்காகப் பசப்புகிறாய்? நீதான் பால்காரனை முதலில் குறிப்பிட்டாய். நீ என் வெறுப்பைத்தான் சம்பாதிக்கின்றாய்.

கிளேயர்: அதே போல்தான் நீயும்; அதற்கு மேலும்கூட! உன் கோபத்தைக் கிளற வேண்டுமானால் பால்காரனை ஒரு சாக்காக உபயோகிக்கத் தேவையில்லை. அதிலும் மோசமானதொன்று உன்னைப் பற்றியுண்டு. அது உனக்கும் தெரியும்.

சோலான்ஸ்: யார் யாரை வெல்வதென்று பார்ப்போமா? ஏதாவது சொல்லித்தான் பாரேன்.

கிளேயர்: சரி நீயே ஆரம்பித்து வை! முதலடியை நீதான் அடித்தாய். அதே நேரம் பின்வாங்குவதும் நீதான். நீ எவ்வாறு என்னை இழிவாகக் குற்றஞ்சாட்டலாம்? எனது கடிதங்கள் எத்தனை பக்கங்கள் அறை முழுவதுமே குப்பை போல் பரவிக் கிடந்தன. நான் எவ்வளவு திறமையான கதைகளை உருவாக்கினேன். நீயோ உனது தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொண்டாய். எனது சீற்றத்தைச் சிறதறடித்தாய். நேற்று நீ மதாமாக இருந்தபொழுது உனது காதலன் பிரான்ஸை விட்டுக் கப்பலில் நாடு கடத்தப்பட்டு ஒழிந்து போவது உனக்கு எவ்வளவு மகிழ்வாயிருந்ததென்று நான் கண்டு கொண்டேன்.

சோலான்ஸ்: கிளேயர்...

கிளேயர்: உனது காதலன் - பேய்த்தீவிற்கு - கயானாவிற்கு எனது கடிதத்தால், அந்தக் கள்வனின் காலடியில் வேசையாக முழந்தாளிட்டு இருக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை நீ எவ்வளவு மகிழ்வாக ஏற்றுக் கொண்டாய். உன்னை அர்ப்பணித்துக் கொள்ள, அந்த இழிவான கள்வனின் சிலுவையை நீ சுமக்க அவனின் முகத்தைத் துடைக்க அவன் பக்கத்தில் நின்று, துடுப்புப் போட்டுக் களைத்த அவனிடத்தை நீ நிரப்ப அவன் தன்னை ஆற்றிக் கொள்ள இவைகளை எவ்வளவு ஆனந்தமாக நீ ஏற்றுக்கொண்டாய். நீ பெருமையினால் பூரித்துப் போனாய். உனது புருவங்கள் என்னதை விட உயரமாக எழுந்தன. ஒரு நெடு விருட்சத்திலும் உயரமாய்.

சோலான்ஸ்:உனது கதை எப்படி சிறிது நேரத்திற்கு முன்பு உன் காதலனைத் தொடர்வது பற்றிப் பேசும்போது...

கிளேயர்: நான் மறுக்கவில்லை. நீ எங்கு விட்டாயோ அங்கிருந்து நான் தொடர்ந்தேன். ஆனால் - தீவிரம் - அது உன்னை விட என்னிடம் குறைவுதான். அறையில் கடிதங்களுக்கு மத்தியில் அங்குமிங்கும் தோணியின் ஆட்டத்திற்கு ஈடு கொடுப்பதுபோல் ஆடவே தொடங்கி விட்டாய்.

சோலான்ஸ்: நீ உன்னைப் பார்க்க மறுக்கின்றாய்...

கிளேயர்: பார்க்கிறேன். நான் உன்னை விட மெல்லுணர்வுகள் உள்ளவள். இந்தக் கதையை வடிவமைத்ததே நீதானே. உனது தலையைத் திருப்பு. உன் முகத்தை மட்டும் உன்னால் பார்க்க முடிந்தால் அஸ்தமன சூரியனின் கதிர் பட்டுத் தெறிக்கும் உன் முகம். நீ எவ்வாறு தப்ப வைக்கலாம் எனத் திட்டமிடுகின்றாய். (அவள் நடுக்கத்துடன் சிரிக்கிறாள்) நீ உன்னைக் கவலைக்குள்ளாக்கிக் கொள்கிறாய்! அந்த விடயத்தை விட்டுவிடு. உனது மகிழ்வான பயணத்தை இடையறுப்பது குரூரமானது. நான் உன்னை வெறுப்பதற்கு வேறுபல காரணங்கள் உள்ளன. உனக்கே தெரியும் அவைகள் எவையென்று.

சோலான்ஸ்: (குரலைத் தாழ்த்திக் கொண்டு) நான் உன்னைக் கண்டு பயப்படவில்லை. நீ என்னை வெறுப்பவளென்றும் என் காரியங்களுள் மூக்கை நுழைப்பவளென்றும் எனக்குத் தெரியும். ஆனால் கவனமாக இரு; நான் உன்னைவிட மூத்தவள்.

கிளேயர்: அதற்கிப்போது என்ன? மூத்தவள்! அத்துடன் பலம் பொருந்தியவளுமோ? அந்த மனிதனைப் பற்றி என்னைப் பேச வைத்து என்னைப் பலமிழக்கச் செய்ய முயல்கிறாய். நான் உன்னைக் கண்டு கொள்ளவில்லையென்று நீ எண்ணுகிறாயோ? நீ அவளைக் கொல்ல முயல்கிறாய்.

சோலான்ஸ்: நீ என் மீது குற்றம் சுமத்துகிறாயா?

கிளேயர்: மறுதலிக்காதே! நான் உன்னைக் கண்டு கொண்டேன். (ஒரு நீண்ட மவுனம்) நான் உண்மையிலேயே பயந்து போனேன். பயந்திருக்கிறேன். சோலான்ஸ் அவளினூடு நீ குறி வைத்திருப்பது என்னைத்தான். நான்தான் ஆபத்தின் மத்தியிலுள்ளேன். நாங்கள் அந்தச் சடங்கை முடித்தவுடன் என்னை நான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். (நீண்ட மவுனம் சோலான்ஸ் தோள்களைக் குலுக்கிக் கொள்கிறாள்)

சோலான்ஸ்: (முடிவெடுத்த நிலையில்) அவ்வளவுதானா? ஆம் முயன்றது உண்மைதான். நானுன்னை விடுவிக்க விரும்பினேன். என்னால் இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நீ மூச்சுத் திணறுவதைப் பார்த்தே எனக்கு மூச்சுத் திணறல் வந்து விட்டது. நீ மூச்சுத் திணறலில் சிவப்பாக, பச்சையாக நிறம் மாறத் தொடங்கினாய்; போலியான அவளின் கருணையில் மூழ்கி அழுகிப் போனாய். உன்னை நான் மிக அதிகமாக நேசித்தேன். அதற்காக வேண்டுமானால் குற்றம் சாட்டு. நான் அவளைக் கொன்றிருந்தால் முதல் ஆளாக நீ என்னைக் காட்டிக் கொடுத்திருப்பாய். நீ என்னைப் பொலீசாரிடம் ஒப்படைத் திருப்பாய். ஆம், நீ அதைச் செய்திருப்பாய்.

கிளேயர்: (சோலான்ஸின் மணிக்கட்டில் பற்றிப் பிடித்து) சோலான்ஸ்...

சோலான்ஸ்: (தன்னை விடுவித்துக் கொண்டே) எதற்காக நீ பயம் கொள்கிறாய். அது என்னைப் பற்றிய விடயங்கள்.

கிளேயர்: சோலான்ஸ் அடி பேதைப் பெண்ணே. அவள் எந்நேரமும் திரும்பி வரலாம்.

சோலான்ஸ்: நான் யாரையும் கொல்லவில்லை. நானொரு கோழை. நான் என்னால் முடியுமானதைச் செய்தேன். ஆனால் அவள் நித்திரையில் புரண்டாள். (வேகத்தைக் கூட்டி) அவள் மெதுவாகச் சுவாசித்தாள். போர்வையின் வெளியே வந்தாள். ஆம், அது நமது மதாம்தான்.

கிளேயர்: நிறுத்து!

சோலான்ஸ்: இப்போது உனக்கு என்னைத் தடுத்தாக வேண்டும். நீ அறிந்து கொள்ள நினைத்தாயல்லவா? இதையும் கேள்! நானுனக்குச் சொல்ல இன்னும் விடயமுள்ளது. உனது சகோதரி யாரென்பதை நீ அறிந்து கொள்வாய். அவள் எம்மாதிரியானவளென்பதை, ஒரு வேலைக்காரி உண்மையிலேயே எப்படியானவள் என்பதை அறிவாய். நான் அவளது கழுத்தை நெரிக்க எண்ணினேன்.

கிளேயர்: என்னை விட்டு விடு; அதன் பிறகு என்ன நடக்குமென்பதை எண்ணிப்பார்.

சோலான்ஸ்: எதுவுமே நடக்காது. தேவாலய மரவாங்கு களிடையே முழந்தாளிடுவது எனக்குச் சலித்துப் போய்விட்டது. சிவப்பு வெல்வெட் உடையும் விலையுயர்ந்த கற்களையும் அணிந்து சென்றால் என் தோற்றம் ஓரளவேனும் மதிப்புக்குரியதாய் இருக்கும். அவள் எவ்வாறு துன்பத்தில் உழல்கிறாள் என்பதைப் பார்! தனது அழகு குலையாது எவ்வாறு துன்பப்படுகிறாள் கவனி. கவலைகள் அவளை உருமாற்றுகிறது, இல்லையா? அவளை இன்னும் அழகாக்கு கிறதோ? தனது காதலன் ஒரு திருடனென அறிந்ததும் அவள் பொலிசார் பக்கம் நின்றாள். அது பற்றி மகிழ்வும் கொண்டாள். ஆனால் இப்போது நாதியற்றவளாகி விட்டாள். இரு நம்பிக்கையான பணிப்பெண்கள் அவளை இரு பக்கமும் கைகளிடையில் தூக்கிக் கொண்டு அவள் வேதனையைப் பொறுக்க மாட்டாது இரத்தக் கண்ணீர் வடிக்கின்றார்கள். நீ பார்க்கவில்லையா? அவளது கவலை அவளது நகைகளில் மிருதுவான துணியிலான அவளது ஆடைகளில் கண்ணாடி விளக்குச் சரங்களில் மினுமினுக்கிறது. கிளேயர் எனது துக்கத்தின் வறுமையை எனது குற்றத்தின் செழுமையால் நிரவப் போகிறேன். அதன் பின்பு எல்லாவற்றையும் தீயிடப் போகிறேன்.

கிளேயர்: சோலான்ஸ் அமைதியாயிரு. நெருப்பு சரிவரப் பற்றாமல் விட்டு, நீயும் பிடிபட்டு, உனக்குத் தெரியும் தீயூட்டுவோர்க்கு என்ன நடக்குமென்று.

சோலான்ஸ்: எனக்கு எல்லாமே தெரியும். நான் எனது கண்களையும் காதுகளையும் சாவித்துவாரத்தினுள்தான் வைத்துள்ளேன். எந்தவொரு

வேலைக்காரரும் என்னைப் போல் ஒட்டுக் கேட்க முடியாது. எனக்கெல்லாமே தெரியும். தீயூட்டுவோள், என்னவொரு மாட்சிமை பொருந்திய பட்டம்.

கிளேயர்: அமைதியாயிரு! எனக்கு மூச்சுத் திணறுகிறது. நீ என்னை மூச்சுத் திணறடிக்க வைக்கிறாய். (ஜன்னலைத் திறக்க முயல்கிறாள்) கொஞ்சம் காற்று வரட்டும்.

சோலான்ஸ்: ஜன்னலைத் திறக்காதே; சமையலறையையும் முன்னறைக் கதவையும் திற. (கிளேயர் இரு கதவுகளையும் திறக்கிறாள்) நீர் கொதிக்கிறதா எனப் போய்ப்பார்.

கிளேயர்: தனியாகவா?

சோலான்ஸ்: பொறு! அவள் வரமட்டும் பொறு! வரும்போது அவள் தனது விண்மீன்களையும், தனது தண்ணீரையும், புன்னகையையும், பெருமூச்சுகளையும் தன்னுடன் கொண்டு வருவாள். தனது கருணையால் எங்களைக் கெடுத்துவிடுவாள்.

(தொலைபேசி ஒலிக்கின்றது. இரு சகோதரிகளும் கவனிக்கின்றனர்.)

கிளேயர்: (தொலைபேசியில்) மிசுயு... நீங்களா மிசுயு... நான் கிளேயா. (சோலான்சும் கேட்பதற்காகச் செல்கிறாள். கிளேயர் அவளைத் தள்ளி விடுகிறாள்) நல்லது, நான் மதாமிற்கு சேதி சொல்லி விடுகின்றேன். மதாம் நீங்கள் விடுதலையானதை அறிந்தால் மிகவும் மகிழ்வுறுவார். ஆம், மிசுயு; மிக்க நல்லது மிசுயு. (ஒலிவாங்கியை அதனிடத்தில் கொழுவ நினைத்தபோதும் கைகள் நடுங்கியதால் மேசை மீது வைக்கிறாள்.)

சோலான்ஸ்: அவன் விடுதலையாகி விட்டானா?

கிளேயர்: நீதிபதி பிணையில் விடுதலை செய்துள்ளார்.

சோலான்ஸ்: மிக்க நல்லது; நீ நன்றாகவே காரியமாற்றியுள்ளாய். எனது வாழ்த்துக்கள். உனது தகவல்கள், கடிதங்கள் நன்றாகவே வேலை செய்கிறது. உனது கையெழுத்தையும் அடையாளம் கண்டு கொள்வார்களாயின் எல்லாம் மிகப் பொருத்தமாகவிருக்கும்.

கிளேயர்: தயவுசெய்து, தயவுசெய்து என் மீது ஏறி அமர்ந்து கொள்ளாதே. நீ அதிபுத்திசாலி, மதாமுடனான உனது அலுவலை நீ திறம்படச் செய்திருக்க வேண்டும். ஆனால் நீ பயந்து போய்விட்டாய். கட்டிலில் படுத்த சூடு ஆறவில்லை. அறையெங்கும் வாசனைத் திரவிய மணம். நிச்சயமாக அது மதாம்தான். இப்போது நாம் அதே வாழ்க்கையைத்தான் தொடர வேண்டியுள்ளது அதே விளையாட்டை விளையாடியபடி. புத்தியற்றவளே எமது விளையாட்டிற்குக் கூட ஆபத்து வந்து விட்டது. நாங்கள் விளையாட்டின் அடையாளங்களை விட்டுவிடுகின்றோம். ஒவ்வொரு முறையும் தடயங்களை கவனயீனமாக விட்டு

விடுகின்றோம். என்னாலேயே பல தடயங்களைப் பார்க்க முடிகின்றது. எல்லாவற்றையும் அழித்துவிட முடிவதில்லை. ஆனால் மதாம் விலங்குக் காட்சிச் சாலையில் பழக்கப்பட்ட மிருகத்தின் லாவகத்துடன் அறையைச் சுற்றி நடப்பதும், தடயங்களைத் தனது வெள்ளைக் கால் விரலால் சுட்டிக் காட்டுவதுமாக எங்களை ஒவ்வொன்றாகக் கண்டு பிடித்துவிடுகின்றார். மதாம் எங்களைப் பார்த்துக் கேலிச் சிரிப்புச் சிரிக்கிறார். எல்லாமே உனது தவறுதான். எல்லாம் தொலைந்து போன தற்குக் காரணமே உனது பலக்குறைவுதான்.

சோலான்ஸ்: இன்னும் என்னால் தேவையான பலத்தைப் பெற்றிட முடியும்.

கிளேயர்: எங்கே? எங்கிருந்து? நான் உன்னை விட மேலானவள். நீ என்ன மரங்களின் நுனிகளின் மேலாகவா வாழ்கின்றாய்? உனது சிந்தனைகளோடு செல்லும் ஒரு பால்காரன் பற்றிய எண்ணம் உன்னை நன்றாகவே கிளர்ச்சியுற வைத்துள்ளது.

சோலான்ஸ்: மதாமின் முகத்தினைப் பார்க்காததால் வந்த வினை கிளேயர். நான் மதாமிற்கு அருகாமையில் மிக மிக அருகாமையில் சென்றுவிட்டேன். அவளின் துயிலிற்கும் அருகாமையில் சென்று விட்டேன் போலும். எனது பலத்தையெல்லாம் இழந்து விட்டேன். அவளின் கழுத்தைப் பிடிப்பதற்கு மேலும் கீழுமாக இறங்கியேறும் அவளது மார்பைப் போர்த்தியிருந்த போர்வையை விலக்க வேண்டியிருந்தது.

கிளேயர்: (இகழ்வாக) அத்துடன் போர்வை வெதுவெதுப்பாகவிருந்தது. இரவு இருள் மண்டிக் கிடந்தது; இப்படியான வேலைகளைப் பட்டப் பகலில் பளிச்சிடும் வெளிச்சத்தில்தானே செய்ய வேண்டும். நீ இந்தக் காரியத்திற்கு லாயக்கற்றவள். இது ஒரு கொடூரமான செயல். ஆனால் என்னால் சமாளிக்க முடியும்.

சோலான்ஸ்: கிளேயர்!

கிளேயர்: நீ எங்கு தவறினாயோ அங்கு நான் வெற்றியடைவேன்.

சோலான்ஸ்: (சீப்பினால் தலைமுடிகளை வாரியவாறு) கிளேயர் அவசரப்படாதே! உணர்ச்சிவசப்பட்டு...

கிளேயர்: நான் கவனயீனமாக நடக்கிறேன் என்று எதை வைத்துச் சொல்கிறாய்? ஏய் முதலில் உனது கிளிப்புக்களை என்னுடையதுடன் கலக்காதே! நீ... சரி சரி உனது குப்பையை என்னுடையதுடன் கலந்து வை. உனது கந்தல்களை எனது கிழிசல்களுடன் கலந்துவிடு. எல்லாமே பணிப்பெண் சிணி வாடையடிக்கட்டும். மிசுயூ நம்மைக் கண்டு பிடிப்பதற்கு எந்தவொரு சிரமமும் அவருக்கில்லாமல் போகும். நாமிருவரும் வெட்கிச் சாகலாம். (சடுதியாக அமைதியான குரலில்) என்னால் எதுவும் செய்ய முடியும். உனக்குமது தெரியும்.

சோலான்ஸ்: தூக்க மாத்திரைகள்.

கிளேயர்: நல்லது, நாம் அமைதியாக உரையாடுவோம். நான் வலிமை பொருந்தியவள். நீ என்னை அடக்கியாள நினைக்கிறாய்.

சோலான்ஸ்: ஆனால் கிளேயர்...

கிளேயர்: (அமைதியாக) என்ன சொன்னாய், நான் என்ன பேசுகின்றேன் என்று எனக்குத் தெரியும். நான் எனது முடிவை எடுத்துவிட்டேன். அதற்கு ஆயத்தமாகவும் இருக்கின்றேன். என்னால் இப்படியே இருந்துவிட முடியாது. ஒரு சிலந்தியைப் போல குடை வைக்கும் பெட்டியைப் போல, கடவுளைத் தொலைத்த கன்னியாஸ்திரியைப் போல, ஒரு குடும்பமற்றவளாய் இனியும் என்னால் இருக்க முடியாது. ஒரு அடுப்புடனும் அடுத்தாருடனும் இனியும் காலந்தள்ள முடியாது. உனக்கும் கூட ஒன்றுக்கும் உதவாத மந்தமான, நாற்றமெடுக்கும் பெண்ணாக அல்லவா போய்விட்டேன்.

சோலான்ஸ்: கிளேயர் நாமிருவருமே உணர்ச்சிவசப்பட்டுள்ளோம். (பரபரப்பாக) மதாம் எங்கே போய்விட்டார்? என்னாலும் இதனை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. நாமிருவரும் ஒரே மாதிரி இருப்பதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. எனது கைகள் எனது கறுப்புநிற நீண்ட காலுறைகள், எனது தலைமுடி எல்லாம் எனக்கு வெறுப்பூட்டுகின்றன. நான் வெறுப்புணர்வுடன் எதையும் பார்க்கவில்லை எனது சிறிய சகோதரியே. நீ வீடு முழுவதும் இரவில் உலாவித் திரிவது உனது மனப்பாரத்தைக் குறைக்க உதவுமென்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

கிளேயர்: (எரிச்சலுடன்) நிறுத்து அந்தக் கதையை

சோலான்ஸ்: நானுனக்கு உதவத்தான் விரும்புகிறேன். உனக்கு ஆறுதலாயிருக்க விரும்புகிறேன். ஆனால் நான் உன்னை வெறுப்பது எனக்குத் தெரியும். உன்னைக் காணவே எனக்குப் பிடிக்காது. ஏனெனில் நீயுமென்னை வெறுக்கிறாய். இரண்டு அடிமைகள் ஒருவரை ஒருவர் நேசித்தால் அது நேசமல்ல.

கிளேயர்: தொடர்ந்து வரும் கெட்ட நாற்றம் போல் கண்ணாடியில் விழுந்து தெறிக்கும் எனது விம்பம் எனக்கு வெறுப்பூட்டுகிறது. நீதான் எனது கெட்ட நாற்றம். நான் தயார், நான் கொத்தும் நேரம் வந்துவிட்டது. எனது கிரீடத்தைப் பெறுவேன்; வீடு முழுவதும் உலாவி வருவேன்.

சோலான்ஸ்: மதாமைக் கொல்லுவதற்கு அது போதுமான காரணமல்ல.

கிளேயர்: உண்மையாக? தயவுசெய்து ஏனென்று கூறுவாயா? வேறெந்தக் காரணங்கள்? எங்கு எப்போது இதைவிட நல்ல காரணங்களைப் பெறப்போகின்றோம்? காம வேட்கையுடன் எங்கள் அறைகளினுள் புகுந்து வல்லுறவு கொள்ள நினைக்கும் பால்காரன் போதுமான காரணமில்லை? இன்றிரவு மதாம் இந்த வெட்கக் கேட்டிற்குச் சாட்சியாவாள். சிரிப்பு பொங்கிவர, கண்களில் கண்ணீர் வரும்வரை சிரித்துக் கொண்டே, அவளது பெருமூச்சுகளுடன். நான் எனது கிரீடத்தை அடைந்தே தீருவேன். நீ செய்யத் தவறிய நஞ்சூட்டலைச் செய்பவளாக நானிருப்பேன். உன் மீது ஆதிக்கம் செலுத்தும் எனது நேரம் வந்துவிட்டது!

சோலான்ஸ்: நான் என்றுமே...

கிளேயர்: துவாயை எடு! ஆடைகளைத் தொங்கவிடும் கொழுவியை எடு! வெங்காயத்தைத் தோலுரி; கரட் தோலைச் சீவு; பளிங்குத் தரையைத் துடை; இவையெல்லாம் இனிமேல் இல்லை... இல்லை.... ஆ! மறந்து விட்டேன். தண்ணீர்க் குழாயை மூடிவிடு. இனிமேல் இவைகளில்லை. (பூரிப்புடன்) நான்தான் இனிக் கட்டளையிடுவேன்.

சோலான்ஸ்: எனது குழந்தைத்தனமான குட்டித் தங்கையே

கிளேயர்: நீ எனக்கு உதவ வேண்டும்.

சோலான்ஸ்: எப்படி நடந்து கொள்ள வேண்டுமென உனக்குத் தெரியாது. நிலைமை தீவிரமாகி விட்டது. அத்துடன் இலகுவாகவுமிருக்கிறது.

கிளேயர்: (பெருமிதச் சிரிப்புடன்) 'பிளசெட்வலி' என்னும் இடத்தில் ஹோலி குரேஸ் எனும் பெயர் கொண்ட கன்னியாஸ்திரி இருபத்தியேழு அரேபியர்களை நஞ்சு வைத்துக் கொன்றதாக வாசித்திருக்கிறோமல்லவா? கால்களில் பாத அணிகளின்றி கால் விறைக்க நடக்குமந்த கன்னியாஸ்திரி இந்தக் கொலைகளைச் செய்யத் தகுந்த காரணங்கள் இருந்தனவாம். இளவரசி அல்பார்னெஸின் கதை நமக்குத் தெரியும் தனது கணவனையும் காதலனையும் கொன்றவள். நஞ்சை ஊற்றுவதற்கு முதல் போத்தலைத் திறந்து கோப்பைக்கு மீதாகப் பெரிய சிலுவை அடையாளம் போட்டார்களாம். பிரேதங்களின் பக்கத்தில் அவள் நின்றபோது அவள் கண்டதெல்லாம் மரணத்தைத்தான். சிறிது தூரத்தில் தனது உருவம் காற்றினில் கலந்து விடுவதுபோல் கண நேரக்காட்சியொன்றைக் கண்டாளாம். உலகின் எல்லாத் துன்பங்களையும் தானே சுமப்பதாக நினைத்தாளாம். 'மார்க்குய்ஸ் து வெனொஸோ' பற்றிய புத்தகத்தில் தனது குழந்தைகளைக் கொன்றாளே அவளேதான். என்ன சொல்லப்படுகிறதென்றால் அவள் கட்டிலை அணுகியபோது அவளது இறந்த காதலனின் ஆவி அவள் கரங்களைப் பலப்படுத்தியதாம்.

சோலான்ஸ்: என் குழந்தைச் சகோதரியே எனது தேவதையே!

கிளேயர்: எனது கரங்கள் பலம் பொருந்திய பால்காரனது கரங்களால் வலிமை பெறும். எனது இடது கரத்தால் நான் அவனின் பிடரியை அழுத்துவேன். அவன் வலியை உணர மாட்டான். நீ எனக்கு

உதவுவாய். சோலான்ஸ் தொலை தூரத்திற்கு, நாம் தொலை தூரத்திற்குப் போக வேண்டுமேயானால் நான் பேய்களின் தீவிற்குப் போக வேண்டி வந்தால் நீயும் என்னுடன் வருவாய். நீயும் அந்தக் கப்பலில் ஏறுவாய். மிசுயுவிற்காக திட்டமிடப்பட்ட தப்பிக்கும் மார்க்கம் எனக்குப் பயன்படும். நானும் நீயும் என்றும் பிரியாத ஜோடியாக இருப்போம். சோலான்ஸ், நாங்கள் குற்றமும் புனிதமும் சேர்ந்த இணைகளாக இருப்போம். நாம் இதிலிருந்து விடுபடுவோம். சோலான்ஸ் சத்தியமாகச் சொல்கிறேன். (கிளேயர் மதாமின் கட்டில் மீது விழுகிறாள்)

சோலான்ஸ்: அமைதியாயிரு, நீ இப்போது நித்திரை கொள்ளப் போகிறாய். நானுன்னை மேல் மாடத்திற்குத் தூக்கிச் செல்வேன்.

கிளேயர்: என்னைத் தொந்தரவு செய்யாதே. விளக்குகளை அணைத்து விடு; தயவுசெய்து விளக்குகளை அணைத்துவிடு. (சோலான்ஸ் விளக்குகளை அணைக்கிறாள்)

சோலான்ஸ்: அமைதி, அமைதி கொள் எனது சின்னச் சகோதரியே. (சோலான்ஸ் முழந்தாளிட்டு கிளேயரின் காலணிகளைக் கழற்றி அவள் கால்களை முத்தமிடுகிறாள்) அமைதியாயிரு என் செல்லமே. (அவள் கிளேயரைக் கைகளால் வருடுகிறாள்) உனது கால்களை என் தோள் மீது போட்டுக் கொள். கண்களை மூடிக் கொள்.

கிளேயர்: (பெருமூச்சுடன்) நான் என்னை நினைத்து வெட்கப் படுகிறேன் சோலான்ஸ்.

சோலான்ஸ்: (மிக மென்மையாக) பேசாமலிரு, காரியங்களை என்னிடம் விட்டுவிடு. நீ நித்திரையாகினால் நானுன்னை கட்டிலுக் கிட்டுச் செல்கிறேன். உன்னை மேல் மாடத்தறைக்குத் தூக்கிச் செல்வேன். உன் உடைகளைக் களைந்து உனது தொட்டிலில் தூங்க வைக்கிறேன். கவலையின்றி நித்திரைக்குப் போ! நான் இங்கு தானிருப்பேன்.

கிளேயர்: நான் வெட்கித் தலை குனிகிறேன் சோலான்ஸ்.

சோலான்ஸ்: உஷ்! உனக்கு நானொரு கதை சொல்கிறேன், கேள்.

கிளேயர்: சோலான்ஸ்...

சோலான்ஸ்: என் தேவதையே?

கிளேயர்: சோலான்ஸ் நான் சொல்வதைக் கேள்.

சோலான்ஸ்: தூங்கிவிடு (நீண்ட மௌனம்)

கிளேயர்: உனது தலைமுடி என்ன அழகாயிருக்கிறது. அவளதோ...

சோலான்ஸ்: அவளைப் பற்றி இனிமேல் பேசாதே.

கிளேயர்: அவளது பொய்யானது (நீண்ட மௌனம்) உனக்கு

நினைவிருக்கிறதா சோலான்ஸ்! மரத்தினடியில் நாமிருவரும், நம் கால்களில் சூரிய வெளிச்சம் பட்டபடி,சோலான்ஸ்?

சோலான்ஸ்: நான் இங்குதான் இருக்கிறேன். நித்திரை கொள் - நானுனது பெரிய சகோதரி.

(அமைதி சிறிது நேரத்தில் கிளேயர் கட்டிலில் இருந்து எழும்புகிறாள்.)

கிளேயர்: சோர்வுறக் கூடாது; விளக்கைப் போடு. இது ஒரு கிடைத்த தற்கரிய தருணம் (சோலான்ஸ் விளக்கைப் போடுகிறாள்.) எழுந்திரு! நாங்கள் உணவு உண்ண வேண்டும். சமையலறையில் என்ன உள்ளது? ம்... நாம் கட்டாயம் சாப்பிட வேண்டும். அப்போதுதான் நீ எனக்கு ஆலோசனை கூற வேண்டும். பெனோபாபிற்றால்?*

சோலான்ஸ்: நான் நன்றாகக் களைத்துத்தான் விட்டேன். பெனோபா பிற்றால் சரியானதுதான்.

கிளேயர்: பெனோபாபிற்றால்! ஏன் முகத்தைச் சுழிக்கிறாய்.? நாம் மகிழ்வுற வேண்டும்; பாட வேண்டும். வா இருவருமாகப் பாடுவோம். மாளிகைகளிலும் தூதரகங்களிலும் பிச்சை கேட்பதுபோல் பாட வேண்டும். (இருவரும் வெடித்துச் சிரிக்கின்றனர்.) அப்படியில்லா விடில் நாமிருவரும் தடுமாறிப் போய்விடுவோம். ஜன்னல்களை மூடிவிடு (சோலான்ஸ் சிரித்தவாறு ஜன்னல்களை மூடுகிறாள்.) கொலை என்பது... அதுபற்றிப் பேசவே கூடாது!

சோலான்ஸ்: நாம் பாடுவோம். அவளைக் காட்டிற்குத் தூக்கிச் செல்வோம். நிலவின் ஒளியினில் ஊசியிலை மரங்களின் கீழ் அவளைத் துண்டு துண்டாக வெட்டுவோம். பிறகு நாங்கள் பாடு வோம். நமது பூப்பாத்திகளில் பூக்களின் கீழ் அவளைப் புதைத்திடு வோம். இரவினில் அவளின் பெருவிரலுக்குக் குழாயினால் நீர் பாய்ச்சுவோம். (அழைப்பு மணி ஒலிக்கிறது)

கிளேயர்: மதாம்!

சோலான்ஸ்: அவராகத்தான் இருக்க வேண்டும். கட்டிலைச் சீர்படுத்து (கிளேயரின் மணிக்கட்டைப் பிடித்தவாறு) கிளேயர் உன்னால் இதனை நிறைவேற்றிட முடியுமா?

கிளேயர்: எத்தனை நமக்குத் தேவையாகவிருக்கும்?

சோலான்ஸ்: பத்து போதுமானதாகவிருக்கும். அதனை அவளின் தேனீரில் கலந்துவிடு. உன்னால் முடியுமா?

கிளேயர்: (தனது கரத்தினை விடுவித்துக் கொண்டு கட்டிலை நோக்கிச் செல்கிறாள். சிறிது நேரம் அதனை உற்றுப் பார்த்துவிட்டு) ஆம், பெட்டி யுடன் என் சட்டைப் பையினுள்தான் இருக்கின்றது. (சோலான்ஸ் வெளியேறுகிறாள். கிளேயர் தொடர்ந்தும் அறையினை ஒழுங்கு

*வாசனையற்ற வெண்ணிறத் தூள், மயக்க மருந்தாக உபயோகிக்கப்படுவது.

படுத்துகிறாள். சில வினாடிகள் கழிகின்றன. விநோதமான சிரிப் பொலி மேடையின் பின்புறத்தில் ஒலிக்கிறது. மதாம் குறுமென்மயிர் தோலாடை அணிந்து சிரித்தவாறே சோலான்ஸ் பின்தொடர வருகின்றார்.)

மதாம்: வெறுப்பையூட்டும் இளம் சிவப்பு நிற கிளாடியோல் பூக்கள். அத்துடன் மிமோசாப் பூக்களும் எங்கு பார்த்தாலும் நிறைத்து வைத்துள் ளார்கள்; சந்தையில் அதிகாலை வேளையில் மலிவாக வாங்குவதற்கு விடிவதற்கு முன்பே சென்று விடுவார்கள் போலும் (சோலான்ஸ் மேலங்கியைக் கழற்ற உதவுகிறாள்)

சோலான்ஸ்: மதாம் சிறிது அதிகமாகவே குளிரவில்லை?

மதாம்: ஆம் சோலான்ஸ் நான் நன்றாக குளிர்ந்துதான் போனேன். இரவி ரவாக இரு பக்க அறைகளின் நடுவிலான ஒடுங்கிய பாதைகளினூடே தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தேன். விறைத்துப் போன மனிதர் களையும் கல்லென இறுகிய முகங்களையும் கண்டேன். ஆயினும் ஒருகணமேனும் மிசுயுவைக் காண எனக்கு வாய்ப்புக் கிட்டியது. அவரை நோக்கிக் கையசைத்தேன். இப்போதுதான் நீதிபதி ஒருவரின் மனைவியுடன் பேசிவிட்டு வந்தேன். கிளேயர்...

சோலான்ஸ்: அவள் மதாமின் தேநீரைத் தயார் செய்கிறாள்.

மதாம்: சீக்கிரமாக வந்தால் நல்லதே. மிசுயு தனியாக எதுவுமே இல்லாமல் உணவு சிகரட் கூட இல்லாமலிருக்க தேநீர் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கிறது.

சோலான்ஸ்: மிசுயு அங்கு அதிக நாள் இருக்க மாட்டார். அவர்கள் அவர் குற்றமற்றவர் என்பதைச் சீக்கிரமாக அறிந்து கொள்வார்கள்.

மதாம்: குற்றமற்றவரோ இல்லையோ, நான் அவரைக் கைவிடப் போவதில்லை. இப்படியானதொரு நேரத்தில்தான் நாம் ஒருவரை எவ்வளவு நேசிக்கின்றோமென்பதை நாமே உணர்ந்து கொள்வோம் சோலான்ஸ். நான் அவரைக் குற்றவாளியென்றே நினைக்கவில்லை. அப்படியிருப்பினும் அவருக்குத் துணை போனவளாய் நான் மாறு வேன். பேய்களின் தீவிற்கு அவரைப் பின் தொடர்வேன்; சைபீரியாவாக இருந்தாலும் சரி.

சோலான்ஸ்: அதை நினைத்துப் பயப்படத் தேவையில்லை. மிக மோசமான குற்றச்சாட்டுகள் கூட நீதி மன்றத்தில் மன்னிக்கப்பட்டதை நான் கண்டுள்ளேன். போர்தோ நகரில் ஒரு வழக்கில்...

மதாம்: வழக்குகளுக்குச் செல்வாயா? நீயா?

சோலான்ஸ்: குற்றச் செய்திகளை நான் வாசிப்பது வழமை. அது ஒருவனைப் பற்றியது அவன்...

மதாம்: மிசுயுவின் வழக்கை நீ ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது. அவர் மீது அதி முட்டாள்தனமான திருட்டினைக் காட்டிக் குற்றம்

சாட்டியுள்ளனர். இதிலிருந்து அவர் வெளிவருவாரென்பது எனக்குத் தெரிந்ததே. நான் சொல்வதென்னவென்றால் சற்றும் பொருத்தமற்ற இந்தக் குற்றச் சாட்டின் மூலம் எவ்வளவு ஆழமாக அவரில் ஈடுபாடு கொண்டுள்ளேன் என்பதை நான் உணர்ந்து கொண்டேன் என்பதைத் தான். இந்த வழக்கே எந்தவித முக்கியத்துவமுமற்றதுதான். அல்லது அது நேர்மாறாய்ப் போயின் சோலான்ஸ் அவரின் சிலுவையைச் சுமப்பது எனக்கு மகிழ்வான காரியமே. எங்கு சென்றாலும் அவரைப் பின் தொடர்வேன். சிறைச்சாலை சிறைச்சாலையாக தேவைப்படின் கால்நடையாகக் கூட குற்றவாளிகளுக்கான கொலனிக்குக் கூடச் செல்வேன்.

சோலான்ஸ்: அவர்கள் உங்களை அனுமதிக்க மாட்டார்கள். பெருந் திருடர்களின் மனைவியோ, சகோதரியோ, தாயோ மட்டும்தான் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

மதாம்: தண்டனை பெற்ற மனிதன் தொடர்ந்தும் திருடனாக இருக்க முடியாது. அப்படியிருப்பினும் நான் காவலாளிகளை மீறிப் பலாத் காரமாக உள்ளே நுழைவேன். (திடீரென வெறித் தொனியில்) அத்துடன் சோலான்ஸ் நான் எவ்வித பயமுமற்றவளாக இருப்பேன். நான் எனது ஆயுதங்களைப் பயன்படுத்துவேன். என்னை யார் என்று எண்ணி விட்டாய்?

சோலான்ஸ்: மதாம் இப்படியான சிந்தனைகளை நீங்கள் மனதில் எடுத்துக் கொள்ளக்கூடாது. சிறிது ஓய்வெடுங்கள்.

மதாம்: எனக்குக் களைப்பே இல்லை. நீ என்னை ஓர் அங்கவீன முற்றவளைப் போல் நடத்துகிறாய். ஏதோ நான் இறப்பதுபோல் அரவணைக்கவும் ஆறுதல் சொல்லவும் எப்போதும் ஆயத்தமாகவே இருக்கிறாய். கடவுளிற்கு நன்றி! இன்னும் எனது அறிவு மழுங்கி விடவில்லை. நான் போராடத் தயாராகவே இருக்கின்றேன். (சோலான்ஸைப் பார்த்து அவளது உணர்வுகளைப் புண்படுத்தி விட்டதை உணர்ந்த ஒரு சிரிப்புடன்) சரி, சரி, முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாதே. (சடுதியான மூர்க்கத்துடன்) சரி, அது உண்மை தான், சில வேளைகளில் உனது பரிவு என்னைக் கோபம் கொள்ள வைக்கிறது. உன் பரிவு என்னை நசுக்குகிறது. என்னைச் செயலற்றுப் போகச் செய்கிறது. இந்தப் பூக்கள் இவை மகிழ்வின் எதிர்மறை யாகத்தான் இருக்கின்றன.

சோலான்ஸ்: மதாம் தங்கள் விருப்பு வெறுப்பை நாம் அறியவில்லை என நினைத்தால்...

மதாம்: நான் அப்படிக் கருத்துப்படச் சொல்லவில்லை. இங்கே பார் நான் மிகவும் குழம்பிப் போயுள்ளேன். நான் என்ன நிலையி லிருக்கின்றேனென்று நீயே பார்.

சோலான்ஸ்: மதாம் இன்றைய கணக்குகளைப் பார்க்க விரும்பு கின்றீர்களா?

மதாம்: நீ சரியான நேரத்தைத்தான் தேர்ந்தெடுத்துள்ளாய். உனக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். நான் இப்போது கணக்குப் பார்ப்பேனென்று நீ நினைக்கிறாயா? நாளை அவைகளை எனக்குக் காட்டு.

சோலான்ஸ்: (மென்மயிர் தோல் தொப்பியை எடுத்து வைத்துவிட்டு) தொப்பியின் உள் பக்கத் துணி கிழிந்துள்ளது. செப்பனிட நாளை நான் எடுத்துச் செல்கிறேன்.

மதாம்: நீ விரும்பியபடி செய். ஆயினும் அது தேவையற்றது. நான் எனது உடைகளை இனிக் கவனிக்கப் போவதில்லை. நான் வயது சென்ற பெண்.

சோலான்ஸ்: மீண்டும் கவலைக்குள் மூழ்குகிறீர்களே.

மதாம்: நான் துக்கம் காப்பதைப் பற்றி யோசிக்கிறேன். நான் அப்படிச் செய்தால் நீ ஆச்சரியப்படாதே. நான் எவ்வாறு உலக சுகங்களை அனுபவித்து வாழ்வது? மிசுயு சிறையிலிருக்கும்போது இந்த வீடு உனக்குத் துக்கம் தோய்ந்ததாகப் பட்டால்...

சோலான்ஸ்: நாம் மதாமை என்றும் கைவிடப் போவதில்லை.

மதாம்: எனக்குத் தெரியும் நீ என்னைப் பிரியப் போவதில்லையென்று. நான் உனக்கு அதிக கவலையைத் தரவில்லைத்தானே?

சோலான்ஸ்: ஓ!

மதாம்: உனக்கு ஏதாவது தேவையாயின் அவை கிடைக்கும்படியாக நான் பார்த்துக் கொண்டேன். எனது பழைய உடுப்புக்களே உங்களிரு வருக்கும் இளவரசிகள் போல உடுத்துக் கொள்ளப் போதுமானதாக விருக்கின்றன. (உடுப்பு அலுமாரிக்குச் சென்று தனது உடைகளைப் பார்த்தவாறு) இவைகளால் எனக்கு என்ன பயன்? சீமாட்டித்தனம் முடிந்து விட்டது. அத்துடன் அவைகளுக்குத் தேவையான அலங்காரமும் போய்விடட்டும். (கிளேயர் தேநீர் கொண்டு வருகிறாள்)

கிளேயர்: தேநீர் தயாராக இருக்கிறது.

மதாம்: நடனங்கள் களியாட்டங்கள் நாடகங்கள் எல்லாவற்றிற்குமே பிரியாவிடை. நீ அவைகளைச் சுவீகரித்துக் கொள்வாய்.

கிளேயர்: மதாம் உங்களை நீங்களே இழந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் சுதாரித்துக் கொள்ள வேண்டும்.

சோலான்ஸ்: தேநீர் ஆயத்தமாக உள்ளது.

மதாம்: அதைக் கீழே வை. நான் படுக்கைக்குச் செல்லப் போகிறேன். எல்லாம் முடிந்த விட்டது. (தனது சிவத்த வெல்வெட் உடை மீது தனது

விரல்களை ஓட விடுகின்றாள்.) எனது அழகிய உடைகளில் எல்லா வற்றிலும் மிக அழகானது (அதை எடுத்து தனது கைகளால் தடவியபடி) எனக்காக 'சனல்' பிரத்தியேகமாக வடிவமைத்தது. இந்தா இதை நீ வைத்துக் கொள்.(அதை கிளேயரிடம் கொடுத்து மீண்டும் அலுமாரியினுள் தேடுகிறாள்)

கிளேயர்: எனக்கா?

மதாம்: (சோகமாக புன்னகைத்துக் கொண்டு) உனக்கென்றுதானே நான் கூறினேன், இல்லையா?

சோலான்ஸ்: மதாம் மிகவும் கொடையுள்ளம் கொண்டவர் (கிளேயரை நோக்கி) மதாமிற்கு நன்றி கூறலாமல்லவா. நீ இந்த உடையின் சிறப்பை வியந்து கொள்வாயே.

கிளேயர்: இது எவ்வளவு அழகாக இருக்கிறது. இதனை அணியும் துணிவு எனக்கு வருமென்று எண்ண முடியவில்லை.

மதாம்: கிளேயர் நீ இதனை உனது அளவுக்கேற்ப திருத்திக் கொள்ளலாம். உடையின் தரையில் தளர்வாகப் புரண்டு வரும் பகுதியில் தேவையான அளவு வெல்வெட் உள்ளது. கைகளை நீளமாக்க அது உதவும். உனக்கு சோலான்ஸ்... உனக்கு நான் தரப் போவது... உனக்கு என்ன தரலாம்? இந்தா (சோலான்ஸிற்கு மிக அழகான மென்மயிர்த் தோலிலான தொப்பியைக் கொடுக்கிறாள்)

கிளேயர்: ஆ! மென்மயிர் தோல் தொப்பி!

சோலான்ஸ்: (ஆவல் மிகுதியாக) ஓ... மதாம்... மதாமின் கருணைக்கு அளவில்லை.

மதாம்: இல்லை, எனக்கு நன்றி கூறத்தேவையில்லை. மற்றவர்களை மகிழ்விப்பது எவ்வளவு ஆனந்தமானது. சரி, நான் ஆடைகளைக் களைந்து வேறு உடுப்பு உடுத்தப் போகிறேன். (தொலை பேசியை நோக்குகிறாள்) யார் ஒலி வாங்கியைக் கீழே வைத்தது.

கிளேயர்: மிசுயு (திடீரெனப் பேச்சை நிறுத்துகிறாள்)

மதாம்: (அதிர்ச்சியடைந்தவளாக) என்ன? மிசுயு? (கிளேயர் மௌனமாக நிற்கிறாள்) நீ என்ன சொல்கிறாய்? விபரஞ்சொல்.

சோலான்ஸ்: (மெதுவாக ஏதோ மிசுயு தனக்குத்தான் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டதுபோல்) மிசுயு தொலைபேசியில் அழைத்தபோது...

மதாம்: நீ என்ன சொல்கிறாய்? மிசுயு பேசினாரா?

சோலான்ஸ்: உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்த விரும்பினோம். மிசுயு பிணையில் வெளியே வந்துள்ளார். உங்களுக்காக அவர் 'ஹொங்கொங்' மதுபான விடுதியில் காத்திருக்கிறார்.

மதாம்: (எழுந்தவாறு) நீ எதுவுமே சொல்லாதிருந்திருக்கிறாய். போய் ஒரு வாடகைக்கார் கொண்டுவா சோலான்ஸ், விரைவாக. கெதியாக ஒரு வாடகைக்கார். கெதியாக ஓடு. (சோலான்ஸை அறைக்கு வெளியே தள்ளி விடுகிறாள்) எனது மென்மயிர் தோலாடை கெதியாக - உங்களிருவருக்கும் பைத்தியம் பிடித்துள்ளது - என்னைப் பேசவிட்டு ஒன்றும் சொல்லாதிருந்திருந்கிறீர்கள். உனக்கு உண்மையிலேயே பைத்தியம்தான். எனக்கும் பைத்தியம் பிடிக்கிறது. (தனது மென் மயிர் தோலாடையை அணிந்துகொண்டு) எப்போது பேசினார்?

கிளேயர்: (மிக அடங்கிய குரலில்) நீங்கள் வருவதற்கு ஐந்து நிமிடங் களுக்கு முன்னர்.

மதாம்: நீ எனக்கு முன்னமேயே சொல்லியிருக்க வேண்டும். இது வேறு ஆறிய தேநீர். சோலான்ஸ் வரும்வரை என்னால் பொறுத்திருக்க முடியாது. ஓ! அவர் என்ன சொன்னார்?

கிளேயர்: நானுங்களுக்கு முன்பே கூறியதுதான். ஆனால் அவர் மிகுந்த நிதானமாகவே பேசினார்.

மதாம்: ஆ! அவர், அவர் எப்போதுமே அப்படித்தான். மரண தண்டனை கிடைத்தாலும் அதுபற்றி அலட்டிக் கொள்ள மாட்டார். அவரொரு அரிதான பிறவி. வேறென்ன சொன்னார்?

கிளேயர்: வேறொன்றுமில்லை. நீதிபதி அவரை விடுதலை செய்ததாகச் சொன்னார்.

மதாம்: பொலீஸ் தலைமைக்காரியாலயத்திலிருந்து நள்ளிரவில் யாரால் வெளி வரமுடியும்? நீதிபதிகள் இரவில் இவ்வளவு நேரங்கழித்தும் வேலை செய்வார்களா?

கிளேயர்: சிலவேளைகளில் இதற்குப் பிந்தியும் வேலை செய்வார்கள்.

மதாம்: இதற்குப் பிந்தியும்? உனக்கெவ்வாறு தெரியும்?

கிளேயர்: துப்பறியும் பத்திரிகை வாசிப்பேன். இதுபோன்ற விடயங்கள் எனக்குத் தெரியும்.

மதாம்: (ஆச்சரியத்துடன்) அப்படியானால் உனக்குத் தெரியும். நீ விடயம் தெரிந்த பெண்தான் கிளேயர். அவள் துரிதமாக வரவேண்டுமே. (தனது கைக்கடிகாரத்தைப் பார்க்கிறாள்) எனது மேலங்கியினை தையல் காரனிடம் கொடுத்துச் செப்பனிட மறக்க மாட்டாயே?

கிளேயர்: நான் நாளை அதனைச் செய்கிறேன். (நீண்ட அமைதி)

மதாம்: கணக்குகள் எங்கே? இன்றைய கணக்குகள்; அவைகளைத் தா எனக்கு; இப்போது பார்க்க நேரமிருக்கிறது.

கிளேயர்: கணக்குகள் சோலான்ஸின் வேலை.

மதாம்: அது உண்மைதான். நானும் அலைபாய்ந்து கொண்டிருக்கிறேன்.

நாளை அவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன். (கிளேயரை உற்றுப் பார்த்து) சிறிது கிட்டே வா! வா இங்கு, என்ன... ஒப்பனை செய்துள்ளாய்! (சிரித்தவாறு) கிளேயர் நீ ஒப்பனை செய்து கொண் டிருக்கிறாய்.

கிளேயர்: (கூச் சமாக) மதாம்...

மதாம்: ஆ! பொய் சொல்லாதே. உனக்கு ஒப்பனை செய்து கொள்ள எல்லா உரிமையும் உள்ளது. அனுபவி பெண்ணே அனுபவி. அது சரி யாருக்காக நீ ஒப்பனை செய்து கொண்டாய்? யாராவது ஒருவன் உன்னைக் கவர்ந்து விட்டானா? உண்மையைச் சொல்.

கிளேயர்: நான் சிறிது பவுடர் போட்டுக் கொண்டேன்.

மதாம்: அது பவுடரல்ல - 'ரோஜா முகப் பூச்சு' ஆனால் அதில் ஒரு பிழையு மில்லை. நீ இன்னும் இளமையானவள். உன்னை கவர்ச்சியாகக் காட்டிக் கொள். கம்பீரமாகக் காட்டிக் கொள். (கிளேயரின் தலையில் ஒரு பூவை வைக்கிறாள்.) இவள் என்னதான் செய்து கொண்டிருக் கிறாள்? நடுநிசியாகிவிட்டது; இவளை இன்னும் காணவில்லை.

கிளேயர்: இந்த நேரத்தில் வாடகைக்கார்கள் கிடைப்பது அரிது. அவள் வாடகைக்கார் நிறுத்தத்திற்குப் போக வேண்டியிருக்கலாம்.

மதாம்: அப்படியா நினைக்கிறாய்? எனக்கு நேரம் பற்றிய நினைவே இல்லாது போய்விட்டது. மகிழ்ச்சியால் திணறிக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு பிந்தி மிசுயு தொலைபேசியில் அழைத்ததும் அவரின் விடுதலையும்...

கிளேயர்: உட்காருங்கள் மதாம். நான் உங்கள் தேநீரைச் சூடாக்கிக் கொண்டு வருகிறேன். (அவள் போக எத்தனிக்கிறாள்)

மதாம்: வீணாகச் சிரமப்படாதே. எனக்குத் தாகமில்லை. இன்றிரவு நிச்சயமாக ஷம்பெய்ன்தான் குடிப்போம். வீட்டிற்கு வரமாட்டோ மென நீ நிச்சயம் நம்பலாம்.

கிளேயர்: நிச்சயமாக? சிறிதளவு தேநீர்...

மதாம்: (சிரித்தவாறே) இப்போதே பரபரப்பாக உள்ளது. நீயும் சோலான்சும் எங்களுக்காகக் காத்திருக்க வேண்டாம். மேலே சென்று உடனடியாகப் படுக்கைக்குப் போங்கள். (அலாரம் மணிக்கூட்டைப் பார்க்கிறாள்) இந்த அலாரம் மணிக்கூடு - இது இங்கு ஏன் வந்தது? எங்கிருந்து இது வந்தது?

கிளேயர்: (சங்கடமாக) அலாரம் மணிக்கூடு? இது சமையலறை மணிக்கூடு.

மதாம்: அப்படியா? நான் இதை எப்போதும் பார்த்ததே இல்லையே...

கிளேயர்: (மணிக்கூட்டை எடுத்தவாறு) இது சமையலறையில் உள்ளது. எப்போதும் அங்குதான் இருக்கும்.

மதாம்: (சிரித்தவாறு) குசினியைப் பொறுத்தளவில் நான் ஏறத்தாழ அந்நியமானவள்தான். நீதான் அங்கு இருப்பவள். அது உனது அதிகாரத் திற்குட்பட்ட இடம். நீதான் அங்கு ஆட்சி நடத்துபவள். அது சரி, எதற்காக மணிக்கூட்டை இங்கு கொண்டுவந்தாய்?

கிளேயர்: சோலான்ஸ்தான் இங்கு கொண்டுவந்தாள். துப்பரவு செய்யும்போது மணி பார்ப்பதற்கு இதுதான் அவளுக்கு நம்பிக்கை யானது. பெரிய மணிக்கூட்டை அவள் அவ்வளவாக நம்புவதில்லை.

மதாம்: விநோதமாயிருக்கிறது. (கிளேயர் மணிக்கூட்டை எடுத்துச் செல்கிறாள்) அவள் வேண்டுமென்றே நேரம் கடத்துகிறாள். ஒவ்வொரு வீதி மூலையிலும் வாடகைக்கார்கள் கிடைக்கும். (தனது ஒப்பனை மேசை முன் அமர்ந்து கண்ணாடியைப் பார்த்தவாறு தனக்குத் தானே பேசிக் கொள்கிறாள்.) நீ எப்படி, முட்டாளே அவரை வரவேற்க அழகாக இருக்கிறாயா? சுருக்கங்கள் ஏதுமில்லையே? நீண்டதொரு பிரிவு... ஓர் ஆயிரம் வருடப் பிரிவு போலிருக்கிறது. பார்ப்போம் - புத்தியாக நடந்து கொள் முட்டாளே. மடைச்சி நானே எனக்குள் பேசிக் கொள்கிறேனே. மகிழ்ச்சி என்னைக் கிறுகிறுக்க வைக்கிறது. சோலான்சை இன்னும் காணவில்லை. எவ்வளவு பூக்கள்! இவர்கள் இருவரும் உண்மையிலேயே என்னை ஆராதிக்கிறார்கள். என்ன இது (தனது ஒப்பனை மேசையையும் சிந்தியுள்ள பவுடரையும் பார்த்து) ஒப்பனை மேசையை ஏன் துடைத்து வைக்கவில்லை. இவர்களது வீட்டுப்பராமரிப்பு அதி கூடிய ஆடம்பரமும் அழுக்கும் சேர்ந்த ஒரு விநோதமான கலவை. (கடைசி வரியைக் கூறும்போது கிளேயர் தனது பாத முனைகளில் நடந்து வந்து மதாமின் பின்புறம் நிற்க, மதாம் அவளைக் கண்ணாடியில் அவதானிக்கிறாள்.) ம்... கிளேயர் நானெங்கோ மிதக்கிறேன். எனது மூளை எங்கோ போகிறது. இன்றைய தினம் பரபரப்பு எல்லையற்றுப் போய்விட்டது.

கிளேயர்: மதாம் எங்களின் பணியில் திருப்தியுறுகிறீர்களா?

மதாம்: (சிரித்தவாறு) உண்மையிலேயே மகிழ்வுதான். நான் ஏழாவது மோட்சத்தில் இருக்கும் மகிழ்ச்சி.

கிளேயர்: நீங்கள் எங்களைக் கேலி செய்யவில்லையே.

மதாம்: (சிரிப்புடன்) ஓ... சிறுபிள்ளை போல் நச்சரிக்காதே. இன்று முழுவதும் நான் பட்ட துன்பத்திற்குச் சிறிது அப்படி இப்படி இருக்க எனக்கு உரிமையிருக்கிறது. அதிருக்க முதலாவதாக பொலீசிற்கு யார் அந்தக் கடிதத்தை அனுப்பியிருப்பார்கள்... உனக்கு யார் இதனை அனுப்பியிருப்பார்களென்று ஏதாவது ஊகமிருக்கிறதா?

கிளேயர்: மதாம் என்ன சொல்ல வருகிறீர்கள்?

மதாம்: நான் எதையும் குறிப்பாகக் கூறவில்லை. எனக்குத் தெரிய வேண்டும், அவ்வளவுதான். இன்று முழுவதும் ஒரு குருடியைப் போல

அலைந்து திரிந்தேன். புதருக்குள் இளம் பெண்ணின் உடலைத் தேடும் பொலீசார் போல அலைந்தேன்.

கிளேயர்: மிசுயுவின் விடுதலையுடன் எல்லாம் முடிந்து விட்டது.

மதாம்: இறைவனுக்கு நன்றி. ஆனால் கடித விடயம் இன்னும் முடியவில்லை. இவள் என்னதான் செய்து கொண்டிருக்கிறாள். ஒரு மணி நேரத்திற்கு மேலாகிறது. நீ எனக்கு ஏன் உடனடியாக மிசுயு பேசியதாகக் கூறவில்லை? அவர் மிகக் கோபப்படப் போகிறார்.

கிளேயர்: மதாமிற்கு அதிர்ச்சி தரக் கூடாதென நாங்கள் மிகவும் கவனமாக இருந்தோம்.

மதாம்: மிகவும் புத்திசாலித்தனம்தான். பூக்களாலும் நேசத்தாலும் மிகச் சாதுரியமாக என்னைக் கொல்லுகிறீர்கள். என்றோ ஒருநாள் ரோசாப் பூக்களின் கீழ் நான் இறந்து கிடப்பேன். கிளேயர் எனது தலை அலங்காரம் பற்றி என்ன நினைக்கிறாய்? உனக்குப் பிடித்துள்ளதா?

கிளேயர்: எனக்கு உங்கள் தலை அலங்காரம் பற்றிப் பேசத் துணிவிருந்தால் நெற்றிக்கு மேலாக வாரிக்கட்டினால் தோற்றத்தி லொரு பொலிவேற்படுமெனச் சொல்வேன்.

மதாம்: உண்மையாகவா?

கிளேயர்: அந்தத் தலையலங்காரம் மதாமின் முகத்தை மென்மையாகக் காட்டும்.

மதாம்: அப்படியா? நீ சொல்வது சரிதான். நீ புத்திசாலிதான் கிளேயர். உனக்கு உண்மையிலேயே நல்ல ரசனை இருக்கிறதென நான் எப்போதும் எண்ணிக் கொள்வேன். நீ இருக்க வேண்டிய இடம் இதுவல்ல.

கிளேயர்: நான் இப்படி இருப்பது பற்றிக் கவலை கொள்ளவில்லை.

மதாம்: எனக்குத் தெரியும். ஆனால் நீ மெல்லுணர்வுகள் நிரம்பியவள். மற்றவர்கள் அப்படியல்ல. அவர்களுடன் நீ இருப்பது இலகுவான காரியமல்ல. ஆனால் அதிர்ஸ்டவசமாக நீ உன் சகோதரியுடன் இருக் கிறாய். நீங்களிருவரும் ஒரே குடும்பத்தவர். சிறிது அதிர்ஸ்டமிருந்தால். நீ...

கிளேயர்: நான் எதையும் விரும்பவில்லை.

மதாம்: எனக்கதில் எந்தச் சந்தேகமுமில்லை. (கூர்ந்து கேட்கிறாள்) என்ன அது (எழுகிறாள்) ஆகா ஒரு கார்; சோலான்ஸ் வருகிறாள். (தன்னை மீண்டும் கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறாள்)

கிளேயர்: குளிரிற்காகவேனும் சிறிது தேநீரருந்த வேண்டும்.

மதாம்: (சிரித்தவாறே) நீ உனது தேநீராலும் பூக்களாலும் ஆலோசனை களாலும் என்னைக் கொல்கிறாய். நீ என் மீது மிகவும் கரிசனை

யெடுக்கிறாய். கிளேயர், இல்லை என்றுமே இன்று போல் நான் துடிப்பாக உணர்ந்ததில்லை. ஓ, மிகச் சிறந்த தேநீர். அதி உயர்ந்த தேநீர்க் கோப்பைதான் என்னவொரு ஆடம்பரம்; என்னவொரு நளினம். (மதாம் வெளியேற முயல கிளேயர் அவளுக்கும் கதவிற்குமிடையில் நிற்கிறாள்)

கிளேயர்: (பார்வையில் கடுமை காட்டி) மதாம் கட்டாயம் தேநீர் பருகியே தீரவேண்டும். இல்லையேல்...

(சோலான்ஸ் ஓடிவந்து தனது சகோதரியைத் தள்ளி விடுகிறாள்.)

மதாம்: என்ன?

சோலான்ஸ்: (ஆச்சரியமாக) மதாம் நீங்கள் இன்னும் இங்கேயா இருக்கிறீர்கள்? நான் உங்களை எல்லா இடமும் தேடினேன். யாரும் இந்த நேரத்தில் வரப்பிரியப்படவில்லை.

மதாம்: வாடகைக்கார் கிடைத்ததா?

சோலான்ஸ்: அது இங்கு வந்துள்ளது. கீழ்த்தளத்தில் நிற்கிறது மதாம்.

மதாம்: சரியாக விளங்கிக் கொண்டீர்களென நினைக்கிறேன். நீங்களிரு வரும் மேல் மாடிக்குச் சென்று தூங்க வேண்டும். நாங்கள் நாளைக் காலை நித்திரை... நித்திரை... தொடர்ந்து நித்திரை கொள்வோம். கிளேயர் என்னுடன் வா. கதவை மூடிக் கொள். ஆனால் தாழ்ப்பாளைப் போடாதே!

(கிளேயர் தொடர மதாம் செல்ல சோலான்ஸ் தனித்து விடப்படுகிறாள். கிளேயர் திரும்பி வருகிறாள். இரு சகோதரிகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.)

சோலான்ஸ்: (கேலியாக) நல்ல வேலை செய்தாய். அது மட்டு மில்லாமல் என்னை அவமதிக்கவுமல்லவா செய்தாய்.

கிளேயர்: அது குறித்துப் பேசாதே. நான் அதைச் சொல்லக்கூடாதென மிகவும் முயற்சியெடுத்தேன். ஆனால் என்னால் முடியாமல் போய் விட்டது.

சோலான்ஸ்: மதாம் அதைக் குடித்தாளா? (கிளேயர் தலை அசைவில் இல்லை எனக் கூறுகிறாள்) அதைத்தான் எதிர்பார்க்கவும் வேண்டி யிருந்தது.

கிளேயர்: எனது இடத்தில் உன்னை வைத்துப் பார்க்க நினைக்கிறேன். (ஒரு நிமிடம் அசைவின்றி நின்று விட்டுச் சமையலறையை நோக்கி நடக்கிறாள்.)

சோலான்ஸ்: எங்கு போகிறாய்?

கிளேயர்: (திரும்பிப் பார்க்காது சலிப்பான குரலில்) நித்திரைக்கு. (அவள் வெளியேறுகிறாள்)

சோலான்ஸ்: கிளேயர்! (அமைதி) கிளேயர்! (கதவினருகில் சென்று அவளைக் கூப்பிடுகிறாள்) கிளேயர் நான் உன்னைக் கூப்பிடுவது கேட்கவில்லையா?

கிளேயர்: (மேடைக்கு வெளியே) அதற்கிப்போது என்ன?

சோலான்ஸ்: (வலது பக்கக் கதவை நோக்கியவாறு) இங்கே வா. உன் காதில் விழுகிறதா, வா இங்கு.

(கிளேயர் இடுப்பிலுள்ள 'எப்ரனை' களைந்தவாறு வருகிறாள்)

கிளேயர்: (மிகச் சலிப்பாக) உனக்கு என்ன தெரியவேண்டும்? இது எனது குற்றமா? தேநீர் ஆயத்தமாகத்தான் இருந்தது. நான் மாத்திரைகளை அதனுள் போட்டதும் உண்மை. ஆனால் அவள் குடிக்கவில்லையே.

சோலான்ஸ்: நாங்கள் இங்கு குந்தியிருந்து கொண்டு நடுங்கிக் கொண்டிருக்க வேண்டுமென நீ நினைக்கிறாயா? (தனது சகோதரியைக் கடுமையாகப் பார்க்கிறாள்) அவர்களிருவரும் நாளை திரும்பி வருவார்கள். மது போதையுடன் ஏறத்தாழ மூர்க்கமாகவும் வெற்றி வீரர்கள் போலும். கடிதம் எங்கிருந்து வந்ததென்பதை அவர்கள் ஏற்கனவே அறிந்து விட்டிருப்பார்கள். அவர்கள் - நான் அவர்களை வெறுக்கிறேன் - (கிளேயர் தோள்களைக் குலுக்கிக் கொள்கிறாள்) ஓ நானவளை மனதார வெறுக்கிறேன். அவளைக் கண்டாலே வெறுப்பு எல்லை மீறி விடுகிறது. நீ என்னவென்றால் ஓர் உணர்வுமில்லாது அங்கு வெறுமனே நிற்கிறாய். அவளின் கண்கள் மினுங்கியதை நீ பார்க்கவில்லையா! என்னவொரு அருவருப்பான சந்தோசம் அவளுக்கு. எங்களின் தோல்வியில், வெட்கத்தில் அவளது மகிழ்வு திளைக்கிறது. அவளின் மாமிசத்தின் இளஞ்சிவப்பு நிறம் எங்கள் வெட்கத்தின் நிறம். அவளின் உடை (சிவப்பு வெல்வெட் உடையைக் காலால் உதைக்கிறாள்) இது எங்கள் வெட்கத்தின் நிறம். அதை அவள் திரும்ப எடுத்துக் கொண்டாள். நீ... நீ ஒன்றுமேயில்லாமல் அங்கு நிற்கிறாய். நீ அலறவில்லை. நீ என்ன இறந்தா போய்விட்டாய்?

கிளேயர்: என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? எங்களிடமிருந்து அவள் தப்பி விட்டாள். நீ வெகு சீக்கிரமாகவே திரும்பி வந்து விட்டாய்.

சோலான்ஸ்: அவள் தப்பிவிட்டாள்; நீ ஒன்றுமே செய்யாது நின்று கொண்டிருக்கிறாய்.

கிளேயர்: என்னதான் செய்ய வேண்டுமென நீ எதிர்பார்க்கிறாய்? கத்திக் குழறச் சொல்கிறாயா? (சோலான்சின் முகத்தெதிரே சென்று உரத்துக் கத்துகிறாள். சோலான்ஸ் அசைவற்று நிற்கிறாள்) மூர்க்கமான காட்சியொன்றை அரங்கேற்ற வேண்டுமா? உனக்கு அதுதானே வேண்டும். இரவு முழுவதும் நமக்கு நேரமிருக்கிறது. பதில் சொல் - சொல்லு - வேண்டுமா?

சோலான்ஸ்: *(அமைதியாக) மறுபடியும் தொடங்குவோம்.*

கிளேயர்: *ஏன் அவசரப்படுகிறாய்? நாம் தேவையான அளவு நேரம் எடுத்துக் கொள்வோம்; சரியா? (தனது ஏப்பிரனை அவிழ்க்கிறாள்)*

சோலான்ஸ்: *ஏப்பிரனை அவிழ்க்காதே. இது உனது முறை*

கிளேயர்: *இல்லை... அப்படியல்ல.*

சோலான்ஸ்: *இந்த முறை எனது முறை நான்தான் மதாம்.*

கிளேயர்: *இந்தா ஏப்பிரனைப் பிடி.*

சோலான்ஸ்: *ஆனால் கிளேயர்...*

கிளேயர்: *(சாதாரணமாக) எனக்கு அது பழக்கப்பட்டு விட்டது. இந்தா (பவித்திரமாக ஏப்பிரனைக் கையளிக்கிறாள்) நான் அளவுக்கதிகமாக முகப்பூச்சை பாவித்து விட்டேனா?*

சோலான்ஸ்: *ரோஜா நிறம் மட்டும் போடவில்லை. முழுமையாக ஒப்பனை செய்து கொண்டுள்ளாய்.*

கிளேயர்: *அதைத்தான் அவளும் சொன்னாள்.*

சோலான்ஸ்: *எல்லாம் முடிந்து விட்டது. (ஏப்பிரனை எடுக்கின்றாள்.) கட்டாயம் கட்டியே தீர வேண்டிய நிலை. எதுவாயினும் நானொரு நல்ல பணிப் பெண்ணாக இருக்க விரும்புகிறேன். (நாடாவை எடுத்துப் பின்புறமாகக் கட்டிக் கொள்கிறாள்) விளக்கை அணைத்துவிடு.*

கிளேயர்: *(துணுக்குற்று) நீ ... நாங்கள் இருட்டில் எல்லாவற்றையும் செய்ய வேண்டுமா?*

சோலான்ஸ்: *நான் சொல்லியபடி செய். (விளக்கை அணைக்கிறாள். அறை இருட்டாகிறது. சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு அசையாது தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.)*

கிளேயர்: *ஓ... சிறிது பொறுப்போமே - சோலான்ஸ் தற்செயலாக மதாம் திரும்பி வந்தால் - சிலவேளைகளில் எதையாவது மறந்து விட்டிருக் கலாம். அவசரத்தில் கைப்பை அல்லது பணம் அல்லது...*

சோலான்ஸ்: *ஒருபோதுமில்லை, குழந்தைத்தனமாகப் பேசாதே.*

கிளேயர்: *(முணுமுணுப்பாக) வலு அவசரமாக வெளியேறினாள். இது எங்களைப் பிடிப்பதற்கான ஒரு பொறியாகக் கூட இருக்கலாம். மதாம் எதைப் பற்றியோ சந்தேகப்படுகிறாள்.*

சோலான்ஸ்: *(தோளைக் குலுக்கியவாறு) உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லேன் எதுவாகவிருக்கும்?*

கிளேயர்: *அவள் எங்களைச் சந்தேகிக்கிறாள் - நாங்கள் கண்காணிக்கப் படுகிறோம்.*

சோலான்ஸ்: *அதற்கென்ன - அதையெல்லாம் கடந்து வந்துவிட்டோம்.*

கிளேயர்: *(சிறிது நேரத்தைக் கடத்துவதற்காக) நீ நான் சொல்வதை புரிந்து கொள்கிறாயில்லை சோலான்ஸ். உண்மையாகவே சொல் கிறேன் ;என் உணர்வுகள் சொல்கின்றன. உண்மையாகவே நான் உணர்கிறேன். காது கொடுத்துக் கேள். எங்களை யாரோ வேவு பார்க்கிறார்கள். திடமாக நம்புகிறேன். திடீரென மதாம் வரத்தான் போகிறாள். அவள் தனது கையுறைகளை அல்லது கைக்குட்டையை மறந்து விட்டிருக்கலாம். (சோலான்ஸ் தோள்களைக் குலுக்குகிறாள்) அல்லது அவளது கையளவு ஒப்பனைப் பெட்டியை - கடவுளுக்குத்தான் தெரியும் எதுவாகவுமிருக்கலாம் - அல்லது இந்த அறையில் ஏதாவது எங்கள் நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் கருவிகளை மறைத்து வைத்திருக்கலாம். நினைவிருக்கிறதா தாழ்ப்பாளைப் போட வேண்டாமென்று கூறியது...*

சோலான்ஸ்: *உனக்குப் பைத்தியம் முற்றி விட்டது.*

கிளேயர்: *எனக்குப் பைத்தியமில்லை. சிறிது பொறு. தயவுசெய்து பொறுமையாக இரு. நான் சொல்வதின் முக்கியத்துவத்தை நீ விளங்கிக் கொள்கிறாயில்லை. தற்செயலாக அவள் வந்தால்...*

சோலான்ஸ்: *அவளுக்குத்தான் தீங்காகவிருக்கும்*

கிளேயர்: *நீ வேகமாக முதிர்ச்சியடைகிறாய் சோலான்ஸ். எல்லா வற்றிற்கும் உன்னிடம் விடை இருக்கிறது. ஆகக் குறைந்தது...*

சோலான்ஸ்: *என்ன?*

கிளேயர்: *(கூச்சமாக) ஆகக் குறைந்தது... நாமொரு செபமாவது சொல்வோமா?*

சோலான்ஸ்: *கடவுளை இதனுள் கொண்டு வரத் துணிகிறாயா?*

கிளேயர்: *பரிசுத்த...*

சோலான்ஸ்: *கடவுளின் தாயை இந்த நிகழ்வினுள் கொண்டு வருகிறாயா? நான் நினைத்ததை விடத்துணிவு உனக்கு அதிகம்தான். உனக்கு வெட்கமென்பதே இல்லை.*

கிளேயர்: *மெதுவாகப் பேசு சோலான்ஸ். சுவர்கள் அவ்வளவு தடிப் பானவையல்ல.*

சோலான்ஸ்: *(சிறிது தொனியைக் குறைத்து) உனக்குப் பைத்தியம் பிடிக்கிறது கிளேயர். கடவுள்தான் நமது பேச்சுக்களைக் கேட்கிறார். அவருக்காகத்தான் கடைசிக் காட்சியை நடத்த வேண்டுமென்பதும் நமக்குத் தெரிந்ததே. அவருக்கு முன்கூட்டியே நாம் சொல்லி விடக்கூடாது. நாங்கள் இறுதிவரை நாடகத்தை நடத்தியே தீருவோம்.*

கிளேயர்: *உரக்கப் பேசாதே.*

சோலான்ஸ்: *சுவர்கள் அவரின் காதுகள்.*

கிளேயர்: அப்படியாயின் நான் வெள்ளை உடையைப் போட்டுக் கொள்கிறேன்.

சோலான்ஸ்: உனக்கு அது விருப்பமாயின் அப்படியே செய். இதனால் எதுவும் மாறிவிடப் போவதில்லை. கெதியாக உடுத்திக் கொள். நமது நிகழ்வின் ஆரம்ப ஆயத்தங்களை விட்டுவிட்டு தொடங்குவோம். காலப்போக்கில் திருப்பங்களும் காட்சி மாற்றங்களும் நமக்குத் தேவையற்றுப் போய்விட்டது. பொய்களும் கூட. எடுத்த எடுப்பிலேயே நாம் விரும்பும் மாற்றத்திற்குப் போய்விடுவோம். கெதியாக என்னால் இனியும் நிந்தைகளையும் வெட்கத்தினையும் தாங்கிக் கொள்ள முடியாது. உலகம் நம்மைப் பார்த்தும் கேட்டும் தோள்களைக் குலுக்கிக் கொண்டும் எனக்குப் பைத்தியம் என்றும் பொறாமை என்றும் சொன்னாலும் அதைப்பற்றி நான் கணக்கெடுக்கப் போவதில்லை. மகிழ்வால் எனது உடல் நடுங்குகின்றது. மகிழ்வு என்னுள் பரவி நாடி நரம்பெங்கும் ஓடுகிறது. கிளேயர் சந்தோசத்தில் நான் அரற்றப்போகிறேன்.

(இந்த உரையினூடு கிளேயர் வெள்ளை உடையை எடுத்து ஒரு தடுப்புக்குப் பின்னால் சென்று அதனைத் தனது பணிப்பெண் உடையான கறுப்பு உடை மேல் அணிந்து கொள்ள கறுப்புடையின் நீண்ட கை, கைகளற்ற வெள்ளையுடையினூடு தெரிகிறது.)

கிளேயர்: *(வெள்ளையுடையில் கட்டளையிடும் குரலில்)* ஆரம்ப மாகட்டும்.

சோலான்ஸ்: *(அழகுணர்வுடன்)* நீ அழகாக இருக்கிறாய்.

கிளேயர்: அதைவிடு; ஆரம்ப நிலையை விட்டு விடுவதாக அல்லவா நீ சொன்னாய். இழிவு படுத்துவதை ஆரம்பி.

சோலான்ஸ்: என்னால் அது முடியுமென்று நினைக்கவில்லை. உன் அழகு என்னை மயக்குகிறது.

கிளேயர்: இழிவு, இழிவுபடுத்தலை ஆரம்பி; அதனை கட்டவிழ்த்து விடு. என்னை அது மூழ்கடிக்கட்டும். உனக்குத் தெரியுமல்லவா. எனக்கு வேலைக்காரர்களை அடியோடு பிடிக்காது. அடிமைப் புத்தியுள்ள இழிவான அருவருப்பான சமூகமது. அவர்கள் மனித இனத்தினிலே சேர்த்தியில்லாதவர்கள். நாற்றம் பிடித்தவர்கள். அழுக்கின் ஊற்றுக் கால்களான அவர்கள் எங்கள் அறைகளினூடும் வீட்டின் கதவுகளினூடும் புகுந்து புறப்பட்டு எங்கள் வாய் வழியாக உட்புகுபவர்கள். எங்களையும் அழுக்காக்குபவர்கள். உன்னை நினைக்கவே வாந்தி வருகிறது.

சோலான்ஸ்: விட்டுவிடாதே, தொடரு. *(அமைதி - கிளேயர் இருமுகிறாள்)* தொடர்ந்து பேசு நான் வரவேண்டிய இடத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன்; வந்து கொண்டிருக்கிறேன்.

கிளேயர்: சவக்குழி கிண்டுபவன், குப்பை அள்ளுவோர், பொலிசார் போல வேலைக்காரரும் தேவையானவர்கள்தான். ஆயினும் ஓர் அழுகி நாற்றமெடுக்கும் கூட்டமது.

சோலான்ஸ்: இன்னும் கொஞ்சம் நிந்தனையைத் தொடரு.

கிளேயர்: உங்களது பயங்கவ்விய குற்ற உணர்வு உறைந்த முகமும் சுருங்கிய வளைந்த முழங்கைகளும், நாகரீகத்திற்குப் பொருத்தமற்ற உடைகளும் தேய்ந்து போன உங்கள் உடல்கள் எங்களின் கழிவு உடுப்புகளுக்கு மாத்திரம் பொருத்தமானவை. நீ எமது ரசமிழந்த கண்ணாடி போன்றவள். எமது அருவருக்கத்தக்க மலவாசல். எமது வெட்கக்கேடு. எமது கிழிசல்.

சோலான்ஸ்: தொடரு; விட்டுவிடாதே.

கிளேயர்: தயவுசெய்து விரைவாகச் செயல்படு. என்னால் தொடர முடியவில்லை. நீ, கடவுளே என்னால் இதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை. எனது மூளை வெறுமையாகி விட்டது. நிந்தைச் சொற்கள் ஒன்றுமே இனி என்னிடமில்லை. கிளேயர் நீ என்னைக் களைப்படையச் செய்து விட்டாய்.

சோலான்ஸ்: நிறுத்து. நான் அங்கு வந்துவிட்டேன். இப்போது எனது முறை - மதாம் உங்கள் வசைமாரியும், உங்கள் காதல் பிதற்றல்கள், உங்கள் காதலர்கள், உங்கள் பால்காரன்...

கிளேயர்: சோலான்ஸ்

சோலான்ஸ்: பேசாதே! காலையில் வரும் உனது பால்காரன், விடி காலையை அறிவிக்கும் தூதுவன், உனது கிளர்வூட்டும் குரல், உனது அழகிய வெண்நிறக் காதலன் எல்லாம் முடிந்து விட்டது. *(குதிரைச் சவுக்கொன்றை எடுக்கிறாள்)* ஏ! உனது பாத்திரத்தை ஏற்றுக்கொள்.

கிளேயர்: நீ என்ன சொல்கிறாய்?

சோலான்ஸ்: *(பரவசமாக)* நான் நிகழ்வின் திசையை நிர்ணயிக்கிறேன். முழந்தாளிடு!

கிளேயர்: சோலான்ஸ்!

சோலான்ஸ்: ம்... முழந்தாளிடு. *(கிளேயர் சிறிது தாமதித்து முழங் காலிடுகிறாள்)* ஆகா, ஆகா உன் அழகிய கரங்களை மடக்கிய விதம் எவ்வளவு அழகாக இருக்கிறது! உனது கண்ணீர் - உனது மலரிதழ் களொத்த கண்ணீர் உன் அழகிய முகத்தில் வடிகின்றது. படு *(கிளேயர் அசையாதிருக்கிறாள்)* படு. *(சவுக்கால் அடிக்கிறாள்)* கீழே படு. *(கிளேயர் கீழே படுக்கிறாள்)* ஆக, நீ என்னை மகிழ்விக்கிறாய். ஊரு, ஊரு - ஒரு புழுப்போல் ஊரச்சொல்கிறேன். நீ கப்பலைத் தொடர்ந்து போய் நாடு கடத்தப்பட்ட உனது காதலனுக்கு ஆறுதல் சொல்லப் போகின்றாயா? அது உன்னால் முடியுமா? காவலர்கள் உன்னைப்

பார்த்துப் பல்லிளிப்பார்கள். மக்கள் உன்னை விரல் சுட்டிப் பேசுவார்கள். உனது காதலன் வெட்கித் தலை குனிவான். என்ன நீ வலிமை நிரம்பியவளா? அவனது பிரயாணப் பையைத் தூக்குமளவு பலசாலியா? ம்தாம் சுறுசுறுப்பானவளா? கால்களில் அவ்வளவு சுறுசுறுப்புள்ளதா மதாம்? கவலைப்படாதே நான் உன்னைப் பார்த்துப் பெருமைப்படவில்லை. நான் போகுமிடத்திற்கு அந்தச் சில்லறைத் திருடன் எனக்குத் தேவையே இல்லை. நானே திருடனும் நானே அவனின் இருண்ட நிழலும். நான் தனியாகவே ஒளி நிறைந்த கரைகளில் நடந்து செல்வேன்.

கிளேயர்: நான் அவரை இழந்து கொண்டிருக்கிறேன்.

சோலான்ஸ்: நானுனக்குப் போதுமாயில்லை?

கிளேயர்: சோலான்ஸ் தயவுசெய்து உதவு. நான் மூழ்கிக் கொண்டிருக்கிறேன்.

சோலான்ஸ்: மூழ்கு; ஆனால் மேற்பரப்புக்கு மீண்டும் எழுந்து வா. எனது ஊழ்வினை என்ன என்பது எனக்குத் தெரியும். நான் எனது இருப்பிடத்தினைக் கண்டு கொண்டேன். தன்னிறைவுடன் அங்கு வாழ்வேன். (மூச்சை இழுத்து விட்டுக் கொள்கிறாள்.) எழுந்து நில்! நானுன்னை மணந்து கொள்கிறேன். ஓர் ஆணின் காலடியில் புழுவைப் போல் ஊர்ந்து கொண்டு... என்ன கேவலம்? முதுகெலும்பற்ற தன்மை. இம்மாபெரும் காரியம் அழகாகத்தான் முடியப் போகிறது. அது சரி நீ எவ்வாறு எழப்போகிறாய்?

கிளேயர்: (மெதுவாகவும் பிரயத்தனத்துடனும் எழுந்து கொண்டு) நீ என்னை வருத்துகிறாய்.

சோலான்ஸ்: (கேலியாக) கவனம், எழும்போது கவனமாக எழுந்திரு.

கிளேயர்: (எழுந்து நின்று) நாங்கள் திசை தெரியாது மூழ்கிக் கொண்டிருக்கிறோம். தூங்கப் போவதுதான் நல்லது. எனது தொண்டை...

சோலான்ஸ்: (அவளை நோக்கி நடந்து சென்று) மதாமின் கழுத்து மிக அழகானது. ஓர் அரசியின் தொண்டை போன்று அழகானது. (கிளேயர் சமையலறைக் கதவை நோக்கிப் பின்னால் நகர்கிறாள்.) ஒரு மணிப்புறாவின் அழகினை ஒத்துள்ளது. ஆமைக் கழுத்துக் கொண்ட புறாவே!

கிளேயர்: (தொடர்ந்தும் பின் நகர்ந்து தனது தொண்டையில் பாதுகாப்பாகக் கைகளை வைத்துக் கொள்கிறாள்.) நன்றாகவே நேரமாகிவிட்டது.

சோலான்ஸ்: ஆனால் ஆகப்பிந்திவிடவில்லை.

கிளேயர்: மதாம்...

சோலான்ஸ்: ...ஷம்பெயின் மிசுயுவுடன் சேர்ந்து அருந்திக் கொண்டிருப்பாள். சாவிலிருந்து தப்பியல்லவா மிசுயு வந்துள்ளார்.

கிளேயர்: அவள் எந்த நிமிடமும் திரும்பி வரலாம். என்னைப் போகவிடு.

சோலான்ஸ்: கவலைப்படுவதை விட்டொழி. அவள் காற்றில் மிதந்து கொண்டிருக்கிறாள். கால் பாவாது நடனமாடிக் கொண்டு அதி உயர் திராட்சை மதுவை அருந்தி மதி மயங்கிப் போயிருக்கிறாள்.

கிளேயர்: இதை விட்டு விடுவோம் சோலான்ஸ் - ஆபத்து நம்மை எதிர்நோக்கியுள்ளது.

சோலான்ஸ்: அங்கே போ. (சமையலறையைச் சுட்டிக் காட்டுகிறாள்) மெழுகுத் துணிகளை இன்னும் நீ முடிக்கவில்லை.

கிளேயர்: (உச்சத் தொனியில் அலறுகிறாள்) யாராவது உதவி செய்யுங்கள்.

சோலான்ஸ்: கத்தாதே! அதில் எந்தப் பயனுமில்லை. மரணம் பிரசன்னமாகியுள்ளது. அது உன்னை வேட்டையாடத் தொடங்கி விட்டது. கத்தாதே! நான்தான் பூனைக்குட்டிகள் மூழ்கி விடாது பாதுகாப்பது போல் உன்னைப் பாதுகாத்தேன். நான்தான் உன்னைப் பாதுகாப்பதற்காக ஊசிகளால் என் வயிற்றைக் குத்தி கருக்களை வெளியில் எடுத்துக் கழிவு வாய்க்காலினுள் வீசினேன். உன்னை வைத்துக் கொள்வதற்காக; உயிருடன் வைத்துக் கொள்வதற்காக.

கிளேயர்: (அறையினுள் சுற்றி ஓடியவாறு) சோலான்ஸ், சோலான்ஸ் நீ உன்னை மறந்து பேசுகிறாய்.

சோலான்ஸ்: (அவளை நோக்கி ஓடியவாறு) உன்நிலைக்கு!

கிளேயர்: (சிறிது உணர்வடங்கிய குரலில்) யாராவது உதவிக்கு வாருங்களேன்.

சோலான்ஸ்: கத்துவதை நிறுத்து. யாருமே உனது குரலைக் கேட்கப் போவதில்லை. நாமிருவரும் எல்லைகளை விட்டு வெகுதூரம் வந்து விட்டோம்.

கிளேயர்: சோலான்ஸ்...

சோலான்ஸ்: எல்லோருமே காதுகளைக் கூர்மையாகத்தான் வைத்துள்ளனர். ஆனால் யாருக்குமே கேட்கப் போவதில்லை.

கிளேயர்: எனக்கு மயக்கம் வருகிறது.

சோலான்ஸ்: அங்கு நீ நன்கு கவனிக்கப்படுவாய்.

கிளேயர்: எனக்கு - நான் - எனக்கு வாந்தி வரும்போல் இருக்கிறது... (ஒங்காளிப்பது போல் சத்தம் செய்கிறாள்)

சோலான்ஸ்: (கிளேயரை அணுகிப் பரிவான குரலில்) உண்மையாகவா? உண்மையாக உனக்கு நல்ல சுகமில்லையா, உண்மையாகவே வாந்தி வருவதுபோல் இருக்கிறதா?

கிளேயர்: எனக்கு - நான்...

சோலான்ஸ்: இங்கேயில்லை; கிளேயர் சிறிது பொறுத்துக் கொள் (அவளைத் தாங்கிப் பிடித்துக் கொள்கிறாள்) இங்கு வேண்டாம். வா என்னில் சாய்ந்து கொள். வா, மெதுவாக நடந்து வா; இங்கு வேண்டாம் வா. நாம் நமது பூக்களலங்கரிக்கும் ராஜ்ஜியத்திற்குச் செல்லுவோம். இந்த எல்லாத் துன்பங்களையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் நல்லதொரு வழி என்னிடம் இருக்கிறது.

(அவர்கள் சமையலறைக் கதவினால் வெளியேறுகின்றனர். மேடை சில வினாடிகள் வெறுமையாக இருக்கிறது. திடீரெனப் பலமாக வீசிய காற்று பூட்டப்படாத ஜன்னல்களைத் திறக்கின்றது. வலப்பக்கத்தினூடு சோலான்ஸ் வருகிறாள். தனது கறுப்பு நிற வேலை அங்கியை அணிந்திருந்தாள். காட்சி முழுவதும் கற்பனையான பாத்திரங்களுடன் அங்கே இருப்பது போல் பாவனை செய்து சம்பாசிப்பாள்.)

சோலான்ஸ்: மதாம்... முடிவாக மதாம் இறந்து விட்டாள்... மெழுகு சீலையின் மேல் வளர்த்தப்பட்டுக்கிடக்கிறாள்... கழுவுவதற்குப் பயன்படும் கையுறை அணிந்த கைகள் கழுத்தை நெரித்து... என்ன? மதாம் நீங்கள் தொடர்ந்தும் அமர்ந்திருக்கலாம்... மதாம் என்னை சோலான்ஸ் என்றே அழைக்கலாம்... மெத்தச் சரி. ஏனெனில் நான் செய்த செயலிற்காக. என்னை மதாமும் மிசுயுவுடன் மத்மோசெல் சோலான்ஸ் லுமெசியே என்றுதான் அழைக்க வேண்டும். மதாம் அந்தக் கறுத்த உடையை அணிந்திருக்கக் கூடாது. என்னவொரு ரசனையற்ற கோமாளித்தனம் (அவள் மதாமின் குரலில் பேசுகிறாள்) ஆக, எனது வேலைக்காரிக்காக துக்க உடை அணியுமளவிற்கு மதிப்பிழந்து போய் விட்டேன். நான் சேமக்காலையிலிருந்து வெளியே வந்தபோது சுற்று வட்டாரத்திலுள்ள எல்லா வேலைக்காரரும் என் முன்னே நானும் அவர்கள் குடும்பத்தில் ஒருவர் போல அணிவகுத்துச் சென்றனர். நான் பல வேளைகளில் குடும்பத்தில் ஒருத்தியாய் இருந்துள்ளேன். மரணம் இந்தக் கசப்பான நகைப்பை இறுதி வரை நீட்டிவிடுகிறது... என்ன? ஓ... மதாம் எனக்காக வருந்தத் தேவையில்லை. நான் உங்களுக்குச் சமமானவள். என் தலை என்றும் தாழ்ந்ததில்லை. ஓ... மெசியே சில விடயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவருக்குத் தெரியவில்லை. அவர் எங்கள் கட்டளைகளுக்குப் பணிந்து நடந்து கொண்டார் என்பதனை (சிரிப்பு). அவரொரு சிறு பையனாகவும் எங்கள் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு நடப்பவருமானார். நான் பேசமாட்டேன் இன்ஸ்பெக்டர் - இந்தக் கொலையுடனான எனது தொடர்பு பற்றி நான் உங்களிடம் பேசப் போவதில்லை... அந்த உடை நீங்கள் அந்த உடைகளை எங்களுக்குத் தரத் தேவையில்லை. நீங்களே அவைகளை வைத்துக் கொண்டிருந்திருக்கலாம். என்னிடமும் எனது சகோதரியிடமும்

எங்களுக்குச் சொந்தமான உடுப்புகள் இருக்கின்றன. அவைகளைத்தான் நாங்கள் இரவில் இரகசியமாக அணிந்து கொள்வோம். என்னிடம் சொந்த உடைகளுள்ளன. நான் உனக்குச் சமமானவள். நான் குற்றங்கள் புரிவோர் அணியும் சிவப்புடை அணிவேன். மிசுயு கேலியாகச் சிரிக்கின்றீர்? புன்னகைக்கின்றீர்கள்? மிசுயு எனக்கு மூளை கலங்கி விட்டதென நினைக்கின்றீர்கள். சீமாட்டிகளின் நடைமுறைகளைக் கைப்பற்றாது ரசனையுடன் வேறு நடைமுறைகளைப் பணிப்பெண்கள் கையாள வேண்டுமென்று மிசுயு எண்ணுகின்றீர்களா? மிசுயு என்னை மன்னிக்க வேண்டும். மிசுயு ஓர் இரக்கமே உருவான ஆன்மா. நீங்களென்னுடன் சாதுரியமாகப் போட்டியிட விரும்புகிறீர்கள். நானோ காடுகளின் உயரங்களை அளந்தவள். மதாம் என்னவென்றால் - எனது தனிமை, ஆம் நான் தனிமையானவள்; அத்துடன் மூர்க்கமானவள். நான் சில வேளைகளில் கொடூரமான விடயங்களைச் சொல்வேன்; இருப்பினும் இரக்கம் நிறைந்தவளாகவும் இருக்க என்னால் முடியும்... மதாம் உங்களது பயத்தினை வெல்வீர்கள், நிச்சயமாக பயத்தினை ஜெயிப்பீர்கள். அது சரி மதாமின் பூக்கள், நகைகள், உடைகள், வாசனைத் திரவியங்கள், காதலர்கள் இவைகள் பற்றிப் பேசுவோமா? எனக்கு என் சகோதரி இருக்கிறாள்... சந்தேகமில்லை, எனக்கு இவைகளைப் பற்றிப் பேசத்துணிவுண்டு. நான் பேசுவேன் மதாம். என்னால் பேச முடியாத விடயம் ஒன்றுமேயில்லை. யார் என்னைப் பேச முடியாது தடுத்துவிட முடியும்? யார்? 'எனது குழந்தையே!' என என்னைப் பார்த்துக் கூற யாருக்குத் துணிவிருக்கிறது. நானொரு பணிப் பெண். நல்ல திறமையான பணிப்பெண். எனது நடைமுறைகளெல்லாம் ஒரு பணிப்பெண்ணின் நடைமுறை எவ்வாறாக இருக்க வேண்டுமோ அவ்வாறே இருந்தது. நான் மதாமைப் பார்த்து மகிழ்ச்சியாகச் சிரித்துள்ளேன். குனிந்து அவளது படுக்கையைச் சீர்ப்படுத்தியுள்ளேன்; குனிந்து பளிங்குத் தரையை உரசிக் கழுவியுள்ளேன், காய்கறிகளை நறுக்குவதற்காகவும் காதுகளைக் கதவின் மேல் பொருத்துவதற்காகவும் குனிந்துள்ளேன், கண்களைச் சாவித் துவாரத்தின் மீது இறுகப் பதிப்பதற்காகவும். ஆனால் இப்போது நான் நிமிர்ந்து நிற்கின்றேன்; அத்துடன் உறுதியாகவும். கழுத்தை நெரித்தவளாக. மத்மோசெல் சோலான்ஸ் தனது சகோதரியின் கழுத்தை நெரித்தவள்!... நான் அமைதியாக இருக்க வேண்டும்? மதாம் மென்மையானவர்; உங்கள் மீது இரக்கம்தான் வருகிறது. மதாமின் வெண்மையான நிறத்தினை, வெல்வெட் போன்ற தோலின் மென்மையினை அவளது சிறிய காதுகளை, மெலிந்த மணிக்கட்டினை... ஆ... நான் ஒரு கறுப்புக் காகம். ஓ... ஓ... என்னிடமும் நீதிபதிகள் உள்ளனர். நான் பொலிசைச் சேர்ந்தவள். கிளேயர்? அவள் உண்மையில் உங்கள் மீது பற்றுக் கொண்டிருந்தாள் மதாம். உனது உடைகள் பற்றி மீண்டும்

பார்ப்போம். அந்த வெள்ளையுடை, அவளை அணிய வேண்டா மென்று தடுத்தேனே அதே வெள்ளையுடை அதுதான். ஒபேராவிற்கு அன்றிரவு நீங்களணிந்த அதே வெள்ளையுடைதான். அன்றிரவுதானே அவள் குசினியுள் அமர்ந்து கரி கூப்பரின் புகைப்படத்தினை ரசித்ததற்காக அவளைக் கேலி செய்தீர்களே..மதாமிற்கு நினை விருக்கும். மதாமிற்கு ஞாபகமிருக்கும். மெலிதான கண்டிப்புடன், ஒரு தாயின் நாசுக்குடன் எங்களிடமிருந்து அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டீர்கள். அல்லது அவளைக் கிளாரினெற் என்று அழைத் ததையும் மறந்திருக்க மாட்டீர்கள். மிசுயு சிரித்துச் சிரித்து கன்னங்களில் கண்ணீர் வடிந்ததே. ம்... நான் யாரா? எல்லா வேலைக்காரர்களின் ஒட்டு மொத்தமான அசுர ஆத்துமா! இல்லை இன்ஸ்பெக்டர், நான் இவர்கள் முன்னிலையில் எந்தவொரு விளக்கமும் அளிக்கப் போவ தில்லை. அது எங்களுக்குண்டான விடயம். வேலை செய்பவர்கள் வாழுமிடத்தின் நிழல்களில் எஜமானர்கள் புகமுடியுமாயின் எவ்வளவு நன்றாகவிருக்கும்... எனது குழந்தை, இருள், எங்களின் இருள். (ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துப் பதட்டமாகப் புகைக்கிறாள். புகை அவளை இரும வைக்கிறது.) உனக்கோ அன்றேல் வேறு யாருக்குமோ எதுவும் சொல்லப்பட மாட்டாது. நீங்களே கூறிக் கொள்ளுங்கள் சோலான்ஸ் இம்முறை அதனை நடத்தி முடித்து விட்டாளென்று... அவளது உடையைப் பார்த்தீர்களா? சிவப்புடை. அவள் வெளியே போகின்றாள். (ஜன்னலைத் திறந்து மாடத்தில் போய் நிற்கிறாள். இரவைப் பார்த்துக் கொண்டும் அவளது பின்புறம் பார்வையாளர் பக்கமாக இருக்க இவ்வுரையில் வழங்குகின்றாள். மெல்லிய காற்று அறையினுள் புகுந்து திரைச் சீலைகளைச் சலனப்படுத்துகிறது.) வெளியே செல்வது மிகப்பெரிய படிகளைக் கடந்து இறங்குவது, பொலிசார் புடைசூழ, உனது மாடத்தில் நின்று கழுவாய் தேடும் நிழலுருவங்கள் மத்தியில் அவள் செல்வதைப் பார். நேரம் நண்பகல். அவள் ஒன்பது இறாத்தல் கை விளக்கை கையிலேந்திச் செல்கிறாள். தூக்கிலிடுபவன் அவளை மிக அருகாமையில் தொடர்ந்து செல்கின் றான். அவன் அவள் காதுகளில் இனிய மொழிகளை ரகசியக் குரலில் கூறுகின்றான். கிளேயர்! தூக்கிலிடுவோன் என் பக்கத்தில் இருக்கின் றான். எனது இடுப்பிலிருந்து உனது கையை எடு. அவன் என்னை முத்தமிட எத்தனிக்கிறான். என்னை விடு! ஆ... ஆ... (சிரிக்கிறாள்) தூக்கிலிடுபவன் என்னைக் கேலி செய்கிறான். அக்கம்பக்கத்திலுள்ள எல்லா வேலைக்காரர்களும் அணி வகுத்து அவளுடன் செல்வர். கிளேயரின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்ட எல்லா வேலைக்காரரும் இதிலும் கலந்து கொள்வர். முடிகளணிந்தும், பூக்கள் சூடியும், தோளில் காற்றில் பறக்கும் துகில் அணிந்தும் பதாதைகள் தாங்கியும் வருவர். மணிகள் சோக ஒலி எழுப்பும். மரண ஊர்வலம் தனது பகட்டாரவாரத்தை மெல்லத் தொடங்கும். எவ்வளவு

அழகாகவிருக்கும் இல்லையா? முதலில் பட்லர்கள் தமது சுருக்கு வைத்துத் தைத்த விசேட உடையை அணிந்திருப்பார்கள். ஆனால் பட்டினாலான வேலைப்பாடு இல்லாதிருக்கும். அவர்கள் தங்கள் முடிகளை அணிந்திருப்பார்கள். பின்பு காலாட்கள். அந்த ஏவல் புரிவோர் முழங்கால் நீளத்திற்குக் காற்சட்டையும் வெள்ளை நிறக் காலுறைகளை முழங்கால் வரையும் அணிந்திருப்பர். அவர்கள் தங்கள் முடிகளை அணிந்திருப்பர். அதன் பின்பு எஜமானர்களின் விசேட உதவியாட்கள். அவர்களுடன் பணிப்பெண்கள் எங்கள் நிறங்களை அணிந்து வருவர். அதன் பின்பு மோட்சத்தின் தூதுக்குழு வரும். இவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கி நான். தூக்கிலிடுவோன் என்னைக் கேலி செய்கிறான்... நான் பாராட்டப்படுகிறேன். என் நிறம் வெளிறி நான் இறக்கும் தறுவாயில்... (அறைக்குத் திரும்புகிறாள்) எவ்வளவு பூக்கள்! அவளின் மரணச் சடங்கினை மிகச் சிறப்புற வைத்தன. ஓ! கிளேயர்! என் அருமை கிளேயர்! (உடைந்து அழுது கொண்டு கதிரை மேல் தொப்பென விழுகிறாள்) என்ன? (அவள் கதிரையை விட்டு எழுகிறாள்) மதாம் இதில் எவ்வித மாற்றமுமில்லை. நான் பொலிசாரின் கட்டளைக்கு அடிபணிகின்றேன். அவர்களும் போக்கிரிகளான எங்கள் உலகத்தவர்கள்தான். இவ்வுலகை நீங்கள் உங்கள் காலணிகளால் மாத்திரம்தானே தொடுவீர்கள். (பார்வை யாளருக்கு மாத்திரம் தெரியும் வகையில் கிளேர் சமையலறைக் கதவின் நிலையில் முழங்கையை வைத்தவாறு சோலான்சின் பேச்சைக் கேட்டுக் கொண்டு நிற்கிறாள்.) இப்போது நான் மத்மோசெல் சோலான்ஸ் லுமெசியே. நான் பெயர் பெற்ற கிரிமினல்; இவைவெயல்லாவற்றையும்விட, மிசுயு நீங்கள் அமைதி குலைய வேண்டாம். நான் ஓர் உயர்குடிப் பெண். சாதாரண பணிப் பெண்ணல்ல. (தோள்களைக் குலுக்கிக் கொள்கிறாள்) இனி யாரும் எதையும் பேச வேண்டாம். மதிப்புக்குரியவனே. ஆ... மதாம் நான் உங்களுக்குச் செய்தவற்றையெல்லாம் மறக்க வேண்டாம்... இல்லை... உங்கள் மீது நான் கொண்டிருந்த ஆழமாக அன்பினை மறக்க வேண்டாம். (இந்த வேளையில் கிளேயர் இடது பக்கக் கதவினூடு உள் நுழைகிறாள். அவள் வெள்ளை நிற உடை அணிந்துள்ளாள்.) நான் எவ்வளவு தடுத்தும் மதாம் வீடு முழுவதும் நடந்து திரிகிறார். தயவுசெய்து உட்காருங்கள்; உட்கார்ந்து நான் கூறுவதைச் செவிமடுங்கள். (கிளேயரைப் பார்த்து) கிளேயர்... நம்மைப் பைத்தியம் நன்றாகவே ஆட்டுகின்றது.

கிளேயர்: (மதாமின் குறைகூறும் தொனியில்) நீ அதிகம் பேசுகின்றாய். மிக மிக அதிகமாக என் சிறுமியே, மிக அதிகம். ஜன்னலைச் சாத்து. (சோலான்ஸ் ஜன்னலை மூடுகின்றாள்) திரைச் சீலைகளை இழுத்துவிடு. நல்லது கிளேயர்!

சோலான்ஸ்: எல்லோரும் துயில் கொண்டிருக்க நாங்கள் மாத்திரம் இந்தப் பைத்தியக்கார விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறோம்.

கிளேயர்: (விரலால் பேசாதிருக்கும்படி சைகை காட்டி) கிளேயர் ஒரு கோப்பை தேநீர் தா.

சோலான்ஸ்: அது...

கிளேயர்: நான் ஒரு கோப்பை தேநீர் வேண்டுமென்றேன்.

சோலான்ஸ்: நாங்களிருவரும் நன்றாகக் களைத்து விட்டோம். இதை நாங்கள் நிறுத்திவிட வேண்டும். (ஒரு கதிரையில் உட்காருகிறாள்.)

கிளேயர்: ஆ... ஒருக்காலுமில்லை! பரிதாபத்திற்குரிய பணிப்பெண்ணே, இதிலிருந்து அவ்வளவு சுலபமாக நீ தப்பி விட முடியுமா? காற்றுடன் கூடிச் சதி செய்வதும் இரவைத் துணைக்கழைப்பதும் மிக இலகுவானது. சோலான்ஸ் என்னை உன்னுள் நிலை நிறுத்து. இப்போது கவனமாகக் கேள்.

சோலான்ஸ்: கிளேயர்

கிளேயர்: நான் சொல்கிறபடி செய். நானுனக்கு உதவப் போகிறேன். நான் முடிவுவரை செல்லப் போகிறேன். உனது பங்கு நான் பின் தங்காது பார்த்துக் கொள்வதுதான்; வேறொன்றுமில்லை.

சோலான்ஸ்: நாங்கள் முடிவுவரை வந்து விட்டோமே வேறென்ன வேண்டும் உனக்கு?

கிளேயர்: நாங்கள் ஆரம்பத்தில்தான் நிற்கிறோம்.

சோலான்ஸ்: அவர்கள் வந்துவிடப் போகிறார்கள்...

கிளேயர்: அவர்களை மறந்துவிடு. நாமிருவரும்தான் இந்த உலகில் உள்ளோம். இரு பணிப்பெண்களில் ஒருத்தி தன்னைப் பலியிடும் பலி மேடை தவிர இவ்வுலகில் வேறு ஒன்றுமே இல்லை.

சோலான்ஸ்: ஆனால்...

கிளேயர்: அமைதியாய் இரு. இது உனது கடமை. உன்னுடையது மாத்திரம்தான். நம்மிருவரையும் நீ உயிருடன் வைத்திருக்க வேண்டும். நீ உறுதியுடன் இருக்க வேண்டும். சிறைச்சாலையில் நான் உன்னுடன் இருப்பதை யாரும் அறியக்கூடாது. நான் உன்னுடன் ரகசியமாக, மறைமுகமாக இருப்பேன்.

சோலான்ஸ்: என்னால் ஒருக்காலும் முடியுமென...

கிளேயர்:: தயவுசெய்து உறுதியாய் இரு; நிமிர்ந்து நில்.சோலான்ஸ்! கிளேயர்! உறுதியாக நிமிர்ந்து நில். உன் பலமனைத்தினையும் திரட்டிக் கொள்.

சோலான்ஸ்: நீ என்னைத் திணறடிக்கின்றாய்.

கிளேயர்: ஒரு பணிப்பெண் - அவளின் தகமை - நிமிர்ந்து நில். எனக்குரிய மரியாதையைத் தர உனக்குக் கட்டளையிடுகிறேன்.

சோலான்ஸ்: நான் கடுமையாக உழைத்தேன். எனக்குக் களைப்பாக இருக்கிறது.

கிளேயர்: என்னை நீ இவ்வுலகில் நிலை நிறுத்த (தனது சகோதரியைத் தூக்கி நிறுத்த எத்தனித்து) ஒழுங்காக நிமிர்ந்து நில்.

சோலான்ஸ்: தயவுசெய், உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

கிளேயர்: (அதிகாரத்தனத்துடன்) எழுந்து நில். தயவாகக் கேட்கிறேன். எங்கே பணிவாகச் செய் பார்ப்போம். உன் சின்னக் கால்களை உயர்த்து. (அவளை மணிக்கட்டில் பிடித்து கதிரையிலிருந்து தூக்குகிறாள்) கால்களில் நில் - எழுந்திரு - எழுந்திரு!

சோலான்ஸ்: நீ அபாயத்தை உணரவில்லை.

கிளேயர்: ஆனால் சோலான்ஸ் நீ அழிவற்றவள். நான் சொல்வதைத் திருப்பிச் சொல்!

சோலான்ஸ்: சொல் ஆனால் சத்தமாகச் சொல்லாதே.

கிளேயர்: (இயந்திர கதியில்) மதாம் தேநீர் அருந்த வேண்டும்.

சோலான்ஸ்: (அழுத்தமாக) இல்லை, நான் சொல்ல மாட்டேன்.

கிளேயர்: (அவள் மணிக்கட்டில் பிடித்தவாறு) வேசியே சொல் மதாம் தேநீர் அருந்த வேண்டும்.

சோலான்ஸ்: நான் எவ்வளவோ கஸ்டங்களைச் சந்தித்தவள்.

கிளேயர்: (இன்னும் அழுத்தமாக) மதாம் தேநீர் அருந்த வேண்டும்.

சோலான்ஸ்: மதாம் தேநீர் அருந்த வேண்டும்.

கிளேயர்: ஏனெனில் அவள் தூங்க வேண்டும்.

சோலான்ஸ்: ஏனெனில் அவள் தூங்க வேண்டும்.

கிளேயர்: நான் தூங்காது விழித்திருக்க வேண்டும்.

சோலான்ஸ்: நான் தூங்காது விழித்திருக்க வேண்டும்.

கிளேயர்: (அவள் மதாமின் கட்டிலில் படுக்கிறாள்) மீண்டும் என்னைக் குழப்பாதே. இன்னொரு தடவை கேட்கிறேன். நான் சொல்வதைச் செவிமடுக்கிறாயா? கட்டளைகளுக்குப் பணிகின்றாயா? (சோலான்ஸ் தலையாட்டி ஆம் என சைகை செய்கிறாள்) திரும்பவும் கேட்கிறேன், எனது தேநீர்...

சோலான்ஸ்: (தயக்கமாக) அது...

கிளேயர்: நான் கேட்பது எனது தேநீரை

சோலான்ஸ்: ஆனால் மதாம்

கிளேயர்: நல்லது தொடரு.

சோலான்ஸ்: ஆனால் மதாம் தேநீர் ஆறிவிட்டது.

கிளேயர்: பரவாயில்லை. நான் குடிக்கின்றேன். கொண்டு வந்து கொடு. *(சோலான்ஸ் தேநீர் கோப்பையைக் கொண்டுவருகிறாள்.)* நீ தேநீரை மிக அழகிய, விலை உயர்ந்த ஒரு கோப்பையில் எடுத்து வந்துள்ளாய். *(அவள் தேநீரை எடுத்துப் பருக சோலான்ஸ் பார்வையாளர்களைப் பார்த்து இறுதி உரையை நிகழ்த்துகிறாள்.)*

சோலான்ஸ்: இசைக்குழு திறம்பட இசைக்கின்றது. பணியாளன் சிவப்பு வெல்வெட் திரையை மேலிழுக்கிறான். அவன் தலை குனிந்து வணங்குகின்றான். மதாம் படிகளில் இறங்கி வருகிறாள். அவளது மென் மயிர் தோலாடை அங்குள்ள செடிகளில் உரசுகிறது. மதாம் காரினுள் ஏறுகிறாள். மிசுயு அவள் காதினுள் காதல் மொழி பேசுகிறான். அவள் சிரிக்கத்தான் விரும்புகிறாள். ஆனால் அவள் இறந்து விட்டாள். அவள் மணியை அடிக்கின்றாள். காவலாளி கொட்டாவி விடுகிறான். அவன் கதவைத் திறக்கின்றான். மதாம் மேல் மாடிக்குப் போகிறாள். தனது பகுதியினுள் அவள் நுழைகிறாள் - ஆனால் மதாம் இறந்து விட்டாள். அவளது இரு பணிப்பெண்களும் மகிழ்வாக இருக்கின்றார்கள்; அவர்கள் மதாமின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டார்கள். எல்லாப் பணிப்பெண்களும் அங்கு பிரசன்னமாகி இருந்தனர் - பணிப்பெண்களல்ல அவர்களின் அவலங்கள் அங்கு பிரசன்னமாயிருந்தன. அவர்களின் பெயரால் பிரசன்னமாகியிருந்தன. பணிப்பெண்கள் இரகசியமாகப் பூசிக் கொள்ளும் மென்மையான வாசனைத் திரவியத்தின் நறுமணம் - மதாமின் காற்றுடலைச் சுற்றி மிதந்து கொண்டு. நாங்கள் அழகான வர்கள், மகிழ்வுடனிருக்கிறோம், மது போதையில், விடுதலை!

திரை

கறுப்பு வெள்ளை

சூரியன் சோம்பல் முறிக்கும்
விடிவெள்ளி வெளிச்சங்களில்
மாடுமேய்க்கப் போன மொவன்
மழைக்கு ஒதுங்கினது
பாழடஞ்ச பள்ளிக்கூடம்

மாடோட்டி மொவனுக்கு படிப்பாசையா?!

மொவனின் படிப்பு ஆசை அறுக்க அல்ல
மாடோட்டிக் கூட்டத்து உயிர்காக்க
படபடத்து ஓட்டிவிட்டேன் மாடுமேய்க்க
மலைக்கு - மாடு கண்ணு போல

பல் கழுவி போனவள
பகலெல்லாம் காணலியாம்
பச்சபுள்ள அழுதழுது
பசியால செத்துப் போச்சி

மாடிவீட்டு மாடு கண்ணுபோட
கண்ணிருட்டும் நேரமாச்சாம்

மாரலம்பி வந்து நின்னா
மொவன் பால் குடிக்க படபடத்தா
பால் குடிக்க யாரிருக்கா?
எமன் கொண்டு போயி நேரமாச்சி!

மாரடிச்சு அழுத சத்தம்
மச்சிக்கு கேட்டிருக்கும்
ஒப்பாரி போட்ட சத்தம்
ஒலகுக்கும் கேட்டிருக்கும்
ஒருத்தர் கூட வரலியே
காதடிச்சி போயிடிச்சா?

மாடிவீட்டு மாடு கண்ணு போட்டு செத்திடுச்சாம்.

என்.ஆர். ரமணன்

பிரபாகரன்

பிள்ளைகாள்
வேலுப்பிள்ளை பிரபாகரன் எப்போது பிறந்தான்
என்று கேட்கிறார் ஆசிரியர்
ஆயிரம் ஆண்டுகள் முன்பு என்றனர் பிள்ளைகள்
நூறு ஆண்டுகள் முன்பு என்றனர் பிள்ளைகள்
சென்ற ஆண்டு என்றனர் பிள்ளைகள்
எவருமே அறியார்

பிள்ளைகாள்
வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ன செய்தான்
என்று கேட்கிறார் ஆசிரியர்
ஒரு போரை வென்றான் என்றனர் பிள்ளைகள்
ஒரு போரைத் தோற்றான் என்றனர் பிள்ளைகள்
எவருமே அறியார்

எங்கள் கசாப்புக் கடைக்காரரிடம்
பிரபாகரன் என்றொரு நாய் இருந்தது
கசாப்புக் கடைக்காரர் அதை அடிப்பார்

ஒரு ஆண்டு முன்னர் அது
பட்டினியாற் செத்தது
என்றான் சதீஷ்

இப்போது எல்லாப் பிள்ளைகளும்
பிரபாகரனுக்காக வருந்துகின்றனர்.

மிரோஸ்லாவ் ஹொலுப்
மூன்றாங்கையாகத் தமிழில் தழுவல்: சுகன்

சித்தர்களில் யானும் ஓர் சித்தனடா

காடு கொந்தளிக்கிறது சுழனி ஆர்ப்பரிக்கிறது
எனது தவத்தில் ஒரு கல் வந்து விழுகிறது
நந்தனை எரித்த காவி நெருப்பது ஊருக்குள் பரவுது
கோமாதா பூஜை திருவிளக்கு பூஜைகளுக்கு
நமது பெண்டுகளும் போகத் தயாராகிறார்கள்
இதிகாச தீட்டுத் துணிகளால் கண்கள் கட்டிவிடப்படுகிறது

நமது உணவை பறிமுதல் செய்ய வருகிறார்கள்
சாத்தானின் பாத்திரத்தைத் திருட வருகிறார்கள்

சங்கரனைப் போல பல குள்ள மனிதர்களை
உருவாக்கி விடுகிறார்கள் அவர்கள் தங்கள்
கணக்குப் புத்தகங்களில் நியதிக்குப் பதில்
கறுப்பர்களை கொல்லுகிற
விஷக்குப்பிகளை அடுக்கி வைக்கிறார்கள்

மேலும் எங்கள்
தேன் கூட்டில் கல்லெடுத்து எறிகிறார்கள்

ஈச்சிகள் கலைகிறது தேனடை சிதறுகிறது
காவிலம்மையொரு தேனீச்சியைப் போலென்
மூளையில் வந்து நறுக்கெனக் கொட்டுகிறாள்

மேலும்
எனது உணர்தலின் மூர்க்கத்தில் கடல் கொந்தளிக்கிறது
பாறைகள் முரட்டுத்தனமாய் பார்க்கிறது
சிரமறுத்து கீழுருட்டும் வாள் உறைவிட்டெழுகிறது

பாம்பினை கொத்த வந்த கருடனைச் சீறி மாறி
பாம்பெட்டிக் கொத்தக் காண்கிறேன்

என்.டி. ராஜ்குமார்

ஊழிக்காலத்தில் புகழ்பாடும் ஒரு கவிதை

உன் பச்சை முகம் வெளித் தெரிந்தும்
உன்னைத் தூக்கிப் பிடித்து
பல்லக்கில் சுமந்து, ஏன்?
செல்கிறார்கள்

நீ படைக்கும் உலகம்
பிரமாண்டமானது
இப்படித்தான் சில -
எருமைகள் கதைக்கின்றன.
நீதான் எல்லாம்
நீதான் நீதான்

சோம்பேறிகள்
உமைத்தலையில் தூக்கி வைத்து
ஆடுகின்றன

நீ எத்தனை நாளைக்கு
இந்த உலகத்தை
இப்படிப் படைப்பாய்?

ஒரு காலையும்
ஒரு கையையும்
ஒரு கண்ணையும்
ஒரு காதையும்
எத்தனை நாளைக்கு?
நோண்டுவாய்?

ஏவாளையும் இப்படித்தான்
உன் பாட்டன் படைத்ததாய்
நேற்றிலிருந்து கதை விடுகிறாய்

விலா எலும்பில்தான்
எங்கள் வெற்றியுள்ளது
நாங்கள் எதையும் செய்வோம்
நாங்கள் எதையும் வெல்வோம்

ஒன்றும் புரியவில்லை
உனது மந்திரம்
யாருக்குத்தான் புரிந்திருக்கிறது?

ஆனால் உன் வியாபாரம்
உன் சிருஷ்டிப்பு
ஒருநாள் தெரியும்
அப்போது நான் ஒரு
கவிதை எழுதுவேன்
அது உன் புகழைப்பாடும்

த. மலர்ச்செல்வன்

பாறையில் பதிந்த பெண்ணுடலின் குருதி

குருதி படர்ந்த பாறை
அடியூடு மெதுவாய் கரைந்து கொண்டிருக்கிறது
குருதியின் உறைதல் பாறையில் திட்டாகி
பாறையைப் புதுப்பிக்க
கண் காணா வரலாற்றில் கடைசித் துளியும் கலைந்து விடுகிறது.
இனிக் குருதியின் வாடையை மட்டும் முகர்ந்து
முதல் துளியைத் தேட
என் தாயின் குருதி வாடையாய்க் கிடக்கிறது அது
அடுத்த கணம் அந்த வீச்சத்தைக் கலைத்து விடும்படி
மண்ணைக் கிளறி மழை பெய்கிறது
கிளறிய மண் எழும்பி பாறையில் ஒட்ட
பாறை பெரும் பாறையாகி ஒரு கணத்தில் கரைந்தது
படர்ந்த குருதி பிசுபிசுக்க பாறையின் மணம்
குருதியாய் நின்று வழிந்தது
குருதி நதி
மேலிருந்து கீழேயும் கீழிருந்து மேலேயும் பாயும்
நீர்ச் சரத்தில் நீந்தும் சனத்திரள்
கொப்பளிக்கும் சாரலில் மினுங்கும் உடல் தினுசுகள்
அவளை நெருங்க நெருங்க அப்புறப்பட்டு
பாறையாய் மாறி
அவளையும் தாண்டி நீரைப் பருக
பாறைக் குடல் அறுபட நெரிக்கும் எலும்பின் முட்புதர்
நீர் அலைகளில் அலையும் உடலைத் தேடி அலையும் விரல் பின்னல்கள்
எங்கும் பிடிபடா தெறிக்கும் மீள் பாய்வு
நீரின் நிலம் தொட்டுத் தடவ
கண்களில் மிதிபடும் அவளின் குருதிப் பாறை
மீளவும் மழை இரவுகளை நாட்கணக்கில் காத்திருந்து
எதிர் கொள்ள விருப்புற்று இருந்தேன்

அப்போது உன் உடல் சூடு மழைத்துளியின் ஈர உரசலில்
இறங்கி தகதகப்பற்று இருந்தபோது
மறுபடியும் ஏமாந்து போனேன்.
இல்லை என்றான மறுகணம்
நீ ஊதி விடும் சிறுசிறு புகை வளையங்களுக்குள் கரையுண்டு
மூச்சையடைத்துப் போகுமளவுக்கு
என்னை விழுங்கிக் கொண்டிருந்தாய்
மழைத்துளியின் இரைச்சல்
துன்புறுத்தும் நிலைவரை தாக்கப்பட்டதாகவே நினைவிருக்கிறது.
அறைச் சுவரில் பதிந்திருக்கிறது எமது உடல் மொச்சை
நான் உன்னை இயக்கும் வேளை நீ இறந்து போவதும்
நீ என்னை இயக்கும் வேளை நான் இறந்து போவதுமாக
இருந்த காலமே மொச்சை கிளம்பியிருக்கிறது
மொச்சையின் அதீத விழிப்பில் சங்கேனப்பட்டு
மறைந்து கொள்ள நீ ஓடிக் கொண்டிருக்கிறாய்
தாய்ப்பாறையின் அருகில் ஓடி மூச்சடைத்துப் போய் முட்ட
பாறைக் கொம்பு கிழித்த யோனி வாயிலும் வழிகிறது குருதி
குருதியில் நனைந்தபடி
முழுக்கவும் பார்த்துப் பருகிக் கொண்டிருக்கிறேன்
ஒவ்வொரு மூலைகளிலும் பாறையில் பதிந்து
புணர்ச்சியின் உச்ச நிலையினைத் தரிசித்தபடி இருக்கிறாள் என் தாய்
அவளின் வாயிலும் யோனியிலும் குருதி வழிய ஓலமிடுகிறாள்
பாறைகளைப் புரட்டுகிறது ஓலம்.
தாய்ப் பாறையில் புரண்டு கிடக்கிறது அவள் முலைகள்
யாரோ ஒருவனின் வாய் முலையைத் தேடி நகர்கிறது
ஆடைகள் அறியாப் பாறையில் அவளைக் கிடத்தி
நிமிர்ந்து முகம் பார்க்க முனையும் வேளை
அவளை மேவப் பாய்கிறது நதி
மேலும் கீழுமாய்

கற்சுறா

1

எங்கோ நெஞ்சின் வேரிலிருந்து
வன்மம் ஒன்றின் வேதம் பாட
ஏக்கம் என்னை மெதுவாய் எழுப்பி
இறுக்கிக் கொள்ளும்

தானே வந்து - தானே போகும்
சனியன்
பருவம் என
உடல் சுழன்று அமைதியாகும்
இன்னும் இன்னும் குறுகி
அதையே பற்றும்
உள் மனக்குழி

தன்னை இழப்பதின் வெறிக்கடுப்பில்
எதுவும் செய்ய லாயக்கற்று
உருவம் தாங்கித் திரிந்த கால்கள்
கூட மறைவில் குப்புறக் கவிழ்ந்து
அவஸ்தை கொண்டு உரசிக் கொள்ளும்

வேவு பார்த்து வியூகம் அமைத்து
கால்களை நெரித்து தன்னை
பதித்துக் கொண்டு அப்புறமும் என்ன?
வாயை வைத்து வாழ்ந்து தொலைக்கும்

2

புவிக்கிரக உயிர்ப்புகளின்
எதிர்ப்பினை நிராகரித்து தேடத் தொடங்கினேன்
உனது இருத்தலை

என் இயல்பு கலைந்த
மனதுள் - வலியின் துடிப்புடன்

பல மர்மங்கள் கலந்த
சோடனையாலான ஒலி அதிர்வுகளில்
'சொல்' ஆட்சியாக
ஓடுமே காலம்.

அதன் கரைவிற்குள்
வேறு எதுமாக இல்லாது
வெற்று வார்த்தைகள் மட்டும்
உன் கூடவே எப்போதும் இருந்தது.

முறிந்து போனது
எனது தேடலின் பாதை

வேதனை மறைய
நிறையவே சிரித்தேன்
இன்னும் சிரிப்பது எப்படி என்று
கற்றுக் கொண்டிருக்கிறேன்.

3

உடல் சூழ
இரவு போர்த்து
உணர்வை ஏற்றும்

சுயம் மறந்து
புணர்வின் உச்சம் ஏறி
சிந்தித்து
தன்னிலை திரும்பும்

வரும் ஓசை அடங்கிய
காலைப் புலர்வில்
சுவடு தெரியாமல்
நடந்தே மறைவாள்

கனவுகளால் வந்தது
நிஜமாகும் பொழுதில்
கேள்விகளின்றியே ஏற்றுக் கொண்டோம்.

நாங்கள் அசையா மரங்கள்

வறுமை, இளமை, சாதி, மதம்
குறிவைத்த அடையாளங்களில்
பதுக்கி வைத்து
துண்டாடப்படுகிறோம்
அவனவன் இச்சைகள் அடங்க.

இன்னும் ஆண்களின் காலம்
என - பெருமூச்சு மட்டும் விட்டு
மனது அழுது
படிமங்களாகும் கவிதைகளாய்

இவன்

கொம்புகள் விடைத்து நின்றிருக்கும்
தடித்த மயிராய்
உக்கிரம் தொலைத்து
மிரண்டு விழிக்கும் கண்கள்
உதட்டோரம் விளைந்த
வெள்ளைத் தேமலாகி விட்டன
நீண்ட கூரிய பற்கள்
வாயில் முளைத்த வாலாய்
தொங்கிக் கிடக்கிறது நாவு
உச்சபட்சச் சாதனையாய்
கைக்குழந்தைகளை மிரட்டிக் கொண்டு
அறையப்பட்ட ஆணியில் ஊசலாடுகிறான்
சட்டகங்களுக்குள்ளே அடைபட்ட ராட்சதன்

பாடல் பெற்ற ஸ்தலம்

தீட்டாகும் நாளென்று
வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கிறாய்
குறுகுறுப்புடன் பம்முகிறது
கர்ப்பக்கிரகம்
மீசை இழந்து நிற்கும் தேவனருகில்
கால்களை நெருக்கிச் சேர்த்து
தொடைகளை இறுக்க அழுத்திக் கொண்டு
சங்கடத்தில் நின்றிருக்கின்றனர் தேவியர்
அந்த அரையிருட்டில்

ம. மதிவண்ணன்

குஜராத்

பாபர் மசூதி
ராமன்
கோத்ராவின் ரயில் வண்டி
நரேந்திர மோடி
நியூட்டனின் மூன்றாவது விதி
சடலங்கள்
அகதி முகாம்கள்
ஊரடங்கு உத்தரவுகள்
எழுதப்படாத தேர்வுகள்
அகோர வாய்பிளந்து
காவு கொள்ளும் வீதிகள்
நியூட்டனின் விதி
அனைவர்க்கும் பொது
மறுபடி உச்சரி
நீயும்.

மேகவண்ணன்

1

பற்பசைகளின் சார்பில்லையேல்
துர்நாற்றம் வீசும்
உன் இதழ்களைக் கவ்வவே
என்னிதழ் விரும்பும்

மலங்களை வெளித்தள்ளும்
குதங்களுள் நுழையவே
என் குறி இச்சிக்கும்

மாதமொரு முறை
இரத்தக் கவுச்சியடிக்கும்
உன் குறி துழாவவே
என் நா எண்ணும்

உடைபட்ட பிரதிமைகள்
எனக்கும் இருக்கலாம்

சொர்க்கத்தின் பிரதிகளாய்
எண்ணப்பட்ட யாவற்றினோடும்
கறையே ஒட்டிக் கிடக்க
நீயும் நானும்

ஆடை களைந்த பின்னும்

நிர்வாணத்திலும் கூட
இருக்கத்தான் செய்கிறது

பாசாங்குகள்

2

மலையிடுக்குகளில் கசிந்து கொண்டிருக்கிறது
ஆதியில் புனையப்பட்ட பாடலொன்று
பாடலின் விஷம் தெறித்து
நீலம் பாரித்தது வெளி

விஷமருந்திய போதையில் வெறியேறி
மயங்கி ஆடினர் மாந்தரெல்லாம்
கைகோர்த்து கைகோர்த்து நடந்து முடிந்த
ஆட்ட முடிவில்
குறிகளினிடத்தில் கொம்புகள்
முளைத்தது எல்லோர்க்கும்

கொம்புகளால் தாக்கத்
தொடங்கிய கூட்டத்திடை
தேடிக் கொண்டிருக்கிறேன்
புனையப்படாத பாடல்கள் பாடுவோரை

அவரே நம் சினேத்துக்குரியவர்

3

முலைகளின் ஆல்பம்

பேருந்து படிக்கட்டு விளிம்பில்
நின்று கொண்டிருந்த நான்
சடாரென்று கோணம் மாற்றினேன்
எனக்கும் மேலே
கைதூக்கி நின்ற பெண்களின்
மார்புகளை ரசிப்பதற்காய்

சற்று நாள் முன்னரே
மணமாகித் தாய்வீடு வந்திருந்த
எதிர்வீட்டுப் பெண்ணின்
மார்பு ரசித்தேன்
மாசமாயிருப்பாளோவெனும்
உறுத்தலோடேயே

கல்லூரியில் கண்ட
கழுத்து மேல் துப்பட்டா போர்த்திய
கொழுத்த முலைகள்
இன்றைய இரவை ஈரப்படுத்தக் கூடும்
திரைகளெங்கும் நாயகிகள்
முலைகளாய் உணரப்படுகிறார்கள்

அடிக்கடி ஆடை சரி செய்வது வேறு
நம் கனவுகளின் பரப்பை
அகலப்படுத்துகின்றன
மார்புகள் இல்லாது போயிருந்தால்
எல்லாப் பெண்களோடும்
உறுத்தலின்றிப் பழகலாம் போலும்

எப்போதேனும் தட்டுப்படும்
மார்புகளின் ஸ்பரிசம்
கிளர்ச்சியூட்டும் வேளையில்
இப்படி எண்ணத் தோன்றும்
வெறித்து நோக்கும்
ஆண்களின் கண்களே
முலைக்காம்புகள் ஆயினவோ

சுகுணா திவாகர்

1

விரிய இணங்கா
அல்லி மொக்குகள் மீது
இருட்டைத் துடைத்துப்போன
சந்திரகுமாரர்கள்
திரும்பவும் வருவார்கள்
குவித்த கரங்களுக்குள்
குறிகளோடு

தீப்பிடித்து எரியும் காட்டில்
தனி இருட்டின் அடையாளத்தில்
தேடி எடுப்பார்கள்
புதைக்கப்பட்ட
வாக்கு வங்கியை

குருதிப் புனலை
குடித்த வெறியில்
தடிகளோடு நிற்பார்கள்
வெண்மணி வாசலில்

சிவப்பாய் இருட்டு
சேரிமேல் கவிய
விடியும்வரை கொண்டாட்டந்தான்
ஆந்தைகளுக்கு

2

அறைந்து உடைக்கப்பட்ட
தீர்மானங்கள்
நிணங்காட்டி அழ
புதுசாய் முகிழ்க்கும் சில

பயணத்துணையான
நட்சத்திரத் திருடர்களுக்கும்
தெரியாமல்
சித்தாந்த சுருக்குப்பையில்
கொஞ்சம் போல
சில்லறை

களவாடப்படுவதற்காக
தவம் கிடக்கின்றன
பூட்டுகளும்
சில சாவிகளும்

சகுன மயக்கத்தில்
மணிகாட்டி முட்கள்
தடுமாற

மங்கள நிமித்தமாக
மேற்கொள்ளும்
எல்லாப் பயணத்திலும்
புன்னகையாய்
முகம் ஒளித்து
கூடவே வருகிறான்
யாரோ ஒரு
எழவு சொல்லி

3

ஃபிலிம் சேம்பரில் ஜப்பான் படம் பார்த்துவிட்டுச் சாராயம் குடித்தபோது ஆளுக்கொரு சுயமைதுன அனுபவக்கவிதை சொல்ல நானும் சொன்னேன்.

'பழய...
நினைப்பின் விரைப்பில்
என்னை நானே
புனரப் பதுங்கிய கழிவறையில்
அறுந்து துடிக்கும்
உயிர்ப்பின் ஈர்ப்பில்
தன் வால் புசித்துப்
பசியாறும் பல்லி'

என எனது கவிதையைச் சொன்னபோது, 'பள்ளு பறையனுக்கெல்லாம் எப்படிடா கவித வரும்?' என வளர்மதி, திரைப்பாடலாசிரியர் ந.முத்துக்குமார், சி.மோகன் இவர்கள் முன்னிலையில் விக்ரமாதித்யன் என்னைக் கேட்டார். நானும் பதிலுக்குத் திட்டிவிட்டேன்.

ஜப்பானியப் படம் பார்த்துவிட்டு
சாராயம் குடித்த ஒரு முன்னிரவில்
போதையேற ஏற
கவிதையாய் இறங்கியது

சங்கரராம சுப்ரமணியனொன்று
ந.முத்துக்குமாரும்
வளர்மதி பார்க்க
நான் கவிதை சொல்ல சந்தேகம்
அந்த... ஞானக் கிறுக்கனுக்கு

சேரிக்காரனுக் கெப்படி
சித்திக்கும் கவிதை
சந்தேகம் வந்தது
சாதித் திமிர்
நேரில் கேட்டதோ நேர்மை

அடே சடையா
அழுக்கு மடையா
ஒந்தாடியில எம்...ல வக்க
தாலாட்டில் பிறந்து
ஒப்பாரியில் மறையும்
சேரிக்கு எவனடா ஞானகுரு?

ஆரிய யோனியில்
அழுக்குத் திரட்டி
அதை உன் மூளையில்
அழுத்தித் திணித்து

அப்படிப் பிறக்கும்
உன் கவிதை
அதைவிட அழகு
என் கழுதை

தய்.கந்தசாமி

குறிகளின் குறி

கொடி விரிகிறது
பூக்களையுதிர்த்துக் கொண்டு
குழுத் தொடங்குகிறது
ராணுவக் கவுச்சையின்
பாடலை இசைக்க
சகலமானவைகளுக்கும்
சகஜமானவைகளும் விறைத்துக் கொண்டன
எங்களுக்கென்ன சம்மந்தமென
இழுத்துப் போர்த்தி உறங்கும் குறிகளில்
குறி பார்க்கும் குறிகளும் அடக்கம்
அவைகளுக்குத் தெரியும்
எவைகளுக்கு விறைக்கவென

சு.ம. காட்டேரி

சரியில் கொள்கிறது

இராணுவத் தளபதி தெரிவிப்பு

செப்.20,

அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சி குறித்து இராணுவம் முழுத்திருப்தி கொண்டுள்ளது என்றும் இதுவிடயத்தில் இராணுவத்திற்கு எந்த அதிருப்தியும் கிடையாது என்றும் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

கடந்த 20 வருடங்களாக விடுதலைப் புலிகளுடன் கடுமையான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தாலும் சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வுடன் செயற்படுவதற்கு இராணுவத்தால் முடியும் என்றும் அவர் கூறினார்.

பி.பி.சி. சர்வதேசிய செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக இராணுவம், புலிகள் அடங்கிய கூட்டுக்குழு முடிவுகளை மேற்கொள்வது குறித்து உடன்படுகிறோம். உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகளை இந்தக் கூட்டுக்குழுவுக்கு எம்மால் விளக்க முடியும். உதாரணமாக எங்கெங்கு நிலங்களை மக்களுக்கு வழங்க முடியுமோ அங்கெல்லாம் நாம் அவற்றை மக்களுக்கு வழங்குவோம். தென்கிழக்கில் 3,500 ஏக்கர் நிலப்பரப்பை நாம் விவசாயத்திற்காக விடுவித்திருக்கிறோம். அப்பகுதிகளுக்கு மக்கள் இப்பொழுது திரும்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்க முடியாமல் போனால், அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நிலக்கண்ணிவெடிகள் அப்பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கின்றமை ஆகும். மற்றையது பாதுகாப்பு சம்பந்தமானது. இவை குறித்து நாம் எடுத்துக்கூறி விளக்கத்தைக் கூட்டுக் குழுவிற்கு விளக்கும் பொழுது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அதன் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

கடந்த 20 வருடங்களாக விடுதலைப்புலிகளுடன் போரிட்டு இருந்தாலும் ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளோட் ஆகிய இயக்கங்களுடனும் முன்னர் போரிட்ட நாம் பின்னர் அவர்களுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட முடிந்தது. இந்த அடிப்படையில் புலிகளுடனும் எம்மால் புரிந்துணர்வுடன் இணைந்து செயற்பட முடியும்.

– சிறிலங்கா இராணுவத் தளபதி
லயனல் பலகல்ல –

அகரம்
ISBN 81 7720 014 3